திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதி, பரப்பலாறு அணையிலிருந்து முத்துபூபால சமுத்திரம், பெருமாள்குளம் முத்துசமுத்திரம், காவேரியம்மாபட்டிகுளம், ஒட்டடைகுளம், பாப்பாக்குளம், சடையன்குளம், செங்குளம், கருங்குளம், ஜவ்வாதுப்பட்டிகுளம் ஆகிய குளங்களுக்கு செல்கின்ற நீர் வீணாகாமல் இருக்க லைனிங்கில் சிமென்ட் கற்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6141, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஒன்றியம், ஏகாட்டூரில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6316, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராஜா.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சியிலுள்ள புதுத்தாங்கல் ஏரி, இரும்புலியூர் ஏரி, சிட்லபாக்கம் ஏரி, முடிச்சூர் சீக்களான் ஏரி பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6453, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “நாகை மாவட்டம், மயிலாடுதுறை குமாரமங்கலம் கிராமத்தையும், கடலூர் மாவட்டம், மா. ஆதனூர் கிராமத்தையும் இணைக்கும் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே மைல் 74/4–ல் கதவணை கட்டும் பணியினை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6578, மாண்புமிகு உறுப்பினர் திரு. சௌ. தங்கப்பாண்டியன்.

திரு. சௌ. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ராஜபாளையம் தொகுதி, சாஸ்தா கோவில் பகுதியில் அணையை மேலும் விரிவுபடுத்தி அதிகப்படியான நீரைச் சேமித்து வைத்து குடிநீருக்கு பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6717, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6743, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடி ஊராட்சி ஒன்றியம், கீரமங்கலம் வாய்க்கால், புதுக்குடி, பளங்குனிவாய்க்கால், பம்ரசுற்றி நடுவாய்க்கால், பல்லவாய்க்கால், ஆலங்கரை வாய்க்கால், செவந்திநாதபுரம் வாய்க்கால், பள்ளிக்கூட வாய்க்கால் (வடிகால் வாய்க்கால்), திருமணமேடு கிளைவாய்க்கால், (முத்தியூர் வாய்க்கால்), நரி வாய்க்கால், ஆதிகுடி நடராஜபுரம் வாய்க்கால், கன்னிவாய்க்கால் செம்பாவனி பெரிய வாய்க்கால், குண்ணியம் பங்குனி வாய்க்காலின் கிளைவாய்க்கால் ஆகியவற்றைத் தூர்வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7149, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர்.

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளித்தலை தொகுதி, பஞ்சப்பட்டி ஏரியை காவேரி நீர் கொண்டு நிரப்ப வாய்க்கால் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7306, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கி. கலைவாணன்.

திரு. பூண்டி கி. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், அபிவிருத்தீஸ்வரம் ஊராட்சி, வெட்டாற்றில் தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7436, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேப்பனஹள்ளி தொகுதியில் உள்ள எண்ணேகொல் கால்வாய்த் திட்டம், அலியாலம் தடுப்பு அணைத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7613, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன்.

திரு. துரை. கி. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதி, சிதம்பரம் கொள்ளிட வடிநிலக் கோட்டத்திற்குட்பட்ட உளுத்தூர் ஏரி, சாதிப்பாடி ஏரி, அம்பாள்புரம் ஏரி, சீப்பான் ஏரி, ஆலம்பாடி ஓடை வாய்க்கால், பழைய முரட்டு வாய்க்கால் ஆகிய ஏரிகள் மற்றும் வாய்க்கால்களைத் தூர்வாரி ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7617, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதி, போளூர் ஒன்றியம், வடபாதி மங்கலம் ஏரியைச் சுத்தப்படுத்தி, ஆழப்படுத்தி கரையை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7620, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சண்முகையா.

திரு. செ. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் தொகுதியில் உள்ள உப்பாற்று ஓடையின் முக்கிய இடங்களில் தடுப்பணைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8114, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8180, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி.

திருமதி பெ. சீத்தாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டிவனம் தொகுதியில் செல்லும் ஓங்கூர் ஆற்றின் குறுக்கே ஆங்காங்கே தடுப்பணை கட்டி நிலத்தடி நீரைச் சேமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8211, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி.

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கூடலூர் தொகுதிக்குட்பட்ட பந்தலூர், கூடலூர் வட்டங்களில் மழைநீரை எதிர்திசையின்மூலம் திரும்பி மாயார் ஆற்றில் கொண்டுவந்து சமவெளிப் பகுதி பாசன வசதிக்குப் பயன்படுத்தவும், நடுவட்டம் T.R. ஏரி மற்றும் இதர நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மராமத்து பணிகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும்” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8338, மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன்,

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கோமுகி அணையிலிருந்து சுடர்தூர் வாய்க்கால் வழியாக, சின்ன சேலம் ஏரிக்கு தண்ணீர் வர தனி வாய்க்கால் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8540, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கெலவரப்பள்ளி அணையிலிருந்து தளி மற்றும் கெலமங்கலம் ஏரிகளில் நீர் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8678, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.A. சத்யா.

திரு. S.A. சத்யா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓசூர் தொகுதிக்குட்பட்ட கொடியாளம் அணையிலிருந்து விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசன வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8740, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன்.

திரு. அ.செ. வில்வநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகராட்சி, 32–வது வார்டு

வண்ணாந்துறையில் தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 8783, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா.

திரு. டி.ஆர்.பி. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம் தென்பரையில் புது ஆற்றின் பாசனப் பகுதிகளில் வடிகால்களைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,814,85,51,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, கட்டடங்கள் (பொதுப் பணித் துறை), பாசனம் (பொதுப் பணித் துறை) ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு,

அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று 3 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 3 மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பாரும் மிக்காருமின்றி, தன்னிகரில்லாத தலைவராக, தனக்கு உவமையில்லாத ஒரு தலைவராக தமிழகத்தை வழிநடத்தி, எங்களை எல்லாம் ஆளாக்கி இந்த அவையில் முந்தியிருக்கச் செய்த எங்கள் ஆருயிர் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞரோடு 70 ஆண்டுக்காலம் இணைந்து பணியாற்றி அண்மையில் நம்மைவிட்டு மறைந்த இனமான காவலர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் என்னுடைய முதல் வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.

நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது இந்த மாமன்றத்திலே என்னுடைய கருத்துகளைக் கழகத்தின் சார்பில் எடுத்து வைப்பதற்கு வாய்ப்பினை நல்கியிருக்கக்கூடிய கழகத்தினுடைய தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், நாளைய தமிழகத்தினுடைய நம்பிக்கை முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய ஆருயிர் அருமை அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய நன்றியினை நான் உரித்தாக்குகிறேன். இந்த வாய்ப்பினை நல்கியிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவரான தங்களுக்கும் என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

@ *903 முதல் 1182 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III ஆக அச்சிடப்பட்டுள்ளன.*

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகியவை மிக முக்கியமான துறைகள். இந்த நாட்டினுடைய பொருளாதார மேம்பாட்டுக்கு, வேளாண் வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மிக முக்கியம். அந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதில் மிக முக்கியமான பங்காற்றக்கூடிய துறைகள் இந்த இரண்டு துறைகள். இந்த இரண்டு துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பேசுவதற்கு முன்பாக, இந்த அவையிலே பேரவைத் தலைவரான தங்களிடத்திலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், இந்த அவையில் இருக்கக்கூடிய மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள், குறிப்பாக கழக உறுப்பினர்களின் ஆதங்கம் நிறைந்த ஒரு கோரிக்கையினை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். இந்த இரண்டு துறைகளுமே மிக முக்கியமான துறைகள். தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய பொது மக்களின் நலன்கள் சார்ந்து இத்துறைகள் இயங்குகின்றன. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளிலிருந்தும் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய பிரச்சினைகளை, கோரிக்கைகளை இந்த மன்றத்தில் எடுத்து வைப்பதற்கும், பல்வேறு துறைகளினுடைய அமைச்சர் பெருமக்கள் அவற்றிற்கு பதிலளிப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுக் காலமாக நாங்கள் பார்க்கிறோம், இந்த நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட ஒரு கேள்விகூட இந்த அவையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) இது உள்ளபடியே எனக்கு வருத்தம் அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு அளிக்கப்பட்டதால்தான் நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். ஒவ்வொரு உறுப்பினர் பேசுகின்றபோதும், நான் உரிய விளக்கங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், கேள்விகளைக் கேட்கவில்லை என்றாலும்கூட, பல்வேறு மானியக் கோரிக்கைகளின்போது பேசுகிறார்கள். அப்போது, நெடுஞ்சாலைத் துறை சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தாலும் சரி, பொதுப்

பணித் துறை சம்பந்தப்பட்ட கேள்வியாக இருந்தாலும் சரி, அவர்கள் கேட்கின்றபோது, அவற்றிற்கு உரிய விளக்கத்தை தகுந்த முறையில் அளித்துக் கொண்டிருக்கிறேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வது குறித்து நான் ஐயப்பாட்டை எழுப்பவில்லை. நான் சொல்வது என்னவென்றால், இந்த மன்றத்தில் தங்கள் தொகுதிகளிலுள்ள பல்வேறு பிரச்சினைகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறபோதுதான், அவை மாவட்டங்களிலே இருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய கவனத்திற்குச் செல்கின்றது. அன்றைக்குக்கூட நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தைச் சொன்னார்கள். எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பேசியபோதுகூட, “இங்கே எழுப்பப்படுகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில், நாங்கள் ஒவ்வொரு நேரத்திலும் கள ஆய்வுகள் செய்கிறோம், அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகளைத் தொடர்பு கொள்கிறோம்” என்று சொன்னார்கள். அதேபோன்று, மாண்புமிகு அமைச்சர்கள் அவர்களுடைய துறை அலுவலகத்திலிருந்து இத்தகைய கேள்விகளுக்குப் பதிலளிக்கிறபோது, அவை துணைக் கேள்விகளாக எழுப்பப்பட்டாலும் சரி, அவற்றை அங்கேயிருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்கிறார்கள், அங்கே வேலைகள் விரைவாக நடைபெறுகின்றன. தற்போதுகூட, நான் மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, இங்கிருக்கக்கூடிய உறுப்பினர்களில் பல பேர் என்னிடத்திலே வந்து, ‘இந்த கோரிக்கையினைச் சொல்லுங்கள், அந்த கோரிக்கையினைச் சொல்லுங்கள்’ என்று சொல்கிறார்கள். எனக்குக் கொடுக்கப்படும் நேரம் குறைவு. எனவே, இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பிரச்சினைகளை எழுப்புவதற்கு இந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலாவது, ஓரிரு முறையாவது நீங்கள் வாய்ப்பினைத் தர வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பணிச் சுமைகள் இருக்கலாம், நான் மறுக்கவில்லை. அதை அனுமதிப்பது தனி உரிமையாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முறை, இரு முறை அல்ல; சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோதெல்லாம், நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட கேள்விகளைக் கேட்கின்றபோது, நான் உரிய பதிலை அளித்துக் கொண்டேயிருக்கிறேன். அப்போது நான் இங்கே இல்லையென்றாலும்கூட, மீண்டும் வந்து அதற்குரிய விளக்கத்தை நான் தந்து கொண்டிருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பொதுப் பணித் துறையாக இருக்கட்டும், நெடுஞ்சாலைத் துறையாக இருக்கட்டும், மாண்புமிகு உறுப்பினர்களால் கடிதம் மூலமாகக் கொடுக்கப்படும் கோரிக்கைகளுக்கும்கூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, மாண்புமிகு அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும் சரி, இந்த அவையிலே அவர்கள் துறை சம்பந்தப்பட்ட கேள்விகளை அனுமதித்திருந்தார்கள் என்கின்ற அளவில்தான், உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, அதை கவனத்தில் கொள்ளுங்கள் என்பதை மாத்திரம் நான் தெரிவித்து, தங்களிடத்திலே அதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், முதற்கட்டமாக, தமிழ்நாட்டின் hotspot ஆக சுங்கச்சாவடிகள் மாறியிருக்கின்றன இந்தச் சுங்கச்சாவடிகள், பல இடங்களிலே மிகப் பெரிய பிரச்சினைகள் உருவாக்குகின்ற இடங்களாக, சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகள் உருவாகக்கூடிய இடங்களாக இன்றைக்கு மாறிக் கொண்டிருக்கின்றன. அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களை அங்கே பணியில் நியமிக்கிறார்கள். அதுபோன்ற பல காரணங்கள் அங்கே இருக்கின்றன. பெரிய menace என்று சொல்லக்கூடிய அளவில்,

அங்கே பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதில் நான் குறிப்பிட்டு ஒரு சுங்கச்சாவடி பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், மதுரை ரிங் ரோட்டில் இருக்கக்கூடிய சுங்கச்சாவடி பற்றிச் சொல்கிறேன். மதுரை ரிங் ரோட்டில் அமைந்திருக்கின்ற அந்த சுங்கச்சாவடிகள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்றால், மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் ஆரம்பித்து, சிவகங்கை விலக்கில் இருக்கக்கூடிய சுங்கச்சாவடியினுடைய தூரம் 3 கி.மீ., அங்கிருந்து சிந்தாமணிக்கு வரக்கூடிய அந்த இடத்தில் ஒரு சுங்கச்சாவடியை அமைத்திருக்கிறீர்கள், அதற்கு இடைப்பட்ட தூரம் 6 கி.மீ., அங்கிருந்து 9 கி.மீ. தூரத்தில் அடுத்த சுங்கச்சாவடி வலையங்குளத்தில் அமைந்துள்ளது. ஆக, மீனாட்சி மிஷன் மருத்துவமனையிலிருந்து கிட்டத்தட்ட 18 கி.மீ. தூரத்திற்குள்ளாக 3 இடங்களில் சுங்கச்சாவடிகளை நீங்கள் அமைத்திருக்கிறீர்கள். ஆனால், தேசிய நெடுஞ்சாலையில்கூட வலையங்குளம் பக்கத்தில் இருக்கக்கூடிய பாரபட்டியில் ஒரு சுங்கச்சாவடியை அமைத்திருக்கிறார்கள். மதுரை–தூத்துக்குடி வழித்தடத்தில் பாரபட்டியில் இருக்கக்கூடிய அந்தச் சுங்கச்சாவடியை விட்டால், ஏறத்தாழ 120 கி.மீ. தாண்டி, தூத்துக்குடியை ஒட்டி இன்னொரு சுங்கச்சாவடி இருக்கிறது. ஆனால், மதுரை ரிங் ரோட்டில் மட்டும் 3 இடங்களில் நீங்கள் சுங்கச்சாவடிகள் அமைத்ததற்குக் காரணம் என்ன? இதற்குப் பின்னால் என்ன காரணம் இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பாகவே, மதுரை மாநகராட்சி சுங்கக் கட்டணம் வசூல் செய்து கொண்டிருந்தது. அந்த இடத்தில்தான் வசூல் செய்கிறது, மற்ற இடங்களில் கிடையாது. ஏற்கெனவே, ஆரம்பத்திலிருந்தே மதுரை ரிங் ரோட்டில் மதுரை மாநகராட்சி சுங்கக் கட்டணத்தை வசூல் செய்து கொண்டிருந்தது. அங்கிருக்கக்கூடிய மதுரை மாநகர மக்கள், போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கையின் அடிப்படையில், அந்த இருவழிச் சாலை நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தப்பட்டது. அந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக விரிவுபடுத்தியபோது, அரசாங்கமே முழுப்

பணத்தையும் செலவழித்து, செய்ய முடியாத காரணத்தினால், இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்டதால், அங்கு ஏற்கெனவே சுங்கக் கட்டணம் வசூலித்துக்கொண்டுதான் இருந்தார்கள். இப்போது அது நான்கு வழிச்சாலையாக விரிவுபடுத்தப்பட்ட காரணத்தினாலே, அதற்கேற்றவாறு சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நீங்கள், 3, 4 இடங்களில் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படுகிறதென்று சொன்னீர்கள். அங்கு பிரிவு ரோடுகள் எல்லாம் joint ஆகின்றன. மற்ற இடங்களில் பிரிவு ரோடுகள் joint ஆவதில்லை. ஆனால், இங்கு பல பிரிவு ரோடுகள் joint ஆகிற காரணத்தினால், இணைகின்ற காரணத்தினால் 2, 3 இடங்களில் சுங்கக் கட்டணம் வசூல்செய்யப்படுகிறது. அதுவும், குறிப்பிட்ட தூரத்திற்குத்தான் வசூல் செய்கிறார்கள். அதாவது, 3 கிலோ மீட்டர் பயணம் செய்தீர்களென்றால், அதற்குத் தகுந்தமாதிரி சுங்கக் கட்டணம் வசூல் செய்கிறார்கள். மொத்தமாக 27 கிலோ மீட்டர் சுற்றுச்சாலை இருக்கின்றது. ஆகவே, 27 கிலோ மீட்டருக்கு முழுமையாக அங்கு நீங்கள் பயணம் செய்ய வேண்டியிருந்தால், அதற்குரிய சுங்கக் கட்டணத்தை வசூல் செய்கின்றார்கள். ஆகவே, 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு சுங்கக் கட்டணம், முதல் tollgate–லும், இரண்டாவது tollgate, மூன்றாவது tollgate என்று மூன்று tollgates–லும் நீங்கள் தொடர்ச்சியாக பயணம் செய்தால், அதற்குரிய கட்டணத்தை வசூல் செய்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே எந்த ஒரு சந்தேகமும், ஐயப்பாடும் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது, அதனால் அது நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார். ஆனால், நான்கு வழிச் சாலையாக மாற்றப்பட்ட அந்தச் சாலையில் ஒருபுறம் அந்த 5 lanes–ல் சுங்கக் கட்டணம் வசூலிப்பதற்கான இடங்கள் இருக்க வேண்டும்; இன்னோர் புறத்தில் 5 lanes என்று 10 lanes இருக்க வேண்டும். ஆனால், மொத்தத்திலேயே 5 lanes தான் வைத்திருக்கிறீர்கள். அதனால் அங்கு மிகப் பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் காலை நேரத்திலேயே ஏற்படுகிறது. இன்னும் ஒன்று, அதற்கான எந்த அடிப்படை வசதிகளுமே செய்யப்படவில்லை. அங்கு அவசரகால ஊர்திகள், ambulance

செல்லக்கூடிய வசதிகள்கூட இன்னும் செய்யப்படாமலேயே சுங்கக் கட்டணம் வசூலிக்கிறார்கள். கப்பலூரில் இருக்கக்கூடிய இரயில்வே மேம்பாலம் இன்னும் முடியவேயில்லை. முடிக்கப்படாத அந்தப் பாலத்திற்கும் சேர்த்து இப்போது அங்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 90 சதவிகித பணிகள் முடிந்தாலே சுங்கக் கட்டணம் வசூலிக்கலாம். அப்படித்தான் agreement–ஏ போட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே சுங்கக் கட்டணம் வசூல் செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அடிப்படை வசதிகள் எல்லாம் செய்யப்படவில்லை என்று சொல்கிறார். அது நகரப் பகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலே, நாம் tender விடுகின்றபோதே அது சேர்க்கப்படவில்லை. அதனால்தான் அந்த வசதிகள் எல்லாம் செய்யப்படவில்லை. மற்ற இடங்களெல்லாம் அப்படி கிடையாது. மற்ற இடங்களில் புறவழிச் சாலைகள் இந்திய தேசிய நெடுஞ்சாலைகளின்கீழ் வருகின்றன. இது நகர்ப் பகுதிகளிலே இருக்கின்ற காரணத்தினாலே அப்படிப்பட்ட வசதிகள் செய்வதற்குக் கூடுதலாக செலவாகும் என்பதற்காகத்தான் இதிலே அது சேர்க்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல், அகலம் போதவில்லை என்று சொன்னீர்கள். முதற்கட்டமாக, ஏற்கெனவே இருக்கின்ற சாலையினுடைய போக்குவரத்தை வைத்துத்தான் பாதைகளை அமைத்தார்கள். இப்போது கூடுதலாக பாதைகள் அமைக்க வேண்டுமென்பதற்காக நிலம் கையகப்படுத்துகின்றபோது, நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குப் போய்விட்டார்கள். இப்போதுதான் நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பு கிடைக்கப்பெற்றிருக்கிறது. அந்தப் பாதைகளை அகலப்படுத்தி, நீங்கள் சொல்வதுமாதிரி, இப்போதிருக்கிற 4 வழித்தடங்களை 6 வழித்தடங்களாக மாற்றுவதற்கு இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து செயல்பாட்டின் அடிப்படையிலே இருக்கக்கூடிய பராமரிப்புப் பணிகள்; அந்தப் பணிகளை எடுக்கக்கூடிய ஒப்பந்தம் என்பது PBMC–Performance Based Maintenance Contract. இந்தத் திட்டத்தில், கடந்த 2012–2013 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் முதன்முதலில் பொள்ளாச்சி கோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும், கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருவள்ளூர், எங்களுடைய விருதுநகர் மாவட்டம், பழனி கோட்டம் என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்த PBMC முறையிலே State Highways அதாவது, மாநில நெடுஞ்சாலைகள், MDR–மாவட்ட நெடுஞ்சாலைகள் இந்த இரண்டையுமே இந்தத் திட்டத்தின் அடிப்படையில்தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் சொல்கிறீர்கள். இப்போது தமிழ்நாட்டில் குறிப்பிட்ட 5 Contractors மட்டும்தான் இந்த வேலைகளை எல்லா மாவட்டங்களிலும் செய்ய முடியும். வேறு எந்த Contractor–ம் செய்வதற்கு வாய்ப்பே வழங்காமல் இருக்கிறீர்களே! இதற்குப் பின்னணியாக என்ன இருக்கிறது என்பதை மாத்திரம் நான் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பாட்டு அடிப்படையிலான சாலைப் பராமரிப்புத் திட்டம். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது இப்படியோர் உன்னதமான திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். ஒரு ஒப்பந்ததாரருக்கு விடப்பட்டு, அவரால் பணி செய்யப்பட்ட அந்தச் சாலையை 5 வருடம் முடிகின்றபொழுது அவரே எடுத்துப் பராமரித்து, செப்பனிட வேண்டும். அதிலிருந்து 5 ஆண்டுக்காலம் அவர் அதைப் பராமரிக்க வேண்டுமென்பதுதான் அவரே இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுமாதிரி ஒரே ஆளுக்கு விடவில்லை. யார் tender போடுகிறார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க முடியும். நாம் கூவிக் கூவியா அழைக்க முடியும்? யார் தகுதியானவர்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியானவர்கள் யார் இருக்கிறார்கள் என்பதைத்தான் பார்க்க வேண்டுமேயொழிய, நாங்கள் போய், இவருக்குக் கொடுங்கள், அவருக்குக் கொடுங்கள் என்றா பார்க்க முடியும்? இது e–tender. ஒரு tender போடுகிறார்கள் என்றால்,

அதில் யார் யார் tender போடுகிறார்கள் என்று நமக்குத் தெரியாது. யார் ஒப்பந்தம் போடுகிறார்கள் என்று நமக்குத் தெரியாது. ஒப்பந்தத்தில் யார் குறைவான தொகை போடுகிறார்களோ அவர்கள் தகுதியானவர்களாக இருந்தால், அந்தத் தகுதியானவர்களுக்கு ஒப்பந்தம் வழங்குவதுதான் அரசினுடைய வேலை. நீங்கள் ஒருவருக்கே கொடுக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். யார் ஒப்பந்தம் போடுகிறார்களோ அவர்களுக்குத்தானே கொடுக்க முடியும்!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சில நாட்களாக இங்கே பார்க்கும்போது, முதலமைச்சர் கோபக்காரர் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். யார் tender போடுகிறார்கள் என்றே அவருக்குத் தெரியாதென்று சொன்னால், இதைவிட ஒரு நகைச்சுவை எதுவுமே கிடையாது. ஆகவே, அவர் நகைச்சுவை மிக்கவர் என்று இப்போதுதான் தெரிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–40

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியெல்லாம் பேசி, நீங்கள் பெயரைத் தட்டிச் செல்ல முடியாது. E–tender–இலே யார் போடுவார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? Tender பெறப்பட்டு இறுதி செய்யப்படும்போதுதான் தெரியும். Tender போடும்போது யாருக்குமே தெரியாது. e–tender–ல் யார், யார் பங்கு கொள்வார்கள் என்று யாருக்குமே தெரியாது. ஆகவே, அதைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். ஆகவே, ஒப்பந்தம் போடுகின்றவர்கள், அவர்கள் தகுதியானவர்களாக இருந்தால், யார் வேண்டுமென்றாலும் ஒப்பந்தம் போடலாம். ஆனால், இறுதி செய்யப்பட்ட பிறகுதான், யார் ஒப்பந்தம் போட்டார்கள் என்பது தெரியும். அதைத்தான் நான் இங்கு சொல்ல வருகின்றேன். ஆகவே, உங்கள் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றவை நிறைய இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்ல வேண்டுமென்றால் நிறைய சொல்வேன். என்னிடம் இருக்கின்றது. தேவையில்லாமல் கிளற வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள், ஒரே ஒருவருக்கு மட்டும் tender form கொடுத்து, single tender ஆக பல ஒப்பந்தங்களை விட்டிருக்கின்றீர்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் Box tender. ஆக, அப்போது முறைகேடு நடைபெற்றதா, இப்போது முறைகேடு நடைபெற்றதா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் single tender முறையைப் பின்பற்றியதாக அவர் சொல்கின்றார். இப்போது, நீங்கள் PBMC–ல் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? அதைத்தான் செய்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் சொல்கிறேன். நான் சொல்வது என்னவென்றால், 4, 5 contractors தான் மொத்தத்தில் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களைத் தாண்டி யாரும் வரவில்லை.

சங்க காலத்தில், பதிற்றுப் பத்து என்ற ஒரு சங்க காலப் பாடலை, கபிலர் என்ற புலவர் இயற்றினார். அதில், ஏழாம் பத்தில், சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் இரும்பொறையைப் பற்றி ஒரு பாடல் பாடினார். பாடியவுடன் அவர் சந்தோஷப்பட்டு, பக்கத்தில் இருக்கக்கூடிய 'நன்றா' என்ற ஒரு குன்றில் ஏறி, அங்கிருந்த கல்லைக் காண்பித்து, 'இதையெல்லாம் நீ வைத்துக் கொள்' என்று கபிலருக்கு, அந்த மன்னர் கொடுத்ததாக ஒரு குறிப்பு இருக்கின்றது. அதுமாதிரி இப்போது எப்படி இருக்கிறது என்று கேட்டால், 'இந்தா, விருதுநகர் மாவட்டத்தை நீ வைத்துக்கொள், பொள்ளாச்சியா உனக்கு! ஒரு படத்தில்கூட 'வட சென்னை உன்னுடையது, தென் சென்னை என்னுடையது' என்று சொல்வார்கள். 'பொள்ளாச்சி உனக்கு, உள்ளாட்சி எனக்கு'. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஆட்சியில் அப்படி நடைபெற்றிருக்கும். எங்கள் ஆட்சியில் அப்படி அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டேன். நீங்கள் மேலும், மேலும் ஆழமாகப் பேசினால், எப்படி, எப்படியெல்லாம் நீங்கள் tender விட்டீர்கள் என்பதற்கான அனைத்துப் புள்ளிவிவரங்களும் என்னிடம் இருக்கின்றன. Tender பற்றி கேட்டீர்களென்றால் முழு விளக்கம் என் கையில் வைத்திருக்கின்றேன். ஆகவே,

இதிலே பல பேர், கிட்டத்தட்ட 2 பேர், 3 பேர் இந்த ஒப்பந்தத்தில் கலந்துகொள்கிறார்கள். திரும்பத் திரும்ப நான் சொல்கின்றேன். இது ஐந்தாண்டுக் கால ஒப்பந்தம். ஓராண்டில் இது நிறைவுபெறுவது கிடையாது. ஐந்தாண்டுக் காலத்திற்கு ஒப்பந்தம் இடப்பட்டு, ஐந்தாண்டுக் காலம் அவர்கள் அந்தப் பணிகளைச் செய்ய வேண்டும். அதற்கான நிதியிருந்தால்தான் அவர்கள் அந்த ஒப்பந்தத்தை எடுத்து, அந்தப் பணிகளைச் செய்ய முடியும். ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபோது, முன்மாதிரியாக ஒரு திட்டத்தை எடுத்து, அந்தத் திட்டம் சிறப்பாக, வெற்றிகரமாக இருந்தால் அதைத் தொடர வேண்டுமென்கின்ற அடிப்படையிலே செயல்படுத்தினோம். அந்தத் திட்டத்தில் ஏதாவது குறைபாடு இருந்தால் நீங்கள் சொல்லலாம். சாலை அமைத்ததில் குறைபாடு இருந்தால் சொல்லலாம். ஏனென்றால், tender call for செய்ததில், இரண்டு பேர் அல்லது மூன்று பேர் அதில் கலந்துகொள்கிறார்கள். யார் ஒப்பந்தப்புள்ளியில் குறைவாகக் குறிப்பிடுகின்றார்களோ அவர்களுக்கு நாங்கள் ஒப்பந்தத்தைத் தருகின்றோம். ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு நபரிடம் நீங்கள் Form schedule–ஐ கையில் கொடுக்கிறீர்கள். அவர் fill up செய்து, box–ல் போடுகிறார். இப்போது அப்படியல்ல, e–tender–ல் யார் வேண்டுமென்றாலும் விண்ணப்பிக்கலாம். அதேபோல, நீங்கள் தபாலில் அனுப்பலாம். அதையும் registered post–ல் அனுப்பலாம். இப்போது யாருமே நிராகரிக்கவே முடியாது. யார், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்களோ, அவர்களுக்குத்தான் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களிடம் நிறைய விவரங்கள் இருக்கின்றன. எந்தெந்த ஆட்சிக் காலத்தில், எவ்வளவு கொடுத்தார்கள் என்ற விவரங்கள் அனைத்தும் கையில் இருக்கின்றன. ஆகவே, எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரையில், இந்த tender விடப்படுகின்ற பணி நியாயமாக, உண்மையாக சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக, tender வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து, அவருடைய ஆட்சிக் காலத்திலே எப்படியெல்லாம் தமிழ்நாட்டை

zone ஆக பிரித்தார்கள். சென்னை என்னுடையது, மதுரை உன்னுடையது, கோயம்புத்தூர் அவருடையது, திருநெல்வேலி ஒருவருடையது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அறிந்தது. தமிழ்நாட்டில் ஒரு நிலம் வாங்க முடியுமா? இந்த நான்கு பேரைத் தவிர, வேறு யாராலும் ஒரு bit நிலம்கூட தமிழ்நாட்டில் வாங்க முடியாது. இதுதான் வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது திட்டத்தில் இருக்கக்கூடிய குறைகளைச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நீங்கள் ஐந்து வருடங்களுக்கு இந்த maintenance work–ஐ பிரித்துக் கொடுக்கிறீர்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன். விருதுநகர் மாவட்டத்தில், SH–லும், MDR–லும் உள்ள மொத்த சாலைகளினுடைய நீளம் 650 கிலோ மீட்டர். 2018 ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட contractor அந்த 650 கிலோ மீட்டர் சாலைப் பணிக்கான ஒப்பந்தத்தை அந்த மாவட்டத்தில் எடுக்கின்றார். ஆனால் இதுவரை 256 கிலோ மீட்டர்தான் வேலை செய்திருக்கிறார். இன்னும் 394 கிலோ மீட்டர் சாலையில் அவர் வேலை செய்ய வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த ஐந்து வருடங்களில் அந்தப் பணிகளையெல்லாம் முடிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இங்கு என்ன பிரச்சினை வருகிறது என்று கேட்டால், இந்த contractor மொத்தமாக அவர் எடுத்துக்கொள்கிறார். ஐந்தாவது வருடத்தில் எதை எதை ஒதுக்கியிருக்கிறீர்களோ, அந்தப் பணியில் ஒரு சிறிய patch work கூட இப்போது யாராலும் போட முடியாது. அங்கே சென்று D.E. இடத்தில் கேட்டால் அந்த சாலைப் பணிகள் ஐந்தாவது வருடத்தில் எடுத்திருக்கிறார்கள். ஆனால், இப்போது சென்று கேட்டால், இது PBMC road. (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) அது PBMC road. இதில் நீங்கள் போட வேண்டும். ஆனால், எடுக்கவே முடியாது என்று சொல்கிறார்கள். அந்த இடத்தில் ஒரு சிறிய patch work–கூட எங்களால் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இப்போது அங்கே வந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 11–45

உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். காரியாப்பட்டியிலிருந்து நரிக்குடிக்குச் செல்லக்கூடிய MDR–ல்

ஒரு பகுதியில் போட்டுவிட்டார்கள். அதாவது அருப்புக்கோட்டை கோட்டத்தில் ஒரு பகுதியில் போட்டுவிட்டார்கள். திருச்சுழி கோட்டத்திலும் ஒரு பகுதியில் போட்டுவிட்டார்கள். இந்த இரண்டுக்கும் நடுவில் ஏறத்தாழ 2, 3 furlong இருக்கின்றது. எந்தவொரு பணியையும் செய்யவே முடியவில்லை. No man's territory என்பதைப்போல அதை அப்படியே விட்டுவிட்டார்கள். நான் அங்கிருக்கக்கூடிய D.E., A.D.E. ஆகியோரிடத்தில் ஏன் இதைப் போடாமல் இருக்கிறீர்கள் என்று கேட்டால், அதற்கு அவர்கள், 'இதை PBMC–ல் எடுத்துவிட்டார்கள், நாங்கள் இதற்கு எதுவுமே செய்ய முடியாது' என்று சொல்கிறார்கள். அவர்கள் மற்ற இடங்களில் இருக்கக்கூடிய எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு, அவர்கள் அந்த குறிப்பிட்ட இடத்தின் பணியைச் செய்கிறவரை இந்தச் சாலை அப்படியே கேட்பாரற்றுக் கிடக்கின்றது. இதற்குக் காரணம் என்னவென்று தெரியாது என்பதுதான் அதில் இருக்கக்கூடிய பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். ஒரு சாலையைச் செப்பனிட ஐந்தாண்டுக் காலம் நிர்ணயிக்கப்படுகிறது. அதனடிப்படையில்தான், இந்த ஐந்தாண்டுக் காலத்தைப் பிரித்து இந்தச் சாலைப் பணிகளை மேற்கொள்கின்றார்கள். முதலில், ஏற்கெனவே நீங்கள் சொன்ன அந்த 256 கிலோ மீட்டர் சாலை போடப்பட்டு, ஐந்து வருடங்கள் முடிந்திருக்கும். அதனால் அந்தப் பணியை இப்போது எடுத்து செய்வார்கள். அதற்கடுத்தது, நான்காண்டுக் காலம் முடிந்திருக்கும் சாலையை ஐந்தாண்டு முடியும் தருவாயில் எடுத்து பணியைச் செய்வார்கள். ஏற்கெனவே, அந்தச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, ஐந்தாண்டுக் காலம் நிறைவு பெற்ற பின்னர்தான் அந்தச் சாலைப் பணியைத் துவங்க வேண்டும். அந்த அடிப்படையில்தான், ஐந்தாண்டுக் கால அடிப்படையிலே அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் patch work பற்றிச் சொன்னார்கள். இப்போது தமிழ்நாடு முழுவதும் patch work செய்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கப்படுகின்றது. நீங்கள் சொல்கின்ற அந்தக் குறை நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் சொல்கிறேன். Contractors Registration கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக நிறுத்தப்பட்டிருக்கின்றது. ,நீங்கள் அதிகமான contractors–ஐ cultivate செய்தால்தானே competitiveness இருக்கும். Contractors Registration கிட்டத்தட்ட நான்கு வருடங்களாக அனுமதிக்காதபோது, நெடுஞ்சாலைத் துறை ஏகபோகமாக சிலருடைய கைகளில் மட்டும்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கக்கூடிய சூழ்நிலை வந்துவிடும். எனவே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை Contractors Registration–க்கு அனுமதி கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Contractors Registration–ஐ நிறுத்தவில்லை. தகுதியானவர்கள் ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்துகொள்ளலாம். தகுதியில்லாதவர்களெல்லாம் சென்று ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்துவிடுகிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்புகூட மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 'ஏன் காலதாமதம் ஆகிறது? சரியான ஒப்பந்ததாரரிடம் கொடுத்தால் உரிய காலத்தில் பணிகள்' நிறைவேற்றப்படும் என்ற செய்தியையெல்லாம் சொன்னார்கள். ஆகவே, தகுதியானவர்கள் அனைவருமே இப்போது ஒப்பந்ததாரர்களாக பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு விஷயம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தொடர்ச்சியாக ஒரு கருத்தை பதிய வைக்கிறார். அதாவது, ஏதோ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கு நடைபெறுகின்றபோதுதான், 'நீங்கள் நிலமே எடுக்காமல் ஆங்காங்கே பாலத்தைக் கட்ட ஆரம்பித்திருக்கின்றீர்கள்.

அதனால்தான் நில எடுப்புப் பிரச்சினைகளால் எல்லாமே நின்றுவிட்டது. ஆனால், இப்போது நடைபெறக்கூடிய ஆட்சியில் எல்லா நிலங்களையும் கையகப்படுத்திய பின்னர்தான் நாங்கள் வேலையை ஆரம்பிக்கின்றோம். அதனால்தான் வேலை நடைபெறுகின்றது' என்று சொல்கிறார்கள். இதில் தி.மு.க. ஆட்சியில், பாலம் அமைப்பதற்கான நிலங்களையெல்லாம் நாங்கள் எடுக்காத மாதிரியும், இந்த ஆட்சியில் எல்லா இடங்களிலும் அவர்கள் நிலங்களை எடுத்துக்கொண்டிருக்கின்ற மாதிரியும் தொடர்ச்சியாக ஒரு மாய பிம்பத்தை இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

குறிப்பாக, இரண்டு உதாரணங்களை நான் இந்த அவையிலே, உங்களிடத்திலே சொல்ல விரும்புகிறேன். ஒன்று, நெடுஞ்சாலைத் துறை, மற்றொன்று பொதுப் பணித் துறை. நெடுஞ்சாலைத் துறையில் ராஜபாளையம் இரயில்வே மேம்பாலம். பக்கத்தில் ராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக இந்த அவையில் வலியுறுத்தியதற்குப் பின்னர், கடந்த 20–3–2018 அன்று, ராஜபாளையம் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கான பணியைக் கொடுப்பதற்காக இந்த ஆட்சியில்தான் நீங்கள் G.O. போட்டீர்கள். 41 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொடுத்திருக்கிறீர்கள். கடந்த 31–5–2018–லே, ஏறத்தாழ இரண்டு வருடங்களுக்கு முன்பாகவே அதற்கு டெண்டர் விடப்பட்டுவிட்டது. ஆனால், இதுவரை 30 சதவிகிதப் பணிகள் மட்டுமே நடைபெற்றிருப்பதாகச் சொல்கின்றார்கள். மேலே எந்தப் பணியும் நடைபெறாமல் அப்படியே நிற்கின்றது. இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அங்கே கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்கள் கையகப்படுத்தப்படவே இல்லை. நிலம் கையகப்படுத்தாமல் இருப்பது மட்டுமல்ல; அந்த நில உடைமைதாரர்களுக்கு எந்த அளவுக்கு அந்த நிலத்திற்கான இழப்பீடு வழங்க வேண்டும் என்பது முடிவு செய்யப்படவில்லை. நான் என்னுடைய நிலத்தைக் கொடுக்கின்றேன் என்றால், அதற்கு நீங்கள் என்ன compensation கொடுக்கப்போகின்றீர்கள் என்றுகூட இந்த இரண்டு வருடங்களாக arrive செய்ய முடியவில்லை. You leave alone acquisition. அதில் என்ன இழப்பீட்டுத் தொகையை நாம் வழங்கப் போகிறோம் என்பதைக்கூட, இரண்டு வருட காலமாக இந்த அரசினாலே நிர்ணயிக்க முடியாத ஒரு சூழ்நிலை இந்தத் துறையிலே இருக்கிறது என்பதை மட்டும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, அதற்கு முன்பு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலக்கட்டத்திலும் சரி, இந்தப் பிரச்சினை இருந்ததன் காரணத்தினால், 2016–லே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், இந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக ஒரு ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்த ஆலோசனைக் கூட்டத்தில்தான் இந்தக் கருத்துகளை நான் சொன்னேன். நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்த காரணத்தினால், நிலம் எடுப்பதிலேதான் பிரச்சினையே வருகிறது. ஆகவே, முதற்கட்டமாக நிலத்தைக் கையகப்படுத்திய பின்னர் அந்தப் பணிகளைச் செய்யலாம் என்று சொன்னேன். நிலத்தை முழுவதுமாக எடுப்பதற்குப் பதிலாக, 80 சதவிகித நிலத்தை கையகப்படுத்திவிட்டால், மீதி 20 சதவிகிதம் நிலம் எடுக்கின்ற நிலை இருந்தால்கூட, அந்தப் பணியைத் துவக்கலாம். ஏனென்றால், கிட்டத்தட்ட ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 3 முதல் 4 ஆண்டுக் காலமாகிறது என அப்போது சில கருத்துகளைச் சொன்னார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே இரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டுமென்றால் 7 ஆண்டுக் காலம் பிடித்தது. இப்பொழுது 5 ஆண்டுக் காலத்திலே அந்தப் பணியை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். இரயில்வே பாலம் அமைக்க வேண்டுமென்றால், எடுத்தவுடனே அந்தப் பணியை முடித்துவிட முடியாது. உங்களுடைய ஆட்சிக்காலத்தில் கொள்கை விளக்கக் குறிப்பை நீங்கள் எடுத்துப் பாருங்கள். ஓர் இரயில்வே மேம்பாலம் அறிவிக்கப்பட்டதிலிருந்து அந்தப் பணியை முடிக்க எத்தனை ஆண்டுக் காலம் தேவை என்பதை கொள்கை விளக்கக் குறிப்பை எடுத்துப் பாருங்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒரு பாலப் பணியை முடிப்பதற்கு 7 ஆண்டுகள் தேவைப்பட்டன. இப்பொழுது அதை 5 ஆண்டுக் காலமாகக் குறைத்திருக்கிறோம். ஆகவே, 80 சதவிகித அளவில் நிலமெடுத்த பிறகு இந்தப் பணியைத் துவக்கியிருப்பார்கள். ஆனாலும் ஆங்காங்கே ஒரு சில பிரச்சினைகள் இருந்ததால் காலதாமதம் ஏற்பட்டதேயொழிய, 100 சதவிகிதம்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 18

நிலமெடுப்பு முடிந்தபின் பணியை ஆரம்பிக்க வேண்டுமெனில் எந்தப் பணியுமே நடைபெற முடியாது. இப்பொழுது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைக்கின்றார்கள். பொது மக்கள் கோரிக்கை வைக்கின்றார்கள். இரயில்வே கடவின் குறுக்கே அதிகமான வாகனங்கள் சென்று கொண்டிருக்கின்றபொழுது இடையில் அடிக்கடி இரயில் செல்வதற்காக கடவு மூடப்படும்போது போக்குவரத்து தடை ஏற்படுகின்றது. அப்படி ஏற்படுகின்ற தடையைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக உயர்மட்டப் பாலம், கீழ்ப்பாலம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் அதில் கவனம் செலுத்தி பாலம் கட்டுவதற்கான அறிவிப்பைக் கொடுக்கின்றது. இருந்தாலும், 80 சதவிகிதம் நிலமெடுத்த பிறகே அந்தப் பணியைத் துவக்குகின்றோம். நீங்கள் சொன்ன மாதிரி, இது காலங்காலமாக இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதைத் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் காலங்காலமாக இது இருக்கிறது என்று சொல்லியிருந்தால், இந்தக் கேள்வியே வந்திருக்காது. அடுத்து இன்னொன்று. பொதுப் பணித் துறையிலே தேர்வாய்க்கண்டிகை, கண்ணன்கோட்டை என்ற கிராமத்திலே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதாகச் சொன்னீர்கள். 2012 ஆம் ஆண்டு அதற்கான அனுமதியைக் கொடுத்தீர்கள். ஏறத்தாழ 309 கோடி ரூபாய் estimate–ல் நீங்கள் அதை ஆரம்பிக்கிறீர்கள். தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு மட்டும் 160 கோடி ரூபாயை earmark செய்கிறீர்கள். ஏறத்தாழ 601 ஹெக்டேர் நிலம் அதற்குத் தேவை. தனியாரிடம் 324.15 ஹெக்டேர் நிலமிருக்கிறது. ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கு 601 ஹெக்டேர் நிலம் வேண்டுமென்று நீங்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறீர்கள். நீர்த்தேக்கம் அமைப்பதற்கு நிலமெடுப்பு செய்தால்தானே நீர்த்தேக்கம் அமைக்க முடியும்? ஆனால், அந்த நீர்த்தேக்கம் அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு முன்பு, 2013–ல் தலைமைப் பொறியாளர் 149.11 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டு, ஒப்பந்தப் பணியை இறுதி செய்து விடுகிறார். ஏற்கெனவே நான் சொன்னதைப்போல நிலவுடைமைதாரர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டினுடைய அளவைக்கூட உறுதி செய்ய முடியாத நிலையில், அந்தப் பணி அப்படியே நின்று போய்விடுகிறது. இதை நான் சொல்லவில்லை.

இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய CAG Report–ல் கடைசியாக என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இதற்கு என்ன காரணம் என்பதை நான் சொன்னதையெல்லாம் சொல்லிவிட்டு, conclude செய்கிறார். 'இவ்வாறாக வில்லங்கமில்லாத நிலத்தைக் கையகப்படுத்த தமிழ்நாடு அரசு தவறியதாலும், பணிக்குத் தேவையான மொத்த நிலங்களின் உடைமைகள் பெறப்பட்டதை உறுதி செய்துகொள்ளாமல், தலைமைப் பொறியாளர் பணியைத் துவக்கிய அவசரத் தன்மையாலும்' இதைத்தான் பார்க்க வேண்டும். நான் சொல்லவில்லை, CAG Report சொல்கிறது. 'சேமிப்புக் கொள்ளளவை அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தை எய்தாமல் போனதற்கான பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும்' என்று சொல்கிறது. இதற்கு யாரை நீங்கள் responsible ஆக சொல்லப் போகிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வாய்க்கண்டிகை திட்டத்திற்கு 2013–ல் டெண்டர் விடப்பட்டது. அதற்குப் பிறகு புதிய நிலமெடுப்புச் சட்டம் வந்துவிட்டது. புதிய நிலமெடுப்புச் சட்டம் வந்த காரணத்தினால்தான் இந்தப் பிரச்சினையே வந்தது. அங்கேயிருக்கின்ற நில உரிமையாளர்கள் எங்களுக்கு இழப்பீட்டுத் தொகை போதவில்லை என்று நீதிமன்றத்திற்குப் போய்விட்டார்கள். நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தினால்தான் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது நீதிமன்றத்தில் தீர்ப்பு பெறப்பட்டு விட்டது. அவர்களுக்குண்டான இழப்பீட்டு நிலுவைத் தொகை வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருகிறது. மூன்றே மாத காலத்தில் இந்தப் பணி நிறைவுபெற்று பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புதிய நிலமெடுப்புச் சட்டம் வந்த காரணத்தினால்தான் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டது. அதுவும் அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய்விட்டார்கள். நீதிமன்றத்திற்குச் சென்ற பிறகு, நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகுதான் நாம் இந்தப் பணியைத் தொடங்க முடியும். அந்தக் காலக்கட்டத்தில் இந்தப் பணியில் வேகமாக, துரிதமாகச் செயல்பட முடியாமல் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். 2013–லே

ஒப்பந்தம் விடப்பட்டது. அதற்குப் பிறகு, நான் சொன்ன மாதிரி புதிய நிலமெடுப்புச் சட்டத்தின்படி, இழப்பீட்டுத் தொகையை நில உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே, அதில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாகத்தான், நீதிமன்றத்திற்குச் சென்று இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொன்று இந்த ஆட்சியினுடைய Brownie Point. இங்கே நீங்கள் அடிக்கடி சொல்லிக்கொள்கிறீர்கள்; 'குடிமராமத்து', 'குடிமராமத்து நாயகன்' என்று முதலமைச்சர் அவர்களை நீங்கள் அன்போடு அழைக்கிறீர்கள். ஆனால், எங்களுடைய கேள்வி, குடிமராமத்து குறித்து இதுவரை என்னென்ன பணிகள், எந்தவிதமான பணிகள், எத்தனை கோடி ரூபாய் மதிப்பீட்டில், எந்தெந்த இடங்களில் செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறித்த பட்டியல் இதுவரை வந்திருக்கிறதா என்று கேட்டால், கிடையாது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட அந்த list வரப்பெறவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதே மன்றத்திலே எனக்குத் தெரிந்து 2, 3 முறை வலியுறுத்திக் கேட்டார். சட்டமன்ற உறுப்பினர்களுக்கே எந்தெந்த மாவட்டத்தில், என்ன பணி, எவ்வளவு மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது என்று தெரியாது. இப்போது செயலாக்கத் திட்டப் பணியில் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு ரூபாய் மதிப்பீட்டில் பணி எடுத்துக்கொண்டிருக்கின்றோம் என்று சொல்கின்றீர்கள். என்ன பணி எடுக்கப்பட்டிருக்கின்றது என்று தெரியவில்லை.

"நாராயணனொடு நான்முகனும் தேடி
தேடொணாத் தேவனை தேடி நான் கண்டுகொண்டேன்"

என்று அவர்கள்கூட பார்த்துவிட்டார்கள்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் தொகுதிப் பக்கம்

போயிருக்கமாட்டார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதிப் பக்கம் போயிருந்தால் ஏரியைப் பார்த்திருந்தால், தூர் வாரியது உங்களுக்குத் தெரிந்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் தொகுதிப் பக்கம் போகவில்லை என்று எங்களுக்குத் தெரிகிறது. நாட்டு மக்களே பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். உங்களுக்கு பாராட்ட மனம் இல்லாவிட்டாலும், குறை சொல்லாமல் இருந்தால்கூட பரவாயில்லை. இது முழுக்க முழுக்க, ஒரு மிகப் பெரிய திட்டம். குடிமராமத்துத் திட்டம் மூலமாக நீண்ட காலமாக, விவசாயப் பெருமக்கள் வைத்த கோரிக்கையை எங்களது அரசு நிறைவேற்றி வருகின்றது. இன்றைக்கு சுமார் 14,000 ஏரிகள் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் இருக்கின்றன. இந்த 14,000 ஏரிகளிலும் படிப்படியாக குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக தூர்வாரும் பணி செய்யப்பட்டிருக்கிறது. பருவ காலங்களில் பெய்யும் மழை நீர் முழுவதையும் சேமித்து வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். நீங்கள் எதையும் செய்யவில்லை என்கிறீர்கள்.

முதன்முதலில் 2016–2017 ஆம் ஆண்டில் குடிமராமத்துத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். பரீட்சார்த்த முறையில் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டோம். இந்தத் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய்தான் கொடுத்தோம். இந்தத் திட்டம் எப்படி செயல்படுகிறது என்பதற்கு முன்மாதிரியாக 100 கோடி ரூபாயில் 30 மாவட்டங்களில் 1,513 ஏரிகளில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அப்போது ஒரு ஏரிக்கு இவ்வளவு ரூபாய் என்று குறிப்பிட்ட நிதியைத்தான் அதற்கு ஒதுக்கினோம். முதன்முதலில் எடுக்கும்போது இந்தத் திட்டம் சிறப்பான திட்டமா, பொது மக்களிடத்தில் வரவேற்பு கிடைக்குமா, விவசாயிகளிடம் வரவேற்பு கிடைக்குமா என்று பரீட்சார்த்த முறையில் 100 கோடி ரூபாயை ஒதுக்கி 1,513 ஏரிகளை எடுத்தோம். அப்போது ஒவ்வொரு ஏரிக்கும் ஒரு குறிப்பிட்ட அளவுதான் நிதி கொடுத்தோம். ஆனால், இதற்கு விவசாயப் பெருமக்களிடத்தில் ஒரு நல்ல வரவேற்பு கிடைத்தது. பொது மக்களிடத்திலும் ஒரு நல்ல வரவேற்பு கிடைத்தது. ஆகையினால்தான் இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத நீங்கள்கூட தவறான கருத்தை இங்கே பதிவு செய்து கொண்டிருக்கின்றீர்கள்.

மீண்டும், சிறப்பான திட்டம் என்று மக்களிடத்தில் வரவேற்பு பெற்ற காரணத்தினாலும், விவசாயிகளிடத்திலிருந்து வரவேற்பு வந்த காரணத்தினாலும் 2017–2018 ஆம் ஆண்டில் 30

மாவட்டங்களில் 331.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1523 பணிகள் (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்கப்பட்டு, 1,463 பணிகள் முடிவடைந்துள்ளன. 15 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 45 பணிகள் பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டிருக்கின்றன. 2019–2020 ஆம் ஆண்டில், 499.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,829 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1094 பணிகள் முடிவடைந்துள்ளன, 718 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்ட 17 பணிகளுக்குப் பதிலாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் 3.83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 குடிமராமத்துப் பணிகளை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக 3 ஆண்டுகளில் பொதுப் பணித் துறையின் மூலமாகப் பராமரிக்கப்படுகின்ற ஏரிகளில் 4,865 பணிகள் 930.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், வருகின்ற 2020–2021 ஆம் ஆண்டில் 34 மாவட்டங்களில் 1364 குடிமராமத்துப் பணிகள் 499.70 கோடி ரூபாயில் செயல்படுத்தப்படும். இந்தப் பணி முழுக்க முழுக்க விவசாயிகளை வைத்துத்தான் செயல்படுத்தப்படுகிறது. Tender விடுவதே கிடையாது. ஆகவே, பாசன சபை, விவசாயச் சங்கங்கள் மற்றும் ஏரிப் பாசனம் பெறுகின்ற அந்த விவசாயிகளை உள்ளடக்கி இந்தப் பணிகளை மேற்கொள்கின்றோம்.

இந்தப் பணியைப் பொறுத்தமட்டில், குடிமராமத்துத் திட்டம் என்பது ஓர் அற்புதமான திட்டம். இந்தத் திட்டத்தின்மூலம் 14,000 ஏரிகளும் தூர் வாரப்பட்டு முழுமையாக நிறைவேறுகின்றபோது, பெய்கின்ற மழைநீர் முழுவதும் சேமிக்கப்பட்டு விவசாயிகளுக்குத் தேவையான நீர் கிடைக்கும், பொது மக்களுக்குத் தேவையான குடிநீர் கிடைக்கும் என்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்றோம். அதுவும் ஒரு ஏரிக்கு எவ்வளவு செலவாகுமோ, அவ்வளவு செலவையும் இப்போது அதில் குறிப்பிடுகின்றோம். முதன்முதலில் பரீட்சார்த்த முறையில் ஒரு ஏரிக்கு 10 இலட்சம் ரூபாய் என்ற முறையில் 10 இலட்சம் ரூபாய்தான் கொடுத்தோம். இப்போது அதனை மாற்றி கரையைப் பலப்படுத்துவது, வரத்து வாய்க்கால், மதகு சரி செய்வது இப்படி எல்லா வகைகளிலும் பொதுப் பணித் துறையின் மூலமாக estimate போட்டு, ஒரு ஏரிக்கு எவ்வளவு செலவாகுமோ அதனை அந்த விவசாயிகளிடம் கொடுத்து, அந்தப் பணியினை

விவசாயிகளே மேற்கொள்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து ஏரிகளும் இப்போதே எடுக்கப்படவில்லை. 14,000 ஏரிகளில் இதுவரைக்கும் 4,865 ஏரிகளைத்தான் நாங்கள் எடுத்து இந்தப் பணியை மேற்கொண்டு வருகின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல; நேற்றைக்கு முந்தைய தினம்கூட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற ஏரிகளும் இதேமாதிரி குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் சீர் செய்யப்பட வேண்டும் என்று மக்களிடத்திலிருந்தும், விவசாயிகளிடத்திலிருந்தும் கோரிக்கைகள் வந்ததன் அடிப்படையில் 1,250 கோடி ரூபாயில் அந்தப் பணிகளையும் நாங்கள் மேற்கொள்கிறோம் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான் தொகுதிக்கே போகவில்லை என்று சொல்கின்றார். தொகுதிக்குப் போன காரணத்தினால்தான் இந்த அவையில் நான் நான்காவது முறையாக இங்கே வந்து கழகத்தின் சார்பாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஒன்று, நான் தொகுதியில் இல்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார். நான் இதுவரை என்ன நினைத்துக்கொண்டிருந்தேன் என்றால் ** என்று. இப்போதுதான் தெரிகின்றது ** என்று கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து . . .

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய வல்லமை மிகுந்த

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பேச்சால் எதையும் வீழ்த்த முடியாது. உண்மை என்ன என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். ஏனென்றால் இது முழுக்க முழுக்க விவசாயிகள் செய்கின்ற பணி. உங்கள் ஆட்சியில் இருந்ததுபோன்று ஒருவருக்கே tender கொடுத்து, box–ல் போடுகிற tender எல்லாம் கிடையாது. ஆக, முழுக்க முழுக்க விவசாயிகளுக்குத்தான் இந்த cheque செல்கிறது. அதுவும் அந்த விவசாயிகள் எவ்வாறு இந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்த கையேடும் கொடுக்கப்படுகின்றது. நீங்கள் உங்கள் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களைச் சந்தித்து கேளுங்கள்; இந்தக் குடிமராமத்து திட்டம் சரியான திட்டமா, இல்லையா என்று கேட்டறிந்துவிட்டுப் பேசினால், சரியாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உளவுத் துறையைப் பொறுத்தவரையில் நன்றாகத்தான் செயல்படுகிறது. ஆகவே, நன்றாக செயல்படுகின்ற காரணத்தினால்தான் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இன்றைக்கு வந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) India Today என்ற பத்திரிகை, சட்டம்–ஒழுங்கைப் பேணிக் காப்பதிலே தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக தமிழகம் முதல் மாநிலமாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறது. அதற்கு விருதுகளையும் பெற்றிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய சான்று எங்களுக்குத் தேவையில்லை. மக்களுடைய சான்று இருந்தால் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பில் இருக்கக்கூடிய ** என்று சொன்னார். அதனை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது எதற்கு? தேவையில்லாத அந்த வார்த்தைகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளில் குறிப்பிட்டது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இருந்தால் கொடுக்கலாம்; ஆதாரம் இல்லாமல் பேசுகின்ற குற்றச்சாட்டுக்கள் எதுவாக இருந்தாலும், அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் தொகுதியிலேயே, அங்கேயேதான் குடியிருக்கின்றேன். அதே ஊரில், அதே கிராமத்தில் எங்கள் தந்தையார் காலத்திலிருந்து குடியிருக்கின்றேன். நான் அந்த விவாதத்திற்குள் செல்லவில்லை. நீங்கள் சொல்வதால் அதனை விட்டுவிடுவோம். நான் அடுத்த point–க்கு செல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய தொகுதியில் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்கிற விவரத்தை நான் கொடுக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் சென்று பாருங்கள். அதில் ஏதாவது தவறு இருந்தால், அரசு நடவடிக்கை எடுக்கும். இது முழுக்க முழுக்க விவசாயிகளுக்காகக் கொண்டு வந்த திட்டம். ஆகவே, அந்தத் திட்டத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், சுட்டிக்காட்டலாம்; அதில் ஒன்றும் தவறு கிடையாது. அந்தக் குறைபாட்டைக் களைய உடனடியாக எங்களுடைய

அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் குறித்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் என்ன கேட்டேன்? இதே கேள்வியைத்தான் நான் துவக்கத்தில் கேட்டேன். இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "உங்கள் தொகுதியில் எந்தெந்த இடங்களில் என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற list–ஐ கொடுக்கின்றேன்" என்று சொல்கிறார்கள். நான் வரவேற்கின்றேன்; மகிழ்ச்சி. அதைத்தான் என்னுடைய உரையில் முன்பே கேட்டேன், எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கேட்டதற்காகத்தான் நான் அந்தப் பதிலைச் சொன்னேன். ஏனென்றால் உங்களுடைய தொகுதியில் இந்தக் குடிமராமத்துப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் எதுவுமே நடைபெறவில்லை என்று சொல்கிறீர்கள். அதனால்தான் நான் சொல்கிறேன். உங்களுடைய தொகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற குடிமராமத்துப் பணிகளினுடைய விவரங்களையெல்லாம் நான் சொல்கிறேன். அதனால்தான் நீங்கள் பார்த்தீர்களா, இல்லையா என்று கேள்வி கேட்டேன். நீங்கள் 'எதுவுமே நடக்கவில்லை, ஒன்றுமே மக்களுக்குத் தெரியவில்லை' என்ற தவறான செய்தியைச் சொல்கின்றபோது, அதற்கு பதில் சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது. நீங்கள் எப்படி கேள்வி கேட்கிறீர்களோ, அதற்குண்டான பதிலைச் சொல்ல வேண்டுமல்லவா? அதற்குத் தானே நீங்களும் கேள்வி கேட்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நதிநீர் இணைப்பு. இதற்கு ஒரு முன்னோடி திட்டமாக மாநிலங்களுக்குள்ளாக பாயக்கூடிய ஆறுகளை இணைக்கக்கூடிய

ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முதலாகக் கொண்டு வந்த பெருமை தலைவர் கலைஞர் அவர்களைச் சாரும். தாமிரபரணி–கருமேனி–நம்பியாறு திட்டம், அதேபோல் காவேரி–வைகை–குண்டாறு திட்டம். 2008–2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அதை இடம் பெறச் செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். 165 கோடி ரூபாய் செலவில் காவேரி ஆற்றினுடைய கட்டளை பகுதியில் ஒரு கதவணையினைக் கட்டக்கூடிய ஒரு பணியினை அன்றைக்கு பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மேற்கொண்டார்கள். அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்த இன்றைய எதிர்க் கட்சித் தலைவர், எங்கள் ஆருயிர் அண்ணன் தளபதியார் அவர்கள் பல முறை அங்கே நேரில் சென்று அந்தப் பணியினை விரைவுபடுத்தினார்கள். இப்போது அங்கிருந்து நேரடியாக அக்கினி ஆறு மற்றும் பாம்பாறு வழியாக வைகை மற்றும் குண்டாற்றில் இணைப்பதாக இத்திட்டத்தில் சொல்லியிருக்கிறீர்கள். இந்தத் திட்டத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறீர்கள். முதல் பிரிவில் 7,677 கோடி ரூபாய்க்கு காவேரியிலிருந்து தெற்கு வெள்ளாறு வரை இணைக்கக்கூடிய இந்தத் திட்டத்தை 'மத்திய அரசாங்கத்தினுடைய கொள்கை ஒப்புதலுக்காக அனுப்பியிருக்கிறோம்' என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்குப் பின்பு, இதே 7,677 கோடி ரூபாய்க்கு நீங்கள் 'நிருவாக ஒப்புதல் வழங்குவதற்கு கருத்துரு இருக்கிறது' என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புவது, இதை என்ன செய்வதற்கு உத்தேசித்திருக்கிறீர்கள். நீங்கள் State fund–லேயே இதைச் செய்வதற்கு முடிவெடுத்திருக்கிறீர்களா அல்லது மத்திய அரசாங்கத்தினுடைய fund–ஐ வாங்கித்தான் இதை செய்யப் போகிறீர்களா என்பதை தாங்கள் விளக்கிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டம். ஏற்கெனவே மத்திய அரசு இந்தத் திட்டத்தை எடுத்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விவசாயப் பெருமக்களுடைய கோரிக்கையை ஏற்று, மத்திய அரசு நிதி கொடுத்தாலும்,

கொடுக்காவிட்டாலும் மாநில அரசே இந்தத் திட்டத்தை எடுத்து, செயல்படுத்தலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் நான் இந்த அறிவிப்பைக் கொடுத்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மத்திய அரசிடம் செல்கின்றபோது காலதாமதம் ஏற்படுகின்றது. இப்போது 2 ஆண்டுக்காலமாக மேட்டூரிலிருந்து உபரி நீர் கடலில் சென்று வீணாகக் கலக்கிறது. அவ்வாறு வீணாகக் கலக்கின்ற நீரை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் கட்டளைக் கால்வாய் கதவணையிலிருந்து வறட்சியான பகுதிக்குத் திருப்பிவிட்டு, இப்போது கரூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை தொகுதிகள் உங்கள் தொகுதி உட்பட முழுவதுமாகப் பயன்பெறுகின்றன. விருதுநகர் மாவட்டத்தில் 11,000 ஏக்கர் அளவில் திருச்சுழி தொகுதிதான் அதிகமாகப் பயன்பெறுகிறது. ஆகவே, இந்த அற்புதமான திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக, மத்திய அரசு நிதி கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும், மாநில அரசு நிதியிலிருந்தே அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் முதற்கட்டமாக நில எடுப்புக்காக 700 கோடி ரூபாய் முன்பணமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னாற்போல் இத்திட்டத்தின்கீழ் எங்கள் வறண்ட பகுதிகளிலெல்லாம்கூட தண்ணீர் வருகிறது. ஆனால், அது துவக்கத்திலே இருக்கக்கூடிய வறண்ட பகுதி. திருச்சி மாவட்டத்திலிருக்கக்கூடிய மருங்காபுரி, துவரங்குறிச்சி, கரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பகுதிகள் மற்றும் மணப்பாறை ஆகியவற்றிற்கெல்லாம் தண்ணீர் கிடைக்காத ஒரு நிலை இருக்கிறது. இவை மேடான பகுதிகளாக இருக்கின்ற காரணத்தினால், தண்ணீர் கால்வாய்க்குப் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. மேலும் அது ஆழமாகச் செல்கின்ற நிலையும் இருக்கிறது. எனவே, இந்த ஆழமான கால்வாயிலிருந்து, நீர் உந்துதல்மூலம் (pumping) வழியில் இருக்கக்கூடிய பஞ்சம்பட்டி ஏரி, உடையான்பட்டி ஏரி, தரகன்பட்டி ஏரி போன்ற வறண்ட கிராமங்களுக்கு நீர் கொடுப்பதற்கும், அங்கிருந்து பொன்னணி ஆற்றில் அதை இணைக்கக்கூடிய வகையிலும் செய்தால்,

2020 மார்ச் 18] [திரு. தங்கம் தென்னரசு]

திருச்சி மாவட்டத்திலிருக்கக்கூடிய வறண்ட பகுதி, பாசன வசதி பெறக்கூடிய வாய்ப்பைப் பெறும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில், தற்போது 142 அடி நீரைத் தேக்கி வைப்பதற்குண்டான வாய்ப்பினை நாம் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இதன் முழுக் கொள்ளளவான 152 அடி நீரைத் தேக்கிவைக்க வேண்டுமென்றால், அணையினைப் பலப்படுத்த வேண்டிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தீர்ப்புகள் இருக்கின்றன. இவற்றில் பேபி அணையைப் பலப்படுத்துவதற்கு இதுவரை நம்மால் எந்தப் பணியும் மேற்கொள்ள முடியவில்லை. ஏன் மேற்கொள்ள முடியவில்லையென்றால், அந்த அணையின் முன்பாக 23 மரங்கள் இருக்கின்றன. இந்த 23 மரங்களை வெட்டுவதற்கு அனைத்து கொள்கை விளக்கக் குறிப்புகளிலும், 'நாங்கள் கேரள அரசோடு பேசிக்கொண்டிருக்கிறோம், நீதிமன்றத்தில் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறோம் ஆண்டுகள் ஓடிக்கொண்டேயிருக்கின்றன, மரங்கள் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன, Dam கொஞ்சம்கூட வளரவேயில்லை. அது அப்படியே, 142 அடியிலேயே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 136 அடியிலிருந்து 142 அடியாகக் கொண்டு வந்ததே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் போராட்டம் நடத்தி, அதன் மூலமாக நீதிமன்றத்தில் தீர்ப்பைப் பெற்று தற்போது தேக்கிவைத்துக்கொண்டிருக்கிறோம். இனி 142 அடியை 152 அடியாக உயர்த்துவதற்கு அணையைப் பலப்படுத்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களது அரசால் அதற்கு ஒப்பந்தப்புள்ளி விடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன. ஒரு சில பணிகள்தான் நிறைவேற்றப்பட்டன, மீதிப் பணிகளை நிறைவேற்ற முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல், 23 மரங்களை வெட்ட முடியவில்லை. அங்கிருக்கிற கேரள மாநில அரசின் வனத் துறையினர் அதற்கு

அனுமதி கொடுக்கவில்லை. 2, 3 மரங்களை வெட்டும்போதுகூட அவர்கள் தமிழக அரசு அதிகாரிகளின்மீது வழக்குத் தொடர்ந்தார்கள். இவையனைத்தும் நடந்து கொண்டிருக்கின்றன. இருந்தாலும், நீங்கள் சொன்னதைப்போல், அந்த மரங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தி, பேபி அணையை பலப்படுத்தி, பிறகு அந்த நீர்மட்டத்தை 142 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்துவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அது மட்டுமல்லாமல், இந்த அணையினைப் பலப்படுத்துவதற்கான கட்டுமானப் பொருட்களை கேரள வனப் பகுதியின்மூலம்தான் கொண்டு செல்ல முடியும். அதற்கும் அவர்கள் அனுமதி கொடுப்பதில்லை. இது குறித்து, தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறது. வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது இரு மாநிலங்களுக்கும் இடையேயுள்ள பிரச்சினை. இன்றைக்கு, நேற்றைக்கு ஏற்பட்ட பிரச்சினை அல்ல; காலங்காலமாக இருக்கின்ற இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக நல்ல அணுகுமுறையின் மூலமாக அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். வழக்கும் நீதிமன்றத்தில் இருக்கின்றது. தீர்ப்பு வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், அணையைப் பலப்படுத்திய பிறகு, அதன் நீர் மட்டத்தை 142 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று அமராவதி அணை சம்பந்தமாக இன்னொரு பிரச்சினை சமீபத்தில் வந்துள்ளது. இந்த அமராவதி அணையானது 90 அடி உயரமும், ஏறத்தாழ 4 TMC கொள்ளளவும் கொண்ட மிக முக்கியமான அணை. திருப்பூர்–கரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஏறத்தாழ 55,000 ஏக்கர் நிலப்பரப்பின் பாசன வசதிக்கு இந்த அணை ஓர் ஆதாரமாக இருக்கிறது. பல்வேறு கரையோரக் கிராமங்களில் இருக்கக்கூடிய குடிநீர்த் திட்டங்களுக்கும் இது ஓர் ஆதார அமைப்பாக விளங்குகிறது. இந்த அணைக்கு மேற்குத் தொடர்ச்சி மலையில் 800 சதுர கி.மீ. நீர்ப்பிடிப்புப்

பகுதி இருக்கிறது. சின்னாறு, தேனாறு, பாம்பாறு ஆகிய ஆறுகளிலிருந்து அமராவதி அணைக்கு நீர் வரத்து கிடைக்கின்றது. இதற்கிடையில் கேரள அரசின் சார்பில் Idukki package என்கின்ற திட்டத்தின் அடிப்படையில், ஏறத்தாழ 300 கோடி ரூபாய் செலவில் மேலேயிருக்கக்கூடிய ஆறுகளில் ஆங்காங்கே 6 இடங்களில் அணைகள் கட்டுவதற்கு அவர்கள் இப்போது முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, பாம்பாற்றில் செங்கலாறு கலக்கக்கூடிய காந்தளூர், பட்டிசேரி, மறையூர் போன்ற பகுதிகளில் அணைகளைக் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். இப்போது, குறிப்பாக பட்டிசேரியில், ஏறத்தாழ 98.4 அடி உயரம், 459.2 அடி நீளம் உள்ள அணையைக் கட்டுவதற்கான பணியை அவர்கள் துவக்கியிருக்கிறார்கள். இந்த அணையை அங்கே கட்டினால் அமராவதிக்கு வரக்கூடிய 2 டி.எம்.சி தண்ணீர் நின்றுவிடும். அமராவதிக்கு வரக்கூடிய தண்ணீர் நின்றுபோய்விட்டால், அதன் பின்னால் இருக்கக்கூடிய பாசனப் பகுதிகளுக்கான குடிநீர்த் திட்டங்கள் மிகக் கடுமையான பாதிப்பிற்குள்ளாகும். கேரள அமைச்சரை அங்கே நேரில் போய் பார்த்து பேசிவிட்டு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆக, அண்டை மாநிலங்களுடன் சுமுகமான பேச்சுவார்த்தை நடத்துவதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அமராவதிக்கு மேலே அணை கட்டக்கூடிய பணியில் தமிழக அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது? ஏனென்றால் இது காவேரியினுடைய உப ஆறுகளிலிருந்து வரக்கூடிய ஆறு. காவேரி நதிநீர் ஒழுங்காற்று ஆணையத்தின் பல்வேறு சட்ட, திட்டங்களுக்கு உட்பட்டிருக்கக்கூடிய இந்த அணைப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு எந்தவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு தமிழக விவசாயிகளின் நலனைக் காப்பாற்ற இருக்கிறது என்பதை நான் இங்கே அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12–10

அதுபோல், பொதுப் பணித் துறையில், நீர்ப் பாசனத்தில், பல்வேறு திட்டங்களுக்காக பல்வேறு காலக்கட்டத்தில் ஒப்பளிக்கப்பட்டிருக்கக்கூடிய எவ்வளவு தொகைகள் செலவிடப்படாமல் உள்ளன என்று CAG Report–ல் கொடுத்திருக்கிறார்கள். நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 2013–2014 ஆம் ஆண்டில் allotment ரூ.1,860 கோடி ரூபாய்; ஆனால், surrender எவ்வளவு ஆகியிருக்கிறது என்றால், 781 கோடியே 84 இலட்சம் ரூபாய். 2014–

2015 ஆம் ஆண்டில் allotment ரூ.2,206 கோடி ரூபாய்; surrender ரூ.947 கோடி ரூபாய். 2015–2016 ஆம் ஆண்டில் 1,976 கோடி ரூபாய் allotment; Surrender 1,186 கோடி ரூபாய். ஏறத்தாழ 60 சதவிகிதம். இப்படியே போய்க்கொண்டிருக்கிறது. இறுதியாக, 2017–2018 ஆம் ஆண்டில் 2,971 கோடி ரூபாய் irrigation project allotment–ல் 1,730 கோடி ரூபாய் surrender ஆகியிருக்கிறது. ஒப்பளிக்கப்பட்டிருக்கிற தொகையில் திருப்பியளிக்கப்பட்டிருக்கிறது. நான் கேட்க விரும்புவது, இவ்வளவு பெரிய தொகைகள் செலவிடப்படாமல் ஏன் திருப்பி அளிக்கக்கூடிய நிலை வந்திருக்கிறது? இது நம்முடைய செயலாக்கத் திறனைக் குறைத்துக் காண்பிக்கின்ற வகையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணை கட்டுவதைப் பற்றி இங்கே சொன்னார்கள். எந்த ஓர் அணை கட்டுவதாக இருந்தாலும், கீழே இருக்கின்ற மாநிலத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் மேலே இருக்கின்ற மாநிலம் அணை கட்ட வேண்டும். அப்படித்தான் ஒப்பந்தம் இருக்கிறது. ஆனால் யாரும் அதைக் கடைப்பிடிப்பதில்லை. கடைப்பிடிக்காத காரணத்தினாலேதான் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடருகிறோம். வழக்கும் முழுமையாக நடைபெற்று முடிவதும் இல்லை. மரியாதைக்குரிய அண்ணன் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். பாலாற்றைப் பொறுத்தவரை எவ்வளவு பிரச்சினையிருக்கிறது என்று நன்றாகத் தெரியும். ஆகவே, நாம் வழக்கு தொடர்ந்துகொண்டே இருக்கின்றோம். ஏனென்றால் நதிகள் உற்பத்தியாவது நம்முடைய மாநிலத்தில் குறைவாகத்தான் இருக்கிறது. கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலிருந்து நதிகள் உற்பத்தியாகி, நம்முடைய மாநிலத்திற்கு ஓடிவருவதைத் தேக்கி, நம்முடைய பாசன பரப்பிற்குப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றோம். அந்தவகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, மேலே இருக்கின்ற அந்த மாநிலம் நமக்கு வருகின்ற தண்ணீரைத் தடுத்து நிறுத்துகின்றபோது, நாம் நீதிமன்றத்தை நாடித்தான் இதற்குப் பரிகாரம் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இது எல்லா ஆட்சிகளிலேயும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சம்பவம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; கேரள மாநில முதலமைச்சரை நான் நேரிலே போய்ச் சந்தித்தேன். பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட ஒப்பந்த மறு ஆய்வுப் பணியை எடுத்துக்கொள்வதற்காக சந்தித்தோம். மேற்கு நோக்கி ஓடுகின்ற 8 நதிகளில், அதாவது, மலைப் பகுதியில் செல்கின்ற ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் அதன் கிளை நதிகளான பெருவாரிப்பள்ளம், தோணக்கடவு மற்றும் சமவெளிப் பகுதிகளில் ஓடுகின்ற ஆழியாறு மற்றும் பாலாறு ஆகிய நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரைப் பயன்படுத்தும் வகையில், 2–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கேரள அரசின் இசைவுடன் தமிழ்நாடு அரசினால் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது. கேரள மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கிடையே 29–5–1970 அன்று, மேற்குறிப்பிட்டுள்ள நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரை, இரு மாநிலங்களின் மின் உற்பத்தி, பாசனம், குடிநீர் வழங்கல், தொழிற்சாலை பயன்பாடு மற்றும் இதர உபயோகங்களுக்கு பயன்படுத்தும்பொருட்டு, 9–11–1958 முதல் முன் தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் ஆகிய வட்டங்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தின் பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களும் பயனடைகின்றன. இந்த ஒப்பந்தம் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி 9–11–1988 அன்று மறு ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இரு மாநிலங்களும் இந்த ஒப்பந்த மறு ஆய்விற்கான ஆவணங்களை 21–9–1989 அன்று பரிமாற்றம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்த மறு ஆய்வு குறித்து, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

பிற்பகல் 12–15

தமிழ்நாட்டு விவசாயிகளின் நலனைக் காக்கவும் மற்றும் பல மாவட்டங்களில் குடிநீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்கும், கேரளாவுடன் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் ஏதுவாக கேரள மாநில முதலமைச்சருடன் 25–9–2019 அன்று திருவனந்தபுரத்தில் நானும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டோம். அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டபோது கீழ்க்கண்டவாறு பேச்சுவார்த்தை நடந்தது. “பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் ஒப்பந்தம் மறுஆய்வு செய்தல்,

ஒப்பந்தப்படி ஆனைமலை ஆற்றிலும் 205 TMC தண்ணீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பும் திட்டம், மணக்கடவின் மேற்பகுதியில் சமச்சீர் நீர்த்தேக்கம் அமைத்தல், நீராறு, நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்புத் திட்டம், பாண்டியாறு–புன்னம்புழா இணைப்புத் திட்டம், நெய்யாறு பாசனத்திற்கு நிறுத்தப்பட்ட நீரை மீண்டும் வழங்குதல், செண்பகவல்லி அணையைச் சீரமைத்தல்" போன்ற முக்கியத் திட்டப் பணிகள் குறித்து அந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, செயலாளர்கள் தலைமையில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் 5 உறுப்பினர்களைக் கொண்ட இரு குழுக்கள் முறையே பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்த மறுஆய்வு, பாண்டியாறு–புன்னம்புழா திட்டம் பரிசீலிப்புக்காக ஏற்படுத்தப்பட்டன. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் குறித்து இரு மாநில முதன்மைச் செயலாளர்கள் தலைமையில் இயங்கும் குழுவின் முதல் கூட்டம் 12–12–2019 அன்று சென்னையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டப் பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது. மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடைபெற்று சுமுகமான முடிவுகள் எட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. நம்முடைய அதிகாரிகள் கேரளா செல்ல இருக்கிறார்கள். இரு மாநிலங்களுக்கிடையேயும் நதிநீர் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது—அதற்குத் தீர்வு காண்பதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நல்ல சுமுகமான முறையிலே நாம் மற்ற மாநிலங்களோடு இணைந்து பயணித்தால்தான், நமக்குக் கிடைக்க வேண்டிய நீர் கிடைக்கும். ஏனென்றால், நதியானது அந்த மாநிலத்தில் உற்பத்தியாகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே, பல ஆண்டுக்காலமாக இருக்கின்ற பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக நான் நேரிலே சென்று கேரள முதலமைச்சரைச் சந்தித்துப் பேசியபோது, அவர் உண்மையிலே மனமுவந்து, இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற ஒரு நல்ல முடிவைத் தெரிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக, பல ஆண்டுகளாக இருந்து வந்த பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு வருவதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒதுக்கப்பட்ட நிதி எல்லாம் செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இப்போது கூட நாம் காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு 800 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். ஆகவே, நிலமெடுப்பிற்கு அந்த

நிதியைப் பயன்படுத்த முடியாவிட்டால் அடுத்த ஆண்டு கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படும். உதாரணத்திற்கு இரயில்வே மேம்பாலம் அல்லது கீழ்ப்பாலம் கட்ட வேண்டுமென்று திட்டமிடப்பட்டு 7,8 ஆண்டுக்காலம் ஆகிறது. அதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த ஆண்டில் அந்தப் பணி நடைபெற முடியாதபோது, அந்தத் தொகை அடுத்த ஆண்டு கணக்கிற்கு எடுத்துச் செல்லப்படும். அதனால்தான் அந்தத் தொகை உயர்ந்து கொண்டே போகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள முதலமைச்சரோடு பேசி, நீர் பிரச்சினைக்கு பரிகாரம் காண்பது ஒரு நல்ல முறைதான். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், நான் சொல்ல விரும்புவது பலமுறை பேசியாகிவிட்டது. நெய்யாற்றிலே ‘தண்ணீர் விடு’ என்று கேட்டால், ‘பணம் கொடு’ என்று கேட்பார்கள். செண்பகத்தோப்பு அணையிலிருந்து தண்ணீர் கேட்டால் அதை மறுத்துவிடுவார்கள். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், பாண்டியாறு–புன்னம்புழா, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில், ஆனைமலையாற்றிலிருந்து 2 டி.எம்.சி. நீரையும், நல்லாற்றை நேராக இணைக்கவும், சோலையாறு–கூனக்கடவு–பெருவாரிப்பள்ளத்திலிருந்து வருகின்ற 14 டி.எம்.சி. நீரையும் பெறுவதற்கு ஒரு தீர்வைக் காண வேண்டும். நான் 7, 8 முதலமைச்சர்களோடு பேசியிருக்கிறேன், மந்திரிகளோடு பேசியிருக்கிறேன். இப்படித்தான் குழு போட்டிருக்கிறோம். குழு போட்டு, போட்டு நிறைய பேசியிருக்கிறோம். ‘ஒரு Committee–ஐ போடு, இல்லையென்றால், கல்லைப் போடு’ என்று போய்விடுகிறது. ஆனால், நான் ஒன்றை முதலமைச்சரிடம் சொல்லிக்கொள்கிறேன். இருக்கிற முதலமைச்சர்களிலே இப்போது கேரளாவில் இருக்கிற முதலமைச்சர் கொஞ்சம் சாதகமாக இருக்கக்கூடியவர். பிரச்சினையை அணுகக்கூடியவர். ஒரு பொதுவுடைமைக் கட்சியினுடைய உள்ளார்ந்த உள்ளம் கொண்டவர். இந்த M.L.A.s போகட்டும், குழு போகட்டும், அதிகாரிகள் போகட்டும், அதெல்லாம் சரியாக வராது. இவர்களும் போய் சரியாகப் பேச மாட்டார்கள். எனவே, நீங்கள் நேரடியாகப் பேசுங்கள்.

நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன். கோவைக்கு சிறுவாணி ஆற்றுத் தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்று பலமுறை

பேசினார்கள்; நடக்கவில்லை. அப்போது திரு. ஈ.எம்.எஸ். நம்பூதிரி பாட் அவர்கள் கேரள முதல்வராக இருந்தார். கலைஞரைப் பார்த்து அவர் 'கருணாநிதி, இந்த அதிகாரிகளை விட்டால், நம்முடைய எட்டு தலைமுறைக்கும் பேசுவார்கள். நேரடியாக உட்கார், பேசலாம்' என்று சொல்லி, என்ன வேண்டுமென்று உடனே கேட்டு, சிறுவாணி ஆற்று நீரைக் கொடுத்தார். அப்படி நம்முடைய முதலமைச்சர் One to one என்ற முறையில், இரு மாநில முதலமைச்சர்களும் நேரடியாகப் பேசி, முடிவெடுத்தாலொழிய நடக்காது. இப்போது கேரளாவில் இருக்கிற முதலமைச்சர் நல்ல முதலமைச்சர். நல்ல வாய்ப்பு, விட்டு விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அனுபவரீதியாகப் பேசுகிறார். உண்மையிலேயே அதை நான் வரவேற்கிறேன். மாண்புமிகு கேரள முதலமைச்சர் ஒரு நல்ல முதலமைச்சர் என்ற காரணத்தினால் நாங்கள் அவரை நாடியிருக்கிறோம். நீண்ட காலப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய எண்ணம். அதனடிப்படையில்தான் பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. கிருஷ்ணன்குட்டி, நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்கள், இதில் முழு அக்கறை செலுத்துகிறார். அவர் தமிழ்நாடு border–ல் இருக்கிறார். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்தவர். தமிழ்நாட்டு மக்களின் நீர்ப் பிரச்சினையை நன்குணர்ந்த காரணத்தினாலேயே, நம்முடைய தமிழ் மக்களும் அவரிடத்தில் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அவரும் இதில் முழு அக்கறையோடு செயல்படுகிறார். அங்கிருக்கிற கேரள நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களும், நமக்குத் துணையாக நிற்பதால், இந்தப் பேச்சுவார்த்தை நல்ல முறையில் வெற்றிகரமாக முடியும் என நம்புகிறோம். நம்பிக்கையின் அடிப்படையில்தான் பேச்சுவார்த்தையைத் துவங்கியிருக்கின்றோம். ஆகவே, 'முதலில் அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தையை நடத்தி, பின்னர், முதலமைச்சர் இருவரும் சந்தித்து இதனை இறுதி செய்யலாம்' என்று அவர் நல்ல கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். அதன் அடிப்படையில் முதற்கட்டமாக அதிகாரிகள் மட்டத்தில்

பேச்சுவார்த்தை நடப்பதற்குண்டான குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பேச்சுவார்த்தை நல்ல சுமுகமான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, சீக்கிரம் உங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) 55 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, M Sand பற்றி ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிவிட்டு, எனது தொகுதிக் கோரிக்கையைப் பற்றிச் சொல்கிறேன். மணல் தட்டுப்பாடு தற்போது கடுமையாக இருக்கின்ற காரணத்தினாலும் பல இடங்களில் மணல் குவாரிகள் இயங்காமல் இருக்கும் சூழ்நிலையிலும் மாற்று மணல் என்று பார்க்கும்போது, நாம் எற்கெனவே M Sand–ஐ ஊக்குவிக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றோம். ஆகவே, இந்த மணல் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, M Sand–ன் தரத்தை உறுதி செய்வதற்குரிய பொறுப்பு நம்முடைய அரசிற்கு இருக்கிறது. M Sand குவாரிகள் VSI method–ல் மட்டும், M Sand–ஐ உருவாக்குவதற்கு அரசு அனுமதிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குவாரிகளுக்கான அனுமதிகளை வழங்குவதில் காலதாமதமாகிறது. சுமார் 7, 8 மாதங்களுக்கு காலதாமதம் ஆகின்றது. ஆகவே, அதனை விரைவுபடுத்த வேண்டும். வெறும் dust–ஐ மட்டும் வைத்து பல இடங்களுக்கு M Sand என அனுப்பி விடுகிறார்கள். அதனைத் தடுக்கும் முயற்சிகளில் துறை ஈடுபட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தாடண்டர் நகர் குடியிருப்பில், கடந்த ஆண்டு நீங்கள் பல குடியிருப்புகளைத் திறந்து வைத்திருக்கிறீர்கள். அதாவது, கடந்த ஜூன் மாதம் 20 ஆம் தேதி, ‘A’ type–ல் 100 வீடுகள், ‘B’ type–ல் 100 வீடுகள் என, 200 வீடுகளை நீங்கள் திறந்து வைத்துள்ளீர்கள். கொள்கை விளக்கக் குறிப்பில்கூட 76 கோடி ரூபாயில் புதிய கட்டடங்களைக் கட்டுவதாகத் தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால், இன்று வரை யாருக்கும் allotment செய்யவில்லை. எனவே, அன்புகூர்ந்து அவர்களுக்குத் தேவையான வீடுகளை allotment செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி சார்ந்த திட்டங்களில் குறிப்பாக நிலையூர் கம்பிக்குடி கால்வாய்த் திட்டம். இந்த கம்பிக்குடி கால்வாய் என்று பெயர்தான் இருக்கிறதே தவிர, கம்பிக்குடி கண்மாய்க்கு நீர் வருவதில்லை. நிலையூரிலிருந்துதான் வருகிறது. இங்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நிலையூரிலிருந்து தண்ணீர் நேரடியாக சோளங்குடிக்குப் போய் விடுகிறது. கம்பிக்குடி கனவில்கூட தண்ணீரைப் பார்த்ததில்லை. எனவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்றி அந்தத் திட்டத்தின் பெயருக்காவது justice செய்யக்கூடிய அளவில் கம்பிக்குடி—ஆரியூர்—காரியாப்பட்டி பகுதியில், இணைப்பதற்கான நடவடிக்கைகளையும், வைகையாற்றுத் தண்ணீரை எங்கள் பகுதிக்குத் தருவதற்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சென்னம்பட்டி கால்வாய்த் திட்டமும் அதுபோன்றுதான் இருக்கின்றது. அந்தத் திட்டத்திற்கான கால்வாய் புனரமைப்புப் பணிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக நான் வலியுறுத்தி வருவது, அந்த வக்கணாங்குண்டு பகுதியில் ஒரு தடுப்பணையைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாய்ப்பினைத் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் துறையும் சரி, இந்த அரசும் சரி, P.W.D. மானியக் கோரிக்கையின்போது, மலர் மாலைகளால் மிகவும் அலங்காரமாக இருக்கும். ஆனால், இன்று இந்த மாடம் அலங்காரம் இல்லாமல் இருப்பதைப் பார்க்கும்போது, இந்த ஆட்சி கலையிழந்த மாடமாக இருக்கிறது; (மேசையைத் தட்டும் ஒலி) ஓடாத தேராக இருக்கிறது; பாடாத தேனீயாக இருக்கிறது; நரம்பில்லாத வீணையாக இருக்கிறது; பொலிவில்லாத இந்த அரசு மாறக்கூடிய நாள் மிக விரைவில் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தலைவர் தளபதி முதலமைச்சராகிறார். நாடு நலம் பெறும் என்று சொல்லி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, 'கொரோனா வைரஸ்' வந்த காரணத்தினால்தான் இந்த அலங்காரப் பணிகள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கிறதே தவிர, வேறொன்றுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் எல்லோரும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று

அடிக்கடி நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்கிறார். ஆகவே, இதில் ஏதாவது வந்துவிடுமோ என்கிற ஓர் அச்சத்தின் அடிப்படையில்தான் இந்த அலங்காரம் செய்யப்படவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், தனது உரையை நிறைவு செய்யும்போது, அவர்களுடைய ஆட்சி, மிக விரைவில் வரப்போவதாக இங்கே ஓர் இன்பக் கனவாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். உங்களுடைய கனவு வேண்டுமென்றால் இன்பக் கனவாக இருக்கலாம். ஆனால், அது பகல் கனவாகத்தான் முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவருடைய தொகுதியில், குடிமராமத்து திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட கண்மாயின் விவரங்களைத் தெரிவிக்கின்றேன். ஆனைக்குளம் கண்மாய், பட்டனேந்தல் கண்மாய், இளஞ்சிறை கண்மாய், நாலூர் கண்மாய், பட்டமங்கலம் கண்மாய், கட்டனூர் கண்மாய் 2016–2017–ல் எடுக்கப்பட்டது. 2017–2018–ல் ஆயத்தனேந்தல் கண்மாய், சோரிக்குளம் கண்மாய், அம்பநேரி கண்மாய் போன்ற ஏரிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், அரசு தலைமை கொறடா அவர்கள்.

பிற்பகல் 12–25

***திரு. சு. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மகா சகாப்தமாக விளங்கி, இன்று நிசப்தமாகி நின்று, நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தில், தாமரைக்குளம் என்ற குக்கிராமத்தில் எளிய, விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, இந்த மாமன்றத்தில் அமர்ந்திடவும், மக்கள் பணிபுரிந்திடவும், பெருமைகள் பெற்றிடவும் காரணமாக விளங்கிய, எங்கள் குடும்பத்தில் முழு முதற்கடவுளாக வணங்கப்படுகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை, என் நெஞ்சம் நிறைந்த நன்றியோடு இத்தருணத்தில் நினைவு கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் தொண்டனாக என்றும் கழகப் பணி, மக்கள் பணியாற்றுவேன் என்பதனை உறுதியோடு இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நான் ஒரு விவசாயி, விவசாயத்தைப் பாதிக்கின்ற எந்தத் திட்டத்தையும் தமிழ்நாட்டில் அனுமதிக்க மாட்டோம்" என்று அறிவித்தவர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சை டெல்டா பாசனப் பகுதியினை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, நெஞ்சை அள்ளும் தஞ்சை மாவட்ட வேளாண் பெருமக்களின் நெஞ்சங்களை அள்ளியவர் நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர், சேலத்து சிங்கம் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று காவேரி காப்பாளராக, தமிழகத்தின் நலன் காப்பவராக, விவசாயிகளின் தோழராக, ஏழை, எளிய மக்களின் பாதுகாவலராக, மக்களின் நம்பிக்கை நாயகராக, மாண்புமிகு அம்மா அவர்களின் முதன்மைத் தொண்டராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மக்களால் நான்; மக்களுக்காகவே நான்" என்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தாரகமந்திரத்தை நிறைவேற்றுபவராக, நல்லாட்சி நாயகராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கொடியில் பூத்த இரு மலர்களாக, விழிகள் இரண்டு, பார்வை ஒன்று என்பதுபோல கழகம் காத்திட வாளும் கேடயமுமாக, நல்லாட்சிக்குத் தோள் கொடுக்கும் தோழராக, கழகத்திற்கு இடர்வரும் காலத்தில் சீறிப்பாய்ந்திடும் தென்பாண்டிச் சிங்கமாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அலைகடல் நடுவில் சூறாவளிப் புயல் வீசுகின்றபோதும், திசை தவறாது கப்பலைச் செலுத்துகின்ற சிறந்த மாலுமியைப்போல் இந்த அவையில் எந்தச் சூழலிலும் நடுநிலை தவறாது, அவையை நடத்துகின்ற பாங்கினைப் பெற்றிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகின்றேன்.

எனது அரசியல் வழிகாட்டியும், எனது அரசியல் ஆசானாக விளங்குகின்ற முன்னாள் அமைச்சரும், தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நாடாளுமன்ற மேலவை உறுப்பினரும், கழகத்தின் துணை ஒருங்கிணைப்பாளருமான அண்ணன் திரு. வைத்திலிங்கம் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நல்லாட்சிக்குத் துணைபுரிகின்ற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையில் உங்கள் அருகிலேயே இருக்கிறேன். எனக்கு ஒன்றும் இல்லையா?

பிற்பகல் 12–30

திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி"

எனும் வள்ளுவர் பெருமானின் வாக்கிற்கிணங்க, உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவது போல், ஒரு நாட்டில்

குடிமக்கள் வாழ்வதற்கு நல்ல ஆட்சி தேவைப்படுகிறது. அந்த நல்லாட்சி மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களது தலைமையில் செம்மையாகச் செயல்பட்டு வருகிறது என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடந்து வரும், இந்நல்லரசு ஒட்டுமொத்த செயல் திறன்மிக்க முதன்மை மாநிலமாகத் திகழ்ந்து வருவதுடன், தொடர்ந்து பல எண்ணற்ற விருதுகளையும் பெற்று வருவது, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் வரும் பொற்கால ஆட்சிக்கு ஒரு நற்சான்றாகும். அதில் சிலவற்றை மட்டும் இப்பேரவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு விவசாயத் துறையில் "Krishi Karman" விருதினை 5 முறை பெற்று, சாதனை படைத்து மக்களால் மிகவும் பாராட்டப் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சிகளில் மின் ஆளுமை வலிமைப்படுத்துதல், குழந்தைகள் நேயம், வலுவான கிராம சபை செயல்பாட்டிற்கென 12 தேசிய விருதுகள் பெற்றுள்ளது அளப்பரிய மக்கள் பணிக்குக் கிடைத்த நற்சான்றாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். "பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்" திட்டத்திற்காக மத்திய அரசின் விருதுமூலம் பெண்களின் பாதுகாப்பு மற்றும் பெண்களுக்கான முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு செயல்படும் அரசாக விளங்குவதால் தாய்மார்களின் பாராட்டினைப் பெற்ற அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வரசு பொது விநியோகத் திட்டத்தை கணினிமயமாக்கியதற்கு விருதும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் நான்கு தேசிய விருதுகளும் பெற்றுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இணையவழி கற்றலில் முன்னோடி மாநிலத்திற்கான தேசிய விருது ஆகியன பெற்றது பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித் துறைக்கு விருது, உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய விருது ஆகியவை இந்நல்லரசு செவ்வனே செயல்படுவதால் வழங்கப்பட்டவை என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். அதுமட்டுமின்றி, மாணவர்களின் எதிர்காலம் நன்கு அமைந்திடும் வகையில் செயல்படுவதால், உயர் கல்வி சேர்க்கையில் தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்கி வருவது பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் தர வரிசையில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளது மிகவும் பெருமைக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். போக்குவரத்துக் கழகங்களின் சிறந்த செயல்பாட்டுத் திறனுக்காக ஒன்பது விருதுகளை அம்மாவின் அரசு பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2018 ஆம் ஆண்டிற்கான மத்திய அரசின் தேசிய நீர் ஆதார விருது மட்டுமின்றி, மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு “தூய்மையான புனித தலம்” விருது போன்ற எண்ணற்ற விருதுகளை இந்நல்லரசு பெற்று வருவது மிகவும் பாராட்டுக்குரியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகம் அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருவதுடன், எந்த ஓர் அரசும் செய்திடாத ஒப்பற்ற சாதனையாக 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் அமைந்திட, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான அடிக்கல் நாட்டு விழாக்களும் நடைபெற்று வருகின்றன. அதில் அரியலூர் மாவட்டத்திற்கும் கிடைக்கப்பெற்றது மகிழ்ச்சிக்குரியது என்பதால் எனது அரியலூர் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியை இவ்வரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓர் எளிய விவசாயக் குடும்பப் பின்னணியில் இருந்து வந்தாலும், மக்களுடன் சேர்ந்து அவர்களது கோரிக்கைகளைச் செயல்படுத்தி, அளப்பரிய திட்டங்களையும் சாதனைகளையும் செயல்படுத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை கடைக்கோடி தமிழ் மக்களும் வாழ்த்துகின்றனர் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். அதுமட்டுமல்லாமல், இன்னும் பல துறைகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் தொடர்ந்து பல சாதனைகளைப் படைத்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்நல்லரசு, பொதுப் பணித் துறையிலும் பல திட்டங்கள்மூலம் சாதனைகளைப் படைத்து வருகின்றது. அதில் சிலவற்றை மட்டும் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12–35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூபாய் 11 ஆயிரத்து 250 கோடியில் காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகளை மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க “நடந்தாய் வாழி காவேரி” திட்டம்; ரூபாய் 1,652 கோடியில் அத்திக்கடவு–அவிநாசி நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ரூபாய் 930.25 கோடியில் 4,865 குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பது மக்களால் சிறப்பாக பாராட்டப்படுகின்ற திட்டம் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கின்றேன். ரூபாய் 168.57 கோடியில் தூண்டில்வளைவுகள் மற்றும் கடலோர தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கின்றேன். ரூபாய் 2,962 கோடியில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம், அதுபோன்று, நெடுஞ்சாலைத் துறையில் ரூபாய் 22,096 கோடியில், 21,109 கிலோ மீட்டர் நீளமுள்ள நெடுஞ்சாலைகள் மேம்படுத்தப்பட்டு, 8,524 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன என்ற செய்தியினையும், 447 சிறு பாலங்களும், 247 பாலப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, “நீர் இன்று அமையாது உலகு” என்பது சான்றோர் வாக்கு. அதற்கேற்ப விவசாயிகளின் நலன் கருதி, பொதுப் பணித் துறையில் நீர் ஆதாரத்தினை மேம்படுத்திட, நீர் மேலாண்மைக்குத் தனியாக அதிகாரிகளை நியமித்து, செவ்வனே விவசாயிகளின் நலனைக் காப்பதில் இவ்வரசு முனைப்புடன் செயல்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தில் நீர் ஆதாரங்களோடு, பயனீட்டாளர்களின் ஒத்துழைப்போடு, குடிமராமத்துத் திட்டத்திற்கு உயிரூட்டி, ஏரிகள், கால்வாய்கள் மற்றும் வரத்து வாய்க்கால்களைப் பராமரித்தல், மதகுகள், மிகைநீர் கலிங்குகள் மறுகட்டுமானம் செய்தல், ஏரிக் கரைகளைப் பலப்படுத்துதல் ஆகிய பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருவதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக விவசாயிகளின் காவலனாகவும் திகழ்ந்து வருகிறார் என்று கூறுவதில் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பல உயரிய மக்கள் விரும்பும் திட்டங்கள்,

சாதனைகள்மூலம், விருதுகளைப் பெற்று, தொடர்ந்து மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் அவரது கனவினைச் செயல்படுத்திவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவருடன் இணைந்து பணியாற்றிவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோரும் தமிழக மக்களின் நெஞ்சங்களில் என்றென்றும் நிறைந்துள்ளார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதுடன், இவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்கள் என்பதை இப்பேரவையில் நான் பதிவு செய்வதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது அரியலூர் தொகுதிக் கோரிக்கைகளில் சிலவற்றை நிறைவேற்றித்தர வேண்டி இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திடவும், அப்பணிகளை மிக விரைவில் செயல்படுத்தித்தர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். அரியலூர் மாவட்டம், செந்துறை முதல் அரியலூர் வரை உள்ள நெடுஞ்சாலையினை அகலப்படுத்தி, அதன் தொடர்ச்சியாக அமைந்துள்ள வட்டச் சாலையினை ஜெயங்கொண்டம் பிரிவு சாலை வரையும் அகலப்படுத்தி, அதன் தொடர்ச்சியாக அமைந்துள்ள ஜெயங்கொண்டம் நெடுஞ்சாலையினை வி.கைகாட்டி வரையும் அகலப்படுத்தி விரைந்து அமைத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டம், அல்லி நகரத்தில் தொடங்கி அரியலூர்–திருச்சி பிரிவு சாலை வரை கிழக்குப்புறமாக தற்போது அமைந்துள்ள அரை வட்டச் சாலையினை, அல்லி நகரத்திலிருந்து மேற்குப்புறமாக அரியலூர்–திருச்சி பிரிவு வட்டச் சாலை வரை, அமைத்து முழு வட்டச் சாலையாக விரைந்து செயல்படுத்திடக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கின்ற வகையில் அரியலூர் திருமானூர் முதல் தஞ்சை மாவட்ட விளாங்குடி வரை கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள உயர் மட்டப்பாலம் 1975 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அது தற்போது 50 ஆண்டுகளைக் கடந்து விட்டதால், அதன் அருகே புதிய உயர் மட்டப்பாலம் அமைத்து பழைய பாலத்தினை பழுது நீக்கி, இருவழிப் பாதையாக விரைந்து அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–40

அரியலூர் மாவட்டம், மழவராயநல்லூர்–ஆதனூர் கிராம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மருதையாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலத்தினை விரைந்து அமைத்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன். அரியலூர் மாவட்டம், முத்துவாஞ்சேரி–வைப்பூர் சாலைத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்திடவும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், வைப்பூர் தூத்தூர், தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், வாழ்க்கை கிராமத்திற்கும் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை அமைத்திடவும், அம்மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான நிலத்தடி நீரைச் செறிவூட்டி, பெண்ணாற்றின் பாசனத்திற்கு, 5,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகின்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், குவாகம் கிராமம் தற்போது தொலைவில் உள்ள உடையார்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. அதனை, அருகிலுள்ள ஆண்டிமடம் சார்பதிவாளர் அலுவலகத்துடன் இணைத்திடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது அரியலூர் தொகுதியில் புறநகர் பேருந்து நிலையம் அமைத்திடவும், அரியலூர் தொகுதி, த.குடிக்காடு, முத்துவாஞ்சேரி மற்றும் திருமானூர் ஒன்றியம், விழுப்பணங்குறிச்சி ஆகிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்திடவும், திருமானூர் ஒன்றியம், வெங்கனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்திடவும் கேட்டுக்கொள்கிறேன். அரியலூரில் பெண்கள் மகளிர் கலைக் கல்லூரி அமைத்திடவும், வேளாண்மைக் கல்லூரி ஒன்றை அமைத்திடவும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகள், எத்தனை இன்னல்களை இந்த அரசுக்கு ஏற்படுத்தினாலும், அதனை எதிர்கொண்டு, தடைகளைத் தகர்த்து, சூழ்ச்சிகளை வென்று, தமிழகத்தின் நலன் ஒன்றையே மனதில் கொண்டு, அதற்கான திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி

வருகின்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்திய அளவில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் தொடர்ந்திட இரவு, பகல் பாராமல் உழைத்து வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதனை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்வழியில் மக்கள் விரும்பும் நல்லாட்சி நடந்து வருவதால், அடுத்து வரும் சட்டமன்றத் தேர்தலிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே நல்லரசை அமைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் நூறு ஆண்டுகளானாலும் கழகம் ஆட்சிக் கட்டிலில் இருக்கும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த அவையில் சூளுரைத்தார்கள். அதனை நிறைவேற்றுகின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் எடப்பாடியார் மற்றும் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் ஆகியோரின் ஆணையினை ஏற்று, கழகத் தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து, உறுதியுடன் உழைப்பார்கள்; கழகத்தினை மீண்டும் ஆட்சிக் கட்டிலில் அமர்த்துவார்கள் என்பதனையும், இம்மாமன்றத்தில் பெருமையுடன் பதிவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அருமை அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்து, எனது உரையினை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

*__திரு. வி. பன்னீர்செல்வம்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசியல் வரலாற்றில் தனி முத்திரை பதித்த திராவிடத்துப் பேரொளி, சுமார் 11 ஆண்டுகள் நம் தமிழகத்தில் நல்லாட்சி நடத்திய நாயகன், கழகத்தின் நிறுவனத் தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) காலதேவன் நமக்களித்த

கருணைத் தெய்வம், நமக்கெல்லாம் அரசியல் வாழ்வு அளித்திட்ட அன்பு தெய்வம், 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்' என்பதற்காக நாளும் உழைத்திட்ட நம் அருள் தெய்வம், 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற இலட்சியப் பாதையில் நாளும் நடைபோட்ட நம் இதய தெய்வம், இம்மண்ணுலகின் புண்ணியம், எதிரிகளுக்கு எந்நாளும் சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்து, மாநிலக் கட்சிகளை மட்டுமல்ல, டெல்லி பட்டணத்து தேசிய கட்சிகளையும் நடுநடுங்கச் செய்த, (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசாங்கத்தையே போயஸ் கார்டன் பக்கம் திருப்பிய, ஆளுமையும், ஆற்றலும், புகழும், செல்வாக்கும் பெற்ற எங்கள் குல தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் நினைவிடம் நோக்கி என் கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–45

பேரறிஞர் அண்ணா வழியில் கடமை வீரனாய், கண்ணியத்தின் காவலனாய், கட்டுப்பாட்டின் சின்னமாய், பொன்மனச் செம்மலின் 'உழைப்பவரே உயர்ந்தவர்' என்ற தத்துவக் கருத்தின் தனிப்பெரும் சக்தியாய், இந்த மண்ணும் மக்களும் மேன்மையுற அல்லும்பகலும் அயராது உழைத்திட்ட நம் இதய தெய்வம் அம்மாவின் இலட்சியப் பாதையான 'அமைதி, வளம், வளர்ச்சியை' நோக்கி வீர நடைபோடும் எங்கள் திராவிடத்து வீரத் திருமகன், சட்டசபையின் சூப்பர் ஸ்டார், சர்வதேச முதலீடுகளை ஈர்த்த சாதனை நாயகன், (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் கழகத்தின் விடிவெள்ளி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் சேலத்துச் சிங்கம் எங்கள் தங்கம் இந்த மண்ணின் அங்கம் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களை இந்த நேரத்தில் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தென்பாண்டி நாட்டின் திராவிடச் சுடரொளி, பண்புக்கும், பணிவுக்கும் இலக்கணமாய்த் திகழும், ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களுக்கும், எத்தனை இன்னல்கள், இடையூறுகள், சங்கடங்கள், சலசலப்புகள் வந்தாலும் அவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, நடுநிலையோடு இந்தப் பேரவையை நடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், கண்டிப்புடன் கறாராகவும், அதே நேரத்தில் கொஞ்சம் கனிவுடனும் பேரவையின் நடவடிக்கைகளைக் கொண்டுசெல்லும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அருமை அண்ணன் பொள்ளாச்சியார் அவர்களுக்கும், அரசு தலைமைக்

கொறடா பாசமிகு அண்ணன் திரு. ராஜேந்திரன் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கலசப்பாக்கம் தொகுதிக்காக மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்திய திட்டங்களைச் சுட்டிக்காட்டி நன்றி தெரிவிப்பதுடன், தொகுதியின் முக்கிய கோரிக்கைகள் ஒரு சிலவற்றை மட்டும் அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்து தீர்வு காண விரும்புகிறேன். மீதமுள்ள கோரிக்கைகளை நான் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் இந்த அவையில் படித்ததாகக் கருதி பதிவேற்றம் செய்துகொள்ளுமாறு தங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் பொதுப் பணித் துறைமூலம் கட்டப்பட்ட செண்பகத்தோப்பு அணை கிட்டத்தட்ட 18 ஆண்டுகளாக விவசாயிகளின் பயன்பாட்டுக்கு வராமல் அதனுடைய ஷட்டர்கள் பழுதடைந்திருந்தன. இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்கள் அந்த ஷட்டர்களை மறு சீரமைப்பு செய்வதற்கு 16.37 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, தற்போது அந்த ஷட்டர்கள் சீரமைப்புப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனால், கிட்டத்தட்ட 34 கிராமங்களில் உள்ள 48 பாசன ஏரிகளில் நீரைச் சேமித்து வைப்பதுடன், அதனால் 7,497 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதற்காக எனது சார்பிலும் எனது தொகுதி மக்களின் சார்பிலும், எனது தொகுதியிலிருக்கின்ற விவசாயப் பெருமக்களின் சார்பிலும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், செண்பகத்தோப்பு அணையின் கரைகளைப் பலப்படுத்தவும், நீர் வழிந்தோடியைச் சீரமைக்கவும், சாலை வசதிகளை அமைத்திடவும், அந்தப் பகுதியில் பொழுதுபோக்குப் பூங்காக்கள் அமைத்திடவும், செண்பகத்தோப்பு அணைக்கு கீழேயுள்ள 5 சிறிய அணைக்கட்டுகளைச் சீரமைக்கவும், மேலும் 17.61 கோடி ரூபாய் பொதுப் பணித் துறைமூலம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்துடன் அந்த நிதியுதவியை அளித்து உதவினால், என்றென்றைக்கும் அந்தப் பகுதி மக்களும், விவசாயிகளும் தங்களுக்கு நன்றிக்கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட தென்மகாதேவமங்கலம் கிராமத்தில் அமைந்துள்ள பர்வதமலை மல்லிகார்ஜுன சுவாமி கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களின் வசதிக்காக ரூபாய் 85 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகமும், தங்கும் விடுதியும், 59 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடமும், 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கழிவறையும், மேலும், படவேடு ரேணுகாம்பாள் திருக்கோயிலுக்கு 52 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அன்னதானக் கூடமும் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு சேவூர் எஸ். ராமச்சந்திரன் அவர்களுக்கும், இதற்கு உறுதுணையாக இருந்த செய்யாறு தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திருவண்ணாமலை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அண்ணன் தூசி கே. மோகன் அவர்களுக்கும் எனது சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பர்வதமலை அடிவாரத்தில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான 25 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில் ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அண்ணன் சேவூரார் அவர்களையும் இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஓடும் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே சாத்தனூர் அணை கட்டப்பட்டுள்ளது. சாத்தனூர் அணையின் உபரி நீர்ப்பிடிப்புப் பகுதிக்கு அருகிலுள்ள வேடங்குளம் கிராமத்திலிருந்து 22 கி.மீ.–க்கு கால்வாய் வெட்டப்பட்டு கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள ஆலத்தூர் அணைக்கட்டின் மேல்புறம் உள்ள செய்யாற்றில் இணைக்கப்பட்டால், புதுப்பாளையம் ஒன்றியத்திலுள்ள 30 ஏரிகள், 2,400 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயனடையும் மற்றும் கீரனூர் அணைக்கட்டு வழியாக நந்தன் கால்வாயில் இணைக்கப்பட்டால் 30 ஏரிகள், 6,240 ஏக்கர் புன்செய் நிலங்கள் பயன்பெறும். இதன்மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 66 ஏரிகளில் 8,640 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். மேற்கண்ட திட்டத்திற்கு மத்திய அரசின் நிதியுதவி பெறுவதில் காலதாமதம் ஏற்படுகின்ற

காரணத்தினால், மாநில அரசின் நிதியின்கீழ் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்கள் விவசாயப் பெருமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, உடனடியாக மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் மாவட்ட விவசாயிகளின் நந்தன் கால்வாய் சீரமைப்புத் திட்டம் என்பது ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்திலிருந்தே வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து இந்தக் கால்வாயைச் சீரமைக்க அப்போதைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் திட்டம் வரையறுக்கப்பட்டது. இதற்காக 1970 ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறையின் சார்பில் நந்தன் கால்வாயைச் சீரமைக்கும் பணி தொடங்கியது. 1970–1976 ஆம் ஆண்டில் ரூ.128.36 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் பல்வேறு காரணங்களால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. இதையடுத்து கடந்த 2013 ஆம் ஆண்டு ரூ.988.80 இலட்சம் நிதி ஒதுக்கி பொதுப் பணித் துறை சார்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அந்தத் திட்டம் மீண்டும் நிறுத்தப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் உருவாகும் துரிஞ்சலாற்றினிடையே உள்ள சம்பந்தனூர் அணைக்கட்டிலிருந்து நந்தன் கால்வாய் தொடங்குகிறது. மழைக்காலத்தில் மட்டும் நீர் ஓடும் இந்த ஆற்றில் கீரனூர் அணைக்கட்டு வழியாக வரும் தண்ணீர் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள காட்டுமலையனூர், கொளத்தூர் வழியாகவும், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள நல்லான்பிள்ளைபெற்றான், பாக்கம், தேவதானம்பேட்டை, தாண்டவசமுத்திரம், துத்திப்பட்டு வழியாக பனமலைபேட்டை ஏரியை வந்தடைகிறது. அதன் தொடர்ச்சியாக நங்காத்தூர், முட்டத்தூர் நகர், பிரம்மதேசம், எசாலம், பெருங்கலம்பூண்டி, அன்னியூர், வெங்கந்தூர், ஆரியூர் ஆகிய கிராம ஏரிகளும் நந்தன் கால்வாய்மூலம் நீராதாரம் பெறுகின்றன. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்குத் தண்ணீரை வழங்கி அடுத்துள்ள வறட்சிப் பகுதியான விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அருகே பனமலை ஏரி வரை தண்ணீர் வழங்கும் வகையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கின்றது. நந்தன் கால்வாய்

சீரமைப்புப் பணியை மீண்டும் தொடங்கி விரைவுபடுத்தி மழைநீரைக் கொண்டுவந்து ஏரிகளில் தேக்க வேண்டுமென்பதே இரு மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையாக இன்றைக்கு இருந்து வருகிறது. ஆகவே, இன்றைக்கு காவேரி டெல்டா பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாகவும், பல்வேறு நதி நீர் இணைப்புத் திட்டங்களையும் அறிவித்து நீண்ட கால விவசாயிகளின் கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றி (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் காவலராகவும், காவேரியின் காப்பாளராகவும் இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வட மாவட்ட விவசாயிகளின் நூற்றாண்டுக் கனவான நந்தன் கால்வாய் சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிருவாக வசதிக்காக புதியதாக 5 மாவட்டங்களைப் பிரித்துத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதுடன், திருவண்ணாமலை மாவட்டத்தைப் பிரித்து செய்யாறு நகரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் ஒன்றை உருவாக்கித் தருமாறு பணிவுடன் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். 1959 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட செய்யாறு கோட்டம் மிகப் பழமையானது. இங்கு வருவாய்த் துறை, நெடுஞ்சாலைத் துறை, மின்சாரத் துறை, ஊரக வளர்ச்சித் துறை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலகங்களுக்கான கோட்ட அலுவலகங்களும், மாவட்டக் கல்வி அலுவலகமும் செயல்பட்டு வருகின்றன. சுமார் 25 இலட்சம் மக்கள்தொகையுடன், போளூர் வட்டம், ஆரணி வட்டம், செய்யாறு வட்டம், வெம்பாக்கம் வட்டம், வந்தவாசி வட்டம் மற்றும் சேத்துப்பட்டு ஆகிய 6 வட்டங்களை உள்ளடக்கியதாகவுள்ள இந்தப் புதிய மாவட்டத்தை இந்த நிதியாண்டிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தருமாறு இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை, புகழை உலகெல்லாம் பறைசாற்றும் வகையில் இதுவரையிலும் இந்தியாவில் எந்த அரசியல் தலைவருக்கும் இல்லாத வகையில் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சென்ட்ரல் இரயில் நிலையம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று பெயர் சூட்டிய மாண்புமிகு பாரதப் பிரதமர்

நரேந்திர மோடி அவர்களுக்கு அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத்தின் சார்பிலும் இந்த அவையின் சார்பிலும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கான முன்முயற்சி எடுத்து தமிழ்நாடு அமைச்சரவையில் தீர்மானம் நிறைவேற்றி, டெல்லிக்கு அனுப்பி கொஞ்சமும் தாமதமின்றி புரட்சித் தலைவரின் பெயரைச் சூட்டுவதற்கு அனைத்துவிதமான நடவடிக்கைகளையும் எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் OPS அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சரித்திர சாதனையை நிகழ்த்திய அம்மா அரசின் செயல் நிச்சயம் வரலாற்றில் இடம் பிடிக்கும். அதேபோல, சென்னை கடற்கரைச் சாலையில் பிரம்மாண்ட எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவு, மாவட்டந்தோறும் நூற்றாண்டு விழாக்கள்; சென்னை கோயம்பேடு மற்றும் மதுரை பேருந்து நிலையங்களுக்கு பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். பெயரைச் சூட்டியது என பொன்மனச் செம்மலுக்கு புகழும் பெருமையும் சேர்க்கும் விதத்தில் பல நிகழ்வுகளை நடத்திக் காட்டிய அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான (மேசையைத் தட்டும் ஒலி) நம் கழக அரசுக்கு இந்த நேரத்தில் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

இந்தச் சாதனைகளின் தொடர்ச்சியாக, பெரியார் விருது, அண்ணா விருது, திரு.வி.க. விருது, அம்பேத்கர் விருது என்று அரசின் விருது பட்டியல்களில் இந்த ஆண்டு முதல் எம்.ஜி.ஆர். விருது என்கின்ற புதிய விருதையும் இணைத்து (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். காலத்திலிருந்து தொடர்ந்து அரசியல் களத்தில் பணியாற்றி வரும் மூத்த தலைவர்களுக்கும் ஆண்டுதோறும் இந்த விருதை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களின் காலந்தொட்டு எப்போதெல்லாம் கழக ஆட்சி நடைபெறுகிறதோ, அப்போதெல்லாம் மக்களுக்கான நல்ல பல திட்டங்கள் உருவாகும்; அது செயல்முறைக்கும் வரும். அதனால்தான், அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறுகிறார்கள். கழக ஆட்சி எப்போதெல்லாம் நடைபெறுகிறதோ அப்போதெல்லாம் நம் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

பிற மாநிலங்களும் பின்பற்றத்தக்க அளவில் நிருவாகத் திறனிலும் நாம் எப்போதுமே சிறந்து விளங்குவோம். அப்படி சிறந்து விளங்கிய காரணத்தினால்தான் பல்வேறு துறைகளுக்கான சுமார் 60 சிறப்பு விருதுகளை கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான நம் அம்மாவின் அரசு பெற்றிருக்கிறது. இதற்கெல்லாம் அங்கீகாரம் அளிக்கும் வகையில்தான் இந்தியாவிலுள்ள 18 பெரிய மாநிலங்களில் சிறந்த நிருவாகத் திறன்கொண்ட முதல் மாநிலம் என்கிற பெருமைமிக்க மத்திய அரசின் சிறப்பு விருது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான நம் அம்மாவின் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. இதைக்கூட பொறுக்கமாட்டாமல், நம் தமிழகத்திற்குத்தானே இது சிறப்பு என்று எண்ணாமல், எதிர்க்கட்சியினர் சிலர் விமர்சிக்கிறார்கள்; கேலியும், கிண்டலும் செய்கிறார்கள். இத்தகைய மனம் படைத்தவர்களை மக்கள் அரசியலிலிருந்து முழுமையாக அப்புறப்படுத்தும் காலம் வந்து கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திற்குச் செல்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கட்டடங்கள் மற்றும் பாசனம் அடங்கிய பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ஆகிய மூன்று முக்கிய துறைகளின்மீது எனக்குப் பேச கிடைத்த வாய்ப்பை பெருமையாகக் கருதுகிறேன். பொதுப் பணித் துறை என்பதுதான் எல்லா துறைகளுக்கும் தாய்த் துறையாகும். ஆறு, குளம், ஏரி உள்ளிட்ட நீர்நிலைகளைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் இந்தத் துறைதான். அரசின் அனைத்துத் துறைகளுக்குமான அலுவலகங்களின் கட்டடங்களைக் கட்டி, பாதுகாத்து, பராமரிப்பதும் இந்தப் பொதுப் பணித் துறைதான். அதனால்தான், தாய்த் துறை என்று குறிப்பிட்டேன். எனவேதான், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன் நம்பிக்கைக்குரிய செல்லப் பிள்ளையாம் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வசம் இந்தத் துறையை ஒப்படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரும் மிகச் சிறப்பாக, செவ்வனே செயல்பட்டு இந்தத் துறையை நிருவகித்து வருகிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரை, ஒரு மாநிலத்தின் சாலை கட்டமைப்புதான் அனைத்திற்குமே அடிப்படை ஆதாரம்.

மிகச் சிறந்த சாலை வசதிகள் இருந்தால்தான் தொழில்கள் பெருகும்; வர்த்தகம் செழிக்கும்; பொருளாதார நிலை உயரும். அதனால்தான், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 'தொலைநோக்குத் திட்டம் 2023' என்ற இலட்சியத் திட்டத்தைக் கொண்டுவந்து மாநிலத்தின் உட்கட்டமைப்புகளை வலுப்படுத்தும் பணிகளைத் தொடங்கினார்கள். அதன் நீட்சியாக, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசியல் வாரிசு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் சாலை கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை இன்றைக்கு எடுத்து வருகிறார்கள். இதில் ஓர் அம்சமாகத்தான் ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் கடந்த ஆண்டுகளைவிட 5,500 கோடி ரூபாய் அளவிற்கு நிதியை உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். இந்த நிதியாண்டில் சுமார் 4,522 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,256 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் மேம்பாடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, 3,597 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளில் ஓடுதளப் பாதையின் தரத்தை மேம்படுத்தும் பணிகளும், 56 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் கட்டும் பணிகளும், 1,718 இதரப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இது, பலராலும் பாராட்டத்தக்கதாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புற ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை இதர மாவட்ட சாலைகளின் தரத்திற்கு உயர்த்தும் பணிகள் தொடங்கி, இதுவரை 4,862 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் சுமார் 2,773 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தும் பணிகள் நிறைவுற்றுள்ளன. வரும் நிதியாண்டிலும், 1,500 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் 1,050 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்று அறிவிப்பு வெளியிட்டுள்ள மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மாவின் அரசு இந்தப் பட்ஜெட்டில் அதற்கான மொத்த நிதியையும் ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பிற்பகல் 1–00

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இரண்டாவது கட்ட திட்டப் பணிகளுக்கு சுமார் 616 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும், சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடத் திட்டத்தின்கீழ் 655 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளை 6,448 கோடி

ரூபாய் மதிப்பீட்டில் வலுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுவதும் இந்தப் பகுதி மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெறும். ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்திற்காக பட்ஜெட்டில் 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். பெருநகர சென்னை பகுதியில் 12,301 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்று வட்டச் சாலை திட்டம் நிறைவேற்றப்பட இருப்பது மாநகர மக்கள் மட்டுமல்லாது, இங்கு தினந்தோறும் வந்து செல்லும் இலட்சக்கணக்கான மக்களிடமும் நிச்சயமாக வரவேற்பைப் பெறும். கோவை விமான நிலையத்திலிருந்து உப்பிலிப்பாளையம் வரையுள்ள அவிநாசி சாலை நெடுகிலும் சுமார் 10 கிலோ மீட்டர் நீளத்திற்கு 1,620 கோடி ரூபாய் செலவில் உயர்மட்ட சாலைகள் அமைப்பதற்கு அம்மாவின் அரசு ஒப்புதல் வழங்கியிருப்பது பாராட்டுக்குரியதாகும். நெடுஞ்சாலைத் துறையின் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வதற்காக இந்த பட்ஜெட்டில் 15,850 கோடியே 54 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

அவை முன்னவரும், நிதியமைச்சர் பொறுப்பு வகிப்பவருமான மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள் சமர்ப்பித்த இந்த பட்ஜெட்டில் பொதுப் பணித் துறைமூலம் புதிய கட்டடங்களின் கட்டுமானப் பணிகளுக்காக 1,453 கோடியே 91 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது பாராட்டத்தக்கதாகும். அரசு ஊழியர்களின் வாடகை வீட்டுத் தேவையை நிறைவு செய்வதற்கு பொதுப் பணித் துறையின்மூலம் சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில் 76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலும் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பு அமைக்கப்படுவது அரசு ஊழியர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியாக அமையும். இப்படி பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை சார்பாக நடைபெற்றுவரும் பணிகளைப் பட்டியலிட்டால் நேரமும் காலமும் போதாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒரு விழாவில் பேசும்போது, ‘சவால்களை எதிர்கொள்வதிலிருந்து விலகி ஓடும் மனிதர்களைவிட, எதிர்த்து நின்று போராடும் மனிதர்கள்தான் வெற்றிபெறுகிறார்கள். சவால்களை துணிச்சலுடன் சந்திக்கும் நபரைத்தான் இந்தச் சமூகம் வரவேற்கும்’ என்று குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல, ‘சந்திக்கவேண்டிய சவால்களை அடையாளம்

கண்டு, அவற்றை துணிவுடன் எதிர்கொள்ள முடிவெடுத்துவிட்டால், அதற்கான வழிமுறைகள் தானாகத் தோன்றும். துன்பங்களைக் கண்டு துவண்டுவிடும் கோழைத்தனத்தைவிட எதிர்த்துப் போராடும் துணிவே நம்மை வாழவைக்கிறது' என்றும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அம்மாவின் அந்த சத்திய வாக்கிற்கிணங்கவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் எதிர்ப்படும் சவால்கள் அனைத்தையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு போராடி வெற்றிபெறுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

CAA, NPR, NRC என்கின்ற வார்த்தைகளை வைத்துக்கொண்டு பல பேர் மக்களை பயமுறுத்தி, அரசியல் செய்ய நினைக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் இந்த அவையிலும், வெளியிலும் குடியுரிமை திருத்தச் சட்டத்தின்மூலம் இங்கு வாழும் எந்த ஒரு மனிதருக்கும் பாதிப்பு ஏற்படாது, அப்படி ஒரு பாதிப்பு ஏற்பட அம்மாவின் அரசு அனுமதிக்காது என்றும், எப்போதும்போல சிறுபான்மையின மக்கள் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் நாங்கள் பாதுகாப்பு அரணாக இருப்போம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் உறுதியளித்த நிலையிலும், தெளிவாக விளக்கமளித்தபோதும் எதிர்க் கட்சியினர் இன்றைக்கு எதையெதையோ பேசி மக்களை அச்சத்திற்கும், பீதிக்கும் ஆளாக்கி வருகின்றனர். எத்தனை உறுதிமொழிகளை அளித்தாலும் 'தீர்மானம் போடுங்கள், தீர்மானம் போடுங்கள்' என்று குரல் எழுப்பி உண்மை நிலையை அவர்கள் ஏனோ உணர மறுக்கிறார்கள். எந்தப் பிரச்சினையை எடுத்து, எப்படிப்பட்ட அசுரத்தனமான முயற்சிகளை எதிர்த்தரப்பினர் மேற்கொண்டாலும் அவை ஒருபோதும் தமிழக மக்களிடம் எடுபடாது. இந்த கொரோனாவின் தாயகம் இத்தாலி என்று சொல்கிறார்கள். அதனால்தான் ஒரு காலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இத்தாலியின் சங்காத்தமே வேண்டாம் என்று குரல் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் கொரோனா அல்ல, எந்த வைரஸ் தாக்க வந்தாலும் அதைத் தடுத்து நிறுத்துகிற ஆற்றல்மிக்க அரசாக, (மேசையைத் தட்டும் ஒலி) அதை இரும்புக் கரம் கொண்டு தடுக்கின்ற முதலமைச்சரான அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு இருக்கிறது என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க் கட்சியினரின் ஆட்சி மாற்றக் கனவு ஒருபோதும் நனவாகப் போவதில்லை என்பதை மீண்டும்

ஒருமுறை அவர்களுக்கு வலியுறுத்தி, என் உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கலசப்பாக்கம் தொகுதி, ஜமுனாமரத்தூர் மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவும், கலசப்பாக்கம் தொகுதி, மேலாரணி அரசினர் இருபாலர் மேல்நிலைப் பள்ளியைப் பிரித்து, பெண்களுக்கென தனியாக மேல்நிலைப் பள்ளி துவக்கவும் வேண்டும். கலசப்பாக்கம் கிராம ஊராட்சியை பேரூராட்சியாகவும், புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியை முதல் நிலைப் பேரூராட்சியாகவும் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

கலசப்பாக்கத்தில் பேருந்து நிலையம் அமைக்கவும், படவேடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலுக்கு வெள்ளித் தேர் செய்து தரவும் வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கிடவும், மிருகண்டா நதி நீர்த்தேக்கத்தை தூர்வாரவும் வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட எலத்தூர் மோட்டூர் ஊராட்சியில் அமைந்துள்ள அருள்மிகு சிவசுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்கு வெள்ளித் தேர் செய்து தர வேண்டும். மேல்சோழங்குப்பம் ஊராட்சி, மிருகண்டா நதி அணையின் அருகில் சுற்றுலாத் துறையின்மூலம் சுற்றுலா வந்து செல்லும் பயணிகளின் வசதிக்காக பூங்காக்கள் அமைத்துத் தர வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கோயில்மாதிமங்கலம் ஊராட்சியிலிருந்து துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், மேப்பத்துறை ஊராட்சியிலுள்ள கிழக்குமேடு கிராமத்திற்கு செய்யாற்றின் குறுக்கே செல்லும் சாலையில் தரைப்பாலம் அமைத்துத் தரவும், பூண்டி ஊராட்சியிலிருந்து பழங்கோயில் ஊராட்சிக்கு செய்யாற்றின் குறுக்கே செல்லும் சாலையில் தரைப்பாலம் அமைத்துத் தரவும் வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட மிருகண்டா நதியின் குறுக்கே மேல்வில்வராயநல்லூர் ஊராட்சியிலிருந்து எர்ணாமங்கலம் ஊராட்சிக்கு குறுக்கே செல்லும் சாலையில் தரைப்பாலம் அமைத்துத் தரவும், கலசப்பாக்கத்தில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் பயணியர் தங்கும் விடுதி அமைத்துத் தரவும் வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கம் பகுதியில் சிப்காட் அல்லது சிட்கோ தொழிற்பேட்டை துவக்கவும், புதுப்பாளையம் இரண்டாம் நிலை பேரூராட்சியில் பத்திரப் பதிவு அலுவலகம் அமைத்துத் தரவும் வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஜமுனாமரத்தூரில் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து பணிமனை அமைக்கவும், கலசப்பாக்கம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைத்துத் தரவும் வேண்டும்.

கலசப்பாக்கத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தரவும், கோயில்மாதிமங்கலம் முதல் கீழ்தாமரைப்பாக்கம் செல்லும் பாதைக்கு மேம்பாலம் அமைத்துத் தரவும் வேண்டும். சோழவரம் முதல் கீழ்கொத்தரைக்குச் செல்லும் பாதைக்கு மேம்பாலம் அமைத்துத் தரவும், மேல்சோழங்குப்பம், மிருகண்டா நதி செல்லும் சாலையில் மேம்பாலம் அமைத்துத் தரவும் வேண்டும்.

மட்டவெட்டு ஏரிக்கு செல்லும் நீர்வரத்துக் கால்வாய் மேம்பாலம் அமைத்துத் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். கலசப்பாக்கத்தில் அமைந்துள்ள திருமாமுடீஸ்வரர் திருக்கோயிலுக்கு மரத்தேர் செய்து தர வேண்டும். கலசப்பாக்கத்தில் அரசு சர்க்கரை ஆலை அமைத்திட வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் விவசாய விளைபொருட்களைப் பாதுகாத்திட குளிர்பதனக் கிடங்கு அமைத்திட வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரமுயர்த்த வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி ஊராட்சியை தேர்வுநிலை பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, காம்பாட்டு ஊராட்சியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரமுயர்த்த வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, பர்வதமலையை சுற்றுலாத்தலமாக அமைக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, ஆதமங்கலம்புதூரில் புறக்காவல் நிலையம் அமைக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி ஊராட்சியில் உற்பத்தி செய்யப்படும் திருமண கூரைப் புடவையை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் மற்றும் நெசவாளர்களுக்கு மானியத்தில் இடுபொருட்கள் வழங்க வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி ஊராட்சியில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியைத் திறக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, கடலாடி, கீழ்பாலூர் ஆகிய கூட்டுச் சாலையில் நிழற்குடை அமைக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, கேட்டரம்பாளையம் ஊராட்சியிலுள்ள சாலமேடு கிராமத்தை தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, எலத்தூர், மோட்டூர், நட்சத்திரக்கோயில் பகுதியிலுள்ள சிவசுப்பிரமணியர் கோயில் அருகே பக்தர்கள் தங்கும் விடுதி, வணிக வளாகம் அமைக்க வேண்டும்.

கலசப்பாக்கம் ஒன்றியம், காலூர் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, போளூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள படவேடு ஊராட்சியை பேரூராட்சியாகத் தரமுயர்த்த வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, போளூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கல்பாட்டு ஊராட்சியைச் சேர்ந்த இரும்புலி கிராமத்தை தனி ஊராட்சியாக அறிவிக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, போளூர் ஊராட்சி ஒன்றியம், படவேடு ஊராட்சியில் மஞ்சள் பதப்படுத்தும் கிடங்கு அமைக்க வேண்டும்.

அல்லியந்தல் முதல் ஜப்திகாரியந்தல் வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். அன்னந்தல் முதல் அல்லியந்தல் வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் பேரூராட்சியிலுள்ள BDO அலுவலகத்தை பொது மக்கள் வசதிக்காக புதுப்பாளையம் ஒன்றியத்தின் மையப் பகுதியான காஞ்சி ஊராட்சிக்கு இடமாற்றம் செய்ய வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். கலசப்பாக்கம் தொகுதி, புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பழுதடைந்துள்ளதால், புதிய அலுவலகம் அமைக்க வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதியில் காஞ்சி ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் காஞ்சி ஊராட்சியில் செய்யாற்றின் அருகே புதிய தடுப்பணை கட்ட வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் புதுப்பாளையம் ஒன்றியம், மேல்நாச்சிப்பட்டு அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

நரசிங்கநல்லூர் ஊராட்சியில் நரசிங்கநல்லூர் காலனி வரை செய்யாற்றின் குறுக்கே மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும். காரப்பட்டு ஊராட்சியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டும். காரப்பட்டு ஊராட்சியில் மேல்நிலைப் பள்ளியில் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டும்.

படிஅக்ரஹாரம் ஊராட்சியில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். படிஅக்ரஹாரம் முதல் தேவனேந்தல் ஊராட்சி வழியாக புதுப்பாளையம் வரை தார்ச் சாலை அமைத்துத் தர வேண்டும். படிஅக்ரஹாரம் ஊராட்சியில் துணை மின் நிலையம் அமைத்துத் தர வேண்டும். படிஅக்ரஹாரம் ஊராட்சியில் ஆற்றங்கரையில் செக் டேம் (தடுப்பணை) அமைத்துத் தர வேண்டும்.

படிஅக்ரஹாரம் ஊராட்சியில் கிணறு மற்றும் OHT 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்க் மற்றும் வேடியப்பன் நகரில் 20,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்க் அமைத்துத் தர வேண்டும். படிஅக்ரஹாரம் ஊராட்சியில் வேடியப்பன் நகரில் 1.5 கி.மீ. தார்ச் சாலை புதியதாக அமைத்துத் தர வேண்டும்.

படிஅக்ரகாரம் ஊராட்சி மற்றும் மதுரா வேடியப்பன் நகருக்கு 10 இலட்சம் மதிப்பீட்டில் 5 நெற்களம் அமைத்து தர வேண்டும். படிஅக்ரகாரம் ஊராட்சியில் 5 கல்வெர்ட் அமைத்து தர வேண்டும். படிஅக்ரகாரம் ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடம் அமைத்துத் தர வேண்டும்.

படிஅக்ரகாரம் ஊராட்சியில் நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் ஜமுனாமரத்தூரில் சிப்காட் தொழிற்பேட்டை அமைத்து தர வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் ஜவ்வாதுமலையில் உள்ள 11 ஊராட்சிகளுக்கும் பல்வேறு வழித்தடங்களிலிருந்து மினி பேருந்து இயக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் ஜவ்வாதுமலையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டும்.

கலசப்பாக்கம் தொகுதியில் ஜமுனாமரத்தூரில் உள்ள 22 பழங்குடியினர் நலத் துறை பள்ளிகளுக்கு தனியாக வார்டன் நியமிக்க வேண்டும். கலசப்பாக்கம் தொகுதியில் ஜமுனாமரத்தூரில் உள்ள காவல் நிலையத்தை காவல் ஆய்வாளர் நிலைக்கு தரம் உயர்த்த வேண்டும் மற்றும் நம்மியம்பட்டு, புலியூர் ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

பிற்பகல் 1–05

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, பாசனம், கட்டடங்கள், நெடுஞ்சாலை, சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மக்களின் கனவுத் திட்டமான கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம் நிறைவேற்ற அரசு பகீரத பிரயத்தனம் செய்ய வேண்டும். தமிழகத்திற்கு ஆண்டிற்கு 200 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்திட அரசு இந்தத் திட்டத்தைத் தீட்ட வேண்டும். தமிழக டெல்டா மாவட்டங்கள், தென் தமிழக மாவட்டங்கள் பயன்பெறும் வண்ணம் இது அமைய வேண்டும். தனி நபருக்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காதது மட்டும் பிரச்சினை இல்லை; ஆறுகள், ஏரிகள், குளங்களில் அந்தந்தப் பகுதியின் கழிவு நீர் கலப்பது எந்தவிதத் தடையும் இல்லாமல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நீர்நிலைகளில் மருத்துவக் கழிவுகள், கோழி இறைச்சிக் கழிவுகள் உள்ளிட்ட பல்வேறு கழிவுகளை கேரளாவிலிருந்து கொண்டு வந்து கொட்டிவிடுகின்றனர். இதனால், சுகாதாரக் கேடு மட்டும் ஏற்படவில்லை, பெரிய ஆபத்தும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதை எதிர்க்கும்விதமாக, தடுக்கும்விதமாக குரல் கொடுக்கும் மக்கள் ஒடுக்கப்படுகிறார்கள், நசுக்கப்படுகிறார்கள். எனவே, இதில் கவனம் செலுத்தி, இந்தக் கழிவுகளை கேரளாவிலிருந்து கொண்டு வந்து கொட்டாமல் தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் குழித்துறை–தாமிரபரணி, சுசீந்திரம்–பழையாறு என்ற இரண்டு முக்கியமான ஆறுகள் இருக்கின்றன. பழையாற்றின் குறுக்கே உள்ள சாட்டுப்புதூர், பள்ளிகொண்டான், குட்டி அணை, வீரப்புலி செட்டித்தோப்பு, வீரநாராயணமங்கலம், குமரி, சபரி, பிள்ளைபெத்த அணை, சோழன்திட்டை, மிஷின் அணை உள்ளிட்ட 13 அணைகள்மூலம் 90 குளங்கள் நிரம்பி, 15,521 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. சுமார் 10 இலட்சம் மக்களுக்கு குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. இந்தப் பழையாற்றில், வீராணமங்கலம் முதல்

நங்காண்டி வரை jeep track இல்லை. எனவே, சுருளிகோடு முதல் மணக்குடி வரை ஆற்றின் இருபுறமும் jeep track அமைக்க வேண்டும். ஆற்றைத் தூர்வாரி, அமலைச் செடிகளை அப்புறப்படுத்தி, இருபுறமும் தடுப்புச் சுவர் கட்ட வேண்டும். தடுப்பணைகளைப் பராமரிக்க வேண்டும், படித்துறைகளைக் கட்ட வேண்டும், ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். இப்பணிகளுக்காக 3½ கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. எனவே, அரசு நிதி ஒதுக்கீடு செய்து, அரசாணையும், திட்ட மதிப்பீடு அனுமதியும் வழங்கிட உடனடியாக ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்தமையால், அரசு, தண்ணீர் மேலாண்மை என்ற கோணத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சிந்திக்க வேண்டும். டெல்டா உணவுக் களஞ்சியம் பகுதியில் 80 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். 20 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைச் சக்கரம் சுழல காரணமாக உள்ளது. மேட்டூர் அணை நீர்மட்டத்தை நம்பி வேளாண் மண்டலம் உருவாக்கப்பட்டுள்ளது. இனி வேறு எந்தத் தொழிலும் அங்கே செய்ய முடியாது. எனவே, நீர் மேலாண்மை என்பது மிகவும் முக்கியம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப் பாசன முறைகளில் நவீன யுக்திகளைக் கையாள வேண்டும். 1 டி.எம்.சி. தண்ணீரில் 5,000 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்கிறார்கள். அதனை 8,000 ஏக்கர் முதல் 10,000 ஏக்கர் வரை விவசாயம் செய்யக்கூடிய அளவிற்கு விரிவாக்கம் செய்ய வேண்டும்.

காவேரி கல்லணைக்குக் கீழே உள்ள பிரதான வாய்க்கால்கள், கிளைக் கால்வாய்கள் ஆகியவற்றின் மொத்த நீளம் 47,000 கி.மீ. தூரமாகும். அத்தனை வாய்க்கால்களையும் மீட்டெடுத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரி, மடை, மதகுகளைச் சீரமைக்க வேண்டும். கல்லணைக்குக் கீழ் உள்ள 950 ஏரிகளைக் கண்டறிந்து மீட்டெடுக்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டு கடலில் கலந்த காவேரி ஆற்றின் நீரின் அளவு 145 டி.எம்.சி. ஆகும். நீர் கடலில் வீணாகக் கலப்பதைத் தடுப்பதற்கான திட்டங்களை அரசு வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பவானி, அமராவதி, நொய்யல், காளிங்கராயன் கால்வாய்களில் தொழிற்சாலைக் கழிவுகள், சாயப் பட்டறைக் கழிவுகள் கலந்து ஆறு மாசுபடுகிறது. மாசுகள் ஆற்றில் கலக்காமல் கட்டுப்படுத்தப்பட்டால், காவேரிப் படுகைக்குத் தண்ணீர் வந்து சேரும். அப்போதுதான், வேளாண் மண்டலம் என்ற நோக்கம் முழுமையாக நிறைவேறும்.

பிச்சாவரம் தொடங்கி வேதாரண்யம் ஏரி வரை கடல் உள்வாங்கல் மற்றும் கடல் அரிப்பால் வேளாண் விளைநிலங்கள் பாதிக்கப்படுகின்றன. நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் உள்ள வாய்க்கால்கள் வழியாக கடல் நீர் 10 முதல் 12 கி.மீ. தூரம் உள் புகுந்துவிடுகிறது. காவேரிப் படுகைப் பகுதிகளில் உள்ள 12 tail end regulators–ஐ முறையாகப் பராமரிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–10

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் 10 முதல் 15 கிலோ மீட்டர் வரை கடல் நீர் உள்ளே புகுந்து சேதப்படுத்துகிறது என்கிற ஒரு தவறான தகவலைத் தந்துகொண்டிருக்கிறார். எங்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற, மறைந்த முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடு 1,650 கோடி ரூபாய் நிதி தந்து, அதிலே தமிழக அரசினுடைய நிதியான 450 கோடி ரூபாய் நிதியைக் கொண்டு இப்போது கடல் நீர் ஆற்றுக்கு உள்ளே வராமலும், நன்னீர் கடலுக்குப் போய்ச் சேராமலும் கதவணைகள் அந்த ஆறுகளில் அமைக்கப்பட்டு, ஆறுகளில் இப்பொழுதும், இன்னும் பல மாதங்களுக்கு நன்னீர் சேமித்து வைக்கப்பட்டிருக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இது கடல் நீர் உள்ளே வருவதைத் தடுத்திருக்கிற காரணத்தால், கிட்டத்தட்ட கடலிலிருந்து 25 கிலோ மீட்டர் வரை உவர் நீராக, உப்பு நீராக இருந்த நிலத்தடி நீர் மாறி, இப்போது நன்னீராகிற சூழல் ஏற்பட்டு, பொது மக்களுடைய பெரிய வரவேற்புக்கு உள்ளாகியிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடல் நீர் backward ஆக உள்ளே வருகின்றபோது கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் கூட அங்கே அந்தக் கால்வாய் வழியாக வருகின்றது. அப்படி வருகின்றபோது, அந்த நல்ல நீர் உப்பு நீராக மாறிவிடுகின்றது. அதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். படிப்படியாக இந்தக் கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக நீரொழுங்கிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வருகின்றன. அதைத்தான் நம்முடைய கைத்தறித் துறை அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். கடலூர் மாவட்டத்தில்கூட இப்படி ஒரு நிகழ்வு ஏற்பட்டவுடனே, அங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அந்தப் பகுதியில்கூட கடல் நீர் உட்புகுகின்ற காரணத்தினாலே நன்னீர் எல்லாம் பாதிக்கப்படுகின்றது; ஆகவே, விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றார்கள். ஏழை வேளாண் பெருமக்கள் அந்த நீரைப் பயன்படுத்தித்தான் வேளாண் பணியை மேற்கொள்ள வேண்டும்; குடிநீருக்கும் அந்த நீரைப் பயன்படுத்த வேண்டும். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு படிப்படியாக நடவடிக்கை மேற்கொள்ளும். ஒரே நேரத்தில் அத்தனையையும் செய்து கொடுக்க முடியாது. ஏனென்றால், இந்தத் திட்டத்திற்காக நீரொழுங்கி அமைக்க வேண்டுமென்றால், 25 கோடி ரூபாயிலிருந்து 30 கோடி ரூபாய் செலவாகின்றது. ஆகவே, எங்கெங்கெல்லாம் இப்படிப் பாதிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் கண்டறிந்து, படிப்படியாக கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, சாயக் கழிவு நீர் ஆற்றிலே கலப்பதாகச் சொன்னார்கள். 27 ஆண்டுகளுக்குப் பின்னால் நொய்யல் ஆற்றிலே வருகின்ற தண்ணீர் இந்த ஆண்டுதான் அரவக்குறிச்சியிலே உள்ள கார்வழி dam–இலே நிரப்பப்பட்டு அந்தப் பகுதி விவசாயிகளுக்குப்

பலன் கொடுக்கின்ற வகையிலே திறந்துவிடப்பட்டது. உறுப்பினர் சொல்வதுபோல் ஒரு சதவிகிதம் கூட அந்தமாதிரி நடைபெறவில்லை. திருப்பூரைப் பொறுத்தவரையில் இன்றைக்கு 7,000, 8,000 என்றிருந்த TDS, கடந்த 3, 4 ஆண்டுகளிலே அங்குள்ள கிணற்று நீர் மற்றும் borewell நீர்களிலெல்லாம் குறைந்து, இன்றைக்கு TDS 4,000–க்குக் கீழே வந்திருக்கிறதென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 12 tail end regulators எல்லாம் முறையாகப் பராமரிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அவற்றையும் பராமரிக்க வேண்டும். எனவே, வேளாண் மண்டலம் என்பது செம்மையுற வேண்டுமானால் நீர்ப்பாசன நவீன யுக்திகள், கால்வாய் சீரமைப்பு, ஆக்கிரமிப்பு அகற்றுதல், 950 ஏரிகள் புனரமைப்பு, ஆற்று நீரில் கழிவுகள், மாசுகள் கலக்காமல் பாதுகாத்தல், கடல் நீர் உட்புகாமல் regulators மூலம் நன்னீர் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் காவேரி வேளாண் மண்டலம் அறிவித்த நோக்கம் உண்மையாக, முழுமையாக நிறைவேறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, எனது தொகுதிக்குட்பட்ட நெய்யாறு இடதுகரை கால்வாயைப் பொறுத்தவரையில், பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிக் காலத்தில் அந்தக் கால்வாய் வெட்டப்பட்டதன் நோக்கமே நெய்யாற்றின் கரையிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்காகத்தான். இன்றைக்கு அந்த நோக்கமே நிறைவேறாமல் உள்ளது. 2011 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நான் சட்டப்பேரவையில் வலியுறுத்தியதன் காரணமாக தமிழக அரசு இந்நேர்வில் உச்ச நீதிமன்றத்தில் பிரிவு 32–ன்கீழ் நேரடி மனுவாகத் தாக்கல் செய்து, அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. விரைவில் அந்த வழக்கை நடத்தி முடிக்கும்பொழுது, நிச்சயமாக தமிழகத்தின் உரிமை உறுதி செய்யப்படும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. அதேநேரத்தில், பேச்சுவார்த்தை மூலமாகவும் தீர்வு காண்பதற்கு தற்போது அது agenda–ல் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான்

வரவேற்கிறேன். பேச்சுவார்த்தை மூலமாகவே இந்த வழக்கையும் அங்கேயே பேசி முடித்துவிடலாம். வழக்கு நடந்து முடிந்துதான் பேச வேண்டுமென்ற அவசியமில்லை. ஏற்கெனவே வந்து கொண்டிருந்த நீரைத் தடை செய்திருக்கிறார்கள். அந்தக் காரணங்களைத் தெரிவித்து, அந்த ஒப்பந்தத்தைச் சீரமைத்து, அதைச் சரி செய்தாலே தண்ணீரைப் பெற்றுவிடலாம்.

பிற்பகல் 1–15

அதேபோல, நீர்நிலைகளில் இப்போது ஆக்கிரமிப்புகள் நிறைய இருக்கின்றன. தூர்வார நிதிகளை ஒதுக்கி அவற்றையெல்லாம் தூர் வாரி, தண்ணீரைச் சேமிக்க வேண்டும். கிட்டத்தட்ட பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் முழுமையான அளவில் பாசனம் பெறுவதற்கும், நிலத்தடி நீர் செம்மை பெறுவதற்கும், குடிநீருக்கும் அது பெரிய ஆதாரமாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த நெய்யாறு திட்டம், 1965 ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு வந்தது. இதில் 9,200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. 2004 ஆம் ஆண்டிலிருந்து கேரள அரசால் பாசனத்திற்குத் திறந்துவிடுகின்ற நீர் நிறுத்தப்பட்டுவிட்டது. இதன் காரணமாகப் பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும், பயன் இல்லாத காரணத்தினால், 2015–லே உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பேச்சுவார்த்தையின் மூலமாகத் தீர்வு காண்பதற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றது. இருந்தாலும், உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றது. வழக்கை விரைந்து முடித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அங்கேயிருக்கின்ற விவசாயப் பெருமக்களுக்குத் தேவையான நீரைப் பெற்றுத் தருவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல, பொதுப் பணித் துறையில் தினக் கூலிப் பணியாளர்களாக NMRs 1,458 பேர் 10 ஆண்டு முதல் 25 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார்கள். சிலர் பணி மூப்பு அடையக்கூடிய சூழ்நிலையும் வந்துவிட்டது. அவர்களை உடனடியாகப் பணி நிரந்தரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, நான்கு வழிச்சாலைக்கான பணி ஆரம்பித்து, பாதியில் நிற்கின்றது. அந்தப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன என்பது போன்று தெரிகின்றது. நான்கு வழிச்சாலையை முழுமையாக நடைமுறைப்படுத்துவது மத்திய அரசின் பணியாக இருந்தாலும், மாநில அரசுக்கும் நில எடுப்பு போன்ற பல்வேறு பணிகளில் பங்களிப்பு இருக்கின்றது. எனவே, அந்த நான்கு வழிச்சாலையை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு மாநில அரசு, மத்திய அரசிடம் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தி, அதை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி, காவல்கிணறு முதல் களியக்காவிளை வரை தற்போதுள்ள தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை மூன்று reach ஆக யாரோ ஒரு contractor எடுத்திருக்கிறார். அது யார் என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும், 2017 ஆம் ஆண்டிலிருந்தே பணிகளை அந்த contractorதான் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார். 2020 ஆம் ஆண்டும் வந்துவிட்டது. மூன்று வருடங்களாகியும், அந்த contractor இந்தப் பணிகளைச் செய்யாமல் வைத்துக்கொண்டே உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார். ஒரு வேலையையும் செய்ய மாட்டேன் என்கிறார். நீதிமன்றத்திற்குச் சென்று கொண்டேயிருக்கிறார். இப்படிப்பட்ட contractor உடைய licence–ஐ எல்லாம் இரத்து செய்யுங்கள். அந்த contractor தேவையே இல்லை. அப்படிப்பட்ட ஆளே வேண்டாம். அவர் யாராக இருந்தாலும் சரி. எனக்கு அவர் யார் என்று தெரியாது. இருந்தாலும் அந்தச் சாலையில் போகவே முடியவில்லை. அவ்வளவு சிரமமாக இருக்கிறது. National Highway ஆக இருந்தாலும் licence கொடுப்பது மாநில அரசுதான். Class I Contractor ஆக licence கொடுக்கிறீர்கள். முதலில் அந்த licence–ஐ இரத்து செய்யுங்கள். அப்படிப்பட்ட நபரே வேண்டாம், வேலை

செய்யும் நபருக்கு அந்த வேலையைக் கொடுங்கள். (குறுக்கீடு) ஆம், அதை அழுத்தந்திருத்தமாகச் சொல்ல வேண்டும். அப்போதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தப்புள்ளி கோருகின்றபோது, அதற்கு தகுதியானவர்கள் அத்தனை பேருமே ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ளலாம். யார் ஒப்பந்தப்புள்ளியை குறைவாகக் கேட்கின்றார்களோ, அவர்கள்தான் ஒப்பந்தம் போட முடியும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, காலதாமதம் ஏற்பட்டால் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: இதோ முடித்துவிடுகிறேன். முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு முன்பு மூன்று உறுப்பினர்கள் பேசினார்கள். நீங்கள் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: எனக்கு 1–04 மணிக்குத்தான் பேசுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, மூன்று உறுப்பினர்கள் உங்களுக்கு முன்பு பேசினார்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: நாங்கள் எல்லா மானியக் கோரிக்கைகளிலும் பேசுவதுகூட இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, நீங்கள் இரண்டாவது முறை பேசுகிறீர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: இனிமேல் இருக்கின்ற மானியக் கோரிக்கையிலாவது தயவுசெய்து பேச விடுங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகவும் நெருக்கடி கொடுக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து ஒரு நிமிடத்தில் உங்களது உரையை முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: சிறிது நேரம் பேசுவதற்கு அனுமதி கொடுங்கள். (குறுக்கீடு) Late ஆகத்தான் கொடுத்தீர்கள். சிறிது நேரம்தான் பேசினேன். அதாவது, இந்த contractor–ஐ பொறுத்தவரையில் பணிகளைச் செய்யவில்லையென்றால் penalty, fine ஏதோ இருக்கிறது. நீங்கள், அந்த fine–ஐ எல்லாம்கூட போடலாம். பணிகளை எப்படியாவது செய்தால் போதும். என்னைப் பொறுத்தவரையில் இந்த contractor–ஐ பற்றியெல்லாம் எனக்குக் கவனம் கிடையாது. ஆனால், தயவுசெய்து வேலை நடைபெற்றால் போதும். அவரை cancel செய்ய வேண்டுமென்பதெல்லாம்கூட எனக்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) ஆம், அதனால், நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி, என்னுடைய தொகுதியிலே விரிகோடு இரயில்வே மேம்பாலத்திற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பு, என்னுடைய கோரிக்கையை ஏற்று 64 கோடி ரூபாய் நிதியை வழங்கினீர்கள். மதிப்பீடு செய்யப்பட்டு, விரிகோடு ஊர் மக்களுக்காகத் கொண்டு வரப்பட்ட இரயில்வே மேம்பாலப் பணி இப்போது வேறு பக்கம் போய்க் கொண்டிருக்கிறது. அதை correct ஆக அந்த ஊருக்கு ஒட்டிய இடத்தில் கொண்டுவர வேண்டுமென்று, ஆய்வு செய்வதற்கு அதிகாரிகளை வரச் சொல்லி அந்த இடத்தையும் காண்பித்துவிட்டோம். ஆகையினால், அந்த நிதியை முறையாகப் பயன்படுத்தி, அந்த இரயில்வே மேம்பாலம் அமைவதற்கு அரசு உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–20

என்னுடைய தொகுதியில் உள்ள திக்குறிச்சி சாலை. வடிகால் போட்டால்தான் அந்தச் சாலையையே போட முடியும். Road போடுவதற்கு fund sanction–ஆனாலும் road போட முடியாமல் இருக்கின்றது. ஆகையினால், முதலில் வடிகாலைப் போட்டுவிட்டு, பிறகு road–ஐ போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிரமமான ஒரு சில விஷயங்களைத்தான் நான் இந்த அவையில் பதிவு செய்கிறேன். மீதியிருக்கின்ற கோரிக்கைகளையெல்லாம் நான் எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.

அதேபோல, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் நிலக்கரி நகர்வு மற்றும் கன்னியாகுமரியில்

இருக்கக்கூடிய மூன்று படகுகளை இயக்குவதற்கு மட்டும்தான் இந்த பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு இன்னும் கொஞ்சம் கூடுதலான செயல்பாடுகளைக் கொடுத்து, அதனை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உரையை முடியுங்கள். எல்லோரையும்போல நீங்களும் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் மட்டுமே தனியாகப் பேசிக் கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) எல்லோரையும்போல நீங்களும் பேசுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: எல்லோரையும் போலத்தான் நானும் பேசுகின்றேன். மற்ற உறுப்பினர்களெல்லாம் எவ்வளவு நேரம் பேசினார்கள் என்பதையெல்லாம் நானும் இங்கே பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி. நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லையென்றால், அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் ஏற்கெனவே ஒரு கோரிக்கையை வைத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) ஒருமுறைகூடப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்காத உறுப்பினர்கள் எத்தனையோ பேர் இங்கு இருக்கின்றார்கள். இந்தக் கூட்டத் தொடர் ஆரம்பித்ததிலிருந்து நீங்கள் இரண்டாவது முறையாகப் பேசுகிறீர்கள். தயவுசெய்து, நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான இரண்டு points.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, தயவுசெய்து நீங்கள் முடியுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: அதாவது, எங்களுடைய தலைவர், முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களோடு மரணமுற்ற காவல் துறையைச் சேர்ந்த காவலர்களுக்கும், அதிகாரிகளுக்கும் இழப்பீடு மற்றும் வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே நான் கேட்டிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நினைவூட்டும் விதமாக மீண்டும் அதை நான் இங்கே தெரிவிக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய கேரளாவை இணைக்கக்கூடிய சாலை ஒரு முக்கியமான சாலை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள். (குறுக்கீடு) இல்லை, வேண்டாம். கோரிக்கைளை என்னிடத்தில் கொடுங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) உங்களுக்கு இது இரண்டாவது வாய்ப்பு. இந்தக் கூட்டத் தொடர் தொடங்கி, ஒருமுறைகூடப் பேசாத உறுப்பினர்கள் நிறைய பேர் இருக்கின்றார்கள். போதும், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அந்த ஒரு point–ஐ மட்டும் நீங்கள் பேச வேண்டும்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தை இணைக்கக்கூடிய பழைய உச்சிக்கடை சாலை கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டருக்கு குறைவாகத்தான் இருக்கின்றது. கணபதியான் கடவு முதல் விரிவிளை வரையுள்ள அந்தச் சாலை குறுகலாக உள்ளது. அந்தச் சாலையை விரிவுபடுத்துவதற்கான நில எடுப்புப் பணிகளையெல்லாம் விரைவாகச் செய்து, அந்தச் சாலையை இணைக்கின்றபோது கேரளா செல்கின்றபோது ஏற்படும் பிரச்சினை கொஞ்சம் தீர்வடையும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'ஒகி' புயல் பாதிப்பை பார்வையிட அங்கு வந்தபோதுகூட, 20 நிமிடங்கள் அந்த இடத்தில் நிற்கின்றமாதிரி ஆகிவிட்டது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்த இடம் நன்றாகத் தெரியும். அந்தச் சாலையை விரிவுபடுத்த உடனடியாக நில எடுப்பு செய்து, அந்தப் பணிகளை நிறைவு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒரேயொரு கோரிக்கைதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதற்குமேல் போக வேண்டாம். உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

திருமதி எஸ். விஜயதரணி: நான் முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்துவிடுவேன். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்கிறீர்களா, இல்லையா?

திருமதி எஸ். விஜயதரணி: நான் ஒரேயொரு கோரிக்கையை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் சார்பாக நன்றியை நானே சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, போதும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நியாயமே இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

தொகுதிக் கோரிக்கைகள்:

கன்னியாகுமரி மாவட்டத்தில் lift irrigation திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். குளங்களில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுக்க அனுமதி வழங்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களையும் தூர்வாரி மடைகள், மதகுகள், நீர்வரத்துக் கால்வாய்கள் மற்றும் மறுகால் கால்வாய்களைச் சீரமைக்க வேண்டும். குளங்களில் பணிகள் நடைபெறும்போது சம்பந்தப்பட்ட தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்களின் கண்காணிப்பில் பணிகள் நடைபெற அரசு அலுவலர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம், புத்தனாறு, தோவாளை, பாண்டியன், அனந்தனாறு, நாஞ்சில்நாடு புத்தனாறு, சிற்றாறு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலைகளைத் தூர்வாரி சீர்படுத்த ஆண்டுக்கு ரூ.10 கோடி ஒதுக்க வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள முல்லையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டி குடிநீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்டும். முல்லையாற்றின் குறுக்கே கதவணை கட்ட வேண்டும். மேல்மட்ட சானலைத் தூர்வாரி, உடைந்த பாகங்களைச் சீர்செய்து தர வேண்டும். உள்ளிமலை திட்டத்திற்கு உரிய நிதி ஆதாரத்தை அரசு உடனடியாக வழங்கிட வேண்டும்.

திற்பரப்பு வலது கரை சானல் வழியாக நீரைக் கொண்டுவந்து நெய்யாறு இடது கரை சானலில் விட வேண்டும். மார்த்தாண்டம், கொடுங்குளம், கன்னக்கோடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வாரி மடை மற்றும் மதகுகளைச் சரிசெய்ய வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டம், விரிஞ்சாபுரம் மரகதாம்பிகை கோயில் குளத்தைத் தூர்வாரி நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்த வேண்டும். விளவங்கோடு தொகுதி, நாறான்விளை, திக்குறிச்சி, சிதறால் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சாலைகளை அகலப்படுத்தி இருவழிச் சாலைகளாக தரம் உயர்த்த வேண்டும். குழித்துறை, தாலுகா ஆபீஸ், மார்த்தாண்டம், வடக்குத் தெரு, களியக்காவிளை போன்ற பகுதிகளில் உள்ள சாலைகளைச் செப்பனிட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, கிள்ளியூர், திருவட்டாறு தாலுகா அலுவலகங்கள் lift வசதியுடன் கட்டப்பட வேண்டும். விளவங்கோடு அரசு மேல்நிலைப் பள்ளிக்கு Science Lab மற்றும் சுற்றுச் சுவர் கட்ட வேண்டும். விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட களியக்காவிளை, பளுகல், உண்ணாமலைக்கடை, குழித்துறை ஆகிய நான்கு நகர்ப்புற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்.

விளவங்கோடு தொகுதி, இடைக்கோடு மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆண்களுக்கான உள் நோயாளிகள் வார்டு கூடுதலாகக் கட்டப்பட வேண்டும்.

குழித்துறை பொதுப் பணித் துறை பாசனப் பிரிவு உட்கோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்பட வேண்டும். விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்குப் பொது மக்கள் அமரும் அறை தண்ணீர் வசதியுடன் கட்டப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. பி.வி. பாரதி அவர்கள்.

*__திரு. பி.வி. பாரதி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் வணங்குகின்ற தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய தலைசாய்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர் தம் வாழ்வுக்கு தன்னையே அர்ப்பணித்த கலை ஓவியமாய், எதிரிகளை புறமுதுகிட்டு ஓட வைத்த புறநானூற்று வீர காவியமாய், (மேசையைத் தட்டும் ஒலி) பனியாய் உருகி, மெழுகாய்க் கரைந்த பாசத்தின் இருப்பிடமாய், . . . (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. பி.வி. பாரதி: கொடியவர்களுக்கு இரும்புக்கரம் நீட்டி, ஏழைகளிடத்தில் இன்முகம் காட்டி, இருண்டு கிடந்த தமிழகத்தை ஒளிமயமாய் ஆக்கி, தமிழகத்தை தரணியில் முதலிடத்திற்கு மாற்றி, அகிலமே ‘அம்மா, அம்மா’ என அழைக்கும் பேறு பெற்ற எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் reply முடிந்த பின்னர், உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருவார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் reply முடிந்த பின்னர் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் reply முடிந்த பின்னர் கேளுங்கள். (குறுக்கீடு)

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழர் தம் திருநாளில் நெற்கதிர் அறுத்து, கழனிவாழ் உழவருக்குப் பெருமை சேர்த்த பாங்கு, தேரோட்டம் கண்ட திருவாரூரில் மாடு பூட்டிய வண்டியில் விவசாயிகளின் தோழனாய், மக்கள் வெள்ளத்தில் பவனி வந்த அழகு, கரிகால்சோழனாய் நீங்கள், அருகில் மனுநீதிச் சோழனாய் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள். மனுநீதிச் சோழன் சேற்றிலே இறங்கி, நாற்று எடுத்து அதனை கிள்ளி லாவகமாய் வயலில் நட்டு, எம் மண்ணின் மாண்பினை உலகிற்கு உணர்த்திய பண்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, உங்களை நான் முடிக்கச் சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

பிற்பகல் 1–25

திரு. பி.வி. பாரதி: தான் பிறந்த மண்ணிலே டிராக்டர் ஓட்டிக் காட்டி (மேசையைத் தட்டும் ஒலி) தன்னை ஒரு பிறவி விவசாயி என நிரூபித்துக் காட்டிய காட்சி இவையெல்லாவற்றையும் தொலைக்காட்சியில் பார்த்த மக்கள் தாங்கள் ஒரு விவசாயியை முதலமைச்சராகப் பெற்றிருக்கிறோம் என பெருமை கொண்டனர். (மேசையைத் தட்டும் ஒலி) மீன் குஞ்சுக்கு நீந்த கற்றுத் தர வேண்டுமா? ஒரு விவசாயியான உங்களுக்கு இவையெல்லாம் யாரேனும் சொல்லித் தர வேண்டுமா? ஏர் பிடித்து உழுத கைகள் உங்கள் கைகள். மண்வெட்டி எடுத்து வயலுக்கு நீர்பாய்ச்சிய கைகள் உங்கள் கைகள். நீங்கள் மோதிரக் கையால் குட்டுப்பட்டவர். அம்மா அவர்களின் கரங்களால் ஆசீர்வதிக்கப்பட்டவர். எவரும் உங்களிடத்தில் மோதிப் பார்க்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையான விவசாயியாய், ஏழைகளின் தோழனாய் விளங்குகின்ற விவசாயிகளின் காவலர், சுற்றுச்சூழல் நாயகர், குடிமராமத்து திட்டம் தந்த கோமகன், கலியுகம் கண்ட இரண்டாம் கரிகால் சோழன், காவேரி காப்பாளர், மயிலாடுதுறை மாவட்டம் தந்த மாசற்ற மனிதர், கழக இணை ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தின் பெருமையே, கழகத்தின் வலிமையே, தொண்டர்களின் இதயமே, அமைதியின் வடிவமே, பொறுமையின் மறு உருவமே, விசுவாசத்தின் அடையாளமே, தோழமையின் இலக்கணமே, மானம் செறிந்த பூமியின் வீரம் காத்திட்ட மறவனே, மருதிருவர் வழிவந்த மாணிக்கமே, (மேசையைத் தட்டும் ஒலி) பாண்டிய நாட்டு தங்கமே, கழகத்தின் ஓர் அங்கமே, 10 முறை பட்ஜெட் தாக்கல் செய்த பார் போற்றும் மன்னனே, எங்கள் ஆருயிர் அண்ணனே, வர்தாவை வென்று காட்டிய வரலாற்று நாயகனே, கழக ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்ட கழகச் செயலாளரும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான, எங்கள் ஆருயிர் அண்ணன் திரு. ஓ.எஸ்.எம். அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு வகிக்கக்கூடிய நெடுஞ்சாலைகள் துறை மற்றும் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கியமையால் என் வாழ்நாள் பயனைப் பெற்றிருக்கிறேன் என்பதனை இந்த நேரத்திலே பெருமகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசியல் வரலாற்றிலேயே ஒரே ஆண்டில் 5 புதிய மாவட்டங்களை உருவாக்கி சாதனை படைத்து, ஆறாவதாக நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து, மயிலாடுதுறையை தலைநகரமாகக் கொண்டு புதிய மாவட்டம் அமைக்கப்படும் என அறிவித்து, ஒரு மாவட்டத்தின் தலைநகருக்குச் செல்ல ஒரு மாநிலத்தை கடந்துதான் செல்ல வேண்டுமென்ற நிலையினை மாற்றி, எங்கள் சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தந்து, எங்கள் மக்களின் துயர் துடைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாடு கட்டி போரடித்த பூமி, சோழ நாடு சோறுடைத்து என பெயர் பெற்ற பூமி, தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எனப் புகழ்பெற்ற பூமி எங்கள் காவேரி டெல்டா. மீத்தேன், Hydrocarbon போன்ற திட்டங்களால் எங்கள் விவசாயம் பாழ்பட்டு விடுமோ, எங்கள் சந்ததியினரின் எதிர்காலம் என்னவாகுமோ என அஞ்சி நடுங்கி போராடிக் கொண்டிருந்தவேளையில், காவேரி டெல்டா பாசனப் பகுதியை 'பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்' என அறிவித்து அதனை நடைமுறைப்படுத்திட சட்டமுன்வடிவை உருவாக்கி, அதைத் தானே சட்டமன்றப் பேரவையில் முன்மொழிந்து நல்லெண்ணம் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்களின் பேராதரவோடு நிறைவேற்றிக் காட்டி, சட்டமாக்கி அரசிதழில் வெளியிட்டு, நடைமுறைப்படுத்தி, இனிவரும் காலங்களில்

வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்களைத் தவிர வேறெந்த திட்டத்தையும் எங்கள் டெல்டா மண்ணில் தொடங்க முடியாது என்று பொன்னெழுத்துகளால் பதிக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சாதனையைப் படைத்து (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் டெல்டா பாசன விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றி வைத்து, எங்கள் சந்ததியினரின் எதிர்காலத்தை ஆயிரம் ஆண்டுகள் பாதுகாத்து தமிழகத்தின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் எனது சார்பிலும், எங்கள் டெல்டா பாசன விவசாயிகளின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

மன்னார்குடி ரெங்கநாதன் அவர்கள், விவசாயிகளின் பாராட்டு விழாவிலே, ‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 10,000 ஆண்டுகள் காவேரி டெல்டா பாசனப் பகுதி பாதுகாக்கப்பட்டிருக்கிறது’ என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பைத் தந்த முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவேரி நதிநீர் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கத் தவறியவர்கள்; காவேரியில் கர்நாடக அரசு அணை கட்டுவதைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்தவர்கள்; காவேரி நீர் தொடர்பான வழக்கை வாபஸ் பெற்றவர்கள் மத்தியிலே பல ஆண்டுக் காலம் அமைச்சர்களாக இருந்தும் ஒரு சொட்டு காவேரி நீரைக்கூட பெற்றுத் தராதவர்களுக்கு மத்தியில், காவேரி நீரில் தமிழகத்திற்கு உள்ள உரிமையை பெற்றுத்தர முதன்முதலில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, சட்டரீதியாக போராடியவர் பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். காவேரி நடுவர் மன்ற இறுதியாணையினை மத்திய அரசின் அரசிதழில் வெளியிட வேண்டுமென இடைவிடாது சட்டப் போராட்டம் நடத்தி வெற்றி கண்ட அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதோடு மட்டுமல்லாமல், காவேரி நீருக்காக தன் உடல் வருத்தி, உயிரையே பணயம் வைத்து 84 மணி நேரம் உண்ணாவிரதம் இருந்து விவசாயிகளின் நலன் காத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி மேலாண்மை வாரியம் மற்றும்

காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு அமைக்க வேண்டுமென உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினைப் பெற்று, அந்தத் தீர்ப்பினை நடைமுறைப்படுத்த காலதாமதம் செய்த மத்திய அரசின்மீது மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் துணிச்சலுடன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்து, போராடி மத்திய அரசின் அரசிதழில் வெளியிடச் செய்து, வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை நிகழ்த்திக் காட்டியிருக்கிற அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

பிற்பகல் 1–30

மழைநீர் சேகரிப்புத் திட்டம், விவசாய விளைநிலங்களில் பண்ணைக்குட்டைகள் அமைக்கும் திட்டம், ஆறுகள் மற்றும் நீர்நிலைகள் தூர் வாரும் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தி நீர் மேலாண்மையை உலகிற்குக் கற்றுத் தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் 82 ஆண்டுகளுக்குப் பிறகு பொது மக்களின் பங்களிப்புடன் மேட்டூர் அணையைத் தூர்வாரி, காவேரி பாசன விவசாயிகளின் நலன் காத்த அரசு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு. மேட்டூர் அணையில் இதுவரை 2,34,492 கன மீட்டர் வண்டல் மண் அகற்றப்பட்டு, 1,846 பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். குடிமராமத்துத் திட்டத்தின்கீழ் பொது மக்களின் பங்களிப்புடன் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகளைத் தூர் வாரி, நீர்நிலைகளைச் சேமித்துக் காட்டி சாதனை படைத்துள்ள அரசு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு. சத்துணவுத் திட்டம் புரட்சித் தலைவருக்குப் புகழ் சேர்த்தது. தொட்டில் குழந்தைத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பெருமையைத் தேடித் தந்தது. குடிமராமத்துத் திட்டம் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வரலாற்றில் இடம் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் குடிமராமத்துத் திட்டத்திற்கு ரூ.300 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதைப் பாராட்டுகிறேன்.

கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஆதனூர்–குமாரமங்கலம் கிராமங்களுக்கு இடையே, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, ரூ.494.60 கோடி மதிப்பீட்டில் கடைமடைப் பகுதியிலுள்ள 31,221 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்

பொருட்டு தலைமதகுடன்கூடிய கதவணை அமைக்கும் பணியினை விரைந்து முடிக்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வீராணம் ஏரியிலிருந்து சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்க 'வீராணம் திட்டம்' என்ற பெயரில் திட்டத்தைத் தொடங்கினார்கள். குழாய்கள் பதித்தார்கள், குழாய்களில் சிலர் குடும்பம் நடத்தினார்களே தவிர, சென்னை மாநகருக்கு தண்ணீர் வரவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் 'புதிய வீராணம் திட்டம்' என்ற திட்டத்தைத் தொடங்கி, வெற்றிகரமாகச் செயல்படுத்தி சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையினைப் பூர்த்தி செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் வீராணம் ஏரியைத் தூர்வாரி அதன் முழு கொள்ளளவான 1,465 மில்லியன் கன அடியினை மீளப் பெறுவதற்கான பணிகளை முழுவதும் நிறைவேற்றியதன் காரணமாக . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாரையும் குறிப்பிட்டு குற்றம் சொல்லவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டம் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தது. அந்த இடத்தில்தான் நீங்கள் குழாய்போட்டு தண்ணீர் கொண்டுவந்திருக்கின்றீர்களே தவிர, அந்தத் திட்டத்தை வீணாக நிறுத்தியது உங்கள் ஆட்சியில்தான். நீங்கள்தான் ஊழல் குற்றச்சாட்டு சொல்லி நிறுத்தினீர்கள். ஆனால், நாங்கள் எடுத்த இடத்தில் மீண்டும் நீங்கள் pipe வைத்து தண்ணீர் எடுத்து வந்தீர்களே தவிர, வீராணம் திட்டம் உங்களுடையது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வீராணம் திட்டத்தில் மிகப் பெரிய ஊழல் நடைபெற்று அந்த pipe எல்லாம் அப்படியே இருந்து, (குறுக்கீடு) அந்த pipe எல்லாம் அப்படியே ரோட்டில் இருந்து, அந்த pipe–ல் எவ்வளவு பேர் குடும்பம் நடத்தி, எவ்வளவு இன விருத்தி

செய்தார்கள் என்பதையெல்லாம் வரலாறு மறந்திருக்காது. (குறுக்கீடு) தி.மு.க. ஆட்சியில் சத்தியநாராயணன் என்ற Contractor–ன் நிலைமை என்ன ஆனது? அது குறித்து நம்முடைய நண்பர் திரு. பிச்சாண்டி அவர்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்குவாரா? சத்தியநாராயணன் என்பவர் இறந்தே போனார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ரூ.40 கோடி மதிப்பீட்டில் வீராணம் ஏரியைத் தூர்வாரி அதன் முழு கொள்ளளவான 1,465 மில்லியன் கன அடியினை மீளப் பெறுவதற்கான பணிகளை முழுவதும் நிறைவேற்றியதன் காரணமாக, 44,856 ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்தித் தந்துள்ளதுடன், சென்னை பெருநகரத்தின் குடிநீர்த் தேவையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–35

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழகத்தில் காவேரி ஆறு மற்றும் அதன் கிளை ஆறுகளை மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க "நடந்தாய் வாழி காவேரி" திட்டத்தில் புனரமைக்கும் பணிக்கான பூர்வாங்க திட்ட அறிக்கை தயாரிக்க 2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.15 கோடி ஒதுக்கீடு செய்துள்ளதை மனதார வரவேற்கிறேன்.

தமிழகத்தில் கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல், உபயோகிப்பாளர்களுக்கு எளிதில் கிடைத்திட 'தமிழ்நாடு மணல் இணைய சேவை' என்ற இணையத்தை தொடங்கி இணையதளத்தில் முன்பதிவு செய்துகொள்ளவும், இணையதளம் வழியாக மணல் விற்பனை தொகையைச் செலுத்தும் வசதியை செய்து தந்தும், மணல் குவாரிகள் மற்றும் அரசு மணல் கிடங்குகளின் அனைத்து செயல்பாடுகளையும் கண்காணிப்பு கேமராக்கள்மூலம் கண்காணித்தும், மணல் திருட்டு அறவே இல்லை என்ற நிலையினை உருவாக்கி அரசுக்குப் பெருமளவு வருவாயை மணல் விற்பனைமூலம் ஈட்டித் தந்துள்ள அரசு, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு.

2020–2021 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு ரூ.15,850.54 கோடியும், நீர்ப்பாசனப் பணிகளுக்கு ரூ.500 கோடியும், காவேரி வடிநிலப் பகுதிகளில் தூர்வாரும் பணிகளை மேற்கொள்ள ரூ.67.25 கோடியும், பருவகால மாற்ற தழுவல் திட்டத்திற்கு ரூ.105.20 கோடியும், கல்லணைக் கால்வாய் பணிகளுக்கு ரூ.300 கோடியும், அணைகள் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.220.12 கோடியும், அத்திக்கடவு– அவிநாசி நீர்ப்பாசனத் திட்டத்திற்கு ரூ.500 கோடியும், காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்திற்கு ரூ.700 கோடியும், ஒருங்கிணைந்த சாலை கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.5,500 கோடியும், கிராமப்புற ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளைத் தரம் உயர்த்த ரூ.1,050 கோடியும், மெட்ரோ இரயில் திட்டத்திற்கு ரூ.3,100 கோடியும், அரசு அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட ரூ.1,453.91 கோடியும், அரசு அலுவலகக் கட்டடங்களின் சீரமைப்பு மற்றும் பாதுகாப்புப் பணிகளுக்கு ரூ.50 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

1998 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆதரவுடன் அமைந்த திரு. வாஜ்பாய் அவர்களின் தலைமையிலான மத்திய அரசின் தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. தம்பிதுரை அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, தங்க நாற்கர சாலைத் திட்டத்தை ஒரு இலட்சம் கோடி ரூபாய் நிதியில் கொண்டு வந்தார்கள். தமிழகத்திற்கு ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீட்டை பெற்றுத் தந்து, தங்க நாற்கர சாலைத் திட்டத்தைக் கொண்டுவரக் காரணமாக இருந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இம்மாமன்றத்திற்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நகராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சிகள் என எல்லாவற்றிற்கும் சேர்த்து உள்ளாட்சித் துறையின்கீழ் மொத்தம் 58 பாலங்கள் மட்டுமே கட்டப்பட்டன. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.162.60 கோடி மட்டுமே. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் 2011 முதல் 2016 வரையிலான 5 ஆண்டுக் கால ஆட்சியில், 60 பாலங்கள் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.912 கோடி என்பதை பெருமையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் 5 ஆண்டுக் கால ஆட்சியில் பல்வேறு அலகுகளில் 2,095 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளன. தி.மு.க.–வின் 5 ஆண்டு ஆட்சிக் காலத்தில் 1,239 பாலங்கள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டன என்பதை இம்மாமன்றத்திற்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 2011 முதல் 2016 வரை 54 இரயில்வே பாலங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. 2006 முதல் 2011 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 32 பாலங்கள் மட்டுமே திறக்கப்பட்டன என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

கிராமங்கள் முதல் மாநகராட்சிகள் வரை அனைத்துப் பாலங்களையும் கட்டி முடித்து, அனைத்து சாலைகளையும் செப்பனிட்டு அகலப்படுத்தி, புதிய சாலைகள் அமைத்து சாலை வசதி மற்றும் பாலங்கள் இல்லாத இடமே இல்லை என்ற அளவிற்கு தரமான போக்குவரத்து வசதியினைச் செய்து தந்து ஒரு வரலாற்றுச் சாதனையினைப் படைத்துள்ள அரசு, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலம் நெடுஞ்சாலைத் துறை மற்றும் பொதுப் பணித் துறையின் பொற்காலம். அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆட்சிக் காலத்தில். தமிழகம் அனைத்து துறைகளிலும் தன்னிறைவு பெற்று மிகை மின் மாநிலம் என்ற பெருமையைப் பெற்று, இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களிலும் முதலிடம் பெற்றுத் திகழ்கிறது. இந்த அரசு, மாண்புமிகு அம்மாவின் அரசு. இது மக்களுக்கான அரசு, இந்த அரசு தொடர வேண்டும் என்பதே மக்களின் விருப்பம்.

என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை இந்த நேரத்தில் வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன். கொள்ளிடம் ஆற்றில், என்னுடைய தொகுதியான வட பகுதியில் கொள்ளிடம் ஆறு கடலின் முகத்துவாரத்தில் கலக்கிறது. தென் பகுதியில் வெள்ளப்பள்ளம் உப்பனாறு கலக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், இந்தப் பேரவையிலும் தொடர்ந்து 4 ஆண்டுகள் கொள்ளிடம் ஆற்றிலே கதவணை வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கின்றேன். இங்கு கடல்நீர் உட்புகுவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டிருக்கிறது. எங்களுடைய பகுதி விவசாயப் பெருமக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக ஒரு

கதவணையை கொள்ளிடம் ஆற்றில் அளக்குடி என்ற கிராமத்திலும், மாதிரிவேளூர் என்ற கிராமத்திலும் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–40

அதேபோன்று, இன்றைக்கு எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக, ஒரு யூனியன் பிரதேசத்தை நாங்கள் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது எனவும், எங்களுடைய மயிலாடுதுறையை தனி மாவட்டமாகப் பிரித்துக் கொடுங்கள் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கோரிக்கை வைத்த நேரத்தில், அவர்கள், “இதற்கு மேல் முடியாதுப்பா, அவ்வாறு மாவட்டங்களையெல்லாம் பிரிக்க முடியாது, நீங்கள் என்ன சொன்னாலும் நடக்காது” என்று சொன்னார். அன்புள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் 2017 ஆம் ஆண்டில், நான் வைத்த நீண்ட நாள் கோரிக்கை என்னவென்றால், 50 ஆண்டுக் காலமாக எங்கள் தொகுதி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது; ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், மீனவ மக்கள் பயன்பெறுகின்றவகையில், உயர் கல்வி படிக்க வேண்டும் என்கிற அடிப்படையில், அவர்களுக்கு நீங்கள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தர வேண்டும் என்கிற கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் வைத்த நேரத்தில் அவர், “என்னுடைய எடப்பாடிக்கே இன்னும் கல்லூரியைக் கொண்டுவரவில்லை” என்றார்கள். எங்களைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதலமைச்சரிடத்தில் நாங்கள் கண்டது, அவர் ஓர் ஆற்றல்மிக்க முதலமைச்சர் என்பதை இந்த அவையில் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், நாம் வைக்கின்ற கோரிக்கையின் வலிமையை, அதன் நியாயத்தை அறிந்து, உடனடியாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கான ஆற்றல்மிக்க முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும், என்னுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று, உடனடியாக அவர்கள் தன்னுடைய துறை செயலாளரை அழைத்து ‘அந்த 7 கல்லூரிகளில் சீர்காழியைச் சேருங்கள்’ என்று சொன்னார். அதை என்னுடைய வாழ்நாளிலேயே மறக்க முடியாது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், நான் செய்த ஒரு பெரும் சாதனையாக இதனைக் கருதுகிறேன். எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய

தொகுதிக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தந்து, வரலாற்றுச் சாதனையைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்து, என் உயிர் உள்ளவரை நன்றிக் கடன்பட்டவனாகவும் இருப்பேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, ஒரு யூனியன் பிரதேசத்தைக் கடந்து செல்ல வேண்டும், 'எங்கள் மாவட்டத்தைப் பிரித்துக்கொடுங்கள்' என்று சீர்காழி, மயிலாடுதுறை மற்றும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின்மூலம் நாங்கள் கோரிக்கை வைக்கின்ற நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "அது முடியாது" என்று சொன்னார்கள். ஆக என்னைப் பொறுத்தவரையில், "கரைப்பார் கரைத்தால், கல்லும் கரையும்" என்று சொல்வார்கள். அந்தப் பழமொழிக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் மீண்டும் மீண்டும் நாங்கள் அந்தக் கோரிக்கையை வைத்தோம். அந்தக் கோரிக்கைக்கு பல்வேறு தலைவர்கள் உறுதுணையாக இருந்தார்கள். இன்றைக்கு அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 7–3–2020–ல் நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மயிலாடுதுறை தனி மாவட்டமாக உருவாக்கப்படும் என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். மயிலாடுதுறையை தனி மாவட்டமாகப் பிரிக்கின்ற நேரத்தில், என்னுடைய பெரிய தொகுதி சீர்காழியிலிருந்து கொள்ளிடம் பகுதியை தனியாகப் பிரித்து, ஒரு புதிய தாலுகாவாக உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் பணிவன்போடு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று கொள்ளிடத்திற்கு ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும் என்பது போன்று பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. எங்கள் தொகுதியில் வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் கடல் நீர் உட்புகுந்து பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆக அதற்கொரு கதவணை வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் பணிவன்போடு வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று ஒரே ஒரு கோரிக்கை, மற்ற கோரிக்கைகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் நாகப்பட்டினம் மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில், 'புதிய மாவட்டம் குறித்துப் பரிசீலிக்கப்படும்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்குக் கொடுத்துவிடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அந்த நம்பிக்கையோடு, ஒரு நீண்ட நாள் கோரிக்கையை வைக்கிறேன்.

என்னுடைய சொந்த ஊர் திருவெண்காடு. திருவெண்காட்டில் அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 3 பள்ளிகள் இருக்கின்றன. ஒரு தொடக்கப் பள்ளி, ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி மற்றும் ஒரு மேல்நிலைப் பள்ளி. அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி 1962 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அந்தப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று நான்கு வருடங்களாக நான் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறேன். திருக்கோயிலுக்குச் சொந்தமான பள்ளிக்கூடம், ஆனால், aided school. அதைத்தான் அதில் பார்க்க வேண்டும். புரிந்துகொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு கருத்தைச் சொல்லவேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய துணைவியார் அவர்கள் படித்த பள்ளிக்கூடம், SSD Girls High School. நீங்கள் அதற்கு ஒரு பெருமை சேர்க்கின்றவிதத்தில், இந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டு, இந்த வாய்ப்பை அளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் திருநகரி என்ற இடத்தில் கதவணை அமைக்க வேண்டும். வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் புதுத்துறை–வெள்ளப்பள்ளம் கிராமத்தை இணைக்க போக்குவரத்துப் பாலம் அமைக்க வேண்டும்.

திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்தில் சிறு மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும். கீழமூவர்கரை கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டும். பழையாறு மீன்பிடித் துறைமுகத்தினை நவீனமயமாக்கி மேம்படுத்த வேண்டும். சீர்காழி நகராட்சிப் பகுதியில் புறவழிச்சாலை, பனங்காட்டாங்குடியை இணைக்கும் இரயில்வே பாதையைக் கடப்பதற்கு மேம்பாலம் அல்லது சுரங்கப்பாதை அமைக்க வேண்டும்.

சீர்காழி வட்டத்திலிருந்து கொள்ளிடம் பகுதியைப் பிரித்து கொள்ளிடத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய வருவாய் வட்டம் அமைக்க வேண்டும். கொள்ளிடம் பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும். புதுப்பட்டினம் பகுதியில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

சீர்காழி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டித் தர வேண்டும். சீர்காழி நெடுஞ்சாலைத் துறை பயணியர் மாளிகைக்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். சீர்காழி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் ஏற்படுத்தித்தர வேண்டும்.

சீர்காழி நகராட்சியில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினை விரிவுபடுத்தி, புதிய குழாய் பதித்து, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர வேண்டும்.

சீர்காழியில் புகழ்பெற்ற காந்தி பூங்காவினை சீரமைத்து கொடுக்க வேண்டும். நூலகத் தந்தை ரெங்கநாதன் வாழ்ந்த சீர்காழியில் நவீன வசதிகளுடன்கூடிய நூலகக் கட்டடம் கட்டித்தர வேண்டும். சீர்காழி இசைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். இசை மாமேதை டாக்டர் சீர்காழி கோவிந்தராஜனுக்கு நினைவு மண்டபம் அமைக்க வேண்டும்.

கொள்ளிடம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். சீர்காழி நகராட்சி, நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் கட்டும் பணிக்கு திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கி கட்டடப் பணியை துரிதப்படுத்த வேண்டும்.

சீர்காழி நகராட்சிப் பகுதியில் போக்குவரத்து நெரிசலால் அடிக்கடி நடக்கும் விபத்தினைத் தவிர்க்க நெடுஞ்சாலைத் துறை சாலையினை அகலப்படுத்தித் தர வேண்டும். சேமங்கலம் பஞ்சாயத்து ஆற்றில் புதுப்பேட்டைக்கு போக்குவரத்துப் பாலம் அமைத்துத் தர வேண்டும். வடரெங்கம் ஊராட்சி ஆற்றில் போக்குவரத்துப் பாலம் அமைத்துத் தர வேண்டும். சீர்காழி ஒன்றியம், செம்பை ஒன்றியம் ஆகியவற்றை இணைக்கும் அணுகுசாலை அமைக்க வேண்டும்.

மயிலாடுதுறை முதல் பழையாறு மீனவ கிராமம் வரை திருவெண்காடு, மங்கைமடம், எடமணல் மற்றும் திருமுதல்வாசல் வழியாக புதிய பேருந்து வழித்தடம் அமைத்துக்கொடுக்க

வேண்டும். நவக்கிரக சுற்றுலாத் தலமான வைத்தீஸ்வரன் கோவில் (செவ்வாய்), திருவெண்காடு (புதன் ஸ்தலம்) கீழப்பெரும்பள்ளம் (கேது ஸ்தலம்) வரை புதிய பேருந்து வழித்தடம் அமைத்துக் கொடுக்க வேண்டும். சீர்காழி முதல் சென்னைக்கு புதிய குளிர்சாதன பேருந்து அல்லது deluxe பேருந்து இயக்க வேண்டும்.

திருவெண்காட்டில் அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசினர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு மாணவ, மாணவியர் தங்கும் விடுதி அமைத்துக் கொடுக்க வேண்டும். புத்தூர் அரசினர் சீனிவாசா சுப்புராயலு பாலிடெக்னிக் கல்லூரிக்கு புதிய முழுமையான சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும்.

சீர்காழி நகரப் பகுதிக்கு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். திருநகரி மற்றும் கொண்டல் பழையபாளையம் பகுதிகளுக்கு புதிய துணை மின் நிலையம் அமைக்க வேண்டும். சீர்காழி அரசு மருத்துவமனைக்குப் புதிய C.T. scan வசதி செய்து தர வேண்டும்.

திருக்கோயில் நிலத்தில் குடியிருக்கும் ஏழை எளிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் மீனவ சமுதாய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் புதிய சமுதாயக் கூடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டும். ஆதி திராவிட மக்கள் பயன்படுத்தும் மயான சாலைகளைச் செப்பனிட வேண்டும். ஆதி திராவிட மாணவ, மாணவியர் அரசு வேலைவாய்ப்பில் பங்கு பெற ஊராட்சி ஒன்றியம்தோறும் சிறப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டும்.

காவேரி ஆற்றின் வாய்க்கால்கள், மதகுகள்/ஷட்டர்கள் சீர் செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு வருவாய் வட்டம் அளவில் பயிற்சி மையங்கள் உருவாக்க வேண்டும்.

சீர்காழி கால்நடை மருத்துவமனையை பெருமருத்துவமனையாக மாற்றித் தர வேண்டும். திருவெண்காடு கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக மாற்ற வேண்டும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள். (குறுக்கீடு) ஒன்றும் இல்லை, உட்காருங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேர்மையே! எங்கள் நெஞ்சுரமே! 8 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கையே! தமிழருக்கு ஓர் இடர் வரும்போதெல்லாம், தீச்சுடராய் திக்கெட்டும் படர்ந்து, இருள் போக்கி, இனம் காக்கும் பிடர் கொண்ட சிங்கமே! தமிழ் பெற்றெடுத்த தங்கமே! மக்கள் சேவையில் நிரந்தரமாய் பயணித்திட மிசாவிடம் விசா வாங்கி வந்த போராளியே! என்றும் தளராத இயக்கத்தின் தன்மான காவலரே! (மேசையைத் தட்டும் ஒலி) பொறுமையே கேடயமாய், புன்னகையே ஆயுதமாய் கொண்டவரே! மக்கள் மனதில் என்றும் மன்னவரே! அறிஞர் அண்ணா பற்றவைத்த விளக்கை, கலைஞர் கட்டிக்காத்த நெருப்பை என்றும் அணையாமல் காக்கும் கழகத் தலைவரே! தொண்டர்கள் அனைவருக்கும் தோழரே! ** ஆட்சியைப் பதறச் செய்யும் வீரரே! (மேசையைத் தட்டும் ஒலி) 10 ஆண்டு கஷ்டங்கள் எல்லாம், வருகின்ற புத்தாண்டில். . .(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்லுங்கள். ** ஆட்சி என்றெல்லாம் சொல்ல வேண்டாம். (குறுக்கீடுகள்) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சொல்லுங்கள், சொல்லுங்கள். நீங்கள் மற்றதையெல்லாம் சொல்லுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டு கஷ்டங்கள் எல்லாம், வருகின்ற புத்தாண்டில் மாயமாகி, (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த ஆண்டில் நீங்கள் சொல்வீர்கள் 'மு.க. ஸ்டாலின் எனும் நான்' என்ற வாக்கியமே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழர்கள் உங்களை ஆள வைப்பார்கள்; நீங்கள் தமிழர்களை தலைநிமிர்ந்து வாழ வைப்பீர்கள். மாண்புமிகு கழகத் தலைவர், தளபதி அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் அரசினால் சமர்ப்பிக்கப்படும் நிதிநிலை அறிக்கையில், மொத்தத் தொகையை கூட்டிப் பார்க்கின்றபோது, 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 5 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் ஆட்சியில், நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 3 இலட்சத்து 10 ஆயிரத்து 649 கோடி ரூபாய். அதில் நெடுஞ்சாலைத் துறைக்கு

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மட்டும் சராசரியாக 6.5 சதவிகிதம் நிதி ஒதுக்கி, சாலை வசதிகளை மேம்படுத்த தலைவர் கலைஞர் ஆட்சியில் முக்கியத்துவம் கொடுத்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் 10 ஆண்டுகள் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற மொத்தத் தொகை ரூபாய் 17 இலட்சத்து 47 ஆயிரத்து 28 கோடியாகும். இந்த 10 ஆண்டுகளில் மொத்தமாகச் சேர்த்து, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி வெறும் 5 சதவிகிதம் மட்டுமே. பல்வேறு துறைகள் இருந்தாலும்கூட, இந்தத் துறைகளைவிட நெடுஞ்சாலைத் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டாலும்கூட, சாலை வசதிகளை மேம்படுத்துவதற்கு, தொழிற்சாலைகளைக் கொண்டுவருவதற்கு அடித்தளமாக போதிய நிதிகளை இந்த அரசு ஒதுக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதிகளை முழுவதுமாகச் செலவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுக் காலத்திலே நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 18 ஆயிரத்து 67 கோடி ரூபாய். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியான 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டுவரைஅதாவது, 2011 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 69 ஆயிரத்து 664 கோடி ரூபாய் நெடுஞ்சாலைக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) 10%, 20% ஏற்றிக் கணக்கிட்டாலும் அதிகமாகத்தானே இருக்கின்றது. கூடுதலாகத்தானே இருக்கின்றது? 18 ஆயிரத்து, 67 கோடி ரூபாய் எங்கே, இன்றுவரை ஒதுக்கப்பட்டிருக்கிற 69 ஆயிரத்து, 664 கோடி ரூபாய் எங்கே? அப்படியென்றால் எத்தனை சதவிகிதம் உயர்ந்திருக்கிறது? நீங்கள் சொல்வதைவிட கூடுதலான நிதியைத்தான் சாலைப் பணிக்காக நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 5 ஆண்டுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 3 இலட்சத்து 10 ஆயிரத்து 649 கோடி ரூபாய். அதில் 6.5 சதவிகிதம் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டினேன். இந்த 10 ஆண்டுகளில் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 17 இலட்சத்து 47 ஆயிரத்து 28 கோடி ரூபாய் ஆகும். இதில் 5 சதவிகிதம் மட்டுமே நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. Budget–ன் மொத்த நிதி ஒதுக்கீடு எவ்வளவு, அதில் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி எவ்வளவு என்பதை இந்த அவையிலே சுட்டிக்காட்டுகின்றேன். அதுபோலவே, ஒதுக்கப்பட்ட நிதி என்பது முழுவதுமாக செலவழிக்கப்படுகிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். 2005 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை, . . (குறுக்கீடு)

பிற்பகல் 1–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட இந்த நிதியானது சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு மட்டும்தான். இரயில்வே பாலங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீட்டைச் சேர்த்தால் இன்னும் கூடுதலான தொகை வரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகங்களை, நடந்த விவாதங்களை முழுவதுமாகப் படித்துப் பார்த்தேன். 2018–2019 ஆம் ஆண்டு நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை 9,258 கோடி ரூபாய்; அதில் செலவிடப்பட்ட தொகை 7,283 கோடி ரூபாய். அதாவது 78 விழுக்காடு மட்டுமே ஒதுக்கப்பட்ட நிதியில் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதில் 2016 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பார்க்கின்றபோது, ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து செலவழிக்கப்பட்ட நிதியின் சதவிகிதம் ஒவ்வோர் ஆண்டும் குறைந்து கொண்டே வருகின்றது. அதிலும், குறிப்பாக

2019–2020 ஆம் ஆண்டில் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 11,761 கோடி ரூபாய்; ஆனால், அதில் 7,185 கோடி ரூபாய் மட்டுமே செலவழிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 61 விழுக்காடு மட்டுமே செலவழிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமை வகிக்கின்ற நெடுஞ்சாலைத் துறையிலேயே 61 விழுக்காடு செலவினம் என்று சொன்னால், மற்ற துறைகளின் நிருவாகத் திறனை நாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 2006–2007 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி 3,169 கோடி ரூபாய்; செலவழிக்கப்பட்ட நிதி 2,233 கோடி ரூபாய். கிட்டத்தட்ட 65 சதவிகிதம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மூன்றில் ஒரு பங்குதான் நீங்கள் செலவு செய்திருக்கிறீர்கள். 2007–2008 ஆம் ஆண்டு 3,442 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது; 2008–2009 ஆம் ஆண்டு 3,665 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. இப்படி ஒதுக்கப்பட்ட நிதியைவிட நீங்கள் குறைவாகத்தான் செலவு செய்திருக்கிறீர்கள். 2011–2012 ஆம் ஆண்டு 4,523 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, அதில் 4,136 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 80 சதவிகித நிதி செலவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நிலுவைப் பணிகள் இருக்கும். ஒரு வருடத்தில் இல்லையென்றால், அடுத்த வருடத்தில் நிலுவைப் பணிகள் இருக்கும். இது எல்லோருடைய ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து நடைபெறுவதுதான். இந்த வருடம் மார்ச் மாதம் முடிந்த பிறகு நிலுவையிலுள்ள பணிகள் அடுத்த வருடத்தில் எடுத்துக்கொள்ளப்படும். அதேபோல், 2012–2013 ஆம் ஆண்டில் 4,804 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 4,396 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 2013–2014 ஆம் ஆண்டில் 5,344 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 5,166 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 2014–2015 ஆம் ஆண்டில் 7,136 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 5,686 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 2015–2016 ஆம் ஆண்டில் 7,510 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 6,300 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதனை புள்ளிவிவரங்களோடு சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த விவரத்தை

வைத்து சொல்கிறார் என்பது தெரியவில்லை. ஆகவே, அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும் ஒதுக்கீடு செய்த தொகைக்கு கிட்டத்தட்ட 80 சதவிகிதத்திற்கு மேலாக செலவழிக்கப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறையின் சார்பாக ஆண்டுதோறும் சமர்ப்பிக்கப்படும் செலவினங்கள் பட்டியலிலிருந்து புள்ளிவிவரமாக எடுக்கப்பட்டிருக்கின்றது. 2005 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை நிதிநிலை அறிக்கைகளை முழுவதுமாக எடுத்து படித்துப் பார்த்து, அதில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிடுகிறேன். நிதிநிலை அறிக்கைகளை நான் கையில் வைத்திருக்கிறேன். 2018–2019 ஆம் ஆண்டில் 78 சதவிகிதம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. 2019–2020 ஆம் ஆண்டில் 61 விழுக்காடுதான் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வருடமும் குறைந்திருக்கிறது. 87%, 79%, 78%, 61% என ஆண்டுவாரியாக நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியினுடைய செலவினங்கள் குறைந்திருக்கின்றன என்பதை இந்தப் பேரவைக்குச் சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருடமும் சாலைகளுடைய வகைப்பாடுகள் கொள்கை விளக்கக் குறிப்பில் பட்டியலிடப்படுகின்றன. 2019–2020 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகம், பக்கம் 7–ல், வகைவாரியாக சாலைகளின் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தேசிய நெடுஞ்சாலை 1,900 கிலோ மீட்டர். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் 4,734 கிலோ மீட்டர், மாநில நெடுஞ்சாலை 11,169 கிலோ மீட்டர், மாவட்ட முக்கிய சாலைகள் 11,612 கிலோ மீட்டர், மாவட்ட இதர சாலைகள் 36,624 கிலோ மீட்டர், ஒட்டுமொத்தம் 66,039 கிலோ மீட்டர் என 2019–2020 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

பிற்பகல் 1–55

இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தை நேற்று இரவு 9, 9–30 மணிக்குத்தான் MLA hostel–க்கு கொண்டு வந்து

கொடுத்தார்கள். அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தில் தேடிப் பார்த்தேன். இரவு முழுவதும் அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பு புத்தகத்தைப் படித்துப் பார்த்தேன். இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பைப் படித்துப் பார்த்தபோது, பக்கம் 3–ல், வகை வாரியான சாலை விவரங்கள் என்ற தலைப்பின்கீழ், மாநில தேசிய நெடுஞ்சாலை 1,900 கிலோ மீட்டர் எனவும், இந்திய தேசிய நெடுஞ்சாலை 4,734 கிலோ மீட்டர் எனவும், மாநில நெடுஞ்சாலைகள் 11,169 கிலோ மீட்டர் எனவும், மாவட்ட முக்கியச் சாலைகள் 11,612 கிலோ மீட்டர் எனவும், மாவட்ட இதர சாலைகள் 36,624 கிலோ மீட்டர் என ஒட்டுமொத்தமாக 66,039 கிலோ மீட்டர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, 2019–2020 ஆம் ஆண்டுக்கும், 2020–2021 ஆம் ஆண்டுக்கும் இடையிலான இந்த இடைப்பட்ட ஒரு வருட ஆட்சிக் காலத்தில் அதே கிலோ மீட்டர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்டச் சாலைகள், தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகளுக்கான புள்ளிவிவரத்தில் ஒரு கிலோ மீட்டர்கூட எந்த மாற்றமும் இல்லை. இது, தங்களால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி, செலவழிக்கப்பட்டிருந்தால், ஏதாவது ஒரு வகைப்பாட்டில், சாலை வகைப்பாடுகள் மாறியிருக்க வேண்டும் அல்லது சாலைகளுடைய நீளம் அதாவது கிலோ மீட்டர் மாறியிருக்க வேண்டும். ஒரு வருட காலமாக ஒரு கிலோ மீட்டர் அளவுக்குக்கூட எந்தச் சாலையோ, மாவட்ட முக்கியச் சாலையோ, மாநில நெடுஞ்சாலையோ, தேசிய நெடுஞ்சாலையோ அல்லது NHAI திட்டத்திலோ ஒரு கிலோ மீட்டர்கூட சாலைகளின் நீளம் உயர்த்தப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் பேரவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில விவரங்களைக் கேட்டிருக்கிறார். 2016–2017 ஆம் ஆண்டில் 1,091 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டன; 3,707 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டன; 2,862 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. மொத்தம் 7,660

கிலோ மீட்டராகும். இதேபோன்று, 2017–2018 ஆம் ஆண்டில் 1,291 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டன; சாலைகளை அகலப்படுத்தியிருக்கிறார்கள். அவ்வளவுதான். அதே வகைப்பாட்டில்தான் இருக்கும். 4,688 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன; 4,340 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன; மொத்தம் 10,320 கிலோ மீட்டராகும். 2018–2019 ஆம் ஆண்டில் மொத்தம் 1,012 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டுள்ளன. 8,445 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. அதேபோலத்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. வேண்டுமென்றால், கொள்கை விளக்கக் குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். அவர்களுடைய ஆட்சிக் காலமான 2006–2007 ஆம் ஆண்டில் 1,974 கிலோ மீட்டர் சாலைகள் அகலப்படுத்தப்பட்டு, 5,809 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்பட்டன. 7,889 கிலோ மீட்டர் சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. எப்போதும் மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் இதே தலைப்பில்தான் இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2005–2006 ஆம் ஆண்டு முதல் 2020–2021 ஆம் ஆண்டு வரையில், ஒவ்வொரு வகை வாரியான சாலைகளுடைய நீளத்திற்கான பட்டியலை முழுவதுமாக நான் கையிலேயே வைத்திருக்கிறேன். 2006–2007 ஆம் ஆண்டில் மாநிலத்தின் பராமரிப்பில் 1,261 கிலோ மீட்டர் மற்றும் NHAI–ன் பராமரிப்பில் 2,993 கிலோ மீட்டர் என மொத்தம் 4,254 கிலோ மீட்டர் தேசிய நெடுஞ்சாலைகள் இருந்தன. மாநில நெடுஞ்சாலைகள் (State Highways) 6,849 கிலோ மீட்டர்; Major District Roads 7,569 கிலோ மீட்டர்; Other District Roads 42,748 கிலோ மீட்டராகும். 2006 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான பட்டியல் முழுவதுமாக என்னிடம் உள்ளது. கடந்த ஆண்டு வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலும், இந்தாண்டு வழங்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பிலும், வகை வாரியான சாலைகளுடைய பட்டியலில் எந்த மாற்றமும் இல்லை. எதிலேயும் ஒரு கிலோ மீட்டர்கூட மாற்றம் இல்லாமல் உள்ளது. ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதி முழுவதுமாகச் செலவிடப்பட்டிருந்தால், மாவட்ட முக்கியச் சாலைகள். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் அகலப்படுத்தப்படும் பணிகள் மாநில நெடுஞ்சாலைகள் தலைப்புகளின்கீழ் வரும். சாலைகளை அகலப்படுத்துகிறார்கள் என்றால், அந்தச் சாலைகளுக்குள்ளாகத்தான் அகலப்படுத்துவார்கள். அதைப்போல, மாவட்ட முக்கியச் சாலைகள் என்றால், அந்தச் சாலைகளுக்குள்ளாகத்தான் அகலப்படுத்துவார்கள். மாவட்ட இதர சாலைகளை அகலப்படுத்தினால், அது வேறு சாலை வகைப்பாட்டில் இடம் பெறாது. ஆகவே, ஏற்கெனவே எந்தத் தலைப்பில் இடம் பெற்றதோ, அதே தலைப்பில்தான் இடம் பெறும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் அவ்வாறுதான் இடம் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, சாலைகளை அகலப்படுத்துவது குறித்து அல்ல; சாலைகளுடைய நீளம் அதே அளவுதான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். ஒரு கிலோ மீட்டர் அளவாவது ஏறியிருக்காதா அல்லது குறைந்திருக்காதா என்றுதான் அவர் கேட்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று வகைப்பாடு உள்ளது. மாநில நெடுஞ்சாலைகள், அது அப்படியேதான் இருக்கும். சேலத்திலிருந்து நாமக்கல்லுக்கு 50 கிலோ மீட்டர் தூரம் என்றால், அது அப்படியேதான் இருக்கும். உதாரணத்திற்காகச் சொன்னேன். அந்தச் சாலையின் அளவு நீளாது. அது எப்படி நீளும்? நாமக்கல்லுக்கு அந்தப் பக்கம் நீளுமா? (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்காகச் சொல்கிறேன். அதைப்போல, சாலைகள் விரிவுபடுத்தப்படுகின்றன. மாநில நெடுஞ்சாலைகளை விரிவுபடுத்துகிறோம். அதைத்தான் அகலப்படுத்தப்பட்டுள்ளது என்று சொல்கிறோம். மாவட்டச் சாலைகளும் அதைப்போலத்தான். சாலைகளை எடுத்துக்கொண்டால், சேலம் முதல் எடப்பாடி

வரையிலான சாலை, மாவட்ட முக்கியச் சாலை. அதனை அகலப்படுத்துகிறோம். அதைத்தான் அகலப்படுத்தப்பட்டது என்று கொடுக்கிறோம். உங்களுடைய ஆட்சியிலும் அப்படித்தான் அகலப்படுத்தப்பட்டது என்று கொடுத்திருக்கிறார்கள். அதுவும் MDR ஆக. இன்றைக்கு பல சட்டமன்ற உறுப்பினர்கள் சாலைகளை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்கின்றீர்கள். ஆகவே, ODR சாலைகளையும் எடுத்து அகலப்படுத்துகின்றோம். ஆகவே, அகலப்படுத்துகின்ற பணி எல்லா ஆட்சியிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஒரு இன்ச் கூட நீளவில்லையா என்று கேட்கிறார். இருக்கின்ற ரோடு எவ்வளவு நீளமோ அவ்வளவுதான் இருக்கும். அதற்குமேல் எப்படி நீளும்? எடப்பாடியிலிருந்து சேலம் வரை அவ்வளவுதான் இருக்கும். அதற்குமேல் எங்கு போக முடியும்? காவிரி ஆறுதான் வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007–ல் தலைவர் கலைஞர் ஆட்சியில் மாநில நெடுஞ்சாலைகளின் தூரம் 6,849 கி.மீ. அதுவே 2010–2011 இல் 10,561 கி.மீ. ஆக சாலைகளினுடைய நீளம் உயர்ந்திருக்கின்றது. அதுவே, Major District Roads 2006–2007 இல் 7,569 கி.மீ. 2010–2011 இல் தலைவர் கலைஞர் ஆட்சியில் 11,315 கி.மீ. அளவிற்கு சாலைகளின் நீளம் அதிகரித்திருக்கின்றது. ஆனால், 2010–2011 இல் மாநில நெடுஞ்சாலைகளின் தூரம் 10,561 கி.மீ. ஆக இருந்த நேரத்தில் தற்போது 11,169 கி.மீ. தான். கடந்த பத்து வருடங்கள் கடந்தும், 10,000 கிலோ மீட்டரிலிருந்து 11,169 கிலோ மீட்டராகத்தான் அதிகரித்திருக்கின்றது. அதுபோல் Major District Roads 2010–2011–ல் 11,315 கிலோ மீட்டரிலிருந்து பத்து வருடங்கள் கடந்து 2020–2021 இல் 11,612 கி.மீ. ஆகத்தான் அதிகரித்திருக்கின்றது. மொத்தமே 900 கி.மீ. தூரம்தான் கடந்த பத்து வருடங்களில் அதிகரித்திருக்கின்றது என்ற புள்ளிவிவரத்தினை இந்தப் பேரவைக்கு நான் சுட்டிக்காட்டுகின்றேன். இது கொள்கை விளக்கக் குறிப்பில் நீங்கள் கொடுத்த கணக்குதான். குறிப்பாக, பத்து வருடங்களாக நீங்கள் கொடுத்த கொள்கை விளக்கக் குறிப்பினை முழுவதுமாக எடுத்துப் படித்துப் பார்த்து ஒவ்வொரு

வருடமும் எந்தெந்த இடங்களில் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்ற புள்ளிவிவரத்தினைத்தான் நான் இந்தச் சபையில் சொல்கிறேன். தலைவர் கலைஞர் ஆட்சியில்தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அந்தத் தலைப்புகளையெல்லாம் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கின்றேன். சாலைகளை அகலப்படுத்துகின்றோம். இப்போது பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்களும் சரி, பொது மக்களும் சரி சாலைகளை அகலப்படுத்த வேண்டும் என்று சொல்கிறீர்கள். சாலைகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. நமது மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள் என மூன்று வகைகளில் இருக்கும். அவற்றை தற்போது விரிவுபடுத்திக்கொண்டிருக்கின்றோம். அவை எவ்வளவு விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். கடந்த காலத்தில் இருந்த சாலைகளின் அகலத்தையும், தற்போது இருக்கின்ற சாலைகளின் அகலத்தையும் பார்க்கும்போது முழுமையாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, பல்வேறு திட்டங்களின் வாயிலாகச் சாலைகளை அகலப்படுத்துவதற்கும், தரத்தினை உயர்த்துவதற்கும் அரசுமூலம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட இதர சாலைகள் வளர்ச்சியடைந்திருந்தால் மாவட்ட முக்கிய சாலைகளின் கி.மீ. நீளம் கூடும். மாவட்ட முக்கிய சாலைகளின் நீளம் அதிகரித்திருந்தால், மாநில நெடுஞ்சாலைகளின் நீளம் கூடும். மாநில நெடுஞ்சாலைகளில் வகை மாற்றம் ஏற்பட்டு வளர்ச்சியடைந்திருந்தால், தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் கூடும். தேசிய நெடுஞ்சாலைகள் வளர்ச்சியடைந்திருந்தால், NHAI திட்டத்தில் அது மாறியிருக்கும். ஆக, ஏதோ ஒரு வகையில் தற்போது ஊராட்சி சாலைகள் வளர்ச்சியடைய வேண்டும், வகைப்படுத்த வேண்டும் என்று சொன்னால், மாவட்ட இதர சாலைகளுக்கு அது மாற்றப்படும்.

வகை மாற்றம் செய்யப்படுவது இந்த அரசில் நடைபெறவில்லை. கடந்த ஆண்டுக்கும், இந்த ஆண்டுக்கும் சாலைகளின் நீளம் என்பது ஒரு கி.மீ. அளவிற்குக்கூட அதிகரிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அடுத்த subject–க்கு நான் செல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு 'Vision 2023' என்ற திட்டத்தினை அறிவித்திருந்தது. அதில் Highways Department–க்கு ரூ.1,33,000 கோடி என்றும், Expressway–க்கு ரூ.40,000 கோடி என்றும், Other Roads–க்கு ரூ.40,000 கோடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் இரண்டே ஆண்டுகள் உள்ள நிலையில், 'Vision 2023' இல் அறிவிக்கப்பட்ட நிதி, நெடுஞ்சாலைத் துறைக்கு முழுவதுமாகப் பெறப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்படுமா அல்லது 'Vision 2023' என்ற திட்டம் அரசால் கைவிடப்படுமா என்ற நிலை இப்பொழுது எழுந்திருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சராக இருந்தபோது இந்த அவையில் 'ஒரு நாட்டில் தொழில் வளம் பெருகவேண்டுமானால், அந்த நாட்டில் போக்குவரத்திற்கான அமைப்பு சரியாக இருக்க வேண்டும்' என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். சாலைகள் என்பன ஆலைகள் முதல் கல்விச் சாலைகள் வரை ஒட்டுமொத்தமாக நம் நாட்டை இணைக்கும் நரம்புகள். அந்தவகையில் சாலைகளின் மேம்பாட்டிற்காக உயர்த்தப்பட்டிருக்கின்ற அந்தத் தரத்தினை இந்த நேரத்தில் நான் பட்டியலிட்டு உங்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன்.

PBMC பராமரிப்புத் திட்டங்களைப் பற்றி எங்களுடைய முன்னாள் அமைச்சர் அன்பிற்குரிய அண்ணன் சட்டமன்ற உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் இங்கு ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து ஒரே ஒரு கேள்வியை மட்டும் இந்த நேரத்தில் எனது ஐயப்பாடாகக் கேட்கிறேன். E–Tender என்று சுட்டிக்காட்டினார்கள். தற்போது கர்நாடகாவில் tender விடுகிறார்கள். எந்த tender என்றாலும் 10 சதவிகிதம், 8 சதவிகிதம், 15 சதவிகிதம் குறைவாகப் போடுகிறார்கள். அது ஓர் ஆரோக்கியமான போட்டி. ஆனால், இந்த PBMC இல் மட்டும் இரண்டு பேர், மூன்று பேர் மட்டும்தான் tender–ல் கலந்துகொள்கிறார்கள். ஒருவர் 0.1 சதவிகிதம், 0.2 சதவிகிதம், 0.3 சதவிகிதம் அல்லது 0.5 சதவிகிதம்தான் குறைவாக

quotation கொடுக்கிறார். இன்னொருவர் 2 சதவிகிதம் கூடுதல் அல்லது 5 சதவிகிதம் கூடுதலாக tender–ல் quotation போடுகிறார். ஒருவர் மட்டும் கொஞ்சம் minus–ல் டெண்டர் போட்டுவிட்டு, இன்னொருவர் மட்டும் 2, 3 சதவிகிதம் கூடுதலாகப் போட்டு, இரண்டு பேர், மூன்று பேர் மட்டுமே அதில் கலந்துகொண்டு, குறிப்பிட்ட 5 நிறுவனங்களுக்கு மட்டுமே அந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கக்கூடிய வகையில் அந்த விதிமுறைகளை. . .(மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தைச் சொல்கின்றார். அதைக் குறிப்பிட்ட நபருக்கெல்லாம் கொடுக்கவே முடியாது. ஒப்பந்தப்புள்ளி கோருபவர்களில் யார் குறைத்துக் கேட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் கொடுக்க முடியும். நீங்கள் இங்கேயிருக்கும்போது வேறு மாதிரி பேசுகிறீர்கள். அங்கே போன பிறகு வேறு மாதிரி பேசுகிறீர்கள். அது வேறு விஷயம். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்தவற்றை வேண்டுமென்றால் நான் கொடுக்கிறேன். 15 சதவிகிதம் நீங்கள் அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள். 210 டெண்டருக்குமேல் single tender–box tender ஆக கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், தற்போது சூழ்நிலைக்குத் தக்கவாறு அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்கள். நாம் என்ன செய்ய முடியும்? ஆகவே, நீங்கள் தனிப்பட்ட ஒருவருக்குக் கிடைக்கவேண்டுமென்றால், ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்கச் சொல்லுங்கள். யார் வேண்டாம் என்கிறார்கள்? யார் வேண்டுமானாலும் போடலாம். திறந்த ஒப்பந்தப்புள்ளி முறைதான். யார் வேண்டுமானாலும் தடையில்லாமல் போடலாம். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் அப்படியில்லை. Tender schedule வாங்கிக்கொண்டுதான் போட முடியும். அந்த நிலையெல்லாம் இப்பொழுது இல்லை. இப்பொழுதெல்லாம் e–tender. யார் வேண்டுமென்றாலும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம். இது வெளிப்படையான ஒப்பந்தம் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கிறேன்.

ஆகவே, ஒருசாராருக்குத்தான் இந்த tender–ஐக் கொடுப்பதைப்போல ஒரு தவறான தோற்றத்தை நீங்கள் உருவாக்கக்

கூடாது. 5 ஆண்டுக் காலங்கள் அந்தப் பணியைச் செய்ய வேண்டும். 5 ஆண்டுக் காலங்கள் செய்யக்கூடியவர்கள்தான் தற்போது tender-ஒப்பந்தப்புள்ளி கோருவார்கள். எல்லோரும் ஒப்பந்தப்புள்ளியைச் சமர்ப்பிக்க முடியாது. அதற்குத் தேவையான நிதி வேண்டும். நிதி ஆதாரம் தேவை. அப்படி நிதி ஆதாரம் இருப்பவர்கள்தான் அந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொள்ள வேண்டும். நீங்கள் இங்கே இருக்கின்றபோதுதான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். இது ஓர் உன்னதமான திட்டம். ஒரு முன்மாதிரியான திட்டம். ஒரு மாவட்டத்தில் இருக்கின்ற, ஒரு கோட்டத்தில் இருக்கின்ற சாலைகளையெல்லாம் எடுத்து, ஒரே ஒப்பந்ததாரர் மூலமாகச் செய்தால் அது சிறப்பாக இருக்கும் என்கின்ற அடிப்படையில்தான் இந்த PBMC திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், நாங்கள் உண்மையாக டெண்டர் வைக்கிறோமே, அதைக் குறை சொல்கிறீர்களே, அதைத்தான் தவறு என்று சொல்கிறேன்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்துக்குதான் பதில் சொல்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. செந்தில் பாலாஜி கொஞ்சம் எண்ணிப் பார்க்க வேண்டும். அடையாளம் கொடுத்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் 1974–ல் இந்த இயக்கத்தில் இணைந்தேன். இன்றுவரை இந்த இயக்கத்திற்கு விசுவாசமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ** எந்தக் கட்சியில் இருந்தாலும், அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருந்தால்தான் அவர்கள் போற்றப்படுவார்கள்; பாராட்டப்படுவார்கள்; மக்களும் அவர்களுக்கு சான்றிதழ் அளிப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ** ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் இன்றைக்கு அதைப் பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட இந்த

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

இயக்கத்தை, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணை இமை காப்பதுபோல காத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்றெல்லாம் இந்த அவையில் பேசி, பதிவு செய்வது என்பது முறையல்ல; அப்படிச் சொல்வது பதிவேட்டில் பதிவு செய்யப்படும் என்று சொன்னால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இதை ஓர் அரசியல் கட்சிக்காக நான் சொல்கின்றேன். அங்கே இருந்தாலும் சரி, இங்கே இருந்தாலும் சரி, இருக்கின்ற வரையில் அந்த இயக்கத்திற்கு விசுவாசமாக இருக்க வேண்டும் என்கிற கோட்பாட்டில்தான் சொன்னேனேயொழிய, (மேசையைத் தட்டும் ஒலி) யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அது நானாக இருந்தாலும் சரி; மற்றவர்களாக இருந்தாலும் சரி; எந்தக் கட்சியில் இருந்தாலும் அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருந்தால், அந்தக் கட்சியும் வளரும்; தொண்டர்களும் ஆதரிப்பார்கள்; மக்களும் ஆதரிப்பார்கள். அந்த அடிப்படையில்தான் பேசினேனேயொழிய, யாரையும் தனிப்பட்ட முறையிலோ அல்லது பெயரிட்டோ நான் குறிப்பிடவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவான கருத்தைத்தான் சொன்னேன். எல்லோருக்குமே பொருந்துகிற மாதிரிதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, பொதுவாகத்தான் சொல்கிறேன்

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

என்கிறார். நானும் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, பொதுவாகத்தான் சொல்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களைப் பொறுத்தவரையில், இரவு, பகல் பாராமல் உழைத்து இந்த வெற்றியை நாங்கள் பெற்றிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பதவியை நாங்கள் பெற்றிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) 45 ஆண்டு காலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே உழைத்த காரணத்தினால் இந்தப் பதவிக்கு வந்திருக்கிறோம். யாருடைய தயவிலும் இல்லை. யாருடைய பின்புலமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு சாதாரணத் தொண்டன், கிராமத்திலே பிறந்து, வளர்ந்து, ஒரு கட்சியில் கிளைச் செயலாளராக உருவாகி, படிப்படியாக உயர்ந்து இந்த நிலைக்கு வந்திருக்கிறேன் என்பது இங்குள்ள பல பேருக்குத் தெரியும்; கிளைச் செயலாளர் பதவியிலிருந்து ஒன்றியப் பெருந்தலைவராகியிருக்கின்றீர்கள்; Chairman ஆகியிருக்கிறீர்கள்; பிறகு M.L.A. ஆகியிருக்கிறீர்கள்; M.P. ஆகியிருக்கிறீர்கள்; பிறகு மந்திரியாகியிருக்கிறீர்கள். ஆனால், முதலமைச்சராக ஆகவேண்டுமென்றால் எந்தக் கட்சியிலும் முடியாது; அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் அது முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) இது எடப்பாடி பழனிசாமிக்கு மட்டுமல்ல; எனக்குப் பின்னாலும் பல பேர் வருவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதே இருக்கையில் அமர்ந்து சொன்னார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) எனக்குப் பின்னாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நூறாண்டு காலம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, எங்களுடைய இயக்கத்தைப் பொறுத்தவரையிலும் இது ஜனநாயக இயக்கம். ** 45 ஆண்டு காலம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்து, படிப்படியாக உயர்ந்து, நாங்கள் இந்தப் பதவிக்கு வந்திருக்கின்றோம். ** ஒரு முறைகூட, யாருடைய சிபாரிசும் இல்லாமல்தான் நான்

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பதவி பெற்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது கட்சியில் இருந்தாலும் சரி அல்லது M.L.A. seat ஆக இருந்தாலும் சரி; M.P. seat ஆக இருந்தாலும் சரி; மந்திரியாக இருந்தாலும் சரி; யாருடைய சிபாரிசும் கிடையாது. இறுதியாக ஒன்றைச் சொல்கின்றேன். ** ஆகவே, உண்மை என்றைக்கும் வெல்லும். உழைப்பு என்றைக்கும் நிலைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு உழைத்து வந்த காரணத்தினாலேதான், 3 ஆண்டுக்காலம் நிறைவுபெற்று தற்போது நான்காவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றேன். ஆகவே, உழைப்பிற்கு என்றைக்கும் உயர்வு கிடைக்கும். அதற்கு நானே உதாரணம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், இது போதும். போதும். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நிறைய விவாதம் செய்தாகிவிட்டது. (குறுக்கீடு) இது போதுமானது. நிறைய விவாதம் செய்தாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** நான் விளக்கம் கேட்டதற்கு, ‘நான் யாரையும் குறிப்பிட்டு அதைச் சொல்லவில்லை, பொதுவாகத்தான் சொன்னேன்’ என்று தெளிவாகச் சொன்னார்கள். நானும் அதையேதான் சொல்கிறேன். நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவான அடிப்படையில்தான் சொன்னேனே தவிர, யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அதற்கு ஏன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இவ்வளவு கோபப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கோபப்படுவதே கிடையாது. ஒரு சாதாரணத் தொண்டனாகிய நான், இந்தளவிற்கு உயர்ந்திருக்கிறேன் என்றால், அதைப்பற்றி அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் பேசினேனேயொழிய, நான் எதற்காக

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

கோபப்பட வேண்டும்? கோபப்பட வேண்டிய அவசியமே எனக்கு இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கட்சியினுடைய தலைவராக இருக்கிறார்கள். அதற்கு முன்னர் துணைத் தலைவராக இருந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) செயல் தலைவராக இருந்திருக்கிறார். (குறுக்கீடு) ஏனென்றால், அருமை நண்பருக்கு நன்றாகத் தெரியும். ஏனெனில், அவரும் இங்கிருந்து அங்கு சென்றவர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பேசுகிறேன். தவறாக இருந்தால் அதை நீக்கிவிடலாம். அதிலொன்றும் தவறில்லை. அவர், தற்போது ஒரு கட்சியின் தலைவராக இருக்கிறார். ஒரு சாதாரணத் தொண்டன் படிப்படியாக உயர்ந்தால் எந்த நிலைக்கு உயர முடியும் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். அவர் இந்த அவைக்கு 1989 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராக வந்தார். நானும் 1989–ல்தான் சட்டமன்ற உறுப்பினரானேன். அதற்குப் பிறகு அவருடைய செல்வாக்கு வேறு, என்னுடைய செல்வாக்கு வேறு. ஒரு சாதாரண கிராமத்திலே பிறந்து வளர்ந்த நான், படிப்படியாக உயர்ந்து இன்றைக்கு முதலமைச்சராக இருக்கின்றேன் என்று சொன்னால், எந்தளவிற்கு உழைத்திருக்கிறேன் என்பதைத்தான் நான் கோடிட்டுக் காட்டினேனேயொழிய வேறொன்றுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் இப்பொழுதும் இந்த அவையிலே சொல்கின்றேன். கடினப்பட்டு உழைத்துத்தான் இந்தப் பதவிக்கு வந்திருக்கிறேன் என்பதைத் தங்கள் வாயிலாக அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் பெரும்பான்மை உறுப்பினர்கள், அதாவது 122 சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து, 'அவர்தான்' தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக வர வேண்டும் என்று அனைவரும் கையொப்பமிட்டுத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் பதவியைப் பெற்றார்களேயொழிய, ஒரு minority Government–ஐ வைத்துக்கொண்டு, கூட்டணியில் இணைந்து, அங்கே கெஞ்சியவர்கள் அவர்கள்தானே தவிர, நாங்களல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும் இந்த விவாதம். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வார்த்தையைச் சொன்னதற்காக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொல்லிவிட்டார்கள். நானும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆனால், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சரி, அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சரி, நான் சொல்வதற்கேகூட சங்கடப்படுகின்றேன். இந்த சட்டமன்றப் பதிவேட்டின் அடிப்படையில்தான் சொல்கின்றேன். ** என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 9 ஆண்டுக் காலமாக அமைச்சராக இருக்கிறேன். எந்த இடத்திலும், இந்த அவையிலே யாரையும் தவறாகப் பேசியதே கிடையாது. இது அனைவருக்கும் நன்றாகத் தெரியும். வேண்டுமானால் அவைக் குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். இப்பொழுதும் யாரையும் மனம் நோகும்படி பேசுகின்ற நிலையிலே நான் இல்லை. உண்மையாகவே நான் அனைவரையும் மதிக்கக்கூடியவன். இந்தப் பக்கத்தில் உள்ளவர்களானாலும் சரி, அந்தப் பக்கத்தில் உள்ளவர்களானாலும் சரி, அனைவருமே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். மக்களிடையே செல்வாக்கு பெற்றிருப்பதால்தான் வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினராகவோ, நாடாளுமன்ற உறுப்பினராகவோ, அமைச்சராகவோ ஆகிறார்கள். அந்த நிலையில்தான் நான் சொன்னேனேயொழிய, வேறொன்றுமில்லை. ** (குறுக்கீடு)

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதோடு போதும். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி அவர்கள் துறை குறித்து பேசிய கருத்துகளும், அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் பேசிய துறை குறித்த கருத்துகள் மட்டுமே அவைக் குறிப்பில் பதிவு செய்யப்பட வேண்டும். அதற்குப் பின்னர் நடந்த வாதங்கள், பிரதிவாதங்கள் முழுவதையுமே அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்தாக இருக்கிறது. இதற்கு மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 2–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. நிறைய விவாதம் நடந்தது. ஆகவே, அது அவைக் குறிப்பில் இருப்பது சரியாக இருக்காது என்ற காரணத்தினால் (குறுக்கீடு) இரு பக்கமும் நடந்த தேவையில்லாத அந்த விவாதத்தை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது எங்கே ஆரம்பித்தது என்று கேட்டால், **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதுதான் இப்போது (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் மற்றும் கருத்துகள் மட்டும்தான் பதிவு செய்யப்பட வேண்டும். மற்றபடி நடந்த வாதங்கள், பிரதிவாதங்கள். . .

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2020 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக நடந்த விவாதத்தை, (குறுக்கீடு) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து யார் பேசினாலும், இதுகுறித்து யார் பேசியிருந்தாலும், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையில்லாமல் இந்தப் பக்கம் அமைச்சர்கள் பேசியது மற்றும் அந்தப் பக்கம் எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர் பேசியது அனைத்தும், அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) இல்லை, இல்லை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் பேசிய அத்தனையையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். துறை சம்பந்தப்பட்டது மட்டும் அவைக் குறிப்பில் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் மானியக் கோரிக்கையிலே பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NHAI திட்டத்தின்கீழ் தமிழக அரசுக்கு மத்திய அரசு வழங்கியிருக்கக்கூடிய திட்டங்களில் கடந்த ஆண்டு ரூபாய் 2,000 கோடி மத்திய அரசுக்கு நிதி கேட்டு கோரிக்கை வைக்கப்பட்டது. இந்த ஆண்டு அது ரூ.1,000 கோடியாகக் குறைந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, மத்திய அரசோடு இணக்கமாக இருக்கின்ற ஆட்சி என்று சொல்கின்றீர்கள். ரூ.1,000 கோடி கேட்கப்பட்டதில் 200 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு NHAI திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்திருக்கின்றது. மீதி இருக்கக்கூடிய நிதிகளை தமிழக அரசு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குண்டான நிதிகளை முழுவதுமாகப் பெற வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி–திருவண்ணாமலை சாலை மிகவும் மோசமாக உள்ளது. இந்தச் சாலையைச் செப்பனிட்டு, பராமரித்து, புதுப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, களியக்காவிளை முதல் திருவனந்தபுரம் செல்லும் சாலை பராமரிப்பில்லாமல் பழுதடைந்துள்ளது. கேரள மாநில எல்லைக்குள் இருக்கக்கூடிய பகுதி முழுவதிலும் கேரள அரசின் ஒத்துழைப்புடன் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆனால், களியக்காவிளை முதல் திருவனந்தபுரம் செல்லும் சாலையில் தமிழகத்தினுடைய எல்லைப் பகுதியில் ஒரு வேலைகூட நடைபெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறேன்.

அதேபோல, கரூரிலே, 2013 ஆம் ஆண்டு சுற்றுவட்டச் சாலைக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கு அரசாணையும் வெளியிடப்பட்டு தனி தாசில்தார்கள் நியமிக்கப்பட்டு, 77 கோடி ரூபாய் நிதியும் வழங்கப்பட்டது. இன்று வரை எந்தவித முன்னேற்றமும் இல்லை. நிலம் எடுக்கக்கூடிய பணிகள் உட்பட எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் அந்தப் பணி முழுவதுமாக நிலுவையில் இருக்கின்றது. அதேபோல, கரூர், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகர சுற்றுவட்ட சாலையைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே, அந்தச் சாலையின் நேர்பாட்டினை மாற்றியமைக்க வேண்டுமென்று மக்களிடமிருந்து கோரிக்கை வந்த காரணத்தால்தான் மாற்றியமைக்கப்பட்டது. முதலிலே அரசாணை எண் 164–ன்படி நேர்பாட்டில் கிட்டத்தட்ட 43.149 கிலோ மீட்டர் நீளச் சாலையாக இருந்தது. அதேபோல, அரசாணை எண் 7–ன்படி அது 30.968 கிலோ மீட்டராகக் குறைக்கப்பட்டது. ஆகவே, ஏற்கெனவே கரூர் நகரத்தில் போக்குவரத்து நெரிசல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சாலை முதலில் நேர்பாடு செய்யப்பட்டது. பிறகு என்ன நோக்கத்திற்காக எடுக்கப்பட்டதோ போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டுமென்கிற அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக அந்தச் சாலையினுடைய நீளம் குறைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, அரசாணை எண் 164–ன்படி முதன்முதலில் நேர்பாடு எடுக்கப்பட்டபோது இதற்காக 402 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை இருந்தது. இது அத்தனையுமே விவசாய பூமியாக, வயல் பகுதியாக இருக்கின்ற பகுதி. இரண்டாவது முறை நேர்பாடு எடுத்த பகுதி ஒரு வறண்ட பகுதியாக இருக்கின்றது. ஆகவே, இது ஒரு பிரச்சினை.

பிற்பகல் 2–25

அதுமட்டுமல்லாமல், இரண்டாவது முறையாக அரசாணை எண் 7–ன்படி நேர்பாட்டை எடுக்கின்றபோது கிட்டத்தட்ட 341.93 ஏக்கர் நிலம்தான் கையகப்படுத்தப்பட வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட 61 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவது மீதமாகிறது. அதோடு, ஏற்கெனவே அரசாணை எண் 164–ன்படி கரூர் நகரத்திலே

சுற்றுவட்டச் சாலை அமைப்பதற்கு 330 கோடி ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இப்போது அதனுடைய நீளம் குறைக்கப்பட்ட காரணத்தினால் 215 கோடி ரூபாயிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். ஆகவே, 115 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் தவிர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், இந்தச் சுற்றுவட்டச் சாலை அமைக்கின்ற நேர்பாடு மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், தற்போது நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி, உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: பொதுப் பணித் துறை குறித்து பேசவே ஆரம்பிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமில்லை. இப்போது மணி என்னவென்று பாருங்கள். நீங்கள் உரையாற்ற ஆரம்பித்து முக்கால் மணி நேரம் ஆகிறது.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுவட்டச் சாலை என்பது நகரினுடைய விரிவாக்கத்திற்காக அமைக்கப்படுகின்ற சாலையாகும். ஆக, ஏற்கெனவே அரசு அதிகாரிகள், உங்கள் தலைமையில் இருக்கக்கூடிய குழுக்கள் ஒப்புதல் கொடுத்துத்தான் அதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, நிதியும் வழங்கப்பட்டு, நிலமெடுக்கின்ற பணிகள் தொடங்கப்பட்டன. அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டு, நேர்பாடு செய்யப்பட்ட கிலோ மீட்டரைக் குறைத்து, அதனால் நிதி சேமிப்பு ஏற்படுகிறது என்ற கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். எனவே, அரசாணை வெளியிடப்பட்டிருக்கின்ற அடிப்படையில் முழுவதுமாக அந்தச் சாலையை உடனடியாக அமைத்துத்தர வேண்டும். அடுத்த கருத்துக்கு நான் சென்றுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகத் தெரிவித்திருக்கிறேன். முதலில் நேர்பாடு செய்த பகுதி வயல் பகுதி. விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுவிடுவார்கள். இரண்டாவது நேர்பாடு செய்தது மேடான பகுதி.

அதுமட்டுமல்லாமல், நகரத்தில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்குத்தான் இந்தப் புறவழிச் சாலையை அமைக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதனடிப்படையில்தான், நீளத்தைக் குறைத்து நகரத்திற்குள் செல்கின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு உரிய முறையிலே நேர்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பள்ளி–மேலப்பாளையம் இடையே அமராவதி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட்டு ஐந்தாண்டுகளாக அந்தப் பாலம் அப்படியே நடு ஆற்றில் நிற்கிறது. இரண்டு பக்கமும் இணைப்புச் சாலைகள் அமைக்காமல் ஐந்தாண்டுகளாக அந்தச் சாலைப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன. திருமணிலையூர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கக்கூடிய பகுதியின் முன்பகுதியில் 15 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு பாலம் அமைப்பதற்கான பணிகள் நடைபெறுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, அதுவும் 7 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்றது. கரூருக்கு புதிய பேருந்து நிலையம் அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டு, அந்தப் பணிகளை இரண்டு ஆண்டுகளில் முடிக்க வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவிட்டு, இப்போது ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை கரூர் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்குண்டான பணிகளை அரசு தொடங்கவில்லை. அதேபோல, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் நகருக்கு புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க நிலத்தைத் தானமாக வழங்கியவர் தற்போது நிலத்தை திரும்ப தனக்கே வழங்க வேண்டுமென நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கிறார். இவ்வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது. இந்நிலம் தொடர்பாக மேலும் பல வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதால், பேருந்து நிலையம் அமைக்கும் பணி தாமதப்படுகிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். தீர்ப்பு வந்த பிறகு அந்தப் பணி தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Without water, life is shorter' என்பார்கள். 'நீர்இன்று அமையாது உலகு' என்ற வரிகளுக்கேற்ப குடிநீருக்கு மற்றும் விவசாயத்திற்கு என நீர்த் தேவையை நாம் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். ஒரு நல்ல அரசிற்கு உதாரணம் மழைக் காலங்களில் வரும் உபரி நீரைச் சேமிக்கத் தேவையான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குவதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய ஆட்சி தி.மு.க. ஆட்சி; தலைவர் கலைஞர் ஆட்சி. (குறுக்கீடுகள்) உதாரணம் காவேரி ஆற்றின் குறுக்கே மாயனூர் பகுதியில் ஒரு டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கிவைக்கும் அளவிற்கு கதவணை கட்டிய ஆட்சி, தலைவர் கலைஞர் ஆட்சி. இந்தக் கதவணை கட்டக்கூடிய திட்டத்தை பலமுறை துணை முதலமைச்சராக கரூருக்கு வருகை தந்து, அந்தத் திட்டப் பணிகளை விரைவுபடுத்தி, மக்களுடைய பயன்பாட்டிற்கு வழங்கியவர் எங்களுடைய தலைவர் அன்பிற்குரிய மாண்புமிகு தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கதவணைதான் இப்போது,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா கருத்துகளையும் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அவர்கள் எடுத்த நடவடிக்கைகளையெல்லாம் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தலைமைப் பண்பினுடைய மன்னிப்பு என்கின்ற பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார்கள். அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. 'கலைஞர் ஆட்சி' என்று சொல்கிறீர்கள். இங்கே இருக்கிற உறுப்பினர்களெல்லாம் சொல்லலாம். ** (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் இருக்கையிலிருந்து எழுந்து நின்றனர்.)

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

யார் வேண்டுமானாலும் பேசட்டும். நான் இரண்டு தலைமுறையாக அண்ணா தி.மு.க.–வில் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இரண்டு தலைமுறையாக அண்ணா தி.மு.க.–வில் இருக்கிறேன். நான் அண்ணா தி.மு.க. அரசைப் பற்றி பேசுவேன். நீங்கள் இந்தச் சட்டசபையில் சொல்லியிருப்பது, 'உயிருள்ளவரை இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே அம்மா அவர்களின் காலடியில் இருப்பேன்' என்று இந்தச் சபையிலே பேசிவிட்டு, இப்போது ** பிறகு நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

பிற்பகல் 2–30

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த விஷயம் பிரச்சினையாகப் பேசப்பட்டு விவாதங்கள் நடைபெற்று, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் எடுத்துச்சொல்லி, அதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லி, ** முடிக்கப்பட்டது. மீண்டும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார். அதுவும் ** அவர் இதையெல்லாம் பேசத் தொடங்கியிருக்கிறார். இவ்வாறு பேசினால் நாங்களும் அதற்கு பதில் சொல்லி பேச வேண்டிய அவசியம் ஏற்படும். எனவே அது முறையா, அது அவைக் குறிப்பில் இடம்பெறுவது நியாயமா என்பதை நீங்கள்தான் முடிவு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவராக எதையும் பேசவில்லை. அவர் பேசியதைத்தான் குறிப்பிட்டிருக்கிறார். வேறு ஒன்றுமே பேசவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதெல்லாம் நீங்கள் உஷாராக இருக்க

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

வேண்டும் என்பதற்காகத்தான் அவர் பேசிக்கொண்டிருக்கிறார். இதில் வேறொன்றும் கிடையாது. இப்பொழுது அங்கே பேசிக்கொண்டிருக்கிறார், மறுபடியும் இங்கே வந்து பேசினால் என்ன செய்வது என்றுதான்; வேறு ஒன்றும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இதில் எந்தவொரு தவறான கருத்தையும் அவர் சொல்லவில்லை. ஏற்கெனவே அவையில் பேசப்பட்டு, பதிவு செய்யப்பட்டிருக்கின்ற ஒரு செய்தியை அவையில் தெரிவித்திருக்கிறார். வேறொன்றும் இல்லை. பலபேர் திராவிட முன்னேற்றக் கழகம் வளர்வதற்காகப் பாடுபட்டார்கள். அவர்கள் அந்தப் பெயரை உச்சரிக்கலாம். பலபேர் அந்த இயக்கத்திலிருந்து வெற்றிபெற்று அமர்ந்திருக்கிறார்கள். அவர்கள் சொல்லலாம், இவர் சொல்கிறாரே என்ற ஒரு அர்த்தத்தின் அடிப்படையில்தான் அதைச் சொன்னாரேயொழிய, வேறொன்றும் கிடையாது. அவர் பேசியதை அமைச்சர் சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு அமைச்சர் தங்கமணி அவர்களும், மாண்புமிகு ஜெயக்குமார் அவர்களும் அவர் பேசியதை எடுத்துக் காட்டினார்கள். அதையும் சேர்த்து நீங்கள் நீக்கிவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் இவ்வளவு நேரம் எழுந்திருக்கவில்லையே என்று பார்த்தேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து ** என்றும் ** இருக்கிறது என்று கேட்கிறார். ஆகையினால் அவர் பேசியதையும், ** என்று உச்சரித்ததையும் எடுத்துவிடுவதுதான் சிறந்தது. இன்னும் சொல்லப்போனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதற்காகவே, ** என்று சொன்ன பிறகு அந்த magnanimity–க்குப் பிறகு, மறுபடியும் எழுப்புவது சிறந்தது அல்ல. அப்படியென்றால் வேறமாதிரி போய்விடும். அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** சொன்ன ** என்ற வார்த்தையை ** என்று மாற்றிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொன்னது உட்பட அது

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நீக்கப்படுகிறது. அவ்வளவுதான், விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி, பேசுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரை ** இருக்கக் கூடாது என்று முடிவெடுத்து (குறுக்கீடு) மாண்புமிகு தளபதி அவர்கள்தான் தமிழகத்தை காக்கக்கூடிய முதல்வராக, தமிழக மக்களை வழிநடத்தக்கூடிய தலைவராக, அவருடைய தலைமையை ஏற்றுக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் என்னை இணைத்துக்கொண்டு இன்று உள்மனதோடு கழகப் பணியாற்றி வருகின்றேன். என்னை இணைத்துக்கொண்டதற்கு அங்கீகாரமாக அரவக்குறிச்சி தொகுதி மக்களிடத்திலே கழகத் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள் சட்டமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வாய்ப்பு வழங்கி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஓர் இயக்கத்தை நீங்கள் தரக்குறைவாகப் பேச வேண்டாம். ஆகவே அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரவக்குறிச்சி தொகுதி மக்கள் கழகத் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களுடைய தலைமையை ஏற்று, என்னை இணைத்துக் கொண்டதற்கு முழு அங்கீகாரத்தை வழங்கி, அங்கே உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்து, மீண்டும் என்னை சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய சூழ்நிலையில் அரவக்குறிச்சி தொகுதி மக்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டார்கள், நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்குப் பின்னால் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. மூன்று ஒன்றியங்களிலும் ஏன் தோல்வியடைந்தார்கள்? கரூர் மாவட்டத்தில் தி.மு.க. மூன்று ஒன்றியங்களிலும் 100 சதவிகிதம் ஏன் தோல்வியடைந்தது?

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அன்றைய தினம் அவருக்கு செல்வாக்கு இருந்திருந்தால் உள்ளாட்சித் தேர்தலிலும் ஜெயித்திருக்கலாமே! உள்ளாட்சித் தேர்தலில் 100 சதவிகிதம் தோல்வியடைந்த மாவட்டம், கரூர் மாவட்டம்தானே! அப்பொழுது செல்வாக்கு எங்கே போய்விட்டது? அன்றைய தினம் ஏற்றுக்கொண்ட அரவக்குறிச்சி மக்கள் உள்ளாட்சித் தேர்தலில் ஏற்றுக்கொள்ளவில்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னால், பதில் சொல்ல வேண்டும். உள்ளாட்சித் தேர்தலில் பரமத்தி ஒன்றியத்தில் மாவட்ட திட்ட இயக்குநர் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகின்ற இடத்தில் பேசிய video, audio வெளியிடப்பட்டது. 8 ஊராட்சி ஒன்றியங்களில் 5 ஊராட்சி ஒன்றியங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, video வெளியிட்டதை edit செய்து வெளியிடுவதில் அவர் வல்லவர். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னர் அந்த அதிகாரி என்ன சொன்னார் என்பதையும் அவர் முழுமையாகச் சொல்ல வேண்டும். என்னிடத்தில் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 362 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றவரை எங்களுடைய வேட்பாளரின் வாக்குகளை தி.மு.க.–வின் வேட்பாளருக்கும், தி.மு.க. வேட்பாளரின் வாக்குகளை அண்ணா தி.மு.க. வேட்பாளருக்கும் மாற்றியமைத்து 42 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றதாக 7 மணிக்கு அறிவிக்கிறார்கள். நான் கேட்பது என்னவெனில், 3 மணிக்கு அவர் தோற்றுப்போய்விட்டதாகச் சொல்லி, வெற்றி பெற்றவருக்கு கை கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார். அதற்குப் பிறகு, அங்கிருந்த ஓர் அதிகாரி, phone செய்து வரவழைத்து, அந்த வாக்கு வித்தியாசத்தைச் சொல்லி, வெற்றி பெற்றதாகச் சொன்னார்கள். நான் கேட்ட ஒரேயொரு கேள்வி என்னவெனில், அந்த ஒரு வாக்குச்சாவடியில் மட்டும் நீங்கள் மறுவாக்குப் பதிவு நடத்த ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதுதான். அவ்வாறு நான் சொன்னபோது, இவர்கள் ஏன் மறுவாக்குப் பதிவு நடத்திட மறுத்தார்கள் என்பதற்கான விளக்கத்தை மட்டும் அவர் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 2–35

அதேபோன்று, பாராளுமன்றத் தேர்தலில் 77,000 வாக்குகள் வித்தியாசத்தில் அரவக்குறிச்சியில் வெற்றி பெற்றதை நான் இல்லையென்று சொல்லவில்லை. அதற்குப் பிறகு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 40,000 வாக்குகள் எங்கே போய்விட்டன? 37,000 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அதற்குப் பிறகு, உள்ளாட்சித் தேர்தலில் 100 சதவிகித வெற்றியை நாங்கள் பெற்றிருக்கிறோம். அவர் தான் போயிருக்கின்ற தலைமையைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். 25,000 பேருக்கு 3 சென்ட் நிலம் கொடுப்பதாக முதலில் அறிவித்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு, அவருடைய கழகத்தினுடைய தலைவர் கரூரில் பிரச்சார மேடையிலே பேசுகின்றபோது, “திரு. செந்தில் பாலாஜி அவர்கள், சொந்த செலவில் 25,000 பேருக்கு 3 சென்ட் நிலம் கொடுப்பார்” என்று பிரச்சாரம் செய்தார். அதற்குப் பிறகு, “25,000 பேருக்கு 3 சென்ட் நிலம் மட்டுமல்ல, கான்கிரீட் வீடும் கட்டித் தரப்படும்” என்று சொன்னார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை, காலையில் வாக்குச் சாவடிக்கு யாருமே வாக்களிக்க வரவில்லை. (குறுக்கீடு) சொல்ல வேண்டும். (குறுக்கீடு) சொல்ல வேண்டும் சார். (குறுக்கீடு) வாக்குச்சாவடிக்கு யாருமே வாக்களிக்க வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முடியுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: ஏனென்று சொன்னால், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முடியுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் **

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முடியுங்கள்.

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: உண்மைக்கு மாறான வாக்குறுதிகளைக் கொடுத்து, வெற்றி பெற்றுவிட்டு, (குறுக்கீடு) ஏதோ . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முடியுங்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: அரவக்குறிச்சி மக்கள் தனக்கு அங்கீகாரம் அளித்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், இதே அவையிலும் கரூரில் நடைபெற்ற கூட்டத்திலும் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், கொஞ்சம் முடியுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: கரூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், "இந்த உடலில் உயிரும், உதிரமும் உள்ள வரை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இந்த இயக்கத்திற்கும் விசுவாசமாக இருப்பேன்" என்று ஆயிரம் முறை சொல்லியிருக்கிறார். பிறகு, "இந்த உடலில் உயிரும், உதிரமும் உள்ள வரை டி.டி.வி.–க்கு விசுவாசமாக இருப்பேன்" என்று சொன்னார். அதற்குப் பிறகு, "இந்த உடலில் உயிரும், உதிரமும் உள்ள வரை மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு விசுவாசமாக இருப்பேன்" என்று சொன்னார். இப்போது புதிதாக, "இந்த உடலில் உயிரும், உதிரமும் உள்ள வரை உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு விசுவாசமாக இருப்பேன்" என்று சொல்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் சொல்கிறேன், (குறுக்கீடு) அடுத்ததாக, (குறுக்கீடு) ரஜினி கட்சி ஆரம்பித்தார் என்று வைத்துக்கொள்ளுங்கள், "இந்த உடலில் உயிரும், உதிரமும் உள்ள வரை ரஜினிக்கு விசுவாசமாக இருப்பேன்" என்று சொல்வாரா? (குறுக்கீடு) யார் யாருக்கெல்லாம் இந்த உயிரையும், உதிரத்தையும் கொடுக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முடியுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: எத்தனை பேருக்குக் கொடுப்பார் அவர்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், முடியுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: தி.மு.க.–விற்கு வருவதற்கு முதல் நாள், அரவக்குறிச்சியில், டி.டி.வி. அவர்களை தமிழகத்தின் முதலமைச்சராக ஆக்காமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு, (குறுக்கீடு) அடுத்தநாளே தி.மு.க.–வின் கூடாரத்திற்குச் சென்றவர்தான் இந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்பதை. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாய்ப்புத் தருகிறேன், இருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: ஆணித்தரமாக இந்த சபையிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் (குறுக்கீடு) அருள்கூர்ந்து உட்காருங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் இன்னொரு உறுப்பினர்மீது குற்றச்சாட்டு சொல்ல வேண்டுமென்றால், அதற்குரிய ஆதாரத்தை தங்களிடத்தில் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு பதில் சொல்வதற்கு முன்பு, அந்த சட்டமன்ற உறுப்பினருக்கும் அந்த ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு, ‘இந்தமாதிரி உங்கள்மீது குற்றச்சாட்டு சொல்கிறார், அவர் எழுப்புகிறார் நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்’ என்று கேட்டுவிட்டு, பிறகுதான் பேச வேண்டும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குற்றச்சாட்டுகளை சரமாரியாக அவர்மீது அடுக்கி சொல்லியிருக்கிறார். எனவே, ஒன்று, அவர் அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும், அதற்கு தாங்கள் அனுமதிக்கிறீர்களா என்று கூறுங்கள். இல்லையெனில், அவர்மீது ஒரு Privilege motion கொண்டு வர வேண்டியிருக்கும் அல்லது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிய அத்தனை பேச்சுகளையும் தாங்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அவையில் நேரடியாக ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டுகளைச் சமர்ப்பிக்கக் கூடாது என்பது தங்களுக்குத் தெரியும்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இன்றைக்குக் காலையிலே அவை தொடங்குவதற்கு முன்பாகவே (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். இன்றைக்கு பட்டியலைப் பார்த்து, அவரே கொண்டுவந்து சில விவரங்களை என்னிடத்திலே காட்டினார். அதை நான் பார்த்தேன். மேலெழுந்தவாரியாக, ஏதாவது அவையிலே தெரிவிப்பதாக இருந்தால் நீங்கள் சொல்லலாம். அவர் பேசும்போது உங்களைக் குறிப்பிட்டு ஏதாவது இருக்குமானால் அதில் மேலெழுந்தவாரியாக நீங்கள் சொல்லலாம் என்று நான் சொல்லியிருந்தேன். அந்த அடிப்படையிலே அமைச்சர் சொல்லியிருக்கிறார். அந்த அளவோடு அதை நான் நிறுத்திக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: சரி, உங்களிடத்திலே ஆதாரத்தைக் காட்டிவிட்டுப் பேசுவதாக நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் சொல்வதை நாங்கள் ஓரளவிற்கு ஏற்றுக்கொள்கிறோம். அதை நாங்கள் மறுக்கவில்லை. ** (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ** அதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறதா? சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அமைச்சர் சொல்லிய அந்த வார்த்தை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்)

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, இல்லை. அமைச்சர் பேசிய பேச்சை நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அமைச்சர் என்னிடம் காட்டிவிட்டுப் பேசியதை மட்டும் அவைக் குறிப்பில் ஏற்றுக்கொள்கிறேன். மற்றபடி சொன்ன அந்தக் குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, இல்லை. எங்கள் உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி பேசிய பேச்சிலே தவறு இருக்கிறதென்று சொல்லி, உடனே அவைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள். ஏற்றுக்கொண்டோம். அத்தோடு அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. அதற்குப் பதில் சொல்லக்கூடிய வகையில் தேவையற்ற சில பிரச்சினைகளை மீண்டும் கிளப்பியிருக்கிறார்.

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அதைத்தான் சொன்னேன். என்னிடம் காட்டிய ஆதாரங்களை மட்டும் நான் அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்கிறேன். மற்றவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: அதாவது, ஆதாரம் உங்களிடம் கொண்டு வந்து கொடுத்தார். அந்த ஆதாரங்களை, எந்த உறுப்பினர்மீது குற்றச்சாட்டுகளைச் சாட்டுகிறாரோ அந்த உறுப்பினரிடம் நீங்கள் தெரிவிக்க வேண்டும். 'இதுமாதிரி உங்களைச் சொல்கிறார், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்' என்று நீங்கள் அவருக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால், ஆதாரங்களை இந்த அவையின்முன் தாங்கள் வைக்க வேண்டும். காரணம், the House is entitled to know what has been given to you. It is an open document.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. அமைச்சர் காட்டிய ஆதாரங்களில் திருப்தியடைந்த காரணத்தினால் இந்த அவையிலே அவர் பேசினால் நீங்கள் அதுகுறித்து மேலெழுந்தவாரியாக பேசலாம் என்ற விவரத்தைத்தான் நான் சொன்னேனேயொழிய (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார். அதைத்தான் நீக்கிவிட்டார்களே! எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். அதையெல்லாம் நீக்கிவிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் சில குறிப்புகளைச் சொன்னார்கள். அதை நான் திரும்பவும் சொன்னால் பதிவாகும். ஆக, சில செய்திகளைச் சொன்னார். 'இதையெல்லாம் நிரூபிக்க முடியுமா' என்று கேட்டார். அவற்றையெல்லாம் சட்டப் பேரவைத் தலைவர் நீக்கிவிட்டார். மேலெழுந்தவாரியாக சொன்ன கருத்துகள் மட்டும்தான் இருக்குமேயொழிய மற்ற எதுவும் கிடையாது. வேறு ஒன்றும் இல்லை. அவர் என்ன சொன்னார், 'இங்கு இருக்கும்போது இங்கே

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

விசுவாசமாக இருந்தார்; அங்கே போன பிறகு அங்கு விசுவாசமாக இருக்கிறார். ஆகையால் நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள்' என்று எச்சரிக்கை மணி அடிக்கிறார். வேறு ஒன்றும் கிடையாது. வேறு எதையுமே சொல்லவில்லை. வேறு எந்தத் தவறான கருத்தையும் அமைச்சர் சொல்லவில்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீண்ட கால அனுபவம் கொண்டவர். ஒரே கட்சியில் இருந்து பாரம்பரியமாக அந்தக் கட்சிக்கு உழைத்தவர். அந்த எண்ணத்தின் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவுபடுத்துவதற்காக இந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டு என்னிடத்திலே சொன்னார். அதனால் நான் அனுமதித்திருக்கிறேன். மற்றவற்றை எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். அவற்றை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இப்போது, வேறு ஏதாவது இருந்தால், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'இங்கு இருந்தவர், அங்கே போய்விட்டார், இங்கே இப்படி பேசினார், அங்கே அப்படி பேசினார்' என்று இதுமாதிரி பேசினால் யார் உங்களை என்ன சொல்வார்கள்? இது திராவிட போக்குவரத்துக் கழகம் என்று விட்டுவிடுவார். ஆகையால், அவர் சொன்னது மிகவும் மோசமான statement. That is why we are angry.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, அது ஒன்றுமில்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார். அது இருப்பதற்கும் அல்லது இல்லாமல் இருப்பதற்கும் நீங்கள் முடிவு செய்யுங்கள். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆதாரம் என்ன என்று சொன்னால், பரமத்தி காவல் நிலையத்தில் அன்றையதினம் தி.மு.க.–வினர் மீது வழக்காகப் பதிவு செய்யப்பட்டிருப்பதன் நகல்தான் ஆதாரமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, இருக்கலாமா, வேண்டாமா என்பதை நீங்கள் முடிவு செய்யுங்கள். எந்த அடிப்படையில் பேசினீர்கள் என்று சொன்னீர்களே, அதற்காக நான் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இதோடு இந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், 'ஆதாரம், ஆதாரம்' என்று கேட்டார். அவர் இந்த அவையிலே பேசியதே அவைக் குறிப்பிலே இருக்கிறது. இதெல்லாம் ஆதாரம்தான். இதைவிட எந்த ஆதாரமும் தேவையில்லை. அதைக்கூட வேண்டாம் என்று சொன்னார்கள். அதை நீக்கிவிட்டீர்கள். ஆகவே, இந்த அவையில் பேசிய அதே உறுப்பினர், அவர் பேசியதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? அவர் பேசியது அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிறது. அது என்னென்ன செய்தி என்று மாண்புமிகு அமைச்சர்களெல்லாம் சொன்னார்கள். அதைக்கூட நீங்கள் வேண்டாம் என்று சொன்னீர்கள். அதைக்கூட, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் பெருந்தன்மையாக எடுத்துவிட்டார்கள். நீங்கள் ஆதாரம் என்று சொன்னதற்காக நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இது இப்போது நீக்கப்பட்டுவிட்டது.

பிற்பகல் 2–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீக்கப்பட்டுவிட்டது. ஆனால், ஆதாரம் என்று சொல்கின்றபோது, இந்த அவையில் பேசப்பட்டது ஆதாரம்தான். அவைக் குறிப்பிலே இருக்கின்றது. அவைக் குறிப்பிலே இருந்தவற்றை சொல்கின்றபோது, அவர்கள் கோபப்பட்டார்கள். அவைக் குறிப்பில் இடம்பெற்ற அந்தக் கருத்தைக்கூட, (குறுக்கீடு). இப்போது நீக்கிவிட்டார்களே! நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதால் அதையும் நீக்கிவிட்டார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதை நீக்கிவிட்டேன். அது நீக்கியாகிவிட்டது. நீங்கள் திரும்பவும் பதிவு செய்யாதீர்கள். அதை நீக்கிவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், ஆதாரம் இருந்தால் பதிவு செய்துகொள்ளலாம் என்று சொல்கிறார். ஆதாரத்தோடுதான் இங்கு பேசினார்கள். இந்த அவையிலேயே,

இந்த side–ல் இருக்கும்போது, என்னென்னவெல்லாம் பேசினார் என்பது அவைக் குறிப்பிலே இருக்கின்றது. அதை யாராலும் நீக்க முடியாது. பல ஆண்டுக்காலம் அப்படியேதான் இருக்கும். அந்தச் செய்தியைத்தான் சொன்னார்கள். அந்தத் தரப்பிலிருந்து எதிர்ப்பு வந்த காரணத்தினாலே அதைக்கூட மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் நீக்கிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது நீக்கப்பட்டுவிட்டது.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: இருந்தாலும் நீக்கியிருக்கக் கூடாது. ஏனென்றால், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வதைப்போல, ஆதாரத்தோடு பேசிக் கொண்டிருக்கும்போது நீக்கக் கூடாது என்று சொன்னார். அதை ஆதாரத்தோடுதான் இங்கு பேசினார்கள். ஏனென்றால், அவைக் குறிப்பிலே இருக்கின்றது அல்லவா! அதற்குமேல் என்ன ஆதாரம் வேண்டும்? வேறு எங்கேயாவது பேசியிருந்தால்கூட ஆதாரம் கிடையாது. இந்த அவையிலே பேசப்பட்ட கருத்து. அந்தக் கருத்தைத்தான் சொன்னார்கள். அதைக்கூட, உங்களுடைய மனம் புண்படக் கூடாது என்பதற்காகத்தான், அதைக்கூட அங்கே எதிர் வரிசையிலே இருக்கின்ற உறுப்பினர்களின் கருத்திற்கிணங்க மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு, ஏற்கெனவே இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசப்பட்ட குறிப்புகள் மட்டும் இருந்தால் போதும், மற்றவற்றை எல்லாம் நீக்கலாம் என்று சொன்னார்கள். அதையும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்று, அதையும் நீக்கியிருக்கின்றார்கள். மேலோட்டமாகத்தான் பேசினார்கள். வேறு ஒன்றும் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் மாண்புமிகு தளபதி அவர்கள், என்னை கழகத்தில் இணைத்துக் கொண்டதோடு, இன்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி, அவ்வளவுதான் நேரம். இப்போது மணி 2–47 ஆகிவிட்டது. உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல அரசினுடைய செயல்பாடு, எந்தத் துறைகளுக்கு, எதற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் எடுக்கக்கூடிய முடிவின் அடிப்படையில் மக்கள் அதை வரவேற்பார்கள். குறிப்பாக, 2006–2011 ஆட்சியில், பொதுப் பணித் துறைக்கு மொத்த நிதிநிலை அறிக்கையில் 1.15 சதவிகிதம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த 10 ஆண்டுகளில், இந்த ஆட்சியில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், இதற்குமேல் detail ஆகப் பேசுவதற்கு நேரமில்லை. (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: பொதுப் பணித் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியில், மொத்த நிதிநிலை அறிக்கையில் 0.74 சதவிகிதம் மட்டுமே நீர்ப்பாசனத் துறைக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆக, 'யானைப் பசிக்கு சோளப் பொரி' என்பதைப்போல, நீர்ப் பாசனத் திட்டத்திற்கு இந்த அரசு அதிக கவனம் செலுத்தவில்லை. குறிப்பாக, விவசாயிகளைக் காக்கக்கூடிய அரசு என்று சொல்லி, இந்த அரசு வெறும் விளம்பரங்களை மட்டுமே செய்கிறதே தவிர, மொத்த நிதிநிலை அறிக்கையில் நீர்ப் பாசனத் திட்டத்திற்கு . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அறிவிப்புகள் நிறைய வருகின்றன. நிறைய திட்டங்களைக் கொண்டு வருகிறோம். நீர் மேலாண்மைத் திட்டம் என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தி, இதற்கென்று தனியாக, பிரத்யேகமாக ஓய்வு பெற்ற பொறியாளர்கள் நியமிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் எங்கெங்கெல்லாம் நீரைச் சேமிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உபரியாக நீர் வெளியேறி கடலிலே கலக்கின்ற நீரைச் சேமிக்க வேண்டுமென்ற கணக்கெடுப்பு இந்த கொள்கை விளக்கக் குறிப்பில்கூட இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரியிலிருந்து கொள்ளிடம் வரை 6 கதவணைகளைக் கட்டுவதாக நாங்கள் தெரிவித்திருக்கின்றோம். கொள்கை விளக்கக் குறிப்பில்கூட இருக்கும். இதையெல்லாம் படித்துப் பார்த்துவிட்டு, இல்லையென்கிறீர்கள்.

அதேபோல, எவ்வளவு கட்டடங்கள். இதுவரையில் இல்லாத அளவிற்கு அதிகமான கட்டடங்களை பல துறைகளுக்கு கட்டிக் கொடுத்தது பொதுப் பணித் துறை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதுகூட 11 மருத்துவக் கல்லூரிகளை அறிவித்திருக்கின்றோம். 11 மருத்துவக் கல்லூரிகளுக்கும் கட்டடம் கட்டப்படும். ஏன், நம்முடைய கரூர் மருத்துவக் கல்லூரிக்குக்கூட, மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பிரம்மாண்டமாகக் கட்டி இப்போது திறந்திருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இன்றைக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் அவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதோடு, பல்வேறு புதிய திட்டங்களையெல்லாம் எடுத்திருக்கின்றோம். ஏற்கெனவே நான் சொன்னதுபோல், காவேரி–குண்டாறு திட்டம், மிகப் பெரிய திட்டம். இதுவரையில் எடுக்கப்படவில்லை. ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சில திட்டங்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிதி எதிர்பார்த்து, நாம் நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இருந்தாலும், காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தாலே, மாநில அரசே அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக முன்கூட்டியே நில எடுப்புப் பணிகளுக்காக நாம் 700 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் பேசுகின்றபோது நான் இந்தப் பதிலைச் சொன்னேன்.

பிற்பகல் 2–50

அதேபோல, கோதாவரி–காவேரி இணைப்புத் திட்டம் என்பது ஒரு மிகப் பெரிய திட்டம். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக பல ஆண்டுக் காலமாக கோரிக்கை வைத்திருக்கின்றோம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற விதமாக, இன்றைக்கு அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதுசம்பந்தமாக மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தோம். அதனடிப்படையிலே, மாண்புமிகு தரைவழி போக்குவரத்துத் துறை அமைச்சராகவும், நீர்ப்பாசனத் துறை அமைச்சராகவும் மத்தியில் இருந்த மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் திட்டம் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற பணி தொடங்கப்பட்டது.

இப்போது தெலுங்கானா, ஆந்திரா போன்ற மாநிலங்களுடன் சில பிரச்சினைகள் இருப்பதாக நான் கேள்விப்பட்டவுடன், ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கும் என்னால் கடிதம் கொடுத்தனுப்பப்பட்டு, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நேரடியாக மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அந்தக் கடிதத்தைக் கொடுத்தார்கள். அவர்களும் நமக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்றார்கள். அதேபோல, மாண்புமிகு தெலுங்கானா முதலமைச்சர் அவர்களையும் சந்தித்து, என்னால் கொடுத்தனுப்பப்பட்டது. அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, 'இதுவொரு மிகப் பெரிய திட்டம். உண்மையிலேயே தமிழ்நாடு வளர்ந்து வருகின்ற ஒரு மாநிலம். ஆகவே, அவர்களுக்குத் தேவையான தண்ணீரைக் கொடுப்பது என்னுடைய கடமை. மேலும், இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் மூலமாக தெலுங்கானா, ஆந்திரா, தமிழ்நாடு போன்ற மூன்று மாநிலங்களையும் இணைத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம்' என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் அவ்வப்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளின் நிலையிலே புதிய திட்டங்களை அறிவிக்கின்றோம். அது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமைகளுக்குத் தக்கவாறு, தண்ணீர்ப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இன்றைக்கு, நீர் மிக, மிக முக்கியமானதாக ஆகிவிட்டது. நதிகளெல்லாம் அண்டை மாநிலங்களில்தான் உற்பத்தியாகின்றன. கர்நாடகா மாநிலமாக இருந்தாலும் சரி, ஆந்திர மாநிலமாக இருந்தாலும் சரி, கேரள மாநிலமாக இருந்தாலும் சரி, அங்கு உற்பத்தியாகின்ற நீர்தான் நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றது. இதனால் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, அண்டை மாநிலங்களில் இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி, ஓர் இணக்கமான உறவை ஏற்படுத்தி, நம்முடைய திட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசு முழு மூச்சில் ஈடுபட்டிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

நீர்ப் பாசனத் திட்டங்களுக்கு குறைவான நிதிதான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது நான் அறிவிக்க இருக்கின்ற இந்தத் திட்டங்களெல்லாம் வருகின்றபோது, பல்லாயிரக்கணக்கான கோடி

ரூபாயைச் செலவு செய்தால்தான் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகளைக் காக்கக்கூடிய அரசு, அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. அதனால்தான் குடிமராமத்துத் திட்டத்தைக் கொண்டுவந்தோம்.

மேலும், மூன்றாண்டுக் கால திட்டமாக தடுப்பணைத் திட்டத்தைக் கொண்டுவந்தோம். அதில் மொத்தம் 139 பணிகள். 133 பணிகள்மூலம் பல்வேறு இடங்களில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. கிட்டத்தட்ட 692 கோடி ரூபாய் இதற்காகச் செலவழிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும், தடுப்பணைகள் கட்ட வேண்டுமென்று நம்முடைய மாமன்ற, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்றீர்கள்; பொது மக்கள் கொடுத்திருக்கின்றார்கள். அவையெல்லாம் என்னுடைய அறிவிப்பிலே வெளிவரும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, விவசாயிகளைக் காக்கக்கூடிய அரசு. நீர் மேலாண்மைத் திட்டத்திற்காக, அதிக நிதி ஒதுக்கீடு செய்கின்ற அரசு என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு மாபெரும் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். மகாநதி–கோதாவரி, கோதாவரி–கிருஷ்ணா, கிருஷ்ணா–நர்மதா, நர்மதா–காவேரி என்று கொண்டுவருகின்ற திட்டமானது ஒரு மிகப் பெரிய திட்டம். நாங்கள் அதை பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இப்படிப் பல திட்டங்கள். அது அ.இ.அ.தி.மு.க. அரசினுடைய திட்டம் என்றாலும், மாண்புமிகு முதல்வர் பெயரிலே வருகின்ற திட்டம் என்றாலும் அதை நாங்கள் வரவேற்கின்றோம். மிகப் பெரிய திட்டம். If it is going to happen, இது மிகப் பெரிய ஒன்று. ஆனால், இந்தக் காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டம் இருக்கின்றதே அது நாங்கள் அறிவித்த திட்டமாகும். அதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். முதன்முறையாக காவேரியில் தண்ணீர் எடுப்பதற்காக மாயனூரில் ஒரு தடுப்பணை

கட்ட வேண்டும். அந்தத் தடுப்பணையை 189 கோடி ரூபாய் அளவில் கட்டியவன் நான்தான். ஆகையினால், அந்தத் திட்டத்தை எங்களுடைய பெயரையே சொல்லாமல் சொல்கிறீர்களே? அதற்காகத்தான் நான் சொல்கிறேன். ஏனென்றால், மூன்று திட்டங்களை எங்களுடைய கலைஞர் அறிவித்தார்கள். அதில் ஒன்று, Interlinking of River Project. இரண்டாவது, தாமிரபரணி–கருமேனியாறு. மூன்றாவது திட்டமான சாத்தனூர்–செய்யாறு திட்டம், எங்களால் செய்ய முடியவில்லை. இந்த மூன்று திட்டங்களை அறிவித்தார்கள். இரண்டு திட்டங்களை நாங்கள் ஆரம்பித்தோம். அதற்குப் பிறகு நீங்கள் ஆட்சிக்கு வந்ததுதான் அவருக்குத் தெரியுமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டளை–கதவணை திட்டத்தை நீங்கள்தான் ஆரம்பித்தீர்கள். ஆனால், முடித்து வைத்தது நாங்கள்தான். அந்தத் திட்டத்திற்கான பணி நிறைவடைந்தது எங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். மாண்புமிகு அண்ணன் ஓ.பி.எஸ். அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோதுதான் அதை நாங்கள் நிறைவேற்றினோம். அதற்குப் பிறகு, நீங்கள் சொன்ன காவேரி–குண்டாறு திட்டம். ஏனென்றால், இரண்டாண்டுக் காலமாக உபரி நீர் கடலிலே சென்று கலக்கின்றது. அப்படி கடலிலே சென்று கலக்கின்ற உபரி நீரை, முதலில் 2,000 கன அடி நீரைத்தான் இந்தக் கால்வாய் வெட்டி, அதன் வழியாகத் திருப்பி அனுப்பப்படுவதாக இருந்தது. ஆனால், உபரி நீர் எல்லாக் காலங்களிலும் செல்வது கிடையாது. குறிப்பிட்ட காலங்களில் மேட்டூர் அணை நிரம்பி உபரி நீர் கடலில் சென்று கலக்கிறது. ஆகவே, இப்பொழுது நாளொன்றுக்கு 6,000 கன அடி நீர் செல்கின்ற அளவிற்கு கால்வாயை அகலப்படுத்தி அமைப்பதற்காக நிதியையும் அதிகப்படுத்தி இன்றைக்கு அந்தப் பணி துவங்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தை நீங்கள் எடுத்து இப்போது செய்யப் போகிறேன் என்று சொல்வதையும் நான் வரவேற்கிறேன்; வரவேற்கவில்லை என்று

நான் சொல்லவில்லை. ஆனால், அதை நாங்கள் ஆரம்பித்து வைத்தோம் என்பதையே நீங்கள் மறைத்துவிடுகிறீர்களே என்பதைத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பணையை மட்டும்தான் நீங்கள் கட்டினீர்கள். மற்ற எந்தப் பணியையும் நீங்கள் செய்யவில்லை. நாங்கள் இப்போது நிலமெடுக்கின்ற பணியைத்தான் ஆரம்பித்திருக்கின்றோம். ஏற்கெனவே இதுகுறித்து மத்திய அரசிடம் கோரிக்கை வைத்தோம். காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற அதிகமான நிதி தேவை; இதற்கு மாநில அரசிடம் நிதி கிடையாது. ஆகவே, மத்திய அரசிடமிருந்து நிதியைப் பெற்று இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் பல ஆண்டுக் காலமாக கோரிக்கை வைத்துக்கொண்டே இருந்தோம். அதில் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தினால்தான், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தங்குதடையில்லாத நீர் கிடைக்க வேண்டுமென்பதற்காக, உபரி நீரைத் திருப்பிவிட வேண்டுமென்பதற்காக இன்றைக்கு மாநில அரசாங்கமே இந்தத் திட்டத்தை எடுத்து, நிலமெடுப்புப் பணிக்காக முதற்கட்டமாக 700 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பது நாங்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அணை கட்டியது நீங்கள். மற்ற பணிகளை நாங்கள்தான் செய்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உரையை முடியுங்கள்.

திரு. துரைமுருகன்: இது சாதாரணமானதுதான்; நான் சண்டைக்குப் போகிறவன் இல்லை சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. துரைமுருகன்: அதாவது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீங்கள் ஆரம்பித்தீர்கள், எல்லாவற்றையும் நாங்கள் முடிக்கப் போகிறோம் என்று சொல்கிறார். நீங்கள் ‘முடிக்கப் போகிறோம்’ என்று சொல்வதை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், அதேநேரத்தில் as per my political calculation and political experience இந்த அவையில் நான் ஒன்று சொல்கிறேன்.

காவேரி–குண்டாறு இணைப்புத் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்தோம். நீங்கள் அதைத் தொடர்ந்து செயல்படுத்த முற்படுகிறீர்கள்; அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதை முடித்து, அதற்குத் திறப்பு விழா செய்கிறவர் எங்களுடைய தலைவர் தளபதியாகத்தான் இருப்பார் என்பதை இந்த மன்றத்தில் இன்றைக்கு அறுதியிட்டு நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், என்ன சொல்லுங்கள்?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது 'இலவு காத்த கிளி' கதையைப் போலத்தான் ஆகும். (குறுக்கீடு) நரி திராட்சைக்கு ஆசைப்பட்ட கதைதான். அது நடக்கவே நடக்காது.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் தட்டுப்பாட்டைப் பற்றி எங்கள் சட்டமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் புது சப்ஜெக்ட்டுக்குப் போவதற்கு நேரமில்லை.

திரு. V. செந்தில் பாலாஜி: இது புது சப்ஜெக்ட் இல்லை. மணல் குறித்த ஒரே ஒரு சப்ஜெக்ட் மட்டும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமில்லை, உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: ஒரேயொரு சப்ஜெக்ட் மட்டும்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரமில்லை, அந்த சப்ஜெக்ட் இல்லை. நீங்கள் உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மணல் தட்டுப்பாடு என்பது மிகக் கடுமையாக இருக்கிறது. 27 அரசு குவாரிகள் ஏற்கெனவே. . .

2020 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செந்தில் பாலாஜி, உங்கள் உரையை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) நீங்கள் புது point எல்லாம் பேசுவதற்கு நேரமில்லை. மணி 3–00 ஆகிவிட்டது. (குறுக்கீடு) இல்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, புது point–க்கெல்லாம் இடமில்லை. உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு point மட்டும்தான். ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். இல்லையென்றால் நான் பதிலுரையாற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) முடியுங்கள். இவ்வளவு நேரத்தில் நீங்கள் பேசி முடித்திருக்கலாம்.

திரு. V. செந்தில் பாலாஜி: நீங்கள் எனக்கு time கொடுத்திருந்தால், இந்த நேரத்தில் நான் பேசியே முடித்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றேகால் மணிநேரம் உங்களுக்கு allow செய்தாகிவிட்டது.

திரு. V. செந்தில் பாலாஜி: திருச்சி மற்றும் நாமக்கல் போன்ற பகுதிகளில் மாட்டு வண்டிகளில் மணல் எடுப்பதற்கு முறையாக பொதுப் பணித் துறைமூலம் அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது. ஆனால், கரூர் மாவட்டத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: முறையாக அனுமதி சீட்டு வழங்கப்படாமல் இரவு நேரங்களில் மாட்டு வண்டிகளில் அனுமதியில்லாமல் மணல் எடுக்கப்படுகிறது. இதன்மூலம் மணல் திருட்டு பெரும்பான்மையாக நடைபெறுகிறது. மணல் எடுப்பதைத் தடை செய்வதென்றால், தமிழகம் முழுவதும் தடை செய்ய வேண்டும் அல்லது மணல் எடுப்பது என்று சொன்னால், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களைப்போல கரூர் மாவட்டத்திலும் மாட்டு வண்டி உரிமையாளர்களுக்கு அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய மாவட்டத்தின் தொகுதி சார்ந்த கோரிக்கைகளை உங்களிடத்திலே எழுதிக் கொடுத்துவிடுகின்றேன். 2021–ல் நடைபெறவிருக்கின்ற சட்டமன்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாவட்டம் அல்ல, தொகுதி சார்ந்த கோரிக்கைகளைக் கொடுங்கள். அது என்னவென்று பார்க்கலாம். உரையை முடியுங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: 2021–ல் நடைபெறவிருக்கும் சட்டமன்றப் பொதுத் தேர்தலில் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் நின்று . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உரையை முடிக்க மாட்டீர்கள், உட்காருங்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: தமிழகத்தினுடைய முதலமைச்சராக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செந்தில் பாலாஜி அவர்களின் உரை நிறைவு பெறுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மணலைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது லாரிகளின் மூலமாக 9 குவாரிகளில் மணல் எடுக்கப்படுகின்றது. 3 குவாரிகளில் மட்டும் மாட்டு வண்டிகளின் மூலமாக மணல் எடுக்கப்படுகின்றது.

பிற்பகல் 3–00

இன்றைக்கு பல குவாரிகள் செயல்பட்டு வந்தன. ஆனால், நீதிமன்றத்தில் பொது நல வழக்கு போடப்பட்டதன் காரணத்தினால், அந்த நீதிமன்ற தீர்ப்பின்படி அந்தக் குவாரிகள் எல்லாம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், திருட்டு மணல் அதிகமாக அள்ளப்படுவதாகச் சொன்னார்கள். 2006–லிருந்து 2011 வரைக்கும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 8,031 FIR போடப்பட்டன. அதில் 9,012 பேர் கைது செய்யப்பட்டனர். குண்டர் சட்டத்தில் 65 பேர் கைது செய்யப்பட்டனர். அதேபோல் 2011–லிருந்து 2020 வரைக்கும் மணல் திருட்டில் ஈடுபட்ட 72,189 பேர்மீது FIR போடப்பட்டு, 82,215 பேர் கைது செய்யப்பட்டார்கள். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு திருட்டு மணல் அள்ளியதன் காரணத்தினால் 521 பேர் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டார்கள். இதற்கு அபராதத் தொகையாக 143 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டது.

அதேபோல் 2006–லிருந்து 2011 வரைக்கும் அபராதத் தொகையாக 42.43 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மணல் திருட்டைக் கட்டுப்படுத்துவதற்கு அரசால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது நீதிமன்றமும், திருட்டு மணல் அள்ளுபவர்கள்மீது குண்டர் சட்டம் பாய வேண்டும் என்று தீர்ப்பு வழங்கி இருக்கின்றது. அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. திருட்டு மணல் அள்ளுகின்றவர்கள்மீது கடுமையான நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று M–sand பற்றிக் கேட்டார்கள். இன்றைக்கு ஆற்று மணல் அள்ளுவது நீதிமன்றத்தின் மூலமாகத் தடை செய்யப்பட்டிருக்கின்ற காரணத்தினால், M–sand உபயோகத்திற்கு அனைவரும் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்களாக இருந்தாலும் சரி, கட்டுமானத் தொழிலைச் செய்கின்றவர்களாக இருந்தாலும் சரி, மணலைப் பயன்படுத்துவதற்கு பதிலாக M–sand–ஐ பயன்படுத்த வேண்டும் என்ற அறிவிப்பைக் கொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்த M–sand–ஐ எப்படிப் பயன்படுத்துவது, இதனால் பயன் என்ன என்பதைப்பற்றியெல்லாம் குறும்படத்தின் மூலமாக திரையரங்குகளில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, M–sand–ஐ மக்கள் பயன்படுத்துகின்ற சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதனால் இப்போது கிட்டத்தட்ட 80 சதவிகிதம் பேர் M–sand–ஐ பயன்படுத்தக்கூடிய நிலைக்குச் சென்றுவிட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில் பாலாஜி அவர்களுடைய உரை நிறைவு பெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்கலாம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா பிரம்மனின் படைப்பில் பிரத்யேக பதிப்பு; காலத் தாய் தந்திட்ட ஞான பெருமிதப் பிறப்பு; உலகத் தமிழர்களை உயிராகக் காத்திட உலகளந்த பெருமான் உபயம் தந்த உயரிய படைப்பு; (மேசையைத் தட்டும் ஒலி) சரித்திரமாய் நிலைத்திட்ட சத்தியத்தின் பிறப்பு; (மேசையைத் தட்டும் ஒலி) பொங்குமா கடலாக, பொழியக் கூடுகிற மேகமாக, புரட்சியின்

குவியலாக, பொல்லாங்கு கும்பலைப் பொடிப் பொடியாக்கிய புறநானூற்றுத் தீரமாக, (மேசையைத் தட்டும் ஒலி) வாய்மையால் வென்று காட்டிய வல்லமையின் வடிவமாய், நில்லாது சுழல்கிற பூமியாகி, தங்கத் தமிழ் மண்ணை தழைத்தோங்க வைத்திட்ட தாய் வடிவ தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது பதிலுரையை ஆரம்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருவத்தில் பெரிதாகவும், உறுப்புக்கள் உறுதியாகவும் இருக்கின்ற விலங்குகள் நடந்தால் பாதை உருவாவதில்லை. குளம்புகளால் உருவாகாத பாதை பாதங்களால் உருவாகிறது. மனிதன் வழித்தடங்களை அறிந்தான். விண்ணில் பறந்தான். கடலைக் குடைந்தான். பூமியைத் துழாவினான். இயற்கை இடர்பாடுகளை எதிர்கொள்ள உலகம் முழுவதும் பரவினான். புதிய இடங்களை பழைய இடங்களோடு இணைக்க பாதம் பட்ட பாதைகளைச் சாலைகளாக ஆக்கினான். பாலையாய் இருந்த நிலங்களை சோலையாய் மாற்றினான். மனித நாகரிகத்தின் மகத்தான பங்கை சாலைகள் வகிக்கின்றன. சாலைகள் என்றால் அறிவை வளர்க்கும் கல்விச் சாலைகள். பொருளை உருவாக்கும் தொழிற்சாலைகள். பயணம் செய்வதற்கு நெடுஞ்சாலைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்களின் கனவை நனவாக்கும் விதமாக அவர் வகுத்த பாதையில் இவ்வரசு பயணிக்கும் காரணத்தால் இன்று தமிழகம் முதன்மை மாநிலம் என்ற பெருமையை மத்திய அரசிடம் பெற்றுள்ளதை இப்பேரவை நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பெருமையைப் பெற்றதற்கு சிறப்பான சாலை உட்கட்டமைப்பு காரணியும் ஒன்று என்பதை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–05

இதயங்களால் மக்கள் இணைவதைப்போல, சாலைகளால் ஊர்கள் இணைகின்றன. ஒவ்வொரு புதிய சாலை அமைக்கப்படும்போது, மக்கள் அதிக சுதந்திரத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் அறிவைப் பெருக்க, பயணம் செய்ய வாய்ப்புகள் தோன்றுகின்றன. பொருட்களை விற்க வழிகள்

பிறக்கின்றன. இடுபொருட்களை வாங்க இன்னும் வசதிகள் கூடுகின்றன. நாட்டின் மூலைமுடுக்குகளை அறிந்துகொள்ள கதவுகள் திறக்கின்றன. சாலைகளால் வழித்தடங்கள் மட்டும் உருவாவதில்லை. வாழ்விடங்களும் உருவாகின்றன. வருவாய் பெருகுகிறது. விழிப்புணர்வு கூடுகிறது. விஞ்ஞானம் எட்டுத் திக்கும் சென்று சேர்கிறது. தரமான சாலைக் கட்டமைப்பு தொழில் மற்றும் முதலீடுகளை ஈர்ப்பதன் மூலமாக நாட்டின் வளர்ச்சிக்கான செயல்முறைகளை ஊக்குவிக்கிறது. விமான நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை இணைக்கும் பன்முகப் போக்குவரத்து வளர்ச்சியை நிலைநாட்டுவதில் சாலைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மாநில ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதில் சாலைகள் முக்கியப் பங்காற்றுகின்றன. எனவே, சாலை மற்றும் சாலைகளை இணைக்கும் பாலங்களையும் மேம்படுத்துவதற்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக நெடுஞ்சாலைத் துறையானது 66,039 கி.மீ. நீளச் சாலைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. சாலை மேம்படுத்துதல், புறவழிச்சாலை மற்றும் பல்வழிச் சாலைகளை அமைத்தல், ஆற்றுப் பாலங்கள், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலம்/கீழ்பாலம் கட்டுதல், விபத்தில்லா பயணத்திற்கு சாலை பாதுகாப்புப் பணிகள் போன்றவற்றை பல்வேறு திட்டங்களின் மூலம் நெடுஞ்சாலைத் துறை செயல்படுத்துவதன் காரணமாக பசுமையான சாலைகளில் சுகமான மற்றும் பாதுகாப்பான பயணம் உறுதி செய்யப்படுகிறது.

நிருவாக அமைப்பு. நெடுஞ்சாலைத் துறையில் பணிகளை மிகச் சிறப்பாக மேற்கொள்வதற்கு பணிகளுக்கான பிரத்யேக அலகுகள் உருவாக்கப்பட்டு, அந்த அலகின் தலைமைக்கு தலைமைப் பொறியாளரும், அவரது நேரடி பார்வையில் ஏனைய பொறியாளர்கள்/பணியாளர்கள் பணி செய்கின்றனர். இத்துறையில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் துரிதமாக நிரப்பப்பட்டு, தொழில்நுட்பத்துடன் பணியாற்ற சிறப்பான பயிற்சியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. 2016 முதல் 2019 வரை மூன்று ஆண்டுகளில் 533 தேர்ந்தெடுக்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பயிற்சியும் வழங்கப்பட்டு இன்று அவர்கள் களத்தில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம். இந்தியாவில், சாலை வசதிகளைப் பொறுத்தவரை தமிழகத்திற்கு

ஈடு இணை எந்த மாநிலமும் இல்லை என்பதை இங்கே பயணப்பட்ட பலரும் தெரிவித்துள்ளனர். நம் மாநிலத்தில் குக்கிராமத்திற்குக்கூட சிறப்பான சாலை வசதிகள் உண்டு. அங்கும் பேருந்து செல்கிற வசதியை ஏற்படுத்தித் தந்திருக்கின்றோம். சாலைகளை உறுதியாகவும், உலகத் தரத்திலும் அமைப்பதை நெடுஞ்சாலைத் துறை மூச்சாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. குறைந்த நேரத்தில் தொலைதூர இடங்களுக்கும் பயணம் செய்ய சாலைகள் அமைக்கப்படுகின்றன.

மாநிலத்தில் உள்ள சாலைகளை ஆண்டுதோறும் ஒருங்கே தரமானதாக அமைப்பதற்கு உன்னதமான திட்டத்தினை உருவாக்கியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தொலைநோக்கு பார்வை கொண்ட அவரால் 2005–2006–ல் தோற்றுவிக்கப்பட்ட இத்திட்டத்தினால் இன்றைய நிலையில் மாநிலத்தில் உள்ள 98 விழுக்காடு மாநில நெடுஞ்சாலைகள் இருவழி மற்றும் பல வழித்தடமாகவும், 97 விழுக்காடு மாவட்ட முக்கிய சாலைகள், இடைவழி, இருவழி மற்றும் பல வழித்தட சாலைகளாகவும் உள்ளன. மேலும், இத்திட்டத்தில் பாதுகாப்புப் பணிகளும் உள்ளன. ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் மூலம் 2017–2018 ஆம் ஆண்டு முதல் ரூபாய் 8,961.89 கோடி மதிப்பில் 12,662 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 1999 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

சாலை ஓடுதளத்தின் தரத்தினை மேம்பாடு செய்தல். சாலை ஓடுதளத்தின் தரத்தினை மேம்பாடு செய்வதால் அதிக அளவிலான சாலைகளை மேம்பாடு செய்யும்பொருட்டு, 2018–2019 ஆம் ஆண்டு முதல் புதிய திட்டம் ஒன்று எங்கள் அரசால் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில் 3,500 கி.மீ. நீள சாலையின் ஓடுதளத்தின் தரம் வருடம்தோறும் உயர்த்தப்படுவதால், தரமான சாலைகள், சுகமான மற்றும் பாதுகாப்பான பயணம் என்ற கொள்கையை நோக்கி துறை செல்கிறது. 2018–2019 ஆம் ஆண்டு ரூபாய் 850 கோடி மதிப்பில் 3,825.58 கி.மீ. நீள சாலைகளின் ஓடுதளப் பாதையின் தரத்தினை மேம்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு உள்ளன.

பிற்பகல் 3–10

2019–2020 ஆம் ஆண்டு ரூபாய் 1,039.78 கோடி மதிப்பில் 3,597.20 கி.மீ. நீள சாலைகளின் ஓடுதளப் பாதையின் தரத்தினை மேம்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. பண்டைக் காலத்திலேயே சாலைகள் அமைத்த

மன்னர்கள் பாராட்டப்பட்டார்கள். ஆறுகள் பாயும் இடங்களில் பாலங்களையும், மக்கள் பயணிக்கும் இடங்களில் அகண்ட சாலைகளையும் அமைப்பது முன்னேற்றத்தை முயல் வேகத்தில் முடுக்கிவிடும் செயல்களாகும்.

சாலைப் பாதுகாப்பு. சாலைகள் அகலமாகவும், தரமானதாகவும் இருக்கும் காரணத்தால், நிறைவான பயணம் உறுதி செய்யப்படுகிறது. மேலும் சாலையின் பாதுகாப்பு விதிமுறைகள் அறியும் வண்ணம் உள்ளபோதும், அவ்வப்போது உபயோகிப்பாளர்களது கவனக்குறைவு மற்றும் விதிமீறல் காரணங்களால் விபத்துகள் ஆங்காங்கே ஏற்படுகின்றன. வாகன விபத்துகளால் ஏற்படும் உயிர்ச் சேதம் மற்றும் பொருட்சேதத்தைக் கருத்தில் கொண்டு, இத்தகைய விபத்துகளின் தீவிரத்தைக் குறைக்கவும், பாதுகாப்பு அம்சங்களை அதிகரிக்கவும், போக்குவரத்துத் துறை, நெடுஞ்சாலைத் துறை, காவல் துறை, சுகாதாரத் துறை மற்றும் கல்வித் துறை ஆகிய ஐந்து துறைகள்மூலம் பாதுகாப்பு நடவடிக்கைகள் செயல்படுத்தப்படுகின்றன. 2014–2015 ஆம் ஆண்டு முதல் சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ், 700 கோடி ரூபாய் மதிப்பிலும், ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டத்தின்மூலம் ரூ.1,486 கோடி மதிப்பிலும் சாலைப் பாதுகாப்புப் பணிகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், இன்றைய நாளில் சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்பின் சதவிகிதம் வெகுவாகக் குறைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உயிரிழப்பின் எண்ணிக்கை, முந்தைய ஆண்டான 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கையைவிட 24 சதவிகிதம் குறைந்துள்ளது. ஏனென்றால், விபத்துகள் நிறைந்த பகுதிகளில் சாலைகளை சரியான முறையில் செப்பனிட்டதன் விளைவாக, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 24 சதவிகிதம் விபத்துகளின் எண்ணிக்கை குறைந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசால் சாலைப் பாதுகாப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்திய நாடாளுமன்ற மாண்புமிகு தரைவழிப் போக்குவரத்து அமைச்சர் Thiru. Nitin Gadkari அவர்கள், தனது பாராட்டை தமிழகத்திற்கு தெரிவித்திருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அதெல்லாம் வராது. கவலைப்படாதீர்கள், ஏனென்றால் இடைவெளி 1 மீட்டருக்குமேல் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

NABARD மற்றும் கிராமச் சாலைகள். உள்ளாட்சித் துறையின் பராமரிப்பில் இருந்த பேருந்து தட சாலைகளை மேம்படுத்துவதற்கு,

ஓர் உன்னதமான திட்டம் வகுக்கப்பட்டது. 2017–2018, 2018–2019 மற்றும் 2019–2020 ஆகிய 3 வருடங்களில் மொத்தம் 4,861.70 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ரூபாய் 2,772.48 கோடி மதிப்பில் மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தி மேம்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்தபோதும் எந்தச் சாலையும் தரம் உயர்த்தப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார். கிராமங்களில் பேருந்து செல்கின்ற கிராமச் சாலைகள் அனைத்தும் இன்றைக்கு தரம் உயர்த்தப்பட்டு, மாவட்ட இதர சாலைகளாகச் சேர்க்கப்பட்டு, அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு பராமரித்து வருகின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 2,582.39 கி.மீ. நீளச் சாலைகள் ரூபாய் 1,270.66 கோடி மதிப்பிலான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

பசுமைச் சாலைகள். "பசுமையான சாலைகள்; பாதுகாப்பான பயணம்" என்ற கொள்கையை நோக்கி ஒவ்வொரு வருடமும் நெடுஞ்சாலைகளில் அனைத்து உட்கோட்டத்திலும் 1,000 மரக் கன்றுகளுக்கும் அதிகமாக நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கஜா புயலின் காரணமாக விழுந்த 22,658 மரங்களுக்குப் பதிலாக திருச்சி வட்டத்திலுள்ள 5 கோட்டங்களில், 1,05,800 புதிய மரக் கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. சாலையோர மரங்களை வெட்டாமல், வேருடன் பெயர்த்து, பாதுகாப்பான இடங்களில் திரும்ப நடுவதற்கு (Replantation) நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நல்ல பலன் கிடைத்துள்ளது.

தேசிய நெடுஞ்சாலை. மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நம் மாநிலத்தின் 6,634 கி.மீ. நீளமுள்ள சாலைகளில், 1,900 கி.மீ. தேசிய நெடுஞ்சாலை அலகின் மூலமும் 4,734 கி.மீ. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமும் பராமரிப்பு/கண்காணிக்கப்படுகிறது. இவற்றுள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் பராமரிக்கப்படும் சில சாலைகளில், பணிகளுக்கான ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதால், சாலைகளின் தரம் குறைகிறது. இதைக் கண்டறிந்து, பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மத்திய அமைச்சர் அவர்களை

நேரில் அணுகி, சாலைகளைப் பராமரிக்க அழுத்தம் கொடுத்த காரணத்தினால் சாலைகள் சீரமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. உதாரணத்திற்கு பூந்தமல்லி முதல் வாலாஜாபாத் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலை மற்றும் பாண்டி–கிருஷ்ணகிரி, சென்னை–தடா போன்ற சாலைகள் சீரமைக்கப்படுவதுடன் பாதியில் நின்றுபோன பாலப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. மேலும், தாம்பரம் முதல் கூடுவாஞ்சேரி வரை உள்ள சாலை மற்றும் வானகரம் முதல் ஸ்ரீபெரும்புதூர் வரை உள்ள சாலை ஆகிய இரண்டும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பராமரிப்பில் இருந்தாலும், மாநில அரசு அழுத்தம் கொடுத்த காரணத்தினால் 8 வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி தற்போது நடைபெறுகிறது.

பிற்பகல் 3–15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, மத்திய அரசிலிருந்து நிதியைக் கேட்டு, சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று சொன்னார். மத்திய அரசிலிருந்து நிதியைப் பெற்றுத்தான் இந்தச் சாலைகளையெல்லாம் அகலப்படுத்திக் கொண்டிருக்கின்றோம். 8 வழிச் சாலையை அகலப்படுத்தும் பணி தற்போது நடைபெற்றுவருகிறது. இதனால் சென்னைக்குள் நுழையும் மற்ற வெளியூர்களுக்குச் செல்லும் வாகன நெரிசல் பெருமளவு குறையும். தேசிய நெடுஞ்சாலைகளில் விபத்துகளைத் தவிர்ப்பதற்கு பிரத்யேக ஆய்வு நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் சாலை கட்டமைப்பு மேற்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நவீன இயந்திரங்களால் சாலை பராமரிப்பு. சென்னை உள்ளிட்ட மாநகராட்சிப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறை சாலைகளை மிகச் சிறப்பாகப் பராமரிக்க, சாலை ஓரங்களில் குவியும் மண், குப்பை, மழை நீர் தேங்குதல் போன்றவை நவீன இயந்திரங்களைக் கொண்டு துரிதமாக அகற்றப்படுகின்றன. சென்னை மாநகரில் 6 துப்புரவு இயந்திரங்களும், மண்குவியல்களை விரைவாக அகற்ற ஏதுவாக ஒரு சிறிய வடிவிலான மண் அகற்றும் இயந்திரம், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களில் மழைக் காலங்களிலும் ஏற்படும் அடைப்புகளை எடுப்பதற்கு திறன் வாய்ந்த உறிஞ்சும் இயந்திரமும் பயன்பாட்டில் உள்ளன. இதுதவிர, சாலைகளில் உள்ள பழுதுகளைச் சரி செய்ய 10 சிறப்பு இயந்திரங்கள் ரூபாய் 536.80 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டு சிறந்த முறையில் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன.

நில எடுப்புப் பணிகள். நெடுஞ்சாலைத் துறையின்மூலம் புறவழிச் சாலைகள், வட்டச் சாலை, சாலை மேம்பாலம், இரயில்வே பாலம், உயர்மட்ட பாலம் அமைத்தல் ஆகிய 108 பணிகளுக்குத் தேவையான 1,853 ஹெக்டேர் பரப்பளவு நிலம் கையகப்படுத்தும் பணிகள் 554 கிராமங்களில் நடைபெற்று வருவதை துரிதப்படுத்த மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் தனி அலகுகள் உருவாக்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்படுகிறது. இதனால் திட்டப் பணிகளை குறிப்பிட்ட காலங்களில் முடிக்க ஏதுவாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மேலும், நேரடி பேச்சுவார்த்தை மற்றும் நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளில் தனிக் கவனம் செலுத்தும் காரணத்தால், பல்வேறு பணிகள் இன்று சிறப்பாக நடைபெற்று சாலைகளும், பாலங்களும் பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

சென்னை பெருநகர மேம்பாடு. சென்னை பெருநகரத்தில் போக்குவரத்து நெரிசலை பெருமளவு குறைக்கும் வகையில் கோயம்பேடு காளியம்மன் கோயில் மேம்பாலம், பல்லாவரம் மேம்பாலம், திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலை உயர்மட்ட பாலம், கொளத்தூர் இரட்டை ஏரி மேம்பாலம் (வலதுபுறம்), கொரட்டூர் வாகன சுரங்கப் பாதை, தாம்பரத்தில் நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடை மேம்பாலம், கீழ்கட்டளை மேம்பாலம், மேடவாக்கம் மேம்பாலம் மற்றும் வேளச்சேரி ஆகிய ஒன்பது இடங்களில் மேம்பாலங்கள் கட்டும் பணிகள் இந்தாண்டில் முடிக்கப்பட்டுள்ளன. புதிய வளர்ச்சி வங்கியின்—NDB நிதி உதவியுடன் சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் CCTDP திட்டத்தில் மூன்று கட்டங்களாக மேற்கொள்ளப்படவுள்ள 18 பணிகளுக்கு நிலம் கையகப்படுத்த ரூபாய் 1,121 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இரயில்வே கடவுகளில் மேம்பாலம், கீழ்ப்பாலம் கட்டுதல். வாகனங்களின் பெருக்கத்தினால், இரயில்வே கடவுகள் வாகன போக்குவரத்திற்குப் பெருந்தடையாக உள்ளது. விபத்து தவிர்ப்பு மற்றும் நேர விரயத்தைக் குறைப்பதற்கு இரயில்வே கடவுகளில் மேம்பாலம் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டப்படுகின்றன. கடந்த ஆட்சிக்காலங்களில் பாலங்கள் கட்டுவதற்கு சராசரியாக 7 வருடங்கள்வரை எடுத்துக்கொள்ளப்பட்டன. காலதாமதத்தினைத்

தவிர்க்க சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்த கூட்டங்கள் மற்றும் கூட்டு ஆய்வு நடத்தி, பணியில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்து, தற்போது பாலங்கள் கட்டும் பணி 5 வருடங்களில் முடிக்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை 94 இரயில்வே மேம்பாலப் பணிகள் முடிக்கப்பட்டு போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ளன. சேலம் லீ–பஜார், அரியலூர், ஜோலார்பேட்டை ஆகிய 3 இரயில்வே மேம்பாலப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம். ஒரு கோட்டத்தின் அனைத்து மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளில் ஐந்து வருட காலத்திற்கு செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு திட்டத்தின்மூலம் பராமரிக்கப்படுகிறது. பொள்ளாச்சி கோட்டத்தில் 2012–2013 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இத்திட்டம் தொடர்ச்சியாக, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், திருவள்ளூர், விருதுநகர், பழனி மற்றும் சிவகங்கை கோட்டங்களில் உள்ள 3,664 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் ரூபாய் 3,556 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் தஞ்சாவூர் கோட்டத்தில் உள்ள 834 கிலோ மீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் ரூபாய் 1,947 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படவுள்ளன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்டமிடுதல், நிதி ஒதுக்குதல், பணிகளைத் தொடங்குதல், பாங்காக நிறைவேற்றுதல் என்று அத்தனை கட்டங்களிலும், விழிப்புணர்வுடன் செயல்படுவதால்தான் நம் சாலைகள் சிறப்பாக உள்ளன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம். நெடுஞ்சாலைத் துறை பணிகளின் தரத்தினை உயர்த்தும்வண்ணம் பொறியாளர்களுக்கு புதிய, புதிய தொழில்நுட்பங்களை அறியச் செய்யும் வகையில் கலந்துரையாடல் மற்றும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு கலந்துரையாடலில் இதுவரை 12,361 பேர் பங்கேற்றுள்ளனர். 277 தொழில்நுட்ப சொற்பொழிவுகள் மற்றும் 63 பயிற்சிகளில் கலந்துகொண்டு பயனடைந்துள்ளனர். நடப்பாண்டில் 52 பொறியாளர்களுக்கு தரக்கட்டுப்பாடு குறித்தும், 114 பொறியாளர்களுக்கு சாலை பாதுகாப்பு தணிக்கை குறித்தும் பயிற்சி

அளிக்கப்படவுள்ளது. பயிற்சி நிலையத்திற்கென பிரத்யேகமான கட்டடம் 4,150 சதுர மீட்டர் பரப்பில் கட்டப்பட்டுள்ளது. பயிற்சி பெறுபவர்கள் தங்குவதற்கென 40 அறைகள் கொண்ட பிரத்யேக தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது. பயிற்சி நிலையம் மற்றும் விடுதிகளுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.350 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, பயிற்சி வகுப்புகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

பிற்பகல் 3–20

சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம். ரூபாய் 6,448 கோடி மதிப்பில் 590 கிலோ மீட்டர் நீளத்திற்கு 15 மாநில நெடுஞ்சாலைகள் மேம்பாடு செய்யப்படவுள்ளன. இதில் ரூபாய் 4,384 கோடி மதிப்பில் கட்டுமானப் பணி மற்றும் ரூபாய் 1,574 கோடி மதிப்பில் 463 ஹெக்டேர் நில எடுப்பு பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

சென்னை எல்லை சாலை திட்டம். சென்னை மாநகர எல்லைக்குள் கனரக வாகனங்கள் நுழைவதைத் தவிர்க்கும்பொருட்டு, எண்ணூர் துறைமுகத்தில் துவங்கி பூஞ்சேரி சந்திப்பு வரை 133 கிலோ மீட்டர் நீளத்தில் சென்னை எல்லை சாலை அமையவுள்ளது. இதில் 97 கிலோ மீட்டர் புதிய சாலையாகவும், தற்போதுள்ள 36 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்தும் வகையில் பணிகள் 5 பிரிவுகளாக செயலாக்கப்படவுள்ளன. பிரிவு–1, 2, 3 மற்றும் 5–க்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பிரிவு–1–க்கான கட்டுமானப் பணி ஜப்பான் பன்னாட்டு நிறுவன நிதி உதவியுடன், ரூபாய் 2,473.70 கோடி மதிப்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பிரிவு–2 மற்றும் பிரிவு–3–ன் கட்டுமானப் பணி ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ளது.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II. பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு (EPC) திட்டத்தின்கீழ் ரூபாய் 1,705 கோடி மதிப்பில் 427 கிலோ மீட்டர் சாலைகள் 10 தொகுப்புப் பணிகளாக மேற்கொள்ளப்பட உள்ளது. 9 தொகுப்புகளின் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 5 ஆண்டுக்கால பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விருத்தாசலம்–பரங்கிப்பேட்டை சாலை மேம்பாடு செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறை (PPP) திட்டத்தின்கீழ் 70 கிலோ மீட்டர் நீள ஒட்டன்சத்திரம்–தாராபுரம்–திருப்பூர் சாலை பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள இரண்டு பணிகள் ஒப்பந்த நிலையில் உள்ளன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC) சென்னை வெளி வட்டச் சாலை கட்டம் 1 மற்றும் 2–ல் 59.55 கிலோ மீட்டர் சாலைப் பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள 300 மீட்டர் நீள சாலை நீதிமன்ற வழக்கு முடிவுற்று, விரைவில் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் பகுதிக்கு புறவழிச்சாலை ரூபாய் 243.70 கோடி திட்ட மதிப்பில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC). ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்பு திட்டத்தின்கீழ் ரூபாய் 378.90 கோடி மதிப்பில் 33.40 கிலோ மீட்டர் நீள வண்டலூர்–வாலாஜாபாத் சாலை நான்கு வழித் தடத்திலிருந்து ஆறு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை 2020 ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடல்சார் வாரியம். மத்திய அரசின் சாகர் மாலா/ உள்நாட்டுச் சரக்கு தோணித் துறை திட்டத்தின்கீழ் ரூபாய் 135 கோடியில் கடலூர் துறைமுக மேம்பாட்டுப் பணிகள் 2020 ஆம் ஆண்டிற்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கன்னியாகுமரி துறைமுகத்தில், விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத் துறை, ரூபாய் 20 கோடி மதிப்பில் நீட்டிப்பு செய்யப்படவுள்ளது. ரூபாய் 35 கோடி மதிப்பில், கன்னியாகுமரியில், விவேகானந்தர் நினைவுப் பாறையையும், சிறப்பு மிக்க அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைத்து பாதசாரிகள் நடந்து செல்லும் வகையில் சுமார் 140 மீட்டர் நீளம் கொண்ட கடல்சார் பாலம் அமைக்க தமிழ்நாடு கடல்சார் வாரியம் உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம். 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 400 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி துறைமுகங்களில் பெறப்பட்டு, அவற்றில் 393.87 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி, அனல் மின்நிலையங்களுக்கு எடுத்து கொண்டு செல்லப்பட்டன. 2019–2020 ஆம் ஆண்டில் 260 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை அனல் மின் நிலையங்களுக்கு கொண்டு செல்ல இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2017 முதல்

2019 ஆகிய இரண்டு ஆண்டுகளில் கன்னியாகுமரி படகுத் துறையின்மூலம் 41.60 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் படகு சவாரி மேற்கொண்டுள்ளனர். இதற்காக 17.88 கோடி ரூபாய் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. 2019–2020 ஆம் ஆண்டு 20.37 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் படகு சவாரி செய்வதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 3–25

பொதுப் பணித் துறை, நீர்வள ஆதாரத் துறை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீரே மானுடத்திற்கு அமிர்தம்.' உயிர்கள் நீரில் தோன்றின. ஒரு சொட்டு நீரைக்கூட நம்மால் உற்பத்தி செய்ய முடியாது. திருவள்ளுவர் 'புறத்தூய்மை நீரால் அமையும்' என்று குறிப்பிட்டுள்ளார். நீருக்காக பல மைல்தூரம் செல்கின்ற ஊர்கள் உலகத்தில் பல உள்ளன. 'கல்லைப் பிளந்து நீரை வடித்து எடுக்கும்' நாடுகள் உள்ளன. நீர் வளம் உள்ள நாட்டில் பொதுவாக வறுமை இருக்காது, வன்மம் விளையாது, அங்குப் பயிர்கள் செழிக்கும், வயல்கள் தலை அசைக்கும், ஆறுகள் புரண்டோடும், குளங்கள் நிரம்பும். கிணறுகள் ஊறும்; ஏரிகள் வழியும்; மீன்கள் துள்ளும்; மக்கள் செழிப்படைவார்கள். இதனைத்தான் அருந்தமிழ் மூதாட்டியார் ஔவையார் அவர்களும்

"வரப்புயர, நீர் உயரும்,
நீர் உயர, நெல் உயரும்,
நெல் உயர, குடி உயரும்,
குடி உயர, கோல் உயரும்
கோல் உயர, கோன் உயர்வான்"

என்று அந்தக் காலத்திலேயே பாடினார். (மேசையைத் தட்டும் ஒலி) நீரினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, ஔவையார் அவர்கள் அழகாக அந்தப் பாடலைப் பாடியுள்ளார்.

மழை வளம் உள்ள நாடுகளில் விவசாயம் செழிக்கும்; நோயற்ற சூழல் உருவாகும்; பசிப் பிணி இருக்காது; இதனையே

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு"

என்று திருவள்ளுவர், நாட்டிற்கான இலக்கணத்தைக் குறிப்பிடுகிறார். அவர் பசியை, பிணி என்றே கூறுகிறார். அதற்கு மழையே ஆதாரம்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று."

இந்த உலகில் வாழும் உயிரினங்கள் நிலைபெற்று வாழ்வதற்கு இயற்கையின் வரமான மழையே காரணமாக அமைவதால், மழை, அமிழ்தத்திற்கு இணையானது என்பது திருவள்ளுவரின் வாக்காகும்.

அனைத்து உயிரினங்களுக்கும் வாழ்வின் ஆதாரமாகவும், உயிர்நாடியாகவும் உள்ள நீரினைக் கையாள்வதன்மூலம், சமூகத்திற்கான சேவைகளை மேற்கொள்வதில் நீர் வள ஆதாரத் துறை பெருமிதம் கொள்கிறது. அனைத்து வகை நீர்த் தேவைகளுக்கிடையே அளவு மற்றும் தரம் ஆகிய இரண்டிலும் நீர் வளங்களின் உகந்த பயன்பாட்டைத் திட்டமிடுதல், மேம்படுத்துதல், பங்கீடு செய்தல் மற்றும் நிருவகிப்பதே நீர் வள மேலாண்மை ஆகும். சிறந்த மேலாண்மை உத்திகளை மேற்கொள்வதன்மூலம் இருக்கக்கூடிய நீர் வளங்களைப் பாதுகாத்திடவும் உரிய முறையில் பயன்படுத்தவும், அனைத்து முயற்சிகளையும் பொதுப் பணி (நீர் வள ஆதாரத் துறை) சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

இத்துறை ஆற்றிவரும் முக்கிய திட்டங்கள் மற்றும் பணிகள்:

அத்திக்கடவு–அவிநாசி திட்டம். பல ஆண்டுக் காலமாக கனவாக இருந்த இத்திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்த, நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, இன்று பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

திருச்சிராப்பள்ளி முக்கொம்பின் கீழ்ப்புறம் கொள்ளிடம் ஆற்றில் புதிய நீரொழுங்கி அமைத்தல் மற்றும் தற்போதைய நீரொழுங்கியைப் பலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மார்ச் 2021–க்குள் இந்தப் பணிகளை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் வெள்ள உபரி நீரினை, நீரேற்று பாசனம்மூலம் சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்குத் திருப்பிவிடும் திட்டத்திற்கான பணியை 4–3–2020 அன்று நான் துவக்கி வைத்தேன். இதன்மூலம், சேலம் மாவட்டம், 8 ஒன்றியங்களிலுள்ள 100 வறண்ட ஏரிகளில் நீர் நிரப்பப்படும். நிலத்தடி நீர் வெகுவாக உயர்ந்து, இப்பகுதியின் குடிநீர் மற்றும் 4,238 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இது வேளாண் பெருமக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கை. அந்தக் கனவுத் திட்டம் எங்களுடைய அரசால்

நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் நிறைவேறும்போது இன்னும் ஆயிரக்கணக்கான நிலங்கள் பாசன வசதி பெறும். பசுமை தழைக்கும். சிற்றூர்களில் உள்ள வேளாண் பெருமக்களின் மனம் குளிரும். கிராமங்களில் வேலைவாய்ப்புகள் பெருகும். நிலத்தடி நீர் உயரும். தமிழகம் இன்னும் தழைத்தோங்கும்.

கடலூர்–நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, தலைமதகுடன்கூடிய கதவணை அமைக்கும் பணி வேகமாக, துரிதமாக நடைபெற்று வருகிறது. தாமிரபரணி–கருமேனியாறு–நம்பியாறு நதிகள் இணைப்புத் திட்டத்தின் பகுதி–1 மற்றும் 2–ல், 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) நிலம் எடுக்கக்கூடிய 10 சதவிகித பணி வேகமாகவும், துரிதமாகவும் நடைபெறுவதற்கு அதிகாரிகளுக்கு உரிய உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. பகுதி 3–ல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பகுதி 4–ல் பணிகளை மேற்கொள்வதற்கு விரைவில் ஒப்புதல் வழங்கப்படவுள்ளது. காவேரியில், பாசனக் கட்டமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இதற்கான பணி, 15 தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. குடிமராமத்து, காவேரி டெல்டா சிறப்பு தூர்வாருதல் மற்றும் 'நடந்தாய் வாழி காவேரி' திட்டப் பணிகள் நடைபெற அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

நதிகளின் பல இடங்களில் கழிவுநீர் கலந்துவிடுவதால் நதி நீர் மாசடைவதாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் தெரிவித்தார். நதி நீர் மாசடைவதைத் தடுப்பதற்காக 'நடந்தாய் வாழி காவேரி' திட்டத்தின் மூலமாக நதிகளைத் தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய அரசு எடுத்து வருகிறது. காவேரி முதல் கொள்ளிடம் வரை செல்கின்ற காவேரி ஆற்றில், எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம் கழிவு நீர் கலக்கின்றதோ, அந்தப் பகுதிகளிலுள்ள கழிவுநீரைச் சுத்திகரித்த பிறகுதான் நீர் ஆற்றில் விடப்படும். பவானிசாகர் அணையிலிருந்து வெளியேறுகின்ற நீர் வருகின்ற வழியில் பல இடங்களில் கழிவு நீர் கலக்கின்றது. அதைப்போல, வைகை ஆறு, தாமிரபரணி ஆறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆறு, அதுமட்டுமல்லாமல் அமராவதி ஆறு உள்ளிட்ட பல ஆறுகளில் கழிவு நீர்

கலக்கிறது. ஆகவே, அப்படி கழிவுநீர் கலப்பதால் சுத்தமான நீர் மாசடைகின்றது. இதனால் குடிநீரில் வருகின்றபோது பல்வேறு நோய்கள் வருகின்றது. இதையெல்லாம் கருதிதான் 'நடந்தாய் வாழி காவேரி' என்ற திட்டத்தினை முதற்கட்டமாக எங்களது அரசு இன்றைக்கு எடுத்திருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும ஒலி)

பிற்பகல் 3–30

உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய நீரியல் மற்றும் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டம் போன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களை பொதுப் பணி நீர்வள ஆதாரத் துறை மேற்கொண்டு வருகின்றது. அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம் சிறப்பாகச் செயல்படுவதை மத்திய அரசு பாராட்டி தமிழ்நாடு பொதுப் பணித் துறை நீர்வள ஆதாரத் துறைக்கு 2020 ஆம் ஆண்டிற்கான மத்திய நீர் பாசன மற்றும் எரிசக்தி வாரிய விருது எங்களுடைய அரசுக்குக் கிடைத்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நதிகள் மறுசீரமைப்புப் பணிகள். சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையின்கீழ் அடையாறு மற்றும் கூவம் ஆறு சீரமைக்கும் வகையில் நீர்வள ஆதாரத் துறை ஒரு செயலாக்கத் துறையாக உள்ளது. பருத்திப்பட்டு அணைக்கட்டு முதல் கூவம் முகத்துவாரம் வரை உள்ள சுமார் 27 கி.மீ. நீளத்தை 9 நிலைகளில் ரூ.93 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

நீர்வள ஆதாரங்கள், மேற்பரப்பு நீர் வளம். மாநிலத்திலுள்ள 34 பெரிய ஆறுகள் 17 ஆற்று வடிநிலங்கள் ஆகவும், 127 உப வடிநிலங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் இயல்பான மழை அளவு 911.60 மி.மீ. ஆகும். மாநிலத்தின் மொத்த மேற்பரப்பு நீர்வள ஆதாரம் அண்டை மாநிலத்திலிருந்து பன்மாநில ஒப்பந்தங்களின்படி பெறப்படும் 249 டி.எம்.சி. அடி நீரினையும் உள்ளடக்கி 885 டி.எம்.சி. அடி நீர் ஆகும். நிலத்தடி நீர் வளம். நிலத்தடி நீர்வளத்தின் இருப்பு மற்றும் தரம் நீர்வள ஆதாரத் துறையினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நிலத்தடி நீர்வளம் நுண்ணிய ஆய்வின் அடிப்படையில் மாநிலத்திலுள்ள 1166 குறுவட்டங்களில் 462 குறு வட்டங்கள்

அதிக நுகர்வு குறு வட்டங்களாகவும், 79 அபாயகரமானதாகவும், 163 மித அபாயகரமானதாகவும், 35 உவர் நீராகவும், 427 பாதுகாப்பானதாகவும், வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் நிலத்தடி நீர்வளத்தினை பாதுகாத்து சேகரிக்க மற்றும் மேம்படுத்த தடுப்பணைகள், படுக்கை அணைகள், கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச் சுவர்கள், நீர் செறிவூட்டும் துளைகள் மற்றும் கசிவுநீர்க் குட்டைகள் போன்ற கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறை ஆற்று வடிநிலங்களின் அடிப்படையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களாக இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலைமை ஏற்கும் தலைமைப் பொறியாளர் அவரது வரையறுக்கப்பட்ட பகுதியில் உள்ள ஆற்று வடிநீர் மேலாளராகச் செயல்படுகின்றனர். இதுதவிர 7 செயல்பாட்டுப் பிரிவுகள் மற்றும் 4 சிறப்பு அம்சங்கள் கொண்ட நீர்வள ஆதாரத் துறையின் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொழிற்சாலையில் உள்ள கொதிகலன்களைக் கண்காணித்து சான்றிதழ் வழங்கும் பணியினை கொதிகலன்களின் இயக்கம் மேற்கொள்கிறது.

குடிமராமத்துப் பணிகள். நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்யும்பொருட்டு பயனற்ற நிலையிலுள்ள நீர்நிலைகளை மறுசீரமைக்கும் குடிமராமத்துப் பணிகளை 2016–2017 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு செயல்படுத்தத் தொடங்கியது. இத்திட்டத்தினை நிறைவேற்றியதன்மூலம் நிலத்தடி நீர் உயர்ந்து சாகுபடி பரப்பும் அதிகரித்துள்ளது. நீர்நிலைகளைப் பராமரித்தல் சமுதாயத்தில் புத்துயிர் பெற்றுள்ளது. விவசாய சங்கங்கள் பாசன சபைகள், ஆயக்கட்டுதாரர்கள் மற்றும் ஆயக்கட்டுதாரர்கள் குழுவிற்கு நியமன அடிப்படையில் குடிமராமத்துப் பணிகள் வழங்கப்படுகின்றன. இந்தக் குடிமராமத்து திட்டத்தினைப் பொறுத்தவரைக்கும் முழுக்க முழுக்க விவசாயிகளின் பங்களிப்புடன்தான் இந்தத்தி ட்டம் நிறைவேற்றப்படுகின்றது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குடிமராமத்துப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் குழு

குடிமராமத்து மற்றும் டெல்டா பகுதிகளில் தூர்வாரும் பணிகளைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கின்றது. குறித்த காலத்தில் பணிகள், சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதால் 2019–2020 இல் டெல்டா பகுதிகளில் கடைமடைக்கு தண்ணீர் வெகுவிரைவாகச் சென்றடைந்து விவசாயிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர். 2020–2021 ஆம் ஆண்டில் 34 மாவட்டங்களில் 1364 குடிமராமத்துப் பணிகள் ரூ.500 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் உள்ள ஆயிரக்கணக்கான ஏரிகளைத் தூர்வாரும் பணிகளை இவ்வரசு தொய்வின்றி செய்து வருகின்றது. கரைகளை உயர்த்திக் கட்டி, நீர்நிலைகளின் கொள்திறனை அதிகரித்து நாம் செய்த பணிகளால் நம் மாநிலம் தொடர்ந்து வேளாண்மை உற்பத்தியில் எண்ணற்ற விருதுகளை அள்ளிக்கொண்டு வந்திருக்கின்றது.

பிற்பகல் 3–35

புதிய தடுப்பணைகள், கதவணைகள் கட்டுதல். தமிழகத்தில் விவசாயம் மற்றும் குடியிருப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டு ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் மூன்று ஆண்டுகளில் ஆறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், நிலத்தடிகீழ் தடுப்புச் சுவர்கள், அணைக்கட்டுகள் போன்ற கட்டுமானங்களைக் கட்டி நீர் தேக்கி வைக்க திட்டம் தீட்டப்பட்டு, கடந்த 3 ஆண்டுகளில் 692.55 கோடி ரூபாய் மதிப்பில் 133 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் தடுப்பணைகள், தரைமட்ட தடுப்புச் சுவர் போன்ற கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளதால் கடலில் கலக்கும் நீர் தடுக்கப்பட்டு, நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இப்பணிகள் நாளேடுகளால் சிறப்பாகப் பாராட்டப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேவகையில் நீர்வள ஆதாரத்தை மேலும் பெருக்குவதற்கு பெரிய நதிகளான காவேரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் வெள்ளக் காலங்களில் ஏற்படும் வெள்ள உபரிநீர் கடலில் கலப்பதைத் தடுக்கும்பொருட்டு தடுப்பணைகள் மற்றும் கதவணைகள் கட்ட ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

சென்னை மாநகர குடிநீர் ஆதாரத்திற்கு பொதுப் பணி நீர்வள ஆதாரத் துறை ஆற்றும் பங்கு: வளர்ந்து வரும் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு நீட்டிக்கப்பட்ட சென்னை பெருநகரத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்கெனவே உள்ள நீர்த்தேக்கங்களுடன் சேர்த்து மேலும் 1 டி.எம்.சி. அடி நீரைத் தேக்கி

வைக்கக்கூடிய தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத்தில் 97 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டு, நடப்பாண்டில் சென்னை மாநகர குடிநீர் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள், அந்தப் பணி காலதாமதமாகிக் கொண்டிருக்கின்றது; விரைவாக முடிக்க வேண்டுமென்று கேட்டார்கள். நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்ற காரணத்தினாலே அந்தப் பணியில் தொய்வு ஏற்பட்டது. இன்றைக்கு நீதிமன்றத்திலே தீர்ப்பு பெறப்பட்டிருக்கின்றது. வேகமாக, துரிதமாக அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதுவரை 97 சதவிகிதப் பணிகள் முடிவு பெற்றிருக்கின்றது. எஞ்சிய 3 சதவிகிதப் பணிகள்தான் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. அதுவும் இன்னும் 3 மாதத்தில் இந்தப் பணிகள் முழுவதும் முடிவுபெற்று பூர்த்தியாகி அடுத்த ஆண்டு நம்முடைய சென்னை மாநகர மக்களுக்கு அங்கேயிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், கிருஷ்ணா நதியிலிருந்து சென்னையின் குடிநீர்த் தேவைக்காக தண்ணீர் திறந்துவிடக்கோரி நான் எழுதிய கடிதத்தினை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் மரியாதைக்குரிய திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் இதுவரை கிருஷ்ணா நதியிலிருந்து சென்னையின் குடிநீர் தேவைக்காக 6.6 டி.எம்.சி. தண்ணீர் ஆந்திரா அரசால் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவே, நாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சென்னை மாநகர மக்களுக்கு தடையில்லாமல் குடிநீர் கிடைப்பதற்காக எந்தவித தடையுமில்லாமல் விரைவாக, வேகமாக 6.6 டி.எம்.சி. தண்ணீரை வழங்கிய மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகர மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நீர்நிலையில் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து சீரமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் நடப்பாண்டில் செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டத்திலுள்ள சிட்லபாக்கம் ஏரி,

ஈரோடு மாவட்டம், பவானி ஓடத்துறை ஏரி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆதம்பாக்கம், பெரும்பாக்கம், வேங்கைவாசல் ஏரிகளை 12 கோடி ரூபாய் மதிப்பில் மறுசீரமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

பன்மாநில நதிநீர் பிரச்சினைகள். காவேரி நதிநீர். மாண்புமிகு அம்மா அவர்கள் மேற்கொண்ட தொடர் சட்டப் போராட்டத்தினாலும் உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19–2–2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டதை இந்த மாமன்றம் அறியும். இறுதி ஆணையில் உள்ள பரிந்துரையின்படி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க தமிழ்நாடு அரசு எடுத்த தொடர் முயற்சி மற்றும் சட்டப் போராட்டத்தின் காரணமாக காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆணையம் 5 கூட்டங்களை நடத்தியுள்ளது. காவேரி நீர் முறைப்படுத்தும் குழு 26 முறை கூடியுள்ளது. இக்கூட்டங்களில் தமிழ்நாடு அரசின் கருத்துகள் மிகவும் வலிமையாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட உத்தேசித்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு எப்போதும் உறுதியாக உள்ளது. மேகதாதுவிலோ அல்லது வேறு எந்தவொரு இடத்திலோ காவேரி நடுவர் மன்ற இறுதியாணை மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஆகியவற்றை மீறும் வகையில் அணையைக் கட்டுவதற்காக கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை தடுத்து நிறுத்திடவும், தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாத்திடவும் அனைத்து நடவடிக்கைகளும் எங்களுடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–40

கேரள மாநில முதலமைச்சருடன் 25–9–2019 அன்று நதிநீர் சம்பந்தமாக சந்தித்தது மற்றும் அதன் தொடர் நடவடிக்கைகள்:

1) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் ஒப்பந்தம் மறுஆய்வு. இதை ஏற்கெனவே நான் தெரிவித்திருக்கிறேன். இருந்தாலும் ஒரு மிக முக்கியமான பிரச்சினை. மேற்கு நோக்கி ஓடுகின்ற 8 நதிகளில், அதாவது மலைப்பகுதியில் செல்கின்ற ஆனைமலையாறு,

நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் அதன் கிளை நதிகளான பெருவாரிப்பள்ளம், தூணக்கடவு மற்றும் சமவெளிப் பகுதியில் ஓடுகின்ற ஆழியாறு மற்றும் பாலாறு ஆகிய நதிகளில் கிடைக்கக்கூடிய நீரைப் பயன்படுத்தும் வகையில் இரண்டாவது 5 ஆண்டுத் திட்டத்தில் கேரள அரசின் இசைவுடன் தமிழ்நாடு அரசினால் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது. கேரளா மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கிடையே 29–5–1970 அன்று மேற்குறிப்பிட்டுள்ள நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரை இரு மாநிலங்களிலும் மின் உற்பத்தி, பாசனம், குடிநீர் வழங்குதல், தொழிற்சாலைகள் பயன்பாடு மற்றும் இதர உபயோகங்களுக்காகப் பயன்படுத்தும்பொருட்டு, 9–11–1958 முதல் முன்தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தினால் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், திருப்பூர் மாவட்டத்தில் பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் ஆகிய வட்டங்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தில் உள்ள பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களும் பயனடைகின்றன. இந்த ஒப்பந்தம் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி, 9–11–1988 அன்று மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இரு மாநிலங்களும் இந்த ஒப்பந்த மறு ஆய்வுக்கான ஆவணங்களை 21–9–1989 அன்று பரிமாற்றம் செய்துகொண்டன. இந்த ஒப்பந்த மறு ஆய்வு குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நிலையில் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

தமிழ்நாடு விவசாயிகளின் நலன் காக்கவும் மற்றும் பல மாவட்டங்களின் குடிநீர் ஆதாரங்களைப் பெருக்குவதற்கும், கேரளா மாநிலத்துடன் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக, மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் அவர்களை 25–9–2019 அன்று திருவனந்தபுரத்தில் நானும், நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஆகியோர் சென்று சந்தித்து, பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். இப்பேச்சுவார்த்தையின்போது, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தின் ஒப்பந்த மறு ஆய்வு செய்தல் ஒப்பந்தப்படி ஆனைமலை ஆற்றிலிருந்து 2.5 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பும் திட்டம்; மணக்கடவின் மேற்பகுதியில் சமச்சீர் நீர்த்தேக்கம் அமைத்தல்; நீராறு–நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்புத் திட்டம், பாண்டியாறு–புன்னம்புழா திட்டம், நெய்யாறு பாசனத் திட்டத்திற்கு நிறுத்தப்பட்ட

நீரை மீண்டும் வழங்குதல், செண்பகவல்லி அணையைச் சீரமைத்தல் போன்ற முக்கியத் திட்டப் பணிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, செயலாளர்கள் தலைமையில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட இரு குழுக்கள் முறையே பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்த மறு ஆய்வு, பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்தைப் பரிசீலிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் குறித்து இரு மாநில முதன்மைச் செயலாளர்கள் தலைமையில் இயங்கும் குழுவின் முதல் கூட்டம் 12–12–2019 அன்று சென்னையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, சுமுகமான முடிவுகளை எட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகாநதி–கோதாவரி–கிருஷ்ணா–பெண்ணாறு–பாலாறு–காவேரி–வைகை–குண்டாறு இணைப்புத் திட்டம். நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். இது ஒரு மிகவும் முக்கியமான திட்டம். ஆதலால், இதைப் பற்றி மீண்டும் இந்த அவையில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன். இது மிக முக்கியமான திட்டம். ஏனென்றால், அனைத்து விவசாயிகளும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எப்பொழுது இந்தத் திட்டம் நிறைவேறும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், மீண்டும் ஒரு முறை இந்தத் திட்டத்தைப் பற்றி நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தின்கீழ் மகாநதி–கோதாவரி–கிருஷ்ணா–பெண்ணாறு–பாலாறு–காவேரி–வைகை–குண்டாறு மற்றும் பம்பா–அச்சன்கோவில்–வைப்பாறு நதிகளை இணைக்கும் திட்டங்களைச் செயல்படுத்த மத்திய அரசையும், 27–2–2012–ல் ஏற்கெனவே உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி மத்திய அரசு அமைத்துள்ள சிறப்புக் குழுவையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

மேலும், தமிழ்நாடு நீர் பற்றாக்குறையுள்ள மாநிலமாக உள்ளதால், கூடுதலான நீரை வழங்கவும், ஆந்திரப்பிரதேசம்–தமிழ்நாடு எல்லையிலிருந்து இந்த இணைப்புக் கால்வாய் உயர்மட்டத்தில் அமைக்கப்பட்டு, காவேரியில் கல்லணைக்குப் பதிலாக கட்டளை கதவணையில் சேரும் வகையில்

இணைக்கப்படுமேயானால், தேவையுள்ள இடங்களுக்கு நீரை வழங்கவும், வைகை–குண்டாற்றுக்கு நீரை எடுத்துச் செல்ல ஏதுவாகவும் இருக்கும் எனவும் கோரப்பட்டுள்ளது. மேலும், 19–12–2019 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், கோதாவரி–காவேரி நதிகள் இணைப்பின் விரிவான திட்ட அறிக்கையை விரைவில் தயாரித்து முடிக்க சம்பந்தப்பட்ட அமைப்புகளை அறிவுறுத்துமாறு மீண்டும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே, மத்திய அரசு, கோதாவரி–காவேரி இணைப்பிற்கான விரிவான வரைவு திட்ட அறிக்கையை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்பி வைத்து, அம்மாநிலங்களின் கருத்துகளைக் கோரியது. மாண்புமிகு ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தெலுங்கானா முதலமைச்சர் அவர்களையும் இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்துவதற்கு ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர்களை அனுப்பி கேட்டுள்ளேன். மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் குழு 4–3–2020 அன்று மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் அவர்களையும், 5–3–2020 அன்று மாண்புமிகு தெலுங்கானா மாநில முதலமைச்சர் அவர்களையும் நேரில் சந்தித்து, தமிழ்நாட்டின் கோரிக்கையை எடுத்துரைத்தனர். இரு மாநில மாண்புமிகு முதலமைச்சர்களும் இக்கோரிக்கையினைப் பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மத்திய ஜல்சக்தி அமைச்சரிடத்தில், தமிழ்நாட்டில் கோதாவரியிலிருந்து குறைந்தபட்சம் 200 டி.எம்.சி. அடி நீர் அளிக்கும்படியும், மகாநதி–கோதாவரி இணைக்கப்படும்போது தமிழ்நாட்டிற்கு திருப்பப்படும் நீரின் அளவை உயர்த்தி, அதாவது, 300 டி.எம்.சி. அடி நீர் கிடைக்க வழிவகை செய்யுமாறும் மற்றும் விரிவான திட்ட அறிக்கையை விரைந்து தயாரித்து, இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து நிறைவேற்றித் தரும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மாநிலத்திற்குள் நதிநீர் இணைப்பு. காவேரி–அக்னியாறு–தெற்கு வெள்ளாறு–மணிமுத்தாறு–வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாய் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இத்திட்டம் ரூ.7,677 கோடி மதிப்பீட்டில் இணைப்புக் கால்வாய் அமைப்பதற்காக நிருவாக ஒப்புதல் விரைவில் வழங்கப்படவுள்ளது.

பிற்பகல் 3–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல் சக்தி என்று அந்த அமைச்சகத்திற்கு ஹிந்தியில் பெயர் வைத்துவிட்டார்கள் போலும். தமிழகத்தில்தான் இன்றைக்கு அதிகமான குடிநீர்த் தட்டுப்பாடு இருக்கிறது. இதை மாண்புமிகு பிரதமர் அவர்களும் சொல்லியிருக்கிறார். மற்றவர்களும் வெளியிட்டிருக்கிறார்கள். ஜீவ நதிகள் ஓடும் வட மாநிலங்களான பீஹார், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் 'ஜல் சக்தி' list–ல் சேர்க்கப்பட்டுள்ளன. ஆனால், தமிழ்நாடு அதில் சேர்க்கப்படவில்லை. அது ஏன் என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு பிரதமர் அவர்களைப் பார்க்கும்போதும் இந்தக் கோரிக்கையை வைக்கின்றோம். மத்திய நீர்வளத் துறை அமைச்சரைப் பார்க்கும்போதும் இந்தக் கோரிக்கையை வைக்கின்றோம். அவர்களுடைய ஆட்சிக் காலமாக இருந்தாலும் சரி, நாங்கள் ஆட்சி செய்கின்ற காலமாக இருந்தாலும் சரி, மத்தியிலிருந்து எந்த நிதியும் பெறப்பட்டதாக இல்லை. மத்தியிலே ஆட்சி அதிகாரத்திலே இருந்தபோதும்கூட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் நிதியைப் பெற முடியவில்லை. ஆட்சி அதிகாரத்திலிருந்தபோதே நிதி பெற முடியாதபோது, நாங்கள் எப்படிப் பெற முடியும் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இருந்தாலும், நமது தமிழ்நாட்டு வேளாண் பெருமக்களின் எண்ணங்களை ஈடேற்றும் விதமாக தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்திக்கொண்டு வருகின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காவேரி–அக்னியாறு–தெற்கு வெள்ளாறு–மணிமுத்தாறு–வைகை–குண்டாறு இணைப்புக் கால்வாய்த் திட்டத்தின் முதல் பகுதி (Phase–I) பணிகளைச் செயல்படுத்துவதற்காக கட்டளை கதவணையிலிருந்து தெற்கு வெள்ளாறு வரை சுமார் 1,321.68

ஏக்கர் பட்டா நிலமும், 346.69 ஏக்கர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நிலம் எடுப்பதற்கு தோராயமாக 1486.89 கோடி ரூபாய் ஆகும். இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த நில எடுப்பு பணிக்காக 700 கோடி ரூபாய் முதல் ஒதுக்கீடாகச் செய்யப்பட்டுள்ளது.

பெண்ணையாறு–செய்யாறு இணைப்புத் திட்டம். இத்திட்டத்திற்கான விரிவான நில அளவைகள் மற்றும் மட்ட அளவுகள் எடுப்பதற்கான பணிக்கு 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்க, நில அளவை மற்றும் மட்ட அளவு எடுக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. பெண்ணையாறு – பாலாறு இணைப்புத் திட்டம். இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வள ஆதார மேம்பாட்டுக் குழுமம். நீர்வள ஆதாரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தைக் கருதி, தமிழ்நாடு முழுவதும் ஆராய்ந்து, நீராதாரங்களை மீட்டெடுத்தல், சேமிப்புத் திறனை அதிகரித்தல் மற்றும் மாநிலத்தின் நீர்வள ஆதாரங்களை வளப்படுத்துதல் போன்ற அரிய பல திட்டங்களை விரைந்து செயலாக்க ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் தலைமையில், ஓய்வுபெற்ற 5 பொறியாளர்கள் அடங்கிய நீர்வள ஆதார மேம்பாட்டுக் குழுமம் ஒன்று 15–5–2018 அன்று அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளைச் சீரமைத்தல் கழகம் என்ற புதிய அமைப்பு ஓய்வுபெற்ற I.A.S. அதிகாரி தலைமையில் 25–12–2019 முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. நீர்வள ஆதாரங்களை மேம்படுத்தவும் மற்றும் நீர்நிலைகளின் சேமிப்புத் திறனை அதிகரிக்கவும், பருவமழையால் கிடைக்கப்பெறும் நீரை திறம்பட சேமிக்கவும், கடல் நீர் உட்புகுதல் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுதலைத் தடுக்கவும், பல விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகளை அரசுக்கு அளித்து வருகிறார்கள். அவை ஆராயப்பட்டு, பெரிதும் பயனுள்ள திட்டங்களுக்கு அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, தற்போது செயலாக்கத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள ஒரு சில திட்டங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, காட்டூர் மற்றும் தட்டமஞ்சி இரட்டை ஏரியின் கொள்ளளவை மேம்படுத்தி, புதிய

நீர்த்தேக்கம் மற்றும் கடல் நீர் உட்புகுதலைக் கட்டுப்படுத்துவதற்கு 62.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் 0.7 டி.எம்.சி. அடி நீரைச் சேமிக்க இயலும். இது சென்னை மாநகரத்தின் வடக்குப் பகுதியின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய உதவியாக இருக்கும்.

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டத்தில் அமைந்துள்ள கழுவேலி ஏரியினை மீட்டெடுத்து, நீர்த்தேக்கம் அமைத்தல் மற்றும் கடல் நீர் உட்புகுதலைக் கட்டுப்படுத்தி 161 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டத்தைச் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் வீணாக கடலில் சென்று கலக்கக்கூடிய சுமார் 4 டி.எம்.சி. நீரை அங்கே சேமிக்க முடியும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 48.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திருவாரூர் மாவட்டத்தில் 11.74 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நிலத்தடி நீர் செயற்கை செறிவூட்டும் கட்டுமானங்கள் அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.

ஆற்று மணலுக்கு மாற்றாக M–Sand பயன்படுத்துதல். ஆற்று மணலுக்கு மாற்றாக M–Sand எனப்படும் நொறுக்கப்பட்ட கல் மணல் (CS–sand crushed stone sand) கட்டுமானப் பணிக்குப் பயன்படுத்தப்படுகிறது. நல்ல தரமான உறுதியான கற்களை சரியான இயந்திரங்கள்மூலம் நொறுக்கி, இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் விதிமுறைகளுக்கிணங்க உற்பத்தி செய்யப்படும் M–Sand–ஐ கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பொது மக்கள் தரமான M–Sand பயன்படுத்த விழிப்புணர்வு கையேடு மற்றும் விழிப்புணர்வு குறும்படம் தயாரிக்கப்பட்டு, திரையரங்குகளில் வெளியிடப்பட்டுள்ளது. பத்திரிகைகள் மற்றும் நாளிதழ்களில் விவரங்கள் வெளியிடப்பட்டு, தற்போது பொது மக்கள் பெரிதும் M–sand–ஐப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

பிற்பகல் 3–50

பொதுப் பணிக் கட்டடம்: பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அணைகளோடு நின்று விடுவதில்லை. கட்டடங்களையும் அதைக் கோட்டைகளைப்போல உருவாக்கும் பெருமைகொண்ட துறை இந்தக் கட்டடத் துறை. மாவட்ட ஆட்சியாளர் வளாகங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசு அலுவலகங்கள், பயிற்சிக் கூடங்கள்

மற்றும் அரசு விடுதிகள் போன்ற அனைத்தையும் உருவாக்கும் பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு செயல்படுகின்றவர்கள் நம்முடைய பொதுப் பணித் துறை பொறியாளர்கள். பொதுப் பணித் (கட்டடங்கள்) துறையின்மூலம் அரசின் 32 துறைகளின் தேவைக்கேற்ப இன்றைய தொழில்நுட்பத்துடன் கலைநயமிக்க கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பழமையான, புராதனக் கட்டடங்களைப் புதுப்பிக்கும்விதமாக அதன் தன்மை மாறாவண்ணம் புனரமைக்கும் பணியையும் மேற்கொள்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நினைவிடத்தை மிகப் பிரம்மாண்டமாக அனைவரும் வியக்கும்வண்ணம் சிறப்புமிக்க வடிவமைப்புடன் கட்டும் பணி நிறைவடையும் தருவாயில் உள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இந்தியாவிலேயே மிக அதிகமான 11 மருத்துவக் கல்லூரிகளை ஒரே ஆண்டில் பெற்ற மாநிலம் தமிழ்நாடு தான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தற்போது அந்த மருத்துவக் கல்லூரிகளுக்கான கட்டடங்களையும் பிரமிக்கத்தக்கவகையில் நவீன வசதிகளுடன் அமைக்க பொதுப் பணித் (கட்டடங்கள்) துறை ஆயத்தமாக உள்ளது. அதன் வரைபடத்தை எல்லாம் இங்கே காட்டியிருக்கிறேன். அற்புதமான கட்டடம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பார்த்திருப்பீர்களென்று நினைக்கிறேன். வண்ணப்படத்தோடு கொடுத்திருக்கிறோம். அதையெல்லாம் பாருங்கள். மிக நவீன முறையில் எழுச்சிமிக்க கட்டடம் உருவாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களுக்கும் புதிய ஆட்சித் தலைவர் வளாகங்களை உருவாக்கவும் பொதுப் பணித் துறை தயாராக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நவீன முறையில் அனைத்து வசதிகளுடனும்கூடிய கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும்.

ஆசியாவிலேயே மிகப் பெரிய கால்நடைப் பூங்கா அமைய உள்ளது. அந்தக் கால்நடைப் பூங்காவிலும் பிரம்மாண்டமான கட்டடம். அற்புதமான கட்டடம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரைபடத்தோடு உங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அதையும் நீங்கள் பாருங்கள். எவ்வளவு அழகாக அந்தக் கட்டடத்தை நம்முடைய பொறியாளர் கட்டுகிறார் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர விரும்புகிறேன். தனியார் கட்டடத்தைவிட கூடுதல் வசதிகளுடைய நவீன முறையில் எல்லா வசதிகளுடன்கூடிய கட்டடங்கள் இங்கே கட்டிக் கொடுக்கப்படுகின்றன. என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தைப் பொறுத்தவரை, நாம் அண்டை மாநிலங்களையும், விண்ணையும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் பூமி. இங்கு வற்றாத ஆறுகள் எதுவும் வளமாக ஓடவில்லை. இச்சூழலில் தமிழக அரசு விழுகிற ஒவ்வொரு துளி நீரையும் வீணாக்காமல் சேமித்து நீர்நிலைகளை நோக்கிப் பாய வைத்து அதைப் பயன்படுத்தி வருகிறது. நம் ஏரிகளும், குளங்களும் நீரைச் சேமிக்கும் உண்டிகளாக இருக்கின்றன. மழைநீரை அமுதமாகக் கருதி சேமித்து வருகிறோம். தடுப்பணைகள் கட்டியும், நிலத்தடி நீரை அதிகப்படுத்தியும், மழைநீரைத் தேக்கி வைத்தும், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தும், ஆற்றில் ஓடிவரும் உபரிநீரை ஏரிகளுக்குக் கொண்டு சென்றும், நாம் நம்முடைய நதி நீரின் பற்றாக்குறையை நெற்றி வியர்வைகளால் ஈடுகட்டி நிரப்பி வருகிறோம். நம் உழவர் பெருமக்களும் சொட்டு நீரையும் வடிய விடாமல் முறையாகப் பயன்படுத்தி மகசூல் செய்திருக்கிறார்கள். நம் நீர்த்தேக்கங்களின்மூலம் அருகிலிருக்கும் மக்களுக்கு குடிநீரை ஆண்டு முழுவதும் வழங்கி வருகிறோம். தமிழகத்தின் முதலமைச்சராக என்னை நான் நினைத்துக்கொள்வதைவிட இந்த மண்ணில் வாழும் மக்களுக்குப் பணி செய்யும் சேவகனாக (மேசையைத் தட்டும் ஒலி) என்னைக் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் எந்த விவசாயக் குடும்பத்தில் பிறந்தேனோ, அந்த விவசாயப் பெருமக்களின் இன்னல்களை உணர்ந்து வளர்ந்த காரணத்தினால் இன்று அந்த விவசாயப் பெருமக்களுக்கு ஒரு உழவன் வீட்டுப் பிள்ளையாக இருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கான சிறப்பான சேவைகளை உளமார செய்து வருகிறேன். காரில் பயணம் செய்கின்றபோது அடைகின்ற பெருமிதத்தைவிட திருவாரூரில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டிய கூட்டத்தில் கலந்துகொள்ள (மேசையைத் தட்டும் ஒலி) உழவர் பெருமக்களின் மாட்டு வண்டியில் ஏறி அந்த மாட்டு வண்டியை நான் ஓட்டிச் சென்றபோது, அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவரின் ஆயுள் காலத்தில் அவரவர் எதிர்கொள்ளும் சவால்களும், சாதனைகளும் நீங்காத நினைவுகளாகும். அதேபோல, 1989–ல் மாண்புமிகு அம்மா அவர்களின் மாணவனாக எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் தொடங்கி என்னுடைய பொது வாழ்வில் எத்தனையோ நினைவுகள் நீங்காத இடம் பிடித்திருக்கின்றன. ஆனால், அந்த நினைவுகளில் இன்று மேலோங்கி நின்று எனக்கு பெருமகிழ்வைத் தருகின்ற ஒரே சம்பவம் இதுதான். இந்தப் பேரவையில் எத்தனையோ சட்டமுன்வடிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அவை இப்பேரவையில் பேரவை உறுப்பினர்களின் பேராதரவோடு சட்டங்களாக மலர்ந்திருக்கின்றன.

பிற்பகல் 3–55

நான் இது காலம்வரை, எந்த சட்டமுன்வடிவையும் அவையில் சமர்ப்பித்தது இல்லை. இப்பேரவையில் நான் சமர்ப்பித்த ஒரே சட்டமுன்வடிவு டெல்டா எனப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) படுகை விவசாயப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கக் கோரும் சரித்திர புகழ்மிக்க சட்டமுன்வடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேரவையில் நான் சமர்ப்பித்த ஒரே சட்டமுன்வடிவு டெல்டா எனப்படும் படுகை விவசாயப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிக்கக் கோரும் சரித்திர புகழ்மிக்க சட்டமுன்வடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவே பெரும் ஆதரவுடன் சட்டம் ஆக்கப்பட்டது. ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த நான், இந்தச் சட்டமுன்வடிவை இப்பேரவையில் முன்மொழிந்து, அதனைச் சட்டமாக்கி இருப்பதை நினைத்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை என் வாழ்வில் பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தகைய வாய்ப்பை வழங்கிய காலத்திற்கும், கடவுளுக்கும், நாங்கள் தெய்வமாக வணங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வேளையில் என் நெஞ்சார்ந்த நன்றிதனைச் சமர்ப்பித்து, வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பற்றாக்குறை என்பது ஒரு நிருவாகத்திற்கான சவால். அதுவே மிகை என்னும் மேன்மையை எட்டும்போது, அது சவாலே சமாளி என்று சாதனை ஆகிவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்றவுடன், தமிழக மக்களுக்கு அவர் தந்த வாக்குறுதி, அமலில் இருந்த பல மணிநேர மின்வெட்டை, அடியோடு துடைத்தெறிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை ஒரு மின் மிகை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்பதுதான். அதனை சொன்னபடியே, நிறைவேற்றிக் காட்டினார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மின்வெட்டு என்ற வார்த்தையை தமிழகத்தின் எல்லைக்குள் இருந்தே அப்புறப்படுத்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். அதுபோலவே, அந்தப் பேரறிவுத் தாயின் பெருமைமிக்க அரசியல் வழித்தடத்தில், விழிப்போடு நடக்கிற இந்த

ஆட்சியில் நீர் மிகை மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்ட வேண்டும் என்பதுதான் எனது இலட்சியம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோலவே, அந்தப் பேரறிவுத் தாயின் பெருமைமிக்க அரசியல் வழித்தடத்தில், விழிப்போடு நடக்கிற இந்த ஆட்சியில் நீர் மிகை மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டை மாற்றிக் காட்ட வேண்டும் என்பதுதான் எனது இலட்சியம். இதனை நிறைவேற்ற நான் எடுத்துவரும் அனைத்து முயற்சிகளுக்கும் அரசியல் கடந்து அனைவரும் உற்ற துணை நிற்க வேண்டுமென்று அன்போடு வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அமைச்சரவையில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக என்னை நியமித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சிறப்பான முறையில் பணியாற்றினேன். 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று, மாண்புமிகு அம்மா அவர்கள், மீண்டும் மாண்புமிகு அம்மா அவர்களது அமைச்சரவையில் நெடுஞ்சாலைத் துறை மற்றும் கூடுதலாக பொதுப் பணித் துறையையும் வழங்கி என் வாழ்வில் ஒளியேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் மறைவிற்குப் பிறகு, கழக சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களின் பெரும் ஆதரவோடு, தமிழ்நாட்டின் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உயர்ந்த இடத்தை, ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கு அளித்து, பெருமை சேர்த்தார்கள். வாழ்நாளில் நினைத்துப் பார்க்க முடியாத பதவியினை கழக சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிருவாகிகள், கழகத் தொண்டர்கள் எனக்கு வழங்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொண்டன்கூட உயர்ந்த பதவிக்கு வர முடியும் என்பதை நிரூபித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களின் ஆதரவோடும், பொது மக்களின் துணையோடும் சிறப்பான ஆட்சியினை தமிழகத்தில் வழங்கி வருகின்றேன் என்பதை மகிழ்ச்சியுடன் இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பாக புதிய அறிவிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தின் அருமை கருதி அறிவிப்பு புத்தகங்களில் இடம்பெற்றுள்ள தலைப்புகளை

மட்டும் நான் படிக்கின்றேன். அறிவிப்புகளில் இடம்பெற்றுள்ள விவரங்களை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

1. சென்னை எல்லைச் சாலையின், நான்காம் பகுதியான ஸ்ரீபெரும்புதூர் முதல் சிங்கபெருமாள்கோவில் வரையுள்ள பகுதியில் வாகன சுரங்கப்பாதைகள், சாலை சந்திப்பு மேம்பாடு, சாலை பாதுகாப்பு ஆகிய பணிகள் உலகத் தரத்துடன் ரூபாய் 531 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், துவங்கப்பட்ட சென்னை எல்லைச் சாலைத் திட்டம், தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ல் எதிர்கால போக்குவரத்து தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், திறனான வணிகப் போக்குவரத்துமூலம் துறைமுக இணைப்பை மேம்படுத்துவதற்காகவும் அறிவிக்கப்பட்ட முக்கிய திட்டமாகும்.

இத்திட்டத்தின் நான்காம் பகுதியான ஸ்ரீபெரும்புதூர் முதல் சிங்கபெருமாள்கோவில் வரையுள்ள பகுதியில் வாகன சுரங்கப்பாதைகள், சாலை சந்திப்பு மேம்பாடு, சாலை பாதுகாப்பு ஆகிய பணிகள் உலகத் தரத்துடன் ரூபாய் 531 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–00

2. சிறுசேரி முதல் மகாபலிபுரம் வரையுள்ள 14.8 கி.மீ. நீளச் சாலை, சேவை சாலைகளுடன்கூடிய 6 வழிச் சாலையாக ரூபாய் 350 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தகவல் தொழில்நுட்ப அதிவிரைவு சாலையில் சிறுசேரி முதல் மகாபலிபுரம் வரையுள்ள 14.8 கி.மீ. நீளச் சாலை, சேவை சாலைகளுடன்கூடிய 6 வழிச் சாலையாக ரூபாய் 350 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும்.

3. ஓசூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை இணைக்கும் சாலைகளில் ரூபாய் 361 கோடி மதிப்பில் 158 கி.மீ. நீளச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், ஓசூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை இணைக்கும் 158 கி.மீ. நீளச் சாலைகளில் அகலப்படுத்துதல் மற்றும் சாலை பாதுகாப்பு போன்ற மேம்பாட்டுப் பணிகள் ரூபாய் 361 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

4. சென்னை பெருநகரம் மற்றும் புறநகரங்களில் வெள்ளப்பெருக்கினால் சாலையில் மழைநீர் தேங்குவதைத் தவிர்க்க புதிய வடிகால் மற்றும் சிறுபாலங்கள் ரூபாய் 277 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மேற்கொள்ளப்பட்ட வெள்ள தடுப்பு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, சென்னை மாவட்டத்தில் 5 சாலைகளிலும், திருவள்ளூர் மாவட்டத்தில் 3 சாலைகளிலும் புதிய வடிகால் மற்றும் சிறுபாலங்கள் ரூபாய் 277 கோடி மதிப்பில் கட்டப்படும்.

5. சென்னை வெளிவட்ட சாலையுடன் இணையும் 12 சாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த முதற்கட்டமாக, நிலத்தொகுப்பு (Land Pooling) முறையில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை வெளிவட்ட சாலையில் வரும் போக்குவரத்தினை, அதனுடன் இணையும் 12 சாலைகளின் வழியாகப் பிரிந்து செல்ல ஏதுவாக, இணைப்புச் சாலைகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த நிலத்தொகுப்பு (Land Pooling) என்ற புதிய அணுகுமுறையில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

6. 7 மாவட்டங்களில் 9 புறவழிச் சாலைகள் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவள்ளூர் மாவட்டத்தில் ஆர்.கே. பேட்டை, திருப்பத்தூர் மாவட்டத்தில் பள்ளிகொண்டா, திருச்சி மாவட்டத்தில் மணச்சநல்லூர் (பகுதி–II) மற்றும் மணப்பாறை, திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி (பகுதி–II) மற்றும் நன்னிலம், விருதுநகர் மாவட்டத்தில் ஏழாயிரம்பண்ணை–குகன்பாறை, அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் (பகுதி–II), தேனி மாவட்டத்தில் போடி ஆகிய 9 இடங்களுக்கு புறவழிச் சாலைகள் அமைக்க ரூபாய் 2.40 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

7. திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மாநகரங்களில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்பொருட்டு உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைக்கவும் மற்றும் மதுரை, தேனி மாவட்டங்களில் சாலைகளை மேம்பாடு செய்யவும் விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 3.25 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மதுரையில் ஜெய விலாஸ் சந்திப்பு முதல் பெரியார் சிலை வரை, திருச்சியில் அண்ணா சிலை முதல் திருச்சி இரயில்வே சந்திப்பு வரை, கோயம்புத்தூரில் வெள்ளலூர் பேருந்து நிலையம் முதல் எல் & டி புறவழிச் சாலை வரை உயர்மட்ட சாலை மேம்பாலம் அமைக்க மற்றும் மதுரையில் புதிதாக அமையவுள்ள AIIMS மருத்துவமனைக்குச் செல்லும் 5 சாலைகளை மேம்பாடு செய்ய மற்றும் தேனி மாவட்டத்தில் அகமலை சாலையை மேம்பாடு செய்ய விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 3.25 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

8. ஜலகண்டபுரம் புறவழிச் சாலைக்கு நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சேலம் மாவட்டத்தில் ஜலகண்டபுரம் நகருக்கு சுமார் 5 கி.மீ. நீளத்திற்கு புறவழிச் சாலை அமைக்க ரூ.15 கோடி மதிப்பில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். ஜலகண்டபுரம் நகரத்திற்குள் குறுகிய சாலைகளில் செல்லும் கனரக வாகனங்கள் இந்த புறவழிச் சாலையை பயன்படுத்தி மேட்டூர், தருமபுரி, நங்கவல்லி மற்றும் மேச்சேரி போன்ற ஊர்களுக்குச் செல்ல ஏதுவாக அமையும். கைத்தறி, பட்டு நெய்தல் மற்றும் விவசாய தொழில் செய்வோர் பெரும் பயனடைவர். இதனால் ஜலகண்டபுரத்தில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன் பாதுகாப்பான பயணமும் உறுதி செய்யப்படும்.

9. 11 மாவட்டங்களில் 20 இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 7.44 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருவள்ளூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம் மற்றும் சிவகங்கை ஆகிய 11 மாவட்டங்களில், 20 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 7.44 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

10. 12 ஆற்றுப் பாலங்கள் 9 மாவட்டங்களில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 5.19 கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், செங்கல்பட்டு மாவட்டத்தில் பக்கிங்காம் கால்வாய் குறுக்கே, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் கோமுகி ஆறு மற்றும் மணிமுக்தா ஆற்றின் குறுக்கே 2 பாலங்கள், விழுப்புரம் மாவட்டத்தில் வீடூர் அணை சாலையில், வேலூர் மாவட்டத்தில் பாலாற்றின் குறுக்கே, அரியலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் மற்றும் மருதையாற்றின் குறுக்கே 2 பாலங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரி ஆறு மற்றும் ஒன்பது கண்மாய் ஓடை குறுக்கே 2 பாலங்கள், திருச்சி மாவட்டத்தில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே, கரூர் மாவட்டத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே மற்றும் தேனி மாவட்டத்தில் மணலாற்றின் குறுக்கே ஆற்றுப் பாலங்கள் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி ரூபாய் 5.19 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

11. சென்னை தகவல் தொழில்நுட்ப சாலையின் பிரதான 5 சந்திப்புகளில் ரூபாய் 500 கோடி மதிப்பில் 5 மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சென்னை தகவல் தொழில்நுட்ப சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு தரமணி முதல் சிறுசேரி வரையிலான பிரதான சாலை சந்திப்புகளான, தரமணி சாலை சந்திப்பு, பெருங்குடி எம்.ஜி.ஆர். சாலை சந்திப்பு, துரைப்பாக்கம் சாலை சந்திப்பு, சோழிங்கநல்லூர் சாலை சந்திப்பு, சிறுசேரி சாலை சந்திப்பு ஆகிய 5 இடங்களில் ரூபாய் 500 கோடி மதிப்பில் மேம்பாலங்கள் அமைக்கப்படும்.

12. சென்னை மாநகரின் மூன்று பிரதான சாலைகளை சீர்மிகு சாலைகளாக அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 9.10 கோடி மதிப்பில் மற்றும் அண்ணா சாலையில் முத்துசாமி பாலம் முதல் தாம்பரம் வரை மற்றும் தாம்பரம் முதல் ஸ்ரீபெரும்புதூர் வரை மாற்று வழி அமைக்க ரூபாய் 38 இலட்சம் மதிப்பில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும். மேலும் வண்டலூர் சந்திப்பில் பாதசாரிகளுக்கான மேம்பாலம் ரூபாய் 16.17 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சென்னை மாநகரின் மூன்று பெரிய சாலைகளை சீர்மிகு சாலைகளாக அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 9.10

கோடி மதிப்பிலும் அண்ணா சாலையில் முத்துசாமி பாலம் முதல் தாம்பரம் வரை போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கும் மேலும் தாம்பரத்திலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை சோமங்கலம் – இருங்காட்டு கோட்டை வழியாக மாற்று சாலை அமைக்க ரூபாய் 38 இலட்சம் மதிப்பில் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும். மேலும், நெரிசல் மிகுந்த வண்டலூர் சாலை சந்திப்பில் அமைந்துள்ள வண்டலூர் வனவிலங்கு பூங்காவிற்குச் செல்ல ஏதுவாக பாதசாரிகளுக்கான மேம்பாலம் நகரும் படிக்கட்டு மின்தூக்கி வசதியுடன் ரூபாய் 16.17 கோடி மதிப்பில் அமைக்கப்படும்.

13. நெடுஞ்சாலை துறைக்கான 11 அலுவலகக் கட்டடங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்காக பொன்னேரி, திண்டிவனம், வேப்பந்தட்டை, சிதம்பரம், பண்ருட்டி, தஞ்சாவூர், பேராவூரணி, பட்டுக்கோட்டை, செங்கோட்டை ஆகிய இடங்களில் 9 உட்கோட்ட மற்றும் பிரிவு அலுவலகங்கள் நன்னிலம் பிரிவு அலுவலகம் மற்றும் நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகிற்கு திருச்சியில் வட்டம் மற்றும் கோட்ட அலுவலகம் ஆகிய 11 கட்டடங்கள் ரூபாய் 5 கோடி மதிப்பில் கட்டப்படும்.

14. 12 மாநகராட்சி பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளைத் துப்புரவு செய்ய 20 துப்புரவு இயந்திரங்கள் 16 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை பெருநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சி பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலையோரங்களில் குவியும் மண் மற்றும் தூசுகளைத் துப்புரவு செய்ய 20 துப்புரவு செய்யும் இயந்திரங்களும் (Mechanical Broom) சாலையோரங்களில் உள்ள மண்குவியல்களை உடனுக்குடன் அகற்ற ஏதுவாக 5 சிறிய வடிவிலான மண் அகற்றும் இயந்திரங்களும் (Skid Steer Loader) மேலும் அகற்றப்படும் கழிவுகளை மாநகராட்சி பகுதிக்கு வெளியே கொண்டு சென்று வெளியேற்ற வசதியாக ஒரு வாகனமும் (Dump Tanker) ரூபாய் 16 கோடி மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

15. 109 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கிய சாலைகள் உலக வங்கியின் நிதியுதவியுடன் ரூபாய் 1500 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்–II–ன் மூலமாக உலக வங்கியின் கூடுதல் நிதியுதவியுடன் ஓமலூர்–மேச்சேரி சாலை, மல்லியக்கரை–ஆத்தூர் சாலை, மாநில நெடுஞ்சாலை–15–ல் சித்தோடு–ஈரோடு சாலை, காஞ்சிபுரம்–வந்தவாசி சாலையில் செய்யாறு சிறப்பு பொருளாதார மண்டலம் வரை, ஈரோடு–சென்னிமலை சாலை, அரியலூர்–ரெட்டிபாளையம் சாலை, ஆற்காடு–ஆரணி சாலை ஆகிய 109 கி.மீ. நீள ஏழு சாலைகள் ரூபாய் 1500 கோடி மதிப்பில் மேம்படுத்தப்படும்.

16. 18 மாவட்டங்களில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 54 ஆற்றுப்பாலங்கள் ரூபாய் 310 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் கிராமப்புறங்களில் சாலைப் போக்குவரத்தினை மேம்படுத்த 18 மாவட்டங்களில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளில் 54 ஆற்றுப்பாலங்கள் ரூபாய் 310 கோடி மதிப்பில் கட்டப்படும். இதனால் சுமார் 10 இலட்சம் மக்கள் பயனடைவார்கள்.

17. சாலை பாதுகாப்புப் பணிகள் ரூபாய் 400 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் சாலை பாதுகாப்புப் பணிகளுக்காக நடப்பாண்டில் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் (CRIDP) திட்டத்தில் ரூபாய் 200 கோடி மதிப்பிலும், சாலை பாதுகாப்பு நிதியில் இருந்து ரூபாய் 150 கோடி மதிப்பிலும், மேலும் மதுரை மாநகரப் பகுதியில் ரூபாய் 50 கோடி மதிப்பில் மைய தடுப்பான் அமைத்தலும் ஆக மொத்தம் ரூபாய் 400 கோடி மதிப்பிலான சாலை பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

18. பாம்பன் கால்வாயை சிறிய மற்றும் நடுத்தரக் கப்பல் போக்குவரத்திற்காக சுமார் 10 மீட்டர் ஆழத்திற்கு தூர்வாருவதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ரூபாய் ஒரு கோடி மதிப்பில் தயாரிக்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன் இந்தியாவின் கிழக்கில் வங்காள விரிகுடாவையும், மேற்கில் அரபிக் கடலையும் கடல் வழியாக இணைப்பதற்கு ஏதுவாக மன்னார் வளைகுடா மற்றும் பாக் ஜலசந்தி பகுதிகளை இணைக்கும் பாம்பன் கால்வாயை சிறிய மற்றும் நடுத்தரக் கப்பல் போக்குவரத்திற்காக சுமார் 10 மீட்டர்

ஆழத்திற்கு தூர்வாருவதற்கு சுற்றுச்சூழல் மற்றும் தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கான நடவடிக்கைகள் ரூபாய் ஒரு கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறைக்கான அறிவிப்புகள்.

பொதுப் பணித் துறை

1. தஞ்சாவூர் மாவட்டம், அணைக்கரை அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கீழணைக்கு அருகில் புதிய நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 650 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், விநாயகம் தெரு கிராமம் மற்றும் அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், வேம்பக்குடி கிராமங்களுக்கு இடையே, அணைக்கரை அருகே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கீழணைக்கு (Lower Anicut) அருகில் புதிய நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 650 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. 5 மாவட்டங்களில் பாசன நீரேற்று திட்டங்கள் ரூபாய் 486 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தென்பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஈச்சம்பாடி அணைக்கட்டிலிருந்து மழைக் காலங்களில் வரும் வெள்ள உபரி நீரை அரூர், பாப்பிரெட்டிபட்டி மற்றும் மொரப்பூர் வட்டங்களில் உள்ள ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளுக்கு நீரேற்று திட்டத்தின்மூலம் நீர் வழங்கும் பணி ரூபாய் 300 கோடி மதிப்பீட்டிலும்,

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தாமரைக்குளம் கிராமத்தில், பழையாற்று நீரை நீரேற்றுத் திட்டத்தின்மூலம் இராதாபுரம் கால்வாய்க்குக் கொண்டு செல்லும் பணி ரூபாய் 160 கோடி மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், தம்பிக்கோட்டை கிராமத்திலுள்ள அமரிக்குளம் கண்மாய்க்கு பாமினியாற்றிலிருந்து நீரேற்றம்மூலம் நீர் வழங்கும் பணி ரூபாய் 16 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கொட்டாவூர் கிராமம் அருகில் செய்யாற்றின் குறுக்கே நீர் இறவைப் பாசன நிலையம் அமைத்து, பரமனந்தல் ஏரி மற்றும் அதன்கீழ் வரும் தொடர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் பணி ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், விளாங்காடு கிராமத்தில் உள்ள ஒவரூர் வடிகாலின் குறுக்கே புதிதாக சமநிலைப்பொறி அமைத்து விளாங்காடு இறவைப் பாசன திட்டப் பகுதிக்கு பாசன நீர் வழங்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

3. மதுராந்தகம் ஏரி, பெருமாள் ஏரி, வாலாஜா ஏரி மற்றும் மாதவரம் ஏரி ஆகிய ஏரிகளை மேம்படுத்தி, அவற்றின் கட்டமைப்புகளைப் புனரமைக்கும் பணிகள் ரூபாய் 302 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், மதுராந்தகம் ஏரியினை ஆழப்படுத்தி, அதன் கரைகளைப் பலப்படுத்தும் பணி மற்றும் வழிந்தோடியினை மறுசீரமைக்கும் பணிகள் ரூபாய் 125 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பெருமாள் ஏரியின் கொள்ளளவினை மேம்படுத்தும் பணி ரூபாய் 120 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், கரிமேடு கிராமத்திலுள்ள வாலாஜா ஏரியின் கொள்ளளவினை மேம்படுத்தும் பணி ரூபாய் 45 கோடி மதிப்பீட்டிலும்,

சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், மாதவரம் ஏரியின் கொள்ளளவினை மேம்படுத்தும் பணி ரூபாய் 12 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

4. 28 மாவட்டங்களில், 77 இடங்களில் புதிய தடுப்பணைகள், அணைக்கட்டுகள், படுகை அணைகள் மற்றும் தள மட்ட சுவர்கள் அமைக்கும் பணிகள் ரூபாய் 585 கோடியே 18 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், சம்பந்தன்குடி கிராமத்தில் வைபம் குளத்திற்கு நீர் வழங்கும் பொருட்டு, அருங்கல் ஓடையின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், சொக்கனூர் கிராமத்தில், வரட்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், புரவிபாளையம் கிராமத்தில், சோளசுலஹள்ளி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், சூளக்கல் மற்றும் கோரையாறு ஆறுகளின் குறுக்கே தொடர் தடுப்பணைகள் அமைக்கும் பணி ரூபாய் 20 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம் க.இளமங்கலம் கிராமத்தில், நரி ஓடையின் குறுக்கே (பெரிய ஓடை) ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், சாமனூர் கிராமத்தில் சின்னாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்கு வட்டம், அகரம் கிராமத்தில், உலகம்பட்டி அருகே மாயாண்டிகுளம் கண்மாய்க்கு நீர் வழங்கும் பொருட்டு, மாங்கரை ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 89 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரிச்சிப்பாளையம் கிராமத்தில், சண்முகாநதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 63 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து காளிங்கராயன் அணைக்கட்டு வரை தொடர் தடுப்பணைகள் அமைக்கும் பணி ரூபாய் 90 கோடி மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், வீரசோழபுரம் கிராமம் அருகே, மணிமுக்தா ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், பசுந்தாயமங்கலம் கிராமம் அருகே, பசுந்தாயமங்கலம் ஏரிக்கு நீர் வழங்கும் பொருட்டு கோமுகி ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், வரஞ்சரம் கிராமம் அருகே கோமுகி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கூகையூர் கிராமம் அருகே, வசிஷ்டா நதியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், கவம்பயிர் கிராமத்தில், செய்யாறு ஆற்றின் குறுக்கே ஒரு தளமட்ட சுவர் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும்,

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குளச்சல் நகராட்சியில் கடற்கரை பாலத்திற்கு மேற்புறம், பாம்பூரி வாய்க்காலின் குறுக்கே கடல்நீர் உட்புகுதலை தடுக்கும் பொருட்டு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், செங்கப்படை கிராமத்தின் அருகே வரட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், சித்திரெட்டியாப்பட்டி கிராமத்தின் அருகே, சௌடார்பட்டி கிராமத்தில், வரட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 15 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், வைகையாற்றின் குறுக்கே தேனூர்–கொடிமங்கலம் இடையே அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 18 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், ஆரப்பாளையம் அருகே வைகையாற்றின் குறுக்கே நிலத்தடி நீரைச் செறிவூட்டும் பொருட்டு நீர்வழி துளைகள் மற்றும் தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும்,

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், நடுக்கோம்பை கிராமத்தில் கருவாட்டாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 76 இலட்சம் மதிப்பீட்டிலும்,

நாகப்பட்டினம் மாவட்டம், நெய்குன்னம் கிராமத்தில் திருமலைராஜன் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், வேங்கலம் கிராமத்தில், கல்லாறு ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பெரம்பலூர் மாவட்டம், கீழப்புலியூர் வட்டம், எழுமூர் கிராமத்தில், எழுமூர் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 56 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், ஏ. உசிலங்குளம் கிராமத்தில் கூரன்கோட்டை அருகே குண்டாறு (மலட்டாறு) ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 7 கோடியே 14 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், கொத்தங்குளம் கிராமத்தில் மாங்குடி மற்றும் தேவனேரி கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு, பரளையாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு வட்டம், புங்கனூர் வெள்ளகுளம் கிராமம் அருகில் தேவநாசிகுப்பம் மலை மற்றும் வீரகட்டளை மலை இடையே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் கிராமத்தில் வசிஷ்டா ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 72 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பக்கநாடு கிராமத்தில் அடுவப்பட்டி அருகே கருமந்தன்கிணறு ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், சக்கரசெட்டிப்பட்டி கிராமத்தில், சரபங்கா ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 76 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம் மற்றும் கிராமத்தில், சரபங்கா ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 36 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், காணூர் கிராமம் அருகே, காணூர் கண்மாய் மற்றும் பதினெட்டு குளங்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு வைகை ஆற்றின் குறுக்கே ஒரு படுகை அணை அமைக்கும் பணி ரூபாய் 28 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டத்திலுள்ள மானாமதுரை கிராமத்தில் கீழப்பசலை மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு வைகை ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 17 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், பெரியகொட்டக்குடி கிராமத்திலுள்ள களத்தூர் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு, கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், மாதவராயன்பட்டி கிராமத்திலுள்ள கருப்பூர் கண்மாய் மற்றும் இதர கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு பாலாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், பனையூர் கிராமத்தில் பனையூர் வழங்கு வாய்க்காலின் குறுக்கே பிரிவு அணை கட்டி, வயலிமிட்டான் குளத்திற்கு தண்ணீர் கொண்டுசெல்லும் திட்டம் ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தென்காசி மாவட்டம், வி.கே.புதூர் வட்டம், சுரண்டை கிராமத்தில், சுரண்டை அணைக்கட்டின் கீழ்ப்புறத்தில் அனுமாநதியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், தங்கப்பஉடையான்பட்டி கிராமத்தில், காட்டாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், தென்னஞ்சோலை கிராமத்தில், வெண்ணாற்றின் குறுக்கே நெடுகை 79.250 கி.மீ.–ல், முனியூர் மற்றும் விக்ரமனார் கால்வாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டும், ஆற்றின் படுகை மட்டத்தினை பராமரிக்கும் பொருட்டும், ஒரு தளமட்ட சுவர் அமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், ஐவேலிதோட்டம் கிராமத்தில் வெண்ணாற்றின் குறுக்கே நெடுகை 85.180 கி.மீ.–ல் கணக்கீடு படுகை மட்டத்தை நிலைப்படுத்தவும், நஞ்சுமனார் வாய்க்காலுக்கு நீர் வழங்கவும் தளமட்டச்சுவர் அமைக்கும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், சுரைக்காயூர் கிராமம் வெட்டார் ஆற்றின் குறுக்கே நெடுகை 73.635 கி.மீ.–ல் சுரைக்காயூர் மற்றும் காவலூர் வாய்க்கால்களுக்கு தண்ணீர் வழங்க தளமட்டச் சுவர் கட்டும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சரபேந்திர இராஜப்பட்டினம் கிராமத்தில், பாப்பன்கன்னியார் ஆற்றின் குறுக்கே நெடுகை 14.00 கி.மீ.–ல் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 21 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி வட்டம், வில்லுனிவயல் கிராமம், அம்புலியாறு ஆற்றின் குறுக்கே நெடுகை 49.000 கி.மீ.–ல் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 10 கோடியே 17 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், குறிச்சி கிராமத்தில் அக்னியாற்றின் குறுக்கே நெடுகை 62.300 கி.மீ.–ல் பண்ணவயல் ஏரிக்கு நீர் வழங்கும் பொருட்டு ஒரு அணைக்கட்டு கட்டும் பணி ரூபாய் 12 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், தேவாரம் கிராமத்தின் அருகே 18 ஆம் படி ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 95 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், மாம்பாக்கம் கிராமத்தில் ஆரணியாறு ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், குமாரராஜபேட்டை கிராமம் அருகில் குசா ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், சங்கீதகுப்பம் கிராமத்தில் குசா ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், இலுப்பூர் கிராமத்தின் அருகே நகரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 18 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், செய்யாற்றின் குறுக்கே, செய்யாற்றை வென்றான் கிராமம் அருகே, ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், நீப்பத்துறை கிராமத்தில், தென்பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் வட்டம், தாமரைப்பாக்கம் கிராமத்தில் மேப்பத்துறை கண்மாய்க்கு நீர் வழங்கும் பொருட்டு செய்யாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் வட்டம், கோனலூர் கிராமத்தில் துரிஞ்சலாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், வம்பாலூர் கிராமத்தின் அருகே, தாச்சூர் மற்றும் விண்ணமங்கலம் கண்மாய்களுக்கு நீர் வழங்கும் பொருட்டு செய்யாறு ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 13 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், பழங்காமூர் கிராமத்தில், கனிகிழுப்பை மற்றும் காட்டேரி ஏரிகளுக்கு நீர் வழங்கும் பொருட்டு கமண்டல நாகநதியின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூபாய் 6 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், மைல் 66/5–ல் இராதாநல்லூர் கிராமத்தில் உள்ள வடவார் கால்வாய்க்கு நீர் வழங்கும் பொருட்டு புத்தாறு ஆற்றின் குறுக்கே ஒரு தளமட்ட சுவர் அமைக்கும் பணி ரூ.2 கோடியே 7 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம் ஓகை கிராமத்தில் சோழசூடாமணி ஆற்றின் குறுக்கே மைல் 65/6–370–ல் அரசூர்–மூலங்குடி வாய்க்கால்களுக்கு நீர் வழங்க தளமட்ட சுவர் அமைக்கும் பணி ரூ.1 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், பண்டாரவடை கிராமம், நாட்டார் ஆற்றின் குறுக்கே மைல் 81/5–ல் அகரபாவட்டாகுடி வாய்க்கால், கதிராமங்கலம் வாய்க்கால், பண்டாரவடை வாய்க்கால் மற்றும் குருஸ்தலம் வாய்க்கால்களுக்கு நீர் வழங்க தளமட்ட சுவர் அமைக்கும் பணி ரூ.1 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், தலையூர் கிராமம் நாட்டார் ஆற்றின் குறுக்கே மைல் 80/3–ல் தலையூர் வாய்க்கால், பனங்காட்டான்குடி மற்றும் ஆழவார்கட்டளை வாய்க்கால்களுக்கு நீர் வழங்க தளமட்ட சுவர் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவாருர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடுவூர் தென்பாதி கிராமத்தில் கண்ணனாற்றின் குறுக்கே நெடுகை 1.37 கி.மீ–ல் தடுப்பணை கட்டும் பணி ரூ.1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், அதுக்கல்புதூர் கிராமத்தில் நெடுகை 90 கி.மீ–ல் அமராவதி ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.10 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வாகதொழுவு கிராமத்தில் உப்புப்பள்ளம் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.1 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டம், நடையநல்லூர் கிராமத்தில் கரைபொட்டனாறு ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.3 கோடியே 94 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், சேனப்பநல்லூர் கிராமத்தில் அய்யாறு ஆற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூ.3 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், தெத்தூர் ஊராட்சியில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூ.4 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம், குமரவாடி கிராமத்திலுள்ள வடக்கு அம்மாப்பட்டியில் தேக்கமலையாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 2 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம், ஆழ்வார்தோப்பு மற்றும் ஆழ்வார்திருநகரி இடையே தாமிரபரணி ஆற்றில் நிலத்தடி நீரை செறிவூட்டும் வகையிலும் மற்றும் குடிநீர் ஆதாரத்தை பெருக்கும் வகையிலும் தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 26 கோடி மதிப்பீட்டிலும்,

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், சுப்பிரமணியபுரம் கிராமத்தில் வள்ளிநாயகபுரம் அருகே உப்போடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டிலும்,

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், குகைநல்லூர் கிராமத்தில் பொன்னையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 13 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி வட்டம், வாக்கூர்மதுரா மேல்பாதி கிராமத்தில் கப்பியம் புளியூர் தாங்கல் கண்மாய்க்கு நீர் வழங்கும் பொருட்டு பம்பையாற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்கும் பணி ரூ.6 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், விழுக்கம் அருகே மேல்சித்தாமூர் கிராமத்தில், தொண்டியாற்றின் குறுக்கே செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டும் கட்டுமானம் அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 46 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்களவாய் கிராமத்தில் வராக நதியாற்றின் குறுக்கே செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டும் கட்டுமானம் அமைக்கும் பணி ரூபாய் 8 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கிளியானூர் கிராமத்தின் அருகே நல்லாவூர் ஆற்றின் குறுக்கே செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டும் கட்டுமானம் அமைக்கும் பணி ரூபாய் 4 கோடியே ஒரு இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் வட்டம், எஸ். அம்மாப்பட்டி மற்றும் வடுகப்பட்டி கிராமங்களில் சங்கிலிகருப்பசாமி கோவிலின் அருகில் அர்ச்சுனா நதியின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 81 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், மேலான்மறைநாடு அருகே அப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் தேவியாற்றின் (வைப்பாற்றின்) குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், சங்கரபாண்டியபுரம் கிராமத்தில் வல்லம்பட்டி ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், ஒவனயாக்கன்பட்டி கிராமத்தில் நல்லி உப்போடையின் குறுக்கே ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

மேலும், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் கடல் நீர் உட்புகுதலைத் தடுக்கவும் மற்றும் பருவநிலை மாற்றங்களை எதிர்கொள்ள தேவையான கட்டுமானங்கள் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, அதில் முதற்கட்டமாக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

5. தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 3 இடங்களில் புதிய நீரொழுங்கிகள் மற்றும் கடைமடை தடுப்பணைகள் அமைக்கும் பணிகள் ரூபாய் 87 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் வட்டம் முக்காணி கிராமம் மற்றும் திருச்செந்தூர் வட்டம், புன்னக்காயல் மற்றும் சேந்தமங்கலம் கிராமங்களில் தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடங்களில் கடைமடை தடுப்பணைகள் அமைக்கும் பணி ரூபாய் 70 கோடி மதிப்பீட்டிலும்,

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், தென்னம்பட்டினம் கிராமத்தில் கடல்நீர் உட்புகுதலைத் தடுக்கும் பொருட்டு, முல்லையாற்றின் குறுக்கே ஒரு கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், காலமணலூர் கிராமத்தில் நெடுகை 146.500 கி.மீ–ல் மஞ்சளாறு ஆற்றின் குறுக்கே ஒரு கடைமடை நீரொழுங்கி அமைக்கும் பணி ரூபாய் 8 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

6. கிருஷ்ணகிரி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் புதிய கால்வாய்கள் மற்றும் அரியலூர் மாவட்டத்தில் ஒரு புதிய பாலம் அமைக்கும் பணிகள் ரூபாய் 63 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், எண்ணேகொல் அணைக்கட்டின் வலது புறத்தில், நெடுகை 0.000 முதல் 7.000 கி.மீ. வரை மற்றும் இடது புறத்தில், நெடுகை 0.000 முதல் 5.400 கி.மீ. வரை புதிய வழங்கு கால்வாய்கள் அமைத்து, தென்பெண்ணை ஆற்றிலிருந்து வெள்ளக் காலங்களில் வரும் உபரி நீரினை, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு திருப்பும் பணிக்கு முதற்கட்டமாக ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மேலும், புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் வட்டம், தெற்கு வெள்ளாறு ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கருங்காடு அணைக்கட்டிலிருந்து ஒரு புதிய கால்வாய் அமைத்து, தெற்கு வெள்ளாற்றின் தெற்கு பகுதியில் உள்ள பாசன நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும், அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம் தவுதாய்குளம் கிராமத்தில் மருதையாற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைக்கும் பணி ரூபாய் 3 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

7. 15 மாவட்டங்களில், 40 இடங்களில் உள்ள பாசனக் கட்டுமானங்களைப் பழுதுபார்த்தல், புனரமைத்தல், நவீனப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 834 கோடியே 83 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மதுக்கரை தாலுகா, குரும்பபாளையம் கிராமத்தில் புல எண்கள் 38 மற்றும் 84, சுகுணாபுரம் ஓடை மற்றும் அம்மன் கோவில் பள்ளம் ஆகியவற்றில் அமைந்துள்ள தடுப்பணைகள் மற்றும் பாலத்துறை கிராமம், சேலம்–கொச்சி புறவழிச்சாலை பாலத்தின் மேல்பகுதியில் அமைந்துள்ள தடுப்பணை ஆகிய ஐந்து தடுப்பணைகளையும் புனரமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 62 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள, ஓ.வி.சி. அணைக்கட்டு மற்றும் பாசன வாய்க்காலினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 6 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், சேத்துமடை கால்வாயில் நெடுகை 0.000 முதல் 8.400 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூபாய் 16 கோடி மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், மனம்பள்ளி அருகே சோலையாறு அணையின் சுரங்கப்பாதை வெளியேறும் இடத்திற்கு செல்லும், வெள்ளத்தினால் பழுதடைந்த அணுகு சாலையினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 6 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், மனம்பள்ளியில் வெள்ளத்தினால் பழுதடைந்த சோலையாறு அணையின் ப்பி. எச்.1 சுரங்கப்பாதை வெளியேறும் இடத்தின் உட்புறத்தினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், இளங்கியனூர் கிராமம், இரயில்வே பாலம் எண் 31–ன் மேற்புறத்தில் மணிமுக்தா ஆற்றின் இடது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டத்திலுள்ள காளிங்கராயன் வாய்க்காலின் மைல் 12–3–348–லிருந்து மைல் 15–4.5–195 வரை புனரமைக்கும் பணி ரூபாய் 70 கோடி மதிப்பீட்டிலும்,

ஈரோடு மற்றும் கரூர் மாவட்டம், கொடுமுடி மற்றும் மண்மங்கலம் வட்டத்திலுள்ள புகலூர் வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 40 கோடி மதிப்பீட்டிலும்,

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், மாயனூர் கிராமம் அருகே அமைந்துள்ள கட்டளை கதவணையின் கட்டமைப்புகளைப் புனரமைக்கும் பணி ரூபாய் 189 கோடி மதிப்பீட்டிலும்,

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், பீதிரெட்டி கிராமத்தில் உள்ள உடைந்த அணைக்கட்டினைச் சீரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், சோழவந்தான் வட்டம், குருவித்துறை அருகில் வைகை ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள சித்தணையைப் புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், மங்கலம் கிராமத்தில் வெள்ளச்சி ஓடையின் இடதுகரையில் பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கேசம்பட்டி ஊராட்சி எல்லையில் அமைந்துள்ள பெரியருவி நீர்த்தேக்கத்தினைத் தூர்வாரும் பணி ரூபாய் 1 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டம், திருமங்கலம், உசிலம்பட்டி மற்றும் நிலக்கோட்டை வட்டம், திருமங்கலம் நீட்டிப்பு பிரதான கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களைப் புனரமைத்தல் மற்றும் திருமங்கலம் பிரதான கால்வாயின் நீர் கடத்தும் திறனை மேம்படுத்தும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், எ. இறையமங்கலம் கிராமம், காவேரி ஆற்றுப்படுகைப் பகுதியில் தடுப்புச் சுவர் மற்றும் படித்துறை அமைக்கும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பாலக்கோடு மாவட்டம், சித்தூர் வட்டம், பரம்பிக்குளம் அணை ஆற்றுப் பாலத்தின் இடது மற்றும் வலது கரையில் தடுப்புச் சுவர் மற்றும் நிரந்தர சாலை அமைக்கும் பணி ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பாலக்கோடு மாவட்டம், சித்தூர் வட்டம், தூணக்கடவு அணை வழிந்தோடியின் கதவு எண் 1, 2 மற்றும் 3 ஆகியவற்றினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 8 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

பாலக்கோடு மாவட்டம், சித்தூர் வட்டம், பரம்பிக்குளம் அருகே பரம்பிக்குளம் அணையின் சுரங்க வழிப்பாதை தொடக்கத்திலுள்ள அவசரகால கதவினைப் புதுப்பித்தல் மற்றும் சார்புநிலைக் கதவினை பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், இராமநாதபுரம் பெரிய ஏரிக்கு, நீர் வழங்க வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள தலைமதகில் கூடுதலாக நீர்வழித்துளை அமைக்கும் பணி ரூபாய் 10 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், புத்திரகவுண்டன்பாளையம் கிராமம், புத்திரகவுண்டன்பாளையம்

ஏரிக்கு நீர் வழங்கும் வாய்க்காலினை நெடுகை 0.980 கி.மீ. முதல் 2.700 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், எடப்பாடி மற்றும் சங்கரி வட்டத்தில் மேட்டூர் கிழக்குக் கரை கால்வாய் மைல் 5/6, 14/5, 20/5 மற்றும் 21/6–ல் 4 புதிய பாலங்கள், எடப்பாடி வட்டத்தில் மேட்டூர் கிழக்குக் கரை பிரதான கால்வாய் மைல் 13/0 முதல் 14/0 வரை மற்றும் மைல் 13/2–ல் பிரியும் கிளைக் கால்வாயின் ஈப்பு பாதையில் தார்ச் சாலை அமைக்கும் பணி, நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டத்தில் மேட்டூர் கிழக்குக் கரை கால்வாயில் மைல் 31/1 மற்றும் 32/4–ல் பிரிந்து செல்லும் கிளைக் கால்வாய் புனரமைக்கும் பணி மற்றும் ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், மேட்டூர் மேற்குக் கரை கால்வாய் கடைமடை பகிர்மான கால்வாய்கள் புனரமைக்கும் பணிகள் ரூபாய் 26 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஸ்டான்லி அணையின் எல்லிஸ் சேடல் உபரி நீர் வழிந்தோடியின் 16 கண் மதகுகளின் கதவுகளிலுள்ள உருளைகளைப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் உயர்மட்ட மதகுகளின் கதவுகளுக்கு வர்ணம் பூசுதல், கீழ்மட்ட மதகுகளிலுள்ள பழைய துருப்பிடித்த இணைப்புக் கம்பியினை துருப்பிடிக்காத இணைப்புக் கம்பிகளாக மாற்றுதல் மற்றும் எண்ணெய் தகட்டினை மாற்றுதல் மற்றும் கதவுகளைச் சுத்தம் செய்து வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை ரூபாய் 6 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் அணையில் ஒரு மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட சூரிய தகடுகள் அமைக்கும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் அணையில் பவள விழாத் தூணில் கூடுதலாக மின்தூக்கி அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 75 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேட்டூர் அணை, எல்லிஸ் சேடல் பாலம் புனரமைத்தல், சுரங்கக்கால்வாய் புனரமைத்தல் மற்றும் மேல்பூங்காவிலிருந்து உயர்மட்ட வாய்க்காலைக் கடந்து வலது கரைப் பகுதிக்குச் செல்ல தொங்குபாலம் அமைக்கும் பணி ரூபாய் 25 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம் மற்றும் கிராமம், நடுவலூர் ஏரியின் வழங்கு வாய்க்காலினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும்,

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், நல்லூர் கிராமம் அருகேயுள்ள நல்லூர் அணைக்கட்டினைப் புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

மேட்டூர் அணையின் உபரி நீரினை நீரேற்றம்மூலம் வழங்கும் திட்டத்தில் பயன்பெறும், சேலம் மாவட்டம், மேட்டூர், ஓமலூர், எடப்பாடி மற்றும் சங்கரி வட்டங்களைச் சார்ந்த 100 ஏரிகள் மற்றும் குட்டைகளைப் புனரமைத்து மேம்பாடு செய்யும் பணி ரூபாய் 46 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாயின் நெடுகை 0 கி.மீ. முதல் 20 கி.மீ. வரை நவீனப்படுத்தும் பணி ரூபாய் 60 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், 18 ஆம் நீட்டிப்பு கால்வாயின் நெடுகை 0 கி.மீ. முதல் 7 கி.மீ. வரை நவீனப்படுத்தும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், 18 ஆம் நீட்டிப்பு கால்வாயின் நெடுகை 7 கி.மீ. முதல் 14 கி.மீ. வரை நவீனப்படுத்தும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், மயிலாடும்பாறை கிராமம், வருசநாடு உட்கிராமத்தில் (மொட்டப்பாறை) வைகை ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே உள்ள தடுப்பணையினை மீட்டெடுக்கும் பணி ரூபாய் 2 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி வட்டம், கதிர்நரசிங்கபுரம் கிராமம், நாகலாறு ஓடை, அத்திக்காரிக்குளம் ஏரிக்கு நீர் வழங்கும் வாய்க்காலின் நெடுகை 0 மீ. முதல் 200 மீ. வரை தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 83 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டத்தின் இணைப்புக் கால்வாயில் நெடுகை 0 கி.மீ. முதல் 25.754 கி.மீ. வரை சேதம் அடைந்துள்ள ஈப்பு பாதையின் பகுதிகளையும், சரிந்த கற்காரை பூச்சு கரைகளையும் மற்றும் குறுக்கு கட்டுமானங்களையும் புனரமைக்கும் பணி ரூபாய் 9 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், தொட்டியன்குளம் வழங்கு வாய்க்கால் மற்றும் அதன் ஏரிகளை மேம்படுத்தி நவீனப்படுத்தும் திட்டத்திற்கான பணி ரூபாய் 9 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், சீவலப்பேரி கிராமத்திலுள்ள சீவலப்பேரி பெரிய ஏரியினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பல்லடம் நீட்டிப்புக் கால்வாயின் நெடுகை 2.00 கி.மீ. முதல் 10.00 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்திலுள்ள சமமட்ட கால்வாயின் விடுபட்ட பகுதிகளான நெடுகை 30.100 கி.மீ. முதல் 49.30 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூபாய் 72 கோடி மதிப்பீட்டிலும்,

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய் நெடுகை 1.200 கி.மீ. முதல் 7.600 கி.மீ. வரை மற்றும் நெடுகை 28.600 கி.மீ. முதல் 36.000 கி.மீ. வரை புனரமைக்கும் பணி ரூபாய் 100 கோடி மதிப்பீட்டிலும்,

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம், செஞ்சி மற்றும் விக்கிரவாண்டி வட்டத்திலுள்ள நந்தன் கால்வாயில் நெடுகை 12.400 கி.மீ. முதல் நெடுகை 37.880 கி.மீ. வரை மேம்படுத்தும் பணி ரூபாய் 27 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

பிற்பகல் 4–05

8. விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில், 2 அணைகளின் கட்டுமானங்களைப் புனரமைத்து, கொள்ளளவினை மேம்படுத்தும் பணிகள் ரூபாய் 57 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், வீடூர் அணையின் கட்டுமானங்களைப் புனரமைத்தல் மற்றும் தூர்வாரும் பணி ரூபாய் 43 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செண்பகதோப்பு நீர்த்தேக்க திட்ட அமைப்பினைப் புனரமைத்து மேம்படுத்தும் பணி ரூபாய் 14 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

9. 5 மாவட்டங்களில் 9 இடங்களில் நகர்ப்புற ஏரிகளைப் புனரமைக்கும் பணிகள் ரூபாய் 47 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் நகரம், அன்னூர் வட்டத்திலுள்ள (குறும்பப்பாளையம்) சர்க்கார்சாமர்குளம் ஏரியைப் புனரமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே 65 இலட்சம் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம், கரூர் நகரம் அருகில் கிருஷ்ணராயபுரம் வட்டத்திலுள்ள (பாலராஜபுரம்) வீராக்கியம் ஏரியை புனரமைக்கும் பணி ரூபாய் 15 கோடி மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி நகரம் கல்லாலங்குடி பெரிய ஏரியைப் புனரமைக்கும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகரம் (பொன்னம்பட்டி) ஓட்டகுளம் ஏரியைப் புனரமைக்கும் பணி ரூபாய் 7 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் நகரத்தில் (புளியந்தோப்பு) சமுத்திரம் ஏரியைப் புனரமைக்கும் பணி ரூபாய் 9 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட வண்டியூர் கண்மாயைப் புனரமைக்கும் பணி ரூபாய் 96 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட கொடிக்குளம் கண்மாயைப் புனரமைக்கும் பணி ரூபாய் 82 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம் மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட அந்தனேரி கண்மாயைப் புனரமைக்கும் பணி ரூபாய் 82 இலட்சம் மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு, தல்லாகுளம் புதுகுளம் கண்மாயினைத் தூர்வாரி, கரையினை பலப்படுத்தி, வரத்துக் கால்வாய் சீர் செய்து, நடைபாதை அமைத்து புனரமைக்கும் பணி ரூபாய் 1 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

10. நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர்கள் மற்றும் தூண்டில்வளைவு அமைக்கும் பணிகள் ரூபாய் 42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், புஷ்பவனம் மீனவ கிராமத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும், தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டம், கீழவைப்பார் கிராமத்தில் ஜி.1 மற்றும் ஜி.2 தூண்டில் வளைவினை நீட்டிப்பு செய்யும் பணி ரூபாய் 15 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், பொழிக்கரை கிராமத்தில் உள்ள கடற்கரையில், கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 5 கோடியே

55 இலட்சம் மதிப்பீட்டிலும், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், மண்டைக்காடு புதூர் மீனவ கிராமத்தில் பழைய கடல் அரிப்பு தடுப்புச் சுவரின் மேற்குப் பக்கத்தில் புதிய கடல் அரிப்புத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 25 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

11. கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள பாசன கட்டுமானங்களை மறுகட்டுமானம் செய்யும் பணிகள் ரூபாய் 26 கோடியே 49 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் வட்டம், முள்ளூர்துறை அரையன்தோப்புக் கிராமத்திலுள்ள கடலரிப்புத் தடுப்புச் சுவரினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், மேலதிடியூர் கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே வெள்ளப் பாதிப்பு அடைந்த தமிழாக்குறிச்சி அணைக்கட்டினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 9 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி வட்டம், சேரன்மாதேவி கிராமத்திலுள்ள கென்னடியன் கால்வாயின் குறுக்கே நெடுகை 22.230 கி.மீ.–ல் உள்ள பாலத்தினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 44 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் மற்றும் வட்டம், சுத்தமல்லி கிராமத்திலுள்ள கோடகன் கால்வாயின் குறுக்கே நெடுகை 13.000 கி.மீ.–ல் உள்ள பாலத்தினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 55 இலட்சம் மதிப்பீட்டிலும், திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், திருமங்கலம் கிராமத்தில் பங்குனி வாய்க்காலின் குறுக்கே அமைந்துள்ள திருமங்கலம் அணைக்கட்டினை மறுகட்டுமானம் செய்யும் பணி ரூபாய் 10 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

12. 10 மாவட்டங்களில் உள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுகளில் உள்ள பூங்காக்களை சீர்படுத்தி, உட்கட்டமைப்புகளைப் புனரமைக்கும் பணிகள் ரூபாய் 35 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், திருச்சி மாவட்டம், முக்கொம்பு அணையின் பூங்காவினை ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும், சேலம் மாவட்டம், மேட்டூர் அணையின் பூங்காவினை ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும், மதுரை மாவட்டம், வைகை அணையின் பூங்காவினை ரூபாய் 6 கோடி மதிப்பீட்டிலும், தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையின் பூங்காவினை ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும், திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையின்

பூங்காவினை ரூபாய் 3 கோடி மதிப்பீட்டிலும், திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையின் பூங்காவினை ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் பூங்காவினை ரூபாய் 5 கோடி மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையின் பூங்காவினை ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும், கோயம்புத்தூர் மாவட்டம், ஆழியாறு அணையின் பூங்காவினை ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், கீழ் பவானி அணையின் பூங்காவினை ரூபாய் 2 கோடி மதிப்பீட்டிலும், சீர்படுத்தி உட்கட்டமைப்புகளைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

13. 9 மாவட்டங்களில், 12 புதிய பாசன திட்டங்களுக்கான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள ரூபாய் 1 கோடியே 85 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கிருஷ்ணகிரி மாவட்டம், அலியாளம் அணைக்கட்டின் வலதுபுறக் கால்வாய் நெடுகை 8.80 கி.மீட்டரிலிருந்து புதிய வழங்கு கால்வாய் அமைத்து தென்பெண்ணையாற்றில் வரும் வெள்ள உபரி நீரினை கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி மற்றும் தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள 12 ஏரிகளுக்கும் மற்றும் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம் தூள்செட்டி ஏரிக்கும் நீர் வழங்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம், மாயனூர் கதவணையிலிருந்து கிடைக்கப்பெறும் காவேரி ஆற்றின் வெள்ள உபரி நீரினை நீரேற்றம்மூலம் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் சாத்தியம் உள்ள நீர்நிலைகளுக்கு நீர் வழங்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும், கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் உள்ள பஞ்சப்பட்டி நீர்த்தேக்கத்திற்கு காவேரி ஆற்றின் வெள்ள உபரி நீரினை நீரேற்றம்மூலம் திருப்பும் திட்டத்திற்கும் மற்றும் மேலப்பாளையம்–கோயம்பள்ளி கிராமங்கள் அருகே அமராவதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டத்திற்கும் ஆய்வுப் பணிகள் தலா ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தாமிரபரணி ஆற்றின் குறுக்கே திருமலைகொழுந்துபுரம் கிராமம் அருகேயும் மற்றும் திருவேங்கடநாதபுரம் கிராமம் அருகேயும் கதவணைகள் அமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் முறையே ரூபாய் 20 இலட்சம் மற்றும் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அத்தாளநல்லூர் கிராமம் அருகே

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே கதவணை அமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் தலா ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், தெற்கு கருங்குளத்தை ஒட்டிய பகுதியில் கட்டப்புலி ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டிலும், அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், குருவாலப்பர் கோயில் கிராமத்திலுள்ள சோழகங்கம் என்னும் பொன்னேரி ஏரிக்கு கொள்ளிடம் ஆற்றிலிருந்து நீரேற்றம்மூலம் நீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், கொங்கர்பாளையம் கிராமத்தில் உள்ள குண்டேரிப்பள்ளம் அணையின் கொள்ளளவினை அதிகரிக்கும் திட்டத்திற்கு ஆய்வுப் பணிகள் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகரம், நொச்சிக்கோட்டகம் அருகே மற்றும் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி நகரம், எழிலூர் அருகே உள்ள குளங்களை ஏரிகளாக மீட்டெடுக்கும் திட்டங்களுக்கு ஆய்வுப் பணிகள் தலா ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

மேலும், செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்ட கட்டப்பட்டுள்ள தடுப்பணைகள் உள்ளிட்ட பல்வேறு கட்டுமானங்களின் செயல்திறனை அறிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். அதேபோன்று கடலோர மாவட்டங்களில் கடலரிப்பினைத் தடுக்க விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும்.

14. பொதுப் பணித் துறை, நீர் வள ஆதாரத் துறையில் உள்கட்டமைப்பினை மேம்படுத்தும் பணி, புதிய உபகரணங்கள் மற்றும் ஈப்புகள் வாங்கும் பணிகள் ரூபாய் 20 கோடியே 84 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பொதுப் பணித் துறை வளாகத்தில் கொள்ளிடம் வடிநில உபகோட்டத்திற்கு அலுவலகம் கட்டும் பணி ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பொதுப் பணித் துறை வளாகத்தில் பாசனப் பிரிவு எண் 1–கான அலுவலகம் கட்டும் பணி ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பொதுப் பணித் துறை வளாகத்தில் பாசனப் பிரிவு எண் 2–கான அலுவலகம் கட்டும் பணி ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பொதுப் பணித் துறை வளாகத்தில் கான்சாகிப் கால்வாய் பாசனப் பிரிவிற்கான அலுவலகம் கட்டும் பணி ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், புவனகிரியில் நீர் வள ஆதாரத் துறை உதவிப் பொறியாளர் குடியிருப்பு கட்டும் பணி ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும்,

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், சேத்தியாதோப்பு நீர் வள ஆதாரத் துறை உதவிப் பொறியாளர் குடியிருப்பு கட்டும் பணி ரூபாய் 35 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் வட்டம், கொடிவேரி அணைக்கட்டில் ஓர் ஆய்வு மாளிகை அமைக்கும் பணி ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், சித்தோடில் நீர் வள ஆதாரத் துறை உதவிப் பொறியாளர் குடியிருப்பு கட்டும் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், பூண்டியில் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்ட கோட்டம் 1–ன்கீழ் இயங்கும் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்ட உபகோட்டம் 1–ஐ சார்ந்த பிரிவு எண் 3 மற்றும் 4-க்கான பிரிவு அலுவலகம் கட்டும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்ட கோட்டம் 1–ன்கீழ் இயங்கும் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம் உபகோட்டம் 4–ஐ சார்ந்த பிரிவு எண் 1 மற்றும் 2–ற்கான பிரிவு அலுவலகம் கட்டும் பணி ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டத்தில் ஒரு புதிய பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகை கட்டும் பணி ரூபாய் 2 கோடியே 9 இலட்சம் மதிப்பீடிலும்,

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டத்தில் 1 உதவி செயற்பொறியாளர் குடியிருப்பு மற்றும் 2 உதவிப் பொறியாளர் குடியிருப்புகள் மற்றும் எஸ்.வி. நகரம் கிராமத்தில் ஒரு பாசன உதவியாளர் குடியிருப்பு கட்டும் பணி ரூபாய் 88 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திட்ட உருவாக்கம், நீர் வள ஆதாரத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் கோட்ட அலுவலகங்களுக்கு நவீன நில அளவை மற்றும் மட்ட அளவு கருவிகள் (DGPS) கொள்முதல் செய்யும் பணி ரூபாய் 2 கோடியே 70 இலட்சம் மதிப்பீட்டிலும்,

திட்ட உருவாக்கம், நீர் வள ஆதாரத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் உபகோட்ட அலுவலகங்களுக்கு புதிய ஈப்புகள் கொள்முதல் செய்யும் பணி ரூபாய் 4 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டிலும்,

களப் பணிகளின் தரத்தை உறுதி செய்யும்பொருட்டு, ஆய்வு மேற்கொள்ளத் தேவையான ஆய்வு உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி ரூபாய் 62 இலட்சம் மதிப்பீட்டிலும்,

சென்னை, திருச்சி, பொள்ளாச்சி மற்றும் மதுரை தரக் கட்டுப்பாடு கோட்டங்களின் மண்டல தரக் கட்டுப்பாடு ஆய்வகம் மற்றும் கள ஆய்வகங்களை வலுப்படுத்தும் பணி ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலும்,

திருச்சி மற்றும் பொள்ளாச்சி தரக் கட்டுப்பாடு கோட்டங்களுக்கு நடமாடும் தரக் கட்டுப்பாடு ஆய்வகங்களைக் கொள்முதல் செய்தல் (5 எண்கள்) ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

15. கட்டட அமைப்பு அலுவலகங்களுக்கு கணினிகள், மென்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் ரூபாய் 3 கோடியே 40 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், மண்டல கட்டுப்பாட்டில் உள்ள அலுவலகங்களுக்கு ரூபாய் 1 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டிலும், தலைமைக் கட்டடக் கலைஞர் மற்றும் கட்டட கட்டுமான மற்றும் வடிவமைப்பு வட்ட அலுவலகத்திற்கு ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும் கணினி, மென்பொருள்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.

16. பொதுப் பணித் துறை தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம், பணியாளர் பயிற்சி நிலையத்தில் விரிவுரையரங்கம் மற்றும் சேலம், நாகப்பட்டினம் கோட்டம் மற்றும் 4 உபகோட்ட அலுவலகங்கள் ரூபாய் 13 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், சென்னை தரக் கட்டுப்பாட்டு ஆய்வகத்திற்கான உபகரணங்கள் கொள்முதல் செய்யும் பணி மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி ரூபாய் 7 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், சென்னை, பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலையத்தில் விரிவுரையரங்கம் ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டிலும், சேலம் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டமும் மற்றும் மருத்துவப் பணிகள் கோட்டமும் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினம் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டமும் மற்றும் இரண்டு உபகோட்டங்களும் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், திண்டுக்கல், திருமயம், தேனி (மின்) உபகோட்ட அலுவலகங்கள் தலா ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டிலும், துறையூரில் 2 உபகோட்ட அலுவலகங்கள் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும்.

17. தரக் கட்டுப்பாடு மற்றும் மருத்துவப் பணிகள் உபகோட்டங்களுக்கு புதிய ஈப்புகள் ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், தரக்கட்டுப்பாடு மற்றும் மருத்துவப் பணிகள் உபகோட்டங்களுக்கு ரூபாய் 2 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஈப்புகள் கொள்முதல் செய்யப்படும்.

18. வேதாரண்யம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் தேனியில் கூடுதல் அரசு சுற்றுலா மாளிகை கட்டடங்கள் ரூபாய் 10 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டிலும், தூத்துக்குடியில் செயற்பொறியாளர் குடியிருப்புக் கட்டடப் பணி மற்றும் சென்னை, பொதுப் பணித் துறை பணிமனை பணியாளர் குடியிருப்பு சிறப்பு மராமத்துப் பணிகள் ரூபாய் 96 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், வேதாரண்யத்தில் புதிய அரசு சுற்றுலா மாளிகை கட்டடம் ரூபாய்

1 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டிலும், நாகப்பட்டினத்தில் அரசு சுற்றுலா மாளிகை கூடுதல் கட்டடம் ரூபாய் 3 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டிலும், மயிலாடுதுறையில் அரசு சுற்றுலா மாளிகை கூடுதல் கட்டடம் ரூபாய் 1 கோடியே 95 இலட்சம் மதிப்பீட்டிலும், தேனியில் அரசு சுற்றுலா மாளிகை கூடுதல் கட்டடம் ரூபாய் 3 கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலும், தூத்துக்குடி கட்டட அமைப்பு செயற்பொறியாளருக்கான குடியிருப்பு ரூபாய் 66 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்படும். மேலும், சென்னை, பொதுப் பணித் துறை பணிமனை பணியாளர் குடியிருப்பு கட்டட சிறப்பு மராமத்துப் பணிகள் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

19. பொதுப் பணித் துறை, கட்டடப் பிரிவு பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களுக்கு நவீன தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் வெளிநாடு களப்பயிற்சி அளிக்க ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், பொதுப் பணித் துறை, கட்டடப் பிரிவு பொறியாளர்கள் மற்றும் கட்டடக் கலைஞர்களுக்கு (Architects) நவீன தொழில்நுட்பங்களை அறியும் வகையில், உயர்மட்டப் பயிற்சி மற்றும் வெளிநாடு களப்பயிற்சி அளிக்க ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

20. எழிலகம் மற்றும் சேப்பாக்கம் அரசு அலுவலக வளாகத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி மற்றும் சட்டமன்ற அரங்கத்திலுள்ள ஒலிவாங்கி அமைப்புகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 7 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியுடன், எழிலகம் மற்றும் சேப்பாக்கம் அரசு அலுவலக வளாகத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 6 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டிலும், சென்னை தலைமைச் செயலக சட்டமன்ற அரங்கத்தில் மின்னிலக்கமுறை மாநாட்டு ஒலிவாங்கி அமைப்புகளை மேம்படுத்தும் பணி ரூபாய் 59 இலட்சம் மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக் கொண்டு,

மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் சென்ற முறைகூட இதுகுறித்து நான் கேட்டேன், பொதுப் பணித் துறையில், NMR ஆக 10,000, 15,000 பேர் பணிபுரிகிறார்கள். அவர்கள் நீண்ட நெடுங்காலமாக, 10 வருடங்கள், 15 வருடங்கள் என உழைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதோ சம்பளம் குறைந்தபட்ச ஊதியமாக போட்டுக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், ஓய்வுபெறும்போது, அவர்களுக்கு எந்தவித benefit–ம் கிடைக்காது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், சாதாரணமாக தான் எப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வந்தேன் என்று பேசுகிறபோது, உள்ளபடியே மிகவும் கனிவாக இருந்தது. அப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வந்தவர்கள்தான், சாதாரணமான, ஏழை எளிய NMR–கள். நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோதுதான், 15,000 பேரை பணி நிரந்தரம் செய்தேன். அவர்கள் இன்னும் அதைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் 10,000, 15,000 பேரை பணி நிரந்தரம் செய்தால், அவர்கள் தங்கள் வாழ்க்கை முழுவதும் உங்கள் பெயரை சொல்லிக்கொண்டு இருப்பார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைக் கனிவுடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது கோரிக்கை என்னுடைய தொகுதி சம்பந்தமானது. கடந்த பட்ஜெட் அல்லாது, அதற்கு முந்தைய பட்ஜெட்டில், காங்கேயநல்லூர்–கலெக்டர் ஆபிஸ் சாலை அமைக்கப்படும் என்று அறிவித்தீர்கள். இன்னும் அந்த சாலையைப் போடுகிறார்கள். அதைப் பற்றி கேட்டால், 'ஆய்வு செய்கிறோம், ஆய்வு செய்கிறோம்' என்று சொல்கிறார்கள். அது ஒரு சின்ன ரோடு. இரண்டு வருடங்களாக ஆய்வு செய்கிறோம், ஆய்வு செய்கிறோம் என்றால், அது என்ன ஆய்வு என்று எனக்கும் தெரியவில்லை. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மூன்றாவதாக, என்னுடைய காட்பாடி தொகுதியில் பொன்னையாற்றில் தடுப்பணை கட்ட பொதுப் பணித் துறையினர் investigation செய்திருக்கிறார்கள். 11.58 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறார்கள். அதனால், 289 எக்டேர் நிலங்கள் பாசன வசதி

பெறும், 40 கிணறுகள் பயன் பெறும், 5, 6 பஞ்சாயத்துகளுக்கு குடிநீர் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலிக்க வேண்டும். எனது தொகுதிக்கான மேற்காணும் இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள், என்னுடைய இந்த இரண்டு தொகுதி கோரிக்கைகளை கவனிக்கிறார்களோ, இல்லையோ பொதுப் பணித் துறையில் பணிபுரியும் NMRs–ஐ கவனிக்க வேண்டும், அதுதான் மிகவும் முக்கியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இரண்டு கோரிக்கைகள். ராஜபாளையம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து தென்காசி ரோட்டுக்கு இணைப்புச் சாலை அமைக்க ஏற்கெனவே தமிழக முதல்வர் அவர்களாலே 2018–லே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகளை எடுத்துக்கொண்டு மிக விரைவிலே நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல், அந்த மாவட்டத்தினுடைய மிக முக்கியமான சாலை ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து பார்த்திபனூருக்கு வரக்கூடிய சாலை. 4 மிக முக்கியமான தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய சாலை இது. அந்தச் சாலையை 4 வழிச் சாலையாக மாற்றி, போக்குவரத்தைச் செம்மைப்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைப் பணியாளர்களின் பணி நீக்கக் காலமான 7–9–2002 முதல் 12–2–2006 வரை உள்ள 41 மாத கால பணி நீக்கக் காலத்தை மறுபரிசீலனை செய்து, பணி ஓய்வுக்குப் பின்பு ஓய்வூதியப் பலன்கள் பணிக்கொடை கிடைக்கும் வகையில் அரசாணை வெளியிட்டும், சாலைப் பணியாளர்கள் ஓய்வு பெறும் வயது 60 ஆக நிர்ணயம் செய்தும், சாலைப் பணியாளர்களுக்கு பதிவுரு எழுத்தர்,

இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளித்தும், அந்த சாலைப் பணியாளர்களுக்கு 7–வது ஊதியக் குழுவில் ரூ.1,900 தர ஊதியக் கட்டில் நிர்ணயம் செய்திடவும் வேண்டும். 7–9–2002 முதல் 12–2–2006 வரை பணி நீக்கக் காலத்தில் இறந்த சாலைப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு அரசுப் பணி வழங்கிட வேண்டும்.

நீர்மிகு மாநிலம், மின்மிகை மாநிலம் மற்றும் நிதிமிகு மாநிலமாகவும் தமிழகத்தை மாற்றிக் காண்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V. செந்தில் பாலாஜி அவர்கள்.

திரு. V. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுகளில் மணல் அள்ள தடை விதிக்கப்படுகிறதென்றால் தமிழகம் முழுவதும் தடை விதிக்கப்பட வேண்டும். மாட்டு வண்டிகளில் மணல் எடுக்க, நாமக்கல், திருச்சி மாவட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறதென்று சொன்னால், கரூர் மாவட்டத்திலும் மாட்டு வண்டி உரிமையாளர்களுடைய கோரிக்கையை ஏற்று, பொதுப் பணித் துறைமூலம் அரசாணை வெளியிடப்பட்டு, முறையான அனுமதிச் சீட்டு வழங்கி, அவர்களுக்கு முறையாக ஆறுகளில் மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்குவதற்கு இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் NMR பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை, பாசனப் பணிகள், கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதில் பாசன உதவியாளர், உதவி தோட்டக்காரர், காவலர், பெருக்குனர் மற்றும் துப்புரவாளர் உள்ளிட்ட களப் பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பணியாளர்களை தேவைக்கேற்ப ஈடுபடுத்துகின்றனர். தற்போது 5,431 தினக் கூலி பணியாளர்கள் நியமிக்கப்பட்டு பணியில் உள்ளனர். ஏற்கெனவே 2,023 பேர் பணி வரன்முறை செய்யப்பட்டுவிட்டார்கள். குறைந்தபட்ச ஊதியம் தற்போது பெற்று வருபவர்கள் 3,004 பேருக்கு டிசம்பர்

2019 வரை வழங்கப்பட்டது. குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட்டு, 10 ஆண்டுகள் பணிபுரிந்துள்ள 1,458 தினக்கூலி பணியாளர்களை பணி வரன்முறை செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதுபோல, படிப்படியாக அந்தக் குறிப்பிட்ட ஆண்டுகள் நிறைவடைந்தவுடன் அவர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துகளையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, முடிந்த அளவுக்கு செயல்படுத்தும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன, சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல, NMRs–க்கு எல்லாம் ஒரு பரிகாரம் கண்டிருக்கிறீர்கள். என் தொகுதியில் புங்கனூர் பக்கத்தில் பொன்னையாற்றின் குறுக்கே நான் கேட்ட தடுப்பணை கட்டுவதற்கு இதில் 13 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,572,73,60,000/–, மூலதனக் கணக்கில் ரூ.14,277,55,09,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத

தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4–15

(ஆ) கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.388,37,02,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,214,60,76,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 40—பாசனம் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,157,42,13,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,814,85,51,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19–3–2020), வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–16 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

135. மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2020 மார்ச் 18]

136. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய நிதிநிலை செயலாக்கம், 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

137. நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

138. மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

139. பொதுப் பணித் துறை (கட்டடங்கள்) பற்றிய திட்டச் சாதனை, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

140. பொதுப் பணித் துறை (கட்டடங்கள்) பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

141. மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2020–2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

142. பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரத் துறை) பற்றிய திட்டச் சாதனை, 2019–2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

143. பொதுப் பணித் துறை (நீர்வள ஆதாரத் துறை) பற்றிய மக்கள் சாசனம், 2020. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

144. "மீன் வளத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

145. "தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகத்தின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

146. "கால்நடை பராமரிப்புத் துறையின் சாதனைகள்" என்கிற சிறுநூல்கள். (தமிழ்)

147. "தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சாதனைகள்" என்கிற சிறுநூல். (தமிழ்)

148. மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

149. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு மீன் வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

150. கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை) மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2020–2021. (தமிழ்)

இணைப்பு I

(700 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 21-நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1. முகவுரை

நெடுஞ்சாலைத் துறை நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும் மற்றும் ஆற்றல் மிக்க சமூகங்கள் அமையப் ப்பெறுவதற்கும் முதுகெலும்பாக இருக்கிறது. மேலும், சாலைப் போக்குவரத்தினை மேம்படுத்துவதன்மூலம் தொழிற்சாலைகளின் அபரிமித வளர்ச்சியிலும், விளைபொருட்களை விற்பனைக் கூடத்திற்கு விரைவாக கொண்டு செல்வதிலும் முக்கிய பங்களிப்பதால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியடைகிறது.

தரமான, பாதுகாப்பான சாலைகளை அமைப்பதன்மூலம் மக்கள் மற்றும் வணிகப் பொருட்களின் போக்குவரத்து மேம்படுகிறது.

1.1 நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை

சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னணி வகிக்கிறது. மாநிலத்தில் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 2.61 இலட்சம் கி.மீ. ஆகும். இதில் நெடுஞ்சாலைத் துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பிற துறைகளில் உள்ள சாலைகள் அனைத்தும் அடங்கும். அவற்றில் 66,039 கி.மீ. நீளச் சாலைகள் நெடுஞ்சாலைத் துறையின்மூலம் பின்வரும் வகைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 18

1.1.1 மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகள்

1.1.1.1 தேசிய நெடுஞ்சாலைகள் (NH)

தேசிய நெடுஞ்சாலையானது நாட்டின் மாநிலத் தலைநகரங்கள், முக்கிய துறைமுகங்கள், பெரிய தொழில் துறைப் பகுதிகள் மற்றும் சுற்றுலா மையங்களை இணைக்கின்றது. இந்திய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தினால் வழங்கப்படும் நிதியினைக் கொண்டு தேசிய நெடுஞ்சாலைகளின் தரம் உயர்த்துதல், மேம்படுத்துதல் மற்றும் அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

1.1.2 நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலைகள்

1.1.2.1 மாநில நெடுஞ்சாலைகள் (SH)

மாநில நெடுஞ்சாலைகள் மாவட்டத் தலைமையகங்கள், முக்கியமான நகரங்கள், மாநிலத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலச் சாலைகளையும் இணைக்கின்றன.

1.1.2.2 மாவட்ட முக்கிய சாலைகள் (MDR)

மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்டத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களை தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகளுடன் இணைக்கின்றன.

1.1.2.3 மாவட்ட இதர சாலைகள் (ODR)

1,676 கி.மீ. நீளமுள்ள கரும்புச் சாலைகளையும் உள்ளடக்கிய மாவட்ட இதர சாலைகள் உற்பத்தி மற்றும் விற்பனை மையங்களை மாவட்டத்தின் இதர நகரப் பகுதிகளுடனும் மற்ற பிரதான சாலைகளுடனும் இணைக்கின்றன.

சாலைகளின் நீளம் மற்றும் வழித்தட விவரங்கள் அட்டவணை 1 (அ) மற்றும் 1 (ஆ)-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 18]

அட்டவணை 1 (அ): வகைவாரியான சாலை விவரங்கள்

வ. எண்	சாலையின் வகைப்பாடு	நீளம் கிமீ-ல்	பராமரிக்கும் அலகு
1	தேசிய நெடுஞ்சாலைகள்	1900	மாநில தேசிய நெடுஞ்சாலை அலகு
		4734	இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்
	தே.நெ.மொத்தம்	6634	
2	மாநில நெடுஞ்சாலைகள்	11169	கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
3	மாவட்ட முக்கிய சாலைகள்	11612	
4	மாவட்ட இதர சாலைகள்	36624	
சாலைகளின் மொத்த நீளம் (தே.நெ.தவிர)		59405	
ஒட்டு மொத்தம்		66039	

அட்டவணை 1 (ஆ): வழித்தடவாரியான சாலை விவரங்கள்

(நீளம் கி.மீ.-ல்)

வ. எண்	வகைப்பாடு	ஒரு வழித் தடம்	இடை வழித் தடம்	இரு வழித் தடம்	பல் வழித் தடம்	மொத்தம்
1	தேசிய நெடுஞ்சாலை	-	-	3514	3120	6634
2	மாநில நெடுஞ்சாலைகள்	38	215	8570	2346	11169
3	மாவட்ட முக்கியச் சாலைகள்	321	7186	3869	236	11612
4	மாவட்ட இதர சாலைகள்	30490	4960	1103	71	36624
	மொத்தம்	30849	12361	17056	5773	66039

[2020 மார்ச் 18

1.2 தமிழ்நாடு கடல்சார் வாரியம்

இந்தியாவின் தென்கோடியில் அமைந்திருக்கும் தமிழ்நாடு, கிழக்கில் வங்காள விரிகுடாவையும், தெற்கில் இந்துமகா சமுத்திரத்தையும், மேற்கில் அரபிக் கடலையும், கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களையும் வடக்கில் கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இம்மாநிலம் 3 பெரிய துறைமுகங்களும், 17 அறிவிக்கை செய்யப்பட்ட சிறு துறைமுகங்களும் கொண்ட 1,076 கி.மீ. நீளக் கடற்கரையைக் கொண்டுள்ளது. பொது மற்றும் தனியார் பங்களிப்பின்மூலம் சிறு துறைமுகங்களை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் துறைமுகத் துறையானது, 18-3-1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (4/1996)-ன்படி தமிழ்நாடு கடல்சார் வாரியமாக மாற்றியமைக்கப்பட்டது.

1.3 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11-4-1974 அன்று நிறுவனங்கள் சட்டம் 1956-ன்படி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் உற்பத்திக்குத் தேவைப்படும் உள்நாட்டு நிலக்கரியை எடுத்து வருவதற்காக நிறுவப்பட்டது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு தேவைப்படும் நிலக்கரி, ஹால்தியா, பாரதீப், தாம்ரா மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி எண்ணூரில் உள்ள காமராசர் துறைமுகத்திற்கும், காரைக்கால் மற்றும் தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகங்களுக்கும் கொண்டு வரப்படுகிறது.

மேலும், இந்நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல் மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின், வல்லூர், வடசென்னையில் அமைந்துள்ள முறையே 500 மெகாவாட் திறன் படைத்த 3 அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான இந்திய நிலக்கரியை பாரதீப் மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூரில் உள்ள காமராசர் துறைமுகத்திற்கு அந்நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி நிலக்கரி எடுத்துவரும் பணியினை 2012 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்கள் வாயிலாக மேற்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 18]

இக்கழகம், கன்னியாகுமரியில் படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்காக படகுப் போக்குவரத்து மேற்கொண்டு வருகிறது. தற்பொழுது, ஒவ்வொரு படகிலும் 150 இருக்கைகள் கொண்ட எம்.எல். குகன், எம்.எல். பொதிகை மற்றும் எம்.எல். விவேகானந்தா ஆகிய மூன்று படகுகள் 11-8-1984 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

2. கொள்கை வரையறை

முழுமையான தேசிய வளர்ச்சிக்கு பங்களிக்கும் இரயில்வே, வான்வழி மற்றும் நீர்வழிகள் போன்ற பல்வேறு போக்குவரத்துகளை ஒருங்கிணைப்பதில் சாலை வலைத்தளமானது முக்கிய பங்கு வகிக்கிறது.

நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வாழும் மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதில் சாலைகளின் பங்கு அவசியமானதாகும்.

ஒரு திட்டமிடப்பட்ட சாலை வலைத்தளமானது, நாடெங்கிலும் உள்ள மக்கள் மற்றும் வணிகச் சரக்குகளின் திறனான இயக்கத்திற்கு முறைப்படுத்தப்பட்ட, தடையற்ற மற்றும் பாதுகாப்பான போக்குவரத்தினை உறுதி செய்கிறது.

தமிழகத்தில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக நெடுஞ்சாலைத் துறையானது 66,039 கி.மீ. நீளச் சாலைகளை தன்னகத்தே கொண்டுள்ளது. சாலை மேம்பாடுகள், புறவழிச் சாலைகள், பல்வழிச்சாலை மேம்பாலங்கள், ஆற்றுப் பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள், சிறு பாலங்கள், சாலைப் பாதுகாப்புப் பணிகள் போன்றவற்றை பல்வேறு திட்டங்களின்கீழ் செயலாக்கப்படுத்துவதன் மூலமாக சாலை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகிறது.

துறையின் பல்வேறு பிரிவுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பின்வருமாறு:

2.1 மாநில நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

- திட்டப் பணிகள்
- திட்டம் சாராப் பணிகள்

2.1.1 திட்டப் பணிகள்

2.1.1.1 ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP)

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2005-2006 ஆம் ஆண்டில் பெரிய அளவில் சாலைகளை அகலப்படுத்துதல், மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது. இதன் வாயிலாக மாநிலத்தின் சாலை வசதிகள் அதிகரிக்கப்பட்டு மாநிலத்தின் போக்குவரத்து கட்டமைப்பு தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

2011-2012 ஆம் ஆண்டு வரவு-செலவுத் தொடரின்போது இடைவழித்தட மாநில நெடுஞ்சாலைகளை இருவழித்தடமாக அகலப்படுத்துவதற்கும், ஒரு வழித்தட மாவட்ட முக்கியச் சாலைகளை இடைவழித்தடமாக அகலப்படுத்துவதற்குமான கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டது. இதன்படி 2011-2012 ஆம் ஆண்டு முதல் ரூ.586.35 கோடி மதிப்பில் 973 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தும் பணிகளும், ரூ.1612.42 கோடி மதிப்பில் 3099 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைகளை அகலப்படுத்தும் பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

இதன்படி 98 விழுக்காடு மாநில நெடுஞ்சாலைகள் இருவழி மற்றும் பல வழித்தடமாகவும், 97 விழுக்காடு மாவட்ட முக்கிய சாலைகள் இடைவழி மற்றும் இருவழி/பல்வழித்தடச் சாலைகளாகவும் உள்ளன. மேலும், இத்திட்டத்தில், பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

சாலைப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு வளைவுகளை மேம்படுத்துதல், வடிவியல் மேம்பாட்டு பணிகள், சாலை சந்திப்பு மேம்பாடு, மையத் தடுப்பான் மற்றும் சாலைக் குறியீடுகள் போன்ற சாலைப் பாதுகாப்பு அம்சங்களும் ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

2.1.1.2 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP)

சென்னை மாநகரின் போக்குவரவு மற்றும் போக்குவரத்துத் துறை தொடர்பான முக்கிய பிரச்சினைகளை அடையாளம் காணும் பொருட்டு, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் விரிவான போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வினை (CTTS) மேற்கொண்டது. சென்னை பெருநகர பகுதியில் சிறந்த போக்குவரத்து உட்கட்டமைப்பு வளர்ச்சிக்காக தொலைநோக்குப் பார்வையோடு

2020 மார்ச் 18]

இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வில் கண்டறியப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தில் 2003-2004 முதல் மாநில நிதி ஒதுக்கீட்டின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2.1.1.3 ஊரக சாலை வளர்ச்சித் திட்டம்

மாநில நிதியின்கீழ், ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஊராட்சி சாலைகள், மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன.

2.1.1.4 சாலைப் பாதுகாப்புத் திட்டம்

நெடுஞ்சாலைகளின் வடிவமைப்பில் சாலைப் பாதுகாப்பு, முக்கிய அம்சமாக உள்ளது. சாலைப் பாதுகாப்பு அம்சங்களைக் கருதி மேற்கொள்ளப்படும் சிறிய அளவிலான மேம்பாட்டுப் பணிகள், சாலை விபத்துகளைக் குறைப்பதற்குப் பெரிதும் உதவுகின்றன.

அதிவேக வாகனங்களின் வளர்ச்சிக்கு சிறந்த சாலை உட்கட்டமைப்பு தேவைப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டிலும் ஏற்படும் வாகன விபத்துகள், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 3 விழுக்காடு* பாதிக்கிறது. வாகன விபத்துகளில் ஏற்படும் உயிர்ச்சேதம் மற்றும் பெரும் பொருட்செலவைக் கருத்தில் கொண்டு, இத்தகைய விபத்துகளின் தீவிரத்தைக் குறைக்கவும், பாதுகாப்பு அம்சங்களை அதிகரிக்கவும் இத்துறை பல்வேறு நடவடிக்கைகளைச் செயல்படுத்தியுள்ளது.

சாலைப் பாதுகாப்பினை அதிகரிப்பதற்காக வளைவுகளை நேர்படுத்துதல், குறுகிய பாலங்கள்/சிறுபாலங்கள் அகலப்படுத்தும் பணி, பாதுகாப்பு சுவர் கட்டும் பணி, உயர்மட்ட சாலைகளில் விபத்துத் தடுப்பான், மையத் தடுப்பான் மற்றும் சாலை சமிக்ஞைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2015-2016 ஆம் ஆண்டினை அடிப்படை ஆண்டாகக் கொண்டு ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்கில், 2020 ஆம் ஆண்டில் சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையினைப் பாதியாகக் குறைக்க நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

* மூலம்-ஆசிய மற்றும் பசிபிக் கண்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக அமைப்பு (UNESCAP)

[2020 மார்ச் 18

சாலை உட்கட்டமைப்புகள், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து ஒழுங்குமுறை மற்றும் சட்ட அமலாக்கம் ஆகியவை விலைமதிப்பில்லா மனித உயிர்களைக் காப்பதற்கு முக்கியப் பங்காற்றுகின்றன. மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, சாலை விபத்துகளைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும், பரிசீலிக்கவும் மூன்று நபர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினால், அளிக்கப்பட்ட பல்வேறு அறிவுரைகளையும், எழுத்துப்பூர்வ வழிகாட்டுதல்களையும் பின்பற்றி, பங்களிப்புத் துறைகளுடன் ஒருங்கிணைந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, 2016 ஆம் ஆண்டினை ஒப்பிடுகையில் சாலை விபத்துகளினால் ஏற்படும் உயிரிழப்பு 38 விழுக்காடு* குறைந்துள்ளது. மேலும், மாவட்ட அளவிலான கூட்டங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடைபெறுகின்றன. அவற்றில் சாலை விபத்துகள் குறித்த தரவு ஆராயப்பட்டு அவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II-ல் நிறுவனத்திறன் மேம்பாடு மற்றும் சாலைப் பாதுகாப்பு கூறின்மூலம், சாலைப் பாதுகாப்பு தணிக்கை, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் 1,487 கி.மீ.-ல் மேற்கொள்ளப்பட்டு, அவற்றுள் 95.6. கி.மீ. நீள மாதிரி சாலைத்தொடர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் சாலைப் பாதுகாப்பு சார்ந்த அனைத்து பணிகளையும் மேற்கொண்டு, அதனைச் தொடர்ச்சியாகக் கண்காணித்து, சாலை விபத்துகள் மற்றும் உயிரிழப்புகளின் அடிப்படையில் ஆய்வறிக்கை தயாரிக்கப்படவுள்ளது. இதன் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.1.1.5 செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC)

செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தத்தில், சாலைக் கட்டமைப்புகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கான பொறுப்பு மற்றும் முக்கியத்துவம் ஒப்பந்ததாரரையே சாரும். இதன்மூலம் ஒப்பந்த மேலாண்மை திறனாக்கப்பட்டுள்ளது. இவ்வொப்பந்த முறையில் பணிகளின் சேவை நிலைகள் மற்றும் செயல்பாட்டு அளவீடுகளின் அடிப்படையில் முடிவுற்ற பணிகளுக்கான தொகை வழங்கப்படுகிறது.

* மூலம்-மாநில குற்றப் பிரிவு ஆணையத்தின் (SCRB) 2019-க்கான சாலை விபத்துக்களுக்கான புள்ளி விவரங்கள்

2020 மார்ச் 18]

ஒரு கோட்டத்தில் உள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் வாயிலாகப் பணி மேற்கொள்ளப்படுவதால் சாலை வலைதள மேலாண்மை திறன் மிக்கதாக அமைகிறது.

2.1.2 திட்டம் சாராப் பணிகள்

2.1.2.1 பராமரிப்பு பணிகள்

சாலைகளை முறையாகப் பராமரிப்பதும், அனைத்து பருவகாலங்களிலும், தங்குதடையற்ற போக்குவரத்தினைச் செயல்படுத்துவதும் அவசியமானதாகும். தொடர் போக்குவரத்து காரணமாக சாலைகளின் மேல்தளம் பழுதடைகிறது. முறையான பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதன்மூலம் சாலைகள் விரைவாக பழுதடைவது தடுக்கப்படுகிறது. எனவே நிதி அறிக்கையில், பராமரிப்பு பணிகளுக்கென திட்டம் சாரா பணிகளின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது.

சிறப்புப் பராமரிப்பு மற்றும் காலமுறை பராமரிப்புப் பணிகளின்கீழ், மேல்தள கலவை போடப்பட்டு சாலைகள் நல்ல நிலைமையில் பராமரிக்கப்படுகின்றன. தார் நொடிகள், பள்ளங்களைச் சரி செய்தல், புருவங்களைச் சரி செய்தல், பருவமழைக் காலங்களுக்கு முன்பே சிறு பாலம் மற்றும் பாலங்களின் நீர் வழிப்பாதையைத் தூர் வாரும் பணிகள், மரம் நடுதல், சாலை சமிக்ஞை பலகைகள், கி.மீ. கற்கள் மற்றும் சிறு பாலங்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் இதர பராமரிப்புப் பணிகள், சாலைகளைச் சிறந்த முறையில் பராமரிக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

2.2 மத்திய அரசு நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

2.2.1 ஆண்டுத் திட்டம்

மத்திய அரசின் நிதியின்மூலம் ஆண்டுத் திட்டப் பணிகள் செயலாக்கப்படுகின்றன. இவை தேசிய நெடுஞ்சாலை அலகின் முக்கியப் பணிகளாகும். இத்திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலை சாலைகளை மேம்படுத்துதல், உறுதிப்படுத்துதல், பாலங்கள் கட்டுதல்/மறு சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

[2020 மார்ச் 18

2.2.2 மத்திய சாலை நிதி (CRF)

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், பெட்ரோல் மற்றும் அதிவேக டீசல் நுகர்வுக்கு விதிக்கப்பட்ட வரியிலிருந்து சாலை உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குகிறது.

2.2.2.1 புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் (RCRF)

இத்திட்டத்தின்கீழ் மாநில சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் இதர மாவட்ட சாலைகள் மேம்படுத்தப்படுகின்றன.

2.2.2.2 மாநிலங்களுக்கிடையிலான சாலைகள் இணைப்பு (ISC)/ பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் (EI)

மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் இரு மாநிலங்களை இணைக்கும் பொருட்டு அமைந்த சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2.3 நபார்டு வங்கி நிதி உதவியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டம்

நபார்டு கடனுதவி திட்டத்தில், மாநில அரசின் பங்களிப்புடன் 80:20 என்ற விகிதத்தில் ஆற்றுப் பாலங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.4 இரயில்வே திட்டப் பணிகள் (RWP)

வாகனங்களின் பெருக்கத்தினால், சாலை மற்றும் இரயில்வே போக்குவரத்தின்போது இரயில்வே கடவுகள் பெருந்தடையாக உள்ளன. விபத்துகளின் பாதிப்பு மற்றும் காத்திருக்கும் நேரத்தினைக் குறைப்பதற்கும், போக்குவரத்தின் நெரிசலைத் தவிர்ப்பதற்கும் இரயில் வாகன அலகு ஒரு இலட்சத்திற்கும் அதிகமாக உள்ள இரயில்வே கடவுகள் கண்டறியப்பட்டு இரயில்வே மேம்பாலங்கள், கீழ்பாலங்களாக மாற்றப்படுகின்றன.

இரயில்வே மேம்பாலங்கள், கீழ்பாலங்களில் உள்ள அணுகுசாலைகள் மாநில நெடுஞ்சாலைத் துறை மூலமாகவும் மற்றும் இரயில்வே பகுதிகள் இரயில்வே துறையாலும் கட்டி முடிக்கப்படுகின்றன. மேலும் இந்தப் பணியானது இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து 50:50 பணப் பகிர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

2020 மார்ச் 18]

2.5 பன்னாட்டு உதவி பெறும் திட்டங்கள்

2.5.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II (TNRSP-II)

உலக வங்கியின் நிதியுதவிமூலம் மாநிலத்தில் உள்ள முக்கியத்துவம் மற்றும் அதிக வாகன நெருக்கடி மிகுந்த சாலைகளை மேம்படுத்த தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டமானது 1,170.227 கி.மீ. (இ.பி.சி.-427.657 கி.மீ., பி.பி.பி.-145.100 கி.மீ. மற்றும் ஒ.பி.ஆர்.சி.-597.470 கி.மீ.) நீளமுள்ள சாலைத் தொடர்களின் மேம்பாடு மற்றும் பராமரிப்பை உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II ஆனது, சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் மட்டுமின்றி, இத்துறையின் நிறுவனத்திறன் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாநிலத்தின் சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துகிறது.

2.5.2 சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் (CKICP)

சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்டமானது, மத்திய அரசால் உற்பத்தித் துறையை உயர்த்துவதற்காக கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ள பொருளாதார தடங்களில் ஒரு பகுதியாகும். இத்திட்டத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கியால் தயாரிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டமானது, கடலூர்-நாகப்பட்டினம், அரியலூர்-பெரம்பலூர், திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை-சிவகங்கை, மதுரை-திண்டுக்கல்-விருதுநகர்- தேனி, இராமநாதபுரம், தூத்துக்குடி-திருநெல்வேலி ஆகிய 6 தொழில் முனையங்களை உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கான இத்திட்டமானது, 13 கடலோர மாவட்டங்கள் மற்றும் 11 உள் மாவட்டங்கள் என 24 மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சாலை உட்கட்டமைப்பின்கீழ், 4318 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் 3,729 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகளை உள்ளடக்கி மொத்தமாக 8,047 கி.மீ. சாலைகள் ஆறுகட்டங்களாக மேம்படுத்தப்படுவதற்கு கண்டறியப்பட்டுள்ளது.

சென்னை-கன்னியாகுமரி சாலை மேம்பாட்டுத் திட்டமானது, ஆசிய வளர்ச்சி வங்கி கடனுதவியுடன் விரைந்து மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில்

முதற்கட்டமாக, சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட பயன்விளைப் பகுதியில் 20 மாவட்டங்களில் 15 முக்கிய இணைப்புச் சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளன.

2.5.3 சென்னை எல்லை சாலைத் திட்டம் (CPRR)

தமிழக அரசு எண்ணூர் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களுக்கு ஒரு இணைப்பினை ஏற்படுத்தும் வகையில், உட்கட்டமைப்பினை ஏற்படுத்தி சென்னை எல்லை சாலையை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்திட்டச் சாலையானது எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கப்பெற்று கிழக்குக் கடற்கரை சாலையில் மாமல்லபுரம் அருகில் உள்ள பூஞ்சேரி சந்திப்பில் முடிவுறுகிறது. 97.47 கி.மீ. புதிய நேர்பாட்டிலும், 35.91 கி.மீ. பயன்பாட்டில் உள்ள சாலையிலும் என மொத்தம் 133.38 கி.மீ. சாலையானது 5 பிரிவுகளாக எடுத்து உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டமானது, சாலையின் செயல்திறன் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவது, பாதுகாக்கப்பட்ட அணுகுசாலையையும், நுண்ணறிவுப் போக்குவரத்து அமைப்புகளையும், இச்சாலையின் முழு நீளத்திற்கும் அமைக்க ஏற்பாடுகள் செய்வது போன்ற முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

2.5.4 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC)

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனமானது அரசின் பெருந்திட்டப் பணிகள், புதிய கட்டுமான உத்திகள் மற்றும் சிறப்புத் தனித்தன்மை வாய்ந்த பணிகளை நிறைவேற்றும் பொருட்டு அமைக்கப்பெற்றது. இந்நிறுவனம் கிழக்குக் கடற்கரை சாலையினை 2002 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலத்திற்கு சுங்கச் சாலையாகப் பராமரித்தல், சென்னை வெளிவட்டச் சாலையான 60.15 கி.மீ. நீள வண்டலூர் முதல் மீஞ்சூர் வரையிலான சாலைப் பணி, சென்னை, வடசென்னை அனல் மின்நிலைய சாலை மற்றும் காமராசர் துறைமுகச் சாலைகளை மேம்படுத்தும் பணி, தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனத்தின்மூலம் இராஜீவ் காந்தி சாலை, சிறுசேரியில் பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம், உயர்மட்ட சாலை அமைத்தல் பணி, டைடல் பார்க் பகுதியில் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேம்பாடு போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 18]

2.5.5 தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினால் (TNRIDC) செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

2.5.5.1 ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம்

தொழில் வளர்ச்சி காரணமாக வாகனப் போக்குவரத்து செறிவு உயர்ந்துள்ளதால் திறனான உட்கட்டமைப்பு வசதிகள் அவசியமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு ஒரகடம் பகுதிகளில், ஒரகடம் தொழிற்பூங்காவிற்கான சாலைக் கட்டமைப்பை மேம்படுத்தும் பணி 5 நிலைகளில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

2.5.5.2 மதுரை சுற்றுச் சாலை

இருவழித் தடத்திலிருந்து நான்குவழித் தடமாக கி.மீ. 0/0 முதல் கி.மீ. 27/2 வரை அகலப்படுத்தும் பணியானது, இயக்குதல் மற்றும் திரும்ப ஒப்படைத்தல் (சுங்கம் வசூலித்தல்) முறையில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. மதுரை சுற்றுச் சாலையானது டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திற்கு அருகில் துவங்கி தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் கப்பலூர் தொழிற்பூங்கா அருகில் முடிவடைகிறது.

2.6 தமிழ்நாடு கடல்சார் வாரியம் (TNMB)

சிறு துறைமுகங்களின் திறனை முழுமையான அளவுக்கு மேம்படுத்தவும், தனியார் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும் திட்டங்களை துரிதப்படுத்துவதற்கும் அவற்றின் பணிகளை ஒருங்கிணைத்து துறைமுக இயக்கம் மற்றும் நிருவாகப் பிரச்சினைகளுக்கு ஒருங்கிணைந்த தீர்வுக்கு வகை செய்தல் போன்ற பணிகளை தமிழ்நாடு கடல்சார் வாரியம் மேற்கொண்டு வருகிறது.

2.7 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் (PSC)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு தேவைப்படும் நிலக்கரி, ஹால்தியா, பாரதீப், தாம்ரா மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து ஏற்றி எண்ணூரில் உள்ள காமராசர் துறைமுகத்திற்கும், காரைக்கால் மற்றும் தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகங்களுக்கும் கொண்டு வரப்படுகிறது.

இக்கழகத்தினால், கன்னியாகுமரி படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்காக மூன்று படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

2.8 நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG)

ஐக்கிய நாடுகள் அவையால் நிர்ணயிக்கப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்கு 17 இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள். அவற்றில் கீழ்க்குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு தொடர்புடையவை. இதனை அடைய நம் நாட்டிற்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இலக்கு 3 - நல்வாழ்வு

அனைவருக்கும் அனைத்து வயதிலும் ஆரோக்கியமான வாழ்வை உறுதிசெய்தல் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்.

- 2020 ஆம் ஆண்டிற்குள் போக்குவரத்து நெரிசலால் நிகழும் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளையும் உலக அளவில் பாதியாகக் குறைத்தல்.

இலக்கு 9 - தொழில்மயமாக்கல், புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் உட்கட்டமைப்பை உருவாக்குதல்

நெகிழ்திறன்மிக்க உட்கட்டமைப்பை உருவாக்குதல், அனைத்தையும் உள்ளடக்கிய நிலையான தொழில்மயமாதலை ஊக்குவித்தல் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளைப் போற்றுதல்.

- அனைவரும் பெறத்தக்க வகையிலான தகுந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித நல்வாழ்வினை அளிப்பதற்கான மண்டலம் மற்றும் எல்லை மண்டலங்களுக்கிடையேயான தரமான, நம்பகமான, நிலையான மற்றும் நெகிழ்திறன்மிக்க உட்கட்டமைப்பை மேம்படுத்துதல்.

நெடுஞ்சாலைத் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வரும் சாலைப் பாதுகாப்புத் திட்டங்களினால் தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் மற்றும் இழப்புகள் குறைந்துள்ளன. சென்னை எல்லை வழிச் சாலை (CPRR), தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II (TNRSP-II),

2020 மார்ச் 18]

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CRIDP), சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்டம் (CKICP) ஆகிய அனைத்தும் தரமான சாலைகளை வழங்குகின்றன.


வாகனங்களின் போக்குவரத்துத் தரத்தை மேம்படுத்துவதற்காக சுற்றுச் சாலைகள், புறவழிச் சாலைகள், மேம்பாலங்கள், பாலங்கள் ஆகியவற்றினை நெடுஞ்சாலைத் துறை நிர்மாணித்திருக்கிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030-ன்கீழ், குறிப்பிட்ட குறிகாட்டிகள், நெடுஞ்சாலைத் துறை திட்டப் பணிகளின் குறிகாட்டிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டு அவை தரவுகளை மேம்படுத்தவும், உடனடி தகவல் பரிமாற்றத்திற்கு உகந்ததாகவும், வருங்கால திட்டப் பணிகளை மேற்கொள்ள அளவுகோல்களாகவும் வரையறுக்கப்பட்டுள்ளன.

2.9 2019-2020 ஆம் ஆண்டின் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

2019-2020-ல் ரூ.11,749 கோடி நிதி திட்ட பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. இதில் பிப்ரவரி 2020 வரை ரூ.7,186 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 2020-2021 நிதி ஆண்டில் ரூ.13,879 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2019–20 ஆம் ஆண்டிற்கான செலவினம் பிப்ரவரி வரை (ரூ. கோடியில்)



2020–21 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்)

2020 மார்ச் 18]

3. துறையின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள்


3.1 துறையின் நிறுவன கட்டமைப்பு

எந்தவொரு துறையின் வளர்ச்சிக்கும் பொருத்தமான திட்டமிடல் ஓர் அடிப்படை தேவையாகும். எனவே சாலைகள், பாலங்கள், புறவழிச் சாலைகள், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்பாலங்கள், நடை மேம்பாலங்கள், பாதசாரிகள் சுரங்க நடைபாதைகள், ஆகாய நடைபாதைகள் மற்றும் சிறு பாலங்கள் ஆகியவை அமைப்பதற்கான திட்டமிடல், வடிவமைப்பு, கட்டுமானம், பராமரிப்பு மற்றும் தரக் கட்டுப்பாடு ஆகிய பணிகள் நெடுஞ்சாலைத் துறையின் பல்வேறு அலகுகள்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் சிறு துறைமுகங்களின் நிருவாகக் கட்டுப்பாடு அதன் தொடர்புடைய விஷயங்கள் மற்றும் தமிழ்நாட்டின் சிறு துறைமுகங்களுக்கான கடல் வாரியத்தின் அரசமைப்பை வழங்குவதற்கான 1995 ஆம் ஆண்டின் சட்டத்தால் நிருவகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு செல்வதற்கும், சுற்றுலாப் பயணிகளுக்கான படகு சேவையை கன்னியாகுமரி கரையிலிருந்து விவேகானந்தா பாறை நினைவகம் மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு கொண்டு செல்வதற்கும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்டது.

மேற்கண்ட அனைத்துப் பணிகளையும் செயல்படுத்துவதற்காக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறையில் கீழ்க்கண்ட நிருவாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது:


நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை
நெடுஞ்சாலைகள்
சிறு துறைமுகங்கள்
முதன்மை இயக்குநர் அலுவலகம்
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு
தேசிய நெடுஞ்சாலைகள்
நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு
திட்டங்கள் அலகு
பெருநகர அலகு
தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் - II
சென்னை - கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்
நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்
திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகு
தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்
தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம்
தமிழ்நாடு கடல்சார் வாரியம்
பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

2020 மார்ச் 18]

3.2 செயல்பாடுகள்

3.2.1 முதன்மை இயக்குநர் அலுவலகம்

❖ **செயல்பாடுகள்**

- துறையின் சுமுகமான மற்றும் பயனுள்ள செயல்பாட்டிற்கான உள்துறை ஒருங்கிணைப்பு.
- பணியாளர்களின் பணியமைப்பு மற்றும் பொது நிருவாகம்.
- தரக் கட்டுப்பாடு பணிகளை கண்காணித்தல்.
- தகவல் தொழில்நுட்ப மென்பொருள் அமைப்புகளின் பராமரிப்பு மற்றும் மேலாண்மை பின்வருமாறு:
 - o மின்னணு-திட்டம், நிருவாகம், போக்குவரத்து, நெடுஞ்சாலை உடைமைகள் மற்றும் தகவல் மேலாண்மை அமைப்பு (இ-பாதை) தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை நிருவகித்தல்.
 - o சாலை விபத்து தரவு மேலாண்மை அமைப்பினை ஒருங்கிணைத்தல்.
- களத்தில் உள்ள நிலம் கையகப்படுத்தும் பிரிவுகளை நில எடுப்பு சம்பந்தமான பணிகளில் ஒருங்கிணைக்க ஒரு சிறப்பு நில எடுப்புப் பிரிவு.
- நீதிமன்ற வழக்குகளை தொடர்ந்து கண்காணித்து நடவடிக்கை எடுத்தல்.
- அரசால் அவ்வப்போது ஒதுக்கப்படும் பணிகள்

❖ **நிருவாக அமைப்பு**

முதன்மை இயக்குநரின்கீழ் பணியாற்றும் அலுவலர்கள்

- மூன்று இணை இயக்குநர்கள்
- ஒரு முதன்மை அலுவலர் (தகவல் தொழில்நுட்பக் குழுமம்)
- சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்
- ஒரு சட்ட அலுவலர் (வெளித்திறன் அடிப்படையில்)

[2020 மார்ச் 18

3.2.2 கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

❖ **செயல்பாடுகள்**

- ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் உட்கட்டமைப்புப் பணிகளை மேம்படுத்துதல், பாலங்கள் மற்றும் சாலை மேம்பாலங்கள் அமைத்தல்.
- புறவழிச்சாலைகள் அமைத்தல்.
- செயல்பாட்டின் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தப் பணிகள்.
- சாலைப் பாதுகாப்புப் பணிகள்.
- தொழிற்சாலை இணைப்புச் சாலைகள்.
- சிறப்புப் பழுதுபார்த்தல்/காலமுறை புதுப்பித்தல் பணிகள் மற்றும் பிற பராமரிப்புப் பணிகளின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள், கரும்பு அபிவிருத்திச் சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரித்தல்.
- சுனாமி மறுவாழ்வுத் திட்டங்களின்கீழ் நிலுவை பணிகள்.
- வெள்ள நிரந்தர மறுசீரமைப்பு பணிகள் மற்றும் வெள்ளம், பருவமழை போன்றவற்றில் சாலைகளில் ஏற்படும் சேதங்களைப் புனரமைத்தல்.

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் 8 வட்டங்கள் மற்றும் 41 கோட்டங்களுடன் செயல்பட்டு வருகிறது.

3.2.3 தேசிய நெடுஞ்சாலை

❖ **செயல்பாடுகள்**

- தேசிய நெடுஞ்சாலையில், இந்திய அரசின் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின்மூலம் பெறப்படும் நிதியின்மூலம் திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளின் வாயிலாக வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளுதல்.

2020 மார்ச் 18]

- இந்திய அரசின், புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதி திட்டம், பொருளாதார முக்கியத்துவம் மற்றும் மாநிலங்களுக்கிடையிலான சாலைகள் இணைக்கும் திட்டம் ஆகியவற்றின்மூலம் மாநிலச் சாலைகளான மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளின் மேம்பாடு மற்றும் விரிவாக்கப் பணிகளை மத்திய சாலை நிதியின்மூலம் செயல்படுத்துதல்.

- பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் மாவட்ட இதர சாலைகளின் மேம்பாட்டுப் பணிகள், மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் நிதியுதவியுடன் செயல்படுத்துதல்.

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் 4 வட்டங்கள் மற்றும் 17 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

3.2.4 நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்

❖ **செயல்பாடுகள்**

- நபார்டு கடனுதவித் திட்டத்தில் மாநில அரசின் பங்களிப்புடன் (80:20 விகிதத்தில்) ஆறுகள், ஏரிகள், ஓடைகளின் குறுக்கேயும் மற்றும் ஏற்கெனவே உள்ள தரைப் பாலங்களுக்கு மாற்றாகவும் புதிய பாலங்கள் கட்டுதல், திரும்பக் கட்டுதல்.

- ஊராட்சி ஒன்றிய சாலைகள்/ஊராட்சி சாலைகளை மாநில நிதியின்கீழ் மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்தும் பணிகள்.

- இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்பாலங்கள், இரயில்வே திட்டப் பணிகள் திட்டத்தின்கீழ் 50:50 விகிதத்தில் கட்டப்படுதல்.

- மாநில நிதியின்கீழ், புறவழிச் சாலைகள் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள்.

[2020 மார்ச் 18

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் 4 வட்டங்கள் மற்றும் 14 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

3.2.5 திட்டங்கள்

❖ **செயல்பாடுகள்**

- இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து இரயில்வே திட்டப்பணிகளின்கீழ் இரயில்வே கடவுகளில் இரயில்வே மேம்பாலங்கள், கீழ்பாலங்கள் அமைத்தல்.
- மாநில நிதியின்கீழ் உயர்மட்ட ஆற்றுப் பாலங்கள், சாலை மேம்பாலங்கள், புறவழிச் சாலைகள், வட்டச் சாலைகள் மற்றும் உயர்மட்ட சாலைகள் அமைத்தல்.

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் 4 வட்டங்கள் மற்றும் 10 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

3.2.6 பெருநகரம்

❖ **செயல்பாடுகள்**

- சென்னை பெருநகரப் பகுதிகளில் சாலைகள் அமைத்தல், உயர்மட்டப் பாலங்கள் கட்டுதல், சாலை சந்திப்புகளில் பல்வழிச் சாலை மேம்பாலங்கள் கட்டுதல், நடை மேம்பாலங்கள், பாதசாரிகள் சுரங்க நடைபாதைகள் மற்றும் ஆகாய நடைபாதை ஆகிய பணிகளை செயல்படுத்துதல்.
- சென்னை பெருநகரப் பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் அமைத்தல்.

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் ஒரு வட்டம் மற்றும் 5 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

2020 மார்ச் 18]

3.2.7 தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்- II

❖ **செயல்பாடுகள்**

- உலக வங்கி நிதியுதவியுடன் பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம், வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலைப் பராமரிப்பு ஒப்பந்தம், பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- நெடுஞ்சாலை துறையின் நிருவாக அமைப்புகளை வலுப்படுத்துதல்.
- சாலைப் பாதுகாப்புத் தொடர்பான பணிகள்
- TNIDB நிதி உதவியுடன் புதிய சாலைப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்.

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளரின்கீழ் 2 வட்டங்கள் மற்றும் 8 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

மேலும், நில எடுப்பு பணிகளை செயல்படுத்த 3 தனி மாவட்ட வருவாய் அலுவலகங்கள் மற்றும் 7 தனி வட்டாட்சியர் அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

தனிப் பிரிவான நிறுவனத்திறன் மேம்பாட்டுக் குழுமம், ஒரு கண்காணிப்புப் பொறியாளர் மற்றும் ஒரு கோட்டப் பொறியாளரையும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

3.2.8 சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்டம்

❖ **செயல்பாடுகள்**

- ஆசிய மேம்பாட்டு வங்கி நிதியுதவியுடன் சென்னை-கன்னியாகுமரி வழித்தடத்தில் பயன்விளை பகுதியில் உள்ள சாலைகளை மேம்படுத்துதல்.

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளரின்கீழ் 2 வட்டங்கள், 6 கோட்டங்கள் மற்றும் 5 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 18

3.2.8.1 சென்னை எல்லைச் சாலை திட்டம்

❖ **செயல்பாடுகள்**

- தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றால் செயலாக்கப்படும் சென்னை எல்லை சாலை திட்டப் பணிகளை மேற்பார்வை செய்தல்.
- திட்டத்திற்குத் தேவையான சுற்றுச்சூழல் அனுமதி, வன அனுமதி, கடற்கரை ஒழுங்குமுறை மண்டல (Coastal Regulatory Zone) அனுமதி பெறுதல்.
- மத்திய மாநில அரசுகளுடன் இணைந்து கருத்துருக்கள் தயாரித்து பன்னாட்டு வங்கிகளின் நிதியுதவி பெறுதல்.
- பன்னாட்டு வங்கிகளின் (JICA, AIIB & OFID) ஒப்புதலுடன் திட்ட செயலாக்கத்திற்கான ஆலோசகர்களை நியமித்தல் மற்றும் ஒப்பந்ததாரர்களை இறுதி செய்தல்.

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகானது திட்ட இயக்குநர் மற்றும் சென்னை-கன்னியாகுமரி தொழிற்தட திட்ட தலைமைப் பொறியாளரின்கீழ் ஒரு கண்காணிப்புப் பொறியாளர், ஒரு கோட்டப் பொறியாளர் மற்றும் ஒரு சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்மூலம் செயல்பட்டு வருகிறது.

3.2.9 நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

❖ **செயல்பாடுகள்**

- சாலைகள் மற்றும் பாலங்களில் கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்படும் புதிய பொருட்கள் மற்றும் தொழில்நுட்பம் குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு உபயோகிக்கப்படும் கட்டுமானப் பொருட்களான மண், இரும்பு, கற்கலவை, நிலக்கீல் மாதிரிகள்மீது பாரிசோதனை மேற்கொள்ளுதல் மற்றும் கலவை வடிவமைப்புகள் வழங்குதல்.
- உயர்தர நவீன தகவல் சேகரிப்பு உபகரணங்கள்மூலம் சாலைகளின் மேற்பரப்பு நிலை தொடர்பான தகவல்கள் சேகரித்தல்.

2020 மார்ச் 18]

- சாலைகளில் அதிக அளவில் வாகன விபத்துகள் நடைபெறும் இடங்களில் (Black Spot) விபத்துகளைத் தவிர்க்க மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்வுகளை வழங்குதல்.
- சாலை சந்திப்புகளை மேம்படுத்துவதற்கான பாிந்துரைகள் வழங்குதல்.
- நெடுஞ்சாலைத் துறையில் செயலாக்கப்படும் அனைத்து பணிகளின் தரத்தினை ஒவ்வொரு நிலையிலும் உறுதி செய்தல்.
- நவீன தொழில்நுட்பம் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து தேவையான பயிற்சி அளித்தல்.

❖ **நிருவாக அமைப்பு**

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமானது, இயக்குநர் (தலைமைப் பொறியாளர் நிலையில்) இணை இயக்குநர் (கண்காணிப்புப் பொறியாளர் நிலையில்), நான்கு துணை இயக்குநர்கள் (கோட்டப் பொறியாளர்கள் நிலையில்) மற்றும் எட்டு கோட்டப் பொறியாளர்கள் (தரக் கட்டுப்பாடு) ஆகியோரைக் கொண்டு ஆராய்ச்சி மற்றும் தரக் கட்டுப்பாடு அலகாக செயல்பட்டு வருகிறது.

3.2.10 திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு

❖ **செயல்பாடுகள்**

- பாலங்களை வடிவமைப்பதற்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களும்தள ஆய்வு மூலமாகவும் மற்றும்சம்பந்தப்பட்ட பிற துறைகளிடமிருந்தும் சேகரிக்கப்படுகின்றன.
- ஆற்றுப் பாலங்கள் பல்வழிச் சாலை மேம்பாலங்கள் இருப்புப்பாதை கடவுகளுக்கான மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள் கட்டுவதற்கு தேவையான வடிவமைப்பு பணி, கட்டமைப்பு வரைபடங்கள் மற்றும் மதிப்பீடு தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- ஆலோசகர்கள்மூலம் தயாரிக்கப்படும் வடிவமைப்பு, வரைபடங்கள் சரிபார்த்தல் மற்றும்

[2020 மார்ச் 18

ஒப்பந்ததாரர்களிடமிருந்து பாலப் பணிகளுக்காக பெறப்படும் மாற்று வடிவமைப்புகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

❖ **நிருவாக அமைப்பு**

திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் ஓர் இணை தலைமைப் பொறியாளர், 4 வடிவமைப்பு கோட்டங்கள் மற்றும் 5 ஆய்வுக் கோட்டங்கள் மூலம் செயல்பட்டு வருகிறது.

3.2.11 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் (TNRDC)

❖ **செயல்பாடுகள்**

- பொது தனியார் பங்கேற்புடன்கூடிய முக்கிய திட்டங்களைச் செயல்படுத்துதல்
- சென்னை வெளிவட்டச் சாலைப் பணிகளை நிருவகித்தல்
- இராஜீவ் காந்தி தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சுங்கச் சாலையாக பராமரித்தல்.
- கிழக்குக் கடற்கரை சாலையில் சென்னை முதல் புதுச்சேரி வரை சுங்கச் சாலையாக பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- எண்ணூர்-மணலி சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் கண்காணிப்பு ஆலோசகராக செயல்படுதல்.
- சென்னை எல்லைச் சாலை கட்டம்-I (வடக்கு துறைமுக இணைப்புச் சாலை) பணிகளை நிருவகித்தல்.
- இராஜீவ் காந்தி சாலை (தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை) கட்டம்-II, சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை, திருப்போரூர் மற்றும் கேளம்பாக்கம் பகுதிகளில் புறவழிச் சாலை நிலை-I-க்கான பணிகளைச் செயல்படுத்துதல்.
- வடசென்னை அனல் மின் நிலைய சாலை மற்றும் காமராசர் துறைமுகச் சாலைகளை மேம்படுத்துதல் ஆகியவை வைப்புத் தொகை அடிப்படையில் காமராசர் துறைமுகம் நிறுவனத்திற்காக மேற்கொள்ளப்படுகிறது.

2020 மார்ச் 18]

❖ **நிருவாக அமைப்பு**

இவ்வலகு உயர் ஆற்றல்மிக்க வாரியத்தால் கீழ்க்காணும் உறுப்பினர்களால் நிருவகிக்கப்படுகிறது:

- தமிழக அரசால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்,
- தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் (TIDCO),
- டைடல் பார்க் லிமிடெட் (TIDEL) மற்றும்
- தனித்துவ இயக்குநர்கள்.

3.2.12 தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (TNRIDC)

❖ **செயல்பாடுகள்**

- மாநில துறையின்கீழ் தொழிற்தட திட்டங்களை முடிக்க தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஒரகடம் தொழிற்சாலைப் பகுதிகளில் தேவைப்படும் சாலை மற்றும் பால உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல்.
- மதுரை சுற்றுச் சாலை மேம்பாட்டுப் பணிகள்.

❖ **நிருவாக அமைப்பு**

இந்நிறுவனத்தின் குழுமத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் முதன்மை செயலாளரும், இயக்குநர்களாக அரசுத் துறையின் பல்வேறு பிரதிநிதிகளும் செயல்படுகின்றனர்.

3.2.13 தமிழ்நாடு கடல்சார் வாரியம்

❖ **செயல்பாடுகள்**

- நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின்கீழ் இயங்கும் சட்டபூர்வ வாரியமாக சிறு துறைமுகங்களை

[2020 மார்ச் 18

நிருவகித்து, கட்டுப்படுத்தி, முறைப்படுத்திடவும் மற்றும் அது சார்ந்த மற்ற இனங்களுக்காகவும், சிறு துறைமுகங்கள் மேம்பாட்டு கொள்கையின் நோக்கங்களை நடைமுறைப்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது.

❖ **நிருவாக அமைப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் தலைமையின்கீழ் இவ்வாரியம் செயல்பட்டு வருகின்றது.

3.2.14 பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

❖ **செயல்பாடுகள்**

3.2.14.1 நிலக்கரி நகர்வு

இந்திய நிலக்கரி நிறுவனங்களால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என்.டி.பி.சி தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் உள்நாட்டு நிலக்கரி முழுவதும், நிலக்கரி ஏற்றும் துறைமுகங்களான ஹால்தியா, பாரதீப், தாம்ரா, கங்காவரம் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின்மூலம் ஏற்றி எண்ணூரில் உள்ள காமராசர் துறைமுகம், காரைக்கால் மற்றும் தூத்துக்குடியில் உள்ள வ.உ. சிதம்பரனார் துறைமுகம் ஆகிய துறைமுகங்களுக்குக் கொண்டு வரப்படுகிறது.

3.2.14.2 படகுப் போக்குவரத்து

இக்கழகம், கன்னியாகுமரி படகுத்துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு சுற்றுலாப் பயணிகள் பயன்பாட்டிற்காக படகுப் போக்குவரத்தினை மேற்கொண்டு வருகிறது. தற்பொழுது, 150 இருக்கைகள் கொண்ட மூன்று படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

❖ **நிருவாக அமைப்பு**

இந்நிறுவனம், தலைவர் மற்றும் நிருவாக இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள், தமிழக அரசால் நியமனம் செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் அடங்கிய நிருவாகக் குழுவால் செயல்படுத்தப்படுகின்றன:

2020 மார்ச் 18]

1. தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர்,
பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்.
2. தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்.
3. அரசு முதன்மைச் செயலாளர்,
நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை.
4. அரசு முதன்மைச் செயலாளர்,
எரிசக்தித் துறை.
5. அரசு சிறப்புச் செயலாளர்,
நிதித் துறை.
6. துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கடல்சார் வாரியம்.
7. இயக்குநர் (நிதி),
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்.
8. இயக்குநர் (நிதி),
தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகம்.
9. ஒரு தனிப்பட்ட இயக்குநர்,
மெரைன் இன்ஜினியர் பதவிக்கு நிகரானவர்.
10. ஒரு தனிப்பட்ட இயக்குநர்,
கப்பல் தலைவர் பதவிக்கு நிகரானவர்.

நிறுவனத்தின் தினசரி செயல்பாடுகள் தொழில்நுட்பம், இயக்கம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகம் ஆகிய பிரிவுகளில் தகுதியான அதிகாரிகளின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

4. முதன்மை இயக்குநர் அலுவலகம்

முதன்மை இயக்குநர் அலுவலகம் மூன்று இணை இயக்குநர்கள், ஒரு முதன்மை அலுவலர் (தகவல் தொழில்நுட்பக் குழுமம்), சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) மற்றும் ஒரு சட்ட அலுவலர் (வெளித்திறன் அடிப்படையில்) ஆகியவர்களைக் கொண்டு முதன்மை இயக்குநர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 18

4.1 நிருவாகம்

அனைத்து அலகுகளின் நிருவாகம் மற்றும் பணியமைப்பு சார்ந்த அம்சங்கள் அனைத்தும் இவ்வலுவலகத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.1.1 மனிதவள மேம்பாடு

4.1.1.1 பணியாளர்களின் விவரம்

ஆண்டுதோறும் ரூ.10,000 கோடி மதிப்பீட்டில் சாலை உட்கட்டமைப்பு திட்டங்களை இத்துறை கையாளுகிறது.

இதனைச் செயல்படுத்தி, அதன் தரக் கட்டுப்பாடு, பராமரிப்பு, கணக்கு சார்ந்த விவரங்கள் மற்றும் பணியமைப்பு பணிகள் அனைத்தும் பின்வரும் அலுவலர்களின்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

• முதன்மை இயக்குநர்/ தலைமைப் பொறியாளர்	10
• கண்காணிப்புப் பொறியாளர்	33
• கோட்டப் பொறியாளர்	159
• உதவி கோட்டப் பொறியாளர்	525
• உதவி பொறியாளர்/இளநிலைப் பொறியாளர்	1073
• தொழில்நுட்பப் பணியாளர்கள்	842
• கணக்குப் பிரிவு	193
• அமைச்சுப் பிரிவு	4632

4.1.1.2 நியமனங்கள்

பதவி உயர்வு மற்றும் பணி ஓய்வு காரணமாக ஆண்டுதோறும் பல்வேறு பதவிகளில் காலிப் பணியிடங்கள் ஏற்படுகின்றன. பல்வேறு பதவிகளில் உள்ள காலியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்தல் மற்றும் பதவி உயர்வுமூலம் நிரப்பப்படுகின்றன.

2019-2020 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் 155 உதவிப் பொறியாளர்கள், 15 உதவியாளர்கள், 32 இளநிலை உதவியாளர்கள் காலிப்

2020 மார்ச் 18]

பணியிடங்கள்தமிழ்நாடுஅரசுப்பணியாளர்கள்தேர்வாணையம்மூலம் நிரப்பப்பட்டுள்ளன. மேலும் கருணை அடிப்படையில் 11 இளநிலை உதவியாளர்கள், 7 தட்டச்சர்கள், 15 பதிவுரு எழுத்தர்கள், 12 அலுவலக உதவியாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.

4.1.2 பயிற்சி

சமீபத்திய அறிவைப் புகுத்துவதற்கும், கற்றுக் கொண்ட கொள்கைகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் பயிற்சி உதவுகிறது. பல்வேறு தொழில்நுட்பம் சாராத பகுதிகளிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

புகழ்பெற்ற கீழ்க்கண்ட பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற இத்துறை சார்ந்த பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்.

- இந்திய சாலைகள் கூட்டமைப்பின் 80-ம் ஆண்டு அமர்வு, பாட்னா - 16
- இந்திய நெடுஞ்சாலைப் பொறியாளர்கள் கழகம், நொய்டா - 68
- அண்ணா பல்கலைக்கழகம், சென்னை - 39
- அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை - 205

2019 ஆம் ஆண்டில் பல்வேறு பயிற்சிகளுக்கு, 501 அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளனர். அவர்களில் 270 பேர் பொறியாளர்கள். மொத்தமாக 156 பெண்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

4.2 தகவல் தொழில்நுட்பக் குழுமம் (IT Cell)

தகவல் தொழில்நுட்பக் குழுமம், நெடுஞ்சாலைத் துறையின் பயன்பாட்டிற்கான புதிய மென்பொருட்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல், அவற்றை இயக்குதல், வன்பொருட்களைப் பராமரித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது.

முக்கிய மென்பொருள் அமைப்புகளானது,

1. சாலைப் பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பு (RMMS)

சாலையின் உடைமைகள், சாலை நிலை, சாலைப் பணி வரலாறு, பாலங்கள் மற்றும் மிகவும் சிறு பாலங்கள், சாலை அடுக்குகளின்

விவரம் மற்றும் போக்குவரத்துக் கணக்கெடுப்பு போன்ற தரவுகளை நிருவகித்தல்.

சாலை வளங்களைக் குறித்து திட்டமிடவும், முன்னுரிமைப்படுத்தவும், நிதித் திட்டம் தயார் செய்யவும் துணைபுரிதல்.

2. புவியியல் தகவல் அமைப்பு (GIS)

சாலைப் பராமரிப்பு மற்றும் மேலாண்மை அமைப்பில் உள்ள பல்வேறு பண்புக்கூறுகளை புவிவெளி வடிவில் பார்வையிடுதல்

பயனுள்ள முடிவெடுப்பதற்கும் மற்றும் திட்டமிடுதலுக்கும் துணைபுரிதல்.

3. ஒருங்கிணைந்த திட்டம், மனித வளம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு (P&FMS)

தற்போது உள்ள கையேடு நடைமுறைகளையும் மற்றும் திட்ட மேலாண்மை செயல்பாடுகளையும் கணினிமயமாக்குதல் மற்றும் தானியக்கமாக்குதல்.

நிதி மேலாண்மை சார்ந்த விவரங்களின் மின்னணு தரவுகளை மேம்படுத்துதல்.

4. தமிழ்நாடு நெடுஞ்சாலைத் துறை திட்டக் கண்காணிப்பு அமைப்பு (TNHPMS)

நெடுஞ்சாலைத் துறையின் அனைத்து அலகுகளின் பணி முன்னேற்றங்களைக் கண்காணித்தல்.

5. வலைதளங்கள்

தகவல் தொழில்நுட்பக் குழுமம் கீழ்க்காணும் வலைதளங்களை வடிவமைத்து பராமரித்து வருகிறது:

- https://www.tnhighways.gov.in
- https://www.tnrsp.gov.in
- https://www.ckicp.tnhighways.gov.in

4.3 தொழில்நுட்பக் குழுக்கள்

நெடுஞ்சாலைத் துறையின் சிறப்பான செயல்பாட்டிற்காக பின்வரும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 18]

- **பொறியாளர்கள் குழுமம் (BoE)**

தொழில்நுட்பம் மற்றும் முக்கிய இனங்களில் கொள்கை முடிவுகள் எடுக்க முதன்மை இயக்குநரைத் தலைவராகக் கொண்டு அனைத்து தலைமைப் பொறியாளர்கள், இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் ஆகியோரை உள்ளடக்கிய குழு இயங்கி வருகிறது.

- **ஒப்பந்தப்புள்ளி ஆணையம் (CoT)**

பரிந்துரைக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் உரிய முடிவெடுத்து ஒப்புதல் அளிப்பதற்காக முதன்மை இயக்குநர் அவர்களை தலைவராகவும், அரசு நிதித் துறை செயலர்/ பிரதிநிதி, தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), தலைமைப் பொறியாளர் (நபார்டு மற்றும் கிராமச் சாலைகள்) மற்றும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு இக்குழு செயல்பட்டு வருகிறது.

- **திருத்திய நிருவாக ஒப்புதலுக்கான குழு (RASC)**

முதன்மை இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு), அரசு கூடுதல்/துணைச் செயலாளர் (நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை), அரசு துணைச் செயலாளர் (நிதித் துறை) அடங்கிய குழுவானது திருத்திய நிருவாக ஒப்புதல் பிரேரணைகளின்மீது ஆய்வு செய்து ஒப்புதல் பெறுவதற்காக அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

- **தொழில்நுட்ப தணிக்கைக் குழு (TAC)**

இக்குழுவானது, முதன்மை இயக்குநர், இயக்குநர் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் அனைத்து தலைமைப் பொறியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு திட்டக் கருத்துருக்களில் உள்ள தொழில்நுட்ப அம்சங்களை ஆராய்ந்து உரிய ஆலோசனை வழங்குகிறது.

4.4 சிறப்பு நில எடுப்புப் பிரிவு

சிறப்பு நில எடுப்புப் பிரிவானது மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் எட்டு பிரிவுகளுடன் ஓய்வுபெற்ற வருவாய்த் துறை அலுவலர்களுடன் வெளித்திறன் அடிப்படையில் சென்னை, விழுப்புரம், திருச்சி, மதுரை, சேலம், திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய வட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 18

பெருகிவரும் போக்குவரத்தைக் கருத்தில்கொண்டு புறவழிச் சாலை, வட்டச் சாலை, சாலை மேம்பாலம், இரயில்வே மேம்பாலம்/ கீழ்பாலம், உயர்மட்டப் பாலம் அமைத்தல் போன்ற திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, அப்பணிகளை மேற்கொள்ள நில எடுப்புப் பணி அத்தியாவசியமாகிறது. தற்சமயம், 198 பணிகளில் 1,853 ஹெக்டேர் அளவில் 554 கிராமங்களில் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நில எடுப்புப் பணிகளில் தாமதம் ஏற்படுவதால் திட்டங்களைச் செயல்படுத்துவதில் காலமும், செலவும் அதிகமாகிறது. நில எடுப்புப் பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்காக அதிகார வரம்புகளுடன்கூடிய மூன்று மாவட்ட வருவாய் அலுவலர்கள், 8 வட்டாட்சியர்கள் மற்றும் பிற அலுவலர்கள் அடங்கிய அமைப்பைக் கொண்ட நில எடுப்புப் பிரிவை அமைப்பதற்கான பிரேரணைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

4.5 சிறப்பு சட்ட உதவிப் பிரிவு

இத்துறையானது தொழில்நுட்பம், நில எடுப்பு மற்றும் நிருவாகம் சார்ந்த வழக்குகளை எதிர்கொள்கிறது. வழக்கின் சட்ட நடைமுறைகளைக் கண்காணித்து தொடர் நடவடிக்கை எடுப்பதற்காகவும், மாண்புமிகு நீதிமன்றங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படவும், துறையில் உள்ள அலுவலர்களுக்கு உதவிபுரியவும் வெளித்திறன் அடிப்படையில் ஒரு சட்ட அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. கட்டுமானம் மற்றும் பராமரிப்பு

கட்டுமானம் (ம) பராமரிப்பு அலகில் தலைமைப் பொறியாளரின்கீழ் 8 வட்டங்கள் மற்றும் 41 கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வலகு 59,405 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கியச் சாலை மற்றும் மாவட்ட இதர சாலைகளைப் பராமரித்து வருகிறது.

இவ்வலகின்மூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் சாலை கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளான அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், மேம்பாடு செய்தல் மற்றும் சாலையின் ஓடுதளப் பாதையின் தரத்தை மேம்படுத்துதல், சாலை மேம்பாலம்/பல்லடுக்கு பாலம், பாலங்கள், சிறு பாலங்கள், புறவழிச் சாலைகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2020 மார்ச் 18]

இவ்வலகின்மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டங்கள் மற்றும் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வருமாறு:

5.1 திட்டப் பணிகள்

5.1.1 ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - (CRIDP)

ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கொள்கையானது, ஒரு முழுமையான அளவில் சாலை உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல் ஆகும். இத்திட்டத்தின்கீழ் சாலைகளை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், ஓடுதளப் பாதையினை மேம்பாடு செய்தல், பாலங்கள், சிறு பாலங்கள், சாலைப் பாதுகாப்பு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தில் சாலைகளின் கொள்ளளவை அதிகரித்தல் மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆகிய இனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் சாலைகளில் சேவை நிலைகளை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

5.1.1.1 ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்- மாநில நெடுஞ்சாலைகள்

2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.685.80 கோடி மதிப்பில் நிலுவைப் பணிகளாக, 488.63 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் மற்றும் 253 பாலங்கள்/சிறு பாலப் பணிகள்/பாதுகாப்புப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், புதிய பணிகளாக 469.13 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், ஒரு பாலம், 10 சிறு பாலங்கள் மற்றும் 506 பாதுகாப்புப் பணிகள் ஆகியவற்றிற்கு ரூ.1,056.49 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2019-2020-ல் காந்திபுரம் 2-வது அடுக்கு மேம்பாலம், கோயம்புத்தூர் மாநகரத்தில் முடிக்கப்பட்டு, 29-1-2020-ல் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

2019-2020-ல் இத்திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட முக்கிய பணிகள்:

[2020 மார்ச் 18

- திண்டுக்கல் மாவட்டத்தில் ரூ.58.90 கோடி மதிப்பில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோயிலை சுற்றியுள்ள 5 சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணி, குறுக்கு வடிகால் அமைக்கும் பணி மற்றும் பாதுகாப்புப் பணிகள்.

- திருச்சி மாவட்டத்தில் ரூ.55.75 கோடி மதிப்பில் நாகப்பட்டினம்-கூடலூர்-மைசூர் சாலை (SHU 153) கி.மீ. 142/2-153/0 இருவழிப் பாதையில் இருந்து மூன்றுவழிப் பாதையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல், தாங்குசுவர் கட்டும் பணி, பாதுகாப்புச் சுவர் மற்றும் வடிகால் அமைத்தல்.

- இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.22.97 கோடி மதிப்பில் மதுரை-தனுஷ்கோடி சாலை (கைவிடப்பட்ட தே.நெ.49) பரமக்குடி நகர எல்லைப் பகுதி (SHU) கி.மீ. 0/0-3/8 & 6/0-8/900 இல் இருவழிச் சாலையை பல்வழித் தடமாக அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், கி.மீ. 0/0 - 8/900 இல் மேம்பாடு செய்தல்.

- நாமக்கல் மாவட்டத்தில் ரூ.17.20 கோடி மதிப்பில் வாரணாசி-கன்னியாகுமாரி சாலை (கைவிடப்பட்ட தே.நெ.7) நாமக்கல் நகர்ப்புறம் கி.மீ. 249/150 - 251/600 நான்குவழித் தடத்திலிருந்து ஆறுவழித் தடமாக அகலப்படுத்தி, உறுதிப்படுத்தும் பணி மற்றும் குறுக்கு வடிகால் (ம) மழைநீர் வடிகால் கட்டும் பணி (SHU 121).

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் ரூ.7.20 கோடி மதிப்பில் பல்லாவரம்-துரைப்பாக்கம் சாலையில் (மா.நெ.109) கி.மீ. 5/0-6/250-ல் சேவைச் சாலை அமைக்கும் பணி.

2015 முதல் 2019 வரை 3,999 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 735 பாலங்கள்/ சிறு பாலங்கள்/பாதுகாப்புப் பணிகளும் ரூ.5,155.76 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020-ல் 452 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 28 பாலங்கள்/ சிறு பாலங்கள், 236 பாதுகாப்புப் பணிகளும் ரூ.960.34 கோடி செலவில் பிப்ரவரி வரை முடிக்கப்பட்டுள்ளன.

2020 மார்ச் 18]

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.1197.36 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.2 ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - மாவட்ட முக்கிய சாலைகள்

2019-2020 ஆம் ஆண்டில் நிலுவைப் பணிகளான 665.06 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் 153 பாலங்கள்/சிறு பாலங்கள்/ பாதுகாப்புப் பணிகள் ரூ.471.50 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேலும், 2019-2020-ல் புதிய பணிகளாக ரூ.867.56 கோடி மதிப்பில் 805.14 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 1 பாலம், 8 சிறு பாலங்கள் மற்றும் 450 பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

நடப்பாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட முக்கிய பணிகள்:

- ஈரோடு மாவட்டத்தில், ரூ.3.20 கோடி மதிப்பில் பாசூர் ஆர். எஸ்-வெள்ளோடு சாலையில் கி.மீ. 16/0-18/4, 23/2-26/0 இடைவழித்தடச் சாலையை இருவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல், சிறு பாலங்கள் மற்றும் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணி (மா.மு.சா 885).

- நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.2.10 கோடி மதிப்பில் குருவபுலம்-கருப்பம்புலம்-கடினவயல் சாலையில் கி.மீ. 5/0-8/9-ல் (மா.மு.சா.837) உறுதிப்படுத்தும் பணி.

- ஈரோடு மாவட்டத்தில், ரூ.2.00 கோடி மதிப்பில் கொடிவேரி அணை சாலையில் கி.மீ.0/0-0/2 மற்றும் 1/0-2/0 இருவழித்தடச் சாலையை மூன்று வழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல், கி.மீ.1/4-ல் சிறு பாலம் மற்றும் கி.மீ.1/6-ல் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணி (மா.மு.சா 175).

- பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.2.00 கோடி மதிப்பில் ஆலத்தூர்-அரியலூர் சாலையில் கி.மீ.24/2-ல் உள்ளூர் ஓடையின் குறுக்கே அமைந்துள்ள சேதமடைந்த தாம்போகிக்கு பதிலாக பாலம் கட்டும் பணி மற்றும் கி.மீ.24/0 - 24/2 வரை இடைவழித்தடச் சாலையை

இருவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி (மா.மு.சா 818).

- வேலூர் மாவட்டத்தில் ரூ.1.98 கோடி மதிப்பில் கீழ்விதி-மின்னல் அமீர்பேட்டை சாலையில் கி.மீ. 15/6-16/2, 17/4-19/0 மற்றும் 20/2-20/8-ல் இடைவழித்தடச் சாலையை இருவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மற்றும் கி.மீ. 15/8 & 17/4-ல் சிறு பாலம் கட்டும் பணி (மா.மு.சா 792).

- நீலகிரி மாவட்டத்தில் ரூ.1.97 கோடி மதிப்பில் குன்னூர்-குந்தா சாலையில் கி.மீ. 13/0-16/0-ல் மேம்படுத்துதல், வடிகால் மற்றும் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணி (மா.மு.சா 86).

2015 முதல் 2019 வரை 3210 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 541 பாலங்கள்/சிறு பாலங்கள்/பாதுகாப்புப் பணிகளும் ரூ.2,847.08 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி வரை ரூ.649.42 கோடி செலவில் 598 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள், 20 பாலங்கள்/சிறு பாலங்கள், 297 பாதுகாப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021-ல், ரூ.847.92 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.3 ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - மாவட்ட இதர சாலைகள்

2019-2020 ஆம் நிதியாண்டில், ரூ.1621.44 கோடி மதிப்பிலான 1904.603 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் 355 பாலங்கள்/சிறுபாலங்கள் கட்டுதல் ஆகிய நிலுவைப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மேலும், 2019-2020 ஆம் நிதியாண்டில், புதிய பணிகளாக ரூ.1,310.23 கோடி மதிப்பில் 1599.22 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், ஒரு பாலம், 34 சிறு பாலங்கள் மற்றும் 746 பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

நடப்பு நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட முக்கிய பணிகள்

- கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.6.00 கோடி மதிப்பில் சூளகிரி-இராயக்கோட்டை சாலை கி.மீ. 0/0 முதல் 5/6 வரையிலான ஒருவழித்தடச் சாலையை இருவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி, உறுதிப்படுத்துதல், குறுக்கு வடிகால் கட்டுதல் மற்றும் பாதுகாப்புப் பணிகள்.

- தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.3.44 கோடி மதிப்பில் வாடியக்காடு-கல்யாணஓடை சாலை கி.மீ. 0/0-7/4 வரை மேம்படுத்தும் பணி மற்றும் கி.மீ. 1/8-ல் சிறு பாலம் கட்டும் பணி.

- திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.1.98 கோடி மதிப்பில் கடலூர்-சித்தூர் சாலை முதல் மதலம்பாடி சாலை சொரக்கொளத்தூர் வழி கி.மீ. 0/0-4/2 வரை சாலை மேம்படுத்தும் பணி, கி.மீ. 0/6, 0/10, 1/10, 1/2, 2/2, 3/8 ஆகிய இடங்களில் சிறு பாலம் கட்டும் பணி மற்றும் கி.மீ. 1/4-2/0 இல் தாங்குசுவர் கட்டும் பணி.

- கரூர் மாவட்டத்தில் ரூ.1.98 கோடி மதிப்பில் நாகை-கூடலூர்-மைசூர் சாலை கி.மீ. 221/6 இல் பிரியும் ஆண்டான்கோவில்-அக்ரஹாரம் சாலை கி.மீ. 0/0-2/300 வரை ஒருவழித்தடச் சாலையை இடைவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி, மேம்படுத்தும் பணி, சிறு பாலம் அகலப்படுத்துதல் மற்றும் தாங்குசுவர் கட்டும் பணி.

- அரியலூர் மாவட்டத்தில் ரூ.1.74 கோடி மதிப்பில் கள்ளகம் வாயில்-ஆஞ்சியனூர் சாலை கி.மீ. 0/0-1/4 வரை ஒருவழித்தடச் சாலையை இடைவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி, கி.மீ. 0/2, 1/2-ல் சிறு பாலம் கட்டும் பணி மற்றும் கி.மீ. 0/10-ல் தாங்குசுவர் அமைக்கும் பணி

- தென்காசி மாவட்டத்தில் ரூ.2 கோடி மதிப்பில் தேவிப்பட்டிணம்-மேற்குத் தொடர்ச்சி மலைச் சாலை கி.மீ. 2/2-4/659 வரை ஒருவழித்தடச் சாலையை இடைவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி, மேம்படுத்தும் பணி மற்றும் குறுக்கு வடிகால் பணிகள்

2015 முதல் 2019 வரை 8663 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 704 பாலங்கள்/சிறு பாலங்கள்/பாதுகாப்புப் பணிகளும் ரூ.3,663.95 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை 1,835 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகளும், 86 பாலங்கள்/சிறு பாலங்கள், 649 பாதுகாப்புப் பணிகளும் ரூ.1,153.88 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021-ல் ரூ.1,650.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.4 ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் - மாவட்ட இதர சாலைகள்- சிறப்பு கூறுத் திட்டம் (SCP)

நிலுவைப் பணிகளான, 343.875 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மற்றும் 13 பாலங்கள்/சிறு பாலங்கள் ரூ.195.03 கோடி மதிப்பில் 2019-2020 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

மேலும், 2019-2020 ஆம் நிதியாண்டில், புதிய பணிகளாக 383.08 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல், 17 பாதுகாப்புப் பணிகள் ஆகியவற்றிற்கு ரூ.247.41 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

நடப்பு நிதியாண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட முக்கிய பணிகள்

- ஈரோடு மாவட்டத்தில் ரூ.1.99 கோடி மதிப்பிலான அந்தியூர்-அதிரெட்டியூர்-மரவப்பாளையம் சாலை கி.மீ. 0/0-1/0 வரை ஒரு வழித்தடச் சாலையை இடைவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்துதல், தடுப்புச் சுவர் கட்டுதல், வடிகால் கட்டுதல் மற்றும் வளைவினை மேம்படுத்தும் பணி.

- புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.1.97 கோடி மதிப்பில் சித்ததிக்காடு-கீரமங்கலம் சாலை கி.மீ. 6/8 முதல் நெய்வதாலி வழி கோடி கரம்பை கி.மீ. 0/0 முதல் 3/0 வரை மேம்படுத்தும் பணி, சிறு பாலம் கட்டும் பணி மற்றும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி.

2020 மார்ச் 18]

- தென்காசி மாவட்டத்தில் ரூ.1.99 கோடி மதிப்பில் மடத்துப்பட்டி- அரியநாயகிபுரம் சாலையில் கி.மீ. 1/4 - 2/4 ஒருவழித்தடச் சாலையை இடைவழித்தடச் சாலையாக அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி மற்றும் கி.மீ. 0/10-1/2 வரை தடுப்புச் சுவர் அமைக்கும் பணி மற்றும் குறுக்கு வடிகால் கட்டும் பணி.

2015 முதல் 2019 வரை 2055 கி.மீ. நீளச் சாலைகளை அகலப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் பணிகளும், 24 பாலங்கள்/ சிறு பாலங்கள்/ பாதுகாப்புப் பணிகளும் ரூ.731.52 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

மேலும், 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி வரை ரூ.159.86 கோடி செலவில் 311 கி.மீ நீளச் சாலைப் பணிகள் மற்றும் 12 பாதுகாப்புப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.217.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.5 சாலையில் ஓடுதளப் பாதையின் தரத்தினை மேம்பாடு செய்தல் (I.R.Q.P.)

அதிக அளவில் சாலைகளை மேம்பாடு செய்யும் பொருட்டு இத்திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் 2018-2019 முதல் ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டிற்கு நிலுவைப் பணிகளாக சாலை ஓடுதளப் பாதையின் தரத்தை மேம்படுத்தும் பணிகளில் 1,122 கி.மீ. சாலைகள் ரூ.262.21 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

2019-2020 ஆம் ஆண்டில் புதிய பணிகளாக 3,597.20 கி.மீ. நீளச் சாலைகளில், சாலை ஓடுதளப் பாதையின் தரத்தை மேம்படுத்தும் பணிகள் ரூ.1,039.78 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

2018-2019-ல் 2,660 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் ரூ.587.78 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை 1,602 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.345.97 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 18

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.645.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.1.6 செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (PBMC)

செயல்திறன் அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் என்பது பல்வேறு நாடுகளில் பின்பற்றப்படும் சாலைப் பராமரிப்பின் நவீன ஒப்பந்த அணுகுமுறையாகும். இவ்வொப்பந்த முறையானது வருடம் முழுவதும் சாலைகளை உகந்த சேவை நிலைகளை அடையும் வகையில் பராமரிப்பதன்மூலம் கூடுதல் செலவு மற்றும் நேரத்தை குறைக்கும் புதிய உத்தியாகும்.

இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு கோட்டத்தின் அனைத்து மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் முக்கிய மாவட்டச் சாலைகளில் 5 ஆண்டு ஒப்பந்தக் காலத்திற்கு இத்திட்டத்தின்கீழ் முதல் நிலை சீரமைத்தல் காலமுறை புதுப்பித்தல், சிறு மேம்பாட்டுப் பணிகள், சாதாரண பராமரிப்பு மற்றும் அவசர பணிகள் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம், பொள்ளாச்சி கோட்டத்தில் பிப்ரவரி 2014-ல் முதன்முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டு 377.38 கி.மீ. நீளச் சாலைப் பணிகள் பிப்ரவரி 2019-ல் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 2015-ல் கிருஷ்ணகிரி மற்றும் இராமநாதபுரம் கோட்டத்திலும், 2016-ல் திருவள்ளூர் கோட்டத்திலும் மற்றும் 2017-ல் விருதுநகர் கோட்டத்திலும் மொத்தம் ரூ.2,152.65 கோடி மதிப்பில் 1,372 கி.மீ. நீள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் 1,196 கி.மீ. நீள மாவட்ட முக்கிய சாலைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டன. அவற்றில் தற்சமயம் பராமரிப்புப் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் செயல்பாட்டு அடிப்படையிலான ஒப்பந்த முறையில் பழனி மற்றும் சிவகங்கை கோட்டங்களில் ரூ.1,403.26 கோடி மதிப்பில் 1,065.85 கி.மீ. நீளச் சாலைகளில் பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. பழனி கோட்டத்தில் முதல்நிலை சீரமைப்புப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சிவகங்கை கோட்டப் பணியின் ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தத்தில், தஞ்சாவூர் கோட்டத்தில் 833.66 கி.மீ. நீளச் சாலைகளைச் செயலாக்க ரூ.1,947.23 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

இவற்றுள் 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை ரூ.446.32 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.940.61 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.2 விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதியில் மேம்பாட்டுப் பணிகள்

விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதியில் சாலை கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பல்வேறு பணிகள் கீழ்க்கண்டவாறு:

விவரம்	பணிகளின் எண்ணிக்கை	தொகை ரூ. கோடியில்
கட்டம்-I	14	250
கட்டம்-II	22	150
மொத்தம்	36	400

2015 முதல் 2019 வரை 35 பணிகள் ரூ.325.04 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டன. 2019-2020-ல் மீதமுள்ள ஒரு பணி, பிப்ரவரி வரை ரூ.8.04 கோடி செலவில் முடிவுற்றது.

2019-2020 ஆம் ஆண்டில் ரூ.106.51 கோடி மதிப்பில் 11 பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் செயலாக்கத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.57.39 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.3 புறவழிச் சாலைகள் அமைத்தல்

அதிக மக்கட்தொகை இருக்கும் பெருநகரங்கள் மற்றும் நகரங்களின் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புறவழிச் சாலைகள் உதவுகின்றன. நகராட்சிகளிலுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் புறவழிச் சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சீரான வாகனப் போக்குவரத்திற்கும் மற்றும் வாகன இயக்கச் செலவைக் குறைக்கவும் புறவழிச் சாலைகள் உதவுகின்றன.

சேலம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட தாரமங்கலம் புறவழிச் சாலை 21-7-2019 அன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

திருத்தணி புறவழிச் சாலைப் பணி நடைபெற்று வருகிறது. மணச்சநல்லூர் புறவழிச் சாலை அமைக்கும் பணி விரைவில் துவங்கப்படும். மேலும் 21 புறவழிச் சாலைகளுக்கு நில எடுப்புப் பணிகள் ரூ.871.44 கோடி மதிப்பில் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் கூடலூர் புறவழிச் சாலைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.7.19 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

5.1.4 சென்னை வெளிவட்ட சாலையையொட்டி சாலை கட்டமைப்புத் தொகுதிகளை உருவாக்குதல் (CORR)

சென்னை வெளிவட்ட சாலையின் வாகனப் போக்குவரத்தினைத் திறனான முறையில் மேலாண்மை செய்யும் பொருட்டு ரூ.5.22 கோடி மதிப்பில் கூடுதல் சாலைக் கட்டமைப்பை உருவாக்கும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

25 சாலைப் பணிகளை உள்ளடக்கிய 14 சாலை இணைப்பு தொகுதிக்கான கட்டமைப்புப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியானது முடிவடைந்துள்ளது. இந்தத் திட்ட அறிக்கையானது, நான்குவழித் தடம், இருவழித் தடம் மற்றும் ஒருவழித் தடம் கொண்ட சாலைகளை முறையே, ஆறுவழித் தடம், நான்குவழித் தடம் மற்றும் கடின புருவத்துடன்கூடிய இருவழித் தடத்துடன் அகலப்படுத்துவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் மற்றும் சாலைப் பணிகள் படிப்படியாக மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

5.1.5 தமிழ்நாடு முதலீட்டு வளர்ச்சித் திட்டம் கட்டம்-II (TNIPP-II)

திருவள்ளூர் மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டி தாலுகாவில் உள்ள புதுவாயல் மற்றும் பொன்னேரி தாலுகாவில் உள்ள எலியம்பேடு கிராமத்திலும், மஹிந்திரா தொழில்நுட்பப் பூங்கா சென்னை லிமிடெட் (MIPCL) அமையப் பெற்றுள்ளது. சரக்கு பெட்டகங்களைக் கொண்ட கனரக வாகனங்களின் போக்குவரத்தை எளிதாகக் கையாள்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு முதலீட்டு வளர்ச்சித் திட்டம்-II இன்கீழ் புதுவாயல்-பழவேற்காடு சாலை கி.மீ. 2/0-6/2 வரை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிவுற்றவுடன் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

2020 மார்ச் 18]

5.1.6 சாலை பாதுகாப்புப் பணிகள்

ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளில், 2020 ஆம் ஆண்டிற்குள் சாலை விபத்துகளால் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளைப் பாதியாகக் குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையானது சாலைப் பயன்பாட்டாளர்களுக்கு பாதுகாப்பான சாலைகளை அளிப்பதற்கு நீண்ட மற்றும் குறுகிய காலப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

சாலை விபத்துகளால் ஏற்படக்கூடிய இழப்புகளைக் குறைப்பதற்காக இத்துறை பிற பயனீட்டாளர் துறைகளின் ஒருங்கிணைப்புடன் பல்வகைப்பட்ட மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அதில் விபத்து பாதிப்பு அதிகமுள்ள இடங்களில் எச்சரிக்கை பலகைகள் நிறுவுதல், வேகக் கட்டுப்பாடு உபகரணங்கள், விபத்து தடுப்பான்கள் அமைத்தல், சாலை சமிக்ஞைகள் அமைத்தல் போன்ற பணிகள் விபத்துகளை தடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் அடங்கும்.

சாலைப் பாதுகாப்பிற்கான உச்ச நீதிமன்ற குழுவின் வழிகாட்டுதல்களின்படி, அனைத்து மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் சாலைப் பாதுகாப்புத் தணிக்கை நடத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

சாலைப் பாதுகாப்பு ஆய்வுக் குழுவானது அனைத்து சாலைகளையும் ஆராய்ந்து பாதிக்கப்படக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அதன் பரிந்துரைகளை அளிக்கிறது. அதன் அடிப்படையில் பல்வேறு திட்டப் பணிகளின்கீழ் மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

சாலைப் பாதுகாப்பு நிதியின்கீழ், சாலைப் பாதுகாப்புப் பணிக்கு 2015-2016 முதல் 2018-2019 வரை ரூ.400 கோடி மதிப்பிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2014-2015 முதல் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமும் சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்படி, ரூ.2,087.16 கோடி மதிப்பிற்கு சாலைப் பாதுகாப்புப் பணிகள், ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சாலைப் பாதுகாப்பு நிதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

[2020 மார்ச் 18

2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 1,261 எண்ணிக்கையிலான பணிகள் ரூ.319 கோடி மதிப்பிலும், சாலைப் பாதுகாப்பு 2018-2019 திட்டத்தின்கீழ் 664 பணிகள் ரூ.100 கோடி மதிப்பிலும் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அனைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன.

2015-2016 முதல் 2018-2019 வரை ரூ.428.67 கோடி மதிப்பிலான சாலைப் பாதுகாப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை 453 சாலைப் பாதுகாப்புப் பணிகள் ரூ.59.11 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.1.7 மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டு நிதி

மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்பாட்டு நிதியின்கீழ் கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், சிவகங்கை மற்றும் தேனி மாவட்டங்களில் ரூ.84.18 கோடி மதிப்பில் 15 பணிகள் மாநில உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் முன்னேற்றக் குழுவின் ஒப்புதலின் அடிப்படையில் நகர மற்றும் ஊரக அமைப்பு துறையின் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் பணி முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

5.1.8 பணிகள் - விரிவான திட்ட அறிக்கை

தள ஆய்வு, நில எடுப்பு போன்ற பணிகளை உள்ளடக்கிய புறவழிச் சாலைகள் மற்றும் பெரிய பாலப் பணிகளுக்கு முதற்கட்டமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

5.1.8.1 சாலை மேம்பாலங்கள்

2019-2020 ஆம் ஆண்டில் சாலை மேம்பாலங்கள் அமைக்க, மதுரை மாவட்டத்தில் 2 பணிகளும், தேனி, திருப்பூர், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தலா ஒரு பணியும் ஆகிய 5 பணிகளுக்கு ரூ.100.63 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2020 மார்ச் 18]

5.1.8.2 மாநகராட்சி எல்லைக்குள் உள்ள மேம்பாட்டுப் பணிகள்

மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட சாலை வலைதளங்களில் (Road Network), சாலை கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்காக மதுரை, திண்டுக்கல், தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் திருச்சி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளுக்கு ரூ.252.73 இலட்சம் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

5.1.9 நிரந்தர வெள்ள சீரமைப்புப் பணிகள்

2018-2019 ஆம் ஆண்டில் சிறு பாலங்கள், பாலங்கள், பெரிய பாலங்கள், பெட்டி சிறு பாலங்கள், தாங்குசுவர் மற்றும் வடிகால் பணிகள் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.514.05 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், ரூ.2.16 கோடி மதிப்பில் 21 பாலப் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 பாலங்கள் கட்டும் பணிகளை மேற்கொள்ள ரூ.76.28 கோடி மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஏனைய பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உதகை, பொள்ளாச்சி மற்றும் கோயம்புத்தூர் கோட்டங்களில் 2019-2020-ல் ரூ.112.07 கோடி மதிப்பில் 200 எண்ணிக்கையிலான வெள்ள சீரமைப்புப் பணிகளான வடிகால் பணிகள், தாங்குசுவர் பணிகள் மற்றும் சிறு பாலங்கள் ஆகிய பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

5.2 திட்டம் சாரா பணிகள்

5.2.1 பராமரிப்புப் பணிகள்

சாலைகளில் சரியான காலத்தில் மேற்கொள்ளப்படும் பராமரிப்புப் பணிகளான சாலை நொடிகளை சீர்செய்தல், சாலை விளிம்புகளைப் பராமரித்தல், நீர்வழிப் பாதைகள், வடிகால்கள் அடைப்புகளைச் சரிசெய்தல், முட்புதர்களை அகற்றுதல் போன்ற பணிகள் சாலைகளின் நிர்ணயிக்கப்பட்ட வடிவமைப்புக் காலத்தினை நீட்டிக்க உதவுகின்றன. மேலும், காலசுழற்சி அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய பராமரிப்புப் பணிகளின் செலவினைக் குறைக்கவும் உதவுகின்றன.

2015 முதல் 2019 வரை 13,328 கி.மீ. நீளச் சாலைகளில் ரூ.3,843.82 கோடி மதிப்பில் புதுப்பித்தல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை 1,082 கி.மீ. நீளச் சாலைகளில் ரூ.376.24 கோடி மதிப்பில் புதுப்பித்தல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021-ல், ரூ.747.04 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.3 ஒட்டு மொத்த செலவினம் (2019-2020) மற்றும் நிதி ஒதுக்கீடு 2020-2021

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை ரூ.3,905.42 கோடி செலவில் 4,798 கி.மீ. நீளச் சாலைப் பணிகள், 1,328 பாலங்கள், சிறு பாலங்கள், பாதுகாப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.6,117.43 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

6. தேசிய நெடுஞ்சாலை

தேசிய நெடுஞ்சாலை அலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் 4 வட்டங்கள், 13 கோட்டங்கள், 4 தரக் கட்டுப்பாடு மற்றும் ஒரு பேருந்து முனைய கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 6,634 கி.மீ. நீளத்திற்கு தேசிய நெடுஞ்சாலைகள் அமைந்துள்ளன. அவற்றில் 1,900 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகள் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

6.1 ஆண்டுத் திட்டம்

மத்திய அரசின் நிதியின்மூலம், தேசிய நெடுஞ்சாலை அலகின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் திட்டம், திட்டம் சாரா பணிகள் மற்றும் காலமுறைப் புதுப்பித்தல், ஓடுதள தரத்தை மேம்படுத்துதல், வெள்ள நிவாரணப் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

6.1.1 திட்டம் சார்ந்த பணிகள்

திட்டப் பணிகளின்கீழ் தேசிய நெடுஞ்சாலைகளில் சாலைகளை மேம்படுத்துதல், உறுதிப்படுத்துதல், பாலங்கள் கட்டுதல், மறுசீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2020 மார்ச் 18]

ரூ.1,533.29 கோடி மதிப்பிலான 52 பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. மேலும், ஆண்டுத் திட்டம் 2019-2020-ன்கீழ் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், ரூ.167.10 கோடி மதிப்பிலான 26.71 கி.மீ. நீளமுள்ள 5 சாலைப் பணிகளுக்கும், 7 பாலப் பணிகளுக்கும் ஒப்புதல் வழங்கியுள்ளது. அப்பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன.

ஆண்டுத் திட்டம் 2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை 972.01 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 27 பாலப் பணிகளும் ரூ.2,525.19 கோடி செலவில் முடிக்கப்பட்டன.

2019-2020-ல் பிப்ரவரி வரை 96.95 கி.மீ. நீளமுள்ள பணிகள் ரூ.460.35 கோடி செலவில் முடிக்கப்பட்டன.

முடிவுற்ற சில முக்கிய திட்டப் பணிகள்

- தே.நெ.209-ல் (புதிய தே.நெ. 948) தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைப் பகுதிகளில் மொத்தமாக 43.60 கி.மீ. நீளத்திற்கு ரூ.49.06 கோடி மதிப்பீட்டில் உறுதிப்படுத்துதல் மற்றும் சிறு பாலத்தினை திரும்பக் கட்டும் பணி
- தே.நெ.67-ல் (புதிய தே.நெ. 181) தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைப் பகுதிகளில் மொத்தமாக 18.80 கி.மீ. நீளத்திற்கு ரூ.30.97 கோடி மதிப்பீட்டில் சாலைப் பகுதிகளை உறுதிப்படுத்தும் பணி
- தே.நெ.67-ல் (புதிய தே.நெ. 181) தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைப் பகுதிகளில் மொத்தமாக 7.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.23.81 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல், சிறு பாலத்தினை திரும்பக் கட்டுதல் மற்றும் சிறு பாலத்தினை அகலப்படுத்தும் பணி.

நடைபெற்று வரும் முக்கிய திட்டப்பணிகளின் விவரம்

- தே.நெ.179-அ கி.மீ. 36/0-80/0 இல் 44.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.297.55 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்
- தே.நெ.383-ல் (திண்டுக்கல்-நத்தம் சாலை) தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைப் பகுதிகளில் மொத்தமாக

38.00 கி.மீ. நீளத்திற்கு ரூ.240.38 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்

- தே.நெ.234-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட சாலைப் பகுதிகளில் மொத்தமாக 49.35 கி.மீ. நீளத்திற்கு ரூ.138.06 கோடி மதிப்பீட்டில் கடின ஓடுதள புருவத்துடன்கூடிய இருவழித் தடமாக அகலப்படுத்துதல்
- தே.நெ. 383-ல் (நத்தம்-கொட்டாம்பட்டி சாலைப் பகுதி) கி.மீ. (38/0-51/770) 13.77 கி.மீ. நீளத்திற்கு ரூ.63.81 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்
- தே.நெ 49 நீட்சியில் ரூ.52.04 கோடி மதிப்பீட்டில் கி.மீ. 15/2-ல் மேம்பாலம் கட்டுதல்

6.1.2 சாலைப் பாதுகாப்புப் பணிகள்

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் சாலைப் பாதுகாப்பிற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆண்டுத் திட்டப் பணிகளில் சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்யும் பொருட்டு சாலை வடிவியல் மேம்பாட்டுப் பணிகள், குறுகிய பாலங்களை அகலப்படுத்துதல், சாலைத் தட குறியிடல், பேருந்து தளப் பணிகள், சாலை உபகரணங்கள் நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் ஓர் அங்கமாகவே சாலைப் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

இந்திய அரசின் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் 2015 முதல் 2018 வரை 748 விபத்து பகுதிகள் தமிழ்நாட்டில் கண்டறியப்பட்டது. அதில் தமிழ்நாட்டில் 209 விபத்துப் பகுதிகள் மாநில தேசிய நெடுஞ்சாலை கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளில் உள்ளன. அவற்றில் 25 விபத்துப் பகுதிகள் சீரமைக்கப்பட்டன மற்றும் 24 விபத்துப் பகுதிகளுக்கான சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதிக விபத்துக்குள்ளாகும் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி விபத்து கரும்புள்ளிகளை முறைப்படுத்துவதற்கான மதிப்பீடு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. 2019-2020-ல் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், ரூ.47.69

2020 மார்ச் 18]

கோடி மதிப்பில் 13 விபத்துப் பகுதிகளை நிரந்தரமாக சீரமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது. 11 கூடுதல் விபத்துப் பகுதிகளை நிரந்தரமாக சீரமைக்க ரூ.29.30 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் 48 விபத்துப் பகுதிகளைத் தற்காலிகமாக சீரமைக்க ரூ.4.32 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மீதமுள்ள 88 விபத்து கரும்புள்ளிகள் பகுதிவாரியாக சீரமைக்க எடுத்துக்கொள்ளப்படும்.

6.1.3 திட்டம் சாரா பணிகள் [காலமுறைப் புதுப்பித்தல் (PR)/ ஓடுதள தரத்தை மேம்படுத்துதல் திட்டம் (IRQP)]

திட்டம் சாரா பணிகளின்கீழ் காலமுறைப் புதுப்பித்தல் மற்றும் ஓடுதளத்தின் தரம் உயர்த்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019-2020-ல் இத்திட்டத்தின்கீழ் 53.952 கி.மீ. நீளத்திற்கு 8 சாலைப் பணிகளுக்கு ரூ.48.77 கோடி மதிப்பீட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இத்திட்டத்தின்கீழ் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகமானது ரூ.44.50 கோடி மதிப்பீட்டில் 44.66 கி.மீ. நீளத்திற்கு 5 கூடுதல் சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

2015 முதல் 2019 வரை 637.27 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.367.68 கோடி செலவில் முடிக்கப்பட்டன.

2019-2020-ல் பிப்ரவரி வரை ரூ.9.91 கோடி செலவில் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

6.2 மத்திய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டப் பணிகள்

6.2.1 புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டம் (RCRF)

மத்திய அரசின் நிதி உதவியுடன் புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட முக்கியச் சாலைகள், மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்துதல், உறுதிப்படுத்துதல், பாலங்கள் கட்டுதல் மற்றும் மறு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019-2020-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ.2,517.08 கோடி மதிப்பில் 1,290.64 கி.மீ. நீளத்திற்கு 147 சாலைப் பணிகள் மற்றும் 15 பாலப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

[2020 மார்ச் 18

இத்திட்டத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதை நோக்கமாகக்கொண்டுபல்வேறுபணிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளன. பகுதியான தே.நெ-45 (புதிய தே.நெ.32) சென்னை புறநகர், மதுரை மற்றும் கோயம்புத்தூர் நகரங்களில் பெருகிவரும் வாகன நெரிசலைத் தவிர்க்க பின்வரும் பணிகள் நடைபெற்று வருகின்றன:

சென்னை புறநகர்ப் பகுதி

- வாலாஜாபாத்-சுங்குவார்சத்திரம்-கீழச்சேரி சாலையினைக் கி.மீ. 0/0-19/6 வரை ரூ.121.65 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல்
- எழிச்சூர்-பாலூர் சாலையினைக் கி.மீ. 0/0-8/6 வரை ரூ.41.80 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல்
- கோடம்பாக்கம்-ஸ்ரீபெரும்புதூர் சாலையினைக் கி.மீ. 13/2-28/2 வரை ரூ.132.00 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல்
- செங்கல்பட்டு-திருப்போரூர் சாலையினைக் கி.மீ. 0/0-21/8 வரை ரூ.126.75 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல்
- கூடுவாஞ்சேரி-கோட்டையூர் சாலையினைக் கி.மீ. 0/0-17/6 வரை ரூ.76.87 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துதல்

மதுரை மாநகரம்

- ரூ.303.59 கோடி மதிப்பீட்டில் 16.00 கி.மீ. நீளத்திற்கு வைகை ஆற்றின் கரைகளை மேம்படுத்தி சாலையை உறுதிப்படுத்துதல்
- பழைய ஆஸ்டின்பட்டி சாலையினை கி.மீ. 0/0-2/0 வரை ரூ.21.20 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக அகலப்படுத்துதல்

கோயம்புத்தூர் மாநகரம்

- இராமநாதபுரம் மற்றும் சுங்கம் சந்திப்பில் ரூ.253.00 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைத்தல்
- கவுண்டம்பாளையம் சந்திப்பில் ரூ.66.00 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைத்தல்

2020 மார்ச் 18]

- ஜி.என். மில் சந்திப்பில் ரூ.41.88 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைத்தல்

புதுப்பிக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்தில் 2015 முதல் 2019 வரை 1,856.37 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளும், 5 பாலப் பணிகளும் ரூ.1471.31 கோடி செலவில் முடிக்கப்பட்டன.

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை ரூ.1046.11 கோடி மதிப்பீட்டில் 823.86 கி.மீ. நீளத்திற்கு 101 சாலைப் பணிகள் மற்றும் ஒரு பாலப் பணி நிறைவுற்றன.

2020-2021-ல், ரூ.928.29 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.2.2 மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டம் (ISC)

மத்திய அரசின் நிதி உதவியுடன், மாநிலங்களுக்கிடையிலான சாலைகளை இணைக்கும் திட்டத்தின்கீழ் சாலைகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2019-2020-ல் ரூ.72.91 கோடி மதிப்பீட்டில் 41.20 கி.மீ. நீளத்திற்கு நிலுவைப் பணியாக ஒரு சாலைப் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு தற்போது நடைபெற்று வருகிறது. மேலும் இத்திட்டத்தின்கீழ் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு ரூ.96.76 கோடி மதிப்பீட்டில் 29.25 கி.மீ. நீள 4 சாலைப் பணிகளுக்கு கருத்துரு அனுப்பப்பட்டு, மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

இத்திட்டத்தின்மூலம், 2015 முதல் 2019 வரை 133.55 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.130.25 கோடி செலவில் முடிக்கப்பட்டன.

இத்திட்டத்தின்கீழ் மாநில சாலைகளை மேம்பாடு செய்யும் பொருட்டு 2019-2020-ல் பிப்ரவரி வரை ரூ.10.81 கோடி செலவிடப்பட்டுள்ளது.

6.3 பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் (PMGSY)

மத்திய அரசு, நாட்டில் வறுமை ஒழிப்பின் ஒரு பகுதியாக இணைக்கப்படாத குடியிருப்புகளுக்கு சாலை இணைப்பு வழங்குவதற்கும், சாலைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும், பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

[2020 மார்ச் 18

மத்திய அரசு, கிராமச் சாலைகளை மேம்படுத்த பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் நிதி வழங்குகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் இதர மாவட்டச் சாலைகளின் மேம்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

2015 முதல் 2019 வரை 435.12 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகள் ரூ.143.38 கோடி செலவில் முடிக்கப்பட்டன. தற்போது முடிக்கப்பட்ட சாலைப் பகுதிகள் பராமரிப்பில் உள்ளன.

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை ரூ.2.69 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2020-2021-ல், ரூ.2.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.4 தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் வழங்கப்பட்ட பணிகள்

6.4.1 இரும்புலியூர்-கூடுவாஞ்சேரி (தே.நெ. 45) (புதிய தே.நெ. 32) சாலையை அகலப்படுத்துதல்

சென்னை புறநகர்ப் பகுதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும்பொருட்டு இரும்புலியூர்-வண்டலூர் தேசிய நெடுஞ்சாலையை (2.30 கி.மீ.) ரூ.20.77 கோடி மதிப்பில் எட்டுவழித் தடமாக அகலப்படுத்துவதற்கு மாநில அரசின் முயற்சியால் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

இரும்புலியூர்-வண்டலூர் தேசிய நெடுஞ்சாலையின் மேம்பாட்டுப் பணியின் தொடர்ச்சியாக 5.30 கி.மீ. நீளமுள்ள வண்டலூர்-கூடுவாஞ்சேரி தேசிய நெடுஞ்சாலையை ரூ.44.48 கோடி மதிப்பில் அகலப்படுத்தும் பணிக்கு தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் ஒப்புதல் பெறப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

6.4.2 மேம்பாட்டுப் பணிக்கான புதிய கருத்துரு

போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு கூடுவாஞ்சேரி முதல் செட்டிபுண்ணியம் மகேந்திரா சிட்டி வரை 13.30 கி.மீ. நீளச் சாலையினை மேம்படுத்த ரூ.230.68 கோடிக்கான மதிப்பீடு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், மதுரவாயல் முதல் ஸ்ரீபெரும்புதூர் வரையிலான 23.20 கி.மீ. நீளச் சாலையை மேம்படுத்த ரூ.255.00 கோடிக்கான மதிப்பீடு

2020 மார்ச் 18]

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

6.5 சேது பாரதம் திட்டம் - தேசிய நெடுஞ்சாலைகளில் இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் கட்டுதல்

தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள இரயில்வே கடவுகளை இரயில்வே மேம்பாலம், கீழ்பாலங்களாக மாற்றும் நோக்கத்துடன் மத்திய அரசால் சேது பாரதம் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக 6 இரயில்வே மேம்பாலங்கள், கீழ்பாலங்கள் கட்டும் பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசகர்களை மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் நியமித்துள்ளது. இப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. விரிவான திட்ட அறிக்கை முடிவுற்ற பின், வரும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்:

- கி.மீ. 22/2 செக்கானூரணி அருகில் (தே.நெ. எண் 49 நீட்சி)
- கி.மீ. 72/6-7 தேனி அருகில் (தே.நெ. எண் 49 நீட்சி)
- கி.மீ. 93/4 போடி அருகில் (தே.நெ. எண் 49 நீட்சி)
- கி.மீ. 99/4 தென்காசி-இலஞ்சி அருகில் (தே.நெ. எண் 208)
- கி.மீ. 103/4 போளூர்-மாதிமங்கலம் (தே.நெ. எண் 234)
- கி.மீ. 81/6 கண்ணமங்கலம்-கணியம்பாடி (தே.நெ. எண் 234)

6.6 தேசிய நெடுஞ்சாலைகளாகத் தரம் உயர்த்துதல்

6.6.1 தரம் உயர்த்தப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்துதல்

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தினால் 841 கி.மீ. நீளத்திற்கு 7 மாநில சாலைகள் தரம் உயர்த்தப்பட்டு தேசிய நெடுஞ்சாலைகளாக அறிவிக்கப்பட்டன. அவற்றுள் கீழ்க்காணும் இரு சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் நடைபெற்று வருகின்றன.

[2020 மார்ச் 18

- திண்டுக்கல்-காரைக்குடி சாலை (தே.நெ. 383)
- சேலம்-திருப்பத்தூர்-வாணியம்பாடி சாலை (தே.நெ 179அ)

கீழ்க்காணும் 5 சாலைகளில் மேம்பாட்டுப் பணிகள் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் நடைபெற்று வருகின்றன:

- பெரம்பலூர்-ஆத்தூர் சாலை (தே.நெ. 136)
- தொப்பூர்-மேட்டூர்-பவானி-ஈரோடு சாலை (தே.நெ. 544எச்)
- மாலூர் - ஓசூர் - ராயக்கோட்டை - தருமபுரி - அதியமான்கோட்டை (தே.நெ. 844)
- ஒரகடம்-செய்யாறு-திருவண்ணாமலை-அரூர் (தே.நெ. 179பி)
- கும்பகோணம்-சீர்காழி (தே.நெ. 136பி)

6.6.2 கொள்கை அளவில் தேசிய நெடுஞ்சாலைகளாக உயர்த்தப்படவுள்ள மாநில சாலைகள்

தேசிய நெடுஞ்சாலைகளாக கொள்கை அளவில் உயர்த்தப்படவுள்ள சாலைகளின் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை 6.அ: தேசிய நெடுஞ்சாலையாக கொள்கை அளவில் உயர்த்தப்படவுள்ள மாநில சாலைகள்

வ. எண்	சாலையின் பெயர்	நீளம் கி.மீ.-ல்
1	திருவண்ணாமலை-கள்ளக்குறிச்சி சாலை	65.00
2	வள்ளியூர்-திருச்செந்தூர் சாலை	70.00
3	கொள்ளேகால்-ஹனூர்-எம்.எம் மலை-பாலாறு சாலை-தமிழ்நாட்டு எல்லையில் மேட்டூர் வரை	30.00
4	மேட்டுப்பாளையம்-பவானி சாலை	98.00
5	அவினாசி-மேட்டுப்பாளையம் சாலை	38.00
6	பவானி-கரூர் சாலை	77.00

2020 மார்ச் 18]

வ. எண்	சாலையின் பெயர்	நீளம் கி.மீ.-ல்
7	பழனி-தாராபுரம் சாலை	31.00
8	ஆற்காடு-திண்டிவனம் சாலை	91.00
	மொத்தம்	500.00

இவற்றில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் 257 கி.மீ. நீளமுள்ள 4 சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்த ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள 243 கி.மீ. நீளமுள்ள 4 சாலைகளை தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துதல் மத்திய அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது. மேலும், 100.50 கி.மீ. நீளமுள்ள தஞ்சாவூர்-கோடியக்கரை சாலையையும் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துவதாக ஒப்புக்கொண்டுள்ளது. இது குறித்த அறிவிப்பு விரைவில் மத்திய அமைச்சகத்தால் வெளியிடப்படும்.

6.6.3 கொள்கை அளவில் தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்துவதற்கு கருத்துரு அனுப்பப்பட்ட மாநில சாலைகள்

சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்திற்கு 1,032.40 கி.மீ. நீளமுள்ள 16 மாநில சாலைகளை கொள்கையளவில் தேசிய நெடுஞ்சாலைகளாக தரம் உயர்த்துவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

6.7 பேருந்து முனையம்

பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின் ஒரு பகுதியாக சேலம் மற்றும் மதுரை மாநகரங்களில் பல்வேறு மேம்பட்ட நவீன பயணியர் வசதிகள் கொண்ட பேருந்து முனையங்கள் (Bus Port) அமைப்பதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சேலத்தில் பேருந்து முனையம் அமைப்பதற்கு மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது. தேசிய நெடுஞ்சாலை உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனத்தினால் (NHIDCL) விரிவான வரைவுத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. பேருந்து முனையத்திற்கான கூடுதல் தேவைகளை விரிவான திட்ட அறிக்கையில் சேர்க்குமாறு NHIDCL-யிடம் தெரிவிக்கப்பட்டது. விரிவான திட்ட அறிக்கை முடிவுற்றதும், சேலம் பேருந்து முனைய பணி மேற்கொள்ளப்படும்.

[2020 மார்ச் 18

மதுரை பேருந்து முனையத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க NHIDCL-க்கு பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

6.8 மின்னணு ஆளுகை

மத்திய அமைச்சகம் பணிகளை விரைவாக மேற்கொள்ள பின்வரும் தனிப்பட்ட இணையதளங்களை ஏற்படுத்தியுள்ளது:

- தேசிய நெடுஞ்சாலை பணிகளின் நில எடுப்புப் பணிகளுக்காக "பூமிராஷி" இணையதளம்

 - நில எடுப்பு விவரங்கள் பதிவேற்றப்பட்டு, நில எடுப்பு அதிகாரிகளால் (CALA) சரிபார்க்கப்பட்டு, மத்திய அமைச்சகத்தால் இணையதளம்மூலம் அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

- திட்ட கண்காணிப்புத் தகவல் முறை

 - மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம், திட்டப் பணிகளைக் கண்காணித்து அதனைத் துரிதப்படுத்தவும், பணிகளின் அனைத்து நிலைகளிலும் கலந்தாய்வு செய்து, விரைந்து முடிக்கவும் வழி வகுத்துள்ளது.

 - இத்தகவல்களின் அடிப்படையில் மத்திய அமைச்சக உயர் அதிகாரிகள் பணி உத்தரவு வழங்கும் நிலை, செயலாக்கத்தில் உள்ளவை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு நிலை ஆகிய பல்வேறு நிலைகளில் பணிகளை ஆய்வு செய்து, விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.9 2019-2020 ஆம் ஆண்டின் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீட்டின்மூலம் 2019-2020 ஆம் நிதியாண்டில் திட்டம் தலைப்பின்கீழ் பிப்ரவரி வரை ரூ.460.35 கோடி மதிப்பில் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் தேசிய நெடுஞ்சாலையினை அகலப்படுத்துதல், உறுதிப்படுத்துதல் மற்றும் பாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

மத்திய சாலை நிதித் திட்டம் மற்றும் பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் ரூ.1,048.79 கோடி மதிப்பிற்கு 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 2020-2021 ஆம் நிதியாண்டில் மத்திய சாலை நிதித் திட்டம் மற்றும் பாரத் நிர்மான் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பணிகளுக்காக ரூ.930.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

6.10 இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) செயல்படுத்தப்படும் திட்டங்கள்

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையமானது, 1988-ம் ஆண்டில் மத்திய அரசின் பாராளுமன்ற சட்டத்தின்படி உருவாக்கப்பட்டு, 1995-ம் ஆண்டு முதல் செயலாக்கத்தில் இருந்து வருகிறது. தற்போது இவ்வாணையம் நடப்பு ஆண்டில் அதன் செயலாக்கத்தில் 25 ஆண்டுகள் நிறைவடைந்து அதன் வெள்ளி விழா கொண்டாடி வருகிறது. தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டுப் பணிகள் (NHDP)/பாரத்மாலா பரியோஜனா திட்டத்தின்கீழ் இவ்வாணையத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சாலை மற்றும் பால கட்டுமானப் பணிகள், துறைமுக இணைப்பு சாலைத் திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முக்கியப் பங்கு வகிக்கிறது. இவ்வாணையத்தின் திட்டங்களில் வளர்ச்சி, பராமரிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இவ்வாணையம் செயல்பாட்டுக்கு வந்தது முதல் ரூ.22,758 கோடி மதிப்பீட்டில் 2,929 கி.மீ. நீளத்திற்கு ஆறு/ நான்கு/தளமிடப்பட்ட புருவங்களுடன்கூடிய இருவழித்தடச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளன.

நில எடுப்பு, சேவை சாதனங்களை மாற்றியமைத்தல் போன்ற ஆயத்தப் பணிகளுக்கு மாநில அரசானது இவ்வாணையத்திற்கு உரிய ஒத்துழைப்பும், உதவியும் செய்து வருகிறது.

[2020 மார்ச் 18

6.10.1 நடைபெற்றுவரும் பணிகள்

2019-2020 ஆம் ஆண்டில் 20 சாலைப் பணிகள் 1,101 கி.மீ. நீளத்திற்கு ரூ.16,068 கோடி மதிப்பீட்டில் ஆறு/நான்கு/ தளமிடப்பட்ட புருவங்களுடன்கூடிய இருவழித்தடச் சாலைகளாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களில், 400 கி.மீ. நீளச் சாலைகள் நடப்பாண்டில் முடிக்கப்பட்டு, மீதமுள்ள சாலைப் பணிகளில் வெவ்வேறு செயலாக்க நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- திண்டுக்கல்-தேனி-குமுளி சாலை (தே.நெ.45 நீட்சி மற்றும் தே.நெ. 220) பகுதி, திருச்சி-காரைக்குடி சாலை (தே.நெ.210) மற்றும் திண்டிவனம்- கிருஷ்ணகிரி சாலை (தே.நெ. 66) போன்ற சாலைப் பணிகளில் விட்டுப்போன மீதமுள்ள பணிகள் நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

6.10.2 ஒப்பளிப்பு நிலையில் உள்ள பணிகள்

- தே.நெ. 844-ல் ஜிட்டாண்டஹள்ளி-தருமபுரி சாலை கி.மீ. 61/100 முதல் கி.மீ. 94/460 வரை ரூ.980.82 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடச் சாலையாக மேம்படுத்துதல் (ஓசூர்-தருமபுரி பகுதி சிப்பம்-3)

- தே.நெ. 844-ல் கி.மீ. 23/350 முதல் கி.மீ. 60/100 தொரப்பள்ளி அக்ரஹாரம்-ஜிட்டாண்டஹள்ளி பகுதியினை ரூ.1,081.66 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல் (ஓசூர்-தரருமபுரி பகுதி, சிப்பம்-2)

- தே.நெ. 844-ல் தமிழ்நாடு (ம) கர்நாடகா மாநிலங்களில் கி.மீ. 0/000 முதல் கி.மீ. 23/350 வரை நெரலூர்-தொரப்பள்ளி அக்ரஹாரம் பகுதியினை ரூ.948.77 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல் (ஓசூர்-தருமபுரி பகுதி, சிப்பம்-1)

- தே.நெ. 332அ-ல் கி.மீ. 0/0 முதல் 31/0 மாமல்லபுரம்-முகையூர் பகுதியினை ரூ.1,008.99 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல் (மாமல்லபுரம்-புதுச்சேரி பகுதி-சிப்பம்-1)

2020 மார்ச் 18]

- தே.நெ. 332அ-ல் கி.மீ. 31/0 முதல் 62/0 முகையூர்-மரக்காணம் பகுதியினை ரூ.825.94 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல் (மாமல்லபுரம்-புதுச்சேரி பகுதி-சிப்பம்-2)
- தே.நெ. 45அ-ல் விழுப்புரம்-புதுச்சேரி பகுதியினை ரூ.998.07 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல்
- தே.நெ. 45அ-ல் புதுச்சேரி-பூண்டியான்குப்பம் பகுதியினை ரூ.1,294.47 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல்
- தே.நெ. 45அ-ல் பூண்டியான்குப்பம்-சட்டநாதபுரம் பகுதியினை ரூ.2,153.90 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல்
- தே.நெ. 227-ல் மீன்சுருட்டி-சிதம்பரம் பகுதியினை ரூ.633.55 கோடி மதிப்பீட்டில் நான்குவழித் தடமாக்குதல்
- தே.நெ. 47பி-ல் (புதிய தே.நெ. 66,948) தமிழ்நாடு-கேரளா மாநில எல்லை முதல் கன்னியாகுமாி சாலைப் பகுதி (தே.நெ.47) மற்றும் நாகர்கோவில்-காவல்கிணறு பகுதியில் ரூ.591.16 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளுதல்

6.10.3 துறைமுக இணைப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசு, சென்னை துறைமுக கழகம், எண்ணூர் துறைமுக கழகம் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் பங்களிப்புடன், திட்டப் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு சிறப்பு நோக்கு நிறுவனமாக சென்னை, எண்ணூர் துறைமுக சாலை இணைப்புக் கழகம் (CEPRCL) தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் எண்ணூர் துறைமுகத்தை இணைக்கும் விதமாக 29.138 கி.மீ. நீளத்திற்கு நான்கு பகுதிகளாக சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பணிகள் கணிசமான அளவில் முடிவுற்றதால், தமிழக அரசின் கட்டண அறிவிப்பு வெளியீட்டிற்குப் பிறகு, 20-2-2019 முதல் சிறப்பு நோக்கு நிறுவனத்தால் பயனீட்டாளர் கட்டண வசூலிப்பு துவங்கப்பட்டுள்ளது.

சென்னை துறைமுக கழகத்திற்கு உட்பட்ட இடத்தில் 330 மீட்டர் நீளத்திற்கு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அப்பகுதிகளை மேம்படுத்தும் பொருட்டு தனியாக ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 18

6.10.4 பாரத்மாலா பரியோஜனா திட்டம்

பொருளாதார மேம்பாட்டிற்கான சாலை வழித்தடங்கள், உள் சாலை வழித்தடங்கள் மற்றும் சேவை மார்க்கங்கள், தேசிய சாலை வழித்தடங்கள் திறன் மேம்பாடு எல்லை மற்றும் சர்வதேச இணைப்புச் சாலைகள், கடலோர மற்றும் துறைமுக இணைப்புச் சாலைகள், பசுமைவழி விரைவுச் சாலைகள் ஆகிய முக்கிய சாலைத் தடங்களை பாரத்மாலா பரியோஜனா திட்டம் மூலம் மேம்படுத்த கண்டறியப்பட்டுள்ளது.

விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு நிலையில் உள்ள பாரத்மாலா திட்டத்தின்கீழ் 2,670 கி.மீ. நீள 35 திட்டப் பணிகளுக்கு (பாரத்மாலா திட்டத்தின்கீழ் மேற்கொள்ளவிருக்கும் தேசிய நெடுஞ்சாலை மேம்பாட்டு திட்டப் பணிகள் உட்பட) விரிவான திட்ட அறிக்கை மற்றும் சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும் பணி நடைபெற்று வருகிறது. விரிவான திட்ட அறிக்கை, நிலம் கையகப்படுத்துதல், முதற்கட்டப் பணிகள் முடிவடைந்த பின், படிப்படியாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

6.10.5 நிலம் கையகப்படுத்துதல்

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்கு, தேசிய நெடுஞ்சாலைச் சட்டம், 1956-ன்படி நிலம் கையகப்படுத்தப்படுகிறது. தேசிய நெடுஞ்சாலை ஆணையம்மூலம் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் பணி சிறப்பு கையகப்படுத்துதல் குழுவினருடன் (SLAUs) மாவட்ட வருவாய் அலுவலர் (DRO) பதவி நிலையில் உள்ள அலுவலர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிறுவனச் செலவினங்களை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஏற்கிறது.

6.10.6 விபத்து கரும்புள்ளிகளை நீக்குதல்

2011 முதல் 2014 வரை ஏற்பட்ட சாலை விபத்துகளின் தகவல்படி, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின்மூலம் மாநிலத்திலுள்ள இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கீழுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 78 விபத்து கரும்புள்ளிகள் கண்டறியப்பட்டுள்ளன. இக்கரும்புள்ளிகளை மேம்படுத்துவதற்காக உடனடி தற்காலிக நடவடிக்கையாக எச்சரிக்கைப் பலகைகள், சிறு வேகத் தடைகள், எச்சரிக்கை ஒளிர்ப்பான்கள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நிரந்தர

2020 மார்ச் 18]

நடவடிக்கையாக மேம்பாலம், கீழ்பாலம், சேவை சாலை, நடைபாதை மேம்பாலம், சந்திப்புகள் மேம்படுத்துதல் மற்றும் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் 16 இடங்களில் முடிவுற்று, மீதமுள்ள இடங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தற்போது 2015 முதல் 2018 வரை, ஏற்பட்ட சாலை விபத்துகளின் தகவல்படி, மாநிலத்தில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் 454 விபத்து கரும்புள்ளிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேற்கண்ட விபத்துப் பகுதிகளைச் சீரமைக்க விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கிடையில் மேற்கண்ட இடங்களில் தற்காலிக சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6.10.7 நெடுஞ்சாலை செயல்பாட்டு அலகு (HOU)

தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து செயல்பாடுகளான சுங்கச்சாவடிகளின் மேலாண்மை, நெடுஞ்சாலைகளில் சாலைப் பயனாளருக்கான உலகத்தரம் வாய்ந்த சிறு குடில்களுடன்கூடிய நெடுஞ்சாலை கிராமங்களை உருவாக்குதல், ரோந்து வாகனம், அவசர ஊர்தி மற்றும் பாரம் தூக்கிகளுடன்கூடிய சாலை நிகழ்வு மேலாண்மை, நெடுஞ்சாலைப் போக்குவரத்து மேலாண்மைக்கான கைப்பேசி செயலி, நெடுஞ்சாலை உடைமைகளுக்கான மேலாண்மை ஆகியவற்றைக் கண்காணிக்க நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய செயல்பாட்டு அலகுகளை உருவாக்கும் முயற்சியில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஈடுபட்டு வருகிறது.

6.10.8 சுங்கச்சாவடியில் 100% மின்னணுச் சீட்டு சேகரிப்பினை நடைமுறைப்படுத்துதல்

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள 48 சுங்கச்சாவடிகளிலும் பயனாளர் கட்டணம் சுங்கச்சீட்டு (FasTag) முறையை பின்பற்றி மின்னணு சுங்கச்சீட்டு சேகரிப்பு மூலமாக 100 சதவீதம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட 48 சுங்கச் சாவடிகளில் உள்ள 428 தடங்களிலும் தடையற்ற பயணத்தை உறுதிசெய்யும் பொருட்டு மின்னணு சுங்கச் சேகரிப்பு (ETC) அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள், மின்னணு சுங்கச் சேகரிப்பு அமைப்பினைப் பின்பற்றுவதற்கு இலவச சுங்கச் சீட்டுகள் வழங்கி, மின்னணு பயன்பாடு பரவலாக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 18

மாநில அரசானது சுங்கச்சாவடிகளில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலம் 100 சதவீத மின்னணு சுங்க வசூலிப்பினை உறுதி செய்வதற்கு அனைத்து வித ஒத்துழைப்பினையும், உதவியையும் நல்கி வருகிறது.

6.10.9 மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம் மேம்பாடு செய்யப்பட்ட தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளைப் பயனாளர் கட்டணம் வசூல்செய்யும் பொருட்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைப்பு செய்தல்

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் நிதியின்மூலம் மாநில தேசிய நெடுஞ்சாலை அலகின் வாயிலாக 311.542 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்யப்பட்ட கடலூர்-சேலம் (தே.நெ.532), அவினாசி- அவினாசி பாளையம் (தே.நெ.381), வேலூர்-விழுப்புரம் (தே.நெ.234), பெரம்பலூர்-தஞ்சாவூர் (தே.நெ.226 நீட்சி) சாலைப் பகுதிகளின் தொடர் பராமரிப்பு மற்றும் பயனாளர் கட்டணம் வசூல் செய்யும் பொருட்டு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

7. நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகு

நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் அலகில் தலைமைப் பொறியாளரின்கீழ் 4 வட்டங்கள் மற்றும் 14 கோட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வலகின் மூலமாக பின்வரும் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

- நபார்டு வங்கிக் கடனுதவியுடன் ஆற்றுப் பாலங்கள் கட்டுதல்.
- மாநில நிதியின்கீழ் ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்துதல்.
- இரயில்வே திட்டப் பணிகளின்கீழ் இரயில்வே மேம்பாலம், கீழ்பாலம் கட்டும் பணிகள்.
- மாநில நிதியின்கீழ் புறவழிச் சாலைகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள்.

2020 மார்ச் 18]

கிராமப்புற மக்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காக 1995 ஆம் ஆண்டு முதல் நபார்டு வங்கியால் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (R.I.D.F.) தொடங்கப்பட்டு, நாடு முழுவதும் உள்ள கிராமங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், விவசாயம், பள்ளிக்கூடக் கட்டடங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளான சாலை அமைத்தல், பாலங்கள் கட்டுதல் போன்ற பணிகள் நபார்டு வங்கி கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் மாநிலத் திட்டக் குழு பரிந்துரையின்படி, 7,964 கி.மீ. நீளமுள்ள 2,596 ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளாகத் தரம் உயர்த்துவதற்கு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையால் கண்டறியப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை வசம் ஒப்படைக்க அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

2017-2018 ஆம் ஆண்டு முதல் மாநில நிதியின்கீழ், பல்வேறு கட்டங்களாக ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் ஊராட்சி சாலைகளை, மாவட்ட இதர சாலைகளாக தரம் உயர்த்தும் பணியானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.1 மாநில நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

7.1.1 ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சி சாலைகளை தரம் உயர்த்துதல், மேம்படுத்துதல்

2019-2020-ல் 1,635 கி.மீ. நீளமுடைய 552 சாலைகள் நிலுவைப் பணிகளாகவும் மற்றும் புதிதாக ஒப்பளிக்கப்பட்ட 1,904.21 கி.மீ. நீளமுடைய 713 சாலைப் பணிகள் ரூ.2,276.11 கோடி மதிப்பில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரை 1,322.39 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.551.26 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020-ல் பிப்ரவரி வரை 1,455 கி.மீ. நீளச் சாலைகள் ரூ.782.35 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.1,050.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.1.2 புறவழிச் சாலைகளுக்கான நிலம் கையகப்படுத்துதல்

11 முக்கிய நகரங்களில் புறவழிச் சாலைகள் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்துவதற்காக நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு,

அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பல்லடம் மற்றும் கூத்தாநல்லூர் ஆகிய புறவழிச் சாலைகள் அமைப்பதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அவற்றில், பல்லடம் புறவழிச் சாலைக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவுற்றது. கூத்தாநல்லூர் புறவழிச் சாலைப் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை ரூ.12.74 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.105.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.2 நபார்டு கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

7.2.1 அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளில் ஆற்றுப் பாலங்கள் கட்டுதல்

இத்திட்டத்தின்கீழ், நிலுவையிலிருந்த ரூ.582.18 கோடி மதிப்பிலான 217 பாலப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மேற்கூறிய பணிகளில் 90 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 27 மாவட்டங்களைச் சார்ந்த பொதுமக்கள் பயனடைகின்றனர். மீதமுள்ள பணிகளில், 127 பாலப் பணிகள் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரை 261 பாலங்கள், சிறு பாலங்கள் ரூ.710.73 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020-ல் பிப்ரவரி வரை 90 பாலங்கள், சிறு பாலங்கள் ரூ.209.25 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.323.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

7.2.2 கிராமச் சாலைகளை மேம்பாடு செய்தல்

இத்திட்டத்தின்கீழ், நிலுவையிலிருந்த ரூ.7.94 கோடி மதிப்பிலான ஊராட்சி ஒன்றியச் சாலையில் அமைந்துள்ள அனகாபுத்தூர்-தரப்பாக்கம் பாலம் கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்பணியில் மொத்தமுள்ள 11 மேல்தளங்களில் 9 மேல்தளங்கள்

ஏற்கெனவே முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெறும் பகுதி, இந்திய விமானப் படைக்குச் சொந்தமான நிலப் பகுதியில் அமைந்துள்ளதால், அதற்கான முன்நுழைவு அனுமதி 4-11-2019 அன்று பெறப்பட்டுள்ளது. தற்போது மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.3.84 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

7.3 இரயில்வே திட்டப் பணிகள்(RWP)

இத்திட்டத்தின்கீழ், ரூ.263.35 கோடி மதிப்பில் நிலுவையிலிருந்த 13 இரயில்வே மேம்பாலங்கள், ஒரு இரயில்வே கீழ்பாலம் மற்றும் ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை ஆகியவை செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் இந்த ஆண்டில் 3 இரயில்வே மேம்பாலங்கள் முறையே, இரயில்வே கடவு எண் 309 (திண்டுக்கல் யார்டு), இரயில்வே கடவு எண் 403 (விருதுநகர்) மற்றும் இரயில்வே கடவு எண் 371 (திருப்பரங்குன்றம்) ஆகியவை ரூ.46.56 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டன. அதன்வாயிலாக திண்டுக்கல், மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டத்தைச் சார்ந்த பொதுமக்கள் பயனடைகின்றனர்.

மீதமுள்ள 12 இரயில்வே மேம்பாலங்கள், கீழ்பாலங்களில், 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சார்ந்த பீளமேட்டில் உள்ள இரயில்வே கடவு எண் 10-க்கு மாற்றாக ஒரு வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை பணியானது இரயில்வே துறையினரால் மேற்கொள்ளப்பட உள்ளது.

7.4 2019-2020-க்கான மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி வரை, புறவழிச் சாலைகளுக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கான செலவு உட்பட அனைத்து திட்டச் செலவினங்களையும் சேர்த்து ரூ.991.73 கோடி செலவிடப்பட்டுள்ளது. 1,455 கி.மீ. நீளமுள்ள 494 சாலைப் பணிகள் ரூ.782.35 கோடி செலவிலும், 90 பாலங்கள் ரூ.209.25 கோடி செலவிலும் முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.1,489.12 கோடி நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

8. திட்டங்கள் அலகு

திட்டங்கள் அலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் 4 வட்டங்கள் மற்றும் 10 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

இரயில்வே மேம்பாலம், கீழ்பாலங்கள், உயர்மட்டப் பாலங்கள், உயர்மட்ட சாலை வழித்தடம், பல்வழிச் சாலை மேம்பாலம் மற்றும் புறவழிச் சாலைகள் அமைப்பதன்மூலம் மாநிலத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் திட்டங்கள் அலகின் பிரதான பணியாகும்.

இரயில்வே கடவுகள் அடிக்கடி மூடப்படுவதனால் ஏற்படும் போக்குவரத்துத் தடைகளைக் களைவதற்கு இரயில்வே கடவுகளில் மேம்பாலங்கள், கீழ்பாலங்கள் இரயில்வே துறையுடன் ஒருங்கிணைந்து கட்டப்பட்டு வருகின்றன.

மேலும் மாநில நிதியின்கீழ், நீர்நிலைகளின் குறுக்கே பாலம் இல்லாத இடங்களில் உயர்மட்டப்பாலங்கள் அமைத்தல், பழுதடைந்த மற்றும் குறுகிய பாலங்களைத் திரும்பக் கட்டுதல், புறவழிச் சாலைகள் அமைத்தல், வட்டச் சாலைகள் மற்றும் பெருநகரங்களில் உயர்மட்ட சாலை வழித்தடம் அமைத்தல் ஆகியன இவ்வலகின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

8.1 மாநில நிதித் திட்டங்கள்

மொத்தமாக 135 பணிகளுக்கு ரூ.918.88 கோடி மதிப்பில் மாநில நிதியின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. 135 பணிகளில், 34 பணிகளுக்கு கட்டுமானப் பணிகளுக்கான நிருவாக ஒப்புதலும், மீதமுள்ள 101 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்தல் மற்றும் முதற்கட்ட பணிகளான நில எடுப்பு, பயன்பாட்டு உபகரணங்களை மாற்றியமைத்தல் மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட 34 பணிகளில், பாத்தகோட்டாவில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் ரூ.2.85 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டது. 17 பணிகள் ரூ.381.27 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 16 பணிகள் ரூ.257.98 கோடி மதிப்பில் கட்டுமானப் பணிக்கு முந்தைய பல்வேறு நிலைகளான

2020 மார்ச் 18]

ஒப்பந்தப்புள்ளி கோருதல், மதிப்பீடு மற்றும் வடிவமைப்பு தயாரித்தல் நிலைகளில் உள்ளன.

விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் முதற்கட்டப் பணிகளுக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட 101 பணிகளில், 9 பணிகளுக்கு ரூ.256.41 கோடி மதிப்பில் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 92 பணிகளுக்கு ரூ.20.37 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

2015 முதல் 2019 வரை, 5 உயர்மட்ட பாலங்கள், 2 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் ஒரு பல்வழிச் சாலை மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டுகளில் ரூ.203.60 கோடி செலவிடப்பட்டது.

2019-2020-ல் பிப்ரவரி வரை ஓர் உயர்மட்ட பாலம் ரூ.22.74 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.329.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.2 இரயில்வே திட்டப் பணிகள்

மொத்தமாக 97 பணிகள் ரூ.1,747.31 கோடி மதிப்பில் இரயில்வே திட்டப் பணிகளின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. 97 பணிகளில், 47 பணிகளுக்கு கட்டுமானப் பணிகளுக்கான நிருவாக ஒப்புதலும், மீதமுள்ள 50 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் முதற்கட்டப் பணிகள் மேற்கொள்ள நிருவாக ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட 47 பணிகளில், 4 பணிகள் ரூ.209.94 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன (அட்டவணை 8) மற்றும் 28 பணிகள் ரூ.872.59 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 15 பணிகள் ரூ.375.84 கோடி மதிப்பில் கட்டுமானப் பணிக்கு முந்தைய பல்வேறு நிலைகளில் உள்ளன.

விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் முதற்கட்டப் பணிகளுக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட 50 பணிகளில், 22 பணிகளுக்கு ரூ.280.38 கோடி மதிப்பில் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 28 பணிகளுக்கு ரூ.8.56 கோடி மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 18

அட்டவணை 8: முடிக்கப்பட்ட பணிகள்

வ. எண்	மாவட்டம்	கடவு எண் (ம) அமைவிடம்	மதிப்பு (ரூ. கோடியில்)
1	திருச்சி	228, லால்குடி	26.60
2		380 A, ஸ்ரீரங்கம்	125.00
3	வேலூர்	123, வேலூர் கண்டோண்மென்ட்	21.96
4		126 (ம) 127, வேலூர் டவுன்	36.38
		மொத்தம்	209.94

2015 முதல் 2019 வரை 21 இரயில்வே மேம்பாலங்கள், கீழ்பாலங்கள் ரூ.1,320.03 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

2019-2020-ல் பிப்ரவரி வரை 4 இரயில்வே மேம்பாலங்கள் ரூ.179.12 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.885.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8.3 2019-2020 ஆம் ஆண்டில் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி வரை மொத்தம் ரூ.201.86 கோடி செலவிடப்பட்டது.

2020-2021 ஆம் நிதியாண்டிற்கு ரூ.1,214.64 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. பெருநகர அலகு

பெருநகர அலகானது தலைமைப் பொறியாளரின்கீழ் ஒரு வட்டம் மற்றும் 5 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) போக்குவரவு மற்றும் போக்குவரத்து ஆய்வு மற்றும் இரண்டாவது விரிவான பெருந்திட்டத்தின்படி சென்னை பெருநகரைச் சுற்றியுள்ள போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, மாநில நிதி ஆதாரம்மூலம் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (CMDP) பணிகளைச் செயல்படுத்த பெருநகர அலகு அமைக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

சாலை இணைப்பு மேம்பாட்டு வசதிகளான பல்வழிச் சாலை மேம்பாலங்கள், உயர்மட்டப் பாலங்கள், சாலை/பாலங்களை அகலப்படுத்துதல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், பாதசாரிகளுக்கான நடைமேம்பாலம், ஆகாய நடைபாதை போன்ற கட்டுமானப் பணிகள் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இவ்வலகால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், இவ்வலகால் சென்னை பெருநகரப் பகுதியில் இரயில்வே திட்டப் பணிகளின்கீழ் பணப் பகிர்மான அடிப்படையில் இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்பாலங்கள் அமைத்தல்/அகலப்படுத்துதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திட்டப் பணிகளின் விவரம் பின்வருமாறு:-

9.1 மாநில நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

9.1.1 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் (CMDP)

9.1.1.1 பல்வழிச் சாலை மேம்பாலங்கள் (Grade Separators)

மேம்பாலங்கள்/பல்வழிச் சாலை மேம்பாலங்கள் அமைப்பது போக்குவரவு மற்றும் போக்குவரத்து மேலாண்மைக்கு நீண்ட கால மற்றும் நிலையான தீர்வாக அமையும்.

2019-2020 ஆம் ஆண்டில் 7 பல்வழிச் சாலை மேம்பாலப் பணிகள் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன, அவற்றின் மொத்த மதிப்பு ரூ.593.65 கோடி ஆகும். இதில் 6 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் ஒரு மேம்பாலப் பணிக்கு நில எடுப்பு நடைபெற்று வருகிறது. விவரம் அட்டவணை 9.அ-ல் பின்வருமாறு:

அட்டவணை 9. அ: பல்வழிச் சாலை மேம்பாலங்கள்

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பு (ரூ. கோடியில்)
அ. நடைபெற்றுவரும் பணிகள்		
1	ஜி.எஸ்.டி. சாலையில் பல்லாவரத்தில் சந்தை சாலை மற்றும் குன்றத்தூர் சாலை சந்திப்புகளை இணைத்து பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	82.66

[2020 மார்ச் 18

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பு (ரூ. கோடியில்)
2.	வேளச்சேரியில் விஜயநகரம் சந்திப்பில் தரமணி சாலை, தாம்பரம் வேளச்சேரி சாலை மற்றும் வேளச்சேரி புறவழிச் சாலை சந்திப்புகளை இணைத்து பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	108.00
3.	ஜவஹர்லால் நேரு சாலையில் கோயம்பேட்டில் காளியம்மன் கோயில் தெரு சந்திப்பு மற்றும் சென்னை புறநகர் பேருந்து நிலைய நுழைவுவாயில் சந்திப்புகளை இணைத்து பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	93.50
4.	மேடவாக்கத்தில், மேடவாக்கம்-சோழிங்கநல்லூர் சாலை சந்திப்பு, மேடவாக்கம்-மாம்பாக்கம் சாலை சந்திப்பு மற்றும் மவுண்ட்- மேடவாக்கம் சாலை சந்திப்புகளில் மறைமலை அடிகளார் பாலம்-இரும்புலியூர் சாலையுடன் இணைக்கும் வகையில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	146.41
5.	கீழ்கட்டளை அருகே மவுண்ட்-மேடவாக்கம் சாலை மற்றும் பல்லாவரம்-துரைப்பாக்கம் சாலை சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	64.00
6.	கொளத்தூர், இரட்டை ஏரி வலது புறத்தில் பெரம்பூர்-செங்குன்றம் சாலை மற்றும் உள்வட்டச் சாலை சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	41.08
ஆ. நில எடுப்பு நடைபெறும் பணி		
7	திருவான்மியூரில் கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் லேட்டிஸ் பாலச் சாலை சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு மட்டும்)	58.00
	மொத்தம்	593.65

2020 மார்ச் 18]

மேலும், விரிவான திட்ட அறிக்கை நிலையில் உள்ள 15 பல்வழிச் சாலை மேம்பாலப் பணிகளில், 12 பணிகள் மற்றும் மத்திய கைலாஷ் சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல் பணியும் சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டத்தில் [Chennai City Traffic Decongestion Project (CCTDP)] புதிய வளர்ச்சி வங்கியின் (NDB) நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது. மீதமுள்ள மூன்று பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

- திருவான்மியூர் சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு ரூ.219.92 கோடிக்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

- நெல்சன் மாணிக்கம் சாலையில் (பகுதி-IV) பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல் பணிக்கு வழிகாட்டுதல் குழுவின் பரிந்துரையின்படி, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அண்ணா வளைவு சந்திப்பு முதல் கோயம்பேடு சந்திப்பு வரை போக்குவரத்து நெரிசலைக் குறைக்க விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- புல்லா நிழற்சாலையில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை முடிவடைந்துள்ளது. தற்போது நில எடுப்பினால் ஏற்படும் தாக்கத்தினை மதிப்பீடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

9.1.1.2 ஆற்றுப் பாலங்கள்

2019-2020 ஆம் ஆண்டில் 3 நிலுவைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.102.04 கோடி ஆகும். ஒரு பணி நடைபெற்று வருகிறது. மேலும் இரண்டு பணிகளுக்கு நில எடுப்பு நடைபெற்று வருகிறது. விவரம் அட்டவணை 9-ஆ-ல் பின்வருமாறு:

[2020 மார்ச் 18

அட்டவணை 9.ஆ: ஆற்றுப் பாலப் பணிகள்

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பு (ரூ. கோடியில்)
அ. நடைபெற்றுவரும் பணி		
1	திருவொற்றியூர்-பொன்னேரி-பஞ்செட்டி சாலையில் கி.மீ. 0/6-ல் பக்கிங்காம்-கால்வாயின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்தல்	58.64
ஆ. நில எடுப்பு நடைபெறும் பணிகள்		
2	தேசிய நெடுஞ்சாலை 4-ல், நொளம்பூர் சாலை சந்திப்பில் கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்தல் (நில எடுப்பு மட்டும்)	36.00
3	மவுண்ட்-பூந்தமல்லி-ஆவடி சாலை கி. மீ. 14/4-லிருந்து பருத்திப்பட்டு-திருவேற்காடு நகராட்சிச் சாலையை இணைக்க கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்தல் (நில எடுப்பு மட்டும்)	7.40
	மொத்தம்	102.04

மேலும், விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ள பாடிக்குப்பம் அருகே கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணியானது CCTDP திட்டத்தில் NDB நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

9.1.1.3 புதிய இணைப்புச் சாலைகள் அமைத்தல்/சாலைகளை அகலப்படுத்துதல்

பயண நேரம், பயண தூரத்தைக் குறைக்க புதிய இணைப்புச் சாலைகள் அமைப்பது இன்றியமையாததாகும். சாலைகளின் போக்குவரத்துத் திறனை அதிகரிக்க சாலைகளை அகலப்படுத்துதல் மிகவும் அவசியமானதாகும்.

2020 மார்ச் 18]

2019-2020 ஆம் ஆண்டில் ஒரு சாலை அமைத்தல் பணியும், மூன்று சாலைப் பணிகளுக்கான நில எடுப்புப் பணியும் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றின் மதிப்பு ரூ.1,094.39 கோடி ஆகும். விவரம் அட்டவணை 9.இ-ல் பின்வருமாறு:

அட்டவணை 9.இ:சாலைப் பணிகள்

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பு (ரூ. கோடியில்)
அ. நடைபெற்றுவரும் பணி		
1.	தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலை கி.மீ. 5/450-8/080 அமைக்கும் பணி	36.69
ஆ. நில எடுப்பு நடைபெறும் பணிகள்		
2	தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலை கி.மீ. 0/0-8/4 வரை அமைத்தல் (நில எடுப்பு மட்டும்)	75.50
3	கிழக்குக் கடற்கரைச் சாலை கி.மீ. 11/8-23/2 திருவான்மியூர் முதல் அக்கரை வரை ஆறுவழிச் சாலை அமைக்கும் பணி (நில எடுப்பு மட்டும்)	778.00
4	இராஜீவ் காந்தி சாலை மற்றும் கிழக்குக் கடற்கரைச் சாலையை நீலாங்கரையில் இணைக்கும் புதிய சாலை மற்றும் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல்	204.20
	மொத்தம்	1094.39

9.1.1.4 பாதசாரிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள்:

பாதசாரிகள் சாலை சந்திப்புகளைக் கடக்கும்போது மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றனர். பாதசாரிகளுக்கான திட்டங்களை மேம்படுத்துவதன்மூலம் அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பினை அளிக்க இயலும்.

கீழ்க்கண்ட இடங்களில் நிலுவையில் உள்ள 2 பாதசாரிகள் சுரங்க நடைபாதை அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

- அண்ணா சாலையில் சின்னமலை ஏ.ஜி. சர்ச் அருகில் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைத்தல்.
- ஜி.எஸ்.டி. சாலையில் கிண்டியில் எம்.கே.என். சாலை சந்திப்பின் அருகில் பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைத்தல்.

மேற்கண்ட பணிகளுக்கான கள ஆய்வின்போது நிலத்தடியில் அமைந்துள்ள பல்வேறு பயன்பாட்டுச் சாதனங்களை மாற்றி அமைக்க இயலாததால், பாதசாரிகள் சுரங்கப்பாதை அமைப்பது சாத்தியமில்லை எனக் கண்டறியப்பட்டது. எனவே, மாற்றுப் பணிக்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மேற்கண்ட இரண்டு இடங்களிலும் நடைமேம்பாலங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், எம்.கே.என் சாலை சந்திப்பில் உள்ள பணியானது கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகால் மேற்கொள்ளப்படவுள்ளது.

சென்னை உள்வட்டச் சாலை கி.மீ. 9/300-ல் கேந்திரிய வித்யாலயா அருகில் நடைமேம்பாலம் அமைக்கும் பணி தற்போது CCTDP திட்டத்தில் NDB நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

9.1.1.5 ஆகாய நடைபாதை

ஆகாய நடைபாதை ஒரு சாலையில் இரண்டு அல்லது அதற்கு அதிகமான இடங்களை இணைக்கக்கூடிய ஓர் உயர்மட்ட நடைமேம்பாலமாகும். இது பாதசாரிகள் சாலையைப் பாதுகாப்பாகக் கடப்பதற்கு மிகச் சிறந்த தீர்வாக அமையும்.

தாம்பரத்தில் இரயில் நிலையம் மற்றும் பேருந்து நிலையங்களை இணைக்கும் வகையில் தாம்பரம்-பெரிய தெற்கத்திய சாலையில் கி.மீ. 25/6-ல் நகரும் படிக்கட்டுகளுடன்கூடிய நடைமேம்பாலம் மற்றும் ஆகாய நடைபாதை அமைக்கும் பணி நிலுவைப் பணியாக ரூ.19.75 கோடி மதிப்பில் செயலாக்கத்தில் உள்ளது.

மேலும், விரிவான திட்ட அறிக்கை நிலையிலுள்ள கிழக்கு மற்றும் மேற்குத் தாம்பரம் பகுதிகளை இணைக்கும் வகையில் நகரும் படிக்கட்டு மற்றும் பிற வசதிகளுடன்கூடிய ஆகாய நடைபாதை அமைத்தல் பணியானது தற்போது CCTDP திட்டத்தில் NDB நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

2020 மார்ச் 18]

9.1.1.6 2019-2020 ஆம் ஆண்டில் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்

கீழ்க்கண்ட 14 பணிகளுக்கு 2019-2020-ல் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன. விவரம் அட்டவணை 9.ஈ-ல் பின்வருமாறு:

அட்டவணை 9.ஈ: 2019-2020 ஆம் ஆண்டில் நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்ட பணிகள்

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பு (ரூ. கோடியில்)
அ. நில உரிமை மாற்றத்தில் உள்ள பணி		
1	கிரீன்வேஸ் சாலை (டி.ஜி.எஸ். தினகரன் சாலை) மற்றும் துர்காபாய் தேஷ்முக் சாலைகளை தமிழ்நாடு இசை கல்லூரி வழியாக இணைக்கும் ஒரு புதிய இணைப்பு சாலை அமைத்தல்	22.84
ஆ. மதிப்பீட்டு நிலையில் உள்ள பணி		
2	மவுண்ட்-பூந்தமல்லி-ஆவடி சாலை கி.மீ. 14/4-லிருந்து பருத்திப்பட்டு-திருவேற்காடு நகராட்சி சாலையை இணைக்க கூவம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்தல்	16.784
3	திருவான்மியூரில் கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் லேட்டிஸ் பாலச் சாலை சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	219.92
4	பாலவாக்கம் கிராமத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலை கி.மீ. 14/550-15/700 வரை ஆறுவழித் தடமாக அகலப்படுத்தும் பணி	15.85
5	தாம்பரம் புறவழிச் சாலை கி.மீ. 3/900-5/450 அமைத்தல்	52.61
	மொத்தம்	328.00

[2020 மார்ச் 18

மேலும், 2 பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை மற்றும் 7 பணிகளுக்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க ரூ.222.87 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, முன்னேற்ற நிலையில் உள்ளன.

விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ள பணிகள்:

- சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலையில் அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையம் இணையும் சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்.
- திருமங்கலம்-முகப்பேர் சாலையில் DAV பள்ளி மற்றும் வேலம்மாள் பள்ளி அருகே நடைமேம்பாலம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல்.

விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் நிலையில் உள்ள பணிகள்:

- திரு.வி.க. பாலம் முதல் சைதாப்பேட்டை மறைமலை அடிகளார் பாலம் வரை அடையாற்றின் கரை வழியாகச் சாலை அமைக்க விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்.
- சர்தார் பட்டேல் சாலை, அடையாறு, பசுமைவழிச் சாலை மற்றும் சாந்தோம் நெடுஞ்சாலை வழியாக ஹால்டா சந்திப்பு முதல் கலங்கரை விளக்கம் வரை போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்.
- கோடம்பாக்கம்-ஸ்ரீபெரும்புதூர் சாலையில் (வடபழனி சந்திப்பு முதல் போரூர் வரை) போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்.
- வேளச்சேரி நெடுஞ்சாலையில் (சின்னமலை முதல் வேளச்சேரி புறவழிச் சாலை சந்திப்பு வரை) போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்.

2020 மார்ச் 18]

- அம்பத்தூர் தொலைபேசி தொடர்பகம் அருகில் சென்னை-திருத்தணி-ரேணிகுண்டா சாலை மற்றும் சென்னை புறவழிச் சாலை இணையும் சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்.

- கி.மீ. 3/5 ஜி.என்.டி. சாலையில் (வால்டாக்ஸ் சாலை) பேசின் பாலம் சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்.

- டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி அருகில் வியாசர்பாடி சந்திப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்தல்.

2015 முதல் 2019 வரை 6 பல்வழிச் சாலை மேம்பாலங்கள், 6 ஆற்றுப் பாலங்கள், 1 இரயில்வே மேம்பாலம் மற்றும் 3.65 கி.மீ. நீளச் சாலைப் பணி ஆகியவை ரூ.749.78 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

9.1.1.7 சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டம் (CCTDP)

சென்னை பெருநகரப் பகுதியில் பல்வேறு சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில் 18 பணிகள் சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டத்தில் [Chennai City Traffic Decongestion Project (CCTDP)] புதிய வளர்ச்சி வங்கியின் (NDB) நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்திற்கு நிலங்களை கையகப்படுத்த முதற்கட்டமாக ரூ.1,121.57 கோடி மதிப்பில் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும், நில எடுப்பு அளவிற்கு ஏற்ப இப்பணிகள் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு கட்டமாகச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இப்பணிகள் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் நிலையிலுள்ளன. விவரம் அட்டவணை 9.உ-ல் பின்வருமாறு:

[2020 மார்ச் 18

அட்டவணை 9.உ: சென்னை போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் திட்டப் பணிகள்

வ. எண்	பணியின் பெயர்	நில எடுப்பு, மறுகுடியமர்வு மற்றும் மறு வாழ்வு மதிப்பு (ரூ.கோடியில்)
	கட்டம்-I	
1	சர்தார் படேல் சாலை மற்றும் ராஜீவ்காந்தி சாலை ஆகியவற்றை இணைக்கும் வகையில் மத்திய கைலாஷ் பகுதியில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	46.90
2	சென்னை உள்வட்டச் சாலை கி.மீ. 9/300-ல்கேந்திரியவித்யாலயாபள்ளி அருகில் நடைமேம்பாலம் அமைத்தல் (நில எடுப்பு தேவையில்லை)	--
3	கிழக்கு மற்றும் மேற்குத் தாம்பரம் பகுதிகளைத் தற்போதுள்ள பேருந்து நிலையம், தாம்பரம் இரயில் நிலையத்துடன் இணைக்கும் வகையில் நகரும் படிக்கட்டு மற்றும் பிற வசதிகளுடன்கூடிய ஆகாய நடைபாதை அமைத்தல் மற்றும் தாம்பரம் பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்தல்	6.00
4	உள்வட்டச் சாலையில் கி.மீ.12/2-13/2-ல் உள்ள இரயில்வே மேம்பாலத்தினை அகலப்படுத்துதல் (இரு ஐந்து வழித்தடம்) (நில எடுப்பு தேவையில்லை)	--
5	மாதவரம்-செங்குன்றம் சாலை கி.மீ. 4/2 மற்றும் உள்வட்டச் சாலை கி.மீ. 19/100 சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	30.51

2020 மார்ச் 18]

வ. எண்	பணியின் பெயர்	நில எடுப்பு, மறுகுடியமர்வு மற்றும் மறு வாழ்வு மதிப்பு (ரூ.கோடியில்)
6	பாடிக்குப்பம் சாலை மற்றும் பூந்தமல்லி நெடுஞ்சாலையை இணைக்கும் வகையில் கூவம் ஆற்றின் குறுக்கே உள்ள தரைப் பாலத்திற்கு பதிலாக உயர்மட்டப் பாலம் அமைத்தல்	2.00
	கட்டம்-II	
7	உள்வட்டச் சாலையில் கி.மீ. 4/4 மற்றும் பி.டி. ராஜன் சாலை சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	33.79
8	மடிப்பாக்கம் கைவேலி அருகே மறைமலை அடிகளார் பாலம்-இரும்புலியூர் சாலை கி.மீ. 6/5 இல் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	20.00
9	சேலையூர் அருகே மறைமலை அடிகளார் பாலம்-இரும்புலியூர் சாலையில் மாடம்பாக்கம் சாலை சந்திப்பு, தாம்பரம் கிழக்கு புறவழிச் சாலை மற்றும் கேம்ப் சாலை சந்திப்புகளை இணைத்து பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	103.00
10	அக்கரையில் கிழக்குக் கடற்கரைச் சாலை மற்றும் கலைஞர் கருணாநிதி சாலை சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	122.94
11	மடிப்பாக்கம் அருகே மவுண்ட்-மேடவாக்கம் சாலை மற்றும் தெற்கு உள்வட்டச் சாலை சந்திப்பில் வாகன சுரங்கப்பாதை அமைத்தல்	36.25

வ. எண்	பணியின் பெயர்	நில எடுப்பு, மறுகுடியமர்வு மற்றும் மறு வாழ்வு மதிப்பு (ரூ.கோடியில்)
12	மவுண்ட்-பூந்தமல்லி-ஆவடி சாலையில் மியாட் மருத்துவமனை முதல் முகலிவாக்கம் வரை இராமாபுரம், L&T மற்றும் DLF வழியாக பல்லடுக்கு பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	33.60
	கட்டம்-III	
13	கொரட்டூரில் சென்னை-திருத்தணி- ரேணிகுண்டா சாலை கி.மீ. 80/7-ல் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	191.00
14	சென்னை-திருத்தணி-ரேணிகுண்டா சாலை கி.மீ. 76/8 மற்றும் வானகரம்-அம்பத்தூர் சாலை கி.மீ. 6/4 சந்திப்பில் நான்கு வழித்தட பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	136.80
15	குன்றத்தூரில் கோடம்பாக்கம்-ஸ்ரீபெரும்புதூர் சாலை மற்றும் பூந்தமல்லி-குன்றத்தூர்-பல்லாவரம் சாலை சந்திப்பில் பல்வழிச்சாலை மேம்பாலம் அமைத்தல் மற்றும் ஏரிக்கரை சாலை வழியாக வெளிவட்டச்சாலையை இணைத்தல்	118.00
16	ஆவடியில் சென்னை-திருத்தணி-ரேணிகுண்டா சாலையில் மவுண்ட்-பூந்தமல்லி-ஆவடி சாலை கி.மீ. 68/2 மற்றும் கனரக வாகனத் தொழிற்சாலை சாலை கி.மீ. 69/0 சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	70.88

2020 மார்ச் 18]

வ. எண்	பணியின் பெயர்	நில எடுப்பு, மறுகுடியமர்வு மற்றும் மறு வாழ்வு மதிப்பு (ரூ.கோடியில்)
17	சென்னை - திருத்தணி - ரேணிகுண்டா சாலை (மா.நெ. 148) கி.மீ. 75/6-ல் இருவழித் தட மேம்பாலத்திற்குப் பதிலாக இரயில்வே மேம்பாலம் அமைத்தல்	13.50
18	பூந்தமல்லி-காட்டுப்பாக்கத்தில் மவுண்ட் - பூந்தமல்லி - ஆவடி சாலை, சென்னை-சித்தூர்-பெங்களூரு சாலை மற்றும் பூந்தமல்லி-குன்றத்தூர் சாலை, இணையும் சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் அமைத்தல்	156.40
	மொத்தம்	1121.57

9.2 இரயில்வே திட்டப் பணிகள் (RWP)

9.2.1 சென்னை பெருநகரப் பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள்

2019-2020 ஆம் ஆண்டில், 8 இரயில்வே மேம்பாலங்கள்/ கீழ்பாலங்கள் நிலுவைப் பணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றின் மொத்த மதிப்பு ரூ.382.35 கோடி ஆகும். இதில் 2 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் மீதமுள்ள பணிகள் முன்செயலாக்கத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன. விவரம் அட்டவணை 9.ஊ-ல் பின்வருமாறு:

TRUTH ALONE TRIUMPHS

அட்டவணை 9.ஊ: இரயில்வே மேம்பாலம் மற்றும் கீழ்பாலப் பணிகள்

வ. எண்	பணியின் பெயர்	மதிப்பு ரூ. கோடியில்
அ. நடைபெற்று வரும் பணிகள்		
1	கடவு எண்: 4-கொரட்டூர் இரயில் நிலையம் அருகில் வரையறுக்கப்பட்ட சுரங்கப்பாதை கட்டுதல்	21.96
2	கடவு எண்: 32-பெருங்களத்தூர் ரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல்	206.08
ஆ. ஒப்பந்த நிலையிலுள்ள பணி		
3	கடவு எண்: 27-குரோம்பேட்டை ராதா நகர் இரயில் நிலையம் அருகில் வரையறுக்கப்பட்ட உபயோகத்திற்கான சுரங்கப்பாதை கட்டுதல்	28.99
இ. நில எடுப்பு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பு நிலையிலுள்ள பணிகள்		
4	கடவு எண்: 14-வேப்பம்பட்டு இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல் (நில எடுப்பு)	29.50
5	கடவு எண்: 4-திருவொற்றியூர்-எண்ணூர் இரயில் நிலையங்களுக்கு அருகில் இரயில்வே கீழ்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு)	28.00
6	கடவு எண்: 6-திருவொற்றியூர்-விம்கோ நகர் இரயில் நிலையங்களுக்கு அருகில் இரயில்வே கீழ்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை)	25.50
7	கடவு எண்: 16-நந்தியம்பாக்கம்-மீஞ்சூர் இரயில் நிலையங்களுக்கு அருகில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை மற்றும் நில எடுப்பு)	28.32
8	கடவு எண்: 22-திரிசூலம் அருகில் இரயில்வே கீழ்பாலம் கட்டுதல் (விரிவான திட்ட அறிக்கை)	14.00
	மொத்தம்	382.35

2020 மார்ச் 18]

மேலும், சென்னை-திருத்தணி-ரேணிகுண்டா சாலை கி.மீ. 75/6-ல் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி தற்போது CCTDP திட்டத்தில் NDB நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

9.2.2 சென்னை பெருநகரப் பகுதிகளில் இரயில்வே மேம்பாலங்களை அகலப்படுத்துதல்:

கீழ்க்கண்ட இடத்தில் அமைந்துள்ள இரயில்வே மேம்பாலத்தின் அகலம், தற்போதைய போக்குவரத்துத் தேவைக்கு போதுமானதாக இல்லாத காரணத்தால் அகலப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- ரூ.11.03 கோடி மதிப்பில் "மவுண்ட் - பூந்தமல்லி -ஆவடி சாலையில் கி.மீ. 20/8-ல் உள்ள இரயில்வே மேம்பாலம் அகலப்படுத்துதல்" பணிக்கு ஒப்புதல் பெறப்பட்டு பணப் பகிர்மான முறையில் இரயில்வே திட்டப் பணிகளில் சேர்க்க இரயில்வே துறையின் பாரிசீலனையில் உள்ளது.

- உள்வட்டச் சாலையில் கி.மீ. 12/2-13/2-ல் உள்ள இரயில்வே மேம்பாலத்தினை இரு ஐந்துவழித் தடமாக அகலப்படுத்துதல் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பணியானது CCTDP திட்டத்தில் NDB நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட உள்ளது.

9.3 2019-2020 ஆம் ஆண்டில் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2019-2020 நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை ரூ.125.52 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2020-2021 ஆம் நிதியாண்டிற்கு ரூ.657.47 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

10. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II அலகானது திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளரின்கீழ் 2 வட்டங்கள் மற்றும் 8 கோட்டங்கள்மூலம் செயல்பட்டு வருகிறது.

[2020 மார்ச் 18

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-I-ஐ தொடர்ந்து, மாநிலத்தில் உள்ள முக்கியத்துவம் மற்றும் அதிக வாகன நெருக்கடி மிகுந்த சாலைகளை மேம்படுத்த "தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II" உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டச் செயல்பாட்டிற்காக உலக வங்கியுடன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு கடனாக ரூ.1,800 கோடியும் (300.00 மில்லியன் அமெரிக்க டாலர்), மாநில அரசின் பங்களிப்பாக ரூ.3,371 கோடியும் ஆக மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.5,171 கோடியாகும்.

இந்தத் திட்டமானது அதிக வாகன நெருக்கடி மிகுந்த 1,170.227 கி.மீ. (இ.பி.சி-427.657 கி.மீ., பி.பி.பி-145.100 கி.மீ. மற்றும் ஒ.பி.ஆர்.சி.-597.470 கி.மீ.) நீள்முள்ள சாலை தொடர்களின் மேம்பாடு மற்றும் பராமரிப்பை உள்ளடக்கியதாகும்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II ஆனது, சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் மட்டுமின்றி, இத்துறையின் நிறுவனத்திறன் மேம்பாட்டுத் திட்டம் (ரூ.66 கோடி) மற்றும் மாநிலத்தின் சாலைப் பாதுகாப்பு (ரூ.120 கோடி) நடவடிக்கைகளை செயல்படுத்துகிறது.

நிலம் கையகப்படுத்துதல் பணிகளையும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பணிகளையும் மேற்கொள்ள மூன்று தனி மாவட்ட வருவாய் அலுவலர் அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பணியின் செயல்பாடுகள் ஆலோசகர்மூலம் மேற்பார்வையிடப்பட்டு வருகிறது. இதற்காக தனியாக ஒரு மென்பொருள் C.M.I.S. உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது சுற்றுப்புறச்சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

10.1 திட்டக் கூறுகள்

வ. எண்	கூறுகள்	நீளம் (கி.மீ-ல்)	தொகை (கோடியில்)
1.	தரம் உயர்த்தப்படவுள்ள சாலைப் பணிகள் பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC ஒப்பந்தம்)	427.657	2414.28

2020 மார்ச் 18]

வ. எண்	கூறுகள்	நீளம் (கி.மீ-ல்)	தொகை (கோடியில்)
2.	தரம் உயர்த்தப்படவுள்ள சாலைப் பணிகள் பொது மற்றும் தனியார் பங்களிப்பு ஒப்பந்தம் (PPP)	145.100	1499.06
3	வெளித் திறன் மற்றும் செயல்பாடு அடிப்படையிலான சாலைப் பராமரிப்பு (OPRC)	597.470	239.00
4	ஆலோசகரின் சேவை		132.71
5	சாலைப் பாதுகாப்பு		120.00
6	நிறுவனத்திறன் மேம்பாட்டுத் திட்டம்		66.00
7	பிற செயல்பாடுகள்		6.95
8	நிலம் கையகப்படுத்துதல் (LA) மற்றும் மறுவாழ்வு மறுகுடியமர்வு (R&R)		693.00
	மொத்தம்	1170.227	5171.00

இந்தத் திட்டங்களானது புதிய ஒப்பந்த முறைகளான, பொறியியல் கொள்முதல் (ம) கட்டுமானம், பொது (ம) தனியார் பங்களிப்பு மற்றும் வெளித்திறன் (ம) செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்மூலம் செயல்படுத்தப்படுகிறது.

10.2 பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்பு

பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம் (EPC) முறையில் ரூ.1,704.91 கோடி செலவில் 427.657 கி.மீ. நீளம் கொண்ட 10 தொகுப்பு சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 9 தொகுப்புப் பணிகள் முடிக்கப்பட்டு, 5 ஆண்டு காலப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீதமுள்ள ஒரு தொகுப்புப் (EPC 04) பணியினை செயலாக்கம் செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி மீண்டும் கோரப்பட்டுள்ளது.

[2020 மார்ச் 18

10.3 வெளித்திறன் மற்றும் செயல்பாட்டு அடிப்படையிலான சாலைப் பராமரிப்பு ஒப்பந்தப் பணிகள் (OPRC)

தொகுப்பு எண்	பணியின் பெயர்	நீளம் (கி. மீ.-ல்)	தொகை (கோடியில்)	தற்போதைய நிலை
ஓபிஆர்சி -1	ஆற்காடு- திருவாரூர் சாலை	265.300	94.12	5-வது ஆண்டுக்கான பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஜனவரி மாதம் 2021-ல் முடிக்கப்படும்.
ஓபிஆர்சி -2	நாகப் பட்டினம்- தூத்துக்குடி சாலை	316.193	125.96	
மொத்தம்		581.493	220.08	

10.4 பொது மற்றும் தனியார் பங்களிப்பு முறையில் மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் (PPP)

தொகுப்பு எண்	பணியின் பெயர்	நீளம் (கி.மீ.-ல்)	மதிப்பு (ரூ. கோடியில்)	குறிப்பு
பிபிபி-01	கோபி-ஈரோடு சாலை (மா. நெ.15) கி.மீ. 123/0 முதல் 153/6 வரை	30.600	280.00	ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது
பிபிபி-02	ஒட்டன்சத்திரம் -தாராபுரம்- திருப்பூர் சாலை (மா.நெ.37) கி.மீ. 37/4 முதல் 108/4 வரை	70.200	713.45	பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது

2020 மார்ச் 18]

தொகுப்பு எண்	பணியின் பெயர்	நீளம் (கி.மீ.-ல்)	மதிப்பு (ரூ. கோடியில்)	குறிப்பு
பிபிபி-03	திருநெல்வேலி-தென்காசி சாலை (மா. நெ.39) கி.மீ. 5/0 முதல் கி.மீ. 50/6 வரை	45.640	426.20	ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது
	மொத்தம்	146.440	1419.65	

10.5 ஆலோசகர்கள் நியமனம்

10.5.1 உலக வங்கி நிதி உதவி

மேற்கண்ட 10 பொறியியல் கொள்முதல் மற்றும் கட்டுமான முறை ஒப்பந்தத் தொகுப்புகளை மேற்பார்வை செய்ய மூன்று ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் தொகுப்பு எண் இ.பி.சி.-04 ஆலோசகர் நியமனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வெளித்திறன் மற்றும் செயல்பாடு ஒப்பந்த முறைமூலம் நடைபெறும் 2 பணிகளைக் கண்காணிக்க ஓர் ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். பிபிபி-02 பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பணிகளைக் கண்காணிக்க ஒரு தற்சார்பு பொறியாளர் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார். மேலும், இரண்டு பிபிபி பணிகளை கண்காணிக்க, தற்சார்பு பொறியாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

10.5.2 TNIDB நிதி உதவி

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II-ன் மூலமாக 3,319 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்காக TNIDB நிதியில் ரூ.132.76 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 1,181.635 கி.மீ. நீளமுள்ள சாலைகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இவற்றில் 109 கி.மீ. நீளமுள்ள சாலைகள் உலக வங்கியின் கூடுதல் நிதி உதவியுடன் செயலாக்கப்படும்.

[2020 மார்ச் 18

10.6 பணிகள் - உலக வங்கியின் கூடுதல் நிதி உதவி

109 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலை மற்றும் முக்கிய மாவட்டச் சாலைகள் தேர்வு செய்யப்பட்டு உலக வங்கியின் கூடுதல் நிதி உதவியுடன் செயலாக்கப்படும் பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:

வ. எண்	பணியின் பெயர்	நீளம் (கி. மீ.-ல்)
கட்டம்-I		
1	நான்குவழிச் சாலை மற்றும் உறுதிப்படுத்துதல்-ஓமலூர்-மேச்சேரி-மா. நெ. 222 (கி.மீ. 0/0-கி.மீ. 14/6)	14.6
2.	அகலப்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்துதல்-ஆத்தூர்-மல்லியக்கரை சாலை-மா.நெ. 30 (கி.மீ. 81/054-கி.மீ. 89/250)	8.196
3.	நான்குவழிச் சாலை மற்றும் உறுதிப்படுத்துதல் சித்தோடு-ஈரோடு சாலை-மா.நெ. 15 (கி.மீ. 153/600-கி.மீ. -161/620)	8.02
	மொத்தம் (அ)	30.816
கட்டம்-II		
1.	நான்குவழிச் சாலை மற்றும் உறுதிப்படுத்துதல்-காஞ்சிபுரம்- வந்தவாசி சாலை முதல் செய்யாறு சிறப்புப் பொருளாதார மண்டலம் வரை மா.நெ. 116 (கி.மீ. 2/915-கி.மீ. 14/112) மற்றும் மா.நெ. 116, மா.நெ. 05 ஆகியவற்றை இணைக்கும் வந்தவாசி புறவழிச் சாலை (கடினதள புருவங்களுடன்கூடிய இருவழிச் சாலை) (கி.மீ. 36/457 முதல் கி.மீ. 39/829) உட்பட மற்றும் நான்குவழி காஞ்சிபுரம் -திருவத்திபுரம் சாலை (0/0-2/6) மா.நெ. 5 அ	17.169

2020 மார்ச் 18]

வ. எண்	பணியின் பெயர்	நீளம் (கி. மீ.-ல்)
2.	ஈரோடு-சென்னிமலை-மு.மா.சா.-108 (கி. மீ. 0/0-கி.மீ. 24/0)	24.00
3.	அரியலூர்-ரெட்டிபாளையம் மா.நெ. 139 (கி.மீ. 0/0-கி.மீ.12/3)	12.30
4.	ஆற்காடு-ஆரணி சாலை-மா.நெ. 4 (கி.மீ. 0/000-கி.மீ. 24/600)	24.60
	மொத்தம் (ஆ)	78.069
	மொத்தம் (அ + ஆ)	108.885

10.7 நிலம் கையகப்படுத்துதல், (LA), மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு (R&R)

நில எடுப்பினால் பாதிக்கப்படும் மக்களுக்கு, நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டம், 2013 (RFCTLARR) மற்றும் உலக வங்கியின் செயல்பாட்டு வழிகாட்டுதல் கொள்கை இவற்றின் அடிப்படையில் உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கிட ஏதுவாக, மீள்குடியேற்றக் கொள்கை கட்டமைப்பிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தக் கொள்கை கட்டமைப்பின் நோக்கமானது பாதிக்கப்பட்டோர் குறித்த கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார கணக்கீடு மற்றும் இழப்பீடு உரிமை கணக்கீட்டு அட்டவணை தயாரித்தல் ஆகும். இந்த அட்டவணை அரசின் ஒப்புதல் பெற்று பொதுப் பார்வைக்காக வெளியிடப்படுகிறது. இதன் அடிப்படையில் திட்டத்திற்கான ஒவ்வொரு சாலைப் பணிக்கும் தனித்தனியாக மீள்குடியேற்ற செயல் திட்டம் தயாரிக்கப்பட்டு, உலக வங்கியின் ஒப்புதலுடன் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது.

10.8 நிறுவனத்திறன் மேம்பாடு மற்றும் சாலைப் பாதுகாப்புக் குழுமம் (ICERS)

10.8.1 நிறுவனத்திறன் மேம்பாடு (ICE)

1. மேற்பார்வை மற்றும் ஆய்வுத் தகவல் அமைப்புகள் (சாலைப் பயனாளிகள் மனநிறைவு ஆய்வு, இதர அமைப்புகள்).

[2020 மார்ச் 18

2. செயல்முறை மேம்பாடு மற்றும் அமைப்பு முறை சீரமைத்தல்.

3. தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொலைத்தொடர்பு அமைப்புகள் (e-pathai) மேம்படுத்துதல்.

4. மனிதவள மேம்பாடு (பயிற்சிகள்).

10.8.1.1 நிறுவனத்திறன் மேம்பாடுக் கூறுகள்

- 250 நெடுஞ்சாலைப் பொறியாளர்களுக்கு, அண்ணா மேலாண்மை நிறுவனம்மூலம் பயிற்சி வழங்கும் பணி நிறைவடைந்துள்ளது.
- தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்-II சாலைப் பயனாளர்களின் மனநிறைவு குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- நெடுஞ்சாலைக் கையேடுகள் திருத்தி மேம்படுத்தும் பணி எடுத்துகொள்ளப்பட்டு, ஜூன் 2020-க்குள் முடிவடையும்.
- புதிதாக நிறுவப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிறுவனப் பயிற்சி மையத்தின் மூலமாக முறையான பயிற்சி வழங்கத் தேவையான ஆவணங்கள் மற்றும் ஆய்வுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.
- தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம், 2001 மற்றும் விதிகள், 2003 திருத்தி மேம்படுத்தும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஆலோசகர் நியமிக்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- இத்துறைக்குத் தேவையான கணினிகள் Electronics Corporation of Tamil Nadu (ELCOT) மூலம் கொள்முதல் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டன.
- தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொலைத்தொடர்பு மேலாண்மை ஆலோசகர் நியமிக்கப்பட்டு, e-pathai 2.0 அமைப்பில் பணிகள் மேலாண்மை அமைப்பு அமைக்க பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.
- இத்துறைக்குத் தேவையான கணினி மற்றும் மென்பொருட்கள் மதிப்பீடு ஆலோசகரால் தயாரிக்கப்பட்டு விரைவில் கொள்முதல் செய்யப்பட உள்ளது.

2020 மார்ச் 18]

10.8.2 சாலைப் பாதுகாப்பு (RS)

1. மாநில அளவில்-செயல்முறை வியூகம் ஆலோசனை உதவி.
2. மாநில அளவில்-செயலாக்க உதவி.
3. காஞ்சிபுரம் மாவட்ட அளவில் முன்முயற்சிகள்.
4. இரண்டாவது மாவட்ட அளவில் முன்முயற்சிகள் - திருவண்ணாமலை
5. சாலை வழித்தட முயற்சிகள்.

10.8.2.1 சாலைப் பாதுகாப்புக் கூறுகள்

- பல்வேறு சாலைப் பாதுகாப்புப் பணிகளைச் செயல்படுத்த, சாலைப் பாதுகாப்பு மேலாண்மைக் குழுவிற்கு ஆலோசனை வழங்க மேலாண்மை ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள சுமார் 1,487 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் சாலைப் பாதுகாப்புத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்பின் சுமார் 528 கி.மீ. நீளத்திற்குச் சர்வதேச சாலை மதிப்பீடு (iRAP) ஆய்வு நடத்தப்பட்டு, 95.60 கி.மீ. நீளச் சாலைகள் (காஞ்சிபுரம் 30.80 கி.மீ. மற்றும் திருவண்ணாமலை 64.80 கி.மீ.) இந்த மாவட்டங்களில் மாதிரி வழித்தடச் சாலைத் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு, களஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

- கிழக்குக் கடற்கரை சாலையில் பொருத்தப்பட உள்ள தானியங்கி வேகக் கட்டுப்பாட்டு அமலாக்கம் மற்றும் போக்குவரத்து மேலாண்மை அமைப்புக்கான கொள்முதல் (இரண்டாவது முறை) பணி தற்போது முன்னேற்ற நிலையில் உள்ளது.

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் அவசர விபத்து சிறப்பு சிகிச்சை மையத்திற்கான உபகரணங்கள் கொள்முதல் தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளன.

- சுகாதாரத் துறைமூலம் விபத்தின்போது முதலுதவி அளிக்க சாலை ஓரம் உள்ளவர்களுக்கு சுமார் 3,457

நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கான மேம்படுத்தப்பட்ட அவசர சிகிச்சைப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

- அவசர கால சிகிச்சையை மேம்படுத்துவதற்காக 108 மருத்துவ அவசர ஊர்தியின் இயங்குநிலை சீராக செய்ய, தரவு பகுப்பாய்விற்கான ஆலோசனை சேவைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

- திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்ள அவசர விபத்து சிறப்புச் சிகிச்சை மையத்திற்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்ய பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன.

- காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு உண்டாக்க ஆலோசகர் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

- காவல் துறையினரின் சாலைப் பாதுகாப்பு அமலாக்கம் தொடர்பான வாகனம் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் மேற்கொள்ள பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

- சி.ஆர்.ஆர்.ஐ., ஐ.ஆர்.டி.இ. மற்றும் அண்ணா மேலாண்மை நிலையம்மூலம் போக்குவரத்து அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், நெடுஞ்சாலைப் பொறியாளர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் எனப் பல்வேறு பங்களிப்பாளர்களுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

- 200 நெடுஞ்சாலைப் பொறியாளர்களுக்கு சாலைப் பாதுகாப்புத் தணிக்கை மற்றும் iRAP சர்வே பயிற்சி இந்த ஆண்டில் அளிக்கப்படும். 25 போக்குவரத்து அதிகாரிகள் மற்றும் 150 காவல் துறை அதிகாரிகளுக்கு சாலைப் பாதுகாப்பு குறித்த பயிற்சி இந்த ஆண்டில் அளிக்கப்படும்.

10.9 2019-2020 ஆம் ஆண்டில் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

மேற்படி திட்டங்களுக்காக 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.459.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.307.815 கோடி பிப்ரவரி முடிய செலவிடப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

இதுவரை மேற்கண்ட திட்டங்களின்மூலம் பிப்ரவரி வரை செலவு செய்யப்பட்ட ஒட்டுமொத்த தொகை ரூ.2,705.269 கோடி ஆகும்.

2020-2021 ஆம் நிதியாண்டிற்கு மொத்த நிதி ஒதுக்கீடாக ரூ.614.06 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

11. சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம்

சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம் திட்ட இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளரின்கீழ் 2 வட்டங்கள், 6 கோட்டங்கள் மற்றும் 5 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்களுடன் செயல்பட்டு வருகிறது.

பொருளாதார தொழில் துறை வளர்ச்சிகளுக்காக மாநில, மத்திய நிதியுதவி மற்றும் இதர வெளிநிதி ஆதாரத்துடன் பல்வேறு வகையான சாலை உட்கட்டமைப்பு வசதிகளை நெடுஞ்சாலைத் துறை செயல்படுத்தி வருகின்றது. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான மத்திய அரசின் தொழிற்கொள்கை மற்றும் வளர்ச்சித் துறையால் அறிவிக்கப்பட்ட ஐந்து தொழிற்தடங்களில், கிழக்குக் கடற்கரை தொழிற்தடம் ஒன்றாகும். இதில், சென்னை கன்னியாகுமரி தொழிற்தடம் ஓர் அங்கமாகும். மத்திய அரசு இத்திட்டங்களை, ஆசிய வளர்ச்சி வங்கியின் கடனுதவியுடன் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியால் தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தில், தொழிற்சாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, துறைமுகங்கள், சாலைகள், இரயில்வே, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளின் மேம்பாட்டின் வாயிலாக சீரிய போக்குவரத்து மற்றும் போக்குவரத்து மேலாண்மைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மேம்படுத்தப்பட்ட நகர்ப்புறம், நீர் வழங்கல், மின்சாரம் மற்றும் திறன்மேம்பாடு ஆகியவற்றின்மூலம் உற்பத்தியை உயர்த்தவும் இதில் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சாலை மேம்பாட்டுப் பிரிவின்கீழ், சென்னை கன்னியாகுமரி தொழிற்தடப் பகுதியில் உள்ள 13 கடலோர மாவட்டங்கள் மற்றும் 11 உட்புற மாவட்டங்களில் 4,318 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் 3,729 கி.மீ. மாநில நெடுஞ்சாலைகள் என மொத்தம் 8,047 கி.மீ. சாலைகள் கண்டறியப்பட்டுள்ளன. இச்சாலைகளை 6 கட்டங்களாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம் உற்பத்தி துறையின் பங்கை அதிகரித்தல், சமமான வளர்ச்சியை

ஊக்குவித்தல் மற்றும் தெற்கு மாவட்டங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை கருத்தில்கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. சென்னை கன்னியாகுமரி தொழிற்தட பயன்விளைப் பகுதியில் சாலை உட்கட்டமைப்பை மேம்படுத்தும் விதமாக 15 மாநில நெடுஞ்சாலைகள் இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் 20 மாவட்டங்களில் உள்ள 12 தேசிய நெடுஞ்சாலைகள் முறையே தே.நெ. 32 (சென்னை-தூத்துக்குடி), தே.நெ.132 (திண்டிவனம்- விழுப்புரம்), தே.நெ. 38 (வேலூர்-விழுப்புரம்-திருவண்ணாமலை-திருச்சிராப்பள்ளி-மதுரை-அருப்புக்கோட்டை-தூத்துக்குடி), தே.நெ. 138 (தூத்துக்குடி-திருநெல்வேலி), தே.நெ. 83 (திண்டுக்கல்- பெங்களூரு), தே.நெ.36 (விக்கிரவாண்டி - கும்பகோணம் - தஞ்சாவூர் - புதுக்கோட்டை-சிவகங்கை-மானாமதுரை), தே.நெ. 136 (தஞ்சாவூர்-திருவையாறு-பெரம்பலூர்-ஆத்தூர்), தே.நெ. 536 (திருமயம்-இராமநாதபுரம்), தே.நெ.44 (பெங்களூரு-கிருஷ்ணகிரி-தருமபுரி-சேலம்-நாமக்கல்-கரூர்-திண்டுக்கல்-மதுரை-திருநெல்வேலி-கன்னியாகுமரி), தே.நெ. 544 (சேலம்-கோயம்புத்தூர்-கொச்சின்), தே.நெ. 48 (சென்னை -கிருஷ்ணகிரி), தே.நெ. 716 (சென்னை-திருப்பதி-ரேணிகுண்டா-த.நா./ஆ.பி. எல்லை) மற்றும் பல்வேறு மாநிலச் சாலைகளையும் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

11.1 மேம்படுத்தப்படவுள்ள சாலைகள்

முதற்கட்டமாக, கீழ்க்காணும் 15 சாலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

வ. எண்	பகுதி	மொத்த நீளம் (கி.மீ.)	கட்டுமானத் தொகை (ரூ. கோடி)	நில எடுப்புத் தொகை (ரூ. கோடி)	திட்டமிடப் பட்டுள்ள மேம்பாடு
1	செய்யூர் (கிழக்குக் கடற்கரைச் சாலை) வந்தவாசி-போளூர் சாலை (மா.நெ. 115)	110.00	529.96	64.70	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்

2020 மார்ச் 18]

வ. எண்	பகுதி	மொத்த நீளம் (கி.மீ.)	கட்டுமானத் தொகை (ரூ. கோடி)	நில எடுப்புத் தொகை (ரூ. கோடி)	திட்டமிடப் பட்டுள்ள மேம்பாடு
2	செங்கல்பட்டு முதல் காஞ்சிபுரம் சாலை (மா.நெ. 58)(30/0-63/450) மிலிட்டரி சாலை கி.மீ. 0/0-6/310 உள்ளிட்ட	39.75	419.95	68.85	நான்கு வழித் தடம்
3	செங்கல்பட்டு -காஞ்சிபுரம் - திருத்தணி சாலை (66/940-108/720) (மா. நெ. 58)	41.78	389.95	67.00	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
4	திருச்செந்தூர் முதல் அம்பா சமுத்திரம் வழி பாளையங் கோட்டை (மா. நெ. 40)	74.90	407.64	31.09	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
5	மேலூர் முதல் காரைக்குடி வழி திருப்பத்தூர், குன்றக்குடி (மா. நெ. 191 மற்றும் மா. நெ. 191 A)	46.90	213.71	16.34	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
6	தஞ்சாவூர் முதல் மன்னார்குடி (மா.நெ. 63)	27.59	143.63	10.95	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்

வ. எண்	பகுதி	மொத்த நீளம் (கி.மீ.)	கட்டுமானத் தொகை (ரூ. கோடி)	நில எடுப்புத் தொகை (ரூ. கோடி)	திட்டமிடப் பட்டுள்ள மேம்பாடு
7	கும்பகோணம் முதல் மன்னார்குடி (மா.நெ. 66)	34.26	177.90	13.56	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
8	கும்பகோணம் முதல் சீர்காழி (மா.நெ. 64)	38.07	307.49	145.22	கடின புருவங் களுடன் கூடிய இருவழி/ நான்கு வழித்தடம்
9	மயிலாடுதுறை முதல் திருவாரூர் (மா.நெ. 23)	31.28	199.04	137.16	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
10	துறையூர் முதல் பெரம்பலூர் (மா. நெ. 142)	31.49	107.41	25.00	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
11	விருத்தாசலம் முதல் உளுந்தூர் பேட்டை (மா. நெ. 69)	20.88	114.92	21.00	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்

2020 மார்ச் 18]

வ. எண்	பகுதி	மொத்த நீளம் (கி.மீ.)	கட்டுமானத் தொகை (ரூ. கோடி)	நில எடுப்புத் தொகை (ரூ. கோடி)	திட்டமிடப் பட்டுள்ள மேம்பாடு
12	கடலூர் முதல் மடப்பட்டு சந்திப்பு (மா. நெ. 9)	40.60	379.16	284.16	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
13	மோகனூர்- நாமக்கல்- சேந்தமங்கலம் -ராசிபுரம் சாலை (மா.நெ. 95)	46.44	249.32	162.42	கடின புருவங் களுடன் கூடிய இருவழித் தடம்
14	திருச்செங்கோடு முதல் ஈரோடு (மா நெ 79)	10.27	205.59	115.12	நான்கு வழித் தடம்
15	ஓமலூர் முதல் திருச்செங்கோடு வழி சங்ககிரி திருச்செங்கோடு புறவழிச் சாலையுடன் (மா.நெ. 86)	54.80	539.17	411.52	கடின புருவங் களுடன் கூடிய இருவழி/ நான்கு வழித்தடம்
	மொத்தம்	649.01	4384.84	1574.09	

இத்திட்டத்தின், நில எடுப்புக்கான ரூ.1,574 கோடியையும் உள்ளடக்கி மொத்த மதிப்பு ரூ.6,448 கோடி ஆகும். நில எடுப்புச் செலவானது மாநில அரசால் ஏற்கப்படும். மொத்த கட்டுமானச் செலவில் 484 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.3,484 கோடி) ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடனும், மீதமுள்ளவை மாநில அரசின் நிதி மூலமாகவும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் நிருவாக ஒப்புதல் மார்ச் 2018-ல் வழங்கப்பட்டு, நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

11.2 திட்டத்திற்கான முதற்கட்ட நடவடிக்கைகள்

இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்ட இயக்குநர் தலைமையின்கீழ், திட்ட செயல்பாட்டு அலகு உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த, தலைமைப் பொறியாளர் மற்றும் இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள் உள்ளிட்ட 297 அலுவலர்களைக் கொண்ட தனி பொறியியல் பிரிவு மற்றும் நிலம் கையகப்படுத்தும் பணிகளை மேற்கொள்ள 5 சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர்கள் உள்ளிட்ட 338 அலுவலர்கள் கொண்ட நில எடுப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. திட்டச் செயல்பாட்டு அலகு ஆகஸ்ட் 2018 முதல் தோற்றுவிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள 15 சாலைகளுக்கான விரிவான திட்ட அறிக்கை ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆய்வுக்கு மார்ச் 2020-க்குள் அனுப்பப்படவுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகளின்படி, இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் மின்னணு கொள்முதல் மூலமாக, "பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமானம்" ஒப்பந்த முறையில், செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்திற்காக ஆசிய வளர்ச்சி வங்கியுடனான கடன் ஒப்பந்தத்தினை 2020 மூன்றாம் காலாண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் சமூகப் பாதுகாப்புக் கொள்கையின்படி மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு பணிகளுடன் சாலைப் பாதுகாப்பு, திட்ட கட்டுமானப் பணியாளர்கள் உடல்நலம் மற்றும் பணியிடத்தில் சுகாதாரம் குறித்த சமூக விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ள 2 ஆலோசக நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பணிகளை மேற்கொள்ளும் ஆலோசகர்களின் பணிகளை மேற்பார்வையிடவும், மதிப்பீடு செய்யவும் ஆசிய வளர்ச்சி வங்கியின் கொள்கையின்படி ஓர் ஆலோசகர் நியமிக்கப்பட்டுள்ளார். நியாயமான இழப்பீடு, வெளிப்படையான நில எடுப்பு, மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைகள் சட்டம் (RFCTLARR Act) 2013-ன்படி பாதிக்கப்பட்ட மக்களுக்கு, உரிய இழப்பீடு மற்றும் மறுகுடியமர்வு பயன்கள் சென்றடைவதை உறுதி செய்வதும் இவ்வாலோசகர்களின் பணியாகும். மேலும், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு திட்டத்தைச் சீராக செயல்படுத்துவது அவர்களின் கடமையாகும்.

இத்திட்டத்தைத் திறம்படச் செயல்படுத்த, ஆசிய வளர்ச்சி வங்கி விதிமுறைகளின்படி கட்டுமான மேற்பார்வை ஆலோசகர்களை

2020 மார்ச் 18]

நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 15 திட்டச் சாலைகளை 5 தொகுப்புகளாகப் பிரித்து 5 ஆலோசகர்களை நியமிப்பதற்கான அனுமதி, ஆசிய வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறப்பட்டுள்ளது. கட்டுமான மேற்பார்வை ஆலோசகர்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

திட்டச் சாலைகள் தொடர்பான நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆசிய வளர்ச்சி வங்கியின் சமூகப் பாதுகாப்பு விதிமுறைகளின்படி இத்திட்டத்தில் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு உரிமைகளைப் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 321 கிராமங்களில் இருந்து 381 நில பாகங்கள் கொண்ட 462.94 ஹெக்டேர் தனியார் நிலம் கையகப்படுத்தப்படவுள்ளது. நில எடுப்புப் பணிகள் துரிதமாக நடைபெற ஏதுவாக தனிப் பேச்சுவார்த்தை முறை மூலமாகவும் நிலம் கையகப்படுத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்படவுள்ளது.

2019-2020 ஆம் ஆண்டின் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2019-2020 நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை ரூ.13.84 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.3 சென்னை எல்லைச் சாலைத் திட்டம் (CPRR)

தொலைநோக்குத் திட்டம் 2023-ல் உள்ளடங்கிய சென்னை எல்லைச் சாலைத் திட்டம், சென்னையின் 4 முக்கிய ஆர அமைப்பு (ரேடியல்) இணைப்புச் சாலைகளான தேசிய நெடுஞ்சாலைகள் NH-16 (சென்னை-கொல்கத்தா நெடுஞ்சாலை), NH-716 (சென்னை-திருப்பதி நெடுஞ்சாலை) NH-48, (சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலை), NH-32 (சென்னை-திருச்சி நெடுஞ்சாலை) ஆகியவற்றை இணைக்கும் வகையில் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டமானது நெடுஞ்சாலைகள் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துதல், துறைமுக இணைப்பை ஏற்படுத்துதல் மற்றும் திறமையான வர்த்தகப் போக்குவரத்தை உறுதிசெய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.

[2020 மார்ச் 18

சென்னை எல்லை சாலைத் திட்டமானது எண்ணூர் துறைமுகத்தில் தொடங்கி மாமல்லபுரத்திற்கு அருகிலுள்ள பூஞ்சேரி சந்திப்பில் முடிவடைகிறது. இதன் நீளம் 133.38 கி.மீ. ஆகும். இது 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சுமார் ரூ.12,301 கோடி செலவில் செயல்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பிரிவு	தொடக்கம்	முடிவு	நீளம் (கிமீ)
1	எண்ணூர் துறைமுகம்	சென்னை-கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை 16-ல் உள்ள தச்சூர்	25.11
2	சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை 16-ல் உள்ள தச்சூர்	சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலை 716-ல் உள்ள திருவள்ளூர் புறவழிச் சாலையின் தொடக்கம்	26.40
3	சென்னை-திருப்பதி தேசிய நெடுஞ்சாலை 716-ல் உள்ள திருவள்ளூர் புறவழிச் சாலையின் தொடக்கம்	சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை 48-ல் உள்ள ஸ்ரீபெரும்புதூர்	30.60
4	சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை 48-ல் உள்ள ஸ்ரீபெரும்புதூர்	சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை 32-ல் உள்ள சிங்கபெருமாள் கோயில்	23.80
5	சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலை 32-ல் உள்ள சிங்கபெருமாள் கோயில்	கிழக்கு கடற்கரை சாலையில் மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள பூஞ்சேரி சந்திப்பு	27.47

திட்ட நேர்பாடு, 97.47 கி.மீ. புதிய சாலையாகவும், 35.91 கி.மீ. தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்தும் வகையிலும் அமையவுள்ளது. இத்திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்துவதற்கென நிலம் கையகப்படுத்தும் பணிக்கு அரசு 101 பணியிடங்கள், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில்

மறுகுடியமர்வு அலுவலர் (ReSettlement Officer), தாசில்தார் மற்றும் துணைப் பணியாளர்களுடன் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் பிரிவு 1-ஐ (எண்ணூர் துறைமுகம் முதல் தச்சூர் வரை) தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் செயல்படுத்த 245.25 ஹெக்டர் நில ஆர்ஜிதப் பணிகளுக்கு, ரூ.951 கோடி நிருவாக ஒப்புதல் அரசால் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிரிவு 1-ஐ செயல்படுத்த ரூ.2,673.42 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிதி நிறுவனத்துடன் (JICA) 40,074 மில்லியன் ஜப்பான் யென்னிற்கான (ரூ.2,473.70 கோடி) கடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்கத்திற்கு மேற்பார்வை ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

சென்னை எல்லை சாலைத் திட்டத்தின் 2, 3 மற்றும் 5 பிரிவுகளுக்கு 558.53 ஹெக்டர் நிலத்தினை கையகப்படுத்துவதற்காக ரூ.2,603.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணிகள் தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பிரிவு 2 மற்றும் 3-ஐ செயல்படுத்த ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank) மற்றும் பன்னாட்டு மேம்பாட்டிற்கான எண்ணெய் மற்றும் பெட்ரோலியம் ஏற்றுமதி நாடுகளின் நிதி நிறுவனம் (OPEC Fund for International Developement) ஆகிய வங்கிகளை அணுகி, இந்தியப் பொருளாதார விவகாரத் துறையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவ்வங்கிகளுடன் 478.07 மில்லியன் அமெரிக்க டாலருக்கு (ரூ.3,346.49 கோடி) கடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது. கட்டுமானப் பணிகளை 2020-2021-ல் துவங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.1,200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமானது, இயக்குநர் தலைமையின்கீழ் ஓர் இணை இயக்குநர், நான்கு துணை இயக்குநர்கள் மற்றும் எட்டு கோட்டப் பொறியாளர்கள் ஆகியோரைக் கொண்டு ஆராய்ச்சி மற்றும் தரக் கட்டுப்பாடு அலகாக செயல்பட்டு வருகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையமானது 1957-ல் நிறுவப்பட்டு, தமிழக நெடுஞ்சாலைத் துறையின் பெருமைக்குச் சான்றாக, ஆசிய அளவில் முன்னோடியான தனித்துவம் கொண்ட ஆராய்ச்சி நிலையமாக இயங்கி வருகிறது. சாலையின் அனைத்து வகை போக்குவரத்தும் பாதுகாப்பாகவும், விரைவாகவும், சிக்கனமாகவும் மற்றும் இலகுவாகவும் பயணிக்க ஏதுவாக சாலைகளை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக இருந்து வருகிறது. சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு புதிய கட்டுமானப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் குறித்த தொடர் ஆராய்ச்சிகளையும் இந்நிலையம் மேற்கொண்டு வருகிறது, மேலும், களத்தில் ஏற்படும் தொழில்நுட்ப சவால்களுக்கான தீர்வு மற்றும் வழிகாட்டல்களும் வழங்கப்படுகின்றன. விபத்துகளைக் குறைப்பதற்கான தீர்வுகளை வழங்குதல், பணிகளின் அனைத்து நிலைகளிலும் தரத்தினை உறுதிசெய்தல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் ஏனைய குறிக்கோள்களாகும்.

12.1 தரக் கட்டுப்பாடு

பணிகளின் தரத்தைக் கண்காணிக்க பணியின் ஒவ்வொரு நிலையிலும், பொருட்கள் மற்றும் கட்டுமான முறைமீது திறன்வாய்ந்த தரக் கட்டுப்பாடு செயல்படுத்தப்படுகிறது. இதனால் பணி செயல்படுத்தப்படுவதற்கான கால விரயம் தவிர்க்கப்படுவதுடன், நிதி ஆதாரங்கள் கணிசமாக சேமிக்கப்படுகின்றன. மேலும், சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டுச் சோதனைகள் வட்ட, கோட்ட அளவில் இயங்கும் ஆய்வகங்கள்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

12.2 ஆய்வகங்கள்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின்கீழ் சென்னையில் நிலக்கீல், மண், கற்கலவை மற்றும் போக்குவரத்து என நான்கு ஆய்வகங்களும், விழுப்புரம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, சேலம், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 8 இடங்களில் மண்டல ஆய்வகங்களும் செயல்பட்டு வருகின்றன.

சாலைத் தள வடிவமைப்பிற்கான வாகன சேதாரக் காரணியைக் (Vehicle Damage Factor) கண்டறிய வாகன அச்சு எடையறியும் சோதனை (Axle Load), ஓடுதளத்தின் வலிமையினை அளவிட பெங்கிள்மென் பீம் தொய்வு (Benkelman Beam Deflection Test)

2020 மார்ச் 18]

சோதனை, சாலை மேற்பரப்பில் மேடுபள்ளங்களை அளவிடும் சோதனை, பாலங்களுக்கான நிலத்தூண் சோதனை (Pile load test), கற்கலவை கட்டுமானத்தைச் சேதப்படுத்தாமல் தரத்தினை அறியும் சோதனை (Non-Destructive Test) மற்றும் இரும்புக் கம்பிகள், சிமென்ட் மற்றும் மண் ஆகியவற்றின் தரத்தை அறியும் சோதனை ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சாலை மற்றும் பாலத்தின் கட்டுமானப் பணிகளுக்கான கற்கலவை மற்றும் நிலக்கீல் கலவை விகிதங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

சாலைகளில் அதிக அளவில் வாகன விபத்துகளைக் குறைக்க, சாலை சந்திப்புகளில் போக்குவரத்து செல்லும் வகையினை ஆராய்ந்து அதன் அடிப்படையில் சாலை சந்திப்பு வடிவமைப்புகள் மேம்படுத்தப்படுகின்றன. மேலும் அதிக அளவில் வாகன விபத்துகள் நடைபெறும் இடங்களில் (Black Spot) விபத்துகளைத் தவிர்க்க பொறியியல் தீர்வுகளும் வழங்கப்படுகின்றது.

2019-2020 ஆம் நிதி ஆண்டில் பிப்ரவரி வரை 32,066 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன்மூலம் ரூ.25.65 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

12.3 ஆராய்ச்சி

நவீன யுக்திகள் மற்றும் புதிய பொருட்கள் குறித்த ஆராய்ச்சிகள் போன்றவை மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வாராய்ச்சி முடிவுகள் இந்திய சாலைக் குழுமத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு களத்தில் நடைபெறும் பணிகள்மூலம் செயலாக்கத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன.

12.3.1 தமிழ்நாடு மாநிலப் புத்தாக்க முன்முயற்சி (TANII) திட்டத்தின்கீழ் ஆராய்ச்சிப் பணிகள்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், 2019-2020 ஆம் ஆண்டில், "சணல் இழையால் உறுதிப்படுத்தப்பட்ட குளிர் நிலக்கீல் கலவையின் செயல்திறன் குறித்த ஆய்வு" ("Study on Performance of Jute Fibre reinforced cold bituminous mixes") மற்றும் "கற்கலவை பணிகளில் நீராற்றும் பொருட்களைப் பயன்படுத்தி செயல்திறனைக் கண்டறிதல் குறித்த ஆய்வு" ("Study on effectiveness of curing compounds on concrete pavement") ஆகிய ஆய்வுகள் மாநிலத் திட்டக் குழுவின் தமிழ்நாடு மாநிலப் புத்தாக்க முன்முயற்சி திட்டத்தின் நிதி ஆதாரங்களுடன் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

முன்னதாக, தமிழ்நாடு மாநிலப் புத்தாக்க முன்முயற்சி (TANII) திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட 6 ஆராய்ச்சித் திட்டங்களில் மூன்று திட்டங்கள் முடிவுற்றும், இதர மூன்று திட்டங்கள் செயலாக்கத்திலும் உள்ளன. ஆய்வின் முடிவுகள் தளத்தில் செயல்படுத்தப்பட்டு உறுதி செய்யப்படும்.

12.3.2 பகுதி II திட்டத்தின்கீழ் ஆராய்ச்சிப் பணிகள்

பகுதி-II திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி முடிவின் பயனாக ஆற்றுமணலுக்கு மாற்றாக 30% தாமிரக் கழிவு நுண்கற்கள் (Copper slag) பயன்படுத்தி கி.மீ. 3/2-3/5 திருநீர்மலை சாலை (ODR) அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது.

மற்றோர் ஆய்வின் பயனாக கி.மீ. 24/7-25/0 கொசஸ்தலையாறு பாலம்-புத்தூர் சாலையில் நிலக்கீல் தளத்தில், நிலக்கீல் அடுக்குகளில் விரிசல்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு கண்ணாடி ஜியோகிரெட் பரவப்பட்டுள்ளது. தற்பொழுது இச்சாலை நல்ல முறையில் பயன்பாட்டில் உள்ளது.

12.4 பயிற்சி

ஒவ்வோர் ஆண்டும் கண்காணிப்புப் பொறியாளர் நிலை வரை துறைப் பொறியாளர்களுக்கும் மற்றும் அமைச்சு அலுவலர்களுக்கும் அறிவினை மேம்படுத்துதல் மற்றும் சிறந்த நடைமுறைகள் குறித்து தேவையான பயிற்சி வழங்கப்படுகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட பயிற்சிகள் கீழ்வருமாறு:

வ. எண்	பயிற்சி பெற்றவர்களின் பதவிகள்	பயிற்சியின் கால அளவு	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
1	தரக் கட்டுப்பாடு பயிற்சி-முதல் தொகுதி		
	உதவிப் பொறியாளர்கள்	5 நாட்கள்	27
2.	தரக் கட்டுப்பாடு பயிற்சி-இரண்டாம் தொகுதி		
	உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள்	5 நாட்கள்	25

2020 மார்ச் 18]

3	சாலைப் பாதுகாப்புத் தணிக்கை-முதல் தொகுதி		
	கோட்டப் பொறியாளர்கள், உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள்	3 நாட்கள்	40
4	சாலைப் பாதுகாப்புத் தணிக்கை-இரண்டாம் தொகுதி		
	உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள்	3 நாட்கள்	43
5	சாலைப் பாதுகாப்புத் தணிக்கை-மூன்றாம் தொகுதி		
	உதவிக் கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்கள்	3 நாட்கள்	31

மேலும் பொறியியல் கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கும் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் பயிற்சி வழங்கப்படுகிறது.

12.5 பயிற்சி நிலையம்

பயிற்சி நிலையத்திற்கென பிரத்யேகமான கட்டடம் தரை தளத்தில் 2,154.95 ச.மீ. பரப்பிலும், முதல் தளத்தில் 2,094.51 ச.மீ. பரப்பிலும் கட்டப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் 4 வகுப்பறைகள், நூலகம், கூட்ட அரங்கம், மாநாட்டு அரங்கம், கலந்துரையாடல் அரங்கம் மற்றும் அலுவலக அறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் பயிற்சியாளர்கள் தங்குவதற்கென 40 அறைகள் கொண்ட பிரத்யேக தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது. இவ்விடுதியில் சமையலறை, உணவுக்கூடம், பல்நோக்கு அறை ஆகியவை கட்டப்பட்டுள்ளன.

பயிற்சி நிலையம் மற்றும் விடுதிக்கான உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.350.00 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு, முடியும் தருவாயில் உள்ளன.

12.6 செய்தி மடல்

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தால் காலாண்டிற்கு ஒருமுறை வெளியிடப்படும் செய்தி மடலானது நெடுஞ்சாலைத் துறையின் தகவல் பரிமாற்றத்திற்கு உதவுகிறது. இதுவரை, 18 செய்தி மடல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

12.7 இந்திய சாலைக் குழுமத்துடனான (IRC) ஒருங்கிணைப்பு

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் செயல்படும் புது தில்லியிலுள்ள இந்திய சாலைக் குழுமத்தின் தொழில்நுட்பக் குழுவில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் உறுப்பினராகச் செயல்பட்டு வருகிறார். மேலும், சாலைப் பராமரிப்பு மற்றும் உடைமை மேலாண்மை குழு (H-6), மனித வள மேம்பாட்டுக் குழு (G-2), கண்காணிப்பு மற்றும் ஆராய்ச்சியில் பயன்பாடுகள் குழு (IMRA) மற்றும் புதிய கட்டுமானப் பொருட்களையும், நுட்பங்களையும் அங்கீகரிக்கும் குழு ஆகியவற்றிலும் இயக்குநர் உறுப்பினராவார்.

இந்திய சாலைகள் குழுமத்தின் பதிப்புகள் மற்றும் வெளியீடுகளின் விற்பனை நிலையம் 2013 ஆம் ஆண்டு முதல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் இயங்கி வருகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பொறியாளர்கள் இந்திய சாலைக் குழுமத்தின் வருடாந்திர கருத்தரங்குகளில் தொடர்ந்து பங்கேற்று வருகின்றனர். சமீபத்தில் பீகார் மாநிலம் பாட்னாவில் நடைபெற்ற இந்திய சாலைகள் குழுமத்தின் 80-வது வருடாந்திர கருத்தரங்கில் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையப் பொறியாளர்கள் பங்கேற்று, நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக 3 தொழில்நுட்பக் கட்டுரைகள் வழங்கப்பட்டன.

12.8 இந்திய தொழில்நுட்ப நிறுவனம் - சென்னை (IIT- Madras) உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (IIT- Madras) உடன் மேற்கண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக சாலைத் தணிக்கைப் பயிற்சி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் அளிக்கப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டில் 114 நெடுஞ்சாலைத் துறைப் பொறியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

2020 மார்ச் 18]

12.9 ஐந்து வருட சாதனைகள்

2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரை 1,08,420 சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, ரூ.92.23 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரை நடத்தப்பட்ட 19 பயிற்சிகளில் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த 730 பங்கேற்பாளர்களும், 7 பயிற்சிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்த 148 பங்கேற்பாளர்களும் பயனடைந்தனர். மேலும், 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 204 மற்றும் 161 உதவிப் பொறியாளர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதைத் தவிர, 305 துறைப் பொறியாளர்களுக்குச் சாலைப் பாதுகாப்புத் தணிக்கை பற்றிய பயிற்சி வழங்கப்பட்டது.

2015 முதல் 2020 ஆம் ஆண்டு வரை, பல்வேறு பொறியியல் கல்லூரிகளில் பயிலும் 524 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டதன்மூலம் ரூ.4.39 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

13. திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு

திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகானது ஒரு தலைமைப் பொறியாளரின்கீழ் ஓர் இணைத் தலைமைப் பொறியாளருடன், நான்கு வடிவமைப்பு கோட்டங்கள் சென்னையிலும் மற்றும் ஐந்து ஆய்வுக் கோட்டங்கள் சென்னை, மதுரை, திருநெல்வேலி, சேலம் மற்றும் கோயம்புத்தூரிலும் செயல்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலைத் துறையில் பல்வேறு அலகுகளால் செயலாக்கப்படும் ஆற்றுப் பாலங்கள், பல்வழிச் சாலை மேம்பாலங்கள், இருப்புப்பாதை கடவுகளுக்கான மேம்பாலங்கள்/ கீழ்பாலங்களுக்கான தள விவரங்களைச் சேகரித்து அவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் திட்டம், வடிவமைப்பு மற்றும் ஆய்வு அலகினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

13.1 இவ்வலகின்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள்

13.1.1 ஆய்வுக் கோட்டங்கள் மற்றும் அவற்றின் பணிகள்

ஆய்வுக் கோட்டங்களின்மூலம் பின்வரும் தளப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 18

13.1.1.1 தள ஆய்வு மற்றும் மண்ணின் தன்மை ஆய்வு செய்தல்

- பாலம் அமையவுள்ள இடத்தில் விரிவான கள ஆய்வு மேற்கொண்டு தள விவரங்களைச் சேகரித்தல்.
- ஆற்றுப் பாலங்களுக்கு பொதுப் பணித் துறையிடமிருந்தும், இரயில்வே மேம்பாலங்கள்/கீழ்பாலங்கள் ஆகியவற்றிற்கு இரயில்வே நிருவாகத்திடமிருந்தும் தேவையான அனைத்து விவரங்களையும் பெறுதல்.
- பாலத்தின் அடித்தளத்தை வடிவமைக்கத் தேவையான மண்ணின் தன்மை மற்றும் தாங்குதிறனை ஆழ்துளைகளின் மூலமாக சேகரித்து ஆய்வு செய்தல்.

13.1.1.2 விரிவான அறிக்கை மற்றும் வரைபடம் தயாரித்தல்

- தள விவரங்கள் அடங்கிய தள வரைபடம் தயாரித்தல்.
- நேர்பாடு வரைபடங்கள் தயார் செய்தல்.
- ஆறு/நீரோடையின் குறுக்குவெட்டு மற்றும் நீள்வெட்டு வரைபடங்கள், பாலம் அமையவுள்ள இடத்தின் நேர்ப்பாடு வரைபடம் தயாரித்தல் மற்றும் நீரியல் விவரங்களைக் கணக்கிடுதல்.
- ஆழ்துளை மண் மற்றும் கள ஆய்வுகளின் அடிப்படையில் செயலாக்கத்திற்குத் தேவையான தகுந்த கருத்துருக்களை பரிந்துரை செய்தல்.

13.1.2 வடிவமைப்புக் கோட்டங்களின் பணிகள்

- ஆற்றுப் பாலம், இரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலம் மற்றும் கீழ்பாலம், சாலை சந்திப்புகளில் பல்வழிச் சாலை மேம்பாலம் மற்றும் நெடுஞ்சாலையின் இதர கட்டமைப்புகளுக்கான வடிவமைப்புகள், வரைபடங்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றைத் தயாரித்தல்.
- ஒப்பந்ததாரர்களிடமிருந்து பாலப் பணிகளுக்காக பெறப்படும் மாற்று வடிவமைப்புகளைக் கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்.
- துறையின் பல்வேறு அலகுகளிலிருந்து ஆலோசகர்கள்மூலம் தயாரிக்கப்படும் விரிவான திட்ட அறிக்கைகளைச் சரிபார்த்து ஒப்புதல் வழங்குதல்.

2020 மார்ச் 18]

- பாலப் பணியின் செயலாக்கத்தின்போது மண்ணின் தன்மையில் மாற்றம்/கள இடர்பாடுகள் காரணமாக, தேவைப்படும் பாலத்தின் பகுதிகளைத் திருத்தி வடிவமைத்தல்.
- மிகப் பெரிய கனரக சுமையுந்துகள் சாலைகளில், பாலங்களில் செல்வதற்காக அனுமதி பெறுவதற்கு கூர்ந்தாய்வு செய்து தக்க பரிந்துரை செய்தல்.
- பிற துறைகளால் கட்டப்படும் பாலங்களின் வடிவமைப்புகளைக் கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்குதல்.

13.2 ஏப்ரல் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை முடிக்கப்பட்ட பணிகள்

- 38 ஆற்றுப் பாலங்கள் மற்றும் இருப்புப்பாதைக் கடவுகளில் 4 மேம்பாலங்கள், 1 கீழ்பாலம் மற்றும் 1 வரையறுக்கப்பட்ட கீழ்பாலம் ஆகிய பணிகளுக்கான வடிவமைப்பு, வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.
- 10 ஆற்றுப் பாலங்கள், 6 இரயில்வே மேம்பாலங்கள், 1 இரயில்வே கீழ்பாலம், 3 பல்வழிச் சாலை மேம்பாலங்கள், 1 சாலை மேம்பாலம் மற்றும் 1 இரண்டடுக்கு மேம்பாலம் ஆகிய பணிகளுக்குண்டான திருத்திய/மாற்று வடிவமைப்புகள், வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கும் பணிகள் நிறைவேற்றப்பட்டன.
- ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்ட 5 பணிகளுக்குண்டான வடிவமைப்பு மற்றும் வரைபடங்கள் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன.

மொத்தம் 71 பணிகள் இவ்வலகின்மூலம் ஏப்ரல் 2019 முதல் பிப்ரவரி 2020 வரை முடிக்கப்பட்டுள்ளன.

13.3 தற்போது திட்டமிடப்பட்டு மற்றும் எதிர்நோக்கப்படும் பணிகள்

தற்போது 52 பாலப் பணிகளின் வடிவமைப்பு தயாரிக்கும் பணிகள் வெவ்வேறு நிலைகளில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவை தவிர, நடப்பாண்டில் அரசின் ஒப்புதல் பெறப்படவுள்ள பாலப் பணிகளின் வடிவமைப்புகளும் இவ்வலகின் மூலம் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

14. தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம்

டிட்கோ (TIDCO) மற்றும் டைடல் (TIDEL) பார்க் ஆகிய இரு நிறுவனங்கள் கூட்டாண்மை முறையில் 50:50 விழுக்காடு பங்களிப்பின்மூலம் தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தை 1998 ஆம் ஆண்டில் அமைத்தன.

இது நிறுவனங்கள் சட்டத்தின்படி நெடுஞ்சாலைத் துறை, செயலாளர் அவர்களைத் தலைவராகவும், பிற பங்களிப்பாளர்களின் பிரதிநிதிகள், அரசு நிதித் துறை மற்றும் சிறப்புப் பிரதிநிதிகள் ஆகியோரை இயக்குநர்களாகவும் கொண்டு நிருவகிக்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் அரசின் பெருந்திட்டப் பணிகள், புதிய கட்டுமான உத்திகள் மற்றும் சிறப்பு தனித்தன்மை வாய்ந்த பணிகளை நிறைவேற்றும் பொருட்டு அமைக்கப்பட்டது.

14.1 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் செயலாக்கப்பட்ட திட்டங்கள்

14.1.1 கிழக்குக் கடற்கரை சாலைத் திட்டம்

சென்னை அக்கரை முதல் புதுச்சேரி கூனிமேடு வரையில் கடலோரமாக எழில்மிகு வகையில் கிழக்குக் கடற்கரை சாலை அமைக்கப்பட்டுள்ளது.

113.20 கி.மீ. நீளமுள்ள இச்சாலை பொது மற்றும் தனியார் பங்களிப்பு ஒப்பந்த அடிப்படையில் 30 வருட குத்தகைக் காலத்திற்கு இருவழித் தடம் கொண்ட சுங்கச் சாலையாக 2002 ஆம் ஆண்டு முதல் மேம்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இச்சாலையில் உள்ள சுங்கச்சாவடிகளில் துரிதமாக வாகனங்கள் செல்ல FasTag சீட்டு முறை ஏப்ரல் 2020 முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

தற்பொழுது, பெருகிவரும் போக்குவரத்தின் தேவைக்கேற்ப சென்னை முதல் மாமல்லபுரம் வரையிலான சாலைப் பகுதி

நான்குவழித் தடமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மாமல்லபுரம் முதல் புதுச்சேரி கூனிமேடு வரையிலான பகுதியில் குறுகிய வளைவுகளை நேர்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு, அதன்மூலம் விபத்துகள் பெருமளவு குறைக்கப்பட்டுள்ளன.

14.2 தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மையில் உள்ள திட்டங்கள்

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் சலுகை ஒப்பந்த சாலைத் திட்டங்களை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல், பின்வரும் திட்டங்களுக்கு மேலாண்மைப் பணிகளையும் செய்து வருகிறது.

14.2.1 சென்னை வெளிவட்டச் சாலை

தே.நெ. 32-ல் வண்டலூர் முதல் திருவொற்றியூர் பொன்னேரி பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையிலான 60.15 கி.மீ. நீளப் புதிய பசுமை நிலச் சாலைப் பணி இரு கட்டங்களாக வடிவமைத்தல், கட்டுதல், நிதி ஆதாரம், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இச்சாலை சென்னை மாநகரில் இருந்து வெளிச் செல்லும் பல ஆரச்சாலைகளை இணைக்கும் அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இது பக்கம் ஒவ்வொன்றிலும், மூன்று வழித்தடம், 5.50 மீட்டர் அகல சேவைச் சாலை மற்றும் 2.50 மீட்டர் அகல மழைநீர் வடிகால், பயன்பாட்டு சாதனங்களுக்கான கட்டமைப்புடன்கூடிய நடைபாதையையும் கொண்டதாகும்.

முதற்பகுதியானது தே.நெ. 32-ல் வண்டலூர் மற்றும் தே.நெ. 716-ல் நெமிலிச்சேரிக்கு இடைப்பட்ட 29.65 கி.மீ. நீளச் சாலை ரூ.1,081.40 கோடி மதிப்பில் வடிவமைத்தல், கட்டுதல், நிதி ஆதாரம், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இப்பகுதியில் சிறுசாலைச் சந்திப்பு, வாகன ஒதுங்கிடம் போன்ற நிலுவைப் பணிகள் விரைவில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதி தே.நெ. 716-ல் நெமிலிச்சேரி முதல் திருவொற்றியூர் பொன்னேரி பஞ்செட்டி சாலையில் உள்ள மீஞ்சூர் வரையிலான மொத்தமுள்ள ரூ.1,075.00 கோடி மதிப்பிலான 30.50 கி.மீ. நீளச் சாலையில் 30.20 கி.மீ. பிரதான சாலை முடிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் உள்ள நில வழக்கினால் தடைப்பட்டிருந்த 0.30

கி.மீ. நீளப் பகுதி வழக்கு முடிவுக்கு வந்துள்ளதால், விரைந்து செயல்படுத்தப்படும்.

இச்சாலையை சுங்கச் சாலையாக பராமரிக்க அரசு ஏற்கெனவே ஆணைகள் வழங்கியுள்ளது. வரும் நிதியாண்டில் வாகனத்திற்கான சுங்க வசூலிப்பு துவங்கப்பெறும்.

14.2.2 கிழக்குக் கடற்கரை சாலையில் இளையனார்குப்பம் அருகில் நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் அமைத்தல்

கிழக்குக் கடற்கரை சாலையில் கி.மீ. 69/300-ல் இளையனார்குப்பம் பகுதியில் ஏற்கெனவே இருந்த சேதமடைந்த பாலத்திற்கு மாற்றாக புதிய நான்கு வழித்தடப் பாலம் அமைக்க 2017-2018 ஆம் ஆண்டு அரசு அறிவிப்பின்படி, ரூ.23.78 கோடி மதிப்பில் அமைத்திட எடுத்துக்கொள்ளப்பட்ட பாலம் மற்றும் அணுகுப் பகுதியில் அமைந்துள்ள புதுப்பட்டினம் புறவழிச் சாலைப் பணி முடிவடையும் நிலையில் உள்ளது. விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட உள்ளது.

14.2.3 சென்னை வடசென்னை அனல் மின் நிலைய சாலை மற்றும் காமராசர் துறைமுகச் சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி

காமராசர் துறைமுகம் நிறுவனம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வடசென்னை அனல் மின் நிலைய சாலை மற்றும் காமராசர் துறைமுக நுழைவுவாயில் வரையிலான சாலை ஆகியவற்றை நான்குவழிப் பாதையாக விரிவுபடுத்தி, கான்கிரீட் சாலையினை வைப்புத் தொகை அடிப்படையில் செயல்படுத்த தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு சாலைகளின் ஒட்டுமொத்த நீளம் 7.2 கி.மீ. ஆகும். இப்பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.195 கோடியாகும்.

2.38 கி.மீ. நீளமுள்ள காமராசர் துறைமுகம் சாலையை நான்குவழிப் பாதையாக விரிவுபடுத்தி கான்கிரீட் சாலையாக அமைக்கும் பணி தற்போது முன்னேற்றத்தில் உள்ளது.

வடசென்னை அனல் மின் நிலைய சாலை மேம்பாட்டுப் பணிக்கான ஒப்பந்த நடவடிக்கைகள் முன்னேற்றத்தில் உள்ளன. கட்டுமானப் பணிகள் நடப்பாண்டில் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

2020 மார்ச் 18]

14.2.4 தேசிய நெடுஞ்சாலை 4 முதல் சிங்கடிவாக்கம் சோஜிட்ஸ்-மதர்சன் தொழில்நுட்பப் பூங்கா சாலையினை மேம்பாடு செய்தல்

தேசிய நெடுஞ்சாலை 4 முதல் சிங்கடிவாக்கம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் சோஜிட்ஸ்-மதர்சன் தொழில்நுட்பப் பூங்கா வரையில் அமைந்துள்ள இருவழித்தடச் சாலையினை நான்கு வழித்தட கான்கிரீட் சாலையாக அமைத்து மேம்படுத்திட, தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ரூ.24.00 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

14.3 தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனம்

தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனமானது, நிறுவனங்கள் சட்டத்தின்படி தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தின் துணை நிறுவனமாக 2004 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இது தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம் 77 சதவிகிதம் மற்றும் டிட்கோ 23 சதவிகிதம் பங்களிப்பு கொண்டதாகும்.

14.3.1 தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை நிறுவனத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

14.3.1.1 இராஜீவ் காந்தி சாலை (தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை-I)

பழைய மாமல்லபுரம் சாலையில் சென்னை மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரையிலான 20.10 கி.மீ. நீளச் சாலை மற்றும் கிழக்குக் கடற்கரை சாலையினை இணைக்கும் 2.15 கி.மீ. இணைப்புச் சாலையினை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை தற்பொழுது சுங்கச் சாலையாக பராமரிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இச்சாலையில் உள்ள சுங்கச் சாவடிகளில் துரிதமாக வாகனங்கள் செல்ல FasTag சீட்டு முறை ஏப்ரல் 2020 முதல் செயல்படுத்தப்படவுள்ளது.

14.3.2 பரிசீலனையில் உள்ள திட்டப் பணிகள்

14.3.2.1 இராஜீவ் காந்தி சாலை (தகவல் தொழில்நுட்ப விரைவுச் சாலை-II)

இரண்டாம் கட்டப் பணி சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையிலான 25 கி.மீ. நீளச் சாலையினை 6 வழிச் சாலையாக செயல்படுத்த

திட்டமிடப்பட்டது. இதில் கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் நகரப் பகுதிகளின் புறவழிச் சாலைப் பணியும் உள்ளடங்கியது.

இச்சாலை அமைக்கத் தேவையான நில எடுப்பினைச் செயல்படுத்த அரசு ரூ.465.13 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. மொத்தம் 13 கிராமங்களில் 88.62 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்த திட்டமிடப்பட்டு, நில எடுப்புப் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையிலான இருபுறவழிச் சாலையுடன்கூடிய 25 கி.மீ. நீளச் சாலையினை மேம்படுத்த ரூ.573.99 கோடிக்கு திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்ட நிலையில், முதல் கட்டமாக கேளம்பாக்கம் மற்றும் திருப்போரூர் நகரப் பகுதிகளுக்கான புறவழிச் சாலை பணியினை ரூ.243.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுத் திட்டம்-II-ன்கீழ் ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 14.80 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளை நடப்பாண்டில் எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

14.3.2.2 சிறுசேரியில் பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம்

இராஜீவ் காந்தி சாலையில் சிறுசேரி சந்திப்பில், பொது தனியார் பங்களிப்பு முறையில் ஒன்பது தளங்கள் கொண்ட வாகன நிறுத்துமிடம் மற்றும் வணிக வளாகம் அமைக்கும் திட்டம் ரூ.200 கோடி திட்ட மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை இறுதி செய்யப்பட்ட நிலையில், இத்திட்டப் பணி அமையும் இடத்தின் ஒரு பகுதியில் மெட்ரோ இரயில் நேர்பாடும் அமைந்துள்ளதால், ஏற்கெனவே இறுதி செய்யப்பட்ட திட்ட சாத்தியக்கூறு அறிக்கை மறுஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

14.3.2.3 உயர்மட்ட சாலை

இராஜீவ் காந்தி சாலையில் தரமணி முதல் சிறுசேரி வரை முதற்கட்டப் பணியாகவும், சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரை இரண்டாம் கட்டப் பணியாகவும் மொத்தம் 45 கி.மீ. நீளத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

இந்நிலையில் சென்னை மெட்ரோ இரயில் பணிகளும், முதற்கட்டப் பணியாக தரமணி முதல் சிறுசேரி வரையிலான பகுதியின் நேர்பாட்டிலேயே அறிவிக்கப்பட்டுள்ளதால், ஏற்கெனவே இறுதி செய்யப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மாற்றம் செய்யப்பட்டு, மெட்ரோ இரயில் பணிகளோடு ஒருங்கிணைந்து செயல்படுத்தும் வகையில் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

14.3.2.4 இராஜீவ் காந்தி சாலையில் டைடல் பார்க் பகுதியில் ஒருங்கிணைந்த போக்குவரத்து மேம்பாட்டுப் பணி

சென்னை இராஜீவ் காந்தி சாலையில் போக்குவரத்து மேலாண்மை திட்டப் பணியாக போக்குவரத்து மிகுந்து காணப்படும் டைடல் பார்க் அருகில், திருவான்மியூர் ECR சாலை சந்திப்பில் ஒரு 'U' வடிவ மேம்பாலம், இந்திரா நகர் சாலை சந்திப்பு அருகில் ஒரு 'U' வடிவ மேம்பாலம், இராஜீவ் காந்தி திருவான்மியூர் சாலை சந்திப்பில் பக்கிங்காம் கால்வாய் மீதுள்ள பாலத்தினை அகலப்படுத்துதல் மற்றும் ஒரு பாதசாரிகள் நடைமேம்பாலம் கொண்ட ஒருங்கிணைந்த திட்டப் பணிகளை ரூ.108.13 கோடி மதிப்பில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இப்பணிக்கான திட்ட அறிக்கை இறுதி செய்யப்பட்டு, கட்டுமானப் பணிக்காக ஒப்பந்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணியை 24 மாத காலத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

14.4 2019-2020 ஆம் ஆண்டில் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

2019-2020 நிதியாண்டில் பிப்ரவரி மாதம் வரை ரூ.485.67 கோடி செலவினம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2020-2021 ஆம் நிதியாண்டிற்கு ரூ.556.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் குழுமத்தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளரும், இயக்குநர்களாக அரசுத் துறையின் பல்வேறு பிரதிநிதிகளும் செயல்படுகின்றனர்.

[2020 மார்ச் 18

இக்கழகம் 2005 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. முற்றிலும் அரசுக்குச் சொந்தமான இந்நிறுவனம் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை இலாப நோக்கமின்றி செயல்படுத்தி வருகிறது.

15.1 தமிழ்நாடு சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தினால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

15.1.1 ஒரகடம் தொழிற்பூங்கா சாலை கட்டமைப்புத் திட்டம்

தமிழ்நாட்டின் தற்போதைய தொழிற்சாலை அமைக்க தாராளமயமாக்கப்பட்ட கொள்கைகளால் உற்பத்தி மற்றும் பொறியியல் துறைகள் சார்ந்த தொழிற்சாலைகள் நிறைந்த மாநிலமாகத் தமிழ்நாடு வேகமாக வளர்ந்து வருகிறது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டு முயற்சியுடன் பல தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், ஒரகடம் மற்றும் திருப்பெரும்புதூர் பகுதிகளில் உலகின் பன்னாட்டு நிறுவனங்களின் தொழிற்சாலைகள், ஆறு சர்வதேச முன்னணி சீருந்து உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் தேசிய வாகன சோதனை மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டு உட்கட்டமைப்பு திட்ட மையம் ஆகியவற்றை உள்ளடக்கிய நான்கு சிப்காட் மையங்கள் அமைக்கப்பட்டு, பிரம்மாண்ட வளர்ச்சிப் பெற்று, தமிழ்நாட்டின் மிகப் பெரிய தொழிற்சாலைப் பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது.

மேற்கண்ட தொழில் வளர்ச்சி காரணமாக, வாகன போக்குவரத்துச் செறிவு உயர்ந்துள்ளதால் திறனான உட்கட்டமைப்பு வசதிகள் அவசியமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு ஒரகடம் பகுதிகளில், ஒரகடம் தொழிற்பூங்காவிற்கான சாலைக் கட்டமைப்பை மேம்படுத்தும் பணி கீழ்க்கண்டவாறு பல்வேறு நிலைகளில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

நிலை-I

சிங்கபெருமாள் கோயில் முதல் திருப்பெரும்புதூர் வரை (24.00 கி.மீ. நீள மா.நெ. 57-ல் பகுதி) மற்றும் வண்டலூர் முதல் வாலாஜாபாத் வரை (33.40 கி.மீ. நீள மா.நெ. 48-ல் பகுதி) மொத்தம் 57.40 கி.மீ. நீளமுள்ள சாலையினை ரூ.300.00 கோடி மதிப்பில் இருவழிச் சாலையிலிருந்து நான்குவழிச் சாலையாக அகலப்படுத்தி,

மேம்படுத்தும் பணி எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தில் ஒரகடம் சாலை சந்திப்பில் பல்வழிச் சாலை மேம்பாலம் கட்டும் பணியும் உள்ளடங்கும். இத்திட்டமானது ரூ.612.82 கோடி திருத்திய மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

சாலைப் பணி 56.90 கி.மீ. நீளத்திலும் மற்றும் பல்வழிச் சாலை மேம்பாலம் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. திருப்பெரும்புதூர் பகுதியில் 0.50 கி.மீ. நீளத்திற்கு நில எடுப்பு மற்றும் நீதிமன்ற வழக்கு காரணமாக பணி முடிவடையாமல் உள்ளது. நில எடுப்புப் பணி திருப்பெரும்புதூர் நகரில் முடிவடைந்த உடன், பணிகள் துவங்கப்பட்டு முடிக்கப்படும்.

நிலை- II

சிங்கபெருமாள் கோயில்-திருபெரும்புதூர் சாலையில் கி.மீ. 12/6-24/6 வரையுள்ள நான்குவழிச் சாலையினை ஆறுவழிச் சாலையாக மேம்படுத்தும் பணி ரூ.86.65 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பின் ரூ.108.66 கோடி திருத்திய மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, சாலைப் பணி 11.20 கி.மீ. நீளத்திற்கு முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 0.80 கி.மீ. நீளமுள்ள பகுதியில் நில எடுப்பு மற்றும் நீதிமன்ற வழக்குகளால் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளன. நில எடுப்புப் பணி முடிவடைந்த பின்பு, பணிகள் துவங்கப்பட்டு, வரும் நிதியாண்டில் முடிக்கப்படும்.

நிலை-III

சிங்கபெருமாள் கோயில்-திருபெரும்புதூர் சாலையில் கி.மீ. 0/6-12/6 (மா.நெ. 57) வரை நான்குவழிச் சாலையை ஆறுவழிச் சாலையாக மேம்படுத்தும் பணி ரூ.115.00 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. பணிகள் முடிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

நிலை-IV

வண்டலூர்-வாலாஜாபாத் சாலையில் கி.மீ. 30/4-47/0 வரை நான்குவழிச் சாலையிலிருந்து ஆறுவழிச் சாலையாக மேம்படுத்துதல் மற்றும் படப்பை புறவழிச் சாலை அமைப்பதற்கான நில எடுப்புப் பணி உட்பட, ரூ.189.81 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. 14.36 கி.மீ. நீளத்தில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 1.80 கி.மீ. நீளத்தில் படப்பையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

படப்பை புறவழிச் சாலைக்குப் பதிலாக பல்வழிச் சாலை மேம்பாலம் கட்டும் பணி ரூ.25.52 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

நிலை-V

வண்டலூர்-வாலாஜாபாத் சாலையில் கி.மீ. 47/0-63/8 வரை நான்குவழிச் சாலையிலிருந்து ஆறுவழிச் சாலையாக மேம்படுத்தும் பணி ரூ.180.09 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. 70 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் வரும் நிதியாண்டிற்குள் முடிக்கப்படும்.

15.2 மதுரை சுற்றுச்சாலையை நான்குவழித் தடமாக அமைத்தல்

மதுரை சுற்றுச் சாலையானது மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்திற்கு அருகில் துவங்கி, தே.நெ. 44-ல் கப்பலூர் தொழிற்பூங்கா அருகில் முடிவடையும் 27.20 கி.மீ நீளமுள்ள முக்கியச் சாலையாகும். நகரின் வளர்ச்சி மற்றும் போக்குவரத்தின் தேவைகளை முன்னிட்டு மதுரை சுற்று சாலையினை இருவழித் தடத்திலிருந்து நான்குவழித் தடமாக கி.மீ. 0/0 முதல் கி.மீ. 27/2 வரை அகலப்படுத்தும் பணியானது ரூ.213.69 கோடி மதிப்பில் கட்டுதல், இயக்குதல் மற்றும் திரும்ப ஒப்படைத்தல் (சுங்கம் வசூலித்தல்) (BOT-Toll) முறையில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. திட்டச் செலவில் ரூ.80.00 கோடி இடைவெளி நிதியாக மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 27.20 கி.மீ. நீளச் சாலையில் 26.94 கி.மீ. நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கப்பலூர் மேம்பாலப் பணிக்கு இரயில்வே துறையின் உரிய பாதுகாப்பு அனுமதி சமீபத்தில் பெறப்பட்டுள்ளதால், அனைத்து பணிகளும் வரும் ஜூன் 2020-க்குள் முடிக்கப்படும்.

22-11-2019 முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு சுங்க கட்டணச் சாலையாக அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டில் சுங்கச் சீட்டு (FasTag) வசூல் துவங்கப்படவுள்ளது.

15.3 ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2018-2019-ன்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள்

வண்டலூர்-வாலாஜாபாத் சாலையில் கி.மீ. 33/6-ல் அடையாறு ஆற்றின் குறுக்கே கூடுதல் நீர்வழித் தடம் ஏற்படுத்தும் பொருட்டு

2020 மார்ச் 18]

ஆறு கண் கொண்ட சிறு பாலம் 30 மீட்டர் நீளத்திற்கு கட்டும் பணி, ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, 75 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

15.4 வைப்பு நிதி பணி

ஒரகடம் டைம்லர் இந்தியா சரக்கு வாகன உற்பத்தி தொழிற்சாலையுடன் தமிழக அரசு மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, தொழிற்சாலைக்கு அணுகுசாலை அமைப்பதற்கு ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் சிப்காட் வைப்பு நிதியின்கீழ் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த அணுகுசாலை வண்டலூர் வாலாஜாபாத் சாலையில் (மா.நெ. 48) கி.மீ. 46/342-ல் பிரிந்து தொழிற்சாலையின் வடக்குப் பகுதியில் இணைகிறது. 50 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

15.5 2019-2020 ஆம் ஆண்டின் மொத்த செலவினம் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

மேற்படி திட்டங்களுக்காக 2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி வரை ரூ.104.70 கோடி மேற்கண்ட பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.99.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. தமிழ்நாடு கடல்சார் வாரியம்

இந்தியாவில் 1,076 கி.மீ. நீளமுள்ள இரண்டாவது மிக நீண்ட கடற்கரைப் பகுதியை தமிழ்நாடு கொண்டுள்ளது. இந்தக் கடற்கரை மூன்று பெருந்துறைமுகங்களும், அறிவிக்கை செய்யப்பட்ட கீழ்க்கண்ட 17 சிறு துறைமுகங்களையும் கொண்டுள்ளது.

பெருந்துறைமுகங்கள்

சென்னை துறைமுகம், எண்ணூர் காமராசர் துறைமுகம் மற்றும் தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம்.

சிறுதுறைமுகங்கள்

i) அரசுத் துறைமுகங்கள்

கடலூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, குளச்சல்

ii) தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள்

காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், பனையூர், திருச்சோபுரம், சிலம்பிமங்கலம், பரங்கிப்பேட்டை, பி. ஒய். 03 எண்ணெய் வளப் பகுதி, திருக்கடையூர், திருக்குவளை, உடன்குடி மற்றும் கூடங்குளம்.

பெருந்துறைமுகங்கள் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலும், சிறு துறைமுகங்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டிலும் இயங்கி வருகின்றன.

16.1 தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995

தமிழ்நாடு அரசின் துறைமுகத் துறையானது, 18-3-1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரிய சட்டம், 1995 (4/1996)-ன்படி, தமிழ்நாடு கடல்சார் வாரியமாக மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிருவகித்து, கட்டுப்படுத்தி, முறைப்படுத்திடவும் மற்றும் அது சார்ந்த மற்ற பொருண்மைகளுக்காகவும் உருவாக்கப்பட்டது.

16.2 சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான கொள்கை

தமிழ்நாட்டின் கடலோரத்தில் அமைந்துள்ள சிறு துறைமுகங்கள் அனைத்தும் தமிழக அரசின் சிறு துறைமுக மேம்பாட்டுக் கொள்கையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

இக்கொள்கையானது தனியார் பங்கேற்பு, நெகிழ்வான அணுகுமுறை, நிறுவன ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவனப் பின்னணி ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. தமிழ்நாடு கடல்சார் வாரியம் ஒரு தன்னாட்சி அமைப்பாக போதிய முழு சுதந்திரத்துடன் செயல்படுகிறது என்றும், இம்மாநிலத்திலுள்ள சிறு துறைமுகங்களின் துரிதமான வளர்ச்சிக்காக நெகிழ்வான அணுகுமுறையுடன் செயல்படுவதுடன் வணிகத் தன்மையுடைய முன் கவனத்துடனும், பொறுப்புடனும் செயல்படுகிறது.

16.3 சிறு துறைமுகங்களின் செயல்பாடுகள்

16.3.1 அரசுத் துறைமுகங்கள்

கடலூர் துறைமுகம்: நங்கூரத் துறைமுகமான இத்துறைமுகம், மத்திய அரசின் நிதியுதவியுடன் (சாகர்மாலா/கடலோர தோணித்துறை திட்டம்) சிறு மற்றும் நடுத்தரக் கப்பல்களை கையாளக்கூடிய ஆழ்கடல், கப்பலணையும் துறைமுகமாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

2020 மார்ச் 18]

நாகப்பட்டினம் துறைமுகம்: நங்கூரத் துறைமுகமான இத்துறைமுகத்தில், மிதவைகள்மூலம் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது.

பாம்பன் துறைமுகம்: சிறு கப்பல்கள் / கலங்களுக்கு கிழக்கு - மேற்கு கடலிணைப்பாக விளங்கக்கூடிய பாம்பன் கால்வாயில், வழிகாட்டும் பணிகள் செய்யப்படுகின்றன.

இராமேஸ்வரம் துறைமுகம்: அக்னிதீர்த்தம் பகுதியில் குறுகிய தூரத்திற்கான பயணிகள் படகுப் போக்குவரத்து நடத்தப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி துறைமுகம்: பயணிகள் படகுப் போக்குவரத்துத் துறைமுகமான இத்துறைமுகத்தில், விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் இடையே பயணிகள் படகுப் போக்குவரத்து பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தினரால் நடத்தப்பட்டு வருகிறது.

16.3.2 தனியார் முதலீட்டுத் துறைமுகங்கள், முனையங்கள்

காட்டுப்பள்ளி துறைமுகம்: கப்பல் கட்டுதல், கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் பாகம் புனையும் பணிகள் லார்சன் அன்ட் டூப்ரோ நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மரைன் இன்ப்ராஸ்ட்ரக்சர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் சரக்கு ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகிறது.

எண்ணூர் சிறு துறைமுகம்: பன்முனை நங்கூர மிதவையின்மூலம் திரவ அமோனியா இறக்குமதி செய்யப்படுகிறது.

கடலூரிலுள்ள கெம்ப்ளாஸ்ட் கடல் முனையம்: கடலூர் துறைமுகத்தின் ஒரு பகுதியான இம்முனையத்தில், தீவுத் தோணித்துறைமூலம் வினைல் குளோரைடு மோனோமர் இறக்குமதி செய்யப்படுகிறது.

திருக்கடையூர் துறைமுகம்: தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் தேவைக்கேற்ப ஒரு முனை நங்கூர மிதவையின்மூலம் நாப்தா இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

கூடங்குளம் துறைமுகம்: கூடங்குளம் அணுமின் உலைகள் 3 மற்றும் 4-க்கான இயந்திரங்கள்/பிரம்மாண்டமான தளவாடங்கள் உருட்டி இறக்குதல் தோணித்துறையின்மூலம் செய்யப்படுகிறது.

இதர அறிவிக்கப்பட்ட 8 துறைமுகங்கள் சட்டபூர்வ அனுமதிகள் பெறுதல், மேம்பாடு போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன.

16.4 துறைமுகங்களை மேம்படுத்துவதில் வாரியத்தின் செயல்பாடுகள்

16.4.1 கடலூர் துறைமுக மேம்பாடு

கடலூர் துறைமுகம் ஆழ்கடல், நேரடி கப்பலணையும் துறைமுகமாக மத்திய அரசின் சாகர்மாலா/உள்நாட்டுச் சரக்குத் தோணித்துறை திட்டத்தின் கீழான நிதியுதவியுடன், சுமார் ரூ.135 கோடியில் மேம்படுத்தப்படுகிறது. இத்துறைமுகம் மேம்படுத்தப்பட்டவுடன், சிறு மற்றும் நடுத்தர அளவுள்ள கலன்கள், உள்நாட்டுக் கலன்கள் கடலூர் துறைமுகத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பணிகள் செப்டம்பர் 2018-ல் துவக்கப்பட்டு, இவ்வனைத்து பணிகளும் அக்டோபர் 2020-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

16.4.2 கன்னியாகுமரி துறைமுக மேம்பாடு

(i) விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத் துறை நீட்டிப்புச் செய்தல்:-

கன்னியாகுமரி துறைமுகத்தில் விவேகானந்தர் பாறையில் அமைந்துள்ள படகுத் துறையானது, மத்திய அரசின் சாகர்மாலா/ உள்நாட்டுச் சரக்குத் தோணித்துறை திட்டத்தின் கீழான நிதியுதவியுடன், ரூ.20 கோடி செலவில், நீட்டிப்புச் செய்யப்படவுள்ளது. இவ்வசதிகளின்மூலம் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும் சுற்றுலாப் பயணிகள்/பார்வையாளர்கள் வருகை அதிகரிக்கும். இப்பணிகள் விரைவில் துவக்கப்பட்டு, அனைத்து பணிகளும் மார்ச் 2021-க்குள் நிறைவடையும்.

(ii) விவேகானந்தர் நினைவுப் பாறையையும், அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் கடல்சார் பாதசாரிகள் பாலம்:-

கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப் பாறையையும் அய்யன் திருவள்ளுவர் சிலை பாறையையும் இணைக்கும் பாதசாரிகள்

2020 மார்ச் 18]

நடந்து செல்ல சுமார் 140 மீட்டர் நீளம் கொண்ட கடல்சார் சிறப்பு பாலம் அமைக்க தமிழ்நாடு கடல்சார் வாரியம் உத்தேசித்துள்ளது. இப்பாலம் அமையப்பெற்றவுடன் அதிக சுற்றுலாப் பயணிகள் அய்யன் திருவள்ளுவர் சிலையைப் பார்வையிட ஏதுவாக அமையும். இத்திட்டத்தை 2020-2021 ஆம் நிதியாண்டில் செயல்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

16.4.3 உடன்குடி துறைமுகம்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் அனல் மின் நிலையத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கையாளுவதற்கான அணுகுத் தோணித்துறை கட்டுமானப் பணி நடைபெறுகிறது.

இப்பணிகள் ஜுன் 2018-ல் துவக்கப்பட்டு, இவ்வனைத்து பணிகளும் மே 2021-க்குள் நிறைவடையும்.

16.5 தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு அரசின்கீழ் வரும், தன்னாட்சி உரிமை பெற்ற தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் தூத்துக்குடியில் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. கப்பல்துறை பேரியக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற்று, 40 மாணவர்கள் கொண்ட குழு, தங்கிப் பயிலும், 6 மாத கால பொது முறை மாலுமி பயிற்சி வகுப்புகளும், கட்டாயமாக்கப்பட்ட கடல் பணிகளுக்கு முந்தைய, பிந்தைய பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

16.6 2019-2020 ஆம் ஆண்டில் வாரியத்தினால் கையாளப்பட்ட சரக்குகள் மற்றும் வாரியத்தின் வருமானம்

2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை சிறு துறைமுகங்கள் வாயிலாக 10,84,520 மெட்ரிக் டன் சரக்குகள் மற்றும் 6,35,384 (TEU) சரக்குப் பெட்டகங்கள் ஆகியவை கையாளப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கடல்சார் வாரியம், 2019-2020 ஆம் ஆண்டில் பிப்ரவரி வரை சுமார் ரூ.46.16 கோடி மொத்த வருவாய் ஈட்டியுள்ளது.

[2020 மார்ச் 18

17. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11-4-1974 அன்று நிறுவனங்கள் சட்டம், 1956-ன்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் உற்பத்திக்குத் தேவைப்படும் உள்நாட்டு நிலக்கரியை எடுத்து வருவதற்காக தமிழக அரசினால் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் நம் நாட்டிலேயே மாநில அரசுக்குச் சொந்தமான ஒரே ஒரு கப்பல் நிறுவனமாகும்.

17.1 நிருவாகம்

இந்நிறுவனம், தலைவர் மற்றும் நிருவாக இயக்குநரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் செயல்பாடுகள், தமிழக அரசால் நியமனம் செய்யப்படும் அதிகாரிகள் அடங்கிய நிருவாகக் குழுவால் செயல்படுத்தப்படுகின்றன. நிறுவனத்தின் தினசரி செயல்பாடுகள் தொழில்நுட்பம், இயக்கம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகம் ஆகிய பிரிவுகளில் தகுதியான அதிகாரிகளின் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

17.2 முக்கியச் செயல்பாடுகள்

இந்தியாவின் கிழக்குக் கடற்கரை வழியாக நிலக்கரி எடுத்து வருதல் மற்றும் கன்னியாகுமரியில் படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பயணிகளுக்கான படகுப் போக்குவரத்து மேற்கொள்வது ஆகியவை இந்நிறுவனத்தின் முக்கியப் பணிகளாகும்.

17.3 நிலக்கரி எடுத்து வருதல்

17.3.1 தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு (TANGEDCO) நிலக்கரி எடுத்து வருதல்

இந்திய நிலக்கரி நிறுவனங்களால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் உள்நாட்டு நிலக்கரி முழுவதும், நிலக்கரி ஏற்றும் துறைமுகங்களான ஹால்தியா, பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களிலிருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களின்மூலம் ஏற்றப்பட்டு, எண்ணூர் காமராசர் துறைமுகம், காரைக்கால் மற்றும் தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகம் ஆகிய துறைமுகங்களுக்குக் கொண்டு வரப்படுகிறது.

2020 மார்ச் 18]

17.3.2 என்.டி.பி.சி., தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு (NTECL) நிலக்கரி எடுத்து வருதல்

இந்நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் தேசிய அனல் மின் கழகம் ஆகியவற்றின் கூட்டு நிறுவனமான என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்தின், வல்லூர், வடசென்னையில் அமைந்துள்ள முறையே 500 மெகா வாட் திறன் படைத்த 3 அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான இந்திய நிலக்கரி முழுவதையும் பாரதீப் மற்றும் தாம்ரா ஆகிய துறைமுகங்களிலிருந்து எண்ணூரில் உள்ள காமராசர் துறைமுகத்திற்கு அந்நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, நிலக்கரி எடுத்துவரும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

17.4 நிலக்கரி எடுத்துவரும் செயல்திறன்

ஆண்டிற்கு 309 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை 15 வாடகைக் கப்பல்கள் வாயிலாக எடுத்துவர இந்நிறுவனத்தினால் இயலும். அதில் 243 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி எண்ணூர் துறைமுகத்திலும், 66 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரி தூத்துக்குடி துறைமுகத்திலும் இறக்கப்படும். இருப்பினும், இந்திய நிலக்கரி நிறுவனத்தால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனம் (NTECL) ஆகிய நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிலக்கரி மற்றும் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நிலக்கரியின் அளவைப் பொறுத்து, நிலக்கரியின் அளவு மாறுபடும். 2019-2020 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், நிலக்கரியின் தேவை மற்றும் பயன்பாட்டைப் பொறுத்து 12 கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

கடந்த மூன்று நிதியாண்டுகளில் எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

செயல்திறன்

(மெட்ரின் டன் இலட்சத்தில்)

வருடம்	நிலக்கரி ஏற்றும் துறைமுகங்களில் பெறப்பட்ட நிலக்கரியின் அளவு	எடுத்து வரப்பட்ட நிலக்கரியின் அளவு
2017-2018	190.00	188.85
2018-2019	210.06	205.02
2019-2020*	165.00	160.00

17.5 2020-2021 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம்

வரும் 2020-2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் என்.டி.பி.சி. தமிழ்நாடு எரி சக்தி நிறுவனம் (NTECL) ஆகியவற்றிற்கு, இந்திய நிலக்கரி நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் முறையே 200.98 இலட்சம் மெட்ரிக் டன் மற்றும் 58.90 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை எடுத்து வருவதற்கு இந்நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

17.6 விலை நிர்ணயக் கோட்பாடு

இந்நிறுவனம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குத் தேவையான நிலக்கரியினை எடுத்து வருவதற்காக துவங்கப்பட்டதனால், வாடகைக் கப்பல்கள், “ஆதாயம் மற்றும் இழப்பு ஏதும் இல்லை” (No Profit, No Loss) என்ற அடிப்படையில் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திடமிருந்து நிருவாக செலவுகளைப் பகிர்ந்து கொள்கிறது.

என்.டி.பி.சி. தமிழ்நாடு எரிசக்தி நிறுவனத்திற்கு நிலக்கரி எடுத்துவரும் பணிக்கான சேவைக் கட்டணமாக, வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களின் வாடகைக் கட்டணத்தில் 5 விழுக்காடு பெறப்படுகின்றது.

2020 மார்ச் 18]

17.7 கன்னியாகுமரியில் பயணிகள் படகு போக்குவரத்து

இக்கழகத்தினால், படகுத் துறையிலிருந்து விவேகானந்தர் நினைவுப்பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலைக்குப் பயணிகள் பயன்பாட்டிற்காக ஒவ்வொரு படகிலும் 150 இருக்கைகள் கொண்ட எம்.எல்.குகன், எம்.எல். பொதிகை மற்றும் எம்.எல். விவேகானந்தா ஆகிய மூன்று படகுகள் 11-8-1984 முதல் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இந்நிறுவனமானது ரூ.8.24 கோடி மதிப்பீட்டில் 150 பயணிகள் மற்றும் 75 பயணிகள் பயணம் செய்ய ஏதுவாக, இரண்டு புதிய படகுகளைக் கட்டி வழங்குவதற்காகப் பணி ஆணை வழங்கி உள்ளது. இந்தத் திட்ட நிதியானது, ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடன் தமிழ்நாடு சுற்றுலாத் துறையினால் வழங்கப்பட்டு உள்ளது. புதிய இரண்டு படகுகளும் 2020-2021 ஆம் ஆண்டு பயணிகள் பயன்பாட்டிற்கு இயக்கப்படும்.

சாதாரண நாட்களில் படகுப் போக்குவரத்து காலை 8 மணிக்கு துவங்கப்படும். இருப்பினும், உச்ச பருவ காலத்தில் சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்காக காலை 6 மணிக்கு துவங்கி இயக்கப்படுகின்றன.

கன்னியாகுமரி படகுத்துறையின் கடந்த மூன்று ஆண்டுகளில் செயல்திறன் மற்றும் நிதிநிலை விவரங்கள் பின்வருமாறு:

வருடம்	(இலட்சத்தில்)	(ரூபாய் இலட்சத்தில்)	
	பயணிகளின் எண்ணிக்கை	கட்டண வசூல்	இலாபம்
2017-2018	21.67	835.67	268.90
2018-2019	19.93	952.60	196.85
2019-2020*	20.37	1263.00	

2019-2020* எதிர்நோக்கப்படும் மதிப்பீடு

17.8 நிதிநிலை விவரங்கள்

இந்நிறுவனம், 2018-2019 ஆம் நிதியாண்டில் வரிக்குப்பின் உள்ள இலாபத்தில் ரூ.269.59 இலட்சம் அதாவது இயக்க இலாபம் ரூ.898.63 இலட்சத்தில் 30 விழுக்காடு பங்கு ஈவுத் தொகை அறிவித்துள்ளது.

[2020 மார்ச் 18

நிதிநிலை விவரங்கள்

வருடம்	(இலட்சத்தில்)	(ரூபாய் இலட்சத்தில்)	பங்கு ஈவுத் தொகை
	மொத்த வருவாய்	நிகர இயக்க இலாபம்	
2017-2018	52,476.78	111.78	33.54
2018-2019	87,829.61	898.63	269.59
2019-2020*	65,691.15	400.00	

2019-2020* எதிர்நோக்கப்படும் மதிப்பீடு

18. முடிவுரை

போக்குவரத்து வகைகளில் சாலைப் போக்குவரத்தானது, குறைந்த தூரங்களை எளிமையாகக் கடப்பதற்கு அனைவராலும் விரும்பக்கூடிய போக்குவரத்தாக உள்ளது. தனிநபர் வருவாயில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக அதிகரித்துவரும் அதிவேக வாகனங்களின் எண்ணிக்கையாலும் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, போக்குவரத்தின் அடிப்படையிலும், தடையற்ற போக்குவரத்தை அளிக்கும்பொருட்டும் மாநில நெடுஞ்சாலை, மாவட்ட முக்கியச் சாலை மற்றும் மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்துதல், சாலை மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலம்/கீழ் பாலங்கள், புறவழிச் சாலைகள் அமைத்தல் போன்ற சாலை உட்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வது அவசியமானதாகும். எனவே, மேற்கண்ட பணிகள், பல்வேறு திட்டங்களின்மூலம் நெடுஞ்சாலைத் துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

மாநகராட்சியில் அமைந்துள்ள நகர்ப்புறங்களில் பாதசாரிகளின் சாலைப் பாதுகாப்பு அம்சங்களை உள்ளடக்கி சாலைகள் மேம்பாடு செய்யப்படுகின்றன. மேலும், சென்னை மாநகராட்சியின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டு, நீண்டகாலத் திட்டங்களின் அடிப்படையில், 18 சாலை மேம்பாலங்கள் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி துவங்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

ஊராட்சி ஒன்றியம்/ஊராட்சி சாலைகளை மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் சாலைகளுக்கிடையேயான இணைப்புகளை மேம்படுத்துவதால், கிராமப்புற பகுதிகள் வளர்ச்சியடைகின்றன.

சென்னை-கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டத்தினால் வளர்ச்சியடையக்கூடிய பகுதிகளில் உள்ள சாலை இணைப்புகளை மேம்படுத்த, 15 மாநில நெடுஞ்சாலைகளின் மேம்பாடு ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் செயலாக்கப்பட்டு வருகின்றன. எண்ணூர், காட்டுப்பள்ளி துறைமுகங்களின் வர்த்தகப் பரிவர்த்தனைகளை மேம்படுத்தவும், சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் களையவும், சென்னை எல்லைச் சாலைத் திட்டம் பன்னாட்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளது.

சாலை விபத்துகளினால் ஏற்படும் மனித உயிரிழப்புகளைக் குறைப்பது அவசியமானதாகும். எனவே, அடிக்கடி விபத்து நிகழும் பகுதிகள் கண்டறியப்பட்டு, அப்பகுதிகளில் தொழிற்நுட்பம் சார்ந்த உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சாலை விபத்துத் தணிக்கை (RSA) மாநில நெடுஞ்சாலை மற்றும் மாவட்ட முக்கியச் சாலைகளில் முடிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் விபத்துத் தடுப்பு நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றன. புதிய பணிகளுக்கு திட்டமிடும் நிலையிலேயே சாலை விபத்துத் தணிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், பணிகளின் செயலாக்கத்தின்போதும் மற்றும் பணி முடிக்கப்பட்ட பின்னரும் தொடர் நடவடிக்கையாக சாலைத் தணிக்கை முறை செயல்படுத்தப்படுகின்றன. கூடுதலாக துறையின் அலுவலர்களுக்கு சாலைப் பாதுகாப்புத் தணிக்கை குறித்த பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. சாலை விபத்துகள் மற்றும் உயிர் இழப்புகளைக் குறைக்க போக்குவரத்து, காவல், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலைத் துறையானது, தரமான மற்றும் பாதுகாப்பான சாலைத் தொடரமைப்பினை உருவாக்குவதில் முழு முயற்சியை மேற்கொண்டு வருவதோடு, ஐக்கிய நாடுகள் சபையினரால் நிர்ணயிக்கப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையும் பணியில், தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் இருந்து முதல் இடத்தை நோக்கி முன்னேறி வருகிறது.

[2020 மார்ச் 18

பெரிய துறைமுகங்களின் வர்த்தக சுமையைக் குறைத்து, தமிழ்நாட்டில் உள்ள சிறு துறைமுகங்களின் வர்த்தக வணிகத்தை மேம்படுத்துவதில் கடல்சார் வாரியம் முக்கிய பங்கு வகிக்கிறது.

பூம்புகார் கப்பல் கழகமானது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரியை கப்பல்கள்மூலம் துறைமுகத்திற்கு கொண்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள இடங்களுக்கு படகு சவாரியை அளிக்கிறது. இதன்மூலம் எரிசக்தி மற்றும் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியிலும் இத்துறையானது பங்கு வகிக்கிறது.

'விபத்து இல்லா தமிழகம்' என்ற இலட்சியத்துடன் சாலை விபத்துகளைக் குறைப்பதில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது. மேலும், மிகவும் சீரிய சாலை கட்டமைப்புகளைத் தமிழ்நாடு கொண்டுள்ளதால், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சிறந்த, பாதுகாப்பான போக்குவரத்தினைத் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

(700 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

முன்னுரை

தமிழ்நாடு அரசின் மிகப் பழமை வாய்ந்த அரசுத் துறைகளில் பொதுப்பணித் துறை ஒன்றாகும். இத்துறை 150 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததாகும். மாநிலம் முழுவதும் பல்வேறு மதிப்பு மிக்க கட்டடக் கட்டுமானத் திட்டங்களை இத்துறை செய்து முடித்துள்ளது. இத்துறையின் முக்கியப் பணி, பொதுக் கட்டடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை உருவாக்குவதாகும்.

அரசின் அனைத்துப் பொறியியல் துறைகளுக்கும் தாய்த் துறையாக பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு விளங்குகிறது. தொழில்நுட்பம் மற்றும் கலை நயத்தோடு, பல்வேறு அரசுத் துறைகளுக்கான கட்டடங்களை உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகிப்பதுடன், அரசுக் கட்டடங்களைப் பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் போன்ற பணிகளையும் பொதுப் பணித் துறை மேற்கொண்டு வருகிறது.

1.0. செயல்பாடுகள்

பல்வேறு அரசுத் துறைகளுக்கான கட்டடத் திட்டங்களை மிகக் கவனமாகத் திட்டமிடுதல், கலை நயத்துடன் வரைபடம் தயாரித்தல், சிக்கனமான வடிவமைப்பு மற்றும் திறமையுடன் மிகப் புதுமையான வழிமுறைகளைக் கையாண்டு கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றுடன் பொதுப் பணித் துறை கட்டட அமைப்பின் செயல்பாடுகள் தொடங்குகிறது.

இதர செயல்பாடுகள்

- தொகுதி மேம்பாட்டிற்கான நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான திட்டப் பணிகளை மேற்கொள்ளுதல்.

[2020 மார்ச் 18

- பாரம்பரியமிக்க கட்டடங்களை அவற்றின் கலை, தொல்லியல் தன்மை மற்றும் வரலாற்றுத் தொன்மை சிதையாமல் பாதுகாத்து, புதுப்பித்து, சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.
- தலைமைச் செயலகம், சென்னை மற்றும் உதகமண்டலத்திலுள்ள ஆளுநர் மாளிகைகள், மாண்புமிகு நீதிபதிகள், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மிக மிக முக்கிய பிரமுகர்களுக்கான மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள் மற்றும் இதர அரசுக் கட்டடங்களைப் பராமரித்தல்.
- மணிமண்டபங்கள், நினைவகங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் போன்ற கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- நீதித் துறை மற்றும் ஊழல் தடுப்புக் கண்காணிப்புத் துறை வேண்டுகோளின் அடிப்படையில் கட்டடங்களின் மதிப்பீடுகளைத் தயாரித்து வழங்குதல்.
- அரசுக் கட்டடங்கள் மற்றும் அரசு வளாகங்களில் உட்புற மற்றும் வெளிப்புற மின் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்.
- ஆண்டுதோறும் செந்தர விலை விகிதப் பட்டியல், கட்டட தளபரப்பு விலைவிகிதப் பட்டியல், கட்டட வாடகை மதிப்பிடுவதற்கான விலைவிகிதப் பட்டியல் நிர்ணயித்தல்.
- சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் இயற்கையான ஆற்று மணலுக்கு மாற்றாக தரமான நொறுக்கப்பட்ட கல்மணல் (Crushed Stone Sand) தயாரிக்கும் நிறுவனங்களின் நொறுக்கப்பட்ட கல்மணல் தரத்திற்கு ஒப்புதல் அளித்தல்.
- பல்வேறு தரப்பட்ட கட்டடங்களான பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் திரையரங்குக் கட்டடங்களுக்கு கட்டட உறுதித்தன்மைச் சான்று வழங்குதல்.
- அரசு அலுவலகங்கள் இயங்கிவரும் தனியார் கட்டடங்கள் மற்றும் அரசுக் கட்டடங்களுக்கு நியாய வாடகைச் சான்று வழங்குதல்.

2020 மார்ச் 18]

- தொழில்நுட்ப அறிவுத் திறன் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளிலிருந்து வரும் மாணவர்களுக்கு தொழில்நுட்ப வழிகாட்டல்/பயிற்சி வழங்குதல்.

- முக்கியப் பிரமுகர்கள் மற்றும் மிக மிக முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போது விழா மேடை அமைப்பு, தடுப்பு அமைப்புகள், ஒலி ஒளி அமைப்புகள், வானூர்தி இறங்குதளம் அமைத்தல் போன்ற பணிகள் மற்றும் உறுதித்தன்மைச் சான்று அளித்தல். மிக மிக முக்கியப் பிரமுகர்களின் வருகை மற்றும் அரசு நிகழ்ச்சிகள் தொடர்பான மின் பணிகளை மேற்கொள்ளுதல்.

2.0. கட்டடக் கலைப் பிரிவு

அலுவலகம், கல்வி, மருத்துவம் மற்றும் குடியிருப்பு போன்ற கட்டடங்களின் பயன்பாட்டினைக் கருத்திற்கொண்டு, நிலையான தரத்துடன் முதனிலை வரைபடங்கள், முகப்பு குறுக்குவெட்டுத் தோற்றம் போன்ற கட்டுமானத்திற்கான விரிவான அனைத்து விவரங்களையும் கட்டடக் கலைப் பிரிவு உருவாக்கித் தருகிறது.

கட்டடக் கலைப் பிரிவு, கட்டடக் கலை வரைபடங்கள் மற்றும் திட்ட வழிகாட்டுதலுக்கு முழுமையான அதிகாரம் பெற்றுள்ளது. கட்டடக் கலைப் பிரிவு, கட்டடத்திற்கு படைப்பாற்றல் மற்றும் கலைக் கூறுகளைச் சேர்க்கிறது. வேலைத் தளத்தின் வரம்பு மற்றும் திறனைப் புரிந்துகொள்வது, வெவ்வேறு தொழில்நுட்பச் சிக்கல்களை உணர்ந்து எதிர்கால விரிவாக்கம், தொழில்நுட்ப யோசனைகள் முன்னறிவித்தல் மற்றும் செலவு மதிப்பீடு, திட்டத்தின் நேர அளவீடு, மாற்றுத் திறனாளிகளுக்குத் தடைகளற்ற சூழல், மின் ஆற்றல் பயன்பாட்டினைக் குறைத்தல் மற்றும் அதிக மரபுசாரா வளங்களைப் பயன்படுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு கட்டட வரைபடங்களை இரு பரிமாணம் மற்றும் முப்பரிமாணத்தில் தயாரித்து வழங்குகிறது. இது தவிர கட்டட மாதிரிகளையும் உருவாக்குகிறது.

3.0. திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம்

இந்திய தர நிர்ணயக் கோட்பாடுகளுடன், நவீன தொழில்நுட்பத்தையும், பல காலமாக பெற்ற அனுபவ அறிவையும், தொழில்நுணுக்கத்துடன் பின்பற்றி கட்டட கட்டுமானத்திற்குச் சிறந்த

முறையில் நவீன மென்பொருட்களைப் பயன்படுத்தி வடிவமைப்புகள் தயாரிப்பதில், பொதுப் பணித் துறையின் திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் முக்கிய அங்கம் வகிக்கிறது.

3.1. தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம், சென்னை

கட்டடங்கள் கட்ட பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களுக்கான தர மதிப்பீடு வழங்குதல், மேம்பட்ட தொழில்நுட்பம், ஆராய்ச்சி, தரமான மற்றும் புதுமையான கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரும் விதமாக தமிழக அரசு கட்டட ஆராய்ச்சி நிலையம் இயங்கி வருகிறது.

3.2. கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம், சென்னை

தொல்லியல் மற்றும் பாரம்பரியமிக்க கட்டடங்களை, தொன்மை மாறாமல் சிறந்த வகையில் பராமரிக்கவும் மற்றும் சிதிலமடைந்த பாரம்பரியமிக்க கட்டடங்களைத் தொன்மையான கட்டுமான நுணுக்கங்களையும், இயற்கையான மூலப்பொருட்களையும் கொண்டு சீரமைத்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணிகளை மேற்கொள்ள, கட்டட மையம் மற்றும் பாதுகாத்தல் கோட்டம் இயங்கி வருகிறது.

3.3. தரக் கட்டுப்பாட்டுக் கோட்டம்

தரக் கட்டுப்பாட்டுக் கோட்டம், கட்டட அமைப்பில் ஒருமுகப்படுத்தப்பட்ட தரக் கட்டுப்பாட்டு முறையை நிறுவுவதற்கான செயல்முறையை எளிதாக்குகிறது.

தரக் கட்டுப்பாட்டு நடைமுறைகளில் ஒரே செயல்முறையை பின்பற்றுதல் மற்றும் எளிதான கண்காணிப்பு, கட்டுப்பாட்டை உறுதி செய்வதற்கு தரக் கட்டுப்பாட்டுக் கோட்டம் அவசியமாகிறது.

தரக் கட்டுப்பாடு என்பது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பூர்த்தி செய்வதை உறுதி செய்வதற்கான வழக்கமான ஆய்வு முறையாகும். தரக் கட்டுப்பாட்டுப் பணியாளர்களால் பரிசோதனை செய்யப்பட்டு அதன் முடிவு தரப்படுத்தப்பட்ட அளவுகோல் விவரக் குறிப்புகளுடன் ஒப்பிடப்படுகிறது. தரக் கட்டுப்பாடு பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்:-

- கட்டுமானத்திற்கான தர அளவீடுகளைத் தீர்மானித்தல்
- தர மாறுபாட்டினைக் கண்டறிதல்

2020 மார்ச் 18]

- தர மாறுபாட்டினைச் சரி செய்தல் அல்லது குறைக்க நடவடிக்கை எடுத்தல்
- தரத்தினை உயர்த்துதல்

தரக் கட்டுப்பாட்டுக் கோட்டம் ஒரே சீரான தரம், பராமரிப்புப் பணிகளில் குறைவான செலவினம், பணிகளைத் திரும்ப மேற்கொள்வதைத் தவிர்த்தல் போன்றவற்றை உறுதி செய்கிறது.

தற்பொழுது, கட்டட அமைப்பில் 3 தரக் கட்டுப்பாட்டு கோட்டங்கள், 12 உபகோட்டங்கள் மற்றும் 46 பிரிவு அலுவலகங்கள் செயல்படுகின்றன.

இவ்வமைப்பு, கட்டுமானப் பணி நடைபெறும் தளங்களில் திடீர் சோதனை மற்றும் ஆய்வு மேற்கொண்டு ஜல்லி, சிமெண்ட் கலவை, செங்கற்கள் மற்றும் மணலுக்கான பகுப்பாய்வு மாதிரிகளைச் சேகரித்து அதன் வலிமைத் தன்மை, நேர்த்தி ஆகியவற்றினை ஆய்வு செய்து அதன் விவரங்களை உரிய அலுவலகத்திற்குத் தெரியப்படுத்துவதுடன், இது குறித்து தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

4.0. நிதி ஒதுக்கீடு 2020-2021

2020-2021 ஆம் நிதியாண்டில் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை எண் 39-ன்கீழ் ரூ.1,603.08 கோடி நிதி ஒதுக்கீட்டில் பின்வரும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன:-

வ எண்	பொருள்	தொகை (ரூ. கோடியில்)
1	**மூலதனக் கணக்கு**	
	(அ) மூலதனப் பணிகள்	1,065.54
	(ஆ) கணக்குகளிடையே மாற்றம்	149.07
2	**வருவாய்க் கணக்கு**	
	(அ) பராமரிப்பு	93.93
	(ஆ) பணியமைப்பு (பொதுப் பணித் துறை தலைமைச் செயலகம் உட்பட)	294.44
3	**கடன் கணக்கு**	0.10
	மொத்தம்	1,603.08

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2020 மார்ச் 18

4.1. துறைவாரியான ஒதுக்கீடு 2020-2021

4.1.1. மூலதனப் பணிகள்

வ. எண்	துறையின் பெயர்/திட்டம்	2020-2021 வரவு செலவு திட்ட மதிப்பீடு (ரூ. கோடியில்)	மொத்த ஒதுக்கீட்டில் விழுக்காடு
1	பொதுப் பணித் துறை	102.60	9.63
2	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	371.06	34.82
3	உள் துறை (நீதி மற்றும் சட்டம்)	235.34	22.09
4	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை	105.49	9.90
5	வணிக வரித் துறை	30.93	2.90
6	பதிவுத் துறை	23.22	2.18
7	பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாத்தல்	51.00	4.79
8	பிற துறைகள்	145.90	13.69
	மொத்தம்	1,065.54	100.00

4.2. அரசு கட்டடங்கள் பராமரிப்பு

4.2.1. பொதுப் பணித் துறை கட்டடங்கள்

பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை எண் 39-ன்-கீழ், 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மாண்புமிகு அமைச்சர்களின் அரசு மாளிகைகள், ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், பொதுப் பணித் துறை அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலர் குடியிருப்புகள் ஆகியவற்றின் பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ள 93.93 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

4.2.2. இதர துறைகளின் கட்டடங்கள்

மாண்புமிகு ஆளுநர் மாளிகை, தலைமைச் செயலகம், உயர் நீதிமன்றம், மாவட்ட மற்றும் சார்பு நீதிமன்றக் கட்டடங்கள், உயர் நீதிமன்ற நீதியரசர்களின் அரசு மாளிகைகள், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடங்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள், ஆரம்ப மற்றும் துணை சுகாதார நிலையங்கள், பள்ளிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, வேளாண்மைத் துறை மற்றும் பதிவுத் துறை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் பிற அரசுக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 291.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளன.

5.0. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 அன்று நடந்த ஐக்கிய நாடுகள் நீடித்த நிலையான வளர்ச்சி உச்சி மாநாட்டில் 193 உறுப்பு நாடுகள், 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளைத் தேர்ந்தெடுத்தன. இவை, 169 குறிக்கோள்களுடன், ஆயிரமாண்டுகள் வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையில் உலகளாவிய இலக்குகள் எனவும் அறியப்படுகிறது.

இத்துறையினால் கட்டுமானம் செய்யப்படும் கட்டடங்கள், வாய்ப்பு வளம் திறன், தணித்தல் மற்றும் தட்பவெப்ப நிலை மாற்றத்திற்குப் பொருத்தமாக்கிக் கொள்ளுதல் மற்றும் பேரிடர்களிலிருந்து மீண்டெழுதல் போன்றவற்றை உட்படுத்தியிருக்கும் 2015-2030 ஆம் ஆண்டுக்கான பேரிடர் இன்னல் குறைப்பிற்கான சென்டாய் (Sendai) கட்டமைப்பின்படி உள்ளன.

பாரம்பரிய கட்டடங்களை அவற்றின் கலை, அழகியல், வரலாறு மற்றும் தொல்லியல் தன்மை மாறாமல் பேணிப் பாதுகாத்தல் போன்றவை இலக்கு 9-ன் குறிக்கோள்கள் (தொழில் புத்தமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு) மற்றும் இலக்கு 11 (நீடித்த நிலையான மாநகரங்கள் மற்றும் சமுதாயங்கள்) தொடர்புடையவை ஆகும்.

9.1 அனைவருக்கும் இயலும் நிலையோடு மற்றும் நடுநிலையுடைய நுழைவுரிமையை நோக்கமாகக் கொண்டு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மனித நலனுக்கு உதவும் வகையில், வட்டார மற்றும் எல்லைகளை கடந்த (Trans-border) உள்கட்டமைப்பு உள்ளடக்கிய தரம், நம்பத்தக்க, நீடித்த, நிலைத்த மற்றும் மீண்டெழும் கட்டமைப்பினை மேம்படுத்துதல்.

11.4 உலக பண்பாடு மற்றும் இயற்கை மரபுரிமையைப் பாதுகாக்கும் முயற்சிகளை வலுப்படுத்துதல்.

அரசு ஆணை (நிலை) எண் 36, பொதுப் பணி (சி.பா.1)த் துறை, நாள் 25-1-2020-ன்படி நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டு, அமைப்புகளை மற்றும் வழிமுறைகளை உருவாக்குவதற்கான நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு அலகு அமைக்கப்பட்டுள்ளது.

6.0. பாரம்பரிய கட்டடங்களைச் சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல்

பாரம்பரிய கட்டடங்களைச் சீரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் பொதுப் பணித் துறைக்கு ஒரு பெரிய சவாலாகும். கட்டடங்களின் வயது, தரம் மற்றும் அளவுகளை பகுப்பாய்வு செய்து அதன் அடிப்படையில் பெறப்பட்ட விவரங்களைக் கொண்டு சேதம் மற்றும் சிதைவுக்கான காரணங்கள் அடையாளம் காணப்படுகின்றன. பாரம்பரிய கட்டடங்களில் பின்வரும் காரணங்களால் பாதிப்புகள் ஏற்படலாம்:-

- காலநிலை மாற்றம்
- காற்று மாசுபாடு
- பராமரிப்புச் சிக்கல்கள்
- சுற்றுச்சூழல் காரணிகள்
- வெப்பநிலை ஏற்ற இறக்கங்கள்

மரபுவழியான பொருட்கள், கட்டுமான செய்முறை நுட்பங்கள் மற்றும் திறன்பெற்ற தொழில்நுட்பப் பணியாளர்களை பயன்படுத்துவது மீதான விரிவான ஆய்வுகளுக்குப் பிறகு பாரம்பரிய கட்டடங்களில் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு, பாரம்பரிய கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல் பணிகளை பொதுப் பணித் துறை, கட்டட அமைப்பு மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. இச்செயல்பாடு நன்கு அங்கீகரிக்கப்பட்டு, பாராட்டைப் பெற்றுள்ளது.

7.0. மழை நீர் சேகரிப்பு

மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு 2002 ஆம் ஆண்டு முதல் இத்துறையால் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மழைநீர் சேகரிப்பின் பல்வேறு முறைகள் குறித்து இத்துறையின் முயற்சியுடன் பல சுற்றறிக்கைகள்மூலம் களப் பொறியாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இத்துறையின்மூலம் 50,601 அரசுக் கட்டடங்களில் 62,855 எண்ணிக்கையிலான மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் கட்டப்பட்டுள்ளன.

தற்பொழுது அரசுக் கட்டடங்களில் முழுமையான மழைநீர் சேகரிப்புக் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2014 ஆம் ஆண்டிலிருந்து கட்டப்படும் புதிய அரசுக் கட்டடங்களுக்கான திட்ட மதிப்பீடுகளில் மழை நீர் சேகரிப்புக் கட்டமைப்பைச் சேர்ப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மழைநீர் சேகரிப்பை மேற்கொள்ளும் பொருட்டு, தற்பொழுதுள்ள அனைத்து கட்டமைப்புகளும் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

8.0. தயாரிக்கப்பட்ட மணல் (M-Sand)

தயாரிக்கப்பட்ட மணலாகிய நொறுக்கப்பட்ட கல் மணலை (Crushed Stone Sand) ஆற்று மணலுக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். இம்மணல், முறையான இயந்திரங்கள்மூலம் தயாரிக்கப்பட்டால், ஆற்று மணலுக்கு ஒரு சிறந்த மாற்று மணலாக இதனைப் பயன்படுத்தலாம். இம்மணலில் கரிம அசுத்தங்கள் இல்லாததால், மணல் வீணாவதைத் தடுப்பதுடன் நேரடியாகப் பயன்படுத்தலாம். சிறப்பான/சிறந்த வடிவம் மற்றும் தரம் வாரியாக உள்ள நொறுக்கப்பட்ட கல் மணலை பயன்படுத்தினால் உயர் வலிமை வாய்ந்த கான்கிரீட் பெறப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆற்று மணலுக்கு மாற்றாக தயாரிக்கப்பட்ட மணலினை பின்வரும் நோக்கங்களுக்காக பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறது:-

- சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு எற்படாத வகையில், இயற்கை வளப் பாதுகாப்புடன் குறைந்த அளவில் ஆற்று மணலைப் பயன்படுத்துதல்.

[2020 மார்ச் 18

- ஆற்று மணலுக்கு மாற்றாக, தயாரிக்கப்பட்ட மணல் பயன்பாட்டினை ஊக்குவிப்பதன்மூலம் உள்நாட்டு ஆற்று மணல் தேவை அதிகரித்து வருவதனைக் குறைப்பதுடன், ஆற்று மணல் பற்றாக்குறையையும் குறைக்கலாம்.
- மாநிலத்தில், மணல் தேவை மற்றும் வழங்குதலுக்கும் இடையே உள்ள பற்றாக்குறையினைச் சரி செய்தல்.
- அனைத்து மாவட்டங்களிலும் நொறுக்கப்பட்ட கல் மணல் தயாரிப்பு நிறுவனங்களை உருவாக்குவதற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை ஊக்குவிப்பதன்மூலம் வளங்களைத் திறம்பட பயன்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்.

தயாரிக்கப்பட்ட மணல் பயன்பாட்டை ஊக்குவிக்க எடுக்கப்படவுள்ள முயற்சிகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட மணல் பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்குப் பயன் தருகின்ற அனைத்து முயற்சிகளையும் பொதுப் பணித் துறை மேற்கொண்டு வருகிறது. நொறுக்கப்பட்ட கல் மணல் பயன்பாட்டை அதிகரிக்க பொதுப் பணித் துறை, கட்டட அமைப்பின்மூலம் தகுதியான நொறுக்கப்பட்ட கல்மணல் தயாரிக்கும் தொழிற்சாலை/தொழிற்கூடத்தினை ஆய்வு செய்து, தரச்சான்று வழங்கப்படுகிறது. பொதுமக்களின் நலன் கருதி, விளம்பரங்களும் வெளியிடப்படுகின்றன.

9.0. செந்தர விலைப்பட்டியல் (Standard Schedule of Rates)

அரசின் அனைத்துத் துறைகளில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கு, மதிப்பீடுகள் தயாரிக்கவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மீதான முடிவுகள் எடுக்கவும் ஒவ்வோர் ஆண்டும் செந்தர விலைப் பட்டியல் குழுவினால், செந்தர விலைப்பட்டியல் (Standard Schedule of Rates) தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறை மூலமாக அனைத்து அரசுத் துறைகளுக்கும் அனுப்பப்படுகிறது.

தமிழ்நாடு பொதுப் பணித் துறை விதித் தொகுப்பு பத்தி 116-ன்படி, செந்தர விலைப் பட்டியல், அந்தந்த வட்டாரத்தில் அச்சமயத்தில்

2020 மார்ச் 18]

நிலவும் பொருட்களின் சந்தை விலையின் அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட செந்தர விலைப் பட்டியலின் முக்கிய குறிக்கோள், பொதுப் பணித் துறையின்மூலம் மேற்கொள்ளப்படும் அரசுப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் மற்றும் ஒப்பந்தங்களின்மூலம் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகளின் வழிகாட்டியாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு பணிக்கான விலை மற்றும் மாறுபட்ட நிலைமைகளை உரிய பகுப்பாய்வு செய்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் செந்தர விலைப் பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

2000-2001 ஆம் நிதியாண்டு வரை பொதுப் பணித் துறையை சார்ந்த வட்டார கண்காணிப்புப் பொறியாளர்களால் செந்தர விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டு வந்தது. உயர் மட்டக் குழுவின் அறிவுரையின்படி, அரசாணை (நிலை) எண் 555, பொதுப்பணி (ஜி2) துறை, நாள் 17-11-1999 மற்றும் அதன் பிறகு வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி, செந்தர விலைப் பட்டியலினை ஆண்டுதோறும் திருத்தி அமைப்பதற்கான குழு நியமிக்கப்பட்டது. அக்குழுவில் (1) முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித் துறை, சென்னை-5, (2) தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை-5, (3) அரசு நிதித் துறையைச் சார்ந்த பிரதிநிதி, சென்னை-9, (4) முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) மற்றும் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்), சென்னை மண்டலம், பொதுப் பணித் துறை, சென்னை-5 மற்றும் (5) தலைமை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, சென்னை-25 ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

மேற்காணும் உறுப்பினர்கள் அடங்கிய குழு, பல்வேறு நிலைகளில் கூட்டங்கள் நடத்தி, தற்சமயம் நிலவும் பொருட்களின் சந்தை விலைகள், இந்திய ரிசர்வ் வங்கி/மத்திய அரசின் நிதி அமைச்சகத்தின் பொருளாதார ஆலோசகரின் அலுவலகத்தின்மூலம் வெளியிடப்படும் மொத்த விலைக் குறியீட்டு எண்கள் மற்றும் மத்திய அரசு தொழிலாளர் பணியகத்தின் வாயிலாக வெளியிடப்படும் நுகர்வோர் குறியீட்டு எண்கள் முதலான ஆவணங்களை பகுப்பாய்வு செய்த பின்னர், ஒவ்வோர் ஆண்டும் செந்தர விலைப் பட்டியலை நிர்ணயம் செய்கிறது.

[2020 மார்ச் 18

தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துப் பொறியியல் துறைகள்/வாரியங்கள்/பெருநகர மாநகராட்சி/மாநகராட்சிகள்/ நகராட்சிகள் போன்ற அனைத்துத் துறைகளும், தங்களுடைய துறைகளின் வாயிலாக மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகையை நிர்ணயம் செய்வதற்கு, அங்கீகரிக்கப்பட்ட செந்தர விலைப் பட்டியலை பயன்படுத்துகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் செந்தரவிலைப்பட்டியல் (Standard Schedule of Rates) இறுதி செய்யப்பட்ட பின்னர், அதன் அடிப்படையில், தோராய மதிப்பீடு நிர்ணயம் செய்வதற்காக தளபரப்பு விலை விவரப்பட்டியல் (Plinth Area Rates) பொதுப் பணித் துறையால் தயாரிக்கப்படுகிறது. வாடகை மதிப்பீடு செய்வதற்காகவும், பதிவுத் துறை மூலமாக பெறப்படும் முத்திரைத்தாள் வரி வசூலிப்பதற்காகவும் தளபரப்பு விலை விகித அட்டவணை பொதுப் பணித் துறையின் மூலமாக வெளியிடப்பட்டு வருகிறது.

10.0. மாற்றுத் திறனாளிகளுக்கு தடைகளற்ற சூழலை உருவாக்குதல்

மாற்றுத் திறனாளிகள் (சம வாய்ப்புகள், உரிமைகள் பாதுகாப்பு மற்றும் முழு பங்கேற்பு) சட்டம், 1995-ஐ நடைமுறைப்படுத்தும் வகையில், அனைத்து கட்டடங்களிலும் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகளில் தடைகளற்ற சூழலை உருவாக்குவது குறித்த வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. பொது வழிகாட்டுதல்களின்படியும், நிர்ணயிக்கப்பட்ட இடவசதி அடிப்படையிலும் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாற்றுத் திறனாளிகளின் தடைகளற்ற வசதிக்காக, எந்த ஒரு மாற்றுத் திறனாளியும், தனியாக வேறு யாருடைய உதவியும் இன்றி செயல்படுவதற்கு ஏற்ற வகையில் அனைத்து கட்டுமானங்களும் வடிவமைக்கப்படுகின்றன.

ஏற்கெனவே உள்ள கட்டடங்களிலும் மற்றும் புதியதாக கட்டப்படும் கட்டடங்களிலும் கீழ்க்கண்ட வசதிகள் பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறியீட்டுப் பலகைகள்

கட்டடத்தின் சுற்றுப்பாதைகள், சந்திப்புகள், கட்டடத்தின் முக்கியப் பகுதிகளான, கதவுகள், கழிவறைகள், குடிநீர் அமைவிடம், படிக்கட்டுகள் ஆகிய இடங்களிலும் குறியீட்டுப் பலகைகள் பொருத்துதல்.

2020 மார்ச் 18]

படிகள் மற்றும் சாய்தள அமைப்புகளின் இருபுறமும் தெளிவாகப் பாதையை உணரும் வகையில், குறியீட்டுப் பலகைகள் அமைத்தல்

அணுகத்தக்க நுழைவாயில்

தடைகளற்ற பாதையை உணர்த்த, நுழைவாயிலில் குறியீடுகள் பொருத்துதல்

பார்வையற்றோர் உணரும் வகையில், நுழைவாயிலில் வித்தியாசமான தரை ஓடுகள் (Tactile Tiles) பொருத்துதல்

சாய்தள அமைப்பு

ஒவ்வொரு கட்டடத்திலும் மாற்றுத் திறனாளிகள் உபயோகிக்கும் வகையில் சாய்தளத்துடன் நுழைவாயில் அமைத்தல், உரிய கைப்பிடி அமைத்தல் மற்றும் அதற்கான குறியீடுகள் பொருத்துதல் சாய்தள அமைப்பு தரையில் வழுக்காத தரை ஓடுகள் (Anti-Skid Tiles) பொருத்துதல்

கழிவறைகள்

கழிவறைகளின் தரைகள் சமதளமாகவும், வழுக்காத தரை ஓடுகள் (Anti-Skid Tiles) கொண்டும் பொருத்துதல்

இலகுவான சறுக்கி செல்லும் (Sliding Door) வகையிலான PVC கதவுகள் பொருத்துதல்

கிடைமட்ட மற்றும் செங்குத்து வகையிலான கைப்பிடிகளைப் பொருத்துதல்

மேற்கத்திய கழிவறை அமைத்தல்

கழிவறைகளின் உட்புறங்களில் கைப்பிடிகள் அமைத்தல்

கழிவறை பயன்பாட்டில் உள்ளது என்பதனை உணர்த்தும் குறியீடுகள் பொருத்துதல்

மின்தூக்கி

ஒவ்வொரு கட்டடத்திலும் மின்தூக்கி அமைத்தல்

மின்தூக்கியினை இயக்கும் பொத்தான் அருகில் கைப்பிடிகள் அமைத்தல்

[2020 மார்ச் 18

மின்தூக்கியின் உட்புறத்தில் கட்டடத் தளங்களை அறியவும் மற்றும் மின்தூக்கியின் கதவுகள் திறந்து/மூடுவதைத் தெரிவிக்கும் கேட்பொலி கருவி நிறுவுதல்.

பார்வையற்றோர்கள் உணரும் வகையிலான மேலெழுந்த எழுத்துருக்கள் பொருத்துதல் (Braille/Raised Letters).

11.0. துறைவாரியான கட்டடப் பணிகள்

11.1. கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை

கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறையில் ரூ.162.22 கோடி மதிப்பீட்டிலான 198 கட்டுமானப் பணிகளில், 3 பணிகள் முடிக்கப்பட்டன. 120 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 75 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXI) 2 இடங்களில் ஊரக கால்நடை மருந்தகக் கட்டடங்கள் கட்டும் பணி	0.42
2	நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXII) 1 இடத்தில் கால்நடை மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி	0.52
	நடைபெற்று வரும் பணிகள்	
1	நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXII) 8 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடங்கள் கட்டும் பணி	2.83
2	நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXIII) 24 இடங்களில் கால்நடை மருந்தகங்கள் மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடங்கள் கட்டும் பணி	7.56

2020 மார்ச் 18]

3	நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXIV) 87 இடங்களில் கால்நடை மருந்தகங்கள், கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடம் கட்டும் பணி	35.48
4	சேலம் மாவட்டம், தலைவாசலில் கால்நடை ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில், கால்நடை மற்றும் விலங்கு அறிவியலுக்கான ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மையக் கட்டடம் கட்டும் பணி	82.13

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXII) 2 இடங்களில் ரூ.46.20 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள்.

2) நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXIII) 15 இடங்களில் ரூ.4.77 கோடி மதிப்பீட்டில் கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள்.

3) நபார்டு வங்கி நிதி உதவியுடன் (கட்டம் XXIV) 55 இடங்களில் ரூ.21.07 கோடி மதிப்பீட்டில் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு கட்டடம் கட்டும் பணிகள்.

4) கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் மாவட்ட நேரடி கொள்முதல் பண்ணை வளாகத்தில் அடுக்குவீடு கட்டடம் கட்டும் பணிகள்.

5) தஞ்சாவூரில் ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

[2020 மார்ச் 18

6) திருப்பூரில் ரூ.2.49 கோடி மதிப்பீட்டில் கால்நடை சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி.

11.2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் ரூ.9.52 கோடி மதிப்பீட்டிலான 25 கட்டுமானப் பணிகளில், 1 பணி முடிக்கப்பட்டது. 24 பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணியின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	சென்னையில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான விடுதிக் கட்டடங்களைப் புதுப்பிக்கும் பணி	8.32
	நடைபெற்று வரும் பணி	
1	சென்னை மாவட்டத்தில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ, மாணவிகளுக்கான 13 விடுதிகளில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு நிறுவுதல் மற்றும் 11 விடுதிகளில் உணவருந்தும் அறைகலன்கள் வாங்குதல் ஆகிய பணிகள்	1.20

11.3. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையில் ரூ.133.25 கோடி மதிப்பீட்டிலான 147 கட்டுமானப் பணிகளில், 1 பணி முடிக்கப்பட்டது. 111 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 35 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர்களுக்கான சூரிய எரிசக்தி அமைப்புடன்கூடிய 1 விடுதிக் கட்டடம் கட்டும் பணி	0.93
	நடைபெற்று வரும் பணிகள்	
1	கட்டம்-21 திட்டத்தின்கீழ், 3 கள்ளர் மேல்நிலை, உயர்நிலை பள்ளிகளுக்கு கூடுதல் ஆய்வகக் கட்டடங்கள், கூடுதல் கழிப்பறை கட்டடங்கள், சுற்றுச்சுவர் மற்றும் தண்ணீர் வசதி ஆகிய பணிகள்	1.04
2	கட்டம்-22 திட்டத்தின்கீழ், 4 கள்ளர் தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிப்பறை, சுற்றுச்சுவர் மற்றும் தண்ணீர் வசதி ஆகிய பணிகள்	1.60
3	கட்டம்-24 திட்டத்தின்கீழ், 99 கள்ளர் தொடக்க/நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள், கூடுதல் கழிப்பறை, சுற்றுச்சுவர் மற்றும் தண்ணீர் வசதி ஆகிய பணிகள்	25.08
4	5 இடங்களில் சூரிய எரிசக்தி அமைப்புடன்கூடிய பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் கட்டும் பணி	9.29

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

1) 8 இடங்களில் ரூ.16.74 கோடி மதிப்பீட்டில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர்களுக்கான சூரிய எரிசக்தி அமைப்புடன்கூடிய விடுதிக் கட்டடங்கள் கட்டும் பணிகள்.

2) 14 இடங்களில் ரூ.38.00 கோடி மதிப்பீட்டில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர்களுக்கான சூரிய எரிசக்தி அமைப்புடன் கூடிய விடுதிக் கட்டடங்கள் கட்டும் பணிகள்.

3) 12 இடங்களில் ரூ.39.57 கோடி மதிப்பீட்டில், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல மாணவர்களுக்கான சூரிய எரிசக்தி அமைப்புடன்கூடிய விடுதிக் கட்டடங்கள் கட்டும் பணிகள்.

4) சென்னையில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில், பிற்படுத்தப்பட்டோர் இயக்கக அலுவலகம், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்கக அலுவலகம், கூட்ட அரங்கு, பிற அலுவலர்கள் அறை மற்றும் பணியாளர் அரங்கு ஆகிய கட்டடங்களை நவீனப்படுத்தும் பணி.

11.4. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் ரூ.3.32 கோடி மதிப்பீட்டிலான 2 கட்டுமானப் பணிகளில், 1 பணி முடிக்கப்பட்டது மற்றும் 1 பணி தொடங்கப்படவுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கட்டடம் கட்டும் பணி	1.87

2020 மார்ச் 18]

தொடங்கப்படவுள்ள பணியின் விவரம் பின்வருமாறு:-

சென்னை, இராயபுரத்தில் ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் மத்திய கூட்டுறவு வங்கிக் கட்டடம் கட்டும் பணி.

11.5. வணிக வரி மற்றும் பதிவுத் துறை

வணிக வரி மற்றும் பதிவுத் துறையில் ரூ.219.74 கோடி மதிப்பீட்டிலான 67 கட்டுமானப் பணிகளில், 10 பணிகள் முடிக்கப்பட்டன. 34 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 23 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	திண்டுக்கல் மாவட்டம், பழனி வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.54
2	கோயம்புத்தூர் மாவட்டம், தொண்டாமுத்தூரில் சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	0.73
3	சென்னை மாவட்டம், சென்னை (வடக்கு), திருவள்ளூர் மாவட்டம், நசரத்பேட்டை/ கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி/ நாமக்கல் மாவட்டம், நாமக்கல் ஆகிய 4 இடங்களில் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	41.31
4	கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை/ விழுப்புரம் மாவட்டம், நாகலூர் ஆகிய 2 இடங்களில் சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.82
5	மதுரை ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடத்தில் 3 எண்ணிக்கை மின் தூக்கி மாற்றும் பணி	0.70

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
6	திருநெல்வேலி ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடத்தில் ஒரு எண்ணிக்கை மின் தூக்கி பொருத்தும் பணி	0.28
	நடைபெற்று வரும் பணிகள்	
1	இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம்/தருமபுரி மாவட்டம், பாலகோடு/விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் ஆகிய 3 இடங்களில் வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	4.44
2	சென்னை மாவட்டம், கிண்டி, ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	73.18
3	சேலம் மாவட்டம், சேலம்/திருப்பூர் மாவட்டம், திருப்பூர்/சென்னை மாவட்டம், நொளம்பூர்/தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை/ தென்காசி மாவட்டம், தென்காசி ஆகிய 5 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	12.53
4	செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மற்றும் சேலையூர் ஆகிய 2 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.90
5	சென்னை பதிவுத் துறை தலைவர் அலுவலக வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி	3.74

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
6	திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர், இராதாபுரம்/ திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, அம்பத்தூர், கொன்னூர்/ நாகப்பட்டினம் மாவட்டம், தகட்டூர்/மதுரை மாவட்டம், புதுதாமரைப்பட்டி/ சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஆகிய 8 இடங்களில் சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	7.34
7	காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம்/வேலூர்மாவட்டம், கன்னியம்பாடி/ திருவண்ணாமலை மாவட்டம், தானிபாடி/ மதுரை மாவட்டம், வாடிப்பட்டி/தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு/திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர், துவரங்குறிச்சி/சென்னை மாவட்டம் ஆலந்தூர்/புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை ஆகிய 9 இடங்களில் சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	8.45
8	சென்னை, கிரீம்ஸ் சாலை, பேரறிஞர் அண்ணா பவள விழா நினைவு கட்டடத்தில் 2 எண்ணிக்கை மின் தூக்கி மாற்றும் பணி	0.58
9	கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடத்தில் 2 எண்ணிக்கை மின்தூக்கி மாற்றும் பணி	0.32
10	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	0.84

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
11	திருச்சிராப்பள்ளி ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	20.83
12	சென்னை கிரீம்ஸ் சாலை வணிக வரி அலுவலக வளாகத்தில் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவக கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி	5.37

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:-

1) சென்னை ஜார்ஜ் டவுனில் ரூ.9.70 கோடி மதிப்பீட்டில் பதிவுத் துறை பாரம்பரிய கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி.

2) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூரில் ரூ.74.80 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

3) அரக்கோணம் வணிக வரி அலுவலகக் கட்டடத்தின்மீது ரூ.84.33 இலட்சம் மதிப்பீட்டில் திருத்தணி வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

4) கடலூர் மாவட்டம், விருதாச்சலம் மற்றும் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி ஆகிய 2 இடங்களில் ரூ.4.37 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

5) விழுப்புரம் மாவட்டம், சத்தியமங்கலம்/காஞ்சிபுரம் மாவட்டம், சாலவாக்கம்/திருவண்ணாமலை மாவட்டம், கடலாடி மற்றும் மங்கலம்/ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி/ஈரோடு மாவட்டம், புஞ்சைபுளியம்பட்டி மற்றும் திங்களூர்/ விருதுநகர் மாவட்டம், வீரசோழன்/ அரியலூர் மாவட்டம், இரும்புலிக்குறிச்சி/சேலம் மாவட்டம், தலைவாசல்/தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர்,

உள்ளிக்கோட்டை, நாச்சியார்கோவில்/ திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம், பண்மொழி, நசரத்/ தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி/தேனி மாவட்டம், கடமலைகுண்டு ஆகிய 18 இடங்களில் ரூ.18.18 கோடி மதிப்பீட்டில் சார்-பதிவாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

11.6. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையில் ரூ.51.95 கோடி மதிப்பீட்டிலான 9 கட்டுமானப் பணிகளில், 5 பணிகள் முடிக்கப்பட்டன. 2 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 2 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம்/திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை மற்றும் தேனி மாவட்டம், தேனி ஆகிய 3 இடங்களில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி	5.87
2	திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிலக வளாகத்தில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி	1.93
3	கோயம்புத்தூர் மாவட்டம், குறிச்சியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.80

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	நடைபெற்று வரும் பணிகள்	
1	சென்னை மாவட்டம், வேளச்சேரியில் வனத் துறைக்கான அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	30.00
2	சேலம் மாவட்டம், தளவாய்ப்பட்டி தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வுக்கூடம் கட்டும் பணி	2.00

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) கரூர் மாவட்டம், தான்தோன்றிமலையில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் ஆய்வுக்கூடம் கட்டும் பணி.

2) சென்னை, வண்டலூரில் ரூ.8.35 கோடி மதிப்பீட்டில் நவீன வன பாதுகாப்பு மைய (ஆராய்ச்சி பயிற்சி மற்றும் கல்வி) வளாகத்தில் வனவாழ்வினை பாதுகாத்தல் மற்றும் உலகத் தரம் வாய்ந்த விடுதி ஆகிய கட்டடங்கள் கட்டும் பணி.

11.7. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையில் ரூ.5.32 கோடி மதிப்பீட்டிலான 2 கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரியில் நகர்ப்புற திறந்தவெளிச் சந்தையில் நவீன ஆவின் வளாகம் அமைக்கும் பணி	0.32
2	செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நகர்ப்புற திறந்தவெளிச் சந்தை அமைக்கும் பணி	5.00

11.8. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் ரூ.7,005.34 கோடி மதிப்பீட்டிலான 110 கட்டுமானப் பணிகளில், 33 பணிகள் முடிக்கப்பட்டன. 48 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 29 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	சென்னை, கிண்டி, கிங் நோய் தடுப்பு மருந்து நிலைய மைய வளாகத்தில் தேசிய முதுமையடைதல் மையக் கட்டடம் கட்டும் பணி	87.99
2	சென்னை, அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை வளாகத்தில் அரசு யோகா மற்றும் இயற்கைவழி மருத்துவக் கல்லூரியில் பெண்கள் விடுதி கட்டடம் கட்டும் பணி	12.45

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
3	சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனையில் மகளிர் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை கட்டடம் கட்டும் பணி	2.64
4	கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டும் பணி	269.59
5	மதுரை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு கூடுதல் விடுதி கட்டடம் கட்டும் பணி	6.38
6	மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் செவிலியர் பயிற்சி பள்ளிக் கட்டடம் கட்டும் பணி	7.51
7	தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை அரங்குடன்கூடிய புறநோயாளி பிரிவுக் கட்டடம் கட்டும் பணி	3.74
8	சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவின் நான்காம் தளத்தின்மீது ஐந்து முதல் எட்டு தளங்கள் கட்டடம் கட்டும் பணி	42.88
9	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் செவிலியர் பள்ளிக் கட்டடம் கட்டும் பணி	7.86
10	சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரியில், தடயவியல் மருத்துவ பிரிவுக்கான கட்டடம் மற்றும் தீக்காயப் பிரிவுக் கட்டடம் கட்டும் பணி	5.84

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
11	சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை அரங்கம் மற்றும் விபத்துக்கால சிகிச்சை பிரிவை இணைக்கும் நடைபாதை அமைக்கும் பணி	0.45
12	மதுரை மாவட்டம், இராஜாஜி அரசு மருத்துவமனையில் தீக்காயப் பிரிவுக் கட்டடம் கட்டும் பணி	2.18
13	செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியில் ஏற்கெனவே உள்ள முடநீக்கியல் துறை கட்டட தரைதளத்தின்மீது முதல் மற்றும் இரண்டாம் தளக் கட்டடம் கட்டும் பணி	3.41
14	தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ஏற்கெனவே உள்ள சமையலறை மற்றும் உணவருந்தும் அறைக் கட்டடத்தின்மீது செவிலியர் பள்ளி ஆண்கள் விடுதிக் கட்டடம் கட்டும் பணி	1.27
15	விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் அரசு மருத்துவமனையினை அரசு வட்டார மருத்துவமனையாக தரம் உயர்த்துவதற்கான கட்டடங்கள் கட்டும் பணி	1.12
16	சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கை மாற்று (Hand Transplant) அறுவை சிகிச்சை அரங்கம் கட்டும் பணி	4.80

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
17	தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி	1.00
18	சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரியில் ஏற்கெனவே உள்ள மன நல பிரிவு கட்டடத்தில், கல்வியியல் அறை, கருத்தரங்கு கூடத்துடன்கூடிய நூலகம் கட்டும் பணி	0.75
19	திருச்சி கி.ஆ.பெ. விஸ்வநாதம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பயிலரங்கக் கட்டடத்தில் உள்ள செயல்விளக்க அரங்கத்தினை விரிவாக்கம் செய்யும் பணி	3.69
20	தேனி மாவட்டம், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஏற்கெனவே உள்ள விடுதிக் கட்டடத்தின்மீது இரண்டாம் தளம் (100 மாணவர்கள்) மற்றும் மூன்றாம் தளத்தில் (200 மாணவர்கள்) செவிலியர் கூடுதல் விடுதிக் கட்டடம் கட்டும் பணி	2.14
21	சென்னை அரும்பாக்கம் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனையின் அரசு சித்தா மருத்துவ கல்லூரிக்கான நோயியல் ஆய்வகம், அருங்காட்சியகம் மற்றும் வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணி	1.43
22	சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் உள்ள பல்வேறு துறை கட்டடங்களுக்கான உட்கட்டமைப்பு வசதி, மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள்	4.04
23	தமிழகத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டடங்களில் சாய்வு தள அமைப்பு நிறுவுதல்	8.65

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
24	வேலூர், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா நினைவக அரசு மருத்துவமனை கட்டடங்களில் தீத் தடுப்பு பாதுகாப்பு அமைப்பு நிறுவுதல் மற்றும் சாய்வுதள அமைப்பு நிறுவுதல்	5.24
25	அரசு மருத்துவமனைகளில் தீத் தடுப்பு பாதுகாப்பு அமைப்பு நிறுவுதல் மற்றும் சாய்வுதள அமைப்பு நிறுவுதல்	8.22
26	சென்னை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை வளாகத்தில் செவிலியர் கல்லூரி கட்டடம் கட்டும் பணி	1.03
27	சென்னை, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி சி.ஆர்.ஆர்.ஐ. குடியிருப்பு (ஆண்கள் மற்றும் பெண்கள்) மற்றும் உள்ளுறை குடியிருப்புகள் கட்டடம் கட்டும் பணி	15.19
28	கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ளுறை குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி	3.65
29	சென்னை மருத்துவக் கல்லூரியில், இளநிலை மாணவர் விடுதி கட்டடத்திற்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி	0.65
30	சென்னை எழும்பூர் அரசு குழந்தை நல மருத்துவமனை மற்றும் அரசு மகப்பேறு மருத்துவமனையில் தீத் தடுப்பு உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்பு நிறுவும் பணி	4.10

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
31	தமிழகத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டடங்களில் தீத் தடுப்பு பாதுகாப்பு அமைப்பு நிறுவுதல் மற்றும் சாய்வுதள அமைப்பு நிறுவுதல்	32.64
32	சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டும் பணி	4.00
33	தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கட்டடங்கள் கட்டும் பணி	309.28
	நடைபெற்று வரும் பணிகள்	
1	தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் கட்டடங்கள் கட்டும் பணி	723.74
2	சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்டும் பணி	62.30
3	சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் முடக்கு வாதவியல் பிரிவு கட்டடம் கட்டும் பணி	23.12

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
4	சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் சிறுநீரகவியல் மற்றும் சிறுநீரகத் துறைக்கான கட்டடம் கட்டும் பணி	35.36
5	சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கல்லீரல் இயல் துறை கட்டடம் கட்டும் பணி	21.73
6	சென்னை, கே.கே. நகர் அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி	2.50
7	தருமபுரி மாவட்டம், விருப்பாட்சிபுரத்தில் சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	2.00
8	சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் தீக்காய பிரிவுக் கட்டடம் கட்டும் பணி	2.18
9	விருதுநகர் அரசு செவிலியர் பயிற்சி பள்ளியில் கட்டடங்கள் கட்டும் பணி	5.20
10	கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீக்காய பிரிவுக் கட்டடம் கட்டும் பணி	2.18
11	திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணி	17.44
12	திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரியில் பயிற்றுனரல்லாத அலுவலர் குடியிருப்பு கட்டும் பணி	3.26

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
13	மதுரை மாவட்டம், மதுரை மருத்துவக் கல்லூரியில் பயிலரங்கக் கட்டடம், செவிலியர் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி	37.25
14	வேலூர் மாவட்டம், வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தீக்காயப் பிரிவு கட்டடம் கட்டும் பணி	2.18
15	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரியில் 12 படுக்கை கொண்ட மருத்துவ பிரிவுடன்கூடிய 4 அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் அறுவை சிகிச்சை அரங்கம் கட்டும் பணி	2.18
16	சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி கண் சிகிச்சை பிரிவு கட்டடத்தின் தரைதளத்தின்மீது முதல் மற்றும் இரண்டாம் தளம் கட்டும் பணி	3.09
17	விருதுநகர் அரசு தலைமை மருத்துவமனை செவிலியர் பள்ளிக்கு கூடுதல் விடுதி கட்டடம் கட்டும் பணி	3.03
18	கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கல்வியியல் கட்டடத்தில் ஆய்வகம் கட்டும் பணி	5.64
19	கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் விரிவுரையாளர் அரங்கம் (2 X 180) கட்டும் பணி	2.28
20	கன்னியாகுமரி மாவட்டம், ஆசாரிப்பள்ளம் அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கூடுதல் நூலகக் கட்டடம் கட்டும் பணி	2.54

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
21	தமிழகத்திலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டடங்களில் உள்ள மின்னாக்கி மற்றும் உயர் அழுத்த மின் அமைப்புக்கான கட்டுமானங்கள் நிறுவும் பணி	16.92
22	திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 300 படுக்கைகள் கொண்ட மருத்துவப் பிரிவு கட்டடத்தில் தீத் தடுப்பு பாதுகாப்பு அமைப்பு நிறுவுதல்	2.90
23	சென்னை எழும்பூர் அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் அரசு மகப்பேறு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்டும் பணி	19.78
24	சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் தொற்று நோய் பிரிவு மற்றும் சுவாச அவசர பிரிவு கட்டடம் கட்டும் பணி	27.05
25	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் 50 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனை கட்டடம் கட்டும் பணி	6.50
26	புதுக்கோட்டை மாவட்டம், அரசு இராணி மருத்துவமனையில் இரண்டடுக்கு அமைப்பு நிறுவும் பணி	1.37
27	திருப்பத்தூர் மாவட்டம், நாட்றாம்பள்ளியில் உள்ள அரசு மருத்துவமனையில் புறநோயாளி பிரிவு மற்றும் மறுவாழ்வு மையக் கட்டடம் கட்டும் பணி	2.00

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
28	மதுரை மாவட்டம், மதுரை மருத்துவக் கல்லூரி மருந்தியல் கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் கட்டும் பணி	3.32
29	செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உலகத் தரம் வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை அறிவியில் மையக் கட்டடம் கட்டும் பணி	65.00
30	மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அரசு தலைமை மருத்துவமனையில் வெளிநோயாளி பிரிவு, சிறுநீரக சிகிச்சைப் பிரிவு மற்றும் கண் சிகிச்சைப் பிரிவு கட்டடம் கட்டும் பணி	2.75
31	சென்னை மருத்துவக் கல்லூரி/இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் திறன் மையக் கட்டடம் கட்டும் பணி	1.10
32	சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை மற்றும் மண்டல கண் மருத்துவமனை வளாகத்தில் நூற்றாண்டு கட்டடம் கட்டும் பணி	65.60
33	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் ஏற்கெனவே உள்ள கல்வியியல் கட்டடத்தின் மூன்றாம் தளத்தில் மைய ஆராய்ச்சி ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி	0.72
34	சென்னை, கிண்டி நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி	1.50
35	தூத்துக்குடி, கோவில்பட்டி மற்றும் விழுப்புரம் ஆகிய இடங்களில் சுகாதாரத் துறை துணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	3.58

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
36	சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், கோனேரிப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மற்றும் அறுவை சிகிச்சை அரங்கம் கட்டும் பணி	1.40
37	மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் மருந்தியல் துறை கூடுதல் கட்டடம் கட்டும் பணி	2.88
38	விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அரசு மருத்துவமனையில் கண் சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி	1.63
39	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் ஏற்கெனவே உள்ள நூலகக் கட்டடத்தின்மீது இரண்டாம் தளத்தில் மைய ஆராய்ச்சி ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி	0.71
40	சென்னை தேனாம்பேட்டை, டி.எம். எஸ். வளாகத்தில் உள்ள சுகாதாரத் துறை கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் மறுகட்டுமானம் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல்	2.49
41	சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஹெபடாலஜி துறை கட்டடத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளுதல்	1.71
42	காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சாய்தள அமைப்பு நிறுவும் பணி	1.29
43	திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்லில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி	327.00

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
44	இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி	345.00
45	விருதுநகர் மாவட்டம், விருதுநகரில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி	380.00
46	நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி	338.76
47	கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி	338.95
48	நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினத்தில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி	366.85

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு சித்தா மருத்துவக் கல்லூரியில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புதிய பன்னடுக்குமாடிக் கட்டடம் கட்டும் பணி.

2) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு சித்தா மருத்துவக் கல்லூரியில் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம் கட்டும் பணி.

3) தேசிய ஊரக சுகாதார இயக்கத் திட்டத்தின்கீழ் ரூ.26.07 கோடி மதிப்பீட்டில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டுதல்.

2020 மார்ச் 18]

4) சென்னை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் உள்ள மருந்தக கல்லூரிக்கான கட்டடத்தில் ரூ.38.00 இலட்சம் மதிப்பீட்டில் 13 நபர்களுக்கான 1 எண்ணிக்கை மின்தூக்கி புதுப்பிக்கும் பணி.

5) சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் ரூ.7.12 கோடி மதிப்பீட்டில் மாணவர்களுக்கான கூடுதல் விடுதிக் கட்டடம் (50 அறைகள்) கட்டும் பணி.

6) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.67.76 கோடி மதிப்பீட்டில் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனைக் கட்டடம் கட்டும் பணி.

7) தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் இராஜா மிராசுதார் மருத்துவமனையில் ரூ.16.47 கோடி மதிப்பீட்டில் கண் சிகிச்சை மையக் கட்டடம் கட்டும் பணி.

8) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையில் ரூ.3.66 கோடி மதிப்பீட்டில் 4 படுக்கை அவசர சிகிச்சை மையம் மற்றும் பொது அறுவை சிகிச்சை மையம் மற்றும் அறுவை சிகிச்சை அறையுடன்கூடிய 24 படுக்கைகள் கொண்ட ஆண்கள் மருத்துவ பகுதி, 24 படுக்கைகள் கொண்ட பெண்கள் மருத்துவ பகுதி கட்டடம் கட்டும் பணி.

9) திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் ரூ.336.96 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி.

10) நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் ரூ.447.32 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி.

11) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் ரூ.385.63 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி.

12) அரியலூர் மாவட்டம், அரியலூரில் ரூ.347.00 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி.

[2020 மார்ச் 18

13) கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ரூ.381.76 கோடி மதிப்பீட்டில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் கட்டும் பணி.

14) காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை அரசு அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை வளாகத்தில் ரூ.118.46 கோடி மதிப்பீட்டில் புற்று நோய் சிகிச்சைக்கான கட்டடங்கள் கட்டும் பணி.

15) சென்னை கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.19.50 கோடி மதிப்பீட்டில் முதுமையடைதலுக்கான தேசிய மையக் கட்டடம் கட்டும் பணி.

16) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் ரூ.60.52 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டுதல் மற்றும் ஏற்கெனவே உள்ள கட்டடங்களைச் சீரமைத்தல் பணிகள்.

17) சென்னை, மனநல மையத்தில் ரூ.2.36 கோடி மதிப்பீட்டில் மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லக் கட்டடம் கட்டும் பணி

18) திருச்சி கீ.ஆ.பெ. விஸ்வநாதம் மருத்துவக் கல்லூரியில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் ஏற்கெனவே உள்ள தேர்வு அரங்கத்திற்கு மேல் முதல் தளத்தில் கூடுதல் தேர்வு அரங்கம் கட்டும் பணி.

19) சென்னை கிண்டி கிங் நோய்த் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ரூ.2.18 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்பு சுவர் அமைக்கும் பணி.

20) கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.124.25 கோடி மதிப்பீட்டில் பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் பணி.

21) மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.131.69 கோடி மதிப்பீட்டில் பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் பணி.

2020 மார்ச் 18]

22) சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.144.09 கோடி மதிப்பீட்டில் பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் பணி.

23) சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.79.90 கோடி மதிப்பீட்டில் தீத் தடுப்பு வசதிகள், உட்புறச் சாலைகளை மேம்படுத்துதல், இணைப்பு பாதைகள் அமைத்தல் ஆகிய பணிகள்.

24) அரியலூர் மற்றும் அறந்தாங்கி ஆகிய இடங்களில் ரூ.2.24 கோடி மதிப்பீட்டில் சுகாதாரத் துறை துணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

25) மதுரை மாவட்டம், மேலக்குடியில் ரூ.12.60 கோடி மதிப்பீட்டில் மருந்து பாிசோதனை ஆய்வகம், மதுரை மண்டல அலுவலகம் மற்றும் நடமாடும் ஆராய்ச்சி மையக் கட்டடம் ஆகிய பணிகள்.

26) சென்னை, கே.கே.நகர் அரசு புனர்வாழ்வு மருந்துத் துறை நிறுவன வளாகத்தில், ரூ.27.95 கோடி மதிப்பீட்டில் புனர்வாழ்வுக்கான சிறப்பு மையக் கட்டடம் கட்டும் பணி.

27) கோயம்புத்தூர், அரசு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரியில் ரூ.80.98 கோடி மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டும் பணி.

28) கன்னியாகுமாி அரசு மருத்துவக் கல்லூாி மருத்துவமனையில் ரூ.10.94 கோடி மதிப்பீட்டில் இதர கட்டடங்கள் கட்டுதல் மற்றும் விாிவுரையாளர் அரங்கத்தினைப் புதுப்பிக்கும் பணி.

29) திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூாி மருத்துவமனை வளாகத்தில் ரூ.1.58 கோடி மதிப்பீட்டில் 11 கே.வி. உயர் அழுத்த மின்சார வசதி ஏற்படுத்துதல், இதர பணிகள் மற்றும் ஏற்கெனவே உள்ள மின் அமைப்புகளை மாற்றியமைத்தல் மற்றும் புதுப்பிக்கும் பணி.

11.9. நீதித் துறை

நீதித் துறையில், ரூ.706.26 கோடி மதிப்பீட்டிலான 82 கட்டுமானப் பணிகளில், 17 பணிகள் முடிக்கப்பட்டன. 41 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 24 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் முக்கிய பிரமுகர்களுக்கான விருந்தினர் மாளிகை கட்டும் பணி	1.85
2	திருவண்ணாமலை மாவட்டம், போளூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றம், பணியாளர்கள் உணவகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் (2 எண்ணிக்கை) கட்டும் பணி	6.46
3	வேலூர் மாவட்டம், ஆற்காடு மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித் துறை நடுவர் குடியிருப்பு கட்டும் பணி	0.50
4	திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் பணி	7.23
5	சென்னையில் தமிழ்நாடு நீதித் துறை அகாடமி, மல்லிகை கட்டட வளாகத்தில் பழைய கட்டடத்தினை சீரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி	1.55
6	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடியில் மாநகர உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் எஞ்சியுள்ள கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் பணி	5.05
7	விழுப்புரம் மாவட்டம், விழுப்புரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி	23.51

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
8	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் கட்டடத்திலுள்ள அலுவலகம் மற்றும் பிரிவுகளுக்கு குளிர்சாதன வசதி மேற்கொள்ளும் பணி	1.00
9	கடலூர் மாவட்ட முதன்மை நீதிபதி குடியிருப்பு வளாகத்தில், சீரமைக்கும் பணி மற்றும் அணுகுசாலை அமைத்தல்	0.96
10	கடலூர் நீதிபதிகளுக்கான குடியிருப்பு வளாகத்தில், தலைவர், நிரந்தர லோக் அதாலத் மற்றும் செயலாளர், மாவட்டச் சட்ட சேவை ஆணையம் ஆகியோருக்கு குடியிருப்பு கட்டும் பணி	1.54
11	மதுரை மாவட்டம், மதுரை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தடுப்புச் சுவர் மற்றும் பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணி	2.64
12	கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தின் இரண்டாம் தளத்தின்மீது கூடுதல் நீதிமன்றக் கட்டடம் (2 எண்ணிக்கை) கட்டும் பணி	3.20
13	தருமபுரி மாவட்டம், அரூரில் சார்பு நீதிபதி மற்றும் மாவட்ட உரிமையியல் நீதித் துறை நடுவர் குடியிருப்புகள் கட்டும் பணி	1.60
14	ஈரோடு மாவட்டம், ஈரோடு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக கட்டடத்தில் உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடத்திற்கு இணைப்புப் பாதை அமைக்கும் பணி	0.40

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
15	விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் மாவட்ட முதன்மை நீதிபதி மற்றும் குற்றவியல் நீதித் துறை நடுவர் குடியிருப்பு கட்டும் பணி	1.01
16	சேலம் மாவட்டம், சங்கரியில் உள்ள நீதித் துறை நடுவர்-1 மற்றும் 2 குடியிருப்பு வளாகத்திற்கு சுற்றுச் சுவர் கட்டும் பணி	0.07
17	சேலம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வழக்குரைஞர்களுக்கான உணவருந்தும் அறை மற்றும் கூட்ட அரங்குக் கட்டடம் கட்டும் பணி	1.64
	நடைபெற்று வரும் பணிகள்	
1	திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நீதிபதி குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி	3.02
2	தென்காசி மாவட்டம், தென்காசியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டும் பணி	15.17
3	வேலூர் மாவட்டம், ஆற்காட்டில் நீதிமன்ற கட்டடம் மற்றும் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் கட்டும் பணி	3.78
4	மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி	7.05
5	தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு/ நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் மற்றும் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஆகிய 3 இடங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி	64.42

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
6	திருப்பூரில் மாற்றுமுறை தீர்வு மையக் கட்டடம் கட்டும் பணி	1.32
7	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் முக்கிய பிரமுகர்களுக்கான விருந்தினர் மாளிகை கட்டும் பணி	2.39
8	நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றம், வழக்குரைஞர் சங்கக் கட்டடம் மற்றும் 49 சட்ட அலுவலர்களுக்கான கட்டடம் கட்டும் பணி	28.73
9	மதுரை மாவட்டம், மாட்டுத்தாவணியில் பணியாளர் குடியிருப்பு வளாகத்தில், சென்னை உயர் நீதிமன்ற அலுவலர்களின் குடியிருப்பு (Transit Quarters) கட்டும் பணி	1.76
10	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் முக்கிய பிரமுகர்களுக்கான விருந்தினர் மாளிகை கட்டும் பணி	1.11
11	சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் மாற்றுமுறை தீர்வு மையக் கட்டடம் கட்டும் பணி	4.90
12	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஏற்கெனவே உள்ள நீதிபதிகளுக்கான வாகன நிறுத்துமிடம் கட்டடத்தின்மீது பன்னடுக்கு மாடிக் கட்டடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி	24.00
13	இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் நீதிமன்றக் கட்டடம், நீதிபதிகளுக்கான குடியிருப்பு மற்றும் விருந்தினர் இல்லம் கட்டும் பணி	6.85

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
14	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை பழைய நீதிமன்ற வளாகத்தில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் (6 எண்ணிக்கை) கட்டும் பணி	3.80
15	கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ஏற்கெனவே உள்ள மாவட்ட கூடுதல் நீதிபதி குடியிருப்பு கட்டடத்தின் இரண்டாம் தளத்தின்மீது கூடுதல் குடியிருப்பு கட்டும் பணி	0.35
16	கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம், நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம், உணவகம், பொது கழிவறை மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல் ஆகிய பணிகள்	8.29
17	விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில், நீதித் துறை நடுவர்-1 மற்றும் 2, மாவட்ட முதன்மை நீதிபதி மற்றும் கூடுதல் மாவட்ட நீதிபதி, சிறப்பு நீதிபதி குடியிருப்புகள் கட்டும் பணி	3.34
18	விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உணவகக் கட்டடம் குடியிருப்புகள் கட்டும் பணி	0.49
19	விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில் நான்கு நீதிமன்றங்கள் மற்றும் பிற வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் பணி	9.76

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
20	திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதி குடியிருப்பு கட்டும் பணி	5.25
21	பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூரில் நீதிபதிகள் குடியிருப்பு, நீதித் துறை நடுவர் (நில அபகரிப்பு வழக்குகள்) மற்றும் நீதித் துறை நடுவர் (கூடுதல் மகிளா) குடியிருப்பு கட்டும் பணி	2.63
22	கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிபதி குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி	5.74
23	நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பெருந்திட்ட வளாகத்தில் அமர்வு நீதிபதி, தலைவர், நிரந்தர லோக் அதாலத், நீதித் துறை நடுவர் ஆகியோர்களுக்கு குடியிருப்பு கட்டும் பணி	2.60
24	சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை வளாகத்தில் நீதிபதிகளுக்கான மாளிகைகள் (8 எண்ணிக்கை) கட்டும் பணி	13.57
25	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் பதிவுத் துறை மற்றும் தமிழ் மொழிமாற்றுத் துறை கட்டடத்தின் 5-வது தளத்தில் வசதிகள் ஏற்படுத்தும் பணி	2.74

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
26	திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட நீதிபதிகளுக்கான குடியிருப்பு வளாகத்தில் சுற்றுச் சுவர் மற்றும் குடிநீர் வசதிகள் மேற்கொள்ளும் பணி	0.31
27	திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூரில் சார்பு நீதிபதி குடியிருப்பு கட்டும் பணி	0.72
28	அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம், நீதிபதிகளுக்கான குடியிருப்பு மற்றும் வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணி	24.50
29	கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள தமிழ்நாடு நீதிமன்றக் கழக வளாகத்தில் மிக முக்கிய விருந்தினர் மாளிகை, ஓட்டுநர் ஓய்வு அறை மற்றும் வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி	2.13
30	விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் மாவட்ட நீதிபதி குடியிருப்பு கட்டும் பணி	0.50
31	திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடம், நீதிபதி குடியிருப்புகள் மற்றும் வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணி	12.45

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
32	திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூரில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி	1.44
33	ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், நீதிபதிகள் குடியிருப்பு மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகிய பணிகள்	7.40
34	திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தேர்வு மையக் கட்டடம் கட்டும் பணி	2.41
35	கரூர் மாவட்டம், குளித்தலை நீதிமன்ற வளாகத்தில் சார்பு நீதிமன்ற கட்டடத்தினைப் புதுப்பித்து பாதுகாக்கும் பணி	0.30
36	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அருங்காட்சியகத்திற்கு கூடுதல் வசதிகள் மேற்கொள்ளுதல்	0.76
37	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நவீன கழிவறை வசதி மேற்கொள்ளுதல்	0.32
38	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ஒருங்கிணைந்த தேர்வாணைய மையக் கட்டடம் கட்டும் பணி	1.65
39	சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள பிரதான கட்டடத்தில் தீத் தடுப்பு உபகரணங்கள் பொருத்தும் பணி	0.46

[2020 மார்ச் 18

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) கோயம்புத்தூர் மாவட்டம், ரெட்பீல்டில் ரூ.16.16 கோடி மதிப்பீட்டில் 26 நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி.

2) அரியலூரில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் மாற்றுமுறை தீர்வு மையக் கட்டடம் கட்டும் பணி.

3) கரூரில் ரூ.1.74 கோடி மதிப்பீட்டில் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி.

4) கன்னியாகுமரி மாவட்டம், பூதப்பாண்டியில் ரூ.4.52 கோடி மதிப்பீட்டில் நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி.

5) தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ரூ.6.67 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம், நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்துடன்கூடிய நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் (2 எண்ணிக்கை) கட்டும் பணி.

6) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் பெருநகர நீதிமன்றக் கட்டட மூன்றாம் தளத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளும் பணி.

7) சென்னை, டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி வளாகத்தில் ரூ.202.40 கோடி மதிப்பீட்டில் நீதிமன்றங்களுக்கான பன்னடுக்கு மாடிக் கட்டடம் கட்டும் பணி.

8) நாமக்கல் மாவட்டம், பரமத்தியில் ரூ.10.93 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள், சுற்றுச் சுவர், வாகன நிறுத்துமிடம் மற்றும் உணவகம் ஆகிய கட்டடங்கள் கட்டும் பணி.

9) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ரூ.13.91 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளும் பணி.

2020 மார்ச் 18]

10) திருவள்ளூர், திருச்சி, சேலம் மற்றும் கரூர் ஆகிய 4 ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ரூ.13.20 கோடி மதிப்பீட்டில் விசாரணை மையக் கட்டடம் கட்டும் பணி.

11) சேலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட நீதிமன்றக் கட்டடம், காஞ்சிபுரம் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் மற்றும் கோயம்புத்தூர் குதிரைவண்டி நீதிமன்றக் கட்டடம் ஆகிய பாரம்பரியமிக்க கட்டடங்கள் ரூ.19.93 கோடி மதிப்பீட்டில் பாதுகாத்து மறுகட்டுமானம் செய்யும் பணி.

12) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் ரூ.63.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி.

13) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள பாரம்பரியமிக்க பிரதான கட்டடத்தினை ரூ.35.54 கோடி மதிப்பீட்டில் பாதுகாத்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணி (பகுதி-1).

14) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் ரூ.98.00 இலட்சம் மதிப்பீட்டில் கூடுதல் மாவட்ட நீதிபதி குடியிருப்பு கட்டும் பணி.

15) சென்னை எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிதண்ணீர் வசதி ஏற்படுத்தும் பணி.

16) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில்ரூ .2.13 கோடி மதிப்பீட்டில் தலைவர், நிரந்தர லோக் அதாலத் மற்றும் செயலாளர், மாவட்ட சட்ட மையம் ஆகியோர்களுக்கு குடியிருப்பு கட்டும் பணி.

17) சென்னை, பசுமைவழிச் சாலை அரசு மாளிகை (NCB.21-27) வளாகத்தில் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் உடற்பயிற்சி வசதிகள், நடைபாதை அமைத்தல் முதலான பிற பணிகள் மேற்கொள்ளும் பணி.

18) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் ரூ.35.39 கோடி மதிப்பீட்டில் 10 நீதிமன்ற அறைகளுடன் கூடிய ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் 5 நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி

11.10. சட்டத் துறை

சட்டத் துறையில் ரூ.465.43 கோடி மதிப்பீட்டிலான 20 கட்டுமானப் பணிகளில், 7 பணிகள் முடிக்கப்பட்டன. 8 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 5 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	வேலூர் அரசு சட்டக் கல்லூரியில் பெண்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டும் பணி	3.75
2	திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பட்டரைபெரும்புதூர் கிராமம் அரசு சட்டக் கல்லூரிக்கான கலையரங்கக் கட்டடத்தில் குளிர்சாதன அமைப்பு நிறுவும் பணி	0.99
3	செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், புதுப்பாக்கம் கிராமம் அரசு சட்டக் கல்லூரிக்கான கலையரங்கக் கட்டடத்தில் குளிர்சாதன அமைப்பு நிறுவும் பணி	0.99
4	சென்னை, பெருங்குடி தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக் கழக வளாகத்தில் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான கூடுதல் கட்டடம் கட்டும் பணி	12.66
5	திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், நாவலூர் குட்டப்பட்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளும் பணி	5.24

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
6	விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரிக்கான தற்காலிக கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி	0.34
7	விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி கட்டடம் கட்டும் பணி	70.60
	நடைபெற்று வரும் பணிகள்	
1	மதுரை அரசு சட்டக் கல்லூரியில் கலையரங்கம் மற்றும் நூலகம் கட்டும் பணி	9.97
2	செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் நூலகக் கட்டடம் கட்டும் பணி	4.45
3	தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடம் கட்டும் பணி	69.29
4	கோயம்புத்தூரில் அரசு சட்டக் கல்லூரியில் கலையரங்கம் மற்றும் நூலகக் கட்டடம் கட்டும் பணி	10.17
5	திருச்சிராப்பள்ளியில் அரசு சட்டக் கல்லூரியில் நூலகக் கட்டடம் கட்டும் பணி	3.11
6	செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டம், புதுப்பாக்கம் கிராமம் அரசு சட்டக் கல்லூரி கட்டடத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளும் பணி	0.67

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
7	திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், பட்டரைபெரும்புதூர் கிராமம் அரசு சட்டக் கல்லூரி கட்டடத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளும் பணி	0.43
8	சென்னை, பசுமைவழிச் சாலை பூம்பொழில் வளாகத்தில் அமையவுள்ள மாநில அலுவலக மொழி (சட்டமன்றம்) ஆணையம் அலுவலகத்திற்கு கூடுதல் வசதிகள் மேற்கொள்ளும் பணி	1.35

தொடங்கப்படவுள்ள பணியின் விவரம் பின்வருமாறு:-

1) இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை வட்டம், குத்துக்கொட்டை கிராமத்தில் ரூ.76.61 கோடி மதிப்பீட்டில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டும் பணி.

2) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் ஆகிய 2 இடங்களில் உள்ள அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் ரூ.9.26 கோடி மதிப்பீட்டில் கூடுதல் 10 வகுப்பறைக் கட்டடம், 12 வகுப்பறைக் கட்டடம், பணியாளர்களுக்கான 4 அறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளுதல்.

3) சேலம் மாவட்டம், சேலத்தில் ரூ.96.54 கோடி மதிப்பீட்டில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டும் பணி.

4) தேனி மாவட்டம், தேனியில் ரூ.89.01 கோடி மதிப்பீட்டில் அரசு சட்டக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டும் பணி.

2020 மார்ச் 18]

11.11. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையில் ரூ.284.60 கோடி மதிப்பீட்டிலான 91 கட்டுமானப் பணிகளில், 30 பணிகள் முடிக்கப்பட்டன. 23 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 38 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	நீலகிரி மாவட்டம், கூடலூரில் பழங்குடியினர் மாணவர்களுக்கான அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி	2.68
2	கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில்/ கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம்/ இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி/மதுரை மாவட்டம், மதுரை/ சேலம் மாவட்டம், சேலம்/ திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி/ திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர்/ சென்னை மாவட்டம், கிண்டி ஆகிய 8 இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய கட்டடங்களைப் புனரமைக்கும் பணி	9.20
3	தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி/ திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம்/ கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர்/ மதுரை மாவட்டம், மதுரை/கடலூர் மாவட்டம் கடலூர் (மகளிர்), திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி/சேலம் மாவட்டம், சேலம் (மகளிர்)/இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை/விருதுநகர் மாவட்டம், விருதுநகர்/திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர்/திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்/கரூர் மாவட்டம்,	8.45

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	கரூர்/ சென்னை மாவட்டம், கிண்டி ஆகிய 13 இடங்களில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வகுப்பறை மற்றும் ஆய்வகம் கட்டும் பணி	
4	விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி	4.53
5	இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் அரசு தொழிற்பயிற்சி மைய வளாகத்தில் வகுப்பறை மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி	1.09
6	கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம்/ கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் ஆகிய 2 இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள் கட்டும் பணி	11.09
7	நாகர்கோவில், வேலூர் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	7.05
8	பரமக்குடி மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒன்பது பிரிவுகளுக்கான வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடங்கள் கட்டும் பணி	0.80
	நடைபெற்று வரும் பணிகள்	
1	திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூரில் தொழிலாளர் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி	18.74

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
2	அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம்/ கோயம்புத்தூர் மாவட்டம், தாராபுரம்/ நாமக்கல் மாவட்டம், நாமக்கல்/ இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர்/ திருப்பூர் மாவட்டம், திருப்பூர், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆகிய 6 இடங்களில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வகுப்பறை மற்றும் ஆய்வகம் கட்டும் பணி	6.81
3	தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு/ புதுக்கோட்டை மாவட்டம்,விராலிமலை/ பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர்/ விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஆகிய 4 இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள் கட்டும் பணி	20.62
4	கோயம்புத்தூரில் தொழிலாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக கட்டடம் கட்டும் பணி	4.03
5	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணிகண்டம்/திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் ஆகிய 2 இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய விடுதிகள் கட்டும் பணி	10.30
6	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் புனரமைக்கும் பணி	1.15
7	தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி/ கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி ஆகிய 2 இடங்களில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி	3.76

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
8	கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டபாளையத்தில் ஒருங்கிணைந்த தொழில் துறை பாதுகாப்பு மற்றும் சுகாதார நலக் கூடுதல் இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	3.55
9	திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டும் பணி	5.47
10	திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் மற்றும் விடுதி கட்டும் பணி	4.91
11	மத்திய அரசு நிதியுதவியுடன் கோயம்புத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை மாதிரி தொழிற்பயிற்சி நிலையமாக தரம் உயர்த்துவதற்கான கட்டடங்கள் கட்டும் பணி	2.50
12	ஈரோடு மாவட்டம், பெரியகொடிவேரி அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி மற்றும் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணி	7.07
13	திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தொழிலாளர் நல ஆய்வு நிறுவன கட்டடத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்	3.74

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) சென்னை, ஆர்.கே. நகரில் ரூ.3.53 கோடி மதிப்பீட்டில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி.

2020 மார்ச் 18]

2) சென்னை, ஆர்.கே. நகரில் ரூ.65.40 இலட்சம் மதிப்பீட்டில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் 12 புதிய தொழிலுக்கான வகுப்பறை மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி.

3) சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் 3 இடங்களில் தலா 1,000 தொழிலாளர்கள் தங்கும் விடுதி மற்றும் திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 4 இடங்களில் தலா 500 தொழிலாளர்கள் தங்கும் விடுதி ரூ.74.34 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி.

4) கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் ரூ.3.63 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த தொழிலாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

5) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.27.90 இலட்சம் மதிப்பீட்டில் ஒன்பது தொழிலுக்கான வகுப்பறைகள் மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி.

6) சென்னை மாவட்டம், திருவான்மியூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.32.70 இலட்சம் மதிப்பீட்டில் மெக்கானிக், வெல்டர், எலக்ட்ரீசியன் ஆகிய வகுப்புக்கான கட்டடம் கட்டும் பணி.

7) சென்னை மாவட்டம், திருவான்மியூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.72.00 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை மற்றும் ஆய்வகக் கட்டடம் கட்டும் பணி

8) நாகப்பட்டினம் மாவட்டம், செம்போடை மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம் ஆகிய 2 இடங்களில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.13.77 கோடி மதிப்பீட்டில் கட்டடம் மற்றும் விடுதி கட்டும் பணி.

9) சென்னை மாவட்டம், திருவான்மியூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி.

10) 12 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.38.80 கோடி மதிப்பீட்டில் விடுதி மற்றும் உணவக வசதிகள் ஏற்படுத்தும் பணி.

[2020 மார்ச் 18

11) 10 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.9.19 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் அமைக்கும் பணி.

11.12. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் மைய மின்சாதன சோதனை ஆய்வகத்தில் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் எல்.இ.டி (LED) விளக்குகள் மற்றும் பொருத்துதல் சோதனை மையக் கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

11.13. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையில் ரூ.18.74 கோடி மதிப்பீட்டிலான 2 கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	நடைபெற்று வரும் பணிகள்	
1	ஈரோடு மாவட்டம், பவானிசாகர் குடிமைப் பணி பயிற்சி மைய வளாகத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி	10.00
2	சென்னை, அண்ணா மேலாண்மை நிலைய விடுதிக் கட்டடம் மற்றும் நவீன வகுப்பறைக் கட்டடம் கட்டும் பணி	8.74

11.14. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையில் ரூ.20.14 கோடி மதிப்பீட்டிலான 4 கட்டுமானப் பணிகளில், 1 பணி முடிக்கப்பட்டது, 3 பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை கிடங்கு-II-ல் பொருட்கள் ஏற்றுதல் மற்றும் இறக்குமிடம் (2 எண்ணிக்கை), ஓய்வு அறை, கழிப்பறை (2 எண்ணிக்கை), ஆழ்துளை கிணறு, மேற்கூரை சரிசெய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல்	4.58
	நடைபெற்று வரும் பணிகள்	
1	திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை I மற்றும் III TASMAC கிடங்குகளில் பொருட்கள் ஏற்றுதல், இறக்குமிட தளங்கள், ஓய்வு அறை, கழிவறை, மேற்கூரை, சுற்றுச்சுவர், மழைநீர் வடிகால் வசதிகள் மற்றும் பிற பணிகள் மேற்கொள்ளுதல்	5.56
2	சென்னை மண்டலம், அம்பத்தூர் புதிய TASMAC கிடங்கில் பொருட்கள் ஏற்றுதல் மற்றும் இறக்குமிட தளங்கள், ஆழ்துளைக் கிணறு மற்றும் உட்புற சாலை அமைக்கும் பணி	5.05
3	சென்னை மாவட்டம், அம்பத்தூரில் சென்னை முதுநிலை மண்டல மேலாளர் மற்றும்மாவட்டமேலாளர்,வடசென்னை மற்றும் மத்திய சென்னை அலுவலகக் கட்டடம் மற்றும் கூட்டரங்கக் கட்டடம் ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த கட்டடம் கட்டும் பணி	4.95

11.15. பொதுத் துறை

பொதுத் துறையில் ரூ.1.18 கோடி மதிப்பீட்டிலான 2 கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	சென்னை, தலைமைச் செயலக பிரதான கட்டடத்தின் கதவு எண் 8-ல் உள்ள வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள 10 நபர்களுக்கான 2 எண்ணிக்கை மின்தூக்கிகள் புதுப்பிக்கும் பணி	0.42
2	சென்னை, தலைமைச் செயலக நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டடத்தின் 'ஏ' மற்றும் 'பி' மின்தூக்கிகள் புதுப்பிக்கும் பணி	0.76

11.16. பொதுப் பணித் துறை

பொதுப் பணித் துறையில் ரூ.439.55 கோடி மதிப்பீட்டிலான 57 கட்டுமானப் பணிகளில், 13 பணிகள் முடிக்கப்பட்டன. 28 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 16 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	சென்னை, சேப்பாக்கம் பொதுப் பணித் துறை பிரதான கட்டடம் மற்றும் வட்ட அலுவலக கட்டடங்களை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மின்தூக்கிகள் பொருத்துதல் (13 நபர்களுக்கான 2 எண்ணிக்கை)	2.69

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
2	பொதுப் பணித் துறை, கட்டட அமைப்பின் உபகோட்டத்தில் பணிபுரியும் உதவி செயற் பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்குப் பதிலாக 8 எண்ணிக்கை புதிய ஈப்புகள் கொள்முதல் செய்தல்	0.56
3	பொதுப் பணித் துறை, கட்டட அமைப்பின் உபகோட்டத்தில் பணிபுரியும் உதவி செயற் பொறியாளர்களுக்கு கழிவு செய்யப்பட்ட ஈப்புகளுக்குப் பதிலாக 19 எண்ணிக்கை புதிய ஈப்புகள் கொள்முதல் செய்தல்	1.30
4	நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மகாராஜாபுரம் மேலபாதி, துளசபுரம், திருக்குவளை மற்றும் பழகுறிச்சி ஆகிய 4 இடங்களில் திட்டத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டு வகை குடியிருப்புகள் (43 தொகுதிகள்) கட்டும் பணி	15.81
5	திருவாரூர் மாவட்டம், வெங்காரம்பேறையூர் மற்றும் புழுதிக்குடி ஆகிய 2 இடங்களில் திட்டத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டு வகை குடியிருப்புகள் (16 தொகுதிகள்) கட்டும் பணி	3.09
6	கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் பொதுப் பணித் துறை வளாகத்தில் அரசு ஆய்வு மாளிகையின் அருகில் கூடுதல் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	0.85

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
7	புதுதில்லி, தமிழ்நாடு இல்ல வளாகத்தில் உள்ள வைகை இல்லத்தில் பிரதான விருந்தினர் மாளிகை கட்டடத்தின் அறைகளைப் புதுப்பிக்கும் பணி	2.39
8	சென்னை, பசுமை வழிச்சாலை, அண்ணா மேலாண்மை நிலைய மகிழம்பூ வளாகத்தில் உள்ள கட்டடத்தில் கூடுதல் மின்தூக்கி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணி	2.15
	நடைபெற்று வரும் பணிகள்	
1	சென்னை, சேப்பாக்கம் பொதுப் பணித் துறை வளாகத்தில் உள்ள திட்டம் மற்றும் வடிவமைப்பு வட்டம் மற்றும் கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், சென்னை மற்றும் கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகம் ஆகிய அலுவலகக் கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணி	2.08
2	திருவாரூர் மாவட்டம், திட்டாணிமுட்டம், வேளூர், காடந்தேத்தி, அலிவளம், திருவிடைவாசல், புன்னவாசல், குன்னியூர், விக்கிரபாண்டியம், ஆலத்தூர், கொக்கலாடி, ராதாநல்லூர், ஆதங்குடி மற்றும் பழையன்குடி ஆகிய 13 இடங்களில் திட்டத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டு வகை குடியிருப்புகள் (360 தொகுதி) கட்டும் பணி	73.81

TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
3	நாகப்பட்டினம் மாவட்டம், காடந்தேத்தி, செருதூர், வடக்கு பண்ணையூர், மடப்புரம், திருக்குவளை, உம்பலச்சேரி மற்றும் பிரதாபராமபுரம் ஆகிய 7 இடங்களில் திட்டத்தால் பாதிக்கப்பட்டோருக்கு இரண்டு வகை குடியிருப்புகள் (95 தொகுதி) கட்டும் பணி	48.69
4	சென்னை, தரமணியில் மாநில திட்ட மேலாண்மைக்கான அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	8.86
5	வேலூர் மாவட்டம், காட்பாடியில் பொதுப் பணித் துறை கட்டட (கட்டுமான மற்றும் பராமரிப்பு) கோட்ட அலுவலகம் மற்றும் உபகோட்ட அலுவலக கட்டடங்கள் கட்டும் பணி	1.27
6	மதுரை மாவட்டம், மதுரையில் பொதுப் பணித் துறை வளாகத்தில் மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	4.90
7	சென்னை, சேப்பாக்கத்தில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட பாரம்பரியமிக்க புராதன கட்டடமான ஹுமாயூன் மஹாலை புனரமைக்கும் பணி	41.12
8	சென்னை, சேப்பாக்கத்தில் உள்ள தெற்கு பிரதான கட்டடம் (புராதன கட்டடம்) மற்றும் வடக்கு பிரதான கட்டடத்தினை (புராதன கட்டடம்) புதுப்பித்தல் மற்றும் மறுகட்டுமானம் செய்யும் பணி	18.50

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
9	நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 50 எண்ணிக்கை அரசு அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டும் பணி	11.87
10	முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித் துறை அலுவலகத்திற்கு கழிவு செய்யப்பட்ட கணினி மற்றும் உபரி பாகங்களுக்கு பதிலாக புதிய கணினி மற்றும் உபரி பாகங்கள் கொள்முதல்	0.32

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) சென்னையில் சென்னை தலைமைப் பொறியாளர் (கட்டடம்), பொதுப் பணித் துறை புதிய அலுவலக கட்டடம் ரூ.23.05 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணி.

2) மதுரை மாவட்டம், மதுரையில் 100 எண்ணிக்கை கொண்ட "சி" வகை அலுவலர்களுக்கு ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் குடியிருப்பு கட்டடங்கள் கட்டும் பணி.

3) திண்டுக்கல் மாவட்டம், பழனியில் ரூ.34.82 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

4) திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்லில் ரூ.34.63 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறை உபகோட்ட அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

5) மதுரை, மதுரை மண்டலத்தில் உள்ள ரூ.3.29 கோடி மதிப்பீட்டில் பொதுப் பணி பணியாளர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

6) திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையில் ரூ.8.00 கோடி மதிப்பீட்டில் ஆய்வகத்துடன்கூடிய தரக் கட்டுப்பாட்டு கோட்ட அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி.

7) சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தரக் கட்டுப்பாட்டு கோட்டங்களில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் ஆய்வகத்திற்காக உபகரணங்கள் வாங்கும் பணி.

8) சென்னை, அடையாறு, பசுமைவழிச் சாலையில் உள்ள மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு நீதிபதிகள் குடியிருப்பு வளாகங்களில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் சுகாதார வசதி, உட்புறச் சாலை மற்றும் தெருவிளக்கு அமைக்கும் பணி.

9) சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் மறுஉபயோகத்திற்கான அமைப்பு நிறுவும் பணி.

10) சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் உள்ள அரசு ஊழியர் குடியிருப்பு வளாகத்தில் ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால், சேகரிப்பு மற்றும் மேற்பரப்பு வடிகால் அமைப்பு நிறுவும் பணி.

11) திருநெல்வேலியில் ரூ.99.56 இலட்சம் மதிப்பீட்டில் மின் கோட்டம் மற்றும் மின் உபகோட்ட அலுவலகத்திற்கு கட்டடம் கட்டும் பணி.

12) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ரூ.55.90 இலட்சம் மதிப்பீட்டில் செயற் பொறியாளர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி.

13) நாகப்பட்டினத்தில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி.

14) திருவாரூரில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் செயற் பொறியாளர் மற்றும் உதவி செயற் பொறியாளர் குடியிருப்பு கட்டடம் கட்டும் பணி.

2020-2021 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்

1) பாரம்பரிய அரசுக் கட்டடங்களின் சீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்காக, இனிவரும் காலங்களில் ஆண்டுதோறும்

சிறப்பு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும். இதற்கென, 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 50.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2) அரசு ஊழியர்களின் வாடகை வீட்டுத் தேவையை நிறைவு செய்வதற்கு, பொதுப் பணித் துறையின்மூலம் சைதாப்பேட்டையில் உள்ள தாடண்டர் நகரில், 76.00 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேலும் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பு அமைக்கப்படும். இக்குடியிருப்புகளில் 24.00 கோடி ரூபாய் செலவில் குடியிருப்போருக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். 2020-2021 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்காக, 40.00 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11.17. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் ரூ.297.58 கோடி மதிப்பீட்டிலான 223 கட்டுமானப் பணிகளில், 32 பணிகள் முடிக்கப்பட்டன. 85 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 106 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	திருநெல்வேலி மாவட்டம், மானூர் மற்றும் சேரன்மகாதேவி/திருவள்ளூர் மாவட்டம், ஆவடி/நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம்/ சிவகங்கை மாவட்டம், காளையார்கோயில்/ இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை ஆகிய 6 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டும் பணி	15.72
2	திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	2.39

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
3	தஞ்சாவூர் மாவட்டம், கும்பக்கோணம் மற்றும்பாபநாசம்/தருமபுரிமாவட்டம்,அரூர்/ கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி/ பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஆகிய 5 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	12.33
4	நாமக்கல் மாவட்டம், நாமக்கல்லில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி	14.60
5	கடலூர் மாவட்டம், திட்டக்குடி, உதயகுடி, வெப்பூர், புவனகிரி/ செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம், திருக்கழுக்குன்றம்/ கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி/ கோயம்புத்தூர் மாவட்டம், ஒத்தகல்மண்டபம்/கிருஷ்ணகிரி மாவட்டம், பேரிகை, பெரியமுத்தூர், ஆலப்பட்டி, குருபரபள்ளி/சேலம் மாவட்டம், மேட்டூர்/ஈரோடு மாவட்டம், தாளவாடி/ திருச்சி மாவட்டம், தொட்டியம் ஆகிய 15 இடங்களில் நிலஅளவையாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி	2.51
6	கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (வடக்கு) வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி	2.08
7	சென்னை மாவட்டம், கிண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி	1.75
8	கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி	2.62

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
9	நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.75
	நடைபெற்று வரும் பணிகள்	
1	காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம்/ திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல்/ புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஆகிய 3 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டும் பணி	8.61
2	திருப்பூர் மாவட்டம், திருப்பூரில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தும் பணி	6.10
3	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் தேனி மாவட்டம், உத்தமபாளையம் ஆகிய 2 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	5.46
4	திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை/ சேலம் மாவட்டம், சங்கிரி ஆகிய 2 இடங்களில் வட்டாட்சியர் அலுவலக கட்டடம் கட்டும் பணி	5.08
5	மதுரை மாவட்டம், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி	2.08
6	ஈரோடு மாவட்டம், நம்பியூர்/திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, திருவேங்கடம், கடையநல்லூர்/கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர் ஆகிய 5 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி	13.53

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
7	நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	3.48
8	காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர்/ தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு/ திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனமரத்தூர்/நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம்/சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஆகிய 5 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் கட்டும் பணி	14.65
9	திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல்/ நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம்/ பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர்/ புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் மற்றும் புதுக்கோட்டை ஆகிய 6 இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	16.38
10	திருப்பூர் மாவட்டம், மடத்துகுளம்/ புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக் கோட்டை ஆகிய 2 இடங்களில் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி	0.49
11	தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்புகள் கட்டும் பணி	0.31
12	திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.75

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
13	மதுரை மாவட்டம், மதுரை ஒருங்கிணைந்த பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி	20.98
14	ஈரோடு மாவட்டம், ஈரோடு ஒருங்கிணைந்த பெருந்திட்ட வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி	41.06
15	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி/திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி/நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஆகிய 4 இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	8.29
16	வேலூர் மாவட்டம், வேலூர்/காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம்/கடலூர் மாவட்டம், சிதம்பரம் ஆகிய 4 இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு கட்டும் பணி	1.29
17	நாகப்பட்டினம் மாவட்டம், கீழக்கரையில் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு கட்டும் பணி	0.16
18	44 இடங்களில் நில அளவையாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி	7.40

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) ஈரோடு மாவட்டம், கொடுமுடியில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணிகள்.

2) சென்னை, தண்டையார்பேட்டையில் ரூ.2.08 கோடி மதிப்பீட்டில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணிகள்.

3) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம்/அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம்/திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர்/திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் ஆகிய 4 இடங்களில் ரூ.10.92 கோடி மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள்.

4) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம்/திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் ஆகிய 2 இடங்களில் ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணிகள்.

5) 67 இடங்களில் ரூ.11.27 கோடி மதிப்பீட்டில் நில அளவையாளர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணிகள்.

6) 2 இடங்களில் ரூ.26.28 இலட்சம் மதிப்பீட்டில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி

7) சென்னை, கிண்டி, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை/நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்/ புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஆகிய 4 இடங்களில் வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் கட்டும் பணிகள்.

8) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் குடியிருப்பு கட்டடம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிகள்.

9) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் (தெற்கு) ரூ.1.75 கோடி மதிப்பீட்டில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள்.

10) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி/திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கிழக்கு, சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் ஆகிய 3 இடங்களில் ரூ.6.98 கோடி மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

11) தென்காசி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், செங்கல்பட்டு மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய 5 இடங்களில் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கான கட்டடங்கள் கட்டும் பணி.

12) மதுரை மாவட்டம், திருமங்கலம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஆகிய 2 இடங்களில் ரூ.4.56 கோடி மதிப்பீட்டில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

13) நாமக்கல் மாவட்டம், மோகனூர், திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை, மதுரை மாவட்டம் கள்ளிக்குடி, இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ். மங்கலம், கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்சட்டி, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு மற்றும் கிள்ளியூர், திண்டுக்கல் மாவட்டம், குஜிலியம்பாறை, திருவள்ளூர் மாவட்டம், ஆர். கே. பேட்டை, விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு, கரூர் மாவட்டம், புகலூர், தூத்துக்குடி மாவட்டம், ஏரல், கோயம்புத்தூர் மாவட்டம், ஆணைமலை ஆகிய 13 இடங்களில் ரூ.42.32 கோடி மதிப்பீட்டில் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டும் பணி.

11.18. பள்ளிக் கல்வித் துறை

பள்ளிக் கல்வித் துறையில் ரூ.671.24 கோடி மதிப்பீட்டிலான 775 கட்டுமானப் பணிகளில், 157 பணிகள் முடிக்கப்பட்டன. 332 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 286 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	நபார்டு வங்கி நிதியுதவியுடன் 95 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகளான கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், குடிநீர் வசதி, கழிவறை வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி	234.13

TRUTH ALONE TRIUMPHS

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
2	2015 ஆம் ஆண்டுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், நிலை உயர்த்தப்பட்ட 26 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணி	43.96
3	2016 ஆம் ஆண்டுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், நிலை உயர்த்தப்பட்ட 1 அரசு உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடங்கள் கட்டும் பணி	1.62
4	2017 ஆம் ஆண்டுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், நிலை உயர்த்தப்பட்ட 2 அரசு உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடங்கள் கட்டும் பணி	2.40
5	2017 ஆம் ஆண்டுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், 9 அரசுப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், கலை மற்றும் கைவினை பயிற்சி அறைகள், கணினி அறைகள், நூலகங்கள் மற்றும் கழிப்பறைகள் கட்டும் பணி	2.56
6	விழுப்புரம் மாவட்ட வட்டார கல்வியியல் மற்றும் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி	2.40
7	திருப்பூர் மாவட்டம், அமராவதி நகர் சைனிக் பள்ளியில் இளநிலை மாணவர்கள் விடுதி கட்டும் பணி	9.87
8	தருமபுரி மாவட்ட கல்வியியல் மற்றும் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி	3.50
9	2018-2019-ம் ஆண்டில் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களை ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் மேம்படுத்தும் 21 பணிகள்	0.86

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	நடைபெற்று வரும் பணிகள்	
1	நபார்டு வங்கி நிதியுதவியுடன் 104 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகளான கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி	159.79
2	2015 ஆம் ஆண்டுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், நிலை உயர்த்தப்பட்ட 18 அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணி	30.63
3	2017 ஆம் ஆண்டுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், நிலை உயர்த்தப்பட்ட 1 அரசு உயர்நிலைப் பள்ளிக்கான கட்டடம் கட்டும் பணி	1.20
4	2017 ஆம் ஆண்டுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், 7 அரசுப் பள்ளிகளில், கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், கலை மற்றும் கைவினை பயிற்சி அறைகள், கணினி அறைகள், நூலகங்கள் மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணி	6.02
5	கோயம்புத்தூர் மாவட்ட கல்வியியல் மற்றும் பயிற்சி நிலையக் கட்டடம் கட்டும் பணி	3.50
6	மதுரையில் ஆசிரியர் இல்லக் கட்டடம் கட்டும் பணி	3.00

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
7	சென்னை, அரசுத் தேர்வுகள் இயக்குநரக அலுவலகத்தில் மந்தணத் தன்மை வாய்ந்த கட்டுகளை பாதுகாக்கவும், மறுகூட்டல், மறுமதிப்பீடு தொடர்பான பணிகளை மேற்கொள்ள கட்டடம் மற்றும் மாநாட்டுக் கூடம் கட்டும் பணி	6.35
8	சென்னை, டி.பி.ஐ. வளாகத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடம் கட்டும் பணி	39.90
9	2018-2019-ம் ஆண்டில் ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் ஏற்கெனவே உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களை மேம்படுத்தும் 198 பணிகள்	16.63

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) நபார்டு வங்கி நிதியுதவியுடன், ரூ.2.82 கோடி மதிப்பீட்டில், 2 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகளான கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகக்கூடம், குடிநீர் வசதி, கழிவறை வசதிகள் மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள்.

2) 2020-2021 ஆண்டுக்கான ஒருங்கிணைந்த திட்டத்தின்கீழ் ரூ.95.73 கோடி மதிப்பீட்டில் ஏற்கெனவே உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி கட்டடங்களில் கூடுதல் வகுப்பறைகள், அறிவியல் ஆய்வகங்கள், கணினி அறைகள், நூலக அறைகள், கலை மற்றும் ஓவிய அறைகள், ஆண் மற்றும் பெண் கழிவறைகள், குடிநீர் வசதி மேம்படுத்தும் பணிகள் மற்றும் கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா (மாதிரி-2 மற்றும் மாதிரி-3) மற்றும் உண்டு உறைவிடப் பள்ளிக்கான 274 பணிகள்.

[2020 மார்ச் 18

3) ரூ.4.37 கோடி மதிப்பீட்டில், சென்னை, கடலூர், மதுரை, கரூர், வேலூர், தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனக் கட்டடத்தினைப் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள்.

11.19. சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையில் ரூ.50.81 கோடி மதிப்பீட்டிலான 29 கட்டுமானப் பணிகளில், 2 பணிகள் முடிக்கப்பட்டன. 9 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 18 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	தருமபுரி மாவட்டம், பஞ்சபள்ளி சிறுவர்களுக்கான அரசினர் கூர்நோக்கு இல்ல வளாகத்தில் கட்டடம் கட்டும் பணி	3.65
2	சென்னை, கெல்லீஸ் அரசு பெண் குழந்தைகள் இல்லம் மற்றும் சமூக பாதுகாப்பு ஆணையரக அலுவலகக் கட்டடத்தின் இணைப்புப் பாதையின் மராமத்து செய்யும் பணி	0.13
	நடைபெற்று வரும் பணிகள்	
1	தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரில் வேலைக்கு செல்லும் மகளிருக்கான தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் பணி	1.26
2	சென்னை, கெல்லீஸ் அரசினர் கூர்நோக்கு இல்லம் (மகளிர்) வளாகத்தில் நவீன வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்டும் பணி	4.40
3	மதுரையில் அன்னை சத்தியா குழந்தைகள் காப்பகத்திற்கு கட்டடம் கட்டும் பணி	5.00

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
4	சென்னை, இராயபுரம் சிறுவர் காப்பக வரவேற்பு மையக் கட்டட வளாகத்தில் உள்ள கைப்பந்து விளையாட்டுத் திடல் மற்றும் பாதுகாப்புச் சுவர் கட்டும் பணி	0.73
5	சேலத்தில் அன்னை சத்தியா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு கட்டடம் கட்டும் பணி	9.46
6	திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூரில் வேலைக்கு செல்லும் மகளிருக்கான தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் பணி	1.01
7	சென்னை, கெல்லீஸில் மகளிருக்கான அரசு குழந்தைகள் காப்பக வளாகத்தில் பல்வகை ஆதார மையத்திற்கு கூடுதல் கட்டடம் கட்டும் பணி	0.09
8	சென்னை, கெல்லீஸ் அரசு காப்பக வளாகத்தில் உள்ள கட்டடத்தின் தரைதளம் (பகுதி-2) மற்றும் முதல் தளம் கட்டும் பணி	4.53
9	வேலூர் மாவட்டம், காட்பாடியில் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உணவருந்தும் கூடம் கட்டும் பணி	0.23

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி/ கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர்/சிவகங்கை மாவட்டம், சிவகங்கை/செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர், சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் மற்றும் சென்னை (6 இடங்கள்) மாவட்டம் ஆகிய 12 இடங்களில் ரூ.12.12 கோடி மதிப்பீட்டில் வேலைக்கு செல்லும் மகளிருக்கான தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் பணிகள்.

2) இராமநாதபுரத்தில் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் அன்னை சத்தியா அரசு பெண் குழந்தைகள் இல்ல வளாகத்தில் கட்டடம் கட்டும் பணி.

3) சென்னை, சமூகப் பாதுகாப்பு இயக்கக வளாகத்தில், ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடத்தில் இரண்டாம் தளம் கட்டும் பணி மற்றும் கூடுதல் வசதிகள் மேற்கொள்ளும் பணி.

4) ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம், தட்டப்பாறை மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் ஆகிய 2 இடங்களில் உள்ள அரசு குழந்தைகள் காப்பகத்தில் பன்னோக்கு அரங்கம் கட்டும் பணி மற்றும் செங்கல்பட்டு மாவட்டம், ஆத்தூரில் உள்ள அரசு மறுவாழ்வு அமைப்பு வளாகத்தில் பயிற்சி மையக் கட்டடம் கட்டும் பணி.

5) சென்னை, இராயபுரம் அரசு குழந்தைகள் காப்பக வளாக வரவேற்பு மையக் கட்டடத்தின் முதல் தளத்தில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் மருத்துவ சிகிச்சை அறை, ஆலோசனை மைய அறை, பொழுதுபோக்கு அறை, அலுவலக அறை மற்றும் தூங்கும் அறைகள் கட்டும் பணி

11.20. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையில் ரூ.63.21 கோடி மதிப்பீட்டிலான 17 கட்டுமானப் பணிகளில், 5 பணிகள் முடிக்கப்பட்டன. 4 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 8 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும்செவல் கிராமத்தில் உள்ள மாவீரன் பூலித்தேவன் மாளிகை மற்றும் திருமண மண்டபம் சீரமைக்கும் பணி	0.50

2020 மார்ச் 18]

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
2	சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் சிறப்பு பழுதுபார்க்கும் பணிகள்	0.85
3	தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் இசை மேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு நினைவுத் தூண் அமைக்கும் பணி	0.20
4	தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் பணி	1.34
5	சென்னை, தரமணியில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் உள்ள மறு ஒலிப்பதிவு அரங்கக் கட்டடம் சீரமைக்கும் பணி	1.42
	நடைபெற்று வரும் பணிகள்	
1	மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின் நினைவு மண்டபம் அமைக்கும் பணி	50.80
2	திருச்சிராப்பள்ளியில் அரசு அச்சகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி	1.85
3	தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் நூலகத்துடன்கூடிய பாரத மாதா நினைவாலயம் அமைக்கும் பணி	1.50
4	கடலூர் மாவட்டம், சிதம்பரம் சுவாமி சகஜானந்தா மணிமண்டபத்தில் நூலகக் கட்டடம் கட்டும் பணி	0.25

[2020 மார்ச் 18

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் ரூ.21.80 இலட்சம் மதிப்பீட்டில் திரு. அல்லாள இளைய நாயக்கர் அவர்களின் திருவுருவச் சிலையுடன்கூடிய குவிமாடம் அமைக்கும் பணி.

2) திருநெல்வேலி மாவட்டம், ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் ரூ.51.78 இலட்சம் மதிப்பீட்டில் மணிமண்டபத்தினை புதுப்பித்தல், கழிவறை வசதி மற்றும் குடிநீர் வசதி, நூலகக் கட்டடம் கட்டும் பணி ஆகிய பணிகள்.

3) தூத்துக்குடியில் ரூ.72.70 இலட்சம் மதிப்பீட்டில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் மணிமண்டபத்தினைப் புனரமைத்தல் மற்றும் நூலகம் அமைக்கும் பணி.

4) கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில் ரூ.92.27 இலட்சம் மதிப்பீட்டில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் முழு உருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணி.

5) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் ரூ.97.64 இலட்சம் மதிப்பீட்டில் ரெட்டைமலை சீனிவாசன் அவர்களின் முழு உருவச் சிலையுடன்கூடிய நினைவகம் அமைக்கும் பணி.

6) திருச்சி மாவட்டத்தில் ரூ.43.40 இலட்சம் மதிப்பீட்டில் சர். ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களின் முழு உருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணி.

7) திருச்சி மாவட்டத்தில் ரூ.42.69 இலட்சம் மதிப்பீட்டில் எம்.கே. தியாகராஜ பாகவதர் அவர்களின் முழு உருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணி.

8) திருச்சி மாவட்டத்தில் ரூ.99.25 இலட்சம் மதிப்பீட்டில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் முழு உருவச் சிலையுடன்கூடிய மணிமண்டபம் அமைக்கும் பணி.

11.21. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையில் ரூ.75.15 கோடி மதிப்பீட்டிலான 8 கட்டுமானப் பணிகளில், 1 பணி முடிக்கப்பட்டது, 5 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 2 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் கலை மற்றும் பண்பாடு மையத்தில் கட்டடம் கட்டும் பணி	0.75
	நடைபெற்று வரும் பணிகள்	
1	இராமேஸ்வரத்தில் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவிலில் பக்தர்கள் தங்கும் விடுதிக் கட்டடம் கட்டுதல்	30.92
2	திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் விடுதிக் கட்டடம் கட்டுதல்	28.00
3	சென்னை, எழும்பூர் கன்னிமாரா பொது நூலக பாரம்பரிய கட்டடத்தின் கூரையினைப் பழுதுபார்க்கும் பணி	1.50
4	புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை அரசு இசைப் பள்ளி வளாகத்தில் கட்டடம் கட்டும் பணி	1.00
5	மதுரை மாவட்டம், மதுரை அரசு இசைப் பள்ளி வளாகத்தில் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டும் பணி	0.95

[2020 மார்ச் 18

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி அரசு இசைப் பள்ளி வளாகத்தில் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி.

2) சிவகங்கை மாவட்டம், கீழடியில் ரூ.11.03 கோடி மதிப்பீட்டில் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை காட்சிப்படுத்திட ஒரு புதிய அகழ்வைப்பகம் அமைக்கும் பணி.

11.22. போக்குவரத்துத் துறை

போக்குவரத்துத் துறையில் ரூ.67.54 கோடி மதிப்பீட்டிலான 31 கட்டுமானப் பணிகளில், 6 பணிகள் முடிக்கப்பட்டன. 11 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 14 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு :-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	ஈரோடு மாவட்டம், ஈரோடு கிழக்கு வட்டார அலுவலகச் சுற்றுச் சுவர் மற்றும் பொதுமக்கள் காத்திருப்பு அறை கட்டும் பணி	0.29
2	கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சியில் போக்குவரத்து பிரிவு அலுவலகக் கட்டடம் மற்றும் சோதனை ஓடுபாதை அமைக்கும் பணி	1.69
3	கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் மற்றும் சோதனை ஓடுபாதை அமைக்கும் பணி	2.32
4	தென்காசி மாவட்டம், தென்காசி வட்டார அலுவலகச் சுற்றுச் சுவர் மற்றும் பொதுமக்கள் காத்திருப்பு அறை கட்டும் பணி	0.29

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
5	சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	2.51
6	தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வாகன சோதனை ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.53
	நடைபெற்று வரும் பணிகள்	
1	ஈரோடு மாவட்டம், ஈரோடு (மேற்கு) மற்றும் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஆகிய 2 இடங்களில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி	5.33
2	விருதுநகர் மாவட்டம், சிவகாசி/ கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம்/திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஆகிய 3 இடங்களில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகக் கட்டடம் மற்றும் சோதனை ஓடுபாதை அமைக்கும் பணி	8.69
3	திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர்/ கோயம்புத்தூர் மாவட்டம், சூளூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஆகிய 3 இடங்களில் வாகன சோதனை ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	4.32
4	விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வாகன சோதனை ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.48
5	விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	3.00
6	மதுரை மாவட்டம், திருமங்கலம் வாகன சோதனை ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	1.53

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) சேலம் மாவட்டம், ஓமலூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், பழனி ஆகிய 2 இடங்களில் ரூ.5.04 கோடி மதிப்பீட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டடம் கட்டும் பணிகள்.

2) நாமக்கல் மாவட்டம், குமாரபாளையத்தில் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் வாகன சோதனை ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

3) சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் ஆகிய 2 இடங்களில் ரூ.6.02 கோடி மதிப்பீட்டில் போக்குவரத்துத் துறை பிரிவு அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள்.

4) கோயம்புத்தூர் மாவட்டம், கோபாலபுரம் மற்றும் வேலூர் மாவட்டம், காட்பாடி ஆகிய 2 இடங்களில் ரூ.58.92 இலட்சம் மதிப்பீட்டில் போக்குவரத்து சோதனைச் சாவடியில் எடைமேடை அமைக்கும் பணிகள்.

5) சேலம் மாவட்டத்தில், ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் சேலம் (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

6) சேலம் மாவட்டத்தில், ரூ.3.19 கோடி மதிப்பீட்டில் மேட்டூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

7) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் மற்றும் திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் ஆகிய 2 இடங்களில் ரூ.3.73 கோடி மதிப்பீட்டில் போக்குவரத்துப் பிரிவு அலுவலகத்திற்கு சோதனை ஓடுதளம் அமைக்கும் பணி.

8) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மற்றும் திருச்சி மாவட்டம், திருச்சி (கிழக்கு) ஆகிய 3 இடங்களில் ரூ.11.38 கோடி மதிப்பீட்டில் சோதனை ஓடுதளத்துடன்கூடிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்டும் பணி.

2020 மார்ச் 18]

11.23. கருவூலம் மற்றும் கணக்குத் துறை

கருவூலம் மற்றும் கணக்குத் துறையில் ரூ.37.61 கோடி மதிப்பீட்டிலான 24 கட்டுமானப் பணிகளில், 6 பணிகள் முடிக்கப்பட்டன. 13 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 5 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணியின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
	முடிக்கப்பட்ட பணி	
1	சேலம் மாவட்டம், சேலம்/திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி/ கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி/திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் ஆகிய 5 இடங்களில் சார்நிலை கருவூல அலுவலகக் கட்டடம்	3.80
2	சென்னையில் ஒருங்கிணைந்த நிதித் துறை அலுவலகத்திற்கு கூடுதலாக இரண்டு தளங்கள் கட்டும் பணி	10.98
	நடைபெற்று வரும் பணிகள்	
1	இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி/ செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு/ நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை மற்றும் மயிலாடுதுறை/கோயம்புத்தூர் மாவட்டம், அன்னூர்/ ஈரோடு மாவட்டம், கொடுமுடி/விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் மற்றும் வானூர்/சிவகங்கை மாவட்டம், திருப்புவனம்/திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி ஆகிய 10 இடங்களில் சார்நிலைக் கருவூல அலுவலகக் கட்டடம்	8.38

வ. எண்	பணியின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ. கோடியில்)
2	திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய 3 இடங்களில் மாவட்ட கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணி	11.24

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

சென்னை மாவட்டம், மயிலாப்பூர், சோழிங்கநல்லூர்/கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில்/திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர்/நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஆகிய 5 இடங்களில் ரூ.3.21 கோடி மதிப்பீட்டில் சார்நிலைக் கருவூல அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள்.

11.24. மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

மாற்றுத் திறனாளிகள் நலத் துறையில் ரூ.6.74 கோடி மதிப்பீட்டிலான 7 கட்டுமானப் பணிகளில், 4 பணிகள் முடிக்கப்பட்டன மற்றும் 3 பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	தஞ்சாவூரில் பார்வையற்ற மாணவர்களுக்கான அரசு உயர்நிலைப் பள்ளியின் தரம் உயர்த்துதல்	0.34
2	கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர் ஆரம்ப சுகாதார மையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கும் பணி	0.61

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
3	கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கும் பணி	0.28
4	கோயம்புத்தூர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கும் பணி	0.05
	நடைபெற்று வரும் பணிகள்	
1	கோயம்புத்தூர், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கும் பணி	0.95
2	கோயம்புத்தூர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கும் பணி	1.79
3	கோயம்புத்தூர், வணிக வரித் துறை அலுவலகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான தடைகளற்ற சூழலை உருவாக்கும் பணி	2.72

11.25. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் ரூ.98.40 கோடி மதிப்பீட்டிலான 19 கட்டுமானப் பணிகளில், 6 பணிகள் முடிக்கப்பட்டன. 7 பணிகள் நடைபெற்று வருகின்றன மற்றும் 6 பணிகள் தொடங்கப்படவுள்ளன. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

[2020 மார்ச் 18

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
	முடிக்கப்பட்ட பணிகள்	
1	திருச்சிராப்பள்ளியில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் விளையாட்டு விடுதிக் கட்டடங்களில் கூடுதல் தங்கும் வசதி அமைக்கும் பணி	0.96
2	இராமநாதபுரம், விழுப்புரம் மற்றும் உதகமண்டலம் ஆகிய 3 இடங்களில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் விளையாட்டு விடுதிகள் கட்டும் பணி	2.28
3	நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் மலை மேலிட பயிற்சி மையக் கட்டடம் கட்டும் பணி	3.83
4	காஞ்சிபுரத்தில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் புதிய விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி	14.66
	நடைபெற்று வரும் பணிகள்	
1	புதுக்கோட்டையில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் கட்டும் பணி	4.62
2	செங்கல்பட்டு மாவட்டம், மேலகோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில், மிதிவண்டி ஓடுபாதை அமைத்தல் மற்றும் கட்டடம் கட்டும் பணி	6.35
3	கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் உள்விளையாட்டு அரங்கத்தில் கூடுதலாக நடைபாதை, கூடைப்பந்து அரங்கம், இறகுப்பந்து அரங்கம் மற்றும் உடற்பயிற்சிக்கூடம் அமைக்கும் பணி	3.70

வ. எண்	பணிகளின் விவரம்	மதிப்பீடு தொகை (ரூ.கோடியில்)
4	செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, நீர்பேயார் கிராமத்தில் தேசிய மாணவர் படை பயிற்சி மைய வளாகத்தில் நிருவாகப் பிரிவு, உணவகம், பெண்கள் தங்குமிடம், பணியாளர் அறை மற்றும் ஆண்கள் கழிப்பறை அமைக்கும் பணி	4.86
5	திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் உள்ள விளையாட்டு வளாகத்தில் கட்டடம் கட்டும் பணி	0.97
6	வேலூர் மாவட்டம், காட்பாடியில் மாவட்ட திறந்தவெளி விளையாட்டு அரங்கம் நிறுவும் பணி	16.45
7	சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் மகளிருக்கான விளையாட்டு விடுதிக் கட்டடம் கட்டும் பணி	6.81

தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:-

1) சென்னை கூவம் நதி முகத்துவாரத்தில் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் பாய்மர மற்றும் துடுப்புப் படகு பயிற்சி மையக் கட்டடம் கட்டும் பணி.

2) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ.89.00 இலட்சம் மதிப்பீட்டில் குளிர்சாதன வசதி மேற்கொள்ளுதல் மற்றும் இறகுப் பந்து விளையாட்டு அரங்கத்திற்கு மின் இணைப்பு வழங்கும் பணி.

3) சென்னையில் ரூ.10.67 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் தலைமை அலுவலகத்தினை மறுகட்டுமானம் செய்யும் பணி.

[2020 மார்ச் 18

4) சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் ரூ.8.25 கோடி மதிப்பீட்டில் செயற்கை ஓடுதளம் அமைக்கும் பணி.

5) சென்னை, வேளச்சேரி நீரியியல் வளாகத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் உடற்பயிற்சி அரங்கம் கட்டும் பணி.

6) காஞ்சிபுரம் மாவட்டம், மேலகோட்டையூரில் ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில், துடுப்புப் படகு பயிற்சிக்கான சிறப்பு மையக் கட்டடம் கட்டும் பணி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

(700 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 40 - பாசனம் (பொதுப் பணித் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2020-2021

1.0. முன்னுரை

1.1. நீர் வள ஆதாரத் துறையின் செயல்பாடுகள்

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று".

இந்த உலகில் வாழும் உயிரினங்கள் நிலைபெற்று வாழ்வதற்கு, இயற்கையின் வரமான மழையே காரணமாக அமைவதால், மழை அமிழ்தத்தையொத்தது என்பது திருவள்ளுவர் வாக்காகும்.

அனைத்து வகை நீர் தேவைகளுக்கிடையே அளவு மற்றும் தரம் ஆகிய இரண்டிலும் நீர் வளங்களின் உகந்த பயன்பாட்டை திட்டமிடுதல், மேம்படுத்துதல், பங்கீடு செய்தல் மற்றும் நிருவகிப்பதே நீர் வள மேலாண்மையாகும்.

சிறந்த மேலாண்மை உத்திகளை மேற்கொள்வதன்மூலம் நீர் வளங்களைப் பாதுகாத்திடவும், உரிய முறையில் பயன்படுத்தவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் இத்துறை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

1.2. நீர் வள ஆதாரங்கள்

மேற்பரப்பு நீர் வளம்

மாநிலத்திலுள்ள 34 பெரிய ஆறுகள், 17 ஆற்று வடிநிலங்களாகவும், 127 உப வடிநிலங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாநிலத்தின் இயல்பான மழையளவு 911.60 மி.மீ. ஆகும். மாநிலத்தின் மொத்த மேற்பரப்பு நீர் வள ஆதாரம், அண்டை மாநிலங்களிலிருந்து பன்மாநில ஒப்பந்தங்களின்படி பெறப்படும் 249 டி.எம்.சி. அடி நீரினையும் உள்ளடக்கி, 885 டி.எம்.சி. அடியாகும்.

நிலத்தடி நீர் வளம்

நிலத்தடி நீர் வளம், நுண்ணிய ஆய்வின் அடிப்படையில், மாநிலத்திலுள்ள 1,166 குறுவட்டங்களில் 462 குறுவட்டங்கள் அதிநுகர்வு குறுவட்டங்களாகவும், 79 அபாயகரமானவையாகவும், 163 மித அபாயகரமானவையாகவும், 35 உவர் நீராகவும், 427 பாதுகாப்பானவையாகவும் வகைப்படுத்தப்பட்டு உள்ளன. நிலத்தடி நீர் வளத்தின் இருப்பு மற்றும் தரம் துறையினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாநிலத்தின் நிலத்தடி நீர் வளத்தினைப் பாதுகாத்து, சேகரித்து மற்றும் மேம்படுத்த தடுப்பணைகள், படுகை அணைகள், கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச்சுவர்கள், நீர் செறிவூட்டும் துளைகள் மற்றும் கசிவு நீர்க்குட்டைகள் போன்ற கட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

1.3. நிருவாக அமைப்பு

நீர் வள ஆதாரத் துறை மற்றும் கட்டட அமைப்பு ஆகிய பொதுப் பணித் துறையின் இரு தொழில்நுட்பப் பிரிவுகளுக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை மற்றும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடங்கள்) ஆகியோர் துறைத் தலைவர்களாகச் செயல்படுகின்றனர். தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப் பணித் துறையின் பணியமைப்பு மற்றும் நிருவாகப் பணிகளை மேற்கொள்கிறார். தற்போது முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை அவர்கள் தலைமைப் பொறியாளர் (பொது) பதவியையும் வகித்து வருகிறார்.

பொதுப் பணித் துறையின் நீர் வள ஆதாரத் துறை ஆற்று வடிநிலங்களின் அடிப்படையில் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மண்டலத்திற்கும் தலைமை ஏற்கும் தலைமைப் பொறியாளர், அவரது வரையறுக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஆற்று வடிநிலங்களின் மேலாளராகச் செயல்படுகிறார்.

இது தவிர, ஏழு செயல்பாட்டுப் பிரிவுகள் மற்றும் நான்கு சிறப்பு அமைப்புகள் உள்ளன. அவை பின்வருமாறு :-

செயல்பாட்டு பிரிவுகள்

1. திட்ட உருவாக்கம்

2020 மார்ச் 18]

2. வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்

3. இயக்கம் மற்றும் பராமரிப்பு

4. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் வள ஆதார விவரக்குறிப்பு மையம்

5. நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக்கட்டுப்பாடு நிறுவனம்

6. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் (IMTI)

7. மாநில நீர் வள ஆதார மேலாண்மை முகமை (SWaRMA)

சிறப்பு பிரிவுகள்

1. காவேரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு

2. தமிழ்நாடு நீர் வள ஆதார மேம்பாட்டுக் குழுமம்

3. மணல் குவாரிகள் திட்ட இயக்குனரகம்

4. தமிழ்நாடு நீர் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகள் சீரமைத்தல் கழகம்

இவை தவிர, ஒரு கண்காணிப்புப் பொறியாளரின் தலைமையில் இயங்கும் கொதிகலன்கள் இயக்ககமும் நீர் வள ஆதாரத் துறையின்கீழ் இயங்கி வருகிறது.

இத்துறையின் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து, தொழில்நுட்பத் தலைவராக நீர் வள ஆதாரத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் செயல்படுகிறார்.

2.0. செயல்பாட்டு பிரிவுகளின் பணிகள்

நீர் வள ஆதாரத் துறையில், பாசனத் திட்டங்களை செயலாக்குதல், நிலத்தடி நீர் தொடர்பான விவரங்களைச் சேகரித்தல் மற்றும் தொகுத்தல், மாநில நீர் வள ஆதாரங்களை நிருவகித்தல் மற்றும் இதனுடன் இணைந்த துறைகளிலுள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு பல்வேறு விதமான பயிற்சிகள் அளித்தல் உள்ளிட்ட தனித்தன்மை வாய்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 7 பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவும் ஒரு தலைமைப் பொறியாளரின்கீழ் இயங்கி வருகிறது. இவற்றுடன்

[2020 மார்ச் 18

கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் கொதிகலன்கள் இயக்குநரின் தலைமையின்கீழ் கொதிகலன்கள் இயக்ககம் இயங்கி வருகிறது.

ஒவ்வொரு பிரிவும் மேற்கொள்ளும் பணிகளின் விவரங்கள் பின்வருமாறு:

2.1. திட்ட உருவாக்கம்

இப்பிரிவானது புதிய பெரிய, நடுத்தர மற்றும் சிறு பாசன திட்டங்கள் அனைத்திற்கும் தள ஆய்வுகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டப் பணிகளுக்கு விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் போன்றவற்றுடன், பின்வரும் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகிறது:-

- நபார்டு நிதியுதவித் திட்டங்கள்
- தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

2.2. வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம்

வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரப் பிரிவு பின்வரும் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்பட்டு வருகிறது:-

- குடிமராமத்துத் திட்டம்.
- நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம்.
- மாநிலத்திலுள்ள அணைகளை தூர்வாருதல்.
- கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்கி ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

இப்பிரிவின்கீழ் செயல்படும் வடிவமைப்பு வட்டத்தில், நீர்த்தேக்கம், கால்வாய், குளம், ஏரி, அணைக்கட்டு, நீரொழுங்கி, தடுப்பணை போன்ற பாசன கட்டுமானங்களுக்கான வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள் தயாரிக்கப்படுகின்றன. மேலும், பாசன கட்டுமானங்களில் ஏற்படும் வெடிப்புகள், நீர் ஊடுருவல், நீர்க்கசிவு மற்றும் பாதிப்புகளுக்கான மாற்றுத் தீர்வுகள் வடிவமைப்பு வட்டத்தால் பரிந்துரைக்கப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 18]

இப்பிரிவின்கீழ் செயல்படும் மண் தன்மை ஆராய்ச்சிக் கோட்டம் மண்ணின் தன்மை, கற்காரை மற்றும் கட்டுமானப் பொருட்களின் தரம் குறித்த சோதனைகளை மேற்கொள்ளும் மையத் தரக் கட்டுப்பாட்டுச் சோதனைக் கூடமாக சென்னையில் செயல்பட்டு வருகிறது.

இப்பிரிவின்கீழ் செயல்படும் நீரியல் மற்றும் நீர்நிலையியல் நிறுவனம், நீரியல், நீர்நிலையியல் மற்றும் கடல்சார் பொறியியல் குறித்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், கடற்கரையோர அளவுகளைக் கண்காணிப்பதோடு கடலோரப் பாதுகாப்புக் கட்டுமானங்களின் செயல்திறன் குறித்த ஆய்வுகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

2.3. இயக்கம் மற்றும் பராமரிப்பு

இப்பிரிவு, மாநிலத்திலுள்ள 15 பெரிய நீர்த்தேக்கங்கள், சென்னை மாநகரத்திற்கு குடிநீர் வழங்கும் 5 நீர்த்தேக்கங்கள் மற்றும் காவேரி வடிநிலப் பகுதிகளில் அமைந்துள்ள கர்நாடக மாநிலத்தின் 4 நீர்த்தேக்கங்கள் ஆகியவற்றின் நீரியல் குறித்த விவரங்கள் மற்றும் மத்திய நீர் ஆணையத்தின் பில்லிகுண்டுலு நீர் அளவீடு மற்றும் வெளியேற்று நிலையத்தில் நாள்தோறும் சேகரிக்கப்படும் நீர் அளவீடுகள் ஆகியவற்றை தொகுத்து நாள்தோறும் அரசுக்கு அறிக்கை அளித்து வருகிறது.

வெள்ளக் கட்டுப்பாடு அறை

தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு அவர்களது அலுவலகத்தில் வடகிழக்குப் பருவமழை காலங்களில் 24 மணி நேர முறைப்பணி அமைக்கப்பட்டு மாநிலத்தின் அனைத்து அணைகள்/நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் கண்காணிக்கப்பட்டு மாநில அவசரகால நடவடிக்கை மையத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

இப்பிரிவின் கீழுள்ள அணை பாதுகாப்பு இயக்ககத்தின்மூலம் அணைகளில் காலமுறை பருவமழை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கைகள் தொகுக்கப்படுகின்றன. பருவமழைக்கு முந்தைய மற்றும் பிந்தைய ஆய்வுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அனைத்து அணைகளுக்கான ஒருங்கிணைந்த உறுதித் தன்மை அறிக்கை (ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கை) மத்திய நீர் ஆணையத்தின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.

[2020 மார்ச் 18

உலக வங்கி நிதியுதவியுடன் செயலாக்கத்திலுள்ள அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் ஒருங்கிணைப்பு முகமையாக இப்பிரிவின்கீழ் ஒரு மாநிலத் திட்ட மேலாண்மை அலகு செயல்பட்டு வருகிறது.

2.4. மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் வள ஆதார விவரக்குறிப்பு மையம்

தமிழகத்தின் நிலத்தடி நீர் வளத்தை திட்டமிட்டு, மேம்படுத்தி மேலாண்மை செய்யும் பொருட்டு மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் வள ஆதார விவரக் குறிப்பு மையம் பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது:-

❖ நிலத்தடி நீர் மட்டத்தை அறிவியல் ரீதியாக ஆய்வு செய்தல் மற்றும் நிலத்தடி நீர் இருப்பை கணக்கிடுதல்.

❖ நில மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் தன்மை, நீரியல் மற்றும் நீர் வானிலை ஆய்வு ஆகியவற்றை தொடர்ந்து கண்காணித்தல்.

❖ செயற்கை முறையில் நீர் செறிவூட்டும் மற்றும் மழை நீர் சேகரித்தல் போன்ற உத்திகளின்மூலம் நிலத்தடி நீரை அதிகப்படுத்துதல்.

❖ சிறுபாசன திட்டங்கள், தொழிற்சாலைகள் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு விதிமுறைக்குட்பட்டு நிலத்தடி நீரை எடுத்து பயன்படுத்த தடையின்மைச் சான்று வழங்குதல்.

❖ தமிழகத்தில் உள்ள 1,076 கி.மீ. கடற்கரை பகுதியில் கடல் நீர் நிலத்தடி நீரில் ஊடுருவுவதைக் கண்காணிக்கும் சிறப்பு ஆய்வு மேற்கொள்ளுதல்.

❖ தேசிய மற்றும் மாநில நீர் கொள்கைகள் வகுக்க உறுதுணையாக இருத்தல்.

2.5. நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக் கட்டுப்பாடு நிறுவனம்

தமிழ்நாட்டின் அனைத்து ஆற்று வடிநிலங்களில் உள்ள நீர் வள ஆதாரங்களை அறிவியல்பூர்வமாக நுண்ணிய அளவில் திட்டமிடுதல், மதிப்பிடுதல் மற்றும் நிருவகித்தல் போன்ற பணிகளை நீர் ஆய்வு, நீரியல் மற்றும் தரக் கட்டுப்பாடு நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 18]

மாநிலத்தின் நீர் வளத்தினை திறம்பட மேலாண்மை செய்வதற்காக நீர் வள ஆதாரத் துறைக்கு தொலையுணர்வு மற்றும் புவி தகவல் அமைப்பு அடிப்படையிலான தகவல்களை இந்நிறுவனத்தின் மேம்படுத்தப்பட்ட தொலையுணர்வு மையம் வழங்கி வருகிறது.

சென்னை, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, சேலம், மதுரை, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களை தலைமையிடங்களாகக் கொண்டு 7 தரக் கட்டுப்பாடு கோட்டங்கள் இந்நிறுவனத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

2.6. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம்

திருச்சிராப்பள்ளியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் பொதுப் பணித் துறையின்கீழ் இயங்கி வருகிறது.

பொதுப் பணித் துறையின் செயலாளர் அவர்களைத் தலைவராக கொண்ட ஆட்சி மன்றக் குழுவின் வழிகாட்டுதலுடன் இப்பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. பல்வேறு துறைகளின் 12 உயர் அலுவலர்கள் (நிதி, வேளாண்மை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைகளின் அரசு செயலாளர்கள் உட்பட) ஆட்சி மன்றக் குழுவின் உறுப்பினர்களாக உள்ளனர். இப்பயிற்சி நிலையத்தின் தலைமை இயக்குனராக, பொதுப் பணித் துறையின் தலைமைப் பொறியாளர் உள்ளார். பயிற்சித் திறனாளர் குழுவில் பொதுப் பணித் துறை (நீர் வள ஆதாரத் துறை), வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் அயற்பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சரியான அளவில் நீரினைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே இப்பயிற்சி நிலையத்தின் முதன்மை நோக்கமாகும். பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தால் நீர் வள ஆதாரத் துறை அலுவலர்களுக்கு அவர்களின் தேவைக்கேற்ப திறன் மேம்படுத்துதல் பயிற்சிகளும், விவசாயிகளுக்கு பாசன மேலாண்மையில் புதிய நுட்பங்கள் மற்றும் நவீன உத்திகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

2019-2020 ஆம் நிதியாண்டில் பிப்ரவரி 2020 வரை 98 பயிற்சிகள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 3,039 பங்கேற்பாளர்கள் (நீர் வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள்) பயன் பெற்றனர்.

2.7. மாநில நீர் வள ஆதார மேலாண்மை முகமை

நீர் வள ஆதாரத் துறையில், நன்கு திட்டமிடவும், திறம்பட நீரை பகிர்ந்து மேலாண்மை செய்திடவும் உதவும் வகையில் வலைதள வடிவமைப்புமூலம் ஒருங்கிணைந்த தமிழ்நாடு நீர் வள தகவல் அமைப்பினை மாநில நீர் வள ஆதார மேலாண்மை முகமை உருவாக்கியுள்ளது. இத்தகவல் அமைப்பு நீர் வள ஆதாரத் துறை மற்றும் தொடர்புடைய துறைகள்/முகமைகளின் பயன்பாட்டிற்கு கிடைக்கப்பெறச் செய்யப்பட்டுள்ளது.

2.8. கொதிகலன்கள் இயக்ககம்

தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்ககம், மத்திய அரசின் கொதிகலன்கள் சட்டம், 1923-ன் பிரிவுகூறுகளை மாநிலத்தில் நடைமுறைப்படுத்தி, கொதிகலன்கள் பாதுகாப்பாக இயங்குவதை உறுதிசெய்து, கொதிகலன்களால் பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாத்து, தொழிற்சாலைகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறைகள், 1950-ன்படி, கொதிகலன்கள் மற்றும் பாகங்கள் வடிவமைத்தல் மற்றும் தயாரிப்புப் பணிகளுக்கு பல்வேறு கட்டங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

கொதிகலன் பணியாளர் விதிகள், 2011 மற்றும் கொதிகலன் இயக்கப் பொறியாளர் விதிகள், 2011 ஆகியவற்றின்படி இந்த இயக்ககத்தின்மூலம் மாநிலத்தில் கொதிகலன்களை இயக்குவதற்கு வெவ்வேறு தேர்வுகள் நடத்தப்பட்டு, தகுதிபெறும் நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பற்றவைப்பாளர்களுக்கு உயர் அழுத்தத் திறனுக்கான பற்றவைப்பாளர் தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்றவர்களுக்கு திறன் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

பதிவு செய்யாமலும், சான்றிதழ் பெறாமலும் இயக்கப்படும் கொதிகலன்களைக் கண்டறிந்து தடை விதிப்பது கொதிகலன்கள் இயக்ககத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். கொதிகலன்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களின் பதிவு, ஒப்புதல் அளித்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் இணையதளம்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 18]

3.0. சிறப்புப் பிரிவுகளின் பணிகள்

3.1. காவேரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு

காவேரி தொழில்நுட்பக் குழுமம் மற்றும் பன்மாநில நதிநீர்ப் பிரிவு அரசுக்கு அனைத்து பன்மாநில நீர் பங்கீடு பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை கையாளுவதில் உதவுகிறது. இந்தக் குழுமம் 1990-ல் அமைக்கப்பட்டது. இந்தப் பிரிவு, நீர்ப் பங்கீட்டுத் தீர்ப்பாயம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் மனுக்களை தாக்கல் செய்ய அனைத்து தொழில்நுட்ப அறிக்கைகள்/புள்ளிவிவரங்கள் மற்றும் தகவல்களைத் தயாரித்து அரசுக்கு அளித்து வருகிறது. மேலும், தமிழ்நாட்டிற்கு உரிமையுள்ள பல்வேறு பன்மாநில நதிநீர்ப் பங்கீடு தொடர்பான நதிநீர் மேலாண்மை ஆணையம்/ஒழுங்குமுறைக் குழு நடத்தும் அனைத்து கூட்டங்களிலும் இப்பிரிவு பங்கேற்கிறது. கூடுதலாக, இப்பிரிவு பன்மாநில நதிநீர் இணைப்புத் திட்டங்களைப் பற்றியும் மற்றும் நதிநீர் இணைப்புத் திட்டங்களுக்கான மத்திய அரசின் பல்வேறு முகமைகளான தேசிய நீர் மேம்பாட்டு முகமை, மத்திய நீர் வள ஆணையம் மற்றும் மத்திய நீர் வள அமைச்சகம் நடத்தும் பல்வேறு கூட்டங்களில் கலந்து கொள்கிறது. இது தவிர, இப்பிரிவு தமிழ்நாட்டின் நீர் வளத்தை மேம்படுத்த பல்வேறு அறிக்கைகளையும் தயாரித்து வருகிறது.

இந்தப் பிரிவால் காவேரி நதிநீர்ப் பங்கீடு, முல்லைப் பெரியாறு அணையில் தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுதல், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தில் மாநிலத்திற்கு உரிய நீரை பெறுதல், நெய்யாறு பாசனத் திட்டம், பெண்ணையாறு மற்றும் பாலாறு நதிநீர் பிரச்சினைகளில் மாநிலத்தின் உரிமைகளை நிலை நாட்டுதல் போன்ற முக்கியமான பிரச்சினைகள் கையாளப்பட்டு வருகின்றன. மேலும், கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டம், பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டம் மற்றும் பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் தொடர்பான பணிகளும் இப்பிரிவால் கையாளப்பட்டு வருகின்றன.

3.2. தமிழ்நாடு நீர் வள ஆதார மேம்பாட்டு குழுமம்

தமிழ்நாட்டின் நீர் வள ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்குடன் புதிய நீராதாரங்களைக் கண்டறியவும், நீர் ஆதாரங்களைப் பாதுகாக்கவும், அவற்றை பெருக்கவும், உரிய திட்டங்களை

உருவாக்கி அவற்றை செயல்படுத்த தேவைப்படும் நிதி ஆதாரங்களை கண்டறியவும், மத்திய அரசு மற்றும் இதர நிதி வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு நிதி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் நீர் வள ஆதாரத் துறையின் ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளரின் தலைமையின்கீழ் ஓய்வு பெற்ற பொறியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு நீர் வள ஆதார மேம்பாட்டுக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது.

நீர் வள ஆதாரங்களை மேம்படுத்தவும், நீர் நிலைகளின் சேமிப்புத் திறனை அதிகரிக்கவும், பருவ மழையினால் கிடைக்கப் பெறும் நீரினை திறம்பட சேமித்து கடல்நீர் உட்புகுதல்/மாசுபடுதலை தடுக்கவும் இக்குழு பல விரிவான திட்ட அறிக்கைகளைத் தயாரிக்கிறது. இவ்வறிக்கைகள், தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது.

3.3. மணல் குவாரிகள் திட்ட இயக்குனரகம்

தமிழ்நாடு முழுவதும் உள்ள மணல் குவாரி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கும், கண்காணிப்பதற்கும், திட்ட இயக்குனராக இந்திய ஆட்சிப் பணி அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், சென்னை, விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட சுரங்கம் மற்றும் கண்காணிப்புக் கோட்டங்களால், தமிழ்நாடு முழுவதும் மணல் குவாரிகள் இயக்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை போன்ற பல்வேறு துறைகளின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் திட்ட இயக்குநரின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளால் புதிய குவாரிகளின் துவக்கம் துரிதப்படுத்தப்படுகிறது. மாண்பமை நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள மணல் குவாரிகள் சம்பந்தப்பட்ட பல்வேறு வழக்குகளின் தொடர் நடவடிக்கைகள் திட்ட இயக்குனரகத்தால் மேற்கொள்ளப்படுகிறது.

அனைத்து குவாரிகள் மற்றும் விற்பனைக் கிடங்குகளில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராக்கள்மூலம் குவாரிகள் மற்றும் விற்பனைக் கிடங்குகள் சென்னையிலுள்ள திட்ட இயக்குனரகத்தில் இயங்கும் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு அறையில்

2020 மார்ச் 18]

கண்காணிக்கப்படுகின்றன. பொதுமக்களின் குறைபாடுகளை தீர்க்க வலுவான நுகர்வோர் குறைதீர்ப்பு மையம் இயக்குனரகத்தின் கட்டுப்பாட்டு அறையில் இயங்கி வருகின்றது.

3.4. தமிழ்நாடு நீர் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளை சீரமைத்தல் கழகம்

தமிழ்நாடு நீர் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளை சீரமைத்தல் கழகம், பெருநிறுவனங்களின் பதிவாளரிடம் பதிவு செய்யப்பட்டு, 25-12-2019 முதல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. இக்கழகத்தின் முக்கிய நோக்கம் நீர் பாதுகாப்பை ஊக்குவித்தல், ஏரி, ஆறுகளை மீட்பது மற்றும் தற்போதுள்ள நீர்ப் பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்துதல் ஆகும். மேலும், வெள்ள உபரிநீர் கால்வாய்களை ஒன்றோடொன்று இணைப்பது, ஆறுகள் மற்றும் நதிப் படுகைகளை ஒன்றோடொன்று இணைப்பது குறித்தும் இக்கழகம் கவனம் செலுத்தும். கடல்நீர் ஊடுருவலைத் தடுப்பது, ஈரமான நிலப் பாதுகாப்பு மற்றும் வெள்ளத் தணிப்பு ஆகியவற்றிற்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து பருவநிலை மாறுதல்களுக்கேற்ற தகவமைப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துவது போன்றவை இக்கழகத்தின் பிரதான பணிகளாகும். அரசால் தொடங்கப்பட்ட நீர் மேலாண்மை இயக்கப் பணியின் நோக்கங்களை நிறைவேற்ற பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதை கழகம் ஊக்குவிக்கும். இக்கழகம் பொதுப் பணித் துறையின் நிருவாக கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும். இக்கழகத்திற்கு தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். இக்கழகத்திற்கு அரசு மானிய நிதியுதவியாக 5.00 கோடி ரூபாய் மற்றும் பங்கு மூலதன நிதியாக 5.00 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளன.

4.0. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

ஐக்கிய நாடுகள் பொது சபை உச்சி மாநாட்டில் 193 உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்-2030 செயல் திட்டத்தின் பகுதியாக, 17 நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் மற்றும் 169 குறிக்கோள்கள் உள்ளன.

உயிரினம் வாழ அடிப்படை மற்றும் அத்தியாவசியமான இயற்கையின் ஒரு அங்கமான நீரை இத்துறை கையாள்கிறது. நீரின் நிலையான மேலாண்மை மிகவும் முக்கியமானதாகும். இது நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 6-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இலக்கின்கீழ் உள்ள நீர் வள ஆதாரத் துறை தொடர்புடைய குறிக்கோள்கள் பின்வருமாறு:-

- **குறிக்கோள் 6.4:** 2030 ஆம் ஆண்டிற்குள், அனைத்து துறைகளிலும் தண்ணீரை திறம்பட பயன்படுத்தும் முறையை மேம்படுத்துதல், நிலத்தடி நீரை பயன்படுத்துவதிலும் நன்னீர் வழங்குவதிலும் நிலைத்த தன்மையை உறுதி செய்வதன் வாயிலாக நீர் பற்றாக்குறையைப் போக்குதல் மற்றும் நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்தல்.

- **குறிக்கோள் 6.5:** 2030 ஆம் ஆண்டிற்குள், அனைத்து நிலைகளிலும் தகுந்த, ஒருங்கிணைந்த நீர் ஆதார மேலாண்மையை செயல்படுத்துதல். இதற்கு ஏதுவாக மாநிலங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை ஏற்படுத்துதல்.

- **குறிக்கோள் 6.6:** 2020 ஆம் ஆண்டிற்குள், நீர் ஆதாரம் தொடர்புடைய பல்வேறு சூழலியல் காரணிகளான மலைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், நீர்த் தாங்கிகள் மற்றும் ஏரிகள் ஆகியவற்றை பாதுகாத்தல் மற்றும் மீட்டெடுத்தல்.

- **குறிக்கோள் 6.a:** 2030 ஆம் ஆண்டிற்குள், நீரை சேமித்தல், கடல்நீரைக் குடிநீராக்குதல், நீரை திறம்பட விநியோகித்தல், கழிவுநீரை சுத்திகரித்தல், மறுசுழற்சி செய்தல், மறு பயன்பாட்டிற்கான தொழில்நுட்பம் இவற்றிற்கான செயல்பாடுகள் மற்றும் திட்டங்களை செயல்படுத்த ஏதுவாக வளரும் நாடுகளுக்கு திறன் மேம்பாட்டு ஆதரவு அளித்தல் மற்றும் பன்னாட்டு கூட்டுறவை விரிவுபடுத்துதல்.

- **குறிக்கோள் 6.b:** நீர் மற்றும் சுகாதார மேலாண்மையை மேம்படுத்த ஏதுவாக உள்ளூர் மக்களின் பங்கேற்பை ஆதரவளித்து வலுப்படுத்துதல்.

அரசாணை (நிலை) எண் 36, பொதுப் பணித் (சி. பா.1), துறை, நாள் 25-1-2020-ல் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக ஓர் அலகு பொதுப் பணித் துறையில் அமைக்கப்பட்டுள்ளது.

2020 மார்ச் 18]

துறையின் பல்வேறு திட்டங்களை திறம்பட செயல்படுத்துவதோடு, சர்வதேச ஒத்துழைப்பை நோக்கி ஒரு புதிய பாதையை எடுத்துச்செல்வதன்மூலம், எதிர்கால தலைமுறையினருக்கான விலைமதிப்பற்ற நீர் வளமாக இருக்கும் நீர்நிலைகள், சதுப்பு நிலங்கள், ஏரிகள் மற்றும் ஆறுகள் பாதுகாக்கப்பட்டு நாட்டின் "நீர் மிகை மாநிலம்" என்ற நிலையை அடைய, அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் 2030-க்கான செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பாதையில் இத்துறை பயணித்து வருகிறது.

5.0. பன்மாநில நதி நீர் பிரச்சினைகள்

5.1. காவேரி நதி நீர் தாவா

பன்மாநில நதி நீர் தாவாச் சட்டம், 1956-ல் பிரிவு 5(2)-ல் குறிப்பிட்டுள்ளவாறு, காவேரி நடுவர் மன்றம் இறுதி ஆணையை 5-2-2007 அன்று பிறப்பித்தது. இதில் மாநிலவாரியாக, 50 விழுக்காடு நம்பகத்தன்மை அடிப்படையில், ஒதுக்கீடு பின்வருமாறு:-

(டி.எம்.சி. அடியில்)

கர்நாடகா	270
தமிழ்நாடு	419
கேரளா	30
புதுச்சேரி	7
சுற்றுச்சூழல் பாதுகாப்பு	10
கடலில் சேரும் தவிர்க்க முடியாத உபரி நீர்	4
மொத்தம்	740

தமிழ்நாடு மேற்கொண்ட தொடர் சட்டப் போராட்டத்தினாலும், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டாலும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை 19-2-2013 அன்று மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது. இதன் பிறகு, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையில் உள்ள பரிந்துரைப்படி, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை உடனடியாக அமைக்கும்படி தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் நடுவர் மன்ற இறுதி ஆணையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம் 16-2-2018 அன்று வழங்கிய தீர்ப்பில் மாநிலங்களுக்கு கீழ்க்கண்டவாறு நீர் ஒதுக்கீடு செய்யப்பட்டது:-

(டி.எம்.சி. அடியில்)

கர்நாடகா	284.75
தமிழ்நாடு	404.25
கேரளா	30
புதுச்சேரி	7
சுற்றுச்சூழல் பாதுகாப்பு	10
கடலில் சேரும் தவிர்க்க முடியாத உபரி நீர்	4
மொத்தம்	740

மேற்கண்ட நீர் ஒதுக்கீட்டின் அடிப்படையில், கர்நாடக அரசு, இரு மாநில எல்லையான பில்லிகுண்டுலுவில், தமிழ்நாட்டுக்கு 177.25 டி.எம்.சி. அடி நீர் வழங்க வேண்டும். மேற்கூறிய மாற்றத்தை தவிர, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் பதிவு செய்யப்பட்ட முடிவுகளின்மீது எவ்வித மாற்றத்தையும் உச்ச நீதிமன்றம் செய்யவில்லை.

உச்ச நீதிமன்றம் 16-2-2018 அன்று வழங்கிய தீர்ப்பில், அன்றிலிருந்து 6 வார காலத்திற்குள் அதன் தீர்ப்பை செயலாக்க ஒரு திட்டத்தை மத்திய அரசு அமைக்க வேண்டும் என ஆணையிட்டது. இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு கடிதங்கள் வாயிலாகவும், கோரிக்கை மனுக்கள் வாயிலாகவும் ஒரு செயலாக்கத் திட்டத்தை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசு உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி செயலாக்கத் திட்டத்தை அமைக்காததால், தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத் தயாரித்து உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இதனை உச்ச நீதிமன்றம் 18-5-2018 நாளிட்ட தீர்ப்பில் ஏற்றுக்கொள்வதாகத் தீர்ப்பளித்தது. இதன்படி, காவேரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும்

குழு ஆகிய அமைப்புகள் அடங்கிய காவேரி நீர் மேலாண்மைத் திட்டம், 2018 என்ற திட்டத்தை 1-6-2018 அன்று மத்திய அரசிதழில் அறிவித்தது.

காவேரி நீர் மேலாண்மை ஆணையத்தில் பொதுப் பணித் துறை முதன்மைச் செயலாளரும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவில் நீர் வள ஆதாரத் துறையின் திருச்சிராப்பள்ளி மண்டலத் தலைமைப் பொறியாளரும் தமிழ்நாட்டின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். காவேரி நீர் மேலாண்மை ஆணையம் இதுவரை 5 கூட்டங்களை நடத்தியுள்ளது. காவேரி நீர் முறைப்படுத்தும் குழு 26 முறை கூடியுள்ளது. இக்கூட்டங்களில் தமிழ்நாட்டின் கருத்துகள் வலிமையாக எடுத்துரைக்கப்பட்டன.

5.1.1. கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட உத்தேசித்துள்ளதைத் தடுத்து நிறுத்த தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள்

கர்நாடக அரசு, மேகதாது என்னும் இடத்தில் புதியதாக அணை கட்டுவதற்கு உத்தேசித்துள்ளதற்கு, தமிழ்நாடு அரசு அதன் கடுமையான எதிர்ப்பினை மத்திய அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் தொடர்ந்து தெரிவித்து வருகிறது.

கர்நாடக அரசு, மேகதாதுவில் 67.16 டி.எம்.சி. அடி கொள்ளளவு கொண்ட சமமட்ட நீர்த்தேக்கம் மற்றும் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்து, மத்திய நீர் வள குழுமத்தின் ஒப்புதலுக்காக 4-8-2018 அன்று தன்னிச்சையாக அனுப்பியது. இத்திட்ட அறிக்கையின் நகலை 24-8-2018 அன்று மத்திய நீர் வள குழுமத்தின் திட்ட மதிப்பீட்டு இயக்குனரகத்தால் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அறிக்கைக்கு தமிழ்நாடு அரசு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், மத்திய நீர் வளக் குழுமம் 22-11-2018 அன்று இத்திட்டத்திற்கான விரிவான அறிக்கையை தயாரிக்க கர்நாடகாவின் காவேரி நீராவாரி நிகம் நிறுவனத்திற்கு அனுமதியளித்தது.

இந்நிலையில், தமிழ்நாடு அரசு 30-11-2018 அன்று கீழ்க்கண்ட கோரிக்கைகளின்மீது உத்தரவு பிறப்பிக்க வேண்டி உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனுவினை தாக்கல் செய்தது:-

1. மத்திய நீர் வளக் குழுமம் 22-11-2018 அன்று கர்நாடகாவின் காவேரி நீராவாரி நிகம் நிறுவனத்திற்கு மேகதாது அணை

கட்ட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க வழங்கிய அனுமதிக்கு தடை விதித்தல்.

2. மத்திய நீர் வள அமைச்சகத்தின்கீழ் உள்ள மத்திய நீர் வளக் குழுமத்தின் 22-11-2018 தேதியிட்ட கடிதத்தைத் திரும்பப்பெறுதல்.

3. கர்நாடகாவின் காவேரி நீராவாரி நிகம் நிறுவனம், மேகதாது அணைக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதை நிறுத்திவைத்தல்.

4. கர்நாடக அரசின்கீழ் செயல்படும் நிறுவனம் மற்றும் எந்தவொரு முகமையும், கர்நாடக எல்லைக்குள் காவேரி படுகையில் எந்தவொரு அணை கட்டுதல் போன்ற திட்டத்தை மேற்கொள்ளாமல், தற்போது உள்ள நிலையே தொடருதல்.

மேலும், உச்ச நீதிமன்றத்தில் 5-12-2018 அன்று தமிழ்நாடு அரசு, மத்திய நீர் வள குழுமத்தின் திட்ட மதிப்பீட்டு இயக்குனர், கர்நாடக அரசு நீர் வள ஆதாரத் துறைச் செயலாளர் மற்றும் பிறர் மீது நீதிமன்ற அவமதிப்பு மனு ஒன்றினை தாக்கல் செய்தது.

இவ்வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

மேகதாது அணை கட்டுவதற்காக சுற்றுச்சூழல் அனுமதி அளிக்கக் கோரி மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாறுதலுக்கான அமைச்சகத்தை கர்நாடக அரசின் காவேரி நீராவாரி நிகம் நிறுவனம் 20-6-2019 அன்று அணுகியதாக தெரிய வந்ததையடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 24-6-2019 அன்று அனுப்பிய கடிதத்தில், கர்நாடகாவின் மேகதாது அணை திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கக் கூடாது என மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாறுதலுக்கான அமைச்சகத்திற்கு அறிவுறுத்த வேண்டியும் மற்றும் இத்திட்ட அறிக்கையை முற்றிலும் நிராகரித்து திருப்பி அனுப்புமாறு ஜல்சக்தி அமைச்சகம், மத்திய நீர் வளக் குழுமத்திற்கு அறிவுறுத்துமாறும், தமிழ்நாடு மற்றும் பிற படுகை மாநிலங்களின் இசைவினைப் பெறாமல் கர்நாடக அரசின் எந்தவொரு திட்டத்திற்கும் மத்திய அரசு அனுமதி அளிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தி கேட்டுக்கொள்ளப்பட்டது.

2020 மார்ச் 18]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10-7-2019 அன்று மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாறுதலுக்கான அமைச்சர் மற்றும் மத்திய ஜல்சக்தி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிய கடிதங்களில், கர்நாடகாவின் மேகதாதுவில் அணை கட்டுவதற்கு உத்தேசித்துள்ள கோரிக்கையை வல்லுநர் குழு நிராகரிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

19-7-2019 அன்று நடைபெற்ற ஆற்றுப் பள்ளத்தாக்கு மற்றும் நீர்மின் திட்டங்கள் வல்லுநர் குழுவின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு கர்நாடக அரசிடமிருந்து மேலும் சில விவரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கர்நாடக அரசின் காவேரி நீராவாரி நிகம் நிறுவனம், 4-10-2019 அன்று ஆற்றுப் பள்ளத்தாக்கு மற்றும் நீர்மின் திட்ட இயக்குனருக்கு மேகதாதுவில் அணை கட்டுவதற்கு சுற்றுச்சூழல் அனுமதி கோரி மீண்டும் மனுவினை சமர்ப்பித்ததையடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9-10-2019 அன்று மாண்புமிகு மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாறுதலுக்கான அமைச்சர் மற்றும் மாண்புமிகு மத்திய ஜல்சக்தி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிய கடிதங்களில் வல்லுநர் குழு கர்நாடகாவின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாமல், நிராகரித்து திருப்பி அனுப்பும்படி வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசு, 24-1-2020 அன்று மத்திய சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாறுதலுக்கான அமைச்சகத்திற்கு அனுப்பிய கடிதத்தில், தமிழ்நாட்டின் வலிமையான மறுப்புகளைத் தெரிவித்து, கர்நாடகாவின் மேகதாது அணை திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதியை வல்லுநர் குழு வழங்கக் கூடாது என வலியுறுத்தி கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேகதாதுவிலோ அல்லது வேறு எந்தவொரு இடத்திலோ, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஆகியவற்றை மீறும் வகையில் அணையைக் கட்டுவதற்கான கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்திடவும், தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2020 மார்ச் 18

5.1.2. காவேரி ஆற்றிலும் பெண்ணையாற்றிலும் கர்நாடகா கழிவுநீரை விடுவித்தல்

காவேரி மற்றும் பெண்ணையாறுகளில் கழிவு மற்றும் தொழிற்சாலை கழிவுநீரினை கர்நாடக அரசு விடுவிப்பதால், தமிழ்நாட்டிற்கும், அதன் மக்களுக்கும் ஏற்படக்கூடிய கடுமையான விளைவுகளைத் தடுக்க வேண்டி, தமிழ்நாடு அரசு 2015-ல் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்தது. இந்த வழக்கில் மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியம் தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் உள்ள புள்ளிவிவரங்களின்படி, காவேரி மற்றும் பெண்ணையாறு நதிகளில் கர்நாடகா கழிவுநீரை விடுவிப்பதால் இவ்விரு நதிகளும் மாசுபடுகின்றன என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் உள்ளது.

5.2. முல்லைப் பெரியாறு அணை

திருவாங்கூர் மகாராஜாவுக்கும், மதராஸ் மாகாண அரசுக்கும் இடையே 29-10-1886-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்மூலம் "பெரியாறு திட்டம்" செயல்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் காலம் 1-1-1886 முதல் 999 ஆண்டுகளாகும். இத்திட்டத்திற்காக சுமார் 8,000 ஏக்கர் நிலம் குத்தகைக்கு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால், தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமாராக 2.20 இலட்சம் ஏக்கர் நிலம் பயன்பெறுகிறது. ஆண்டொன்றுக்கு சராசரியாக 22 டி.எம்.சி. அடி நீர் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வணையின் பாதுகாப்பு பற்றி சில அச்சங்கள் 1979-ல் எழுப்பப்பட்டன. அதற்குத் தீர்வு காண, அணையை நவீன தரத்திற்கு கொண்டுவர, மத்திய நீர் வளக் குழுமம் பரிந்துரைத்த சில பணிகளை செய்துமுடித்த உடன் 145 அடி வரையில் முதற்கட்டமாக உயர்த்திக் கொள்ளலாம் என்ற மத்திய நீர் வளக் குழுமப் பரிந்துரைகளை கேரளா அரசு ஏற்கவில்லை. அணையின் நீர்மட்டம் எப்பொழுதும் 136 அடியிலேயே இருக்க வேண்டும் என்று கேரள அரசு வலியுறுத்தியது.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்களில் 27-2-2006 அன்று, 142 அடிக்கு நீர்மட்டத்தை உயர்த்திக் கொள்ளலாம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பினை செயல்படுத்தவிடாமல் கேரள அரசு அதன் 2003 ஆம் ஆண்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளப் பாதுகாப்புச் சட்டத்திற்கு

2020 மார்ச் 18]

திருத்தங்களை மேற்கொண்டு, அதில் முல்லைப் பெரியாறு அணையின் முழு நீர்மட்ட அளவு 136 அடி என நிர்ணயித்தது.

இந்தத் திருத்திய சட்டத்தை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கில், உச்ச நீதிமன்றம் 7-5-2014 அன்று தீர்ப்பினை வழங்கியது. இத்தீர்ப்பில், 2006 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது. மேலும், கேரள அரசின் திருத்திய சட்டம், முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தவரையில், அரசியல் சாசனத்திற்கு முரணானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, 142 அடிவரையில் நீர் மட்டத்தை உயர்த்திக் கொள்ளவும், அவ்வப்போது அணையினை ஆய்வு செய்து பரிந்துரை செய்வதற்கும், மேற்பார்வைக் குழுவை அமைக்கவும் உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

மேற்பார்வைக் குழு 17-7-2014 அன்று எடுத்த முடிவின்படி, அணை மதகின் கதவுகள் கீழே இறக்கப்பட்டன. அணையின் நீர்மட்டம் 142 அடியை 21-11-2014 அன்று அடைந்தது. இந்நிகழ்வு சுமார் 35 வருடங்களுக்கு பிறகு ஏற்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும். மேலும், இரண்டாவது மற்றும் மூன்றாவது முறையாக 7-12-2015 மற்றும் 15-8-2018-ல் அணையின் நீர்மட்டம் 142 அடியை எட்டியது.

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில், ஜுன் 2000-ல் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் வழங்குவதற்கு கேரள அரசு தனது இசைவினை செப்டம்பர், 2019-ல் அளித்துள்ளது. மின் இணைப்பிற்காக, ஏற்கெனவே 1.65 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசு செலுத்தியதுடன் கூடுதலாக, அண்மையில் 13,47,035 ரூபாய் செலுத்த கேரள மின்சார வாரியம் கேட்டுக் கொண்டபடி இத்தொகையை தமிழ்நாடு அரசு செலுத்தியுள்ளது.

5.2.1. முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முழுக் கொள்ளளவான 152 அடி வரை உயர்த்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய எஞ்சிய பலப்படுத்தும் பணிகள்

மத்திய நீர் வளக் குழுமம், 2000-ல் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, 27-2-2006 தேதியிட்ட உச்ச நீதிமன்றத்தின் ஆணை, 2010-ல் அமைக்கப்பட்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழு, உச்ச நீதிமன்றத்தின் 7-5-2014 நாளிட்ட ஆணை ஆகியவைகளில் கூறப்பட்ட எஞ்சிய பலப்படுத்தும் பணிகளை நிறைவேற்ற, 7.85 கோடி ரூபாய்க்கு

[2020 மார்ச் 18

நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. பேபி அணையை வலுப்படுத்த 23 மரங்களை அகற்ற வேண்டியுள்ளது. இதற்கு மத்திய அரசின் வன அனுமதியைப் பெறுவதற்கான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அனுமதி தேவை இல்லாத மற்ற பணிகள் முடிவடைந்துள்ளன.

23 மரங்களை அகற்ற, அணைக்கு செல்லும் வனச் சாலை சரிசெய்தல் பணிகளை விரைவில் முடிக்க ஒத்துழைப்பு தருமாறு கேரள அரசிற்கு உத்தரவிடுமாறு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு நிலுவையில் உள்ளது.

5.2.2.கேரள அரசால், முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பரப்பு பகுதியில் மேற்கொள்ளப்படும் பெரும் வாகன நிறுத்தத்திற்கான கட்டுமானம்

கேரள அரசு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்பரப்பு உள்ளடக்கிய பகுதியில் பெரும் வாகன நிறுத்த திட்ட வழக்கை விசாரித்த தேசிய பசுமைத் தீர்ப்பாயம், 15-11-2017 நாளிட்ட ஆணைப்படி வாகனம் நிறுத்தும் திட்டத்தை பொறுத்தவரையில், தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் அனுமதி வழங்கியுள்ளதால், வன பாதுகாப்புச் சட்டத்தின் அனுமதி தேவையில்லை என்று ஆணையிட்டுள்ளது. இந்த அனுமதியை எதிர்த்து, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில், சிவில் மேல் முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்துள்ளது.

உச்ச நீதிமன்றம் 4-12-2017 அன்று கேரள அரசு எவ்வித நிரந்தர கட்டுமானங்களையும் மேற்கொள்ளக் கூடாது என்ற உத்தரவை பிறப்பித்தது. கேரள அரசு நிரந்தர கட்டுமானப் பணிகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது 8-5-2019-ல் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்குகள், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

இது தவிர, கேரள அரசின் வாகன நிறுத்த திட்டம் மற்றும் குத்தகை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டி, தமிழ்நாடு அரசு 2014-ல் உச்ச நீதிமன்றத்தில் ஒரு சிவில் வழக்கினை தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

2020 மார்ச் 18]

5.3. பாலாறு நதிநீர்ப் பிரச்சினை

பன்மாநிலங்களுக்கிடையே பாயும் நதிகளில் ஒன்றான பாலாறு, கர்நாடக மாநிலத்தில் கோலார் மாவட்டத்தில் உற்பத்தியாகி, ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம் வழியாக, தமிழ்நாட்டிலுள்ள, வேலூர் மாவட்டத்தில் நுழைந்து, திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் வழியாக சென்று வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

ஆந்திரப் பிரதேச அரசு, 1892 ஆம் ஆண்டைய மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில் சித்தூர் மாவட்டத்தில் குப்பம் வட்டத்திலுள்ள கணேசபுரத்தில் பாலாற்றின் குறுக்கே சுமார் 0.6 டி.எம்.சி. அடி கொள்ளளவிற்கு நீரைத் தேக்கும் வகையில் ஓர் அணையினை கட்ட முயற்சித்ததை எதிர்த்து தமிழ்நாடு அரசு 2006 ஆம் ஆண்டில் வழக்கினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இவ்வழக்கில் இரு மாநில சாட்சியாளர்களது குறுக்கு விசாரணை முடிவடைந்துள்ளது. உச்ச நீதிமன்றத்தில் இவ்வழக்கு நிலுவையில் உள்ளது. இதற்கிடையே தமிழ்நாடு-ஆந்திர அரசுகளிடையே மத்திய அரசு 7-5-2018 அன்று நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏதும் எட்டப்படவில்லை.

பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு, சித்தூர் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஏற்கெனவே இருந்த தடுப்பணைகளின் உயரத்தை உயர்த்துவதற்கும், சீரமைப்பதற்கும் மற்றும் புதிய தடுப்பணைகளை கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டபோது, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 2016 ஆம் ஆண்டில் மற்றும் ஒரு வழக்கினை தாக்கல் செய்தது. பாலாற்றிலிருந்து தமிழ்நாடு இயற்கையாக பெறவேண்டிய நீரினைப் பெறுவதற்காக இத்தடுப்பணைகளின் உயரத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காக தமிழக அரசு 2017, 2018 மற்றும் 2019-ல் இடைக்கால மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

5.4. பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் ஒப்பந்தம் மறு ஆய்வு

மேற்கு நோக்கி ஓடுகின்ற எட்டு நதிகளில், அதாவது மலைப்பகுதியில் செல்கின்ற ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், அதன் கிளை நதிகளான பெருவாரிப்பள்ளம் மற்றும் தூணக்கடவு மற்றும் சமவெளிப்பகுதியில் ஓடுகின்ற ஆழியாறு மற்றும் பாலாறு ஆகிய நதிகளில் கிடைக்கக்கூடிய நீரைப் பயன்படுத்தும்

[2020 மார்ச் 18

வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1956-1961) கேரள அரசின் இசைவுடன், தமிழ்நாடு அரசினால், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டம் உருவாக்கப்பட்டது. கேரளா மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கிடையே, 29-5-1970 அன்று மேற்குறிப்பிட்டுள்ள நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீரை இரு மாநிலங்களின் மின் உற்பத்தி, பாசனம், குடிநீர் வழங்கல், தொழிற்சாலை பயன்பாடு மற்றும் இதர உபயோகங்களுக்காக பயன்படுத்தும் பொருட்டு, 9-11-1958 முதல் முன் தேதியிட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டத்தால் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பொள்ளாச்சி, பல்லடம், உடுமலைப்பேட்டை மற்றும் தாராபுரம் ஆகிய வட்டங்கள் பயனடைகின்றன. கேரள மாநிலத்தின் பாலக்காடு மற்றும் திருச்சூர் மாவட்டங்களும் பயனடைகின்றன. இந்த ஒப்பந்தம் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பின்னரும் மறுஆய்வு செய்யப்பட வேண்டும். இதன்படி, 9-11-1988 அன்று மறு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இரு மாநிலங்களும் இந்த ஒப்பந்த மறுஆய்விற்கான ஆவணங்களை 21-9-1989 அன்று பரிமாற்றம் செய்து கொண்டன. இந்த ஒப்பந்தம் மறு ஆய்வு குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் நிலையில் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

தமிழ்நாடு-கேரள மாநில மாண்புமிகு முதலமைச்சர்களிடையே 25-9-2019 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்த மறு ஆய்வு மற்றும் தமிழ்நாடு-கேரள அரசுகளுக்கிடையே உள்ள பிற நதிநீர்ப் பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டன.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, செயலாளர்கள் தலைமையில், ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் ஒப்பந்த மறு ஆய்வு, ஆனைமலையாறு திட்டம் மற்றும் பிற பிரச்சினைகளை பரிசீலிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது.

மேற்குறிப்பிட்டுள்ள இரு மாநில முதன்மைச் செயலர்களின் தலைமையில் இயங்கும் குழுவின் முதல் கூட்டம் 12-12-2019 அன்று சென்னையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஒப்பந்த மறு ஆய்வை விரைந்து முடிப்பதற்கு தமிழ்நாடு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

2020 மார்ச் 18]

5.4.1. ஆனைமலையாற்றிலிருந்து 2.5 டி.எம்.சி. அடி நீரை தமிழ்நாட்டிற்கு திருப்பும் திட்டம்

ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்திற்கு 2.5 டி.எம்.சி. அடி நீரை திருப்புவதற்கு ஒப்பந்தப்படி தமிழ்நாட்டிற்கு உரிமை உண்டு. இத்திட்டத்திற்கு ஒரு துணை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட வேண்டும். ஆனால், கேரள அரசு அதன் இடமலையாறு திட்டம் முடிவு பெறவில்லை என தொடர்ந்து காரணம் காட்டி, இந்த நீரை திருப்ப அதன் இசைவை தரவில்லை. மேலும், இத்திட்டத்தை கேரள அரசே செயல்படுத்த விரும்புவதாகக் கூறி, ஆனைமலையாற்றின் குறுக்கே இட்டலியாறு ஆனைமலையாற்றில் சேரும் இடத்திற்குக் கீழ்ப்பகுதியில் அணையை கட்டி, கீழ் நீராறு அணைக்கு 2.5 டி.எம்.சி. அடி நீரை திருப்பவும் மற்றும் எஞ்சிய நீர்வரத்தை மணலியாற்றிற்கு திருப்பி, (2x50) 100 மெகா வாட் நீர்மின் உற்பத்தி செய்யும் நோக்குடன்கூடிய ஒருங்கிணைந்த தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையை 18-6-2013 அன்று தமிழ்நாட்டிற்கு அனுப்பியது. இது தொடர்பாக 12-12-2019 அன்று சென்னையில் நடைபெற்ற குழுவின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், கேரள அரசு, இத்திட்டத்திற்கான கூடுதல் தகவல்களை தமிழ்நாடு அரசிற்கு விரைவில் வழங்குவதற்கு ஒப்புக்கொண்டது.

5.4.2. நீராறு-நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்புத் திட்டம்

இத்திட்டம், நல்லாற்றின் குறுக்கே 7 டி.எம்.சி. அடி நீரைத் தேக்கி வைக்க ஒரு நீர்த்தேக்கம் கட்டவும் மற்றும் மேல் நீராறு சிற்றணையிலிருந்து சுரங்க வழியாக நீரை நேரடியாக நல்லாற்றுக்கு திருப்பவும், நீர்மின் உற்பத்தி செய்யவும் வழிவகை செய்யும் திட்டமாகும். தமிழ்நாடு அரசு, நீராறு அணையிலிருந்து தமிழ்நாடு சோலையாறு அணை, பரம்பிக்குளம் அணை வழியாக திருமூர்த்தி அணைக்கு சமமட்டக் கால்வாய்மூலம் சுற்றுப் பாதையில் நீரைக் கொண்டு செல்வதையும், அதன் வாயிலாக ஏற்படும் நீர் இழப்பைத் தவிர்க்கும் பொருட்டும், நீராறு-நல்லாறு பல்நோக்கு நேர் இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியது. இத்திட்டத்திற்காக கேரள அரசின் ஒப்புதல் கோரப்பட்டது. ஆனால், இந்தத் திட்டம் ஒரு புதிய திட்டம், ஒப்பந்த மறு ஆய்விற்கு அப்பாற்பட்டது என கேரள அரசு தெரிவித்தது. இரு மாநில செயலர்களின் தலைமையில் இயங்கும் குழுவின் 12-12-2019 அன்று

சென்னையில் நடைபெற்ற முதல் கூட்டத்தில் இப்பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், இப்பிரச்சினை குறித்து இக்குழுவின் எதிர்காலக் கூட்டங்களில் விவாதிக்கப்பட உள்ளது.

5.5. நெய்யாறு பாசனத் திட்டம்

நெய்யாறு பாசனத் திட்டம் இரு கட்டங்களாக திருவாங்கூர்-கொச்சி அரசால் திட்டமிடப்பட்டு, முதலாம் மற்றும் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் (1951-1956 மற்றும் 1956-1961) கட்டி முடிக்கப்பட்டது. 1956 ஆம் ஆண்டு, மாநிலங்கள் திருத்தி அமைக்கப்பட்டதால் விளவங்கோடு வட்டத்தில் இத்திட்டத்தின் கீழுள்ள 9,200 ஏக்கர் பாசனப் பரப்பானது தமிழ்நாட்டின் கன்னியாகுமரி மாவட்டத்துடன் இணைந்தது. மத்திய அரசு மற்றும் கேரள அரசின் இசைவோடு, மேற்கூறிய விவசாய நிலங்களுக்கு, பாசன வசதிக்காக கால்வாய்ப் பணிகளை தமிழ்நாடு அரசு செய்தது. இத்திட்டம் 1965 ஆம் ஆண்டிலிருந்து செயல்பாட்டில் இருக்கிறது. கேரள அரசு மார்ச், 2004 முதல் தமிழ்நாட்டிற்கு நீர் விடுவிப்பதை நிறுத்தி வைத்தது. தமிழ்நாட்டிற்கு நீர் விடுவிப்பதற்காக பலமுறை பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதிலும் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் 2012 ஆம் ஆண்டு ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்தது. அது நிலுவையில் உள்ளது.

தமிழ்நாடு மற்றும் கேரள முதலமைச்சர்களுக்கிடையே திருவனந்தபுரத்தில் 25-9-2019 அன்று நடைபெற்ற கூட்டத்தில், நெய்யாறு அணையிலிருந்து கன்னியாகுமரியில் உள்ள விளவங்கோடு வட்டத்தில் உள்ள பாசனப் பரப்பிற்கு நீர் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதுகுறித்து கேரள அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

5.6. செண்பகவல்லி அணையை சீரமைத்தல்

கேரள எல்லையில் பெரியாறு வடிநிலத்தில் புளியம்பட்டிதோடு மற்றும் சொக்கம்பட்டிதோடு ஆகிய இரு ஓடைகள் கூடுமிடத்தில் தமிழகம் நோக்கி தண்ணீரைத் திருப்பிவிட ஏதுவாக, தமிழ்நாட்டின் மேற்கு எல்லைக்கு அருகில் செண்பகவல்லி அணை கட்டப்பட்டது. இந்த அணை சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக செயல்பாட்டில் இருந்து வருகிறது. இந்த அணையிலிருந்து தென்காசி மாவட்டம், சிவகிரி வட்டத்தில் உள்ள முக்கியமான இரு ஏரிகளான குலசேகரப்பேரி மற்றும் இராசிங்கப்பேரி ஆகிய ஏரிகளுக்கு சுமார்

4,400 அடி (1,341 மீட்டர்) நீளமுள்ள கன்யாமதகு கால்வாய் வழியாக நீர் திருப்பி விடப்படுகிறது. இதனால், தென்காசி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் உள்ள சுமார் 10,924 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. தமிழ்நாடு அரசு செண்பகவல்லி அணைக்கட்டை சீரமைப்பதற்காக கேரள அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையை மேற்கொண்டு வருகிறது.

செண்பகவல்லி அணை மற்றும் கன்யாமதகு கால்வாயை சீரமைக்கும் பணியினை விரைவில் மேற்கொள்ள வேண்டி மூன்று ரிட் மனுக்கள் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு இவ்வழக்குகளுக்கான பதிலினை தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்குகள் நிலுவையில் உள்ளன.

5.7. பெண்ணையாறு

பெண்ணையாறு, கர்நாடக மாநிலத்தில் உள்ள நந்திதுர்க் மலையில் உற்பத்தியாகி கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் வழியாகச் சென்று வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. பெண்ணையாறு ஒரு பன்மாநில நதியாகும். 1892 ஆம் ஆண்டைய மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும் வகையில் கர்நாடக அரசு இந்நதியின் துணை நதியான மார்க்கண்டேய நதியின் குறுக்கே அணை கட்டுதல், பெண்ணையாற்றில் இருந்து நீரைத் திருப்புவதற்கான கட்டுமானங்களை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதை எதிர்த்து தமிழ்நாடு அரசு 2018-ல் உச்ச நீதிமன்றத்தில் ஓர் அசல் வழக்கினை (O.S. No.1/2018) இடைக்கால மனுவுடன் தாக்கல் செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த இடைக்கால மனுவின் (I.A.No.95384/2019)மீது உச்ச நீதிமன்றம் 14-11-2019 அன்று தீர்ப்பு வழங்கியது. உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டிற்கு வழங்கிய உரிமையின் அடிப்படையில், பெண்ணையாறு நதிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக, ஒரு நடுவர் மன்றத்தை அமைக்க வேண்டி, மத்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகத்தை 30-11-2019 அன்று தமிழ்நாடு அரசு கேட்டுக்கொண்டது. மேலும், உச்ச நீதிமன்றத்தில், கர்நாடக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களின் தற்போதைய நடைமுறை நிலைமையே தொடர வேண்டும் என உத்தரவிடக் கோரி, தமிழ்நாடு அரசு ஓர் இடைக்கால மனுவினை (I.A.No.193417/2019), 16-12-2019 அன்று தாக்கல் செய்தது.

[2020 மார்ச் 18

மத்திய அரசின் ஜல்சக்தி அமைச்சகம், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களுக்கிடையே பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்காக, மத்திய நீர் வளக் குழுமத்தின் தலைவரின் தலைமையில் ஓர் ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக் குழுவை ஜனவரி, 2020-ல் அமைத்துள்ளது. இக்குழுவில், சம்பந்தப்பட்ட படுகை மாநிலங்களின் முதன்மைத் தலைமைப் பொறியாளர்/தலைமைப் பொறியாளர்களும், இவர்களைத் தவிர ஜல்சக்தி, வேளாண்மை, சுற்றுச்சூழல் மற்றும் வனம் ஆகிய அமைச்சகங்களிலிருந்தும் மற்றும் மத்திய நீர் வள குழுமத்தின் நீர்ப் பாசன மேலாண்மை அமைப்பிலிருந்தும், அதிகாரிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுவின் முதல் கூட்டம் 24-2-2020 அன்று புது டில்லியில் நடைபெற்றது.

5.8. நதிநீர் இணைப்பு

5.8.1. மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவேரி-வைகை-குண்டாறு இணைப்பு

தமிழ்நாடு அரசு, தீபகற்ப நதிகள் இணைப்பு திட்டத்தில், மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-பாலாறு-காவேரி-வைகை-குண்டாறு மற்றும் பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு நதிகளை இணைக்கும் திட்டங்களை செயல்படுத்த, மத்திய அரசையும், உச்ச நீதிமன்றம் 27-2-2012 தேதியிட்ட தீர்ப்பின்படி மத்திய அரசு அமைத்துள்ள சிறப்புக் குழுவையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு நீர்ப் பற்றாக்குறை மாநிலமாக உள்ளதால் கூடுதலாக நீரை வழங்கவும், ஆந்திரப் பிரதேசம்-தமிழ்நாடு எல்லையிலிருந்து இந்த இணைப்புக் கால்வாய், உயர்மட்டத்தில் அமைக்கப்பட்டு, காவேரியில் கல்லணைக்கு பதிலாக கட்டளை கதவணையில் சேரும் வகையில் இணைக்கப்படுமேயானால், தேவை உள்ள இடங்களுக்கு நீரை வழங்கவும் வைகை-குண்டாற்றுக்கு நீரை எடுத்துச் செல்ல ஏதுவாகவும் இருக்கும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதனிடையே, மத்திய அரசு, கோதாவரி (ஈச்சம்பள்ளி/ஜனம்பேட்)-காவேரி (கல்லணை) இணைப்பிற்கான வரைவு விரிவான திட்ட அறிக்கையை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு மார்ச், 2019-ல் அனுப்பி வைத்து அதன் மீதான கருத்துகளைக் கோரியது.

தமிழ்நாடு அரசு, கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணாறு-காவேரி (கல்லணை) இணைப்பின் வரைவு விரிவான திட்ட அறிக்கை மீதான அதன் கருத்துக்களை 4-9-2019 அன்று தேசிய நீர்

மேம்பாட்டு முகமையின் தலைமை இயக்குநருக்கு அனுப்பியது. அதில், முக்கியமாக கோதாவரி-காவேரி இணைப்பு நேர்கோட்டுப் பாதையினை மறு ஆய்வு செய்து, உயர்மட்டத்தில் அமைத்து, கல்லணைக்கு பதிலாக கட்டளை கதவணையில் இணைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய ஜல்சக்தி அமைச்சர் அவர்களுக்கு 3-6-2019 மற்றும் 23-8-2019 அன்று அனுப்பிய கடிதங்களில் தமிழ்நாட்டிற்கு கோதாவரியிலிருந்து குறைந்தபட்சம் 200 டி.எம்.சி. அடி நீர் அளிக்கும்படியும் மகாநதி-கோதாவரி இணைக்கப்படும்போது தமிழ்நாட்டிற்கு திருப்பப்படும் நீரின் அளவை உயர்த்தி, 300 டி.எம்.சி. அடி நீர் கிடைக்க வழிவகை செய்யுமாறும், விரிவான திட்ட அறிக்கையை விரைந்து தயாரித்து இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து நிறைவேற்றித் தரும்படியும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19-12-2019 அன்று மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் கோதாவரி-காவேரி நதிகள் இணைப்பின் விரிவான திட்ட அறிக்கையை விரைவில் தயாரித்து முடிக்க சம்பந்தப்பட்ட அமைப்புகளை அறிவுறுத்துமாறு மீண்டும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 29-2-2020 தேதியிட்ட கடிதத்தை மாண்புமிகு அமைச்சர்கள் அடங்கிய குழு ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா மாநிலங்களின் மாண்புமிகு முதலமைச்சர்களை நேரில் சந்தித்து வழங்கி, கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டத்தை விரைவாக செயல்படுத்த ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டது. இத்திட்டம் குறித்து பேச்சுவார்த்தை மேற்கொள்ள 9-3-2020 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஓர் உயர்மட்ட ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

5.8.2. பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்பு

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, பம்பா-அச்சன்கோவில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்திற்கான சாத்தியக்கூறு அறிக்கையை, கேரளாவின் பம்பா-அச்சன்கோவில் ஆறுகளின் 20 விழுக்காடு மிகை நீரான 22 டி.எம்.சி. அடி நீரினை தமிழ்நாட்டிற்குத் திருப்புவதற்கு ஏதுவாக உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தில், தமிழ்நாட்டின் சங்கரன்கோவில், கோவில்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91,400 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன், கேரள

மாநிலம் 500 மெகா வாட் மின் உற்பத்தி செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இசைவளித்த போதிலும், கேரள அரசு இதுவரையில் அதன் இசைவினை அளிக்கவில்லை.

மாண்புமிகு தமிழ்நாடு மற்றும் கேரள முதலமைச்சர்களிடையே திருவனந்தபுரத்தில் 25-9-2019 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது, பம்பா-அச்சன்கோவில் வைப்பாறு திட்டத்திற்கு கேரள அரசு ஒப்புதல் வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு அரசு, தேசிய நீர் மேம்பாட்டு முகமை, நதிநீர் இணைப்பிற்கான சிறப்புக் குழு மற்றும் மத்திய அரசு வாயிலாக இந்த இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

6.0. கிருஷ்ணா நதிநீர் வழங்கும் திட்டம்

சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை கருத்திற்கொண்டு, அப்போதைய மத்திய வேளாண்மை மற்றும் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் முன்னிலையில், 14-4-1976 அன்று மகாராஷ்டிரம், கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களுக்கு இடையே ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஒவ்வொரு மாநிலமும் அதன் கிருஷ்ணா நதிநீரின் பங்கிலிருந்து ஆண்டொன்றுக்கு 5 டி.எம்.சி. அடி தண்ணீர் வீதம் சென்னை மாநகரின் குடிநீர் தேவைக்காக வழங்க ஒப்புதல் தெரிவித்தன. அதன்பிறகு, இம்மாநிலங்களுடன் தமிழ்நாடு அரசு 28-10-1977 அன்று செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஒரு நீர் ஆண்டில் ஜூலை 1 முதல் அக்டோபர் 31 வரையிலான காலத்தில் ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து 15 டி.எம்.சி. அடி தண்ணீரை தமிழக எல்லையில் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேச மாநிலங்களுக்கிடையே, 18-4-1983 அன்று ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து கிருஷ்ணா நதிநீரை தமிழ்நாடு எல்லைக்கு கொண்டுவருவதற்கான வழிமுறைகள் (28-10-1977 நாளிட்ட ஒப்பந்தத்தின்படி), இத்திட்டத்திற்கான கூறுகளின் கட்டுமானம், 12 டி.எம்.சி. அடி நீரை (நீர் ஆவியாதல் இழப்பு

நீங்கலாக) தமிழ்நாட்டிற்கு வழங்குவதற்கான கால அட்டவணை மற்றும் இத்திட்டத்தின் கூறுகளுக்கான செலவினங்களை இரு மாநிலங்களுக்கு இடையே பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்த ஒப்பந்தத்தின்படி, சென்னை குடிநீர்த் தேவைக்காக, ஆந்திர மாநிலம், ஒரு நீர் ஆண்டிற்கு, 12 டி.எம்.சி. அடி நீரை இரண்டு தவணைகளில் பின்வருமாறு தமிழ்நாடு எல்லையில் வழங்க வேண்டும்:-

ஜூலை முதல் அக்டோபர் வரை	-	8 டி.எம்.சி. அடி.
ஜனவரி முதல் ஏப்ரல் வரை	-	4 டி.எம்.சி. அடி.

இந்த ஒப்பந்தத்தின்படி, 1996-1997 முதல் ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து சென்னை மாநகருக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தொடர் முயற்சிகளின் காரணமாக, சென்னைக்கு வழங்கப்படும் கிருஷ்ணா நதிநீரினை உறுதி செய்வதற்காக, கிருஷ்ணா நதிநீர் மேலாண்மை வாரியத் தலைவரின் தலைமையில், மகாராஷ்டிரா, கர்நாடகா, தமிழ்நாடு, தெலங்கானா மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களின் நீர் வள ஆதாரத் துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மத்திய நீர் வள ஆதாரத் துறையின் பாசன மேலாண்மை அமைப்பின் தலைமைப் பொறியாளர் ஆகியோரை உறுப்பினர்களாகவும், கிருஷ்ணா நதிநீர் மேலாண்மை வாரிய உறுப்பினர் செயலரை இக்குழுவின் உறுப்பினர் செயலராகவும் கொண்ட ஒரு குழு செப்டம்பர் 2018-ல் மத்திய அரசால் அமைக்கப்பட்டு, இதுவரை மூன்று கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

7.0. தமிழ்நாடு நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம்

தமிழ்நாட்டின் நீர் வளத்தை பாதுகாக்கவும், நீர் மேலாண்மையினை மேம்படுத்தவும், மழைநீரை சேகரிக்கவும், மக்கள் இயக்கமாக இதனை நடைமுறைப்படுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் 20-7-2019 அன்று சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், தமிழ்நாடு நீர் வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் உடனடியாக செயல்படுத்தப்படுமென்று அறிவித்தார்கள்.

இந்த மக்கள் இயக்கத்தில் கீழ்க்காணும் வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன:

அ. மழைநீர் சேகரித்தல், நீர் நிலைகளைப் பாதுகாத்து அதன் கொள்திறனை அதிகாரித்தல்.

ஆ. நிலத்தடி நீரை செறிவூட்டி, குடிநீர் வழங்குதலை நிலைப்படுத்துதல்.

இ. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் நீர் பயன்பாட்டுத் திறனை அதிகாிப்பதோடு, மானாவாரி வேளாண்மைக்காக மழைநீர் சேகரிக்கும் திட்டத்தையும் செயல்படுத்துதல்.

ஈ. பயன்படுத்தப்பட்ட நீரினை மறுசுழற்சி செய்து உபயோகப்படுத்துவதன்மூலம் நன்னீருக்கானதேவையைக் குறைத்தல். இதன்மூலம் மறுபயன்பாடு மற்றும் மறுசுழற்சி கோட்பாட்டினைத் தீவிரமாகக் கடைபிடித்தல்.

உ. ஆறுகள், முக்கிய கடற்கரை பகுதிகள், முகத்துவார நீர்நிலைகள், கழிமுகங்கள், சிற்றோடைகள் மற்றும் சதுப்பு நிலங்களின் சூழலியலை மீட்டெடுத்தல்.

இவ்வியக்கத்தை முன்னெடுத்துச் செல்ல தமிழ்நாடு நீர் வள ஆதாரங்களை பாதுகாத்தல் மற்றும் நதிகளை சீரமைத்தல் கழகம்மூலம் புதிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குடிமராமத்து திட்டம், நடந்தாய் வாழி காவேரி மற்றும் புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்குதல் போன்ற பணிகள் தற்போது இவ்வியக்கத்தின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.1. நடந்தாய் வாழி காவேரி திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20-7-2019 அன்று சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் "நடந்தாய் வாழி காவேரி" எனும் முன்னோடித் திட்டத்தை அறிவித்தார்கள்.

காவேரி வடிநிலத்தில் உள்ள நீர் வளங்களை பாதுகாத்தல், புத்துயிரூட்டுதல், மேம்படுத்துதல்மூலம் காவேரி மற்றும் அதன் துணை ஆறுகளை மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுப்பதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இத்திட்டத்தில் கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது:

1. கழிவுநீர் மேலாண்மை-கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்/ வீடு மற்றும் வணிக திரவக் கழிவு மேலாண்மை

2. திடக்கழிவு மேலாண்மை-வீடு மற்றும் வணிக திடக்கழிவு மேலாண்மை

3. நதி முகப்பு மேம்பாடு-பொது மக்கள் பயன்பாட்டிற்கு படித்துறைகள், மின் மயானங்கள், கழிப்பறைகள், பூங்காக்கள் போன்றவற்றை தரம் உயர்த்துதல் மற்றும் மேம்படுத்துதல்

4. நதி மேற்பரப்பு தூய்மை

5. காடு வளர்ப்பு மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு

6. காவேரி கிராமம்-மக்கள் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

7. நிலத்தடி நீர் செறிவூட்டல்/கதவணைகள் அமைத்தல் மற்றும் செயற்கை செறிவூட்டல்

8. இணையவழி கழிவுநீர் கண்காணித்தல்

9. அதிக ஆபத்துக்குள்ளாகும் பகுதி, வெள்ளப் பாதிப்புக்குள்ளாகும் பகுதி மற்றும் திட்டத்திற்கு தேவையான பகுதிகளில் மறுவாழ்வு மற்றும் மீள குடியமர்த்தல்.

10. ஆக்கிரமிப்பு அகற்றுதல் மற்றும் மீள குடியமர்த்தல்

தமிழகத்தில் காவேரி ஆறு மற்றும் அதன் கிளை ஆறுகளை மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க நடந்தாய் வாழி காவேரி திட்டத்தில் புனரமைக்கும் பணிக்கான முதல்நிலை திட்ட அறிக்கை 11,250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கக் கோரி மத்திய அரசின் நீர் வளம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்புத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்மீது மத்திய அரசு தெரிவித்துள்ள கருத்திற்கிணங்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

8.0. நடைபெற்று வரும் முக்கிய பணிகள்

8.1. குடிமராமத்துப் பணிகள்

தமிழ்நாடு அரசு, நீர் வள ஆதாரங்களை மேலாண்மை செய்யும் பொருட்டு, பயனீட்டாளர்களின் உதவியுடன் நீர்நிலைகளை மறுசீரமைத்து குடிமராமத்துக்கு புத்துயிரூட்டும் வகையில், குடிமராமத்துப் பணிகளை 2016-2017 ஆம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்தத் தொடங்கியது. குடிமராமத்துப் பணிகளில், வரத்து வாய்க்கால்கள், கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் கலிங்குகள் ஆகியவற்றின் பராமரிப்புப் பணிகள், மதகுகள் மற்றும் மிகைநீர் கலிங்குகளை பலப்படுத்துதல் மற்றும் மறுகட்டுமானம் செய்தல் போன்ற பணிகள் அடங்கும். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம் நீர்நிலைகளின் பாசனத் திறன் 20 முதல் 30 விழுக்காடும், சாகுபடி பரப்பு 10 விழுக்காடும் அதிகரிக்கும். நீர்நிலைகளைப் பராமரிப்பதில் சமுதாயத்தின் பங்கேற்பும் புத்துயிர் பெறும்.

குடிமராமத்துப் பணிகள், விவசாய சங்கங்கள்/பாசன சபைகள்/ ஆயக்கட்டுதாரர்கள் அல்லது ஆயக்கட்டுதாரர்களின் குழுவிற்கு நியமன அடிப்படையில் வழங்கப்படுகின்றன. மதிப்பீட்டுத் தொகையில் 10 விழுக்காடு, விவசாய சங்கங்கள்/பாசன சபைகள்/ ஆயக்கட்டுதாரர்கள் அல்லது ஆயக்கட்டுதாரர்களின் குழுவிடமிருந்து உழைப்பாகவோ, பொருளாகவோ அல்லது பணமாகவோ பெறப்படுகிறது.

குடிமராமத்துப் பணிகளைத் தொடங்குவதற்குத் தேவைப்படும் நிதி திரட்டுவதில் உள்ள சிரமங்களை எதிர்கொள்ளவும், சில குறிப்பிடத்தக்க தொடக்க நிலைப் பணிகளை மேற்கொள்ளவும், தெரிவு செய்யப்பட்ட விவசாய சங்கங்கள்/பாசன சபைகள்/ ஆயக்கட்டுதாரர்கள் அல்லது ஆயக்கட்டுதாரர்களின் குழுவிடம் ஒப்பந்த மதிப்பில் 15 விழுக்காடு முன்பணமாக வழங்கி அதனை பட்டியல்களில் திரும்பப் பெறவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

குடிமராமத்து பணிகளை செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அடங்கிய கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. குடிமராமத்து பணிகளை தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நீர் வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆறுகளைச் சீரமைத்தல் கழகம் அவர்கள் கண்காணித்து வருகிறார்.

2020 மார்ச் 18]

2016-2017 ஆம் ஆண்டில் 92.85 கோடி ரூபாய் செலவினத்தில் 1,513 குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2017-2018 ஆம் ஆண்டில் 276.52 கோடி ரூபாய் செலவினத்தில் 1,463 குடிமராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2019-2020 ஆம் ஆண்டில் 499.688 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,829 குடிமராமத்துப் பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில், 1,329 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன, மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன.

2020-2021 ஆம் ஆண்டில் 1,364 குடிமராமத்துப் பணிகள் 500.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

8.2. காவேரி டெல்டா பகுதிகளில் தூர்வாருதல்

நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சிராப்பள்ளி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களை 2,585.85 கி.மீ. நீளத்திற்கு தூர்வாரும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2019-2020-ல் 60.954 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 281 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டில் 67.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

8.3. கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே தலைமதகுகளுடன்கூடிய கதவணை அமைத்தல்

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில், ஆதனூர் மற்றும் குமாரமங்கலம் கிராமங்களுக்கிடையே நெடுகை 74/3 மைல் தொலைவில் தலை மதகுகளுடன்கூடிய கதவணை அமைக்கும் திட்டம் 494.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதில், கட்டுமானப் பணிகளுக்கு திருத்திய மதிப்பீடு 463.25 கோடி ரூபாயும், நிலம் கையகப்படுத்தும் பணிகளுக்கு 31.35 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கதவணையின் கொள்ளளவு 0.334 டி.எம்.சி. அடி என திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்கான கொள்ளளவானது 4 நிரப்புதலின் அடிப்படையில் 1.336 டி.எம்.சி. அடி என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கதவணையினால் சேமிக்கப்படும் நீரின்மூலம் கடலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 31,221 ஏக்கர் நிலங்கள் பாசன உறுதிபெறும். இதில் நேரடியாக பாசன உறுதி பெறும் 26,810 ஏக்கர் நிலங்கள் மற்றும் அருகில் உள்ள கிணறுகளில் நீர் செறிவூட்டுதல்மூலம் பயன்பெறும் 4,411 ஏக்கர் நிலங்களும் உள்ளடங்கும். இத்திட்டத்தினால் சேமிக்கப்படும் நீர் வீராணம் ஏரிக்கும் கொண்டு செல்லப்பட்டு சென்னை மாநகர குடிநீர் தேவைக்கும் பயன்படுத்தப்படும்.

அடித்தளப் பணிகள், வடக்கு மற்றும் தெற்கு கரைகளில் கரையொட்டு சுவர் அமைத்தல், தெற்கு இராஜன் கால்வாய் மற்றும் நரிமுடுக்கு வடிகாலுக்கு இடையே கற்காரை சுவர் அமைத்தல், தெற்கு இராஜன் கால்வாய் மற்றும் நரிமுடுக்கு வடிகாலின் குறுக்கே இருவழிச் சாலை பாலப் பணிகள், வடக்கு இராஜன் கால்வாயின் தலைமதகு அமைத்தல், கொள்ளிடம் ஆற்றின் இடது கரையைப் பலப்படுத்துதல், கதவணையின் 84 இரும்பு கதவுகள் உருவாக்குதல் மற்றும் இதர பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

8.4. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பு மேலணையில் உள்ள கொள்ளிடம் கதவணையின் கீழ்ப்புறம் புதிய நீரொழுங்கி அமைத்தல் மற்றும் தற்போதைய நீரொழுங்கியைப் பலப்படுத்துதல்

2018 ஆம் ஆண்டு, தென்மேற்கு பருவமழையின் போது ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்கின் காரணமாக மேலணையின் தெற்கு கொள்ளிடம் பகுதியில் அமைந்திருந்த மதகு எண்கள் 6 முதல் 14 வரை உள்ள கட்டுமானங்கள் பாதிக்கப்பட்டன.

காவேரி டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்கு நீரை உறுதி செய்யும் பொருட்டு மணல் மூட்டைகள் மற்றும் பாறைக் கற்களைக் கொண்டு காப்பணைமூலம் தற்காலிக மறுசீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. தற்போது மேலணையின் கீழ்ப்புறம் கூடுதல் கசிவில்லா தடுப்புச்சுவர் மற்றும் காப்பணை அமைத்து பலப்படுத்துவதற்காக 38.85 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணி தற்போது நிறைவடைந்துள்ளது.

2020 மார்ச் 18]

புதிய நீரொழுங்கி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேதமடைந்த பழைய நீரொழுங்கிக்கு மாற்றாக ஒரு புதிய நீரொழுங்கி அமைக்க அறிவித்ததன் அடிப்படையில், நில அளவை மற்றும் மட்ட அளவு பணிகள் மேற்கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிக்கு 23.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பில் தற்போதுள்ள மேலணையின் கீழ்ப்புறத்தில் கொள்ளிடம் ஆற்றின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ஒரு புதிய நீரொழுங்கியை 387.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. புதிய நீரொழுங்கியுடன் ஒருவழிப் பாலம் மற்றும் வழிகாட்டுச் சுவர்கள் கட்டுவதற்கும், வெள்ளக் கரைகளைத் தரப்படுத்துவதற்கும், இதர பணிகளை மேற்கொள்ளவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பணிகள் தற்போது மிக விரைவாக நடைபெற்று வருகின்றன.

8.5. செயற்கை முறையில் நீர்ச்செறிவூட்டும் கட்டமைப்புகள்

மேற்பரப்பு நீரோட்டத்தின் இயல்பினைத் தகுந்த கட்டுமானத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, மாற்றியமைத்து, நிலத்தடி நீரைப் பெருக்குதல் மற்றும் மீளப்பெறுதலே செயற்கை முறையில் நிலத்தடி நீரைச் செறிவூட்டும் திட்டங்களின் நோக்கமாகும். இத்திட்டத்தினால் வறண்ட நிலையில் உள்ள நீர்த்தாங்கிகளின் நிலைத்தன்மையை மேம்படுத்துதல், வருங்கால தேவைகளின் பொருட்டு அதிகமான மேற்பரப்பு நீரை சேமித்து வைத்து பாதுகாத்தல், நீர் செறிவூட்டல்மூலம் நிலத்தடி நீரின் தரத்தினை உயர்த்துதல், கழிவுநீரில் மாசுகளை நீக்குதல்மூலம் நீரை மறுபயன்பாட்டிற்கு ஏற்றதாக மாற்றலாம். நீர்த்தாங்கிகளை வளப்படுத்துவதே செயற்கை முறை நிலத்தடி நீர்ச் செறிவூட்டுதலில் முக்கிய நோக்கமாகும்.

நிலத்தடி நீர்ச்செறிவூட்டுதலின் முக்கியத்துவத்தையும், நன்மைகளையும் கருத்திற்கொண்டு 3 ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைகள், படுகை அணைகள், தளமட்டச் சுவர்கள் மற்றும் கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச் சுவர்கள் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில் பல்வேறு மாவட்டங்களில் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

கூடுதலாக, தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் 60.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கைமுறை செறிவூட்டுக் கட்டுமானங்கள் மற்றும் செயற்கைமுறை செறிவூட்டும் துளைகள் அமைக்க நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

8.6 காவேரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில் தடுப்பணைகள்/ கதவணைகள்

தமிழகத்தில் விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டும், காவேரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளில், வெள்ளக் காலங்களில் ஏற்படும் வெள்ள உபரி நீர் உபயோகமின்றி கடலில் கலப்பதைத் தடுக்கும் பொருட்டும், காவேரி மற்றும் கொள்ளிடம் ஆறுகளின் குறுக்கே கீழ்க்காணும் இடங்களில் கதவணைகள் கட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள நிருவாக அனுமதி வழங்கப்பட்டு திட்டத் தயாரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

1. கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், நஞ்சைபுகளூர் கிராமத்தில் காவேரி ஆற்றின் குறுக்கே ஒரு புதிய கதவணை அமைத்தல்.

2. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், அளக்குடி கிராமம் மற்றும் கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், திருக்கழிப்பாலை கிராமங்களில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு கடைமடை சுவர் அமைத்தல்.

3. நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில், கருப்பூர் மற்றும் மாதிரிவேளூர் கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு புதிய கதவணை அமைத்தல்.

4. அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டம், தூத்தூர் கிராமம் மற்றும் தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் வட்டம், வாழ்க்கை கிராமங்களுக்கு இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு புதிய கதவணை அமைத்தல்.

5. கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், நெரூர் கிராமம் மற்றும் நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஒருவந்தூர் கிராமங்களுக்கு இடையே காவேரி ஆற்றின் குறுக்கே ஒரு புதிய கதவணை அமைத்தல்.

6. கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், குளித்தலை கிராமம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், முசிறி கிராமங்களுக்கு இடையே காவேரி ஆற்றின் குறுக்கே தொலைகல் 161.54 கி.மீ.-ல் ஒரு புதிய கதவணை அமைத்தல்.

7. அரியலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் அணைக்கரையில் அமைந்துள்ள கீழணையின் கீழ்ப்புறத்தில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே, ஆற்றின் வடக்கு மற்றும் தெற்குப் பிரிவுகளில், ஒரு புதிய நீரொழுங்கி அமைத்தல்.

8.7. தாமிரபரணி-கருமேனியாறு-நம்பியாறு இணைப்பு

தாமிரபரணி ஆற்றை கருமேனியாறு மற்றும் நம்பியாற்றுடன் இணைக்க புதிய வெள்ளநீர் கால்வாய் அமைத்து 2,765 மில்லியன் கன அடி உபரிநீரினை திருப்பும் வகையில், மத்திய அரசின் நிதியுதவி எதிர்நோக்கி மாநில நிதியின்கீழ் நான்கு நிலைகளாக செயலாக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள 56,908.80 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

நிலை I முதல் நிலை IV வரையிலான பணிகளுக்கு நிலம் கையகப்படுத்துதல் மற்றும் நிலை I, II வெள்ளநீர்க் கால்வாய் பணிகள் ஆகியவற்றிற்கு 543.32 கோடி ரூபாய்க்கு 2017 ஆம் ஆண்டு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது.

நிலை III வெள்ளக் கால்வாய் பணிகளுக்கு 216.37 கோடி ரூபாய்க்கு 2018 ஆம் ஆண்டு திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. நிலை IV வெள்ளக் கால்வாய் பணிகளுக்கான திருத்திய நிருவாக ஒப்புதல் விரைவில் வழங்கப்பட்டு பணிகள் தொடங்கப்படும்.

இதுவரை, 717.469 ஏக்கர் (290.356 எக்டேர்) நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்திலுள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் 551 எக்டேர் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் 81.54 எக்டேர் நிலங்களுக்கு முன்நுழைவு அனுமதி/ நில உரிமையாளர்களின் இசைவு பெறப்பட்டுள்ளது.

பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:-

	நிலை I	நிலை II	நிலை III
மொத்த சிப்பங்கள்	18	18	18
பணிகள் முடிவுற்றவை	15	13	-
பணிகள் முன்னேற்றத்தில் உள்ளவை	03	05	18

மத்திய அரசின் நிதியுதவி மற்றும் ஒப்புதல்

மத்திய அரசின் நீர்வள ஆதாரம், நதிகள் மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகம் முதலீட்டு அனுமதியை வழங்கியுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26-9-2019 அன்று மாண்புமிகு மத்திய ஜல் சக்தி அமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின்கீழ் ஒப்புதல் மற்றும் நிதியுதவி அளிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

8.8. ஏரிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் இதர நீர்நிலைகளில் உள்ள களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை பொதுமக்கள், விவசாயிகள் மற்றும் மட்பாண்டம் செய்பவர்களுக்கு வழங்குதல்

தமிழ்நாடு சிறு கனிமங்கள் சலுகை விதிகள் 1959-ல், விதிகள் 12 (2) மற்றும் 12 (2-A) (a)-க்கு 27-4-2017-ல் அரசின் தொழில் துறையால் உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன. அதன்படி, மட்பாண்டம் வனைதல், வீட்டு உபயோகம் மற்றும் வேளாண் தேவைகளுக்காக மாநிலத்தில் (சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக) மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ள ஏரிகளின் படுகைகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் அதன் சுற்றுவட்டாரக் கிராமங்களில் உள்ள பொதுமக்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகத்தின் முன்அனுமதி பெற்று களிமண், வண்டல் மண், சவுடு மற்றும் சரளை மண்ணை இலவசமாக எடுத்துச் செல்லலாம். இதன்மூலம், நீர்நிலைகளின் இழந்த கொள்ளளவினை மீளப்பெற இயலும்.

2020 மார்ச் 18]

வேளாண் பயன்பாட்டிற்காக 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை வண்டல் மண் மற்றும் களிமண் வழங்கும் அளவு, நன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டருக்கு மிகாமலும் (எக்டேருக்கு 185 கன மீட்டருக்கு மிகாமலும்), புன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டருக்கு மிகாமலும் (எக்டேருக்கு 222 கன மீட்டருக்கு மிகாமலும்) இருக்க வேண்டும். வீட்டு உபயோகத்திற்கு மண், சவுடு மற்றும் சரளை மண் எடுக்கும் அளவு 30 கன மீட்டருக்கு மிகாமலும், மட்பாண்டங்கள் செய்வதற்கு எடுக்கப்படும் களிமண் 60 கன மீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 28-5-2017 அன்று மேட்டூர் அணையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் இதுவரை 75.26 மில்லியன் கன மீட்டர் வண்டல் மண் 6,69,900 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. நீர் வள ஆதாரத் துறையின்மூலம் 17.63 மில்லியன் கன மீட்டர் வண்டல் மண் 1,23,130 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

9.0. காவேரி வடிநிலத்திலுள்ள பாசன கட்டமைப்புகளை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டம்

காவேரி வடிநிலத்திலுள்ள கல்லணைக் கால்வாய், காவேரி உபவடிநிலம், வெண்ணாறு உபவடிநிலம், கீழ்பவானி திட்டம், கீழ்கொள்ளிட உபவடிநிலம், கட்டளை உயர்மட்ட கால்வாய்த் திட்டம், நொய்யல் உபவடிநிலம் மற்றும் ராஜவாய்க்கால் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் போன்ற பாசன அமைப்புகளை மேம்படுத்தவும், புனரமைக்கவும் மத்திய நீர் ஆணையம் 14-5-2013 அன்று கொள்கை அளவில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் மூன்று பணிகளுக்கு 749.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன:

1. காவேரி வடிநிலத்திலுள்ள கட்டளை உயர்மட்ட கால்வாய்த் திட்டம் (335.50 கோடி ரூபாய்)

2. காவேரி வடிநிலத்திலுள்ள இராஜவாய்க்கால் திட்டம் (184.00 கோடி ரூபாய்)

3. காவேரி வடிநிலத்திலுள்ள நொய்யல் ஆறு திட்டம் (230.00 கோடி ரூபாய்)

[2020 மார்ச் 18

335.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான காவேரி வடிநிலத்திலுள்ள கட்டளை உயர்மட்ட கால்வாய் பாசன அமைப்பினை நீட்டித்து, புனரமைத்து, நவீனப்படுத்துதல் திட்டத்தின்கீழ் பாசன மேலாண்மையினை திறம்பட செய்யும் திட்டத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 6-3-2020 அன்று அடிக்கல் நாட்டினார்கள். ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கல்லணைக் கால்வாய்

கல்லணைக் கால்வாய், மேட்டூர் திட்டத்தின் ஒரு பகுதியாக 1925-1934 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டது. இதன்மூலம் தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 2.27 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. பிரதான கால்வாய் 148 கி.மீ. நீளமும் 327 கிளைக்கால்வாய்கள் உட்பட 1232 கி.மீ. நீளத்திற்கு கல்லணைக் கால்வாய் அமைந்துள்ளது. மேலும், 694 முறைசார் ஏரிகளும் இதன்மூலம் பயனடைகின்றன.

கல்லணைக் கால்வாய் பாசன அமைப்பினை நீட்டித்தல், புனரமைத்தல் மற்றும் நவீனப்படுத்துதல் திட்டத்திற்கு 2,298.75 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய நீர் ஆணையம் முதலீட்டு அனுமதி அளித்துள்ளது.

இத்திட்டத்திற்கு ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (Asian Infrastructure Investment Bank) மூலம் நிதியுதவி பெறுவதற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. அதன் அடிப்படையில் இத்திட்டம் இந்த நிதியாண்டில் செயல்படுத்தப்படும்.

காவேரி வடிநிலத்தில் உள்ள காவேரி உப வடிநிலம், வெண்ணாறு உப வடிநிலம், கீழ்பவானி திட்டம் மற்றும் கீழ்கொள்ளிட உப வடிநிலம் ஆகியவற்றிலுள்ள பாசன அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் புனரமைத்தல் இந்த நிதியாண்டிலேயே செயல்படுத்தப்படும்.

10.0. நீரேற்றுப் பாசனம்

10.1. அத்திக்கடவு-அவிநாசி திட்டம்

பாசனம், நிலத்தடி நீர் செறிவூட்டுதல் மற்றும் குடிநீர் வழங்கும் அத்திக்கடவு-அவிநாசி திட்டமானது, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்ட திட்டமாகும்.

2020 மார்ச் 18]

காலிங்கராயன் அணைக்கட்டிலிருந்து 230 மீட்டர் கீழ்ப்புறப்பகுதியில் பவானி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, தடுப்பணையின் உள்வாங்கி கட்டுமானத்திலிருந்து நீரேற்று முறையில் குழாய்கள் வழியாக நீர் கொண்டு செல்லும் முறையில் குளம் மற்றும் ஏரிகளை நிரப்ப திட்டமிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 32 பொதுப் பணித் துறை ஏரிகள், 42 ஊராட்சி ஒன்றிய ஏரிகள், 971 கசிவுநீர்க் குட்டைகள் ஆகியவற்றில் நீர் நிரப்பும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 24,468 ஏக்கர் பாசனப் பரப்பு பயன் பெறும்.

அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை 1,652 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில நிதியின்கீழ் வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் முறையில் செயல்படுத்த நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பணிகளின் தற்போதைய விவரம்:-

1. பிரதான குழாய் (105.33 கி.மீ.), கிளைக் குழாய் (913.90 கி.மீ.) பதிப்பதற்கான மட்ட அளவைப் பணிகள் மற்றும் 1,044 எண்ணிக்கையிலான ஏரிகள் மற்றும் குளங்களில் மட்ட அளவைப் பணிகள் நிறைவடைந்துள்ளன.
2. திட்ட நேர்பாட்டில் 6 நீரேற்று நிலையங்களுக்கான இடம் இறுதி செய்யப்பட்டுள்ளது. நீரேற்று நிலையங்கள் மற்றும் தடுப்பணை அமையவுள்ள இடங்களில் நிலவியல் தொழில்நுட்ப ஆய்வுப் பணிகள் முடிவுற்றுள்ளன.
3. பிரதான திட்டப் பணிகளான, பவானி ஆற்றின் குறுக்கே திருப்பணை, பவானி, நல்லகவுண்டன்பாளையம், திருவாச்சி, போலநாய்க்கன்பாளையம், எம்மாம்பூண்டி மற்றும் அன்னூர் ஆகிய இடங்களில் நீரேற்று நிலையப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. இரும்புக் குழாய்கள், அதிக அடர்த்தி கொண்ட பாலி எத்திலீன் குழாய்கள் மற்றும் மின் இறைப்பான்கள் தயாரிக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.
4. இரயில் பாதைகளுக்கு குறுக்கே குழாய் பதிக்கும் பணியின் முதற்கட்டமாக தென்னக இரயில்வேக்கு திட்டமிடுதல் மற்றும் மதிப்பிடுதல் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

5. மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டு உள்ளது.

10.2. மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு வழங்கும் நீரேற்று பாசனத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15-7-2019 அன்று, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் "மேட்டூர் அணையின் மழைக்கால வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு வழங்கும் நீரேற்று பாசனத் திட்டம்" செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதன்படி, இத்திட்டத்திற்கு 565.00 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில், 241 ஏக்கர் பட்டா நிலங்களை கையகப்படுத்துவதற்கான 35.03 கோடி ரூபாய் செலவினமும் உள்ளடங்கியதாகும். நிலம் கையகப்படுத்துவதற்காக பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தில், மேட்டூர் அணையின் 555 மில்லியன் கன அடி மழைக்கால வெள்ள உபரிநீரை நீரேற்றம்மூலம் கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் இடது கரையின் நீர்பரப்புப் பகுதியிலிருந்து கால்வாய்மூலம் நீரேற்று நிலையத்திற்கு கொண்டு செல்ல உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதன்மூலம் எடப்பாடி ஏரித்தொகுப்பில் உள்ள 33 ஏரிகள் மற்றும் M. காளிப்பட்டி ஏரித் தொகுப்பில் உள்ள 67 ஏரிகள் ஆக மொத்தம், 100 ஏரிகளின் 4,238 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 4-3-2020 அன்று இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். இத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

11.0. நடைபெற்றுவரும் இதர திட்டங்கள்

11.1. புதிய பாசனக் கட்டமைப்புகளை உருவாக்குதல்

புதிய நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள், நீரொழுங்கிகள், ஏரிகள், தடுப்பணைகள், தளமட்டச்சுவர்கள், படுகை அணைகள், பிரிவு அணை, பாலங்கள், நீர்வழிந்தோடி, கால்வாய்கள் மற்றும்

அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட புதிய பாசனக் கட்டமைப்புகளை பல்வேறு மாவட்டங்களில் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

11.2. 3 ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தடுப்பணைகள், கீழ்மட்ட நிலத்தடி தடுப்புச் சுவர்கள் மற்றும் அணைக்கட்டுகள் அமைத்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2017-2018 ஆம் ஆண்டில் நிலத்தடி நீரை செறிவூட்டவும், ஆறுகளிலிருந்து ஏரிகளுக்கு தண்ணீரை கொண்டு செல்லவும், புதிய தடுப்பணைகள், நிலத்தடி கீழ்தடுப்புச் சுவர்கள் மற்றும் அணைக்கட்டுகள் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். அதன்படி, இதுவரை 133 பணிகள் 692.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளுக்கான மதிப்பீடுகள் பல்வேறு நிலைகளில் அரசின் பரிசீலனையில் உள்ளன.

11.3. கண்ணன்கோட்டை-தேர்வாய்கண்டிகை நீர்த்தேக்கத் திட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில், கண்ணன்கோட்டை மற்றும் தேர்வாய்கண்டிகை கிராமங்களில் உள்ள கண்ணன்கோட்டை இசா இராஜநேரி மற்றும் தேர்வாய்கண்டிகை ஏரிகளை இணைத்து ஒரு புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணி 380 கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டில் தற்போது முடிவுறும் தருவாயில் உள்ளது.

இந்நீர்த்தேக்கத்தில், இரண்டு நிரப்புதலில், 1 டி.எம்.சி. அடி கிருஷ்ணா நீரினைத் தேக்கி, அதனை நடப்பாண்டில் சென்னை மாநகர குடிநீர் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

11.4. பாசனக் கட்டமைப்புகளை புனரமைத்தல்

நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள், நீரொழுங்கிகள், ஏரிகள், தடுப்பணைகள், தளமட்டச் சுவர்கள், படுகை அணைகள், பிரிவு அணைகள், பாலங்கள், நீர்வழிந்தோடி, கால்வாய்கள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் உள்ளிட்ட பாசனக் கட்டமைப்புகளைப் புனரமைக்கும் பணிகள் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்று வருகின்றன.

11.5. சென்னை மாநகருக்கு குடிநீர் வழங்கும் நீர்நிலைகளின் கொள்ளளவு திறனை தூர் வாருதல்மூலம் அதிகரித்தல்

சென்னை மாநகரத்தின் குடிநீர் ஆதாரங்களாக விளங்கும் சோழவரம் ஏரி 5.43 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், புழல் ஏரி 9.90 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், பூண்டி நீர்த்தேக்கம் 10.98 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், செம்பரம்பாக்கம் ஏரி 4.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் தூர்வாரி புனரமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்தின்மூலம் மேற்கண்ட 4 நீர்த்தேக்கங்களில் 1.90 டி.எம்.சி. அடி கொள்ளளவை மீட்டெடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

11.6. கடலோரப் பாதுகாப்புப் பணிகள்

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், எர்ணாவூர் குப்பத்தில் இருந்து எண்ணூர் வரை 9 தூண்டில் வளைவுகள் அமைக்கும் பணிகள் 38.39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டம், மார்த்தாண்டம் துறையில் 69 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கீழ்மிடாலம் கிராமத்தில் 73 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. விளவங்கோடு வட்டம், பூத்துறையில் 14.69 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி விரைவில் செயல்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்பு பாதிப்புகள் மற்றும் கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள் குறித்து சென்னை, இந்திய தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து ஆய்வு செய்யும் பணி 11.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், ஆலந்தலை கிராமத்தில் 52.46 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடலரிப்பு தடுப்புச் சுவர்கள் அமைக்கப்படும்.

11.7. நீர்நிலைகளில் சுற்றுச்சூழல் சீரமைப்பு

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது நிலத்தடி நீர், ஆறுகள் மற்றும் இதர நீர்நிலைகளைப் பாதுகாத்தல், தாவர மற்றும் விலங்கின பன்முகத்தன்மை பாதுகாப்பு, மண் பாதுகாப்பு, இயற்கை உருவாக்கம் மற்றும் பிற இயற்கை வளப் பாதுகாப்பு போன்றவற்றை

உள்ளடக்கியது. நீர்நிலைகளில் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு பணிகள் நீர் வள ஆதாரத் துறையால் 2014-2015 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இப்பணிகளுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிதியின்கீழ் தமிழ்நாடு சுற்றுச்சூழல் மேலாண்மை முகமைமூலம் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டத்தில் சர்கார் பெரியபாளையம் ஏரி, திருவள்ளூர் மாவட்டத்தில், கொரட்டூர், அம்பத்தூர், மாதவரம் ஏரிகள் மற்றும் சென்னை மாநகரத்தின் அருகே ஆவடியில் உள்ள பருத்திப்பட்டு ஏரி ஆகியவற்றின் சுற்றுச்சூழல் மறுசீரமைக்கும் பணிகள் 93.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டத்திலுள்ள சிட்லபாக்கம் ஏரியினை 25.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்தல், ஈரோடு மாவட்டம், பவானி வட்டத்திலுள்ள ஓடத்துறை ஏரியினை 3.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் மறுசீரமைத்தல் மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள ஆதம்பாக்கம், பெரும்பாக்கம் மற்றும் வேங்கை வாசல் ஏரிகளை 12.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் மறுசீரமைத்தல் ஆகிய பணிகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

12.0. 3000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வெள்ளத் தணிப்புப் பணிகள்

பெருநகர சென்னை மாநகராட்சி, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள பெரிய நகர்ப்புற பகுதிகள் மற்றும் பிற கடலோர மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வெள்ளத் தணிப்புப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

முதற்கட்டம்

முதற்கட்டமாக, ஆரணியாறு, கொசஸ்தலையாறு, கூவம், அடையாறு மற்றும் கோவளம் உப வடிநிலங்களில் 100.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. மொத்தமுள்ள 16 பணிகளில், 14 பணிகள் 89.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவடைந்துள்ளன. 11.00 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 2 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இரண்டாம் கட்டம்

இரண்டாம் கட்டமாக, ஆரணியாறு, கூவம், அடையாறு, கோவளம், பரவனாறு மற்றும் கொள்ளிடம் உப வடிநிலங்களில் 238.13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. மொத்தமுள்ள 12 பணிகளில், 183.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 11 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள 1 பணி விரைவில் தொடங்கப்படும்.

மூன்றாம் கட்டம்

மூன்றாம் கட்டத்தில் 285.06 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 17 பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

12.1. சென்னை நதிகள் மறுசீரமைப்புப் பணிகள்

அடையாறு

சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளையின்கீழ், அடையாறு ஆற்றின் தொடக்கத்திலிருந்து முகத்துவாரம் வரை சீரமைப்புப் பணிகளை 555.46 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 56 குறுகிய கால உபதிட்டங்களில், 7 துறைகளின்மூலம் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நீர் வள ஆதாரத் துறையும் ஒரு செயலாக்கத் துறையாகும். டிசம்பர் 2018 ஆம் ஆண்டில் திருநீர்மலை முதல் அடையாறு முகத்துவாரம் வரை (அடையாறு முகத்துவாரத்தை திறந்து விடுதல் உட்பட) 7 நிலைகளில் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள 104.31 கோடி ரூபாய் நீர் வள ஆதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 5 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2 பணிகளுக்கு கடலோர ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

கூவம் ஆறு

ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு திட்டத்தின்கீழ் கூவம் ஆற்றினை சீரமைக்க 604.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின்கீழ் 60 குறுகிய கால உபதிட்டங்களை செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நீர் வள ஆதாரத் துறையும் ஒரு செயலாக்கத் துறையாக உள்ளது. பருத்திப்பட்டு அணைக்கட்டு முதல் கூவம் முகத்துவாரம் வரை சுமார் 27 கி.மீ. நீளத்தை 9 நிலைகளில் சீரமைக்க 93.57 கோடி ரூபாய் நீர் வள ஆதாரத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

13.0. வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள்

13.1. உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தை, மாநிலத்தின் 66 உபவடிநிலங்களில் 5.43 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு பயன்பெறும் வகையில் 2,962 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2017 ஆம் ஆண்டு முதல் 7 ஆண்டுகளில் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, நடைபெற்று வருகிறது. இத்திட்டம், வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்ட நீர் வள நில வளத் திட்டத்தின் தொடர் திட்டமாகும்.

இத்திட்டம், நீர் வள ஆதாரத் துறை மற்றும் தொடர்புடைய 6 துறைகள், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு மீன் வளப் பல்கலைக்கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், 4 கட்டங்களாக நீர் வள ஆதாரத் துறையின்மூலம் 2,131.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4,778 ஏரிகள் மற்றும் 477 அணைக்கட்டுகளைப் புனரமைத்தல், ஏரியின் நீர்ப்பரப்பு பகுதியில் செயற்கைமுறை நீர் செறிவூட்டும் கிணறுகளை அமைத்தல், காவேரி கழிமுகப்பகுதி மற்றும் பிற உபவடிநிலங்களில் அமைந்துள்ள வடிகால்கள் மற்றும் பாசன வாய்க்கால்களை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட ஏரிகள் மற்றும் பாசன வாய்க்கால்கள் புனரமைப்பு பணிகள்

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 59 ஏரி அமைப்புகளில் உள்ள 57 ஏரிகள் மற்றும் 2 பிரதான பாசன வாய்க்கால்களில் புனரமைப்பு பணிகளை 16 சிப்பங்களாக தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள 43.63 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்து பணிகளும் முடிவடைந்துள்ளன.

முதற்கட்டப் பணிகள்

18 உப வடிநிலங்களில் 1,325 ஏரிகள் மற்றும் 107 அணைக்கட்டுகள் ஆகியவற்றைப் புனரமைத்தல் மற்றும் 45

செயற்கைமுறை நீர்ச்செறிவூட்டும் கிணறுகள் அமைத்தல் ஆகிய பணிகளை 204 சிப்பங்களாக செயல்படுத்துவதற்கு 743.57 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 1.89 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 18 சிப்பங்களாக தொகுக்கப்பட்ட சுற்றுச்சூழல் மேலாண்மை தொடர்பான பணிகளும், 186 சிப்பங்களாக தொகுக்கப்பட்டுள்ள புனரமைத்தல் மற்றும் செயற்கைமுறை நீர்ச்செறிவூட்டும் கிணறுகள் அமைத்தல் ஆகிய பணிகளும் அடங்கும்.

மொத்தமுள்ள 204 சிப்பங்களில், 119 சிப்பங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. 85 சிப்பங்களுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இரண்டாம் கட்டப் பணிகள்

16 உப வடிநிலங்களில் 906 ஏரிகள் மற்றும் 183 அணைக்கட்டுகள் ஆகியவற்றை புனரமைக்கவும் மற்றும் 37 செயற்கைமுறை நீர்ச்செறிவூட்டும் கிணறுகள் அமைக்கவும், 57 சிப்பங்களாக பணிகள் தொகுக்கப்பட்டு 649.55 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் விரைவில் கோரப்படவுள்ளன.

மூன்றாம் கட்டப் பணிகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உப வடிநிலங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

13.2. உலக வங்கி நிதியுதவியுடன் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், நீர் வள ஆதாரத் துறையின் 69 அணைகளிலும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் 20 அணைகளிலும் அணை புனரமைப்பு பணிகளும், வேளாண் பொறியியல் துறைமூலம் குந்தா பாலம் மற்றும் கிருஷ்ணகிரி நீர்த்தேக்கங்களின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண் அரிப்பை தடுக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 18]

துறைவாரியான நிதி ஒதுக்கீடு பின்வருமாறு:-

(ரூ.கோடியில்)

வ. எண்	துறை	திட்ட மதிப்பீடு	திருத்திய திட்ட மதிப்பீடு
அ.	நீர் வள ஆதாரத் துறை	469.94	527.59
ஆ.	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்	260.14	260.00
இ.	வேளாண் பொறியியல் துறை	15.41	15.41
	மொத்தம்	745.49	803.00

நீர் வள ஆதாரத் துறை அணைகள்

மொத்தமுள்ள 69 அணைகளுக்கு புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக 421.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 67 அணைகளில் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2 அணைகளில் (பேச்சிப்பாறை மற்றும் மணிமுத்தாறு) புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவை தவிர, கிருஷ்ணகிரி அணையில் வழிந்தோடி கதவுகளை (எண் 2 முதல் 8 வரை) புதியதாக மாற்றியமைக்கும் பணிகள் 20.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

17 நீர் வள ஆதாரத் துறை அணைகளில் அணைகளின் உறுதித் தன்மையை நிகழ் நேரத்தில் கண்காணிக்கும் உபகரணங்கள் வாங்குதல், பொருத்துதல், செயற்பாட்டிற்கு கொண்டு வருதல், பயிற்சி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக 21.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக அணைகள்

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் 20 அணைகளுக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதில் 15 அணைகளில் பணிகள் முடிவுற்றுள்ளன. 4 அணைகளில் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஓர் அணையில் பணி கைவிடப்பட்டுள்ளது.

வேளாண் பொறியியல் துறை

கிருஷ்ணகிரி மற்றும் குந்தாபாலம் ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்பிடிப்புப் பகுதிகளில் மண் அரிப்பை தடுக்கும் பணிகள் 3 கட்டங்களில் 14.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்றுள்ளன. மேலும், குந்தா நீர்த்தேக்கத் திட்டப் பகுதியில் 40.295 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் நீர்ப்பிடிப்பு பகுதி பணிகள் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-II

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் செயலாக்கத்தினைத் தொடர்ந்து, உலக வங்கி நிதியுதவியுடன் இரண்டாம் கட்டமாக அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-II-ன்கீழ், 37 அணைகள் மற்றும் அதனைச் சார்ந்த இதர அமைப்புகளில் புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.

அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்-II-ஐ 610.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2020-2021 முதல் 5 ஆண்டு கால அவகாசத்தில் செயல்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில், நீர்த்தேக்கங்களுக்கான நிகழ்நேர வெள்ள முன்னறிவிப்பு செய்யும் திட்டத்தை 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் விருது

தமிழ்நாடு பொதுப் பணித் துறை, நீர் வள ஆதாரத் துறையின் 69 அணைகளின் பலம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் அணைகளின் இயக்க செயல்பாட்டை நீடித்த வகையில் மேம்படுத்துவதற்கும் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியதைப் பாராட்டி தமிழ்நாடு பொதுப் பணித் துறை, நீர் வள ஆதாரத் துறைக்கு 2020 ஆம் ஆண்டிற்கான மத்திய நீர்ப்பாசனம் மற்றும் எரிசக்தி வாரிய விருது மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

13.3. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதலைத் தழுவல் திட்டம்

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் கடுமையான புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடிய கடலோர மாவட்டங்களான

2020 மார்ச் 18]

திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களை பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன், காவேரி கழிமுகப் பகுதியில் பருவநிலை மாறுதலைத் தழுவல் திட்டம் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவி பங்கு 1,092 கோடி ரூபாய் (70%) மற்றும் மாநிலத்தின் பங்கு 468 கோடி ரூபாய் (30%) ஆகும்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, காவேரி கழிமுகத்தின் வெண்ணாறு உப வடிநிலத்திலுள்ள அரிச்சந்திரா நதி, அடப்பாறு, பாண்டவையாறு, வெள்ளையாறு, வளவனாறு வடிகால், வேதாரண்யம் கால்வாய் மற்றும் உப்பனாறு வடிகால் ஆகியவற்றின் கட்டமைப்புகளை மேம்படுத்துதல், நீர்நிலைகளை சீரமைத்தல் மற்றும் கரைகளைப் பலப்படுத்துதல் ஆகிய பணிகள் 960.66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளின்மூலம் 78,000 எக்டேர் பாசன நிலப் பரப்பு பயன்பெறும்.

இரண்டாம் கட்டம்

வெண்ணாறு உப வடிநிலத்தில் மீதமுள்ள 14 ஆறுகளுக்கும், காவேரி உப வடிநிலத்தில் உள்ள 23 ஆறுகளுக்கும் இரண்டாம் கட்ட திட்டப் பணிகளை செயல்படுத்த ஆய்வுப் பணிகள் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவால் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது வெண்ணாறு மற்றும் காவேரி உப வடிநிலத்திற்கான நீரியல், நீர் வள இயல் மற்றும் நிலநீர் மாதிரி வடிவமைப்புகள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

13.4. உலக வங்கி நிதியுதவியுடன் தேசிய நீரியல் திட்டம்

தேசிய நீரியல் திட்டமானது 100 விழுக்காடு மானியத்துடன் உலக வங்கி நிதியுதவியுடன் மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டமாகும். நீர் வள ஆதாரங்களின் பரப்பு, தரம் மற்றும் அணுகுமுறை ஆகியவற்றை மேம்படுத்துதல், வெள்ளம் மற்றும் வடிநிலங்களின் நீர் ஆதாரங்களை மதிப்பிடுதல்/திட்டமிடுதல் ஆகியவை தொடர்பாக முடிவெடுக்க உதவும் ஆதார அமைப்பினை உருவாக்குவது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் திட்டக்காலம் 2016-2017 முதல் 2023-2024 வரையிலான 8 ஆண்டுகள் ஆகும். தமிழ்நாட்டிற்கு, இத்திட்டத்தின்கீழ் 100.00 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நிலை

2019-2020 ஆம் ஆண்டில் சென்னை, தஞ்சாவூர் மற்றும் மதுரையில் உள்ள 3 ஆய்வகங்களில் நீரின் தர ஆய்விற்கான ஆய்வகக் கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

நிலத்தடி நீர் குறித்த நிகழ்நேர தகவல்கள் சேகரிக்கும் அமைப்புகளை நிறுவுதல், சென்னையில் கோட்ட அளவிலான தகவல் சேகரிப்பு மையம் மற்றும் 10 உபகோட்டங்களிலுள்ள உபகோட்ட அளவிலான தகவல் சேகரிப்பு மையங்களை புதுப்பிக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. மேலும், உபகோட்ட தகவல் சேகரிப்பு மையங்களை மேம்படுத்துதல் மற்றும் புவிஇயற்பியல் உபகரணங்களை கொள்முதல் செய்தல் போன்ற பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

மேற்பரப்பு நீர் குறித்த நிகழ்நேர தகவல்கள் சேகரிக்கும் அமைப்புகளை கொள்முதல் செய்து நிறுவுதல், அக்னியாறு மற்றும் தாமிரபரணி வடிநிலங்களில் இட அமைப்பியல் ஆய்வு மற்றும் வடிநில தகவல் மேம்படுத்தும் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. மேலும், வராகநதி வடிநிலத்தில் கிராம அளவிலான நீர் கணக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

14.0. மத்திய அரசின் நிதியுதவித் திட்டங்கள்

14.1. தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம்

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நாகப்பட்டினம், திருநெல்வேலி, திருப்பூர், தஞ்சாவூர், வேலூர்,சிவகங்கை, விழுப்புரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 2,541 ஏக்கர் பாசன நிலங்கள் பயனடையும் வகையில் 21.945 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்பணைகள், அணைக்கட்டுகள் மற்றும் படுகை அணைகள் அமைத்தல் மற்றும் நீரொழுங்கிகளைப் புனரமைத்தல் ஆகிய பணிகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவரினை மறுகட்டுமானம் செய்யும் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2020 மார்ச் 18]

இதுவரை, 7 பணிகள் 17.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

14.2. நீர்நிலைகளைச் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் திட்டம்

மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்போடு, பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா திட்டத்தின்கீழ் நீர்நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:-

- மதகு மற்றும் வழிந்தோடி அமைப்புகளை மீளக்கட்டுதல்/ மேம்படுத்துதல்.
- ஏரிகளின் கரையினை தரத்துடன் நிலைப்படுத்துதல்.
- நீர்த்தேக்கக் கொள்ளளவினை மீட்டெடுக்க ஏரிகளைத் தூர்வாருதல்.
- ஊட்டு வாய்க்கால்களைத் தூர்வாரி, பலப்படுத்துதல்மூலம் ஏரிகளுக்கு நீர்வரத்தை அதிகரித்தல்.

இத்திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் கட்டங்களின்கீழ், இராமநாதபுரம், வேலூர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் 104 ஏரிகளில் 54.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இத்திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின்கீழ், தருமபுரி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 49 ஏரிகளில் 23.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை 48 பணிகள் நிறைவடைந்துள்ளன.

இத்திட்டத்தின் நான்காம் கட்டத்தின்கீழ், கோயம்புத்தூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம், சிவகங்கை, திருப்பூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 89 ஏரிகளில் 49.312 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன.

ஐந்தாம் கட்டமாக, 1,678.91 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில் திண்டுக்கல் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 10 ஏரிகளில் 35.86 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

15.0. மாநிலத்திற்குள் நதிகள் இணைப்பு

15.1. காவேரி (கட்டளை)-வெள்ளாறு-மணிமுத்தாறு- வைகை-குண்டாறு வெள்ளநீர் திருப்பும் கால்வாய்

மகாநதி-குண்டாறு இணைப்பின் ஒரு பகுதியாக காவேரியின் குறுக்கே உள்ள கட்டளைக் கதவணையின் மேற்பகுதியிலிருந்து புதிய கால்வாய் அமைத்து காவேரி ஆற்றின் வெள்ள நீரை அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளுக்கு திருப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1936 முதல் 2018 வரையிலான 83 ஆண்டுகளில் மேட்டூர் அணையிலிருந்து வெளியேறிய உபரி நீர் கணக்கீட்டின்படி 50 விழுக்காடு நம்பகத்தன்மை அடிப்படையில் கிடைக்கும் நீரான 8,588 மில்லியன் கன அடி நீரினை, வினாடிக்கு 6,360 கன அடி வீதம் 16 நாட்களுக்கு திருப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தற்போது இத்திட்டத்தினை கீழ்க்கண்ட மூன்று கட்டங்களாகச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:-

கட்டம்	இணைப்பு	இணைப்புக் கால்வாயின் நீளம் (கி.மீ.)	பயன்பெறும் மாவட்டங்கள்	பயன்பெறும் பாசனப் பரப்பு (ஏக்கரில்)
I	காவேரி-தெற்கு வெள்ளாறு	118.45	கரூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை	45877.57
II	தெற்கு வெள்ளாறு-வைகை	107.25	சிவகங்கை, இராமநாதபுரம்	136203.37
III	வைகை-குண்டாறு	34.30	விருதுநகர்	37584.53
	மொத்தம்	260.00		219665.47

2020 மார்ச் 18]

முதற்கட்ட திட்டத்திற்கான கருத்துருவிற்கு மத்திய அரசிடமிருந்து கொள்கை அளவில் ஒப்புதல் பெறுவதற்கு, தேசிய தொலைநோக்கு திட்டத்தின்கீழ் 7,677.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவேரியிலிருந்து தெற்கு வெள்ளாறு வரை இணைப்புக் கால்வாய் அமைப்பதற்கான கோட்பாடு குறிப்புரை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கிடையில், 7,677 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இணைப்புக் கால்வாய் அமைப்பதற்கு நிருவாக ஒப்புதல் அளிப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

முதற்கட்ட திட்டத்தினை செயல்படுத்துவதற்கு கட்டளை கதவணையிலிருந்து தெற்குவெள்ளாறு வரை சுமார் 1,321.68 ஏக்கர் பட்டா நிலமும், 346.69 ஏக்கர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நிலத்தை கையகப்படுத்துவதற்கான செலவு தோராயமாக 1,486.89 கோடி ரூபாய் ஆகும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இப்பணிக்காக 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

15.2. பெண்ணையாறு (சாத்தனூர் அணை)-செய்யாறு இணைப்பு

இத்திட்டத்தின்கீழ் பெண்ணையாற்றிலிருந்து 20 நாட்களுக்கு, வினாடிக்கு 3,400 கன அடி வீதம் 5.87 டி.எம்.சி. அடி நீரினை திருப்பத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சாத்தனூர் அணையின் முழு நீர்மட்ட அளவிலிருந்து 23.55 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்படும் ஒரு புதிய கால்வாய், செய்யாற்றுடன் ஆலத்தூர் அணைக்கட்டின் மேற்புறத்தில் இணைக்கப்படும்.

மேலும், மேற்கூறிய பிரதானக் கால்வாயிலிருந்து பிரியும் 28.72 கி.மீ. நீளமுள்ள கிளைக்கால்வாய் துரிஞ்சல் ஆற்றுடன் இணைந்து, அதன்மூலம் நந்தன் கால்வாயின் ஆயக்கட்டுகள் பயன்பெறும்.

இத்திட்டத்தின்மூலம், பெண்ணையாற்றின் உபரிநீரின் ஒரு பகுதியை திருப்புவதன்மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தின் திருவண்ணாமலை, தண்டராம்பட்டு, செங்கம், போளூர், வந்தவாசி மற்றும் விழுப்புரம் மாவட்டத்தின் செஞ்சி ஆகிய வட்டங்களிலுள்ள 46,069 ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

விரிவான நில அளவைகள் மற்றும் மட்ட அளவுகள் எடுப்பதற்கான பணிக்கு 35.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்க, நில அளவை மற்றும் மட்ட அளவுகள் எடுக்கும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

15.3. பெண்ணையாறு (நெடுங்கல் அணைக்கட்டு)- பாலாறு இணைப்பு

இத்திட்டத்தின்கீழ் பெண்ணையாற்றில் வரும் வெள்ள நீரில் 3.0 டி.எம்.சி. அடி நீரினை பாலாற்றுக்கு திருப்பும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை செயலாக்குவதன்மூலம் கிருஷ்ணகிரி மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் உள்ள 24,329 ஏக்கர் நிலங்கள் மறைமுகமாகவும், நேரடியாகவும், திறந்தவெளி மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலமும் பாசன வசதிபெறும்.

இத்திட்டத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினை தயாரிக்கும் பணிக்கான ஆய்வு எல்லைக்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆய்வு எல்லையின் கால வரம்பு 9-10-2019-ல் முடிவுறும் நிலையில் இதனை மேலும் நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், கலந்தறிஞர் மூலமாக சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு 66.82 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் வாப்கோஸ் நிறுவனத்திற்கு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினை தயாரிக்கும் பணி வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

16.0. மணல் குவாரிகள்

2003 ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் ஆற்றுப் படுகைகளிலிருந்து, மணல் எடுத்து விற்பனை செய்யும் பொறுப்பு பொதுப் பணித் துறையிடம் அளிக்கப்பட்டது. மணல் குவாரிகளின் நடைமுறைகளை ஒழுங்கமைக்கவும், கண்காணித்து ஒருங்கிணைக்கவும் ஒரு திட்ட இயக்குனர் நியமிக்கப்பட்டுள்ளார். முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர் வள ஆதாரத் துறை அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ், 5 கனிமம் மற்றும் கண்காணிப்பு கோட்டங்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், மதுரை மற்றும் தஞ்சாவூர் ஆகியவற்றை தலைமையிடமாகக் கொண்டு, திட்ட இயக்குனரின் வழிகாட்டுதலின்படி இயங்கி வருகின்றன.

2020 மார்ச் 18]

ஜூலை 2017 முதல், மணல் குவாரி இயக்கத்தில் பல்வேறு மறுமலர்ச்சி நடவடிக்கைகள், "நிலையான மணல் குவாரி நிருவாக வழிமுறைகள், 2016"-ன்படி மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2017 ஜூலை மாதம், உருவாக்கப்பட்ட "தமிழ்நாடு மணல் இணைய சேவை" (www.tnsand.in) இணையதளம் மற்றும் செல்லிடப்பேசி செயலி (TNsand app) வெற்றிகரமாக செயல்பட்டு வருவதுடன், அக்டோபர் 2017 முதல் பொதுமக்கள் மற்றும் லாரி உரிமையாளர்கள் இணையதளம்மூலம் பணம் செலுத்தி, மணல் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் போலி வாகனங்களைக் கண்டறியும் பொருட்டு வாகன சரிபார்ப்பு முகாம்கள் குறிப்பிட்ட இடைவெளியில் நடத்தப்பட்டு பதிவு செய்யப்பட்ட லாரிகளுக்கு மட்டுமே மணல் விநியோகம் செய்யப்படுகிறது.

குவாரி செயல்படும் பரப்பளவில் எல்லைக்கற்கள் நடப்பட்டு, அதில் மணல் திட்டு ஆழம், ஆற்றுப்படுகை மற்றும் மணல் அள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள மட்ட அளவுகள் குறிக்கப்பட்டுள்ளன. ஆற்றின் கரையிலிருந்து குவாரிக்கு செல்லும் பாதை எளிதில் மக்கக்கூடிய பொருட்களைக் (கரும்புசக்கை, வைக்கோல்) கொண்டு மட்டுமே அமைக்கப்படுகின்றது.

குவாரியிலிருந்து அரசு மணல் கிடங்கிற்கு மணல் ஏற்றி செல்ல பொதுப் பணித் துறையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட லாரிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. மணல் ஏற்றிச் செல்லும் அனைத்து லாரிகளிலும் ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றது. குவாரி மற்றும் அரசு மணல் கிடங்கின் நுழைவாயில் மற்றும் வெளிச் செல்லும் இடங்கள் மற்றும் மணல் ஏற்றும் இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவ்வாறு பொருத்தப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள்மூலம் குவாரி மற்றும் அரசு மணல் கிடங்குகள் சென்னையில் மணல் குவாரி இயக்குனரகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் நேரலையாகக் கண்காணிக்கப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் குறைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண ஏதுவாக வாடிக்கையாளர் சேவை மையமும் கட்டுப்பாட்டு அறையில் செயல்பட்டு வருகின்றது.

[2020 மார்ச் 18

இறக்குமதி மணல்

மாநிலத்தின் கட்டுமானத் தேவைகளுக்கு வெளி நாடுகளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு மாதந்தோறும் சுமார் 5 இலட்சம் மெட்ரிக் டன்கள் ஆற்று மணல், எண்ணூர் காமராசர் துறைமுகம், காட்டுப்பள்ளி துறைமுகம் மற்றும் வ.உ.சி. துறைமுகம், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் இறக்குமதி செய்ய பொதுப் பணித் துறைக்கு தமிழக அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது மலேசியாவிலிருந்து ஆற்று மணல் இறக்குமதி செய்யப்பட்டு, எண்ணூர் காமராசர் துறைமுகம் மற்றும் காட்டுப்பள்ளி துறைமுகங்களில் இருந்து பொதுப் பணித் துறையின்மூலம் இணையதளத்தின் வாயிலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை எட்டு கப்பல்கள்மூலம் மணல் இறக்குமதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு உள்ளது. தற்போது ஒன்பதாவது கப்பலில் மணல் இறக்குமதி செய்யப்பட்டு, விற்பனை நடைபெற்று வருகிறது.

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the
Tamil Nadu Legislative Assembly Rules and
printed by the
Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.**